
வேறுள குழுவையெல்லாம் வென்ற மானுடன்:

கம்பன்



வேறுள குழுவையெலாம் வென்ற மானுடன்:

கம்பன்

(காரைக்குடி கம்பன் தமிழ்ஆய்வுமையம் நடத்திய கம்பராமாயண உலகத்தமிழ் ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்)

பதிப்பாசிரியர்கள்

'கம்பன் அடிசூடி' **பழ.பழனியப்பன்**

முனைவர் **சொ.சேதுபதி**

முனைவர் **மு.பழனியப்பன்**

முனைவர் **இரா.குறிஞ்சிவேந்தன்**

பேராசிரியர் **சொ.அருணன்**

*கம்பன் தமிழ்ஆய்வுமையம்,
கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி -630001*

வெளியீடு

கபிலன் பதிப்பகம்

*321, மூன்றாம் முதன்மைச்சாலை,
மகாவீர் நகர்
புதுச்சேரி-605 008*

arunankapilan@gmail.com

VERULA KUZHUVAIYELAM VENTRA MAANUDAN: KAMBAN

(Research papers presented at the World Tamil Kambaramayana research Conference.)

Kamban Tamil Research Centre©
Karaikudi.

First Edition - March 2013

Editors:
'Kamban Adisoodi' **Pazha. Pazhaniappan**
Dr. **C. Sethupathi**
Dr. **M. Palaniappan**
Dr. **R.Kurinjivendan**
Prof. **C.Arunan**

Pages: 354

Rate: ₹250/-

Published By:

KAPILAN PATHIPPAGAM
321. 3rd Main Road,
Mahavir Nagar, Karuvadikkuppam,
Puducherry - 605 008.

Printed at:

SURYA PRINT SOLUTIONS (P) LTD.,
534-A, Kamarajar Road,
Sivakasi. Cell: 98421 24415

ISBN: 978-81-922092-6-5

காரைக்குடி கம்பன் திருநாள் பவளவிழாவை ஒட்டி நடத்தப் பெற்ற கம்பராமாயண உலகத் தமிழ்ஆய்வுக் கருத்தரங்கில் தமிழ்நாடு மேனாள் தகவல் ஆணையர் பேராசிரியர் சாரதா நம்பி ஆரூரன் அவர்களால் வெளியிடப்பெற்றது.



நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை, அடியோம் செயற்பால? - **கம்பன்**

(நாட்டரசன்கோட்டை, கம்பன் அருட்கோயிலில் பங்குனி அத்தத்திருநாள் வழிபாட்டில், உடன் உதவுவோர் மெ.நா.சிதம்பரம், பின்னாளில் கம்பன் அறநிலையத் தலைவரான மு.மெ.முத்துராமன், இந்நாள் கம்பன் கழகச் செயலர் கம்பன் அடிசூடி)

கம்பன் அருட்கவி ஐந்து

1. நாட்டை ராகம்

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகுஇலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே. 1

2. ஆரபி ராகம்

வாணாள் அளித்தி, முடியாமல் நீதி வழுவாமல் நிற்றி- மறையோய்!
பேணாய், உனக்கோர் பொருள்வேண்டும் என்றுபெறுவான் அருத்தி பிழையாய்
ஊணாய், உயிர்க்கும் உயிராகி நிற்றி உணர்வாய பெண்ணின் உருவாய்,
ஆணாகி, மற்றும் அலிஆதி!-ஆர், இவ்அதிரேக மாயை அறிவார்? 8255

3. கௌளை ராகம்

வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னின், படிவங்கள் எப்படியோ?
ஓதம் கொள் கடல் அன்றி, ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப்
பூதங்கள்தொறும் உறைந்தால், அவைஉன்னைப் பொறுக்குமோ? 2563

'நீஆதி பரம்பரமும்: நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும் நின் அடியவே அயல் இல்லை
தீயாரின் ஒளித்தியால் வெளி நின்றால் தீங்கு உண்டோ?
வீயாத பெரு மாய விளையாட்டும் வேண்டுமோ? 2569

4. வராளி ராகம்

வங்கியம் பல தேன் விளம்பின வாணி முந்தின பாணியின்
பங்கி அம்பரம் எங்கும் விம்மின பம்பை பம்பின பல் வகைப்
பொங்கு இயம் பலவும் கறங்கின நூபுரங்கள் புலம்ப, வெண்
சங்கு இயம்பின கொம்பு அலம்பின, சாம கீதம் நிரந்தவே. 1554

5. ஸ்ரீ ராகம்

'உன்னை உள்ளபடி அறியோம் உலகை உள்ளதிறம் உள்ளோம்
பின்னை அறியோம் முன்அறியோம் இடையும் அறியோம், பிறழாமல்
நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை, அடியோம் செயற்பால?-இன்பதுன்பம் இல்லோனே! 8662

கம்பன் புகழ்பாடி, கன்னித்தமிழ்வளர்க்கும் கம்பன் கழகமும் கம்பன் தமிழாய்வு மையமும்

தென்பாண்டிநாட்டின் செம்மைசால் நகரமாக விளங்கும் காரைக்குடியின் பெருமைமிகு இலக்கியப் பேரமைப்பு களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது காரைக்குடி கம்பன் கழகமாகும்.

அண்ணல் காந்தியடிகளின் அருமைச்சீடராய் விளங்கிய தேசத்தொண்டர், சா.கணேசன் அவர்கள், கம்பனின் இராமாவதாரக் காப்பியத்தால் பெரிதும் ஈர்க்கப்பெற்று காரைக்குடியில் 1939 ஏப்ரல் 2, 3 ஆகிய நாட்களில் ரசிகமணி டி.கே.சி தலைமையில் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் தம் வாழ்நாள் வேள்வியைத் தொடங்கினார். காரைக்குடி யிலிருந்து 30 கல் தொலைவில் உள்ள நாட்டரசன் கோட்டையில் உள்ள கம்பன் சமாதிக்கோயில் வளாகத்தில் கம்பன் கவியரங்கேற்றிய பங்குனி அத்தத் திருநாளிலும், அதற்கு முந்திய மூன்று நாட்களான பங்குனி மகம், பூரம், உத்திரம் ஆகிய நாட்களில் காரைக்குடியிலும் கம்பன் திருநாளைக் கொண்டாடினார்.

கம்பன் திருநாளின் முதல்நாளான திருநாள் மங்கலப் பேரவையை, கம்பன் மலர் வணக்கத்துடன் தொடங்குவார். அதற்கெனவே, 108 போற்றித் தொடர்கள் அடங்கிய அற்புதமான கவிமலரை யாத்தார். இசைக்கலைஞர் ஒருவர் பாட, குழந்தைகள் இருவர் கம்பன் படத்திற்குத் தாமரைமலர் இட்டு வணங்குவர். நாட்டரசன்கோட்டை கம்பன் அருட்கோயிலில் அத்தநாள் வழிபாடு நிகழ்த்துவதற்கென என்று கம்ப ராமாயணப்பாடல்கள் ஐந்தினை, 'கம்பன் அருட்கவி ஐந்து' எனத்தேர்ந்தெடுத்து அவற்றுக்கு, திருவையாறு தியாகராஜர் சமாதியில் பாடும் பஞ்சரத்னக் கீர்த்தனைக்குரிய அதே ஐந்து கனராகங்களில் ஸ்வரம் அமைத்துப் பாடவும் ஏற்பாடு செய்தார். இன்றும் இந்த நடைமுறைகள் பின்பற்றப்பெறுகின்றன.

தம் இயற்பெயரைவிடவும் 'கம்பன் அடிப்பொடி' என்னும் சிறப்புப் பெயரே அவருக்கு நிரந்தரமாகும் வண்ணம் கம்பன் பெயர் விளங்க நிறுத்தி அவர் ஆற்றிய அரும்பணிகள் மிகப்பலவாகும். கம்பன் பிறந்த நாளை நாம் அறியச் சான்று ஏதும் கிடைக்காததால், அவன் தன் இராமாவதாரக் காப்பியத்தை அரங்கேற்றியதாகத் தனிப்பாடல் ஒன்றின் துணையால் அறிய நேர்ந்த நாளையே (கி.பி

886, பெப்ருவரி 23உ புதன்கிழமை) கம்பன் கவிச்சக்கரவர்த்தியாக இப்பூவுலகில் அவதரித்த நாளாகக்கொண்டு கொண்டாடி வந்தார் அவர் விடுதலை வேள்வியில் ஈடுபட்டு அலிபூர் சிறையில் இருந்த போதும் விழா நிகழ்ச்சிகளைச் சிறையிலிருந்தபடியே அமைத்துத் தன் நண்பர் மெ.நா.சித.சிதம்பரம் அவர்களைக் கொண்டு நடத்தினார். ஆண்டு தவறாது 44 ஆண்டுகள் தொடர்ந்து தம் வாழ்நாள் வரை (1982) கம்பனுக்கு விழாக் கொண்டாடினார். 1983முதல் அவர் விரும்பியவண்ணமே அவர்தம் தலை மாணாக்கரான கம்பன் அடிசூடியை செயலாளராகக் கொண்டு அதேமுறையில் தொடர்ந்து 30 ஆண்டுகளாக விழா நடத்தப் பெற்று வருகிறது.

கம்பன் கழகம், தன் பொன்விழாவை ஒட்டி, 1989ல் முதன் முதலில், தமிழகத்திற்குச் சாகித்திய அகாதெமியினரை அழைத்து வந்து, அகில இந்திய இராமாயண மாநாட்டை இரு நாட்கள் நடத்திப் பெருமைகொண்டது. அந்தவரிசையில், கம்பன் அடிப்பொடியின் உளப்பாங்கின்வண்ணம் ஒருவார விழாவாக இக்கழகத்தின் பவளவிழா, இந்த ஆண்டு(2013) இனிதே நிகழ்கிறது.

உலகில் வேறு எங்கும், எம்மொழிக்கும் இல்லாததான மொழிக்கான திருக்கோயிலை, தமிழக அரசின் ஆதரவோடு கம்பன் மணிமண்டப வளாகத்தில் நிறுவியவர் கம்பன்அடிப்பொடியார். தமிழ்த்தாய், அகத்தியர், தொல்காப்பியர், கம்பன், திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஒலித்தாய், வரித்தாய் ஆகியோரின் சிலா வடிவங்களோடு அறுகோண அமைப்பிலான கல் திருப்பணித் திருக்கோயிலாக விளங்குகிறது அத்திருக்கோயில். தமிழ்த்தாய், ஒலித்தாய், வரித்தாய் சிலைகள், கம்பன் அடிப்பொடியாரின் வளர்ப்பு மைந்தரான 'சிற்பகுரு', வாஸ்து விஞ்ஞானி வை. கணபதி ஸ்தபதி அவர்களால் வடிவமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 1968ல் நிகழ்ந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலைக்கண்காட்சிக் குழுவிற்குத் தமிழகமுதல்வர், பேரறிஞர் அண்ணாவின் வேண்டுதலால் தலைமையேற்ற கம்பன் அடிப் பொடியார், கண்டோர் வியக்கும்வண்ணம் கலைக்காட்சியை நடத்திய தோடு, 'கையேடு' என்ற கருத்துக் கருவூலத்தையும் பதிப்பித்தார். பிள்ளையார்பட்டித் தல வரலாறு, இராஜராஜன், தமிழ்த்திருமணம், *Some Iconographic Concepts*, கட்டுரைக் களஞ்சியம் உள்ளிட்ட பல்வேறு நூல்களைத் தமிழுலகிற்கு நல்கிய அவர் பல்துறை ஆற்றல் மிக்க படைப்பாளி கருதியது முடிக்கும் கர்மயோகி.

நெடுங்காலமாய், கம்பராமாயணத்திற்கு, மூலபாடம் இல்லாதிருந்த குறையைப் போக்கப் பெருமுயற்சி மேற்கொண்டார். சில தமிழ் அறிஞர்களின் துணையோடு, எண்ணற்ற ஏட்டுச்சுவடிகள், பழம்பெரும் பதிப்புகளை ஆராய்ந்து முடிந்த அளவிற்குப் பாட பேதமற்ற, கல்லாதாரும் எளிதில் புரிந்து படிக்கும்படியாகச் சந்தி பிரித்து பொருள் மாலையுடன் கூடின ஒரு பதிப்பினை, தம் நண்பர் மர்ரே எஸ் ராஜம் உதவியுடன் சிறப்புறப் பதிப்பித்தார். ஆறு காண்டங்களையும் தனித்தனியாகக் கொண்ட அற்புதக்களஞ்சியம் அது. கூடவே, பன்னருங் கலைதெரி 'பட்டிமண்டபத்தோடு', மேல்முறையீட்டுப் பட்டிமண்டபம், நற்றமிழ் முற்றம். கவியரங்கம், மகளிர் மண்டலம், ஆடகஅரங்கு உள்ளிட்ட மேடைஇலக்கிய வடிவங்களையும் தண்ணார் தமிழகத்திற்கு முன்வந்து அறிமுகப்படுத்திய பெருமை அன்னாருக்கே உண்டு.

காரியதரிசி, செயலர் என்றிருந்ததைச் செயலாளன் என்றதும், பிரசங்கம் என்றிருந்ததைச் சொற்பொழிவு என்றாக்கியதும், அவரே. பழந்தமிழ்ப்பண்பாட்டை நினைவுபடுத்தும்விதமாக அரங்கை அமைக்கும் நேர்த்தியும், நிகழ்வுகளை அறிமுகப்படுத்தும் பாங்கும், பார்வையாளர்களில் தகுதிப்பாடுடையவர்களை நோக்கர்களாகத் தேர்ந்தெடுத்துப் பட்டிமண்டபத்தில் தக்க அணி, வெற்றிபெறக் குடவோலையில் வாக்களிக்கச் செய்வதுமாய்ப் பல்வேறு மரபார்ந்த புதுமைகளைச் செய்ததும் குறிப்பிட்டறிய வேண்டியது. வென்ற அணியினர் போக, எஞ்சிய அணியினர் மேல்முறையீடு செய்து உண்மை வென்றிட உழைக்கும் பட்டிமண்டப நிகழ்வில் இதுவரை வந்த தலைப்பு மறுமுறை வந்ததே இல்லை என்பது வரலாற்று உண்மை. அதுபோல், உரியபொழுதில் வரத்தாமதிக்கும் எவருக்காகவும் காத்திருந்த வரலாறும் இல்லை.

முன்னரே எழுத்தில் இசைவுபெற்று முறையாக நிகழ்வுக்கு முன்னும் பின்னும் பங்கேற்பாளர்களோடு தொடர்புகொண்டு விருந்தோம்பி விழா நடத்தும் கம்பனடிப்பொடியாரின் 'சென்சாருக்கு'த் தப்பாமல் எந்தக் கவிஞரும் அரங்கேறி முழங்க முடியாது. கி.வா.ஜ. முதல் கண்ணதாசன் வரை எல்லாருக்கும் இதுதான் நியதி. நெறியின் புறஞ்செல்லா நேரிய பாங்கில் செறிவாய்க் கம்பனையும் தமிழையும் இலக்கிய, வாழ்வியல் நேர்த்திகளையும் மக்களுக்கு உணர்த்தும் மாமண்டபமாக விளங்கும் நேர்த்தியை நேரில் கண்டால்தான் உணரமுடியும். என்றாலும் தொடர்ந்து அனைத்து

வானொலிநிலையங்களும் அந்நிகழ்வுகளை நேரடியாக ஒலிபரப்பிப் பெருமைபெற்றன. பின்னர் தொலைக்காட்சியமைப்புகளும் அப்பணியைத் தொடர்ந்தன. பத்திரிகை முதலான ஊடகங்களின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கக் காணலாம்.

விழாத்தொடங்குமுன், 'கம்பன் வாழ்க, கம்பன் புகழ் வாழ்க, கன்னித்தமிழ்வாழ்க' என்னும் முழக்கத்தை, வெண்கலக் குரலில் கம்பன்அடிப்பொடியார் முன் எழுப்ப, அரங்கிலுள்ளோர் அனைவரும், 'வாழ்க வாழ்க' என்று இணைந்து வாழ்த்தொலிக்க, குறித்த நேரத்தில் நடக்கும் ஒரேவிழாவாக, சாதி, மத, பதவி, அரசியல் சார்பு பேதமற்று, உலகப்பேரறிஞர்களோடு, இந்திய மற்றும், தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்கள் எல்லோரும் பங்கேற்கும் தமிழ் இலக்கியவிழாவாகக் கம்பன் விழாவை வடிவமைத்த பெருமைக்கும் அன்னவரே முன்னவர் அவரே, தமிழகம் மற்றும் பிறநாடுகளில் கம்பன் கழகங்கள் தோன்றவும் காரணமாயினார்.

இன்றளவும் புதிதாகத் தொடங்கப் பெறும் சேய்க்கழகங்களுக்கு முதன்முதலில் சீராட்டு நல்கி நல்வாழ்த்தளிக்கும் தாய்க்கழகமாகக் காரைக்குடி கம்பன் கழகம் திகழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே.

படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள், அரசியலாளர்கள், தமிழகம் மற்றும் புதுவை மேனாள் முதல்வர்கள், அதிகாரிகள், ஆட்சியாளர்கள், நிர்வாகிகள், ஆன்மிகப் பெரியார்கள், மொழியியல் வல்லுநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், நீதியரசர்கள், வழக்கறிஞர்கள் எனப் பல்துறை வித்தகர்களும் வந்து பங்கேற்றுச் சிறப்பித்திருக்கின்றனர்.

உள்ளூர் தொடங்கி உலக நாடுகள் வரை பல்துறையாளர்கள் வந்து பார்வையாளர்களாக, சுவைஞர்களாகப் பங்கேற்ற பெருமை இந்தக் கழகத்திற்கே உண்டு.

ரசிகமணி டி.கே.சி. தொடங்கி, சொ.முருகப்பா, ராய.சொ., ப.ரா., எம்.எஸ்.பூரணலிங்கம்பிள்ளை, ஏ.சி.பால்நாடார், கு.அருணாசலக் கவுண்டர், பண்டிதமணி மு.கதிரேசச்செட்டியார், அ.மு.சரவணமுதலியார், ந.மு.வேங்கடசாமிநாட்டார், பொ.திரிகூடசுந்தரன், பி.ஸ்ரீ. ஆச்சார்யா, வெள்ளக்கால் சுப்பிரமணியமுதலியார், எஸ்.வையாபுரிப்பிள்ளை, அ.சீ.ரா, வ.ரா., மு.அருணாசலம், ஞா.தேவநேயப்பாவாணர்,

ஜி.சுப்பிரமணிய பிள்ளை, நா.கிரிதாரி பிரசாத், புரா.புருஷோத்தமநாயுடு, ச.து.சு.யோகியார், ரா.பி.சேதுப்பிள்ளை, மு.இராகவையங்கார், கோவைக்கிழார் சி.எம். இராமச்சந்திரச் செட்டியார், இராஜாஜி, கல்கி, வெ.சாமிநாதசர்மா, தெ.பொ.மீ., தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், ஜீவா (ப.ஜீவானந்தன்), எஸ்.ஆர்.கே (எஸ்.இராமகிருஷ்ணன்), அ.ச.ஞா(னசம்பந்தன்),தவத்திரு குன்றக்குடி அடிகளார், ம.பொ.சி (ம.பொ. சிவஞானம்), கி.வா.ஜ(ஜகந்நாதன்), திருலோகசீதாராம், தொ.மு.சிரகுநாதன், கலைஞர்.மு.கருணாநிதி, ஹா.கி.வாலம், க.கு.கோதண்டராமன், எஸ்.கே. இராமராசன், ஏ.என்.சிவராமன், அ.நடேசமுதலியார், பி.ஜி.கருத்திருமன், திருமுருக. கிருபானந்த வாரியார், ஏவி.மெய்யப்பன், சேவியர் எஸ்.தனிநாயக அடிகள், செக்நாட்டுத்தமிழறிஞர்கமில்சுவலபில், மு.வ(வரதராசன்), கா.நயினார்முகம்மது, சாரணபாஸ்கரன், ஆல்பெர்ட் ஃபிராங்க்ளின், மறைத்திரு பிரான்சிஸ் முராயிஸ் அடிகள்.சே.ச., மறைத்திரு. சா.லாரன்ஸ் அடிகள், எஸ்.கே.நாயர், சுந்தரசுவாமிகள், பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகள், வை.வேங்கடசுப்பாரெட்டியார், கொத்தமங்கலம் சுப்பு, கண்ணதாசன், ந.சஞ்சீவி, அ.முத்துசிவம், வ.சுப. மா(மாணிக்கம்), நீதிபதியரசர்கள் எஸ்.மகாராஜன், மு.மு.இஸ்மாயீல், செங்கோட்டுவேலர், ஏ. ஆர்.லெட்சுமணன், எம்.கற்பகவிநாயகம், எம்.சொக்கலிங்கம், வி.இராமசுப்பிரமணியன் ஆகியோர், என்.வி.நாயுடு, இரா.இராதாகிருஷ்ணன், புலவர் கீரன், வை.சிட்டிபாபு, நாபாலுசாமி, அரங்க.சீனிவாசன், பூ.அமிர்தலிங்கனார், முடியரசன், சொக்கு.சுப்பிரமணியம், வ.அய்.சுப்பிரமணியம், சு.குழந்தைநாதன், எஸ்.கே.இராமராசன், அப்துல்ரகுமான், ஜெயகாந்தன், சிற்பி பாலசுப்பிரமணியம், மு.மேத்தா, தமிழண்ணல், பா.நமசிவாயம், தா.பாண்டியன், குமரிஅனந்தன், கா.காளிமுத்து, ஔவைநடராசன், அரங்க.சீனிவாசன், அன்புவேதாசலம், எஸ்.எம்.டயஸ், எம்.ஓ.எச். பாரூக் மரைக்காயர், அ.அருணகிரி, மரியதாஸ், தெ.ஞானசுந்தரம், சோ. சத்தியசீலன், அ.அறிவொளி, அ.வ.ராசகோபாலன், தி.இராசகோபாலன், கி.பக்ஷிராஜன், சுகி.சிவம், நெல்லைக் கண்ணன், சாலமன் பாப்பையா, அப்துல்காதர், கு.ஞானசம்பந்தம், பழ.கருப்பையா, பழ.முத்தப்பன், பழ.முத்துவீரப்பன், பழ.பழனியப்பன், சொ.சேதுபதி, மு.பழனியப்பன், த.இராமலிங்கம், சொ.சொ.மீ.சுந்தரம், தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன், நா.நஞ்சுண்டன், நாஞ்சில்நாடன், தமிழருவி மணியன் எனப் பல்வேறு துறைசார் அறிஞர்கள் யாவரும் வந்து வந்து உரைநல்கிய பெருமைஉடையது இந்தக் கழகம்.

பெண்களில் ஆ.ரா.இந்திரா, சிவகாமசுந்தரி, சிவானந்த விஜலட்சுமி, இராஜேஸ்வரிநடராஜன், ந.சரோஜினிதேவி, சி.குழந்தையம்மாள், சக்திப்பெருமாள், இரா.மீனாட்சி, சரசுவதிஇராமநாதன், செல்லப்பாப்பா கீரன், ஆர்.திலகவதி, இளம்பிறைமணிமாறன், இரா.ருக்மிணி, இரா. காந்திமதி, அரசு மணிமேகலை, உமையாள் முத்து, சாரதாநம்பி ஆரூரன், சுதாசேஷய்யன் எனப் பலரும் வந்து உரையாற்றியிருக்கிறார்கள். (இந்தப்பட்டியல்கள் முழுமை பெற்றவையல்ல. விரிக்கிற் பெருகும்)

இவர்களை அடுத்து வந்த தலைமுறைப் பேச்சாளர்களும், அவர்களை அடுத்து வந்த இளம்பேச்சாளர்களும் என, இந்தக் கழகத்தில் ஏறிப் பெருமைபெற்றவர்கள் ஏராளமானவர்கள்.

அத்தோடு, இளந்தலைமுறையினரை இனங்கண்டு நாளைய அறிஞர்களாக உருவாக்கும் வண்ணம், தமிழகம் முழுதுமுள்ள கல்லூரி மாணாக்கர்களுக்கான கம்பராமாயணம், திருக்குறளில் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தி வருகிறது இக்கழகம். இதன்வழி, அடுத்த தலைமுறைப் பேச்சாளர்கள், ஆய்வாளர்கள் சிறப்பாக உருவாகி வருகிறார்கள்.

ஆண்டுதோறும் நடத்தப்பெறும் கம்பன் திருநாட்கள் மட்டுமன்றி, மாதந்தோறும் முதற் சனிக்கிழமைகளில் தக்க அறிஞர் ஒருவரோடு, மாணாக்கர் / இளந்தலைமுறையினர் ஒருவரைக் கொண்டும் புதிய கோணங்களில் கம்பன் காவியம் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறுகின்றன அவை அச்சில் கொணரும் நோக்கில் தொகுக்கப் பெறுகின்றன.

அந்தவகையில், ஆண்டுதோறும், கம்பராமாயணத்தில் புதிய கூறு ஒன்றைப் பற்றி அறக்கட்டளை ஆய்வுப் பொழிவுகள் இரண்டு இங்கு நிகழ்த்தப்பெறுகின்றன ஒன்று மூத்த அறிஞர்களைக் கொண்டும், மற்றொன்று இளந்தலைமுறைப்பேராசிரியர்களைக் கொண்டும் நடத்தப் பெற்றுவருகின்றன. இப்பொழிவுகள், இதுவரை, 'தாய் தன்னை அறியாத....', 'கம்பனின் மனவளம்', 'கம்பனில் எண்ணமும் வண்ணமும்', 'கம்பனில் நான்மறை', கம்பர் காட்டும் உறவும் நட்பும்', 'கம்பர் போற்றிய கவிஞர்', 'கம்பனின் அம்பறாத்தூணி', 'கம்பன் காக்கும் உலகு', 'கம்ப வானியல்' என நூல்களாக்கப் பெற்றுள்ளன. அவை, அந்தந்த ஆண்டுகளில் வெளியிடப்பெற்றுள்ளன. இவைபோகக் கம்பன் கழகத்தில் கம்பன் மணிமலர் என்னும் பெயரில் மலர்களும் வெளியிடப் பெற்றுள்ளன.

அரங்க நிகழ்வுகளிலும் ஆய்வுத்துறைகளிலும் தொடர்ந்து தடம்பதித்து வரும் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் பவளவிழாப் போதில், இனிய பிறப்பெடுக்கிறது, கம்பன் தமிழ்ஆய்வு மையம்.

சங்ககாலத்துக் கபிலர் தொடங்கி, சமகாலத்துக் கண்ணதாசன் வரை நீளும் இலக்கிய வளங்களையும், தொல்காப்பியர் முதலாய்த் தண்டமிழ்ச் சான்றோர் வகுத்துக் கொடுத்த இலக்கணச் செழுமைகளையும் கவிச்சக்கரவர்த்தி கம்பனை முன்னிறுத்தி, உலகளாவிய நிலையில் அடுத்துவரும் தலைமுறையினர்க்கு எடுத்துச் செல்லும் நோக்கில் ஒல்லும்வாயெல்லாம் உடனுக்குடன் தன் பணியாற்றிடத் துடிப்புடன் முனைகிறது. இம்முயற்சியின் ஒரு கூறாக, உலக அளவிலான கருத்தரங்கம், காலந்தோறும் கம்பன் (Kamban at all times) என்ற பொருண்மையில், திட்டமிட்டபடி, 2013 மார்ச் 23 ,24 ஆகிய இருநாட்கள் இனிது நடைபெறுகின்றது.

இக்கருத்தரங்கில், தமிழகம் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பேராளர்களும், ஆய்வாளர்களும் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள். அறிவிப்புக் கண்ட நாளில் இருந்து தொடர்ந்து நல்லாதரவும் பங்களிப்பும் செய்துவரும் அத்துணைபேருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கிறோம்.

கம்பன் தொடர்பான ஆய்வுகள் வளரவும், நூல்கள் எழுதுவோர் மற்றும் வெளியிடுவோரை ஊக்குவிக்கும் முகமாகவும், 2011, 2012 ஆண்டுகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவந்த கம்பராமாயண ஆய்வு நூல்களுக்கும், அவற்றை வெளியிட்ட பதிப்பகங்களுக்கும் பரிசுகள் வழங்கி மகிழ்கிறது கம்பன் தமிழாய்வு மையம்.

இதனைத் தொடர்ந்து ஈராண்டுகளுக்கு ஒருமுறை இத்தகு கருத்தரங்கமும், இடையிட்ட ஆண்டில் இலக்கியப் பயிலரங்கமும் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். தொடர்ந்து, கம்பன் உள்ளிட்ட தமிழ், இலக்கிய இலக்கண வளங்களைக் கற்கவும், கற்பிக்கவும் ஓர் ஆய்வு மேற்கோள் நூலகம் ஏற்படுத்தி, ஆய்வு நிகழ்த்துவோருக்கான பணியிட வசதி செய்து, நெறிப்படுத்தி, செம்மொழித் தமிழ் ஆய்வுகளை ஊக்கப்படுத்தவும் முயற்சிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. அவற்றுக்கும் தமிழ்கூறு நல்லுலகம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்று நம்புகிறோம். நன்றி

– கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன்

THE KAMBAN DREAM

SUGANTHY KRISHNAMACHARI

This year marks the 75th anniversary of the Karaikudi Kamban Kazhagam, the seeds of which were sown by Saw. Ganesan.

A neat turn of phrase, an apt simile, a brilliant metaphor, the euphony of a word -- can all delight, for the felicitous use of language does give one a frisson of thrill. But even so, will anyone deify a language, not figuratively, but literally? One man did. Kamban Adippodi Saw. Ganesan.

Ganesan's love for Tamil began when he was in school. Those who encouraged him to study Kamba Ramayanam included P. Sri, the author of Ananda Vikatan's'Chithira Ramayanam', who lived in Karaikudi for some years, Va. Ve. Su. Iyer, T.K. Chidambaranatha Mudaliar (TKC) and even a scholarly grocery store owner in Burma! It was in 1939 that Ganesan set out to organise Kamban Vizha in Karaikudi, under the stewardship of TKC.

From 1935, Ganesan was actively involved in the Freedom Movement. His participation in the Quit India Movement resulted in his house being raided by the police. Several lakhs worth of property was confiscated. Unperturbed, Ganesan went about in disguise, giving rousing speeches to mobilise the youth against British rule. The police then arrested his friends, and to save them trouble, Ganesan surrendered, and was promptly despatched to the Alipore jail. But even while in prison, he ensured that the Karaikudi Kamban Vizha continued.

The venue

The Kamban Vizha is held in Karaikudi in the Tamil month of Panguni, and concludes in Nattarasankottai, in the star Hastham. Ganesan had a reason for choosing Hastham. There is a verse that says that Kamban inaugurated his work on Panguni Hastham. There is yet another verse that says Kamban died in Nattarasankottai. Ganesan visited Nattarasankottai, and found that the villagers there worshipped at a certain place, which they called Kamban Samadhi. Ganesan saw them taking mud from a pit near a rough

hewn stone, beneath which Kamban was believed to have been buried, and applying this mud on the tongues of their school going children, in the belief that Kamban would bless their academic endeavours. Ganesan came to the conclusion that this must be Kamban's burial place and so he decided to organise the last day of the celebrations at Nattarasankottai.

In 1940, Ganesan asked Vaidyanatha stapathi to make a panchaloha idol of Tamizh Thai, Tamizh represented as a Goddess. Tamizh Thai is seen seated on a globe to indicate the geographical spread of Tamizh. She holds in her hands palm leaf manuscripts, a japa mala, the torch of knowledge and a Sengottu yazh, described in Tamil literature and a sculptural representation of which is seen in the Tirumeyyam temple.

Ganesan's friends presented him with a purse for Rs. one lakh on his 60 birthday, and he used the money for a Kamban Mani Mandapam, the construction of which was completed in 1972. Praising Ganesan's dedication to Kamban, Justice Maharajan gave him the title 'Kamban Adippodi.' Ganesan conceived of a temple for Tamizh Thai, but passed away before the project was completed. Upon his death, the mantle fell on Kamban Adisoodi Pala Palaniappan, who, as a school student, came under the tutelage of Ganesan, and helped draw up programmes for the Karaikudi Kamban Vizha. Later, Palaniappan became the secretary of the Chennai Kamban Kazhagam.

Worthy pupil

After his retirement, Palaniappan returned to Karaikudi. How did he get interested in Kamban? "I used to be an orator in school, and apart from my Tamil teachers, one of my earliest inspirations was Ganapathi stapathi, who was my mathematics teacher! Later, Ganesan took me under his wing and taught me Kamba Ramayanam. He presented me with a copy of the Murray's edition of Kamba Ramayanam, which he had helped edit. Although Karaikudi was the place where Kamban celebrations began, it spread to other places."

The Tamizh Thai temple was declared open in 1993, by Mu. Karunanidhi. The main shrine is for Tamizh Thai, and on either side, we find Agastyar and Tholkappiyar. Outside the main shrine

are icons of Oli Thai (The Goddess of Sound) and Vari Thai (the Goddess of Letters), with separate enclosures for Kamban, Ilango and Valluvar. The temple construction and sculpturing work were by Ganapathy stapathi.

I am curious about why Kamban is always depicted with a walrus moustache. "The moustache was inspired by TKC's luxuriant moustache," laughs Palaniappan.

Almost all Tamil scholars have participated in the Karaikudi Kamban Vizha – A.C. Paul Nadar, Professor A.S. Gnanasambandam, Ra.Pi. Sethupillai, Dr. Francis Jayanandan, who was secretary of the Christian Literature Society, Xavier Tani Nayaka Adigal, Mu.Raghava Iyengar, Kamil Zvelebil and Justice Ismail, to name a few.

On the other hand, people who called themselves atheists would wangle a slot in the proceedings, and then make veiled attacks on Kamban. When it was suggested to Ganesan that he prevent such people from speaking, he would say that no one could be immune to the charms of Kamba Ramayanam for long, and even those who aimed barbs at the work, would soon come round. And sure enough, the same people who had mocked Kamban, would in later years, speak admiringly of the bard.

This year marks the 75th anniversary of the Karaikudi Kamban Kazhagam, and an international conference will be held in Karaikudi. The speakers include medical doctors and professors of engineering, based in London and Paris, all of whom have one thing in common -- love for Kamba Ramayanam. It is not often that one's dreams result in fruition, and even when they do, few dreams survive beyond one's lifetime. But the Karaikdui Kamban Kazhagam continues to thrive, and is a tribute to Saw. Ganesan, whose zeal and grit shaped it.

courtesy: The Hindu 08/03/2013

தோரணவாயில்

"ஏது பதி ஏது பெயர் யாவர் உறவு?' எனக் கம்பராமாயணத்தில் சூர்ப்பணகையைப் பார்த்து, இராமன் கேட்ட கேள்வி, உண்மையில் கம்பனின் கேள்வி. ஒன்றுக்குள் மூன்று வினாக்களை உள்ளடக்கிய கேள்வி. இதுவும் கம்பனை யாரோ, எங்கோ கேட்ட கேள்வியாகத்தான் இருக்கும். அதே கேள்வி உலகமுழுதும் பரந்துள்ள தமிழனுக்கு எதிரில் முன் வைக்கப்படுகிறபோது தரவேண்டிய பதில் என்னவாயிருக்கும்?

கம்பன் பள்ளிப்படை கொண்ட இதே சிவகங்கை மாவட்டத்தில் உதித்த கணியன்பூங்குன்றன் தரும் பதில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'.

'போதுமானதாயில்லை' என்று இன்னும் கேட்டால், 'கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று பாரதி சொன்னதைப் பதிலாக்கலாம்.

கம்பன் பிறந்தது மட்டுமா? 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்' இங்குதானே? அந்தப் புண்ணியப்பூமியில் பிறந்து, இருந்து, வளர்ந்து, 'கையில் கம்பன் கவி'யேந்திக் கவிமணிபோல், இரசிகமணிபோல், கம்பன்அடிப்பொடிபோல், ஜீவா போல், எஸ்.ஆர்.கே.போல், குடுமி இராதாகிருஷ்ணன்போல், தவத்திரு அடிகளார்போல், ஜஸ்டிஸ் மகாராஜன், மு.மு.இஸ்மாயில்... இன்னும் இவர்களைப்போல், கம்பனை நுகர்ந்து, தன்னைப்போல் எழுந்த கம்பநேயர்கள் எத்தனைபேர், அவர்கள் அவர்களால் முடிந்த அளவு கம்பனுக்கு ஆற்றிய தொண்டுகள்தாம் எத்தனை எத்தனை? கழகங்கள், விழாக்கள், நூல் வெளியீடுகள், பனையோலையில் பதிந்திருந்த கம்பகாவியத்தை அச்சு ஊடகங்கள் மற்றும் கணினித்திரைச் சேவைகளால் உலகெங்கும் விரித்த பெருந்திருப்பணிகள்.. இப்படி என்றுமுள தென்றமிழாய் நின்றிலங்கும் அந்தக் கம்பன் உண்மையில் யார்?

கவிச்சக்கரவர்த்தி என்று பொதுவாய்ச் சொன்னாலும், அவன் பலருக்குக் கடவுள், வித்தகன், விபுதன், விதிவலிகாட்டிய மதிவலன், புரட்சிக்கவிஞன், கலைஞன், மெய்ஞ்ஞானியர்கட்கெலாம் மெய்ஞானி, விஞ்ஞானிகளுக்கும் வெளிகாட்டும் விஞ்ஞானி, மருத்துவன், பல்லாற்றல் நிரம்பிய அற்புதன்... ஆயினும் அவன் மனிதன். வேறுள குழுவையெலாம் வென்ற மானுடன். இல்லையா?

அந்த மாபெரும் கவியான கம்பனின் மானுட தரிசனத்தைத் தத்தம் கோணத்தில் சித்திரித்துக் காட்டும் ஆய்வாளர்களின் 57 கட்டுரைகள் எட்டு உட்பிரிவுகளாய், இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. அவற்றுள் ஆங்கிலக்கட்டுரைகள் ஐந்து.

கம்பனை மானுடனாக உணர்ந்து, உணர்த்திக்காட்டும் இத்தொகுப்பில் அவனது பன்முகப் படைப்பாற்றலை, அதன்வழி புலப்படும் அவனது பன்முகப் பரிமாணத்தை, எட்டு உள்தலைப்புகளுள் நிறைத்துக் காட்டும் இத்தொகுப்பில், பாரதி பாடிய மரபில், 'கம்பன் என்றொரு மானுடன்' என்ற தலைப்பில், மாகவி கம்பனை, நான்கு கட்டுரைகள் மானுடனாகவே அறிமுகம் செய்கின்றன. அதுவே, இந்நூலின் முதல் உட்பிரிவாக அமைகின்றது.

இயல்பான அறிவுக்கும் மேலானது கவிஞர்தம் அறிவு. அதுவும் காப்பியம் பாடப் பேரறிவுவேண்டும் என்று கம்பனைக் கொண்டு கற்கலாம். தீதொதுக்கி நன்றின்பால் உய்க்கும் நல்லறிவாகிய ஞானம் நல்கும் கானங்கள் இசைப்பவன் கவிஞன். அவனினும் அறிவுமிக்கவனாய்க் கம்பன் திகழும் பெற்றியைக் காட்டும் பன்னிரு கட்டுரைகள், 'கவிஞரின் அறிவுமிக்கான்' என்ற தலைப்பின்கீழ் இடம்பெறுகின்றன. இது இத்தொகுப்பின் இரண்டாம் பிரிவாக அமைகிறது.

எந்நாட்டோடும் ஒப்பிடமுடியாத அளவிற்குத் தன்னாடு குறித்த பெருங்கனவு கம்பனுக்கு உண்டு. கவிச்சக்கரவர்த்தியான கம்பன் தன் காலத்துப் புவிச்சக்கரவர்த்திகளுக்கெல்லாம் புலனாகாத அரசியல் நுணுக்கங்களையும், ஆற்றல்சால் திட்டங்களையும் தன் காவியத்துள் புனைந்து வைத்திருக்கின்றான் அவற்றைச் செம்மையுற நடைமுறைப்படுத்தும் காலம் பின்னர் கனிந்துவரும் என்ற நம்பிக்கையில். கம்பனை நாட்டரசனாய் உவமித்துக் கொள்ள வகைசெய்யும், மூன்றாம் பிரிவில் 8 கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

வள்ளுவவழிநின்று, ஊழிற்பெருவலியுணர்த்தும் கம்பன், விதிக்கு விதிசெய்யும் வித்தையையும் கற்றுத் தருகிறான் என்பதை விளக்கும் நான்காம் பிரிவு, 'விதிவலி உணர்த்திய மதிவலன்'. இதில் 5 கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

இந்திய நாட்டுச் சமயங்கள் அனைத்தையும் தம் காப்பியத்துள் வைத்து ஒழுங்குறக் காட்டும் கம்பன், 'சமயம் கடந்த சமரசனாக்த் திகழும் பாங்கினை, ஐந்தாம் பிரிவு நன்குணர்த்துகிறது. சடங்குகளையும் வழிபாட்டுமுறைகளையும் சேர்த்து ஆராய்ந்து பதின்மர் இத்தலைப்பின்கீழ் பங்கேற்கிறார்கள்.

காலந்தோறும் தமக்கெனத் தொண்டர்களை உடைய தூய தலைவனாய்க் கம்பன் திகழ்ந்திருக்கிறான். மற்றெப்போதைவிடவும், சென்ற நூற்றாண்டில் கம்பன் பெற்ற செழுந்தமிழ்த் தொண்டர்களை முன்வைத்து எழும், ஆறாம் பிரிவில், எண்மர் பங்களித்திருக்கிறார்கள்.

தம்பெயரிலான கழகங்களோடு தமிழ் மற்றும் இலக்கிய அமைப்புகளின் வாயிலாகவும் கொண்டாடப்பெறும் கலைஞனை, இன்றும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவைகுறித்தும், எதிர்காலத்தில் அவனை முன்னிறுத்தி இயங்கவேண்டிய பாங்குகுறித்தும் ஆராயும் எட்டாம் இயல், 5 கட்டுரைகளைப் பெற்றமைகின்றது.

கம்பனின் மானுடப்பாங்கை ஆங்கில இலக்கியக் கர்த்தாக் களோடு ஒப்பிட்டுரைக்கும் பேராசியப் பெருந்தகைகள் ஐவரின் ஆங்கிலக் கட்டுரைகள் இந்நூலின் நிறைவில் நின்று கம்பனுக்கு அணிசெய்கின்றன.

பள்ளியாசிரியர்கள் தொடங்கிப் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர்கள், ஆய்வுமாணாக்கர்கள், ஆர்வமிகு சுவைஞர்கள், சமயங்கடந்து கம்பனைக் கண்டு தெளியும் சான்றோர்கள், பலரும் பங்களித்திருக்கிறார்கள். மொழி எல்லைகடந்து தத்தம் துறைகளில் கம்பனை முன்னிறுத்திக் கட்டுரை தந்த பொறியாளர்கள், நிர்வாகவியல் துறையினர், அறிவியலாளர்கள், சமயத்துறை சார்ந்தோர் எனப் பலரும் தத்தம் நிலைகளில் கம்பனைக் கண்டு காட்டியிருக்கிறார்கள். அவரவர் கருத்துக்களைத் தம்மோடு இணைத்துச் சொல்லக் கம்பன் தன் காப்பியத்துள் இடம் வைத்திருக்கிறான் என்பதே சிறப்புக்குரியது, அல்லவா?

உள்ளூர் ஆய்வாளர்களும், தமிழகத்திற்கு அப்பால், புதுவை, கேரளா, அந்தமான் நிகோபார் தீவுகள் மற்றும் இந்தியப் பகுதி சார்ந்த ஆய்வாளர்களும், சிங்கப்பூர் உள்ளிட்ட பிறநாட்டுப் பேராளர்களும் எல்லைகள் நீத்த இராமகாதையைத் தன் வயமாக்கிக் கட்டுரைகளில் தந்திருக்கிறார்கள். பல்வேறு சிரமங்களுக்கு இடையில் தத்தம் பணிகளுக்கு மத்தியில் இக்கம்பன் தொண்டில் கைகோத்து இயங்கிய எல்லோருக்கும் நன்றியை எப்படிப் புலப்படுத்துவது?

சாதி, சமய, இன, மொழி, தேச எல்லைகள் கடந்து மானுடம் ஓங்கத் தமிழ் தந்த மாகவி பாடினான், 'வேறுள குழுவையெலாம் மானுடம் வென்றதம்மா' என்று.

அவ்வாறாயின், தோற்றது யார்?

விலங்கா, அசுரரா, தேவரா, அல்லது தெய்வமேயா?

இல்லை. எல்லோரும் ஓர்நிறை, எல்லோரும் ஓர்விலை, எல்லாரும் இவ்வுலக மன்னர்கள் என்று எடுத்தோதும் கம்பனின் பார்வையில் மானுடவெற்றி என்பது யாரையும் தோற்கடிப்பதில் இல்லை. மானுடம் வென்றதென்றால், யாரும் எதுவும் தோற்கவில்லை என்பது உட்பொருள்.

அன்பின் நிலையில் அருட்செயல்கள் பல புரிந்து இன்புற்று வாழ, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வநிலை யெய்தக் கம்பன் மானுடனாய்த் தோன்றி காவியம் தந்தான்.

அவனை வழுத்தி, அவன் வழி வாழ்ந்து அமரநிலையெய்துவோம்.

இன்னும் விரித்தெழுத, ஏராளம் இடம் வைக்கும் கம்பன் காவியத்துள் புகுந்து கண்டு உரைக்க, பின்னும் பல அரங்குகளை அமைக்கும் சூழல் வாய்க்கும் என நம்புகிறோம்.

சொல்லில் இருந்து செயலுக்கும், எழுத்தில் இருந்து இயக்கத்திற்கும் எடுத்துச் செல்ல, இத்தொகுப்புச் சற்றேனும் துணைபுரிந்தால், மானுடத்திற்கு வெற்றி. யாவருக்கும் நன்றி.

- கம்பன் தமிழாய்வு மையத்தார்

தேறினன்– 'அமரர்க்கு எல்லாம் தேவர் ஆம் தேவர் அன்றே,
மாறி, இப் பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ
ஆறு கொள் சடிலத்தானும், அயனும், என்று இவர்கள் ஆதி
வேறு உள குழுவை எல்லாம், மானுடம் வென்றது' அன்றே!

- கம்பன்



"......இங்ஙனம் பல பெரும் அறிஞர்களின் கூட்டுறவும், கம்பன் அடியார்களின் அன்பும் ஏழையேனைக் கம்பன் அடிப்பொடி ஆக்கின. இவர்களிட்ட பிச்சையாலேயே கம்பனின் மேதாவிலாசத்தையும், கவிதாசன்னதத்தையும், படைப்பாற்றலையும், பல்துறைப் பலமொழிப் புலமையையும் அடியேனும் கூடக் கண்டு மகிழ முடிகின்றது. இப்பொழுதெல்லாம் எளியேன் கம்பனை அணுகும்போது, அவன் பெருமைக்குமுன் என் சிறுமையும் தோன்றுவதால், ஒருவிதப் பயமே, பக்தியால் ஏற்பட்ட ஓர் அச்சமே என்னை ஆட்கொண்டுவிடுகின்றது. எனவே, இன்று நான் ஒரு கம்பன் அடிமை.

– கம்பன் அடிப்பொடி

(கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், ப.16)

அ. கம்பன் என்றொரு மானுடன்

கம்பன் என்றொரு மானுடன் 23
முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்

கம்பன் என்றொரு மானுடன் 31
பேராசிரியர் அய்க்கண்

கம்பன் என்றொரு மானுடன் 40
திருமிகு. க.ம. சுந்தரவதனன்

கம்பன் என்றொரு மானிடன் 46
திருமிகு சா.சையத் முகம்மது

ஆ. கவிஞரின் அறிவுமிக்கான்

கம்பன் என்றொரு மெய்ஞானி 51
கவிஞர் பொன்.வேலுமயில்

கம்பன் கருத்துப்புரட்சிக் கவிஞன் 56
திருமிகு ர.விவேகானந்தன்

எந்தை பிரான் கம்பன் 61
கவிஞர். கே.ஏ. ஜெஹபர் உசேன்

கவியாண்டவர் கம்பர் 64
திருமிகு. ஆ.இரா.பாரதராஜா

கம்பன் ஒரு காவியம் 71
திருமிகு. எறும்பூர் கை.செல்வக்குமார்

கம்பன் நாடக அணிக்கொரு நாதன் 77
முனைவர் வெ. கலைச்செல்வி

கம்பன் முத்தமிழ்த் துறை வித்தகன் 82
பேராசிரியர் சந்திரிகா ராஜாராம்

கம்பன் கல்வியில் பெரிய கடல் 85
முனைவர் நயம்பு அறிவுடைநம்பி

கம்பன் ஓர் ஞானசாகரம் 94
திருமிகு. தேன்மொழி

குழந்தைகளுக்குக் கம்பர் 100
திருமிகு கி.குருமூர்த்தி (மாயூரன்)

கம்பன் என்றொரு மேலாண்மைத் திறனாளன் 106
திருமிகு. டி.என்.கிருஷ்ணமூர்த்தி

கம்பன் என்றொரு மேலாண்மைத் திறனாளன் 110
முனைவர் அ.தேவகி

இ. கம்ப(ன்) நாட்டரசன்

கம்பனில் அரசியல் தலைமைத்துவம் 117
திருமிகு. ப.கணேஷ்வடிவேல்

கம்பராமாயணமும் சட்ட அமலாக்கமும் 125
திருமிகு. ப.மோகன்தாசு

இராமகாதை வகுக்கும் மேலாண்மைத் தத்துவங்கள் 130
முனைவர். ச. யோகலட்சுமி

கம்பனில் அறியலாகும் அறிவியல் அருமைகள் 139
முனைவர் எஸ். இராஜசேகரன்
கம்பராமாயணத்தில் அறிவியல் சார்ந்த கருத்துகள் 143
முனைவர் மெ.மெய்யப்பன்
கம்பனில் மனிதநேயம் 148
முனைவர் கு.ஜெயக்குமாரி
கம்பனில் மனிதமாண்பு 156
வீ.ஜெயபுனிதவள்ளி
கம்பரின் கல்விக் கோட்பாட்டில் மலர்ந்த மனித மதிப்புகள் 159
திருமிகு. க.தில்லைக்கரசி

ஈ. விதி வலி உணர்த்திய மதிவலன்

கம்பன் விதிவலி உணர்த்திய மதிவலன் 164
முனைவர் பழ.முத்தப்பன்
கம்பனில் விதி 169
திருமிகு. ம.ஆனந்த அபூர்வசாமி
கம்பன் கண்ட மானுட வாழ்வும் விதியும் 175
முனைவர் சீ.வசந்தா
கம்பனில் ஊழ்வினை 179
புலவர். ந. சிங்காரவேலன்
கம்பன் விதிவலி உணர்த்திய மதிவலன் 183
திருமிகு. ப.ராஜராஜேஸ்வரி

உ. சமயங்கடந்த சமரசன்

கம்பன் காட்டும் சமய உண்மை 188
திருமிகு. கு.பிரகாஷ்
கம்பன் சமயநோக்கில் சமரசன் 191
திருமிகு. ச.கா.சுதந்திரா
கம்பன் வைணவனா? 196
முனைவர் ந.செல்லக்கிருஷ்ணன்
கம்பர் வைணவரே! 204
பாவலர்மணி சித்தன்
கம்பர் போற்றும் கருமைக் கடவுள் 210
திருமிகு. க.கதிரவன்
கம்பன் வழிபட்ட கலைமகள் சிலை 216
முனைவர் எஸ்.பத்மநாபன்
கம்பனின் வழிபாட்டு மரபுகளும் சடங்கியல் முறைகளும் 221
முனைவர் பி.கணேசன்
கம்பனில் சுட்டப்பெறும் சடங்குகள் 225
திருமிகு. ச.ஆ.காயத்ரி
கம்பன் சமரசநோக்கு 230
திருமிகு. வா.நாகராஜன்
கம்பன் காட்டும் சமூகச் சடங்குகள் 234
முனைவர் கா.ஸ்ரீதர்

ஊ. தொண்டர் பல கண்ட தூயன்

கம்பரஸத்தில் தோ்ந்த விடுதலை விரும்பிகள் 240
கவிஞர் இரா.மீனாட்சி

கம்பனில் கரைந்த இரசிகமணி டி.கே.சி. 246
திருமிகு. இரா.தீர்த்தாரப்பன்

கம்ப இரசிகமணி டி.கே.சி. 252
முனைவர். ச.ஈஸ்வரன்

கம்பனில் கரைந்த டி.கே.சி. 259
பேராசிரியர். பி.தட்சணாமூர்த்தி

கம்பன் அடிமை – கம்பன் அடிப்பொடி சா.கணேசன் 263
கவிஞர் மீனவன்

சிற்பக்கலைக் காவலர் சா.கணேசன் 269
திருமிகு. பொன்னி செல்வநாதன்

கம்பன் அடிப்பொடி சா.கணேசன் 273
திருமிகு. கண்ணகி சாமிநாதன்

கம்பர் கலைவித்தகர் அ.ச.ஞா 283
முனைவர் பெ.கி.பிரபாகரன்

எ. கழகங்கள் கொண்டாடும் கலைஞன்

கம்பன் கழகங்களின் பணிகள், கடமைகள் 289
திருமிகு. என்.முத்துவிஜயன்

கம்பன் நல்லறத்தைப் பரப்பும் பணிகளில்... 296
முனைவர் இல.செ.திருமலை

கம்பன் கழகம் எதிர்கொள்ள வேண்டிய பணிகள் 301
புலவர் ச.தமிழரசு

கம்பன் கழகம் ஆற்ற வேண்டிய பணிகள் 306
திருமிகு ஆ, நளினிசுந்தரி

கம்பன் ஒரு யுகசந்தி 310
முனைவர் சொ.சேதுபதி

ஏ. உலகப் படைப்பாளிகளுடன் உயர்கம்பன்

Humanism in Kamban and Shakespeare: A Comparison 327
Dr. K.Chellappan

Erudition - Thy Name is Kamban 332
Sri G. Ramachandran

Kamban And Milton - A Perspective 337
Dr. Shanthi Mahesh

Virgil's Aeneid and Kamban's Ramayana: A Comparative study of some aspects 343
Dr. Aravazhi

The Semantic Distance Maintained by Kamban.... 348
Dr.S.Ramaratnam

கம்பன் என்றொரு மானிடன்

முனைவர் சிற்பிபாலசுப்பிரமணியம்
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

கம்ப மகாகாவியத்தின் பாவிகம் எது என்று கேள்விக்குப் பற்பல விடைகள் பகரப்படுகின்றன.

'அறம்வெல்லும் பாவம் தோற்கும்' என்பது அவற்றுள் ஒன்று. 'சிறை-யிருந்தாள் ஏற்றம் கூறியது' என்பாரும் உண்டு. வேறுபல காரணங்களும் இருக்கக்கூடும். எனினும் மகத்தான அசுர சக்திகளை வெல்ல வல்லது மானுடம் என்பதே கம்பராமாயணத்தின் ஆதாரசுருதி. இதுவே காப்பியத்தின் பக்கங்கள்தோறும் காணக்கிடைக்கிற கருத்துரு எனலாம். இதனையே, மகாகவி ரத்தினச்சுருக்கமாக, வைரத்தின் இறுக்கமாக,

"வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா"

எனக்குறித்துச் சென்றான்.

யாருடைய அவதாரக் கதையைச் சொல்ல வருகிறார் கம்பநாடர்? உன்னதமான ஒரு மாமனிதனின் கதையைச் சொல்வதே தம் நோக்கம் என அவர் புகல்வார்.

"நடையில் நின்றுயர் நாயகன் தோற்றத்தில்
இடைநிகழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்ததே"

இராமன் மனிதகுலத்துக்குப் பெருமை சேர்க்கிற பண்பாடும், ஒழுக்கமும் வாய்ந்தவன் என்பதை, 'நடையில் நின்றுயர் நாயகன்' என்றார். அதன் காரணமாக, அவன் கதை, 'தோம் அறு மாக்கதை' ஆகிறது. அரங்கேற்றமோ, 'உள்ளி உள்ளமெல்லாம் உவந்து ஈயும் வள்ளியோன்" ஆகிய மற்றொரு மாண்புறு மனிதன் முன்னிலையில் நடைபெறுகிறது. வைரக்குவியலைப் பொன்தட்டில் வைத்து வழங்கும் பீடுறு மானுடக் காப்பியம் கம்பராமாயணம்.

உலகத்து இராமாயணங்களை எல்லாம் ஆராய்ந்து, 'இராமகாதையும் இராமாயணங்களும்' என்ற மாபெரும் படைப்பை வழங்கியுள்ள அ.அ.மணவாளன் பெரும்பான்மையான இராமாயணங்கள் என்ன குறிக்கோளோடு இயற்றப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

அவதாரச் செய்திகள் கூற, ஆன்மிக உணர்வுகள் வளர்க்க, தருமம் பற்றிய ஞானமும் வீடுபேறும் எய்த, புகழும் செல்வமும் பெற, புண்ணியம் முத்தி கைகூட, இராமபிரானே உட்புகுந்து கட்டளையிட, வடமொழிக் காவியம் புரியாது என்பதால் எளிமையாகக் கூற, அரசர் வேண்ட, எனத் தம் இராமகாவியம் படைப்பின் நோக்கங்களைப் பலபடக் கூறியுள்ளனர் பன்மொழி இராமாயண ஆசிரியர்கள். ஆனால், கம்பநாடரோ,

"தேவபாடையின் இக்கதை செய்தவர்
மூவரானவர் தம்முளும் முந்திய
நாவினார் உரையின்படி நான் தமிழ்ப்
பாவினால் இது உணர்த்திய பண்பரோ?"

என வான்மீக மாமுனிவர் பெயரைச் சொல்லவும் மரியாதையால் கூசி, அவர் வழியில் காவியம் செய்வதாகக் குறிப்பிடுவார். மற்றோரிடத்தில், 'வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான்' என்ற வடமொழிக் காப்பியமரபை உள்வாங்கிக்கொண்ட நேர்த்தியோடு மூலத்தை அறிமுகப்படுத்துவார். வேறு இடங்களிலும் வான்மீகி பற்றிய குறிப்புகள் கம்பனில் உண்டு.

"தெய்வமாக்கவி மாட்சி தெரிக்கவே" தான் நூல் செய்ததாகவும் கம்பர் கூறுவார்.

இவ்வாறு கூறுவதற்கு மூலக்கதை என்பது மட்டும் காரணம் அன்று. ஏனெனில் வடமொழியில் இக்கதை செய்த பலரையும் கம்பர் அறிந்திருக்கிறார் உணர்ந்திருக்கிறார். வால்மீகியை முதன்மைப் படுத்தக் காரணம், அப்பெருங்கவிஞர் தம்காவிய லட்சியமாக எதனைக் குறிக்கிறாரோ, அதைக் கம்பரும் அடியொற்றுகிறார் ஏற்கிறார் என்பதுதான்.

"இந்த உலகத்தில் இப்போது இருப்பவர்களில் நற்பண்புகளை உடையவனாக இருப்பவன் எவன்? வீரியமுடையவனாகவும், அறங்களை அறிந்தவனாகவும், நன்றியுள்ளவனாகவும், எப்போதும் உண்மை பேசுபவனாகவும், விரதத்தில் உறுதியுடையவனாகவும் இருப்பவன் எவன்?" என்ற வினாக்களை எழுப்பி, நல்லொழுக்கம், அனைத்துயிர் அன்பு, பல்வகை அறிவு, ஆற்றல்கள் எல்லாம் உடைய ஒருவனை- மாமனிதனைத் தேடுகிறார் மாமுனிவர். நாரதர், இராமனே அத்தகைய பண்பாடுகளை உடையவன் என்று தெளிவுபடுத்த

அதன்பின்னரே, இராமனைக் குறித்து- புருஷோத்தமனைக் குறித்துக் காப்பியம் சமைக்கிறார்.

தொடக்கம் முதல் கடைசிவரை, மனிதநேயத்தின் அலகில்லாச் செழுமை கம்பனில் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கக் காணலாம்.

இராமன் புருஷோத்தமனாக வளர்வதற்குக் கோசல நாடே வளர்ப்புப் பண்ணை ஆகிறது. அது, நெறியின் புறஞ்செலா' நாடு. அங்கே ஓடும் ஆறு, 'இரவி தன்குலத்து எண் இல்பல் வேந்தர்தம் பரவுநல் ஒழுக்கின்படி பூண்டது', மக்கள் பொதுவாக, 'குலம் சுரக்கும் ஒழுக்கம்' குடிஇயல்பாகக் கொண்டவர்கள். ஆளும் தலைவன் தசரதன் அன்பின் தாயாக இருப்பவன். ஆயும் அறிவாக இருப்பவன். இத்தகைய நாட்டில் இராமன் அல்லாத வேறு எவர் தலைவனாகப் பொறுப்பேற்க முடியும்?

இராமனும் சகோதரர்களும் பின்னிப்பிணைந்த அன்பின் பெட்டகங்கள். தன் குடிமக்களிடம் மானுடநேயம் கொஞ்ச,

"எதுவினை இடர்இலை? இனிதுநும்மனையும்?" என நலம் கேட்கும் பிள்ளை இராமன்.

விசுவாமித்திரனுடன் வழிப்பயணம் செய்யும்போது தாடகை குறுக்கிட, அவளைக் கொல்லவேண்டும் என முனிவன் நினைக்கிறான். ஆனால், கொடியாரையும் அரவணைக்கும் இராமன் திருவுள்ளம் அதை மறுக்கிறது.

"அண்ணல் முனிவற்கு அதுகருத்து எனினும் ஆவி
உண்என வடிக்கணை தொடுக்கிலன் உயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுளனேனும்
'பெண்' என மனத்திடைப் பெருந்தகை நினைத்தான்..."

இப்போது விசுவாமித்திரன் பெருந்தகையா? இராமன் பெருந்தகையா? என்று நம்மனம் அம்மானையாடுகிறது. முனிவனே அவனைக் கொல்லத் தூண்டுகிறான்.

பின்னர், அகலிகைக்குச் சாபவிமோசனம் நிகழ்கிறது. அங்கு அவளுடைய அவலக் கதையைக் கேட்ட பின்னர், அவளை, 'போது நீ அன்னை' என்று பேசுகிற தாய்மனம் கொண்டவனாகத் திகழ்கிறான் இராமன். பழுத்த முனிவர் கோதமனை நோக்கி, 'நெஞ் சினால் பிழைப்பிலாளை நீ அழைத்திடுதி' என்று சொல்கிறான்

இன்னும் திருமணம் புரியாத இளைஞன் இராமன். அந்த மனிதப்பண்பினால்தான் அப்பொழுதே கம்பன் இராமனை, 'குணங்களால் உயர்ந்த வள்ளல்' எனக் குறிப்பிடுகிறான்.

மிதிலைக்குள் சென்று கன்னிமாடத்துப் பெண்கனியைக் கண்ட பின்னரும் மனம் ஊசலாடுகிறது.

"ஆகும் நல்வழி அல்வழி என்மனம்
ஆகுமோ?"

எனத் தன்னம்பிக்கையோடு தன்னைத் தேற்றிக் கொள்ளும் மானுட ஆளுமை இராமனுடையது. அதனாலேயே அவன், 'வசையில் அய்யன்' என மாண்புறுத்தப்படுகிறான்.

ஏற்கெனவே, கோசலநாட்டுக் குரு மட்டுமல்ல, அமைச்சர்களும் கூட, "மன்னவன் வெகுண்டபோதிலும், நீதிவிடாது நின்று உரைக்கும் வீரர்கள்" என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதையும் நினைந்து பார்க்கவேண்டும். மிதிலைக்கு அழைத்துச் செல்லும் விசுவாமித்திரனும் உலகையும் உயிர்களையும் நேசிப்பவன். அவனுடைய வரலாற்றை சதானந்த முனிவர் இராமனுக்குச் சொல்கிறார்.

சுவர்க்கம் மறுக்கப்பட்ட திரிசங்குவுக்காக, நியாயம் பேணாத வானவர் திடுக்கிட, விண்வெளியில் மற்றொரு பெரும்பதம் படைக்க முற்படுகிறான் விசுவாமித்திரன்.

"செழுங்கதிர், கோள், நாள், திங்கள்" இவற்றையும் படைத்து, "தாணுவோடு ஊர்வ எல்லாம் சமைக்குவென்" எனத் துணிகிறான். அநீதி யாருக்கும் இழைக்கப்படலாகாது என்ற பெருமனம் விசுவாமித்திரனுடையது.

தந்தைதாயரால், புறக்கணிக்கப்பட்டு அம்பரீடன் என்ற மன்னனுக்கு 'நரமேதம்' (மனிதப்பலி) செய்யத் தானம் செய்யப் படுகிறான் சுனக்சேனன் என்ற பிள்ளை. இதையறிந்ததும், யாகத்தில் முன் வைக்கப்பட்டாலும், "உனது உயிர்க்கு ஈறு உண்டாகா" என்று வரம் தந்து காக்கிறான் விசுவாமித்திரன்.

முன்பின் அறியாதவர்கள் எனினும் தவறிழைத்துத் துயரில் தள்ளப்பட்ட உயிர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்தவன் விசுவாமித்திரன். இராமனுக்கு இந்த வரலாறுகள் மானுட நேயத்தின் பாலபாடங்கள் ஆகின்றன.

இத்தனைக்கும் மேலாக, 'குலமுறை கிளத்து படலத்தில்' அணிவகுக்கும் இராமனின் முன்னோர்கள் 'வில்பிடித்த அற'மாக விளங்கினர் எனவும் ஒரு பின்புலம் உணர்த்தப்படுகிறது.

இந்தப் பாரம்பரியமும் விசுவாமித்திரத் தியாகப் பரிச்சயமும் இராமனின் மானுடப் பண்பை ஊட்டி வளர்க்கின்றன.

அதனாலேயே, அகங்காரத்தின் கொடுமுடியாகிய பரசுராமன் ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுடன் வந்த நிலையிலும் அமைதி காத்து, 'ஆதலால் கொல்லான்'என்று மன்னிக்கிறது இராமன் திருவுள்ளம். தம்பிக்காக, தாய்க்காக, தசரத வாய்மைக்காக, அரசைத் துறக்கும் தியாகம் இந்தப் பண்பாட்டின் எல்லையைத் தொடுவதில் வியப்பேதும் இல்லை.

காட்டுமனிதன், வேட்டைக்குரங்கு, கேட்டுக்கொள்கலமான அசுரர் எனக் குலம் பாராது குணம் பார்க்கும் பேருணர்வும் பெருமிதமும் இராமனிடம் ஊற்றாய்ப் பெருகியமைக்கு மானுடத்தின் விளைவயலாக அவன் மாறிப்போனது காரணமாகிறது.

வனம் புகுந்தபின் இராமனிடம் பணிவும் துணிவும் இயல்பினாலும் பயில்வினாலும் குடிபுகுகின்றன. தண்டக வனத்து முனிவர்களைக் காப்பதாய் உறுதி அளிக்கும் சொற்களில் தியாகம் சுடர்விடுகிறது. அவர்களைக் காக்க,

"இறந்து போகினும் நன்று இது அல்லது
பிறந்து யான் பெறும் பேறு என்பது யாவரோ?"

என்றும்,

"யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்
சாவம் பெற்றவ ரே தகை வான்உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார்"

என்றும் பேசும்போது அவனுடைய மனிதப்பண்பு முதிர்ச்சி பெற்றுவிடுவதைப் பார்க்கிறோம்.

யுத்தம்கூட அவன்மீது திணிக்கப்படுகிறதேயன்றி, அவனாகக் களம் காண ஆசைப்படவில்லை. சூரப்பணகையிடம் அவன் நகையாடுவதும், அவள் மூக்கும் முலையும் இலக்குவனால் அறுபட்டபோது, "இவள் இழைத்த பிழை என்?" என்று அறிய வினாவும் அவன் அருள் உள்ள வெளிப்பாடுகளே ஆகின்றன.

தெய்வத்தன்மையை ஏற்றி இராமனனப் பொலிவுபடுத்த முயன்றான் கம்பன் எனினும் அவனுடைய மானுடப்பண்புகள் போட்டியிட்டு மேலேறி ஆளுமை செலுத்துகின்றன. கானகத்தில் இலக்குவன் புனைந்த பர்ணசாலையைப் பார்க்கிறபோது சகோதரனின் தன்னலமற்ற உழைப்பு இராமனிடம் கண்ணீரை வரவழைக்கிறது.

"என்று கற்றனை நீஇதுபோல்? என்றான்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான்"

என்பார் கம்பர். 'இடர் உனக்கு இழைத்தேன்' என்று தன் தம்பியிடம் சொல்லி நொந்துகொள்வான் மானுட இராமன்.

அயோமுகிப் படலத்தில் தாகம் தணிக்க நீர் தேடிப்போகிறான். இலக்குவன். திரும்பிவரத் தாமதமானதும் துடித்துப்போன இராமன் வாளை எடுத்துத் தற்கொலை செய்துகொள்ள முயல்கிறான்.

"மறப்பால் வடிவாள் கொடு மன் உயிரைத்
துறப்பான் உறுகின்றான்."

ஆருயிர்களை எல்லாம் காக்க வந்த தெய்வம் தன்னையே மாய்க்க முயல்வதுண்டோ? இது முற்றிலும் மானுடச் செயல் அன்றோ?

கவந்தன் படலத்தில் அவனை அழிக்க நான்முந்தி, நீமுந்தி என்று அண்ணனும் தம்பியும் போடும் போட்டி அழகிது, அழகிது!

"இளங்கோ இளையோற்கு
முன்னே செல்லும் முன்னவன், அன்னானினும் முந்த
தன்நேர் இல்லாத் தம்பி தடுப்பான்"

இந்தச் சகோதர பாசத்தை மானுட இயல்பென்று கூறாது வேறு எவ்வகையில் பொருள்கொள்ள முடியும்? இத்தகைய உயிர்த்தியாகப் போட்டி பிற காண்டங்களிலும் தொடர்கிறது.

கிட்கிந்தா காண்டம் இந்த மானுடப்பண்புக்கு மகுடம் வைக்கின்றது.

"வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்ற தம்மா"

என்று இராமனைப் பார்த்த முதல் பார்வையிலேயே சுக்ரீவன்

தெளிவுற உணர்ந்து மனதுள் மொழிகிறான். இதுதான், கம்பர் இராமனைச் சீர்தூக்கி மதிப்பிட்டு எழுதிய அழியாத கல்வெட்டு.

தொடர்ந்து நடைபெறுகிற இராமகாதையின்போக்கில் மறத்தலும், மன்னித்தலுமாகிய உயர்மானுடப் பண்பு பலநிலைகளில் வெளிப்படுத்தப்படுகிறது.

இராமன் படைக்குள் இராவணன் ஒற்றர்கள் நுழைந்து விடுகிறார்கள். விழிப்பு மிக்க வீடணனால் அடையாளம் காணப்படுகிறார்கள். அவர்களை அடித்து, மாணைக்கொடியால் கட்டி இழுத்து வரப்படுகிறார்கள். தாக்குதலால் ஒற்றர் வாய்வழிக் குருதி சோர்கிறது. அவர்களைக் கண்ட இராமன் இரக்கம் கொள்கிறான். 'துன்புறுத்தாதீர்' என்று தடைவிதிக்கிறான்.

"பாம்பு இழைப் பள்ளி வள்ளல்
பகைஞர் என்று உணரான் பல்லோர்
நோம்பிழை செய்த கொல்லோ,
குரங்கு என இரங்கி நோக்கி
'தாம் பிழை செய்தா ரேனும்
தஞ்சம் என்று அடைந்தார் தம்மை
நாம்பிழை செய்ய லாமோ?
நலியலீர் விடுதீர்' என்றான்."

ஒற்றர் என அறிந்தபின்னும் உயிர்ப்பிச்சை நல்கி அனுப்பும் பெட்பு இராமனுடையது.

இந்தப் பண்பின் உச்சநிலைதான் முதல்நாள் போர். படையிழந்து, குடையிழந்து, நடையிழந்து நாணும்படியான தோல்வி நேர்கிறது இராவணனுக்கு. அப்போது அவனை - தன் பத்தினியைக் கவர்ந்த பாதகன் திருந்த வாய்ப்பு நல்குகின்றான். அறிவுரைப்படி நடந்தால்,

"தரையில் வைக்கிலன் நின் தலை"

என்று செறிவான அறிவைப் புகட்டுகின்றான். அதன் முடிமணியாக,

"இன்று போய்ப் போர்க்கு
நாளை வா என நல்கினன்"

இராமன். இதுதான் இராமனின் மானுடஉணர்வு மணிமுடி கவித்துக்கொண்ட மந்திரப்பொழுது. இதற்கு ஈடுஇணை உலகில் எந்தக் காப்பியத்திலும் இல்லை.

வெம்பழி முடிக்கத் துடிக்கும் அக்கில்லஸ் அல்ல இராமன்.

கையில் அகப்பட்ட பகையை எய்த அம்பால் இரண்டு துண்டு ஆக்குபவன் அல்ல இராமன்.

அருள் என்னும் அன்பீன் குழவி அவன்!

சிலப்பதிகாரக் கண்ணகிகூட மன்னிக்கிறாள் பாண்டிய மன்னனைக் காப்பிய முடிவில்....

"தென்னவன் தீதிலன்" என அன்னை கண்ணகி மன்னிப்பு மொழி பகர்வதன் முன்னரே பாண்டியன் உயிரிழக்கிறான் அவன் பத்தினி தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடுகிறாள். மதுரைக்காண்டம் நெருப்புக் காண்டமாய் முடிந்துபோகிறது.

ஆனால், கம்பனின் இராமன் களப்போரில் நின்றபடி மன்னிப்பை அருளி மனிதநேய இமயமாகிறான். அந்த மாண்பிறந்த மானத்தான் அதற்கு இசைய மறுத்து வசையுடன் மாய்கிறான்.

கம்பனின் இராமவதாரம் மானுட கங்கையின் பிரவாகம்.

கம்பன் என்றொரு மானிடன்

திருமிகு. அய்க்கண்
காரைக்குடி.

மண்ணுலகில் தீயவரை அழிப்பதையும் நல்லவரைக் காப்பதையும் நோக்கமாகக் கொண்டு, விண்ணுலகிலிருந்து கீழிறங்கி வருவதே தெய்வத்தின் அவதாரம். துஷ்ட நிக்கிரகத்துக்கும் சிஷ்ட பரிபாலனத்துக்குமாகத் திருமால் எடுத்த மச்ச, கூர்ம, வராக, நரசிம்மமாகிய அவதாரங்கள், குறைந்த கால அளவே தோன்றி அரக்கர்களை அழிப்பதாக அமைந்தன. ஆனால் இராவணாதியர்களை அழிப்பதற்காக எடுத்த இராமாவதாரத்தில், திருமால், சாதாரண மானிடனாகவே பிறந்து, வளர்ந்து, மணந்து, கானகம் சென்று, மனைவியைப் பிரிந்து, துணைவரைச் சேர்த்துக் கடல் கடந்து, இராவணனை எதிர்த்துப் போர் நடத்திக் கொன்று, நாடுதிரும்பி முடிசூடி, முழுமையான ஒரு மானிட வாழ்க்கைக் காலத்தையே மேற்கொள்கிறார். எனவே, அவதார நோக்கம் மட்டுமின்றி, மனிதர்கள் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' வழிகாட்டுவது போல் 'நடையில் நின்று உயர் நாயகனாக' வாழ்ந்து காட்டும் நோக்கமும் இராமாயணத்தில் அமைந்துள்ளதைக் காண்கிறோம்.

ஒரு நல்ல மகனாக, நல்ல சகோதரனாக, நல்ல கணவனாக, நல்ல நண்பனாக, நல்ல தலைவனாக - ஏன், நல்ல பகைவனாகவும் 'நாசம் வந்துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்' என்று இராணவனே (யுத்த காண்டம்- கும்பகருணன் வதைப்படலம்-31) ஏற்றுக்கொள்கிறான். வாழ்ந்து காட்டுகிறான் இராமன்.

எவ்வளவு நல்லவனிடமும் ஒரு குறை இருக்கக்கூடும் என்ற மானுட இயல்பையும் காட்டத் தவறவில்லை அவன். விளையாட்டுப் பருவத்தில் கூனியின் முதுகில் வில்லால் மண்ணுண்டையை அடித்துக் கேலி செய்ததன் விளைவைப் பிற்காலத்தில் உணர்ந்து வருந்துகிறான்.

'பண்டை நாள் இராகவன் பாணி வில் உமிழ்
உண்டையுண்டதனைத் தன் உள்ளத்து உள்ளுவாள்'

(அயோத்தியா-மந்தரை சூழ்ச்சி - 41)

என்னும் இந்தச் செய்தி, வால்மீகியில் இல்லை என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

ஒரு மானிடனின் காவியம்

இராமாயணத்தைக் 'காசில் கொற்றத்து இராமன் கதை'யாக மட்டும் கொள்ளாமல், ஒரு மானிடனின் கதையாகவே ஏற்று, மானுட சமுதாய வளர்ச்சிக்கு வழிகாட்டும் கதையாக, 'ஆசை பற்றி அறையலுற்றான்' கம்பன் என நாம் கொள்ள வேண்டும்.

இராமனின் புகழ்பாடும் பக்திக் காவியத்தையே மானுட சமுதாய வளர்ச்சிக்கான வழிகாட்டு நூலாக, ஒரு படைப்பாழிக்கு உரிய சமுதாய அக்கறையோடு உருவாக்கியுள்ளான் கம்பன்.

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்றதுமே, 'புகழ்க் கம்பனை' நினைவுகூரும் கவிஞன் பாரதி, 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்' (சுயசரிதை-24) என்று, கம்பனைக் 'கவிஞன்' என்று சுட்டாமல், 'மானிடன்' என்று குறித்திருப்பது, பொருள் செறிந்த தொடர் எனலாம்.

தான் இயற்றிய இராமகாதையை, அக்கால வழக்கம் போல், யாரேனும் ஓர் அரசர் அவையில் அரங்கேற்ற அவன் விரும்பவில்லை. இறையன்பர்களும் பொதுமக்களும் நிறைந்துள்ள கோயில் வளாகத்திலேயே அரங்கேற்றினான்.

நன்றியுணர்வு

'தெய்வ மாக் கதையில் 'நரஸ்துதி' இடம் பெறக்கூடாது' என்று வைணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோதும், முழுதும் பணிந்துவிடாமல், 'நூறு பாடலுக்கு ஒருமுறை' என்பதை மாற்றி, 'ஆயிரத்துக்கு ஒரு பாடல்' என்று தன்னைப் புரந்த சடையப்ப வள்ளலின் பெயரை, மேலும் சிறப்புடன் காவியத்தில் இடம் பெறச் செய்த கம்பனின் நன்றி எனும் மானுட உணர்வு, நெகிழ்ந்து போற்றுதற்குரியது. அதிலும், காவியத்தின் முத்தாய்ப்பான திருமுடிசூட்டு படலத்தில் சடையப்பரின் பெயரை இணைத்திருப்பது, கம்பனின் நன்றிச் சிறப்பின் உச்சம் எனலாம்.

"அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் பற்றப்
பரதன் வெண்குடை கவிக்க, இருவரும் கவரி வீச,
விரைசெறி கமலத்தாள்சேர் வெண்ணெய்மன் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி"
(38)

என்ற பாடலில் இரு நுட்பங்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

அனுமன், அங்கதன் முதலானோர்க்கு எந்த வித அடைமொழியும் சேர்க்காமல், வெறும் பெயரையே குறிப்பிடும் கம்பன், தன் வள்ளலுக்கு மட்டும் 'விரைசெறி கமலத்தாள் சேர் வெண்ணெய்மன் சடையன்' என்று அடிமுழுவதும் அடைமொழி சேர்த்திருப்பது கவனித்தற்குரியது.

இரண்டாவதாக - வசிட்டன், யாருக்கு மௌலி புனைந்தான் என்பதே இப்பாடலில் இல்லை. அடுத்த பாடலில்தான். 'உலகம் மூன்றும் களிப்ப' இராமன் மௌலி சூடினான் என்று கூறுகிறான் : அதற்கடுத்த பாடலில், இன்னும் விளக்கமாக - மண்ணுலக மானிடரும் விண்ணுலகத் தேவரும் கீழுலகத்தவரும், தத்தம் தலையில் சூட்டிய முடியாகக் கருதினர் என்று கூறுவதன் மூலம், மானிடரையே முன்னிறுத்தும் கம்பனின் எண்ணத்தைப் புரிந்து கொள்ளலாம்.

அரசியல் பரிணாமம்

மானுட சமுதாயத்தின் முக்கிய நிறுவனமான அரசியலில் புதிய சிந்தனைகளையும் வளர்ச்சிக் கூறுகளையும் கதைப்போக்கில் காட்டிச் செல்கிறான் கம்பன். ஓர்அரசன் குடிமக்களிடையே இருந்து, அவர்தம் இன்ப துன்பங்களில் பங்கேற்கும் பொறுப்பானவனாக முகிழ்க்க வேண்டும் என்ற சிந்தனையோடு, இளவரசன் இராமனைச் சித்திரிக்கிறான் கம்பன்.

நகரத் தெருக்களிலே எதிர்வரும் குடிமக்களை அணுகி, அன்புடன் முகம் மலர,

"எது வினை? இடர் இலை? இனிதின் நும் மனையும்
மதி தரும் குமரரும் வலியர்கொல்?,' எனவே" (பால - திருஅவ - 135)

அவர்தம் குடும்ப நலனை வினவிக்கேட்கிற எளிமைப் பண்பு - 'சௌலப்ய' குணம் - உடையவனாக இளவரசன் பழகுகிறான்.

கோசல நாட்டைப் பாடப் போந்த கம்பன், மற்ற கவிஞர்களைப்போல், நாடு, நகர், ஆறு முதலியவற்றின் வளத்தையும், இயற்கையழகையும் வர்ணிப்பதோடு அமையாமல், ஓர் ஆதர்ஸ மன்னனையும் ஒரு 'குறிக்கோள்' நாட்டையும் சித்திரித்துக் காட்டுகிறான்.சங்க காலத்தில் மோசி கீரனார்,

'நெல்லும் உயிர் அன்றே: நீரும் உயிர் அன்றே:
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (புறநானூறு - 186)

என்றும், பிற்காலத்தில் திருத்தக்கத் தேவர்,

'வெண்குடை மன்னர் கண்டாய் நல்லுயிர் ஞாலம் தன்னுள்'
(சீவக சிந்தாமணி - 2908)

என்றும், மன்னனின் உயிர்ச்சிறப்பைச் சுட்டுவர்.

மன்னன் உயிராகவும், மக்கள் உடலாகவும் உள்ள பழைய நிலையை, தலைகீழான அரசியல் புரட்சியாக மாற்றிச் சொல்கிறான் கம்பன்.

'செயிரிலா உலகினில் சென்று நின்று வாழ்
உயிர்எலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினன்' (பால-அரசியல்-10)

எனத் தயரதனைக் குறிக்கிறான்.

உடலை இயக்குவது உயிர்: எனவே உயிர்தான் முக்கியமானது. சங்க காலந் தொட்டு இருந்த இறைமையை மாற்றி, அரசனை வெறும் உடம்பாகவும், மக்களை உயிராகவும் சொல்லும் கம்பனின் கூற்று, இன்றைய மக்களாட்சியின் அடிப்படைக் கொள்கையை வெளிப்படுத்தும் நுட்பம், வியந்து போற்றுதற்குரியது.

'குறிக்கோள் நாடு'

கோசலநாட்டின் வளத்தையும் அழகையும் பாடும்போது, ஓர் இலட்சிய நாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்று வரையறுத்துச் சொல்கிறான்.

"வண்ணம் இல்லை, ஓர் வறுமை இன்மையால்,
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்,
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்,
வெண்மை இல்லை, பல்கேள்வி மேவலால்" (பால-நாட்டு-53)

"கல்லாது நிற்பார் பிறர் இன்மையால், கல்வி முற்ற
வல்லாரும் இல்லை, அவை வல்லர் அல்லாரும் இல்லை.
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே,
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ'!
(பால-நகர-74)

என்று கோசலத்தை ஒரு குறிக்கோள் நாடாக, நம் கண்முன் காட்டுகிறான் கம்பன்.

16-ஆம் நூற்றாண்டுச் சிந்தனையாளர் தாமஸ் மூர், கனவு கண்ட *Utopia* என்ற இலட்சிய நாட்டை, எவ்வளவு தீர்க்க தரிசனத்துடன், கம்பன் அன்றே கண்டிருக்கிறான் என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

காளத்தி வேடன்

கி.பி. 6-7-ஆம் நூற்றாண்டுகள் தொடங்கி, தமிழகத்தில் சைவமும் வைணவமும் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கின. பின்னர் சில நூற்றாண்டுகளில் அவற்றிற்கிடையே பிணக்குகளும் பூசல்களும் அவ்வப்போது தோன்றியதை வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அக்காலத்தில் தோன்றியது சேக்கிழாரின் பெரிய புராணம். புகழும் செல்வாக்கும் பெற்ற அக்காப்பியத்தில், கண்ணப்ப நாயனார் கதையில், ஆகம வழிபாடு, அன்பு வழிபாடு என இரு வகை வழிபாடுகள் விளக்கம் பெறுகின்றன. சாத்திர பூர்வமான சம்பிரதாய வழிபாட்டை விட, உளப்பூர்வமான அன்பு வழிபாடு, சிவனுக்கு உகந்தது என்ற கருத்து, கண்ணப்பர் கதையால் உறுதிப்படுகிறது.

ஆகம முறைப்படி பூசை செய்யும் சிவகோசரியாரிடம், 'வேடன் திண்ணப்பன், என் தலையில் நீ சூடிய மலர்களைத் தன் செருப்படியால் தள்ளும்போது, முருகனது சேயடி என் உடலில் படுவது போலிருக்கும். எனக்குத் திருமஞ்சனம் செய்ய, அவன் வாயிலிருந்து உனிழும் ஆற்று நீர், கங்கைத் தீர்த்தத்தை விட, புனிதமானது. அவன் தலையிலிருந்து சொரியும் காட்டு மலர்கள், முக்கடவுளரும் தேவரும் இடுகின்ற மலர்களை விட, உயர்ந்தவை. வேட்டையாடிக் கொன்ற பன்றியின் கவியை வேகவைத்து, 'வெந்துள்ளதா?,' என்று வாயில் மென்று பார்த்துத் தேர்ந்து அவன் படைக்கும் ஊன், முனிவர்தம் வேள்வியில் அளிக்கும் அவியுணவை விட, இனியது. அகம் நெகிழ, முகம் மலர, அன்பாலே என்னை நினைத்து என்னிடம் பேசும் சொற்கள், வேதியர்களின் மந்திர தோத்திரங்களை விட, சிறந்தவை' என்று சிவபெருமானே விளக்கமாகத் தெரிவிக்கிறார்.

கங்கை வேடன்

இம்மாதிரியான எளிய அன்பார்ந்த பூசையை, சிவபெருமான் மட்டுமல்ல-திருமாலும் ஏற்றுக்கொள்வார் என்று மக்களுக்கு அறிவிக்க வேண்டிய கடப்பாடு, கம்ப நாட்டாழ்வாருக்கு ஏற்பட்டுவிடுகிறது. வால்மீகி கூறாத நரசிம்மாவதாரச் சிறப்பை, வீடணனின் வாய்மொழியாக, தன் இராமாயணத்தில் இணைத்தது போல, காளத்தி வேடனுக்கு இணையான பாத்திரத்தைப் படைக்க வேண்டிய இன்றியமையாமை, கம்பனுக்கு நேர்கிறது.

இராமனின் அன்பர்களில், சிருங்கிபேர நகரின் அரசனான குகனையே கங்கை வேடனாக உருமாற்றம் செய்கிறான் கம்பன்.

வான்மீகத்தின்படி, அரசன் குகன் ஏற்கனவே இராமனுக்கு அறிமுகமான நண்பன். இராமன் காட்டுக்கு வந்துள்ளான் என்பதைக் கேள்விப்பட்டதும், அவனைப் பார்க்க வரும் அரச குகனை எதிர்கொண்டு சந்திக்கிறான் இராமன். நண்பனுக்காக அறுசுவை உண்டி கொண்டு வந்திருக்கிறான் அரசன். ஆனால், இராமன் இ தான் கானகம் வந்து தாபத நிலை மேற்கொண்டிருப்பதால், அவற்றை உண்ணக்கூடாது என்று கூறி மறுத்துவிடுவதாக வான்மீகத்தில் காண்கிறோம்.

ஆனால் - 'நாவாய் வேட்டுவன் நாயடியானாக, தேவனின் கழல் சேவிக்க வந்த' குகன்.

"அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு அமைவதாகத்
திருத்தினன் கொணர்ந்தேன். என்கொல் திருவுளம்?"

(அயோத்தியா-கங்கை-42)

என்று பணிந்து கேட்கிறான்.

சுற்றிலுமுள்ள முனிவர்கள், தம் மூக்கை மூடிக்கொண்டு, இராமனைப் பார்க்கிறார்கள்!

"அரியதாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த அன்றே?
பரிவினில் தழீஇய என்னில் பவித்திரம். எம்மனோர்க்கும்
உரியன. இனிதின் நாம் உண்டனெம் அன்றோ?"

(அயோத்தியா-கங்கை-43)

என்று மீனையும் தேனையும் ஏற்றுக் கொள்கிறான் திருமால்.

'அரியும் சிவனும் ஒண்ணு' என்ற பாடத்தை மானுடத்திற்கு இதன்மூலம் வழங்குகிறான் கம்பன்.

கற்பின் பரிணாமங்கள்

சமுதாயத்தில் கற்பு என்பதன் மாற்றங்களிலும், கம்பன் தன் சிந்தனையைப் புலப்படுத்துகிறான்.

'கற்பு என்பது, பெண்களுக்கான 'இயல்பு உணர்வு' *(INSTINCT)* அன்று; அது கற்பிக்கப்படுவதே' என்பர். எனவே கல்வி போன்று அதுவும் காலந்தோறும் மாறுபடுவதே எனலாம்.

முற்காலத்தில் 'கற்பு எனப்படுவது, பிறர் நெஞ்சு புகாமை' என்று வரையறுக்கப்பட்டிருந்தது. யாரோ ஒருவன், ஒரு பெண்ணைப் பார்த்து,

ஒருதலைக் காமமாகத் தன் மனதில் நினைத்தாலே அவளது கற்பு பறிபோனதாகக் கருதினார்கள்.

பொருள் ஈட்ட வெளிநாடு சென்ற கணவன் திரும்பி வரும் வரை கடற்கரையிலே தன்னைக் கல் உருவமாக்கிக் கொண்டு நின்ற பத்தினி, கணவன் வேறு நாடு சென்றிருந்த காலத்தில், தன் முகத்தைக் குரங்கு உருவமாக்கிக் கொண்டு காத்திருந்த பத்தினி (வஞ்சின மாலை, 15-17, 19-23) ஆகியோரைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது.

இராமாயணத்திலும், இராமனது அம்புகளால் உடலெங்கும் துளைக்கப்பட்டு மாண்டு கிடந்த இராவணன் மேல் விழுந்து அழும் மண்டோதரி,

'வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பு எடுத்த திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடம் இன்றி உயிர் இருக்கும் இடம் நாடி இழைத்தவாறோ?
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி?'
(யுத்தம்-இராவணன் வதை-239)

என்று புலம்புவது, இக்கொள்கையின் பாற்பட்டதே,

பிற்காலத்தில், மனைவி பிற ஆடவனைப் பார்த்து மனம் பேதலித்தாலே, கற்பிழந்தவளாகக் கருதப்பட்டாள். ஜமதக்னி முனிவரது பத்தினி ரேணுகாதேவி, நாள்தோறும் ஆற்றில் நீராடியதும், தன் கற்பின் திறத்தால், அந்த நீரிலேயே ஒரு பானையை உருவாக்கி, அதில் நீர் மொண்டு ஆசிரமம் திரும்புவாள். ஒரு நாள் நீராடும் போது, விண்ணிலே சென்ற ஒரு கந்தர்வனை, கீழே நீர் நிழலிலே கண்டு, அவனழகிலே நொடிப்பொழுது மனம் லயித்ததால், கற்பு இல்லாமற்போய், அன்று நீரிலே பானையை உருவாக்க முடியவில்லை!

'நெஞ்சினாற் பிழைப்பிலாள்'

கற்பின் தொடர்பாகப் பல விவாதங்களுக்குட்பட்டது அகலிகையின் பாத்திரம். தன் கணவர் உருவில் வந்தவன் இந்திரனே என்று முன்பே தெரிந்தும், அவனுக்கு உடன்பட்டுக் கூடி, முனிவர் வந்ததும் அவனைத் தப்பிக்கச் செய்தவள் அகலிகை என்பது வான்மீகம். தெரிந்தே கற்பை இழந்தவளுக்கும் மன்னிப்புத் தருகிறார் வால்மீகி.

கம்பனுக்கு இதில் உடன்பாடு இல்லாததில் வியப்பில்லை. 'கூடிய பின்னரே, அவன் கணவனல்லன் என்பதை உணர்ந்து, காலங் கடந்துவிட்டதால் 'செய்வதறியாது கிடந்த பேதை அவள்' என மாற்றி

'நெஞ்சினால் பிழைப்பு' இலாத (பால-அகலிகை-85) அகலிகையை மன்னிக்கிறான் கம்பன்.

இராமன் அவள் பற்றிய செய்தியை எல்லாம் கேட்டு 'மனத்திற்கொண்டு' (83) 'அன்னையே!' என விளித்து அவளை வணங்குகிறான். அவனே ஒரு தந்தை ஸ்தானத்திலிருந்து, 'மாசறு கற்பின் மிக்க அணங்கினை' (86) முனிவன் கையில் கன்யாதானம் செய்து கொடுக்கிறான். அவனது கால் துகள் பட, கல்லிலிருந்து பெண்ணாக உருவான அகலிகைக்கு, இராமன் தந்தை போன்றவன்தானே? மயிலையில், எலும்பாக இருந்து, தன்னால் இளம் பெண்ணாக உருவான பூம்பாவையை, ஞானசம்பந்தன் மகளாக உறவு பூண்ட பெரிய புராண நிகழ்ச்சி இங்கு நினைவு கூர்தற்குரியது.

'கற்பின் கனலி'

உடலால் களங்கப்பட்ட பெண்ணுக்கே மன்னிப்பு வழங்கிய அயோத்யா இராமன், இலங்கையிலே 'கற்பெனும் பெயரதாய் களிநடம் புரிந்த' சீதையைத் தீச் சோதனைக்குட்படுத்தியது, முரணாகத் தோன்றலாம். ஆனால், அகலிகை, நாட்டிலே ஒரு தனியாள்: சீதை, நாட்டின் அரசமாதேவி. ஒரு நாட்டின் அரசனும் தேவியும், சமுதாயத்திற்கு ஆதர்ஸமாக விளங்க வேண்டியவர்கள். 'சீஸரின் மனைவி, சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாயிருக்க வேண்டும்' என்பதை மேல்நாட்டு அரசே கொள்கையாக அறிவிக்கிறது.

'மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் நான் தூய்மையானவள் என்றால், என்னை நான்கு திசைகளிலும் காப்பாயாக' என்று சொன்னவாறு வால்மீகியின் சீதை, நெருப்பில் இறங்குகிறாள். ஆனால் கம்பன்.

'மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேன் எனில்
சினத்தினால் சுடுதியால், தீச்செல்வா!' (யுத்தம்-மீட்சி-84)

எனக் கூறி, வேண்டுமென்றே உடலைச் சொல்லாமல் விட்டுவிடுகிறான்.

சீதை, மனம், வாக்கு ஆகிய இரு கரணங்களை மட்டும் சொன்னதற்குப் பல விளக்கங்கள் கூறலாம்.

கம்பன், ஒரு மானிடனின் கதையை மட்டும் பாட வந்தவன் அல்லன்: அக்கதையை ஒட்டி, மானுட வரலாற்றின் எதிர்காலப் போக்கையும் தீர்க்க தரிசனத்துடன் உள்ளுறையாகச் சுட்டிக் காட்ட வந்த மானுடக் கவிஞன் அவன்.

மானுடம் வென்ற கதை

காலப்போக்கில், மனம், வாக்கு ஆகியவற்றின் ஒப்புதல் இல்லாமலே, வன்முறையில் அப்பாவிப் பெண்களின் உடல் கற்பழிக்கப்படும் அவலம் நேரிடும் என்பதைத் தீர்க்க தரிசனமாக உணர்கிறான் கம்பன்.

இந்திய-பாகிஸ்தான் பிரிவினைக் கலவரங்களில், பெண்கள் பலர் பலாத்காரமாகக் கற்பழிப்புக்குள்ளான நிலையில், அவர்களை மீண்டும் தூயவர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார் இராமபக்தர் காந்தியடிகள். தலைவர் முஜிபுர் ரஹ்மான், பங்களாதேஷ் போரில், பகை ராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்ட பெண்களை 'வீர மகளிர்' என விருதளித்துப் போற்றி, அவர்களைக் களங்கமற்றவர்களாக அறிவித்தது வரலாற்றுச் செய்தி.

மானிட சமுதாயத்தின் எதிர்கால விளைவுகளையெல்லாம் உணர்ந்த தீர்க்கமான ஞானத்தோடு, கம்பனுடைய படைப்பாற்றல் திகழ்வதைப் பார்க்கிறோம்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழும்' மானிடர், 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' (50) என்னும் குறள்நெறியால், மானுடர், தேவரையும் வென்று உயர முடியும் என்பதை

"வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றதன்றே"

(கிட்கிந்தா-மராமரம்-57)

என்று தெளிவுறுத்துகிறான் கம்பன்.

இராமாயணத்தை ஒரு தெய்வமாக்கதையாக மட்டும் நடத்திச் செல்லாமல், ஒரு மானிடனின் வழிகாட்டும் வரலாறாக, மானுடத்தின் முன்னோடிச் சிந்தனைகளையும் உள்ளடக்கி அமைந்துள்ள கவிஞனை, 'கம்பன் என்றொரு மானிடன்' என்று பாரதி போற்றியுள்ளமை, முற்றிலும் பொருத்தமே.

கம்பன் என்னும் மானுடன்

திருமிகு. க.ம.சுந்தரவதனன்
கடுக்கலூர்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்" என்றும் "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும் பாரதி போற்றிய கம்பன் எத்தகையவன்? என்றால் அதையும் பாரதியே நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றான். "கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்" என்று கம்பனை 'மனிதன்' என்ற ஒற்றைச் சொல்லால் உயர்த்தி நிறுத்துகிறான் பாரதி. இந்த உத்தியும் கம்பனால் கையாளப்பட்டுள்ளது. "அல்லையாண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச"ழூ(கம்ப. இராமா.பாடல்எண்.2344) எல்லையில்லா அழகுடைய இராமனும் அவளும் (சீதை) உறங்கினர் என்பான் கம்பன். இராமபிரான் அழகை வர்ணித்த கம்பன் சீதையை அவ்வாறு வர்ணிக்கவில்லை. ஏனெனில், இந்தப்பாடல் குகனின் வாய்மொழியாக வருவதால் அடுத்தவர் மனைவியின் அழகினை ரசித்து எடுத்தோதல் தகாது என்று 'அவள்' என்ற ஒற்றைச் சொல்லால் குறிப்பிடுகின்றான். அல்லையாண்டு அமைந்த மேனி அழகனுக்கு நிகரான அழகியவள் என்பதை உணர்த்தவே 'அவள்' என்ற சொல் ஈண்டு கையாளப்பட்டுள்ளது.

'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பதுபோல பாரதி கம்பனை, கம்பனின் உத்தியைக் கொண்டே உயர்நிலையில் வைத்துப் போற்றுகின்றான். மானுடம் உயர்நிலையை அடைவதற்குக் கம்பன் காப்பியம் உறுதுணையாய் இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லாத பாரதியின் அடியொற்றிக் கம்பன் என்னும் மானுடன் பற்றிக் காணலாம்.

மானுடம் அல்லது மானிடம்

மானுடம் அல்லது மானிடம் என்னும் இருசொற்களுமே மனிதம் என்னும் மனித சமூகத்தையே குறிக்கும் சொற்களாகும். மனிதம் என்ற சொல் மனிதநேயம், மனிதத்தன்மை என்று பொருள்படும். மனிதத்தன்மை (*Humanism*) என்ற சொல் சமீபகாலமாக மேடைகள்தோறும் ஓங்கி ஒலிக்கப்பெறும் சொல்லாக அமைந்துவரக் காண்கிறோம். "மானுடக்கோட்பாடு என்பது மனிதனை

மெய்யான மனிதத்துவம் உள்ளவனாக ஆக்குவதிலும், இயற்கையிலும் வரலாற்றிலும் நிறைந்துள்ள அனைத்துக் கூறுகளிலும் பங்கு கொண்டு மனிதன் தன் அசல் மகத்துவத்தை எய்துவதிலும் அமைந்துள்ளது" என்பார் கா.சிவத்தம்பி.(சிற்பி பாலசுப்பிரமணியம், கம்பனில் மானுடம், ப.47) "மனிதனுடைய அறிவு புலன்களால் உண்டானதே. பௌதிகப் பொருளான மூளையில் எழுந்ததே.

"The Development of the mind is the process of man's evolution. Mind is the highest form of matter" என்றார் பேரறிஞர் என்.வி.நாயுடு. (மேலது, ப.47) மான்உடம்படுதல் மானுடம், மான் என்னும் பெருமைகள் மற்றும் மாண் என்னும் உயர்பண்புகள் இவற்றிற்கு உடம்படுதலே மானுடம் எனலாம். மானிற்கு இடமாதல், அரிய நற்பண்புகளுக்கு இடமாதலின் மானிடம் என்றும் பொருள்கொள்ளலாம்.

தமிழ் போற்றும் மானுடம்

மேலை நாட்டு அறிஞர்கள் பலரது கருத்துகளை நாம் எப்போதும் போற்றிப் பாதுகாத்து வருகிறோம். ஆனால் அதேசமயம் தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்த பல பெருமக்கள் அவற்றைவிடவும் அரிய பல நற்சிந்தனைகள் கொண்டு இலங்கியுள்ளனர். அவற்றை நாம் தோட்டத்துக் கீரை என்ற அளவில் வைத்துள்ளோம். மனிதநேயம், மனிதப்பண்பு என்பதை மேனாட்டு அறிஞர்களைக் காட்டிலும் நம் தமிழ்ச் சான்றோர்கள் ஆணித்தரமாக முரசறைந்துள்ளனர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கணியன் பூங்குன்றனார் "யாதும் ஊரே: யாவரும் கேளிர்" என்று பாடியுள்ளார். இதைவிடவும் மனிதப்பண்பு வேறெதுவும் இல்லை எனலாம்.

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்" (குறள்-958)

என்பது வள்ளுவர் வாக்கு. ஒருவனுடைய நற்குடிப் பண்புகளுக்கு இடையில் அன்பில்லாமை தோன்றிவிட்டால், அவன் பிறந்த குடியையே நாம் சந்தேகிக்க நேரிடும். 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' அல்லவா? "சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு பேராண்மை வேண்டு பவர்" (குறள்-962) பேராண்மை என்ற சொல் மானுடப் பண்பின் உயர்ந்த குறியீடாக வள்ளுவனால்

எடுத்தாளப்பட்டுள்ளது. 'பிறன்மனை நோக்காப் பேராண்மை' என்பதே கம்பன் இராமாவதாரம் பாடுவதற்கு அடிகோலியது என்பது அனைவரும் அறிந்த பேருண்மை.

"உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத்
தனியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே." (புறநானூறு-182)

அமிழ்தமே ஆயினும் தனித்து உண்ணும் பழக்கமற்றவன், புகழுக்காக உயிரும் கொடுப்பவன், ஞாலமே கிடைக்கினும் ஞானம் தவறாதவன், அவனே சிறந்த மனிதன். இஃது புறநானூறு கூறும் மனிதத்துவம். கம்பன் தன் காப்பியத்தில் இராமனைச் சிறந்த மனிதனாக நிறுவவே விருப்பம் கொண்டான். "ஆத்மனாம் மானுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம்"(மேலது, ப.35) தயரதன் மகனாகிய இராமன் என்னும் மனிதன் நான் என்று வான்மீகி இராமன் பேசுகின்றான். ஆனால் கம்பன் திருமால் என்னும் தெய்வம் இராமனாக ஈங்கு வந்தது என்பதைப் பல இடங்களிலே காட்டிச் செல்கிறான்.

"அலைகடல் நடுவண் ஓர் அனந்தன் மீமிசைமலைஎன விழிதுயில் வளரும் மாமுகில் கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பான்" (கம்ராமாபா.எண். 185) என்று திருவவதாரப் படலத்திலே சுட்டிய கம்பன், மிதிலை காண் படலத்திலே,

'கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்
பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?" (517)

என்று மீண்டும் நினைவூட்டுகின்றான். 'எல்லாம் வல்ல திருமால் என்னும் தெய்வம் இராமன் என்னும் மனிதனாக வந்தான். இதுகாறும் அசுரர்களால் அல்லல்பட்டு வந்த மனிதர்களைக் காத்தான். எனவே, தெய்வத் திருமால் தன்மையைவிட இராமன் என்னும் மனிதனின் மனிதத் தன்மையே மானுடம் உய்ய வகை செய்தது' என்பார் புலவர் கீரன்.

மானுடம் வளர்க்கும் கம்பன்

கம்பன் மானுடத்தின் மீது மனிதப் பண்பின்மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தான். எனவே, வான்மீகி இராமனை, சிறந்த மனிதப்பண்புகள் மூலம் மெருகேற்றம் செய்து நமக்கு கம்ப இராமனாகக் கொடுத்தான். 'விளையும் பயிர் முளையிலே' என்ற முதுமொழியின் முழுமையான பொருளுணர்ந்தவன் கம்பன். ஆதலால், இளமை முதலே மெல்ல இராமனின் பண்புகளை எடுத்தோதி யுத்த காண்டத்தில் முழுமையான நற்பண்புகள் நிறைந்த மானுடனாகப் படைத்துக் காட்டி வெற்றி பெறுகிறான். பால காண்டத்தில் குருகுலக்கல்வி பயின்று திரும்பி வரும் வேளையில் அயோத்திநகர் மக்களைக் கண்ணுற்ற இராமன் அவர்கள் நலம் உசாவுகின்றான்.

"எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
எதுவினை? இடரிலை? இனிதுநும் மனையும்
மதிதரு குமரர்கள் வலியர்கொல்?" (311)

இது கவிவாக்காகவே வெளிப்படுகின்றது. வான்மீகி இராமனின்றும் கம்பன், இராமாவதார இராமனை வேறுபடுத்திக் காட்ட கவிக்கூற்றாகவே இந்தப் பாடலை வடித்தான். மாணவப் பருவத்திலேயே இந்தநற்பண்பு இராமனிடம் குடிகொண்டுவிட்டதை இதன்மூலம் நமக்கு அறிவிக்கின்றான்.

பாலகாண்டத்தில் மொட்டுவிட்ட இந்த மானுடப்பண்பு காய்த்து கனிந்து நின்ற இடம் இராவணனுடன் புரிந்த முதற்போர். இராவணன், இராமன் போர்புரியவந்த செய்தி அறிந்து அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்துகிறான். வீடணன் இராமன் பெருமைகளை எடுத்துக்கூறியபோது 'கேவலம் மானுடன்' என்று இகழ்கிறான் இராவணன்.

"ஊன வில்லிறுத்து ஓட்டை மா மரத்துள் அம்புஓட்டி
கூனி சூழ்ச்சியால் அரசிழந்து உயர் வனம் குறுகி
யான் இழைத்திட இல்இழந்து இன் உயிர் சுமக்கும்
மானுடன் வலி நீயலாது யார் உளர் மதித்தார்" (6179)

ஆனால், இராமனிடம் தோற்றவனை 'பேசுவது மானம், இடைபேணுவது காமம், கூசுவது மானுடரை' என்று கும்பன் பேசுவான். எந்த இராமனைக்

கேவலமாக மானுடன் என்றானோ அந்த இராமனிடம் தோற்றபின் மாலியவானிடம், 'நாயெனத் தகுதும் அன்றோ: காமனும் நாமும் எல்லாம்' என்கிறான் இராவணன். ஏன் இந்த மனமாற்றம்? வான்மீகி இராமாயணத்தில் மனிதன் யார் என்ற வினாவினை எழுப்பி அதற்கு விடையும் கூறுகிறார் வான்மீகி "ஆத்மவான் கோ? யுதக்ரோத" 'சினத்தை வென்றவனே சிறந்த மனிதன்' இந்த வான்மீகியின் வாக்கிற்கிணங்க இராமனிடம் கனிந்துநின்ற மனிதப் பண்பினைக் கண்டதால்லவோ இது நிகழ்ந்தது.

"எறித்த போர் அரக்கர் ஆவி எண் இலா வெள்ளம் எஞ்சப்
பறித்தபோது, என்னை அந்தப் பரிபவம் முதுகில் பற்றப்
பொறித்தபோது, அன்னான் அந்தக் கூனி கூன்போக உண்டை
தெறித்தபோது ஒத்தது அன்றி, சினம் உண்மை தெரிந்தது இல்லை. (கம்.ராமா.பாட.எண்.7288)

பண்பட்ட மானுடத்தைப் படைத்துக்காட்டி தெய்வம் தெய்வ வடிவம் நீங்கி மனிதனாக வந்தது. ஆனால், மனிதப்பண்புகள் முழுமையாக அமையப்பெற்று மீட்டு தெய்வநிலையை அடைந்தது என்பதை விரிவாகக் காட்டுகிறார் கம்பர்.

கம்பன் என்றொரு மானுடன்

காப்பிய நாயகன் மட்டுமல்லாது துணைநின்ற பாத்திரங்களான பரதன், குகன், இலக்குவன், சத்ருக்னன் போன்ற பலரையும் சிறந்த மானுடப் பண்புகளின் உறைவிடமாக வைத்து 'இராமாவதாரப்பேர் மானுடப் பெருங்கதையை' நமக்கெல்லாம் வழங்கிய கம்பன், பாரதியின் பார்வையில் மட்டுமல்லாமல் நம் உள்ளங்களிலேயும் "மானிடனாய்" வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பது உண்மை.

"உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு" (குறள்.993)

என்ற வள்ளுவத்தின் வாய்மொழிக்கேற்ப மனிதன் என்பவன் தோற்றத்தால் மட்டுமல்லாது செய்கைகளாலும், உயர் மானுடப் பண்பு நலன்களாலும் மனிதன் என்ற நிலையை அடைய முயலவேண்டும்.

"தக்க இன்ன, தகாதன இன்ன வென்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே மனுவின்நெறி
புக்கவேல், அவ்விலங்கும் புத்தேளிரே" (கம்.ராமா.பாட.எண்.4054)

என்று கம்பன் காட்டிய வழியில்,

"மானிடம் என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைந்திட்ட உன்னிரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்"

என்ற பாரதிதாசன் பாடலை எண்ணி மானுடம் போற்றுவம். பாரதியைப் போற்றுவம்: கம்பனைப் போற்றுவம்: தமிழன்னை திருத்தாளினைப் பணிவோம். இந்த அளவில் இளைப்பாறுவோம்.

கம்பன் என்றொரு மானிடன்

திருமிகு. சா.சையத் முகமது
கிருஷ்ணகிரி.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" -

என்பது திருவள்ளுவர் வாக்கு. சோழ மண்டல திருவெண்ணெய்நல்லூர் கம்பர் என்ற மானிடனின் காவியமாம் கம்பராமாயணத்தில் பல்கிவரும் நற்குணங்களை தொகுப்பாக இக்கட்டுரையில் காண்போமாக.

நன்றி பாராட்டுதல்

உலகம் அழியும் வரையிலும் ஒருவருக்கொருவர் உதவுதலும், அதற்காக நன்றி பாராட்டுதலும் மனித வாழ்வில் மிகமிக அவசியமாகும். தனி மனிதனாக எவரும் இயங்கவோ, யாருடைய உதவியின்றியும் வாழவோ முடியாது. திருவள்ளுவரும்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்று கூறியுள்ளார். கம்பரும் தான் இயற்றிய காப்பியத்தில் 10 இடங்களில் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்திருப்பது காணும்போது கம்பரின் இதயம் எவ்வளவு நன்றியுடையது என்பதை புலனாகிறது.

1. பாயிரம் : [பாலகாண்டம்]

"வாழ்வார் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்து பெறத்
தாழ்வாருயரப் புலவோ ரகவிருடனெகலப்
போழ்வார் கதிரினுதித்த தெய்வப்புலமைக் கம்பநாட்டு
ஆழவார் பதத்தைச் சிந்திப்பவர்க்கியாது மாறியதன்றே"

2. [பாலகாண்டம்] வேள்விப்படலம் பாடல் 418

1. விசுவாமித்திரன் இராமனுக்குப் படைக்கலம் தருதல்.

"விண்ணவர் போயபின்றை விரிந்த மழையினாலே
தண்ணெனுங் காண நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன "சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லெயன்ன படைக்கல மருளினானே"

3. அகலிகை படலம் [பாலகாண்டம்] பாடல் 4939.

இந்திரனது பொருட்கள் யாவும் பாற்கடலில் புக்கொளித்தல்

"அரமடந்தையர் கற்பக நவநிதியமிர்தச்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கற்று
ஒருபெரும் பொருளின்றியேயுள்ளன வெல்லாம்
வெருவி"யோடிப் புக்கொழித்தன விரிதிரைக்கடலின்
"ஓடின கண்ணன் வாழ் வெண்ணெய் மேவாரின்"

4. [பாலகாண்டம்] பாடல் 635

மிதிலைக் காட்சி படலம்

"வண்ணமாலைக் கை பரப்பியுலகை வளைந்த விருளெல்லாம்.
உண்ண வெண்ணித் தண்மதியத் துதயத் தெழுந்த நிலாக்கற்றை.
விண்ணுமண்ணுந் திசையனைத்தும் விழுங்கிக்கொண்ட விரிநன்றிர்ப்
பண்ணை "வெண்ணெய் சடையன்றன்" புகழ் போலெங்கும் பரந்துளதால்"

5. [யுத்தகாண்டம்] பாடல் 628

சேது படலம்

"மஞ்சினில் திகழ்தரும் மலையை மாக்குரங்கு
எஞ்சுறக்கடி தெடுத்துதவியவே நளன்
விஞ்சையில் தாங்கினேன் "சடையன் வெண்ணெயில்"
தஞ்சமென் றோர்களைச் தாங்குந் தன்மை போல்"

6. [யுத்தகாண்டம்] பாடல் 2215

நாகபாசப் படலம்- கருடன் சமீபித்ததனால் நாகபாசம் நீங்குதல்

"வாசங்கலந்த மரை நாளன் வகையென்ப தென்னை மழையன்று
ஆசங்கை கொண்ட கொடைமீளியள்ளல்
சடையன்றன் வெண்ணெயணுகும்"

7. [யுத்தகாண்டம்] பாடல் 2713

மருத்துவபடலம்- உத்தரகுருவைக் கண்டபின் அப்பாற் போதல்.

"வன்னி நாட்டிய "பொன்"மௌலி வானவன் மலரின்மேலான்
கன்னி நாள் திருவைச் சேர்ந்த கண்ணனு மாளுங்காணிச்

சென்னி நாட்டெரியல் வீரன் தியாகமா
பொன்னி நாட்டுவமை வைப்பைப் புலன்கொளநொக்கிப் போனார்"

8. [யுத்தகாண்டம்] பாடல் 4316

திருமுடிசூட்டு படலம். ஸ்ரீராமபிரானுக்கு வசிட்டமுனிவன் திருவடி சூட்டுதல்.

"அரியணை யனுமன் தாங்க வங்கத னுடையவாள் பற்றப்
பரதன் வெண்குடைவிக்க விருவரும் கவரி வீச
விரைசெறி கமலத்தாள் சேர் "வெண்ணெய் மன் சடையன்" தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டேனே புனைந்தான் மௌலி"

9. [யுத்தகாண்டம்] பாடல் 4320

திருமுடிசூட்டு படலம் - பரதனுக்கு இளவரசு முடிசூட்டிய ஸ்ரீராமன் இனிதிருத்தல்.

"மறையவர் வாழி வேதமனுநெறிவாழி நன்னூல்
முறை செயு மரசர் சிங்கண் மும்மழை வாழிமெய்ம்மை
இறையவனி ராமன் வாழியிக் கதை கேடபோர் வாழி
அறை புகழ்ச் சடையன் வாழி யரும் புகழுனுமன் வாழி"

10. [யுத்தகாண்டம்] பாடல் 4312

திருமுடிசூட்டு படலம் -திருவபிஷேகதீர்த்தத்தின் வருணனை

"அங்கண் வானுலகந்தாய வடிமரர்த்தவி சோனாட்டும்

கங்கை வார் "சடையினேற்றான் கண்ணுதலொரு வனிந்நாள்
சிங்க வேறனையான் செய்யதிருமுடியாட்டு நன்றிர்
எங்கள் ஏற்றுஅன்னோன் வாழுமென்றனர் புலவரெல்லாம்"

நன்றி குறித்து வேறு பிற

1. (அயோத்தியா காண்டம்)பாடல் : 911 பள்ளிப் படைப்படலம்

"கன்றுயிரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர் பொருண் மறைத்து வவ்வினோன்
நன்றியை மறந்திடு நயமினாவினோன்
என்றி வருறு நரகென்னதாகவே"

2. யுத்தகாண்டம் – திருமுடி சூட்டுபடலம் பாடல் : 4308

ஆபத்துக் காலத்து உதவியவர்க்கு மகிழ்ச்சி காலத்து உதவுதல்

பெரிது அனுமான் நாற்கடனீர் முதலியன கொணர்தல்

"ஊழியினிறுதி செல்லுந் தாதையினுலவி யன்றே
ஏழ்திரை நீரும் தந்தானிருந்துயர் மருந்து தந்தான்

ஒழுக்க நெறி

பாலகாண்டம் - பாடல் : 7071 -குடிகட்கு உள்ள நிதியம் முதலியன

"கலஞ்சுரக்கு நிதியங்கணக்கிலா
நிலஞ்சுரக்கு நிறைகள் நன்மணி
பிலஞ்சுரக்கும் பெறுதற்கரியதம்
குலஞ்சுரக்கு மொழுக்கங் குடிக் கெலாம் நன்னெறி"

அந்நாட்டிற் கூற்றம் முதலியன இல்லாமை

"கூற்றமில்லையோர் குற்றமிலாமையால்
சீற்றமில்லை தஞ்சிந்தைவியற் செம்மையால்
ஆற்றநல்லற மல்லதிலாமையால்
ஏற்ற மன்றி பாழித்தக வில்லையே"

கற்புநெறி நாட்டுப்படலம் (பாலகாண்டம்)

ஆடவர் மகளிர் என்பவரின் பொலிவு முதலியன- பாடல் : 91

"பொற்பினின்றன பொலிவு பொய்யிலா
நிற்பினின்றன நீதி மாதரார்
அற்பினின்றன வறங்களன்னவர்
கற்பினின்றன கால மாரியே"

கற்பு நெறியை ஆணக்கும் பெண்ணுக்கும் இங்கே பொதுவில் வைப்போம் என்றான் பாரதி. கற்பு நெறியாலேயே மாதம் மும்மழை பெய்த்ததாக காவியங்கள், வரலாற்று நிகழ்வுகள் கூறுகின்றன.

அன்பு வாழ்வு

ஆணும் பெண்ணும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு நெறியில் வாழ்தலும், அன்புடன் இருத்தலும் மனமொத்து வாழ்தலுமே வாழ்க்கையின் அச்சாணியாகவும் உள்ளன. அதனால் எய்ட்ஸ் எனும் உயிர்க்கொல்லி நோயைப் போன்று வேறெதுவும் நம்மை அண்டாது.

(பாலகாண்டம்)பூக்கொய்ப்படலம் பாடல் : 988

ஒருத்தி கணவன் மறைந்திருக்க அலமருதல்

"மயில் போல் வருவான் மனங்கானிய காதன்மன்னன்

செயிர்தீரு மலர்க் காவினொர் மாதவிச் சூழல் சேரப்
பயில் வாழிறை பண்டு பிரிந்தவியாள் பதைத்தாள்
உயிர் நாடியொல்கும் முடல் போல லமந்து ழன்றாள்"

உயிரைத்தேடி உடல் போன்ற பிணைப்பு இருக்க வேண்டும் என்று கணவன் - மனைவி உறவு இருத்தல் அவசியமாகும்.

துன்புறும்போது பொறுத்தல்

(அயோத்தியா காண்டம்) கங்கைப்படலம் பாடல் : 698

"துன்புள தெனினன்றோ சுகமுளததுவன்றிப்

பின்புளதிடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளமொரு நால்வே முடிவுளாதெனவுன்னா
அன்புளவினி நமோ ரைவர்களுளரானோம்"

துன்பம் வரும்போது துவளாமல், எதிர்கொள்ளல் வேண்டியது மனிதனின் வாழ்வியல் நெறிஎன்பதையும், முன்பின் அறியாத ஒருவரையும் உறவாக ஏற்றுக்கொண்டு பகிர்ந்துணர்வு கொள்ளலும் அவசியமாகும்.

கம்பன் என்றொரு மானிடன்

பிறந்தான் - இருந்தான்... இறந்தான் என்பதல்ல வாழ்க்கை. பிறந்தான் - இருந்தான் - சாதித்தான் என்பதே ஒவ்வொரு மனிதனின் சரித்திரமாக இருக்க வேண்டும். கம்பன் என்றொரு மானிடன் எல்லா நிலைகளிலும் தமது பாடலின் மூலமாக நுணுக்கி ஆராயத்தக்க மனிதனின் வாழ்க்கைக்கேற்ற வகைகளையும், அணுகுமுறைகளையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

கம்பன் என்றொரு மெய்ஞானி

கவிஞர் பொன்.வேலுமயில்
செயலாளர், நெல்லை கம்பன் கழகம்,
திருநெல்வேலி.

அறிவுக்குட்பட்ட செயல்களின் காரணங்களை ஆராய்ந்து சொல்பவன் விஞ்ஞானி. அறிவுக்கும் புலன்களுக்கும் எட்டாத செயல்களின் மூலத்தை உணர்ந்து பேசுபவன் மெய்ஞானி. மெய்ஞானியின் இலக்கணத்தைச் சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன. "சரியை, கிரியை, யோகம் முதலிய சாதன வழிபாடுகள் மூலம் இறைவனைப் போற்றி பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையையும் இயல்பையும் இறையருளால் உணர்ந்ததன் பயனாக ஏற்படும் ஞானத்தால், ஞான நூல்களைத் தானே கேட்டும், பிறரைக் கேட்பித்தும், தானே ஓதியும் பிறரை ஓதுவித்தும், இறையருளில் அழுந்தி நின்று முத்தியாகிய வீடுபேறு அடைவதற்கு தகுதியுடைய பக்குவப்பட்ட ஆன்மாக்களே மெய்ஞானியர்". (சிவஞான சித்தியார் 274, 275) கம்பன், இவ்வுண்மையை "நீ விதித்த மன்னுயிர்கள் மெய்யைத்தான் சிறிதுணர்ந்து உய்யத்தான் ஆகாதோ? (கம்பன் 2574) என்றும், "மறுமை கண்ட மெய்ஞானியர்", (கம்பன் 6602) என்றும் பேசுவான். இங்ஙனம் தன்னுடைய காப்பியம் நெடுகிலும் வேதம், உபநிடதம் மற்றும் சைவ சித்தாந்தம் ஆகியவை கூறும் இறை, உயிர், ஆணவம் ஆகிய முப்பொருள்களின் இயல்பை கவிக்கூற்றிலும், விராதன் இந்திரன், சரபங்கன், பிரகலாதன், கருடன், இராவணன் போன்ற பாத்திரங்களின் கூற்றிலும் வைத்து, தானே ஓதுவதன் மூலமும், நம்மை ஓதுவிப்பதன் மூலமும் கம்பன் தன்னை ஒரு மெய்ஞானியாக நிரூபிக்கிறான்.

பொதுவாக, சமயம் சார்ந்த அருளாளர்களும், மெய்ஞானிகளும் இறைப்பொதுமை பற்றிப் பேசினாலும் தங்கள் தங்கள் வழிபடு கடவுளரையே உயர்த்திப் பேசுவர். இவர்களை, "ஊழ்கொண்ட சமயத்தன்னான் உருவு கண்டார்" (கம் 1081) என்று பேசும் கம்பனோ சமயச் சண்டைகளின் தாண்டவ காலத்தில் திருமால் காப்பியத்தில் சிவனையும் போற்றி, திருநீறு அணிவோர்க்கும் திருநாமம் இடுவோர்க்கும் இருந்த இடைவெளியை இல்லாமல் செய்ததோடு, "அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்குப் பரகதி அடைவு, அரிய பரிசு", (கம்.4470) என்று சமயப் பூசலாளர்களை

வன்மையாகக் கடிந்து மெய்ஞானியர்க்கெல்லாம் மெய்ஞானியாகத் திகழ்கிறான்.

மேலும், இந்திரசித்தன் மிகுந்த மகிழ்ச்சியில் தங்கள் ஆடைகளை அவிழ்த்து விண்ணில் கூறிடுமாறு வீசி ஆரவாரித்த தேவர்கள், "கொல்லாத விரதம் பூண்ட அருக சமயத்தார்தம் கடவுளர் கூட்டம் ஒத்தார்", (கம்பன் 9171) என்று கூறி தன்னுடைய காலத்தில் ஆதிக்கம் இழந்திருந்த சமண சமயத்தையும் பெருமைப்படுத்துவான் கம்பன். இதனால்தான் இன்றைக்கும் திருக்குரான் ஓதுவோரும் திருச்சிலுவை அணிவோரும் கம்பனைத் தங்கள் சிந்தையிலும், சென்னியிலும், செவியிலும், செம்மை வாக்கிலும் வைத்துப் போற்றுவதைக் காண்கிறோம்.

உயிர் இயல்பு

கம்பன் தான்பெற்ற மெய்ஞானத்தை இனிப்புள் பொதிந்த மருந்தென தரும்பாங்கே தனிதான். அதிலும் உயிர்களின் இயல்பைக் கூறத் தேர்ந்த இடம் வியப்பிற்குரியது. விசுவாமித்திரனோடு மிதிலை நகருக்குள் வரும் இராம இலக்குவர்கள். ஓரிடத்தில் மங்கையர் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருப்பதைக் காண்கிறார்கள். அவ்விடத்தில் எங்கோ பார்ப்பதுபோல் நின்று கொண்டிருக்கும் இளைஞர்களின் சிந்தையும், அம்மங்கையரோடு சேர்ந்து ஊசலாடிக் கொண்டிருக்கிறதாம். இத்துடன் நின்றிருந்தால் பாடல் சிற்றின்பப் பாடலாகவே அமைந்திருக்கும். ஆனால் கம்பன் ஓரற்புதம் செய்தான். "உயிர்கள் உலகில் பிறந்து மூவினைப் பயன்களை மேலும் மேலும் ஈட்டி, இறந்து, மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பதைப் போன்று அவ்வூஞ் சல் மேலும் கீழுமாக ஆடிக்கொண்டிருந்தது என்ற உவமையைப் போட்டு, இப்பாடலைப் பேரின்பப் பாடலாக மாற்றுகிறான் கம்பன்.

"பூசலின் எழுந்த வண்டு மருங்கினுக்கு இரங்கிப் பொங்க
மாசுறு பிறவிபோல வருவது போவதாகி
காசறு பவளச் செங்காய் மரகதக் கமுகு பூண்ட
ஊசலில் மங்கையர் மைந்தர் சிந்தையோடு உலவக் கண்டார்

(488)

இறையியல்பு

இறையியல்பைக் கூறும்போது நமது அருளாளர்களும் மெய்ஞானிகளும் இறைவன் திருவருளை வியந்தும் நகைச்சுவை ததும்பப் பழிப்பதுபோல் புகழ்ந்தும் போற்றுவர்.

"தந்ததுன் தன்னைக் கொண்ட தென் தன்னைச் சங்கரா ஆர் கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன்று என்பால்"
(திருவாசகம் 397)

என்பார் மணிவாசகர்

"அலகிலா விளையாட்டுடையார் முன்பின் நடு இல்லாதவன் பொன்னிற் பிரிதாகிலா பொற்கலன் என்ன தன்னில் தோன்றிய உலகங்களில் இருந்து வேறுபடாதவன் அணுவைச் சதக்கூறிட்ட கோணினும் உளன்", (கம் 1, 8666, 6300, 6312) என இறைவனைப் பலபடப் போற்றும் கம்பன் மேற்கண்ட மெய்ஞானிகளின் வழியில், இறைவனை நோக்கி, "பரம்பொருளே! இந்த பிரபஞ்சங்களும், பலவகைச் சமயங்களும் நீயாகவே இருக்கும்போது நீயேன் குற்றவாளியைப்போல் தலைமறைவாக இருக்கிறாய்? யாரும் காணும்படி வெளிவந்தால், நீ விளையாடிய மாய விளையாட்டுக்களுக்காக சிறைவாசம் அனுபவிக்க வேண்டும் என்ற அச்சப்படுகிறாயோ?," என்னும் பொருள்பட நகைச்சுவையும், நாத்திக வாதமும் கலந்து விராதன் வாய்ச்சொல்லாகத் தரும் கீழ்க்கண்ட அங்கதப் பாடல் சுவைத்து இன்புறத்தக்கது.

"நீயாதி பரம்பரமும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும் நின்அடியவே அயலில்லை
தீயாரின் ஒழித்தியால் வெளிநின்றால் தீங்குண்டோ?
வீயாத பெருமாய விளையாட்டும் வேண்டுமோ? (கம். 2569)

ஆணவ மல இயல்பு

நிலையில்லாப் பொருளை நிலையானதென்றும், துன்பந்தரும் பொருளை இன்பது தருவதென்றும், தகுதி இல்லாத தன்னைத் தகுதி உடையவன் என்றும் கருதுகின்ற விபரித உணர்வைத் தோற்றுவித்து பிறவிப் பயனாகிய இறைவன் திருவடிப் போற்றினை அடைய விடாமல் ஆன்மாவைத் தடுத்து நிற்பது ஆணவமலத்தின் இயல்பென்று சைவ சிந்தாந்தம் பேசும். வள்ளுவர் இதனைப் பேதமை, புல்லறிவாண்மை என்பார். இவ்வுண்மையை இராவணனது சொல்லிலும் செயலிலும் வைத்துப் பேசுவான் கம்பன். இறுதிநாள் போரில் இராவணன் விடுத்த அளப்பரும் ஆற்றல் மிக்க சூலப்படை இராமனுடைய ஓர் உங்காரத்தில் பொடிப்பொடியாகக் கண்ட இராவணன் சிந்தனையில் அமைந்த பாடல்களில் ஆணவமலத்தின் அளப்பரும் ஆற்றலைக் காட்டுகிறான் கம்பன்.

"சிவனோ அல்லன் நான்முகன் அல்லன் திருமாலோ
அவனோ அல்லன் மெய்வரம் எல்லாம் அடுகின்றான்

தவனோ எனின் செய்து முடிக்கும் தரனல்லன்
இவனோதான் அவ்வேதமுதற் காரணன் என்றான்" - (கம்.9837)

"யாரேனும் ஆகுக! யானென் தனியாண்மை
பேரேன் நின்றே வென்றி முடிப்பென் புகழ் பெற்றேன்
நேரே செல்லும் கொல்லும் எனில்தான் நிமிர்வென்றி
வேரே நிற்கும், மீள்கிலேன் என்னா விடலுற்றான்" (கம். 9838)

இராமனைப் பரம்பொருளாகக் கண்டு ஒருகணம் விலகிய ஆணவ மலம் அடுத்த விநாடியே வீறு பெற்று எழுந்ததைக் காட்டிய கம்பன், தன்காப்பியத்தில் ஆணவத்தின் முழு அடையாளமாகத் திகழ்பவன் இராவணன் ஒருவனே என்று காட்டுவது போல 'ஆணவம்' என்ற சொல்லைக் காப்பியம் முழுமையாக்கும் ஒரே இடத்தில் அதுவும் இராவணனைக் குறிப்பிட்டே கையாள்கிறான்.

"சேண அந்தரம் நோக்கலும் திண்சரம்
பூண முந்தின சிந்தின பூமழை
காணவந்த கடவுளர் கையெலாம்
ஆணவம் துணை யாவருளர் ஆவரோ?" - (கம்.9741)

இருவினை ஒப்பு

'உயிர் தான்செய்த நல்வினைப் பயனில் விருப்பும் தீவினைப் பயனில் வெறுப்பும் கொள்ளாமல் இருபயன்களையும் சமமாகக் கருதும் நிலையை எய்துவது இருவினை ஒப்பு எனப்படும். இந்நிலை மலபரிபாகம் ஏற்பட்ட பின்னர் நிகழும். மலபரிபாகமும், இருவினை ஒப்பும் எய்தப்பெற்ற உயிரின் மீது இறைவன் அருளாற்றல் பதிதல் என்னும் சத்திநிபாதம் நிகழும்', என்பது சித்தாந்த உண்மை. ஆனால் பரம்பொருளாகிய இறைவனே இராமனாக அவதரித்து இருப்பதால் மலபரிபாகம், சத்திநிபாதம் நிகழ அவசியம் இல்லா நிலையில் இருவினை ஒப்பு மட்டும் இராமன் உள்ளத்தில் நிகழ்ந்தாகக் காட்டுவான் கம்பன். அரசாட்சி பெறுக என்று தசரதன் சொன்ன போதும், அரசைத் துறந்து வனவாசம் செல்க என்று சிற்றன்னை கைகேயி பணித்த போதும் விருப்பு வெறுப்பற்ற தன்மையில் பொலிந்து நிற்கும் இராமன் திருமுகச் செவ்வியை வியந்து போற்றும் கம்பனின் பாடல் இதோ.

"இப்பொழுது எம்மனோரால் இயம்புதற்கு எளிதே? யாரும்
செப்பருங் குணத்து இராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்புபின்பு அவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா! (கம்.1602)

முக்காலம் உணர்ந்த ஞானி

"வெள்ளத்திடை, வாழ்வடவனல் அஞ்சி வேலை கடவாத பள்ளக்கடல்", (கம்பன்1925) என்று இன்றைய புவி வெப்பமயத்தால் துருவப்பனி உருகி கடல் மட்டம் உயர்ந்து கரைகடக்கும் அபாயத்தையும், "யாரொடும் பகை கொள்ளலன் என்றபின் போரொடுங்கும் புகழொடுங்காது", என்று போரினால் ஏற்படவிருக்கும் உலக அழிவைத் தடுப்பதற்கான உபாயத்தையும் அன்றே கூறி முக்காலம் உணர்ந்த முழு ஞானியாகவும் திகழ்கிறான் கம்பன்.

இவ்வாறு, நிறைகடல் சூழ்புவி நிலைக்கின்ற காலம்வரை மறையாக் காப்பியமாம் மன்னுதமிழ் இராமாயணத்தை மாநிலத்தில் நிறுத்தி இலக்கிய ஞானியாகத் திகழும் கம்பன், பாரத நன்னாட்டிற்கே உரித்தான மெய்ஞான உண்மைகளைப் போதிக்கும் மெய்ஞானியாகவும் திகழ்கிறான்.

கம்பன் - கருத்துப் புரட்சிக் கவிஞன்

திருமிகு. ர.விவேகானந்தன்
வடக்குத்தெரு, வைப்பூர்

பாத்திரத்தின் ஈகம்

காப்பிய நீட்டத்துக்குப் புலவர் எப்பாத்திரத்தையும் துணிந்து வளைக்கின்றார். பாத்திரத்தின் ஈகம் என்று இதனைக் குறிப்பிடலாம். தன் நேரில்லா இராமன் - தந்தையின் வாய்மையைத் தான் காக்கப் புறப்பட்ட இராமன் - பொய்ம்மை வேண்டிய ஒருகளம். அங்ஙனம் வேண்டினான் என்ற சொல்ல வேண்டிய ஒரு களம் ஏற்பட்டுவிட்டது. சொல்லியபடியே மக்கள் இராமனுடன் காட்டுக்கு ஏகினர். ஏகாது அயோத்தியில் இருந்தவர் தொகை விரல்களினும் சிறிது. உடன் வந்த குடிமக்களையும் கூட அழைத்துக் கொண்டு வனம் வாழ்வதா? மக்களின் பேரன்பைக் கண்டு மதித்து இராமன் அயோத்தி திரும்புவதா? முன்னது தவத்திற்கு இழுக்காகும். பின்னது வாய்மைக்கு இழுக்காகும். நேர்முகமாக இச்சிக்கலைத் தீர்க்க முடியாது.

"பூண்டபே ரன்பி னாரைப்
போக்குவ தரிது போக்காது
ஈண்டுநின் றேகல் பொல்லாது
எந்தைநீ இரதம் இன்னே
தூண்டினை மீள நோக்கிச்
சுவட்டையோர்ந் தென்னை யங்கே
மீண்டனன் என்ன மீள்வர்
இதுநின்னை வேண்டிற் றென்றாள்"

அமைச்சன் சுமந்திரனை ஒரு சூழ்ச்சி செய்ய இராமன் வேண்டும் பாடல் இது. 'என்னை ஏற்றிவந்த தேரை இந் நள்ளிரவில் அயோத்திப் பக்கம் திருப்புக. காலையில் விழித்தெழுந்த இம்மாந்தர்கள் அத் தடத்தைக் காண்பார்கள். இரவே நான் மீண்டும் அயோத்தி சென்றுவிட்டதாக எண்ணித் தாமும் திரும்பி விடுவர். இந்த ஏமாற்றத்தைச் செய்க' என்று வேண்டுகின்றான் காப்பியப்பெருந்தலைவன் இராமன். இச் சூழ்ச்சி பலித்தது என்று அறிகின்றோம். இராமன் நகர் மீண்டான் என்று தேர்ச்சுவடு பார்த்து மயங்கி குடிமக்கள் இடியும் கடலும் ஒலித்தாற் போல் ஆரவாஞ்செய்து அயோத்தி போந்தனர் எனவும், உண்மையவிந்து உயிர் ஒழிந்தவர்போல விம்மினர் எனவும் வசிட்டன்

ஆறுதல் கூறினான் எனவும் அறிகின்றோம். இப்பொய் வாய்மை-யிடத்து எனவும், புரை தீர்ந்த நன்மை பயப்பது எனவும் ஒரு சிலர் வாதாடலாம் எனினும், தன் நெஞ்சு அறிந்த பொய் என்பது வெளிப்படை. இப்புரை தீர்ந்த நன்மைதான் என்ன? கதை நீட்டிப்பு. காப்பிய ஓட்டத்துக்கு இராமனும் பொய்யனாக்கப்படுகின்றான். அவன் அங்ஙனம் ஆயினாலல்லது. இந்த அன்புக் களத்தைப் புலவர் வென்று மேற்செல்லல் இயலாது.

கம்பனின் அரசியல் கோட்பாடு

கம்பன் இராமனை மக்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்ட ஓர் அரசின் தலைவனாய் உருவாக்கிக் காட்டுவதிலிருந்து அவன் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டை ஆதரிப்பவனாய்த் தெரிகிறது. தொடக்க காலத்தில் அரசு எவ்வாறு எவ்வாறு தோன்றியது என்பதைத்தான் இக்கோட்பாடு விளக்குகிறது. கம்பனோ ஒரு நல்லரசு இப்படித் தோன்றினால் நன்றாக இருக்கும் என்று கூறுகிறான்.

தொடக்கத்தில் தோன்றிய அரசன் மக்கள் கூட்டத்தால் சமூக ஒப்பந்தப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்பதால் 'மகா சம்மத' என்று அழைக்கப்பட்டான் என்பதைத் தீகநிகாயா (மே.கு) குறிப்பிடுகிறது. இராமனை ஒரு மகாசம்மதனாகவே கம்பன் உருவாக்கிக் காட்டுகிறான். மக்களின் பொதுவிருப்பமே அரசை உண்டாக்குகிறது என்ற ரூஸ்ஸோவின் கோட்பாட்டையும் நாம் கம்பனிடம் காண முடிகிறது.

இராமன் சூரிய குலத்துத் தோன்றல் என்பதாலோ, தயரதனின் தனயன் என்பதாலோ, இந்த மகாசம்மதத்தையும், பொது விருப்பத்தையும் பெற்றுவிடவில்லை. அவனுடைய பண்பினாலும் பணியினாலும் இவற்றைப் பெறுகிறான். கம்பன் இராமனை 'நடையின் நின்றுயர் நாயகன்' (11) என்ற அழகிய தொடரால் வருணிக்கிறான். தனி மனிதனாக மட்டுமல்ல, ஓர் அரசியல் தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தன் வாழ்க்கையில் 'நடந்து காட்டி' அதனால் நாயகனாய் உயர்ந்தவன் இரான்ம என்ற பொருளையும் இத்தொடர் தருகிறது. இராமன் இவ்வாறு 'நடையின் நின்றுயர் நாயக'னாக உருவான வரலாற்றைக் கம்பன் தன் காப்பியத்தில் விவரிக்கிறான்.

இராமன் கல்வி கற்கும் பருவத்து இளவரசனாயிருந்தபோதே மக்களை நேசிக்கிறவனாய், அவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய நலம் விசாரிக்கிறவனாய் இருந்திருக்கிறான்.

அவன் வீதியில் செல்லும்போது எதிரில் வரும் மக்களை 'முதிர் தரு கருணையின் முகமலர் ஒளிர, எதுவினை? இடர் இலை இனிதின் நும் மனையும்? மதி தரும் குமரரும் வலியர் கொல்? (311) என்று கேட்பது அவன் வழக்கம். இந்த அன்பே மக்களின் பொது விருப்பத்திற்குரியவனாக அவனை ஆக்குகிறது.

மூவாசை துறந்தவரும் பதவி ஆசை துறப்பது அரிது. இராமன் இளமைப் பருவத்திலேயே பதவி ஆசை அற்றவனாய் இருக்கின்றான். தயரதன் அவனுக்கு முடி சூட்டப் போவதாக அறிவித்தபோது அதை அவன் முழுமனத்தோடு ஏற்றுக் கொள்ளவில்லை. தந்தையின் சொல்லைத் தட்டக்கூடாது என்றே அதனை ஏற்கிறான். இதை அவனே,

"மன்னவன் இருக்கவேயும் 'மணிஅணி மகுடம் சூடுக'
என்ன, யான் இயைந்தது அன்னான் ஏயது மறுக்க அஞ்சி" (2491)

என்று பின்னால் பரதனிடம் கூறகிறான். 'பரதனே முடி சூடுவான் நீ காடு செல்ல வேண்டும் இது அரசன் ஆணை' என்று கைகேயி கூறியபோத பதவி பறிபோயிற்றே என்ற அவன் பதைக்கவில்லை. மாறாக, பெருந் துன்பத்திலிருந்து விடுவிக்கப்பட்டவன் போல் மகிழ்கிறான்.

அடைக்கலம் அருளும் இராமன்

இராமனிடம் குடி கொண்டிருந்த அரும் பெரும் பண்புகளுள் ஒன்றுதான் 'அபயம்' என்று தன்னை நாடி வந்தவர்களுக்கு உடனே 'அடைக்கலம்' கொடுப்பது. இவனுடைய இந்த இயல்பை விளக்குவதற்குக் குறிப்பாக மூன்று நிகழ்ச்சிகள் காப்பியத்தில் உண்டு.

அவை,

1. வனவாசத்தின் தொடக்கக் காலத்தில் 'அபயம்' வேண்டித் தன்னை அண்டிய அந்தணர்களைக் காக்கிறான்.

2. அபயம் வேண்டிய சுக்ரீவனுக்கு அடைக்கலம் அருள நட்பு பாராட்டுகிறான்.

3. அபயம் வேண்டித் தன்னை அடைந்த இராவணனின் தம்பி வீடணனுக்கு அடைக்கலம் அருளி அவனை நண்பனாக ஏற்கிறான்.

முதலில் அந்தணருக்கு 'அபயம்' அருளி இராமன் அவர்களைக் காத்த தன்மையைக் காண்போம்.

தந்தையின் வாக்கைத் தலைமேற்கொண்டு தண்டகாரண்யத்தில் தங்க வரும் இராமனைக் கண்ட கானம் வாழ் அந்தணர்கள், புனல் வரக் கண்ட உலர் மரம் போன்றும், தாய்ப்பசு கண்ட இளங்கன்று போன்றும் மரக்கலம் கண்ணுற்ற ஆழ்கடலினார் போன்றும் தம்மை உணர்ந்து, செய்தவம் பலித்துப் பிறவிப் பிணியறுத்த சிந்தையராக மறுக்கம் நீங்கி மகிழ்கின்றனர். காரணம் என்ன? அரக்கர்களின் கொடுமையிலிருந்து தம்மைக் காக்க ஓர் அரசன் வந்துற்றான் என்றெண்ணியே மறுக்கம் தீர்கின்றார். எழுகின்ற காதலோடு எம்பிரானை நோக்கி, அரக்கரால் தமக்குற்ற குறை கூறி முறையிடுகின்றனர்.

"இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர்,
அரக்கர் என்று உளர் சிலர், அறத்தின் நீங்கினார்,
நெருக்கவும் யாம் படர் நெறிஅலா நெறி
துரக்கவும், அருள் தவத் துறையுள் நீங்கினோம்"

(ஆரணிய - அகத்திய - 12)

மேலும் கூறுகின்றனர் "புலிக்கு அஞ்சி வாழும் புள்ளி மான்கள் போல அஞ்சி மறைந்து திரிந்து வாழ்கிறோம் அறநெறித் துறைகளை ஒழுகவும் இயலாமல் மறுகுகின்றோம் யாம் தேர்ந்தெடுத்த வாழ்க்கைநெறியில் செய்ய வேண்டிய மாதவம் ஆற்ற இயலோம் வேதங்களை ஓதவும் இயலோம் ஓதுவிக்கவும் இயலோம் எரியும் வளர்க்கிலோம். ஆக, அந்தணர் முறைகள் ஒன்றையும் பின்பற்றாததால் வீடு பேறு பெறும் தகுதியையும் இழந்தோம். அந்தணர் என்று எம்மை இனி கூறிக் கொள்ளவும் இயலோம். யாம் யாரென்று அறியாது மயங்குகிறோம்" என்று கலங்கிக் கூறுகின்றனர்.

மேகமும் மழையும்

பொதுவாக ஆறுகளின் தோற்றத்திற்குக் காரணமாவன மேகமும், அது பொழியும் மழையும். மேகம் கடல்நீரை முகந்து கொண்டு இமயமலையில் படிந்து மழையைப் பொழிய அதிலிருந்து தோன்றுகிறது சரயு ஆறு. ஆகவே, கம்பர், முதற்கண் சரயு ஆற்றின் தோற்றத்தைக் கூறக் கருதி, அதற்குக் காரணமாக மேகத்தையும், அது இமயமலையிற் படிந்து பொழியும் மழையையும் சிறப்பிக்கின்றார்.

'நீறு அணிந்த கடவுள் நிறத்த வான்
ஆறு அணிந்து சென்று, ஆர் கலி மேய்ந்து, அகில்

சேறு அணிந்த முலைத் திரு மங்கைதன்
வீறு அணிந்தவன் மேனியின் மீண்டதே"

இதில் கம்பர், வெண்ணிற மேகம் கடல்நீரை முகந்து கருநிறக் கொண்டலாக மீண்டு வரும் காட்சியை நமக்குக் காட்டுகின்றார்.

முடிவுரை

கம்பரைப் போல் தமிழ் ஒலி மரபு, மொழி மரபைக் காத்தவரும், சொல்லாக்க நெறிகண்டவரும் எவருமிலர். "காப்பயிம் ஒரு கல்லில் செய்யும் குடவரைக் கோயிலன்று ஒரு கோபுரமுடைய கோ-யிலுமன்று. கல்பல அடுக்கிய உள்ளும் புறமும் கோபுரங்கள் கொண்ட வானளாவிய கட்டுமானக் கோயிலாகும்" என்பார். கம்பன் காப்பிய முழுமையைத் தம் அறிவுக் கண்ணாடியில் கண்டுகளித்த, இக்கவித்திறனாளி, காப்பியத்தில் வரும் நாடகப் பண்பு மீக்கூர்ந்த படலங்களையும் நம்முன் வரிசைப்படுத்துகிறார்.

எந்தை பிரான் கம்பன்

கவிஞர் கே.ஏ.ஜெஹபர் உசேன்
கூத்தாநல்லூர்.

முன்னுரை

தமிழ் இலக்கியச் சோலையில் அறம் அரும்பும்: பொருள் மலரும்: இன்பம் மணக்கும். நீதி, தத்துவம், சமயம், மருத்துவம், சோதிடம், கட்டிடம், சிற்பம் போன்ற எண்ணற்ற இலக்கியம் செடி கொடி மரங்களாகத் திகழும். இலக்கியச் சோலையின் வேலியான இலக்கணம்கூட முள்ளுக் கம்பியாயில்லாமல் கவிதையாக - கம்பன் கூறுமாப்போலே - மாதவி மலர்க்கொடி வேலியாகவே திகழும். அச்சோலையிலுள்ளே நுழைந்து விட்டால் பலப் பல கதைகள், வரலாற்று இலக்கியங்கள், சிறு காப்பியங்கள், பெருங்காப்பியங்கள் என்றெல்லாம் எத்தனை எத்தனையோ தாவரங்கள்.

குளிர் நிழல் தருவன: நறுமணம் பரப்புவன: அணிநிறம் நிரப்புவன: செவிநுகர் கனிகள் சொரிவன என்று இப்படி இருக்கும் அந்தச் சாவா மூவா இலக்கியச் சோலை. ஆம். காலமும் அழிக்க மாட்டாக் கனகச் கற்பகச் சோலை அது! இத்தகைய பெருமை மிக்க இலக்கியச் சோலையின் மத்தியில் முள்ளைப் பெருமரங்கட்கும். பிள்ளை வளர் செடிகட்கும் நடுவே அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து போகக் கனிகளை உதிர்த்துக் கொண்டேயிருக்கும் பரந்து வளர்ந்து சிறந்து நிற்கும் ஒரு மரந்தான் இராமாவதாரம். அப்பயன் மரத்தே இலக்கியச் சோலையின் நாப்பண் நட்டுப் பயிராக்கி வளர்த்து நம்மிடம் விட்டுச் சென்றிருக்கும் பாட்டாளி ஒரு பெருங்கருணைத் தடங்கடல். அவனைத்தான் ஆயிரம் ஆண்டுகளாகக் "கவிச்சக்கரவர்த்தி" என்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் பாராட்டி வருகிறது.

கி.பி. 9-ம் நூற்றாண்டில் அதாவது 871 முதல் 907 வரை சோழ மண்டலத்தை ஆண்ட கோதண்டராமனான ஆதித்தன் கம்பனிடம் பெருமதிப்பும், அருநட்பும் கொண்டவன். வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல் கம்பனைக் கண்மணியாய்க் கருதிப் பேணிக் காத்தவர். இவைஎல்லாம் நூலுட் காணப்பெறும் குறிப்புகளால் புலப்படுகின்றன.

கம்பன் தனது இராமாவதாரத்தை கி.பி.886, பிப்ரவரி 23-ஆந் தேதிக்குச் சரியான விசுவாவசு - பங்குனி 4-ஆந் தேதி புதன்கிழமை அஸ்த நட்சத்திரத்தில் வெண்ணெய் நல்லூரில் அரங்கேற்றினான்.

இளங்கோ சேர - சோழ - பாண்டிய மண்டலங்கள் மூன்றையும் தமிழ் நாடென்னும் ஒரு நாடாக்கும் கதையை ஏற்று, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தை அருளினார்.

கம்பன் அகில இந்தியாவையும் ஈழம் உள்பட ஒரு நாடாக - பாரத - தேசமாக - ஆக்கும் கதையை ஏற்று, அற்புதக் காப்பியத்தை வடித்தருளினான்.

"வையம் என்னை இகழவும், மாசு எனக்குஎய்தவும்,
இது இயம்புவது யாது? எனின்,
பொய் இல் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே!"

"சாதாரண மக்கள் என்னைப் பழிக்கவும், என்புலமைக்கு இழுக்கு ஏற்படவும் இக்காப்பியத்தை நான் ஆக்கக் காரணம் என்ன என்றால், சிறந்த கேள்வி ஞானம் உள்ள அறிஞர்களெல்லாம் பாராட்டிப் பேசும் தெய்வப்புலவன்.

இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் கம்பன் அருளிய காப்பியத்தின் அருமையும், பெருமையும், பயனும் நன்கு புலப்படும்.

கம்பன் காப்பியத்தை மட்டும் அல்ல, இராமகாதையையே மாநில - இனக்கண்கொண்டு பார்க்கலாகாது. இந்த நெறிஎல்லாக் காப்பியங்களுக்குமே பொருந்தும்.

அப்படித்தான் சிறந்த கவிஞனும் கதைக் கரு எங்குத் தோன்றியது என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் தன் படைப்பிற்கு ஏற்றதா? காலவெள்ளத்திற்கு ஈடு கொடுத்து நிற்குமா? தன் நாட்டு மக்கள் நல்வாழ்வுக்கு உதவுமா? என்றுதான் பார்த்துத் தேர்ந்து கொள்வான்.

ஆதிகவி என்று அகிலமெலாம் பாராட்டும் வான்மீகி படைத்தளித்த காப்பியக் கதையை முன்னைத் தமிழ்ப்புலவர்களைப் போலவே கம்பனும் போற்றி மகிழ்ந்தவன். அப்பாத்திரங்களை மனமார நேசித்தவன். தன் திறமையைக் கவிதா சன்னதத்தை முழுவதும் காட்டத் தக்கதொரு பெஞ்கதை என மனங் கொண்டான். காலம், இடம், மக்கள், பண்பாடு, மரபுகளுக்கேற்பக் கதையை அமைத்துக் கொண்டான். சில நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் நீக்கினான்: சில நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் சேர்த்தான். வேண்டிய மாற்றங்களை மேற்கொண்டான்.

"கல்லாத கலையும் வேதக் கடலுமே இல்லாத உலகத்து எங்கும்" என்று பாராட்டத்தக்க பேராற்றலும், பேரறிவும், பெரு நம்பிக்கையும் உடையவனாகத் திகழும் கவிச்சக்கரவர்த்தி 'செவிக்குத் தேன்' என, இராகவன் புகழினைத் திருத்திய கவிக்கு நாயகனாகவும் விளங்குகிறான்.

இவன் படைத்த அற்புதக் காப்பியம் மேலே நாட்டுத் திறனாய்வுக் கருவியால் அளக்கும் போதும் எந்நாட்டுக் காப்பியத்திற்கும் ஈடு கொடுத்து நிற்கும் அருமையை எண்ணித் தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்க முடிகிறது.

கம்பன் ஒரு நல்ல கவிஞன்: மகாகவி: கவிச்சக்கரவர்த்தி. செந்தமிழ் - ஆரியம் இரு மொழிகளிலும் கரைகண்டவன். வேறு சில மொழிகளும் அறிந்திருந்தான் என்று தெரிகிறது. வேதம், உபநிஷதம் முதலாக உள்ள பல சம்ஸ்கிருத நூல்களையும், அகத்தியம் முதலாக உள்ள தமிழ் நூல்களையும் ஐயம் திரிபு அறக் கற்றுத் தெளிந்திருக்கிறான். இசை, பரதம், சிற்பம் முதலிய கலைகளிலும் வல்லவனாக இருந்திருக்கிறான். சுருக்கமாகச் சொன்னால் அவன் காலம் வரை தோன்றிய பல நூல்களிலும் தோய்ந்து கற்றுத் தேர்ந்திருக்கிறான்.

இந்த உண்மையெல்லாம் கம்பன் காப்பியத்தில் பரக்க வெளிப்படுகிறது. இத்தகைய பேராற்றலே ஒப்பற்ற காப்பியம் தோன்றத் துணை புரிந்தது. வான்மீகி அருளிய ஆதி காவியத்தைப் பலமுறை ஆய்ந்திருக்கிறான்.

ஒரு மகாகவி எத்தனை எத்தனை கவலைகளை, துறைகளையெல்லாம் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்குக் கம்பன்தான் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு, இல்லையா?

எனவே, கம்பன் கல்வியில் பெரியன், "சொல்லின் செல்வன்" "கேள்வி நூல் மறை வலான்" "ஆற்றலும், நிறைவும், கல்வி அமைதியும், அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லை" "இங்கு, இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும், வேதக் கடலுமே உலகத்து எங்கும் இல்லாத" "செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்" என்றெல்லாம் அனுமனைக் கணித்தறிந்து காட்டுகிறானே, அந்த அருமைப்பாடுகள் அனைத்தும் அப்படியே கம்பனுக்குப் பொருந்தும். ஆம், கம்பன் கல்லாத, கற்றவியாத, விஞ் ஞான மெய்ஞ்ஞானக் கலை எதுவுமே இல்லை என்று அவன் காப்பியத்தைத் துணைக்கொண்டே நிரூபித்து விடலாம்.

கவி ஆண்டவர் கம்பர்

திருமிகு. ஆ.இரா.பாரதராஜா
கே.கே.நகர், சென்னை.

நுழைவாயில்

அனைத்துலக இலக்கிய வரலாற்றில் அனைத்து இலக்கிய நயங்களையும் நோக்குகளையும் ஒன்றிணைத்து ஓர் அரிய காவியம், அறிவுக்காப்பியம், 'வாழ்வியல்' மாண்போடு படைக்கப்பட்டுள்ளதென்றால் அது கம்பராமாயணம் ஒன்றாகத்தான் இருக்க முடியும். கம்பரின் இந்த, உலகியல் உணர்த்தும் உளவியல் படைப்பு இல்லறவியல், துறவறவியல், போரியல், அரசியல் மற்றும் அறவியல் என அனைத்து அறமும் கலந்த 'வாழ்வியல்' வளப்பமாகக் கம்பராமாயணம் மிளிர்கிறது. இதற்கு பன்மொழி பயின்ற பைந்தமிழ்ப் பாவலர் பாரதியின் பாராட்டுச் சான்றுரைகளே போதும்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்கம்பன் பிறந்த தமிழ்நாடு" - எனவும்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்" எனவும்

போற்றிப் புகழ்ந்திருப்பதே கம்பனின் புகழுக்கு மணிமகுடம் சூட்டிய மாணிக்க வரிகளாகும். அந்த நோக்கில் 'கவி ஆண்டவர் கம்பர்' - என்ற கோணத்தில் கம்பரின் பன்முகப் பண்பாட்டுப் பரிணாமம் இந்த ஆய்வுக் கட்டுரையில் அமைகிறது.

இலக்கிய உத்திகள்

பேரிலக்கியங்கள் படைக்கப்பெறுவதற்குரிய முதல் உத்தியான அறம், பொருள், இன்பம், வீடுபேறு - என்பன அமையப்பெற்று, பாட்டியல் இலக்கண நூல்கள் கூறும் இலக்கிய நயங்களான கருத்து, கற்பனை, எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, உவமை, உவமேயம், உருவகம், சந்தம், சுவை-என அத்தனை உத்திகளையும் உள்வாங்கி 'விருத்தப்பாக்களால்' கம்பராமாயணம் படைக்கப்பெற்றுள்ளது. இதை "விருத்தமெனும் ஒண்பாவில் உயர் கம்பன்" எனும் பொன்மொழி உறுதிசெய்கிறது. மேலும், கம்பர் கவிஞர் பலருக்கும் முன்னோடியாக, வழிகாட்டியாகத் திகழ்வது மட்டுமன்றி, தமிழர்களின்-தமிழின் முன்னோரான தொல்காப்பியர் காட்டிய செய்யுள் விதியின்,

"செய்யுள் மொழியால் சீர்புனைந்தி யாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே" (தொல்-பொருள். -537)

எனும் நெறிநின்று அழகும் மேன்மையும் பெருமையும் சேர்த்து கம்பராமாயணத்தைப் படைத்தளித்துள்ளார். இன்றுவரை கம்பரின் இலக்கிய உத்திகளை மீறாது கவிதை படைப்போரே கவியுலகில் நிலைத்து நிற்கமுடியும்.

இலக்கிய நயங்கள்

கம்பராமாயணத்தில் பல்வேறு திறங்கள் பேசப்பெறினும் கம்பரின் அறம் பேசும் திறமே காப்பியம் முழுதும் நிரம்பி நிற்கிறது. கம்பர் கதை மூலம் கருத்தை, அறத்தை, அழகுறக்கூறும் திறத்தை வியக்காதாரிலர். கற்போரை ஈர்க்கும் வகையில் கற்பனை நயங்களும் இயற்கைப் பொலிவுகளும் கதை மாந்தர் புனைவுகளும் எதுகை, மோனை, இயைபு, முரண் மற்றும் அணி நயங்களும் அழகுறக்கூறப்பட்டுள்ளமையால் மற்ற இலக்கியங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது. கருத்தை வெறுமனே சொன்னால் சுவையிராது என்றெண்ணி, பாமரர்க்குக் கதை புரியவும் கற்றோர்க்குக் கவி புரியவும் இனிய எளிய நடையில் கம்பராமாயணத்தை யாத்தளித்துள்ளார் கம்பர்.

கவி ஆண்டவர்

கம்பருக்குப் பிறகு வந்த மரபுக் கவிஞர்களுக்கு மட்டுமன்றி திரைப்படக் கவிஞர்களுக்கும் புலமைமிக்க புதுக்கவிஞர்களில் பலருக்கும் கம்பரின் கற்பனையை, கவிவளத்தைக் கம்பராமாயணம் வாரி வழங்குகிறது. கம்பன் போட்ட கவிப்பாட்டையை மீறி எந்தக் கவிஞனாலும் கற்பனை வளமிக்க கவி-பாட்டை எண்ணவும் இயலாது, எழுதவும் இயலாது.

கவி ஆண்டவர் - கவி - கவிதைக்கு ஆண்டவர்!
கவி ஆண்டவர் - கவி - கவிதைகளை ஆண்டவர்!
கவி ஆண்டவர் - கவி - கவிஞர்களை ஆண்டவர்!

கவி ஆண்டவர் - கவி - கவிஞர்களுக்கும் ஆண்டவர் - போன்றவர்! எனப் பல பொருள்கொண்டு நோக்கினும் கம்பருக்குச் சாலப்பொருந்தும். இதை மெய்ப்பிக்கும் வகையான், சீதாப்பிராட்டியைத் தேடிக்கொண்டு இலங்கை நகர் முழுதும் தேடி அலைந்த அனுமன், இராவணனின் இளவல் கும்பகர்ணனின் உறைவிடம் சென்று, அதனைக் கடக்கும் நிலையில் கவி ஆண்டவர் கம்பர்,

"செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும்
கவிக்கு நாயகன் அனையவன் உறையுளைக் கடந்தான்"

(சுந்தரகாண்டம்)

எனக் கூறுவார்.

இதற்கு, போராசிரியர் ந.சுப்புரெட்டியார், "வான்மீகத்தில் உள்ள இராம சரித்திரத்தை தேவையான இடங்களில் மாற்றி - திருத்தஞ் செய்து- கேட்போர் செவிக்கு இனிமையாக இருக்குமாறு - தேனாக இருக்குமாறு - செய்த கவிக்கு நாயகன் - கவிகளுக்கெல்லாம் தலைவன் - கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன் - என்பது ஒரு பொருள்" (அண்ணல் அநுமன் - ப. 13) எனப் பொருள் கொண்டுள்ளார். அதே பொருள் தருகின்ற வகையில் கம்பரை இன்னும் பெருமைப்படுத்தும் நோக்கில் 'கவி ஆண்டவர் கம்பர்' என்பது (ஆண்டவர் - இறைவர் ஆண்டவர் - ஆட்சி செய்தவர்) இன்னும் சிறப்புச் செய்யும் சொல்லாட்சியாகவும் பொருள்பொதிந்த தொடராகவும் அமையும்.

இராமாயணப்புகழ்

"கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ?" என நம்மாழ்வார் அவர்களால் போற்றப்பெறும் இராமன் புகழ்பேசும் இராமாயணம் இன்றும் கிராமங்களில் உலாவருகிறது. "ஆதிகவி எனப்போற்றப்பெறும் வான்மீகி முனிவரின் இராமாயணத்தைக் கம்பர் மொழிபெயர்க்கும் முன்னரே இராமாயணத்தை மொழிபெயர்க்கும் முயற்சியில், முன்பே சிலர் ஈடுபட்டிருக்கக்கூடும். தொல்காப்பியப் பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோளாக இராமாயணச்செய்திகளைக் கொண்ட இரு பாடற்பகுதிகள் காணப்படுகின்றன. அவற்றைக் கொண்டு கம்பநாடனுக்கு முன்பே ஆசிரியப் பாவில் அமைந்த இராமாயணம் ஒன்று தமிழில் வழங்கியது" என்கிறார் அறிஞர் அ. ச. ஞா. (கம்பநாடர் - புதிய வெளிச்சம் - பக் - 23).

"இராமகாதை, வெண்பாவும் ஆசிரியமும் பெருகி வளர்ந்திருந்த காலத்தில் ஒரு முழு நூலாகவே இத்தமிழ்நாட்டில் வழங்கி இருக்க வேண்டும். அத்தகைய நூல் இன்று கிடையாமல் போனது பெரிதும் வருந்தற்குரிய ஒன்றாகும். (கம்பன் - புதியபார்வை - ப. 14)

"கம்பர் அளித்த காவிய அமுதம் கம்பராமாயணம் இஃது ஒரு தெய்வத்திருநூல். 12000-ம் நான்கடி விருத்தங்கள் -48000-ம் அடிகளைக் கொண்டது. கம்பர் ஒரு தத்துவக்களஞ்சியம், நிகரற்ற தர்க்கவாதி, தலைசிறந்த அரசியல் மேதை, ஒருமைப்பாட்டுக்கு

உரம்சேர்த்தவர்" (கம்பர் செஞ்சொற் கவியின்பம் - முன்னுரை)

"நுண்கலைகள் பலவற்றிலும் சிறந்தது கவிதை. கவிதைகளால் இயற்றப்பட்ட நூல்களில் தலை சிறந்தது காப்பியம். தமிழ்க் காப்பியங்களில் தலைசிறந்தது கம்பராமாயணமே" (நூல் : கம்பராமாயணம் - தொகுதி -1 - பக் - 5) என்ற குறிப்புகளை இனிது நோக்கலாம்.

கம்பரின் ஆண்டவர்

"உலகம் யாவையும் .... அன்னவர்க்கே சரண் நாங்களே" - என்ற கம்பரின் பொதுநோக்கு, இறைநோக்கு இப்பாடலில் ஒளிர்கிறது மிளிர்கிறது. "ஒன்றே என்னின் ஒன்றேயாம், பலவென் றுரைக்கின் பலவேயாம்" - என்ற பாடலின் வரிகளும் இறைவன் ஒருவனே என்பதை நுவல்கிறது.

நாடும் காடும்

ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என்பதனை, தம் கற்பனைக் கண்களால் கண்டு, உய்த்து, உணர்ந்து உரைக்கிறார். அஃது அன்றைய கோசலநாட்டுக்குக் கூறப்பட்டாலும், இன்றைய நாடுகளுக்கும் பொருந்தும். அது,

"வண்மை இல்லை ஓர்வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர்செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய்உரை இலாமையால்
ஒண்மை இல்மை பல்கேள்வி ஓங்கலால்"

என்ற பாடல் பகர்வது கோசலநாட்டில் வறுமையின்மையால் வண்மை இல்லை பகைஞர் இன்மையால் திடமிகு வீரம் இல்லை பொய்மை இல்லாமையால் உண்மை இல்லை கேள்விச்செல்வம் மிக்கிருந்ததால் அறியாமை அங்கில்லை - எனும் கவி ஆண்டவரின் கற்பனையும் கருத்தும் போற்றத்தக்கவையாம். இப்படிக் கோசலநாட்டின் பெருமை பேசப்படுகிறது.

அடுத்து, கையேயி தயரதனிடத்தில் பரதன் நாடாளவும் இராமன் காடேகவும் வரம் பெறுகிறாள் அதனை அரசன் சொன்னதாக இராமனிடம் கூறுகிறாள் "ஆழிசூழ் உலகமெல்லாம்..." - எனும் பாடலில், "பூழிவெங்கானம் நண்ணி" - என வருகிறது இதில் காடு கொடுமையானது எனச் சொல்லப்பெறுகிறது. அதைக் கேட்ட இராமனோ, "மன்னவன் பணியென்றாகில்...... மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்" எனக்கூறும்

வரிகள் கொடுங்காட்டைக் கொடிதாக என்னாமல் "ஒளிபொருந்திய கானகத்திற்கு நான் செல்லுகின்றேன்" என்கின்ற இராமனின் உயர் பண்பு கம்பர் கவியின் மூலம் ஒளிர்கிறது.

அறம்பேசும் திறம்

தம் கவித்திறத்தால் ஒவ்வொரு கதை மாந்தரின் வாயிலாகவும் கவி ஆண்டவர் கம்பர் பேசுகிறார். 'அறம்' எனும் சொல் தாங்கிய கவிதை அடிகள் மிகுந்து நிற்பதால் சுருங்கக் காணலாம்.

"ஆற்றல் நல்லறம் அல்லது இலாமையால்"
"அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்"
"அறம் எனக்கு இல்லையோ எனும் ஆவி நைந்து"
"ஆரோடு எண்ணிற்று? ஆர் உரைத்தார்? அறமெல்லாம்"
"அறம்தனை நினைந்திலை, அருளும் நீத்தனை"
"தயாமுதல் அறத்தினைத் தழீஇய தென்னவே"
"அரக்கர் என்று உளர்சிலர், அறத்தின் நீங்கினார்"
"அறத்தினாலே எய்தினை அன்றோ அது நீயும்"
"அறத்துள தொக்கும் அன்றே அமர்த்தலை வென்று கொண்டுன்"
"இல்லயே அறமென இரங்கி ஏங்கினாள்"
"அறைகழல் ராம னாகி அறநெறிநிறுத்த வந்தது"
"அறம் புகாமையால் அழியும் இப்பதியென அயிர்த்தான்"
"வீடினதன்று அறன் யானும் வீகலேன்"
"வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்"
"வாழி நல்லறம்! என்றென்றும் வாழ்த்தினான்"
"அறத்தினால் அன்றி அமரர்க்கும் அருஞ்சமம் கடத்தல்"

மேலும், அறத்தால் அல்லாது மறத்தால் வெல்லுதல் தேவர்க்கும் அரிது எனும் பொருள்படக் கம்பர் கூறுவார். இதனை வள்ளுவர்,

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்பார். இவ்வாறு பல இடங்களிலும் கம்பராமாயணத்தில் கவி ஆண்டவர் கம்பரால் அறத்தின் திறம் அதிகம் பேசப்பெறுவதால் இஃது அறநூல் என்ற பெருமையைப் பெற்று ஒளிர்கிறது.

கவி ஆண்டவர் கம்பர்

கம்பராமாயணம் படைக்கப்பெற்ற பிறகு கவிஞர்களுக்கெல்லாம் பாட்டை எழுதும் பாட்டை அமைத்தளித்தவர் கவி ஆண்டவர் கம்பர் ஆவார். "விசுவாமித்திரர் செய்த வேள்வியை வீழ்த்த முயன்ற மாரீசன், சுபாகு போன்ற ஏனைய அரக்கர்களை அம்பு எய்து அழித்தான் இராமன் - இது கைவண்ணம். அடுத்து, கௌதம முனிவரால் கல்லாகச் சாபம்பெற்று இராமன் கால் பட்டதும் சாபம் நீங்கி மீண்டும் பழைய உருப்பெற்றாள் அகலிகை - இது கால்வண்ணம். இந்த அதிசயங்களைக் கண்டு வியந்த விசுவாமித்திரர் இராமனைப் பாராட்டுவதாகக் கம்பர் யாத்த கவிவண்ணம் "கைவண்ணம் அங்குக்கண்டேன் கால்வண்ணம் இங்குக்கண்டேன்" என்ற தொடரில் இனிது புலப்படும்.

இந்தக் கம்பரசத்தைக் குடித்துவிட்டு பாவேந்தர் வடித்தெடுத்த கவிதை வரிகள் பின்வருமாறு அமைகிறது.

பாரதிதாசனார் பூசணிக்காயை வருணித்த போது கம்பர் கைகொடுக்கிறார்,

"மெய்வண்ண வீடுகட்ட - உன்னைத் தொங்கவிடுகிறார்கள்
செய் வண்ண வேலைசெய்து திருமாடம் முடிக்கின்றாய் - நீ
பொய் வண்ணப் பூசணிக்காய் கவி உன்னைச் செய்துண்டேன் - உன்
கை வண்ணம் அங்குக் கண்டேன் கறிவண்ணம் இங்குக் கண்டேன்"

கவியரசர் கண்ணதாசன் பாசம் என்னும் படத்தில், திரைப்படக் கதாநாயகன் மூலம் பெண்ணை வருணனை செய்யும் போது கம்பரை நினைத்தார் சொற்களை இணைத்தார் கவிதையை வடித்தார் அஃது இதோ,

"பால் வண்ணம் பருவம் கண்டு, வேல்வண்ணம் விழிகள் கண்டு
மான்வண்ணம் நான் கண்டு வாடுகிறேன்
கண்வண்ணம் அங்கே கண்டேன், கைவண்ணம் இங்கே கண்டேன்
பெண்வண்ணம் நோய் கொண்டு வாடுகிறேன்"

இவ்வாறு கவிகளுக்கும், கவிஞர்களுக்கும் ஆண்டவராய் விளங்கும் கவி ஆண்டவர் கம்பரின் 'பா' பலாச்சுளைகளில் ஒருசில சுளைகளைச் சுவைத்தோம். அவருடைய கற்பனையை, கருத்துகளை முழுதும் சுவைக்க ஆய்வு எல்லை நம்மை அனுமதிக்கவில்லை.

நிறைவுரை

இராமாவதாரம் என்னும் அறநூல் மூலம் அறத்தின்

மேன்மை, அரசியல் நேர்மை, மறத்திலும் மென்மை, தரத்திலோ வண்மை, நிறத்திலே ஒருமை, திறத்திலே கல்வியவிவு, ஒருவனுக்கு ஒருத்தி, பிறன்மனைநோக்காப் பேராண்மை, தவநெறி, ஒன்றே குலம், இறைவனுக்குப் பேதமில்லை என்ற அனைத்து அறநெறிகளும் கம்பராமாயணத்தில் பேசப்பெறுவதால் கம்பர், "கவி ஆண்டவர் கம்பர்" ஆகிறார்.

கம்பன் ஒரு காவியம்

திருமிகு. எறும்பூர் கை.செல்வக்குமார்
வரலாற்று ஆசிரியர், அரசுமேல்நிலைப்பள்ளி,
செங்காடு.

முன்னுரை

'உலகினில் நாகாரிகம் முற்றும் அழிந்து விட்டாலும், திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும். மீண்டும் அதனை புதுப்பித்து விடலாம்" என்கிறார் அறிஞர் கால்டுவெல். 'இராமாவதாரம்" காப்பியத்தைப் படைத்ததன் மூலம் கம்பன் ஒரு காவியமாகவே திகழ்கின்றார்.

"கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்ச்சிதயம்
களியதே" - பழம் பாடல்

"காலமெனும் ஆழியிலும் காற்றுமழை ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு - அது
தலைமுறைக்கு எழுதிவைக்கச் சீட்டு" - கவிஞர் கண்ணதாசன்

காலத்தாலும் கணிக்க இயலா வரிகள் கம்பனின் கவிப்புலமையை, காவியபெருமையைப் பறைசாற்றி வருகின்றன. கிபி 12ம் நூற்றாண்டு சோழமன்னன் குலோத்துங்கனின் அவைப்புலவராக இருந்து, திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் அவர்களால் ஆதரிக்கப்பட்டவர் கவிச்சக்ரவர்த்தி

"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்,
விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்,
கல்வியிற் பெரியர் கம்பர்"

என்ற தொடர்வரிகள் கம்பனின் பெருமையைக் கூறுகின்றன. தமிழிலக்கியத்தில், காப்பிய வளர்ச்சி கம்பர் படைப்பினால் உச்ச நிலையை அடைந்தது. இந்நூலின் சிறப்பு கருதியும், திருக்குறள் பெருமை கருதியும் இவ்விரு நூல்களும் 'தமிழுக்கு கதி" என்பர் தமிழ்ப்பெரியோர்.

கம்பராமாயணம் பெரும்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது. பொருள், அணி, நடை ஆகியவற்றால் சிறந்துள்ளது. கற்போருக்கும் இன்னும் தரும் கவிச்சுவை நிறைந்தது. சொற்சுவையும், தமிழ் பண்பாடும் மிளிர்ந்துள்ளது.

சிலை நின்ற சிறப்புடைய கம்பர்

இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு 1968ம் ஆண்டு சனவரி திங்கள் 3ம் நாள் சென்னை மாநகரில் நடந்தது. அப்போதைய முதல்வர் மீ. பக்தவச்சலம் கவியரசர் கம்பர் சிலையை சென்னை மெரினா கடற்கரையில் திறந்து வைத்தார். உலகத்தமிழ் அறிஞர்களில் முன்னோடியாய், தமிழ்ப்பண்பாட்டிற்கு வித்திட்டு வளர்ச்சிக்கு உதவிய தமிழ் அறிஞர் சிலை நின்றதும் மிகையல்ல.

கம்பரும் உடன் வாழ்ந்த புலவர்களும் காலத்தை பற்றிய விவரம்

கம்பர் காலத்தைப் பற்றி ஆராய்ச்சிகள் இன்னும் முடிவுறவில்லை. அகச்சான்றுகளைக் கொண்டு மூன்றாம் குலோத்துங்கன் (கிபி. 1178 - கிபி. 1216) காலத்தவர் என்று அறிகிறோம். ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சயங்கொண்டார் ஆகியோர் முதுமைக்காலத்திலும் உடன் வாழ்ந்தவர்கள் என்று சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் அவ்வையார் என்றொரு பெண்பாற்புலவரும் இருந்தார் என்பதும் தெரியவருகிறது.

'புலவரையும், வறியோரையும் புரந்த பெரிய வள்ளல் என்றும் இவ்வுலகத்தையே தரப்பெற்றாலும் பொய்மொழியான்" என்று சடையப்ப வள்ளலைப் பற்றி திருக்கோடிக்கா கல்வெட்டு கூறுகிறது. அத்தகைய சிறப்புமிகு சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர் கம்பர். கல்வியிலும், கவித்திறனிலும், கற்பனை வளத்திலும், கருத்து ஆழத்திலும், சொல்லாட்சியிலும், ஒட்டக்கூத்தர் உள்ளிட்ட அவரது காலத்து புலவர்களை மிஞ்சியவர் கம்பர்.

தமிழிலக்கியத்தின் மணிமுடி

இராமாயணத்தின் உத்தரக் காண்டத்தைப் பாடியவர் ஒட்டக்கூத்தரே என்று சிலர் கூறுவர். இக்காண்டம் உள்பட கம்பராமாயணம் 12,016 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூல் தமிழிலக்கியத்திற்கு மணிமுடியாக அமைந்துள்ளது. காலத்தை வென்று என்றும் சீரிளமை குன்றாது ஒளிர்ந்து வருகின்றது. வான்மீகி முனிவரின் வடமொழி இராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டு தம் நூலை இயற்றினார் என்பது மரபாக உள்ளது. ஆனால் கதையின் அமைப்பிலும், போக்கிலும். கதை பாத்திரங்கள் அமைப்பிலும் கம்பர் தமிழ் மரபுக்கேற்ப தம் நூலில் பல மாறுதல்களை செய்துள்ளார். வான்மீகி முனிவர் இராமனை ஒர் அரசகுமாரனாகவே காட்டி-யிருக்கிறார். ஆனால் கம்பர் இராமனை திருமாலின் அவதாரமாகவே கொண்டு தம் கதையை நடத்துகின்றார்.

இராவணன் சீதையைக் தன் கைகளால் மார்புற அனைத்தும், தூக்கிக் கொண்டு போனான் என்று வான்மீகி கூறுகின்றார். ஆனால் கம்பரின் தமிழ் உள்ளம் அப்படி கூற ஒப்பவில்லை. உலகம் ஈன்ற தாயான சீதாப்பிராட்டியை பிறன் ஒருவன் தீண்டினால் உயிர்வாழ மாட்டாள் என்று எண்ணி இராவணன் அவள் நின்ற நிலத்தையே அகழ்ந்து தூக்கிக்கொண்டு போனான் என்று கம்பர் கூறுகிறார். இதைப்போன்று மாறுதல்கள் செய்து தமிழரின் பண்பாட்டைப் பொதிந்து வைத்து அதற்கு பாதுகாப்பிட்டார்.

கம்பரை மிஞ்சியவர் எவருமில்லை

'கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்" என்று ஒரு பழமொழி வழங்குகின்றது. அவரின் இலக்கிய செறிவு, அவரை பின்பற்றுபவர் யாரையும் கவிஞராக்கூடிய தமிழாற்றல் எடுத்துக்காட்டுகிறது. கற்பனைத்திறனில் கம்பரை மிஞ்சிய தமிழ் புலவர்கள் தமிழக வரலாற்றிலே முன்னும், பின்னும் பிறக்கவில்லை. மக்கள் உள்ளங்களில் கூறுபாட்டையும், எழுச்சிகளையும், வேட்கைகளையும் நன்கு ஆய்ந்துணர்ந்து பாடுகின்றார் கம்பர்.

தமிழர் வரலாறு கலவுநிலைக் காண்டத்தில் இராமாயணக்காலம் (தோரா கி.மு. கங00 - கஉ00) என்று கூறப்படுகிறது. சோழவேந்தன் மரபே சமஸ்கிருத இலக்கியங்கள் சூரியவம்சம் என்று சொல்லப்படுகிறது. அவ்வழியில் வந்தவன் இராமன். ஆனால் கம்பரது இராமாயணத்தில் பாலகாண்டத்தில் குலமுறைகிளத்துப் படலத்தில் இராமனின் முன்னோர் பதினால்வர் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே சோழவம்சத்தை சார்ந்தவராகவும் இருக்க வாய்ப்புள்ளதாக அறியமுடிகிறது.

கம்பர் கூறும் 'மன்னுயிர் துறந்த வள்ளல்"

"மூத்தவனுக்கு அரசுரிமை" என்ற மரபுப்படி ராமனுக்கு பட்டம் சூட்ட அனைவரும் இசைந்தனர். அதே நேரத்தில் கைகேயிக்கு அவளது திருமணகாலத்தில் தயரதன் கொடுத்த வரத்தைப் பற்றி கவனிக்காமல் அமைதியாகிவிட்டான். இராமனுக்கு கொடுப்பது மரபு பரதனுக்கு கொடுப்பது சட்டம் அதாவது சத்தியம். தயரதன் கைகேயிடம் அகப்பட்டுகொண்டபொழுது அவனிடம் எழுந்த போராட்டமே வாய்மைக்கும், மரபுக்கும்இடையே எழுந்த போராட்டம். அதனால்தான் கம்பர்,

"வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்" என்கிறார். இரண்டையும் காட்டியதற்காகத் தயரதன் உயிர்விட நேர்ந்தது.

கம்பன் கூறும் மும்மூர்த்திகளில் மூலமான முதல்வன்

அறம்பற்றி பேசும் இராமாயண காப்பியத்தில் 'இராமபக்தி' அனுமனின் லட்சியமாகிறது.

"வருந்தேன் அது என் துணை வானவன் வைத்த காதல்"

(கடல்கடந்த படலம் 59)

இராமபக்தி என்னும் லட்சியம் அனுமனுக்குக் கடலைத் தாவும் சக்தியை அளித்திருக்கிறது என்ற உண்மை இப்பாடலில் மெய்பிக்கப்படுகிறது. மேலும் கடவுள் நம்பிக்கை மனிதவாழ்க்கைக்கொரு தனிமதிப்பும், பெருமையையும் ஏற்படுத்தும். அதே வேளையில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் சைவ, வைணவ போராட்டம் நடந்ததைகளை கண்டு கம்பர் 'எள்ளி நகையாடினான்" என்று அ.ச. ஞானசம்பந்தன் என்பார் குறிப்பிடுகிறார். மேலும் ராமனை கம்பர் மூம்மூர்த்திகளுக்கு மூலமான முதல்வன் என்று குறிப்பிடுகிறார்.

"முப்பரம் பொருளரகமும் முதல்வன்

முந்துறும்.........."

(அவதாரப்படலம் 134)

கம்பனின் சமதர்மமும், நன்றியும்

"ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து எண்ணுர்கேள்வி
ஆகும் முதல் திண்பனை போக்கி அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பி தருமம் மலர்ந்து
போகம் பனி ஒன்று பழுத்து போதுமன்றே"

- (கம்பர் செஞ்சொற்கவஇன்பம் 34)

அடிப்படை மெய்யுணர்வின் வித்திலிருந்து கல்வி முளைத்து கேள்விக்குறியைப் போக்கி அறிவுக்கிளைபரப்பி தவம் என்னும் இலைகளை தழையவிட்டு அன்பு அரும்புவிட்டு தருமம் மலர்ந்து அறம் என்னும் மலர்களை உடையதாய் கனிப் பழுத்து பயன்பெறுவது போன்றது. நாமும் நாட்டுமக்களும் சமதர்மத்துடன் இருக்க வேண்டும் என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

'வன்னிய நாட்டிய பொன் மௌலி" என்று சோழ நாட்டின் வளம் பற்றி கூறும்போது சடையப்ப வள்ளல் வாழ்ந்ததால் உயர்வு

பெற்றது சோழநாடு என்று கம்பர் குறிப்பிடுவதாகக் கவிஞர் காசி குறிப்பிடுகிறார்.

கம்பரும், திருத்தக்கதேவரும்

ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மையாகத் திகழும் சீவகசிந்தாமணி கம்பனின் கற்பனை திறனுக்கு அடித்தளமிட்டது. அதை ஆழ்ந்து படித்துள்ளார் கம்பர் என்று டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் குறிப்பிட்டுள்ளார். கம்பனின் காப்பிய உலகம் கரை காண முடியாதது. அந்த காப்பியத்திற்கு வித்தும், வேரும் சீவகசிந்தாமணியாரும் என்று ச. மெய்யப்பன் குறிப்பிடுகிறார். சீவகசிந்தாமணி ஒரு சிறிய உவர்குடம் என்றால் இராமாயணம் பெரிய பாற்கடலாகும்.

கம்பரால் இராமாயணத்திற்கு பெருமை

"வடகலை, தென்கலை, வடுகு கன்னடம்
இடம் உளபாடையது ஒன்றின் ஆயினும்
திடம் உள ஒரு குலத்து இராமன் தன் காதை
அடைவுடன் கேட்பவர் அமரர் ஆவரே - 18

வடமொழி, தமிழ், வடுகு, கன்னடம் இவை மட்டுமல்லாது இவ்வுலகத்தில் உள்ள அனைத்து மொழியிலும் இராமாயணத்தை பக்தியுடன் படிப்பவர், கேட்பவர் யாவரும் சொர்க்கலோகம் அடைவர் என்று கம்பர் குறிப்பிடுகின்றார்.

"ஓசை பெற்று உயர் பாற்கடல் உந்தி ஒரு
பூசை முற்றசும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையற்றே மற்று இல்
காசில் கொற்றது இராமன் கதை அரோ"

என்று கம்பர் பேராசையுடன் பாடியுள்ளார். பாற்கடலை அடைந்த ஒரு பூனை அதன் நீரை ருசித்து குடிக்கச் செல்கிறது. நீர் முழுவதையும் நக்கியே குடித்து விடுவேன் என்று பேராசைப்படுகிறது. அதுபோல் இராமாயணத்தை கற்ற நான் அதை தமிழில் உலக மக்கள் படிக்கக் கொடுப்பேன் என்று அடங்காத ஆவலை கம்பர் வெளிப்படுத்த காண்கிறோம்.

கம்பரது இராமாயணம் உருவான வரலாறு

பழைய வரலாறு என்பதை வடமொழியில் இதிகாசம் என்பர். ராம, ராவணப் போர் 16 லட்சம் ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக

ஓர் ஆய்வு கூறுகிறது. வடமொழி புலமை உடைய கம்பர் வான்மீகி இராமாயணத்தை இரவில் வடமொழிகற்ற அந்தணர் உதவியுடன் ஆய்வு செய்து பகலில் பாடல் எழுதுவார். ஒருநாளொன்றுக்கு 700 பாடல்கள் வீதம் 15 நாளில் முடித்திருக்க வேண்டும்.

"விழு ஞாயிறு எழுவதன் முன் மறை வேதியருடன் ஆராய்ந்து
எழுஞாயிறு விழுவதன் முன் கவிபாடினது எழுநூறு"

- ஒரு பழைய பாடல்

கம்பர் திருவரங்கத்தில் கி.பி. 886 பிப் 12ம் தேதி ஞாயிறு அன்று இராமாயணத்தை முதன் முதலில் அரங்கேற்றினார்.

"கம்ப நாடன், பண்ணிய இராம காதை
பங்குனி உத்திரத்தில் கண்ணிய அரங்கர் முன்னே
கவி அரங்கேற்றினானே"

என்ற பாடல்களும் இராமாயணம் உருவாகி அரங்கேற்றிய வரலாறு நமக்கு புலப்படுகிறது. இராமகதை அன்பிற்கும், ஆணவத்திற்கும் இடையே நடைபெற்ற போரை விளக்குவது. முடிவில் மறம் வீழ்ந்து அறம் வெல்கிறது.

முடிவுரை

'அந்தமிலா மறை ஆயிரத்(து) ஆழ்ந்த அரும்பொருளைச்
செந்தமிழாத் திருத்தலதினால் நிலத் தேவர்களும்
தந்தம் விழாவும் அழகும் எண்ணம்? தமிழர்கவியின்
பஞ்சும் விழா எழும் குருகூர் வந்த பண்ணவனே"

- (சடகோப அந்தாதிப்பாடல் - 25)

கம்பர் இராமாயணம் பாடுவதற்கு முன்பு சரஸ்வதி அந்தாதியும், இராமாயண அரங்கேற்றத்தின்போது சடகோபர் அந்தாதியும் பாடினார் என்று கூறுவர். ஏர் எழுபது, சிலைஎழுபது, திருக்கை வழக்கம் ஆகியவை கி.பி. 12ம் நூற்றாண்டுக் கம்பர் பாடியவை என்று கூறப்படுவதாக அப்போதைய அண்ணாமலை பல்கலைக்கழக பொருளியல்துறைத்தலைவர் டாக்டர். அ.வே.ரங்காச்சாரியார் கூறுகின்றார். மேலும் கவிச்சக்கரவர்த்தியை தெய்வப்புலவர் கம்பநாட்டாழ்வார் என்ற புகழை ஸ்ரீமந் நாதமுனிவர் சூட்டி பெருமைப்படுத்தியுள்ளார். 'நவில்தொறும் நூல்நயம் போலும் என்கிறார் வள்ளுவர் அதுபோல் கம்பருடைய பாடல்களைத் தொட்டாலும் கை மணக்கும், சொன்னாலும் வாய் மணக்கும்".

கம்பன் - நாடக அணிக்கொரு நாதன்

முனைவர் வெ.கலைச்செல்வி
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம்.

அரிஸ்டாட்டில் நாடகத்திற்கு மிகவும் இன்றியமையாததாகக் கதைக்கோப்பு, பாத்திரங்கள், பொருட்கேற்ற பொருள் நோக்கும் சொற்கோவை, பாட்டு, கருத்து ஆகிய ஆறு உறுப்புகளைக் குறிப்பிடுவார். இதில் கதைக்கோப்பு மிகவும் முக்கியமானது. கதைக்கோப்பு தொடக்கம், நடு, முடிவு என்ற மூன்று நிலை கொண்டது. உரையாடல் மூலம் கதை கூறும் கலையே நாடகம். எனவே கதைக்கோப்பற்ற நாடகங்கள் இருக்க முடியாது. நாடகக் கதையின் வெற்றி என்பது அதன் பாத்திரங்களையும், ஆர்வமூட்டும் திருப்பங்களையும் பொறுத்தே அமையும். அவ்வகையில் கம்ப இராமாயணத்தில் நாடகக் கூறுகள் அதிகமாக வெளிப்படுவதாக ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே கம்பனின் வழி நாடகக் கூறுகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகின்றது.

கம்பஇராமாயணம் ஒரு நாடகமே

இசை, நாட்டியம், நாடகம் முதலான நுண்கலைப் பின்னணி சிறந்திருந்தமையால் தனது பெருங்காப்பியத்தில், நாடகம் பற்றி 19 இடங்களிலும் நாட்டியம் அல்லது ஆடல் பற்றி 69 இடங்களிலும், இசை அல்லது பாடல் பற்றி 63 இடங்களிலும், அரங்கம் பற்றி 14 இடங்களிலும் கம்பன் மிகத் தெளிவான குறிப்புகளைத் தருகின்றான். ஆயினும் கம்ப இராமாயணத்தைக் காப்பிய நாடகம் என்று கூறுவதற்கில்லை. ஆனால் அதனுள் அமைந்துள்ள நாடகக் கூறுபாடுகளைக் கூறுவதன் மூலம் கம்பன் நாடக ஆசிரியன் என்பதை உணர்த்த இயலும்.

நாடகச் சூழலும் கம்பனும்

கதை சுவையாக இருக்கிறது என்பதற்காக ஒரு காப்பியத்தை நாடக விவன் மிக்கதெனக் கூறிவிட முடியாது. கலைத்தன்மை மிக்க கட்டுக்கோப்போடு கவிஞன் மறைந்து நின்று பாத்திரங்களைச் செயல், உரையாடல் ஆகியவற்றின் மூலம் நன்முறையில் உருவாக்கியிருக்க வேண்டும். இந்த வகையில் கம்ப இராமாயணம் மிகச் சிறந்து விளங்குகிறது. கம்பன் நாடகச் சூழல்களில் பல இடங்களில்

வெளிப்பட்டு நிற்கிறான். பாத்திரத்தின் தன்மையை விளக்கும் போதும், பாத்திரத்தின் செயலுக்கு ஒரு நியாயம் கூறும் போதும், ஒரு பாத்திரச் செயலை உலகியலோடு பொருத்தும் போதும், ஒரு பாத்திரத்தைத் தானும் ஒரு பாத்திரமாக நின்று பார்க்கும்போதும், காட்சி அமைப்பின் போதும் காப்பியக் கவிஞன் வெளிப்படுகிறான்.

நாடகக் காப்பியங்களில் இடம் பெறும் கதைக்கரு, கதை, கதைக்கோப்பு, பாத்திரப் படைப்பு, உரையாடல், நாடகக் குறிப்பு, காட்சி அமைப்பு, மெய்ப்பாடுகள், முரண், தனிமொழி, அறக்கோட்பாடுகள் போன்ற நாடகத்திற்குரிய சிறப்புக் கூறுகள் கம்பனால் எடுத்தாளப்பட்டுள்ளதால் கம்ப இராமாயணம் சிறப்பு மிகுந்த நாடகக்கூறுகள் நிரம்பிய நாடகக் காப்பியமாகின்றது.

பாத்திரத்தின் தன்மையை விளக்குதல்

அறம் பேணுவதற்காக எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றிலும் தூய்மையானவனாக இராமனை அடைக்கலம் அடைந்தான் வீடணன். இராமனை உளவு பார்க்க வந்த அரக்கர்களைப் பற்றி அறிந்த வீடணன் அவர்களை எதிர்கொள்ளுகிறான். அதனைக் கூற விரும்பும் கம்பன் வீடணன் பாத்திரத்தின் தன்மையைத் தன் வழி விளக்குகிறான். 'நீரினின்றும் பாலைப் பிரிவுபடுத்தும் அன்னத்தின் தன்மையன்' எனவும், "பண்டுதான் பலநாள் செய்த நற்றவப்பயன் தந்துய்ப்ப முந்துறப்போந்த தம்பி" எனவும் வீடணனை உணர்த்துகிறான்.

கற்போருக்கு விளக்கம் தருதல்

இராமனும் சீதை கண்ட அளவில் காதல் கொள்ளுகின்றனர். அவர் தம் சிந்தையும் செயலும் ஒன்றானது. முதன்முறையாகக் கண்ட உடனேயே எவ்வாறு ஈருடல் ஓருயிர் ஆக முடியும் என்ற கேள்விக்கு 'கருங்கற்பள்ளியில் கலவி நீங்கிப் பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமா'? என்று கற்போருக்கு விளக்கம் தருகிறான் கம்பன்.

பாத்திரத்தின் செயலுக்கு நியாயம் கற்பித்தல்

'அரசரில் பிறந்து, அரசருள் புகுந்து, பேரரசியான கையேயி ஒரு கூனியின் சொல் கேட்டு தன் மகனை விட மேலான அன்பு செலுத்திய இராமனிடம் கொடு மனக்காரியாக நடந்து கொள்ள இயலுமா என்ற கேள்விக்கும் ஒரு நியாயம் கொடுக்கிறான் கம்பன். அரக்கர் பாவமும், அறமும் சேர்ந்தே இதைச் செய்ததால் தான் இராமனின் புகழ் உலகம் முழுவதும் பரவக் காரணம். உலகம் இராமனைக் கொண்டாடவே கைகேயியை மனம் மாற்றம் கொண்டவளாகக் கம்பன் படைத்துள்ளான்.

பாத்திரத்தின் செயலை உலகத்தோடு பொருத்துதல்

வருணன் கோபம் கொண்ட இராமனிடம் அடைக்கலம் கேட்பதால், இராமன் வருணனுக்கு அபயமளிக்கிறான். எய்யத்தொடுத்த அம்பை என்ன செய்வதென்று கேட்கிறான் வருணன். மருகாந்தாரத்து வாழும் அரக்கரை நோக்கிக் கைகாட்ட, அவுணர் அழிகின்றனர். வருணன் அழிந்து விடுவான் என்ற நமது எண்ணம், எதிர்பார்ப்பு பொய்யாகிறது. அறமுடையார்க்கு நல்லதே நடக்கும் கெட்டவர் எப்படியாவது அழிவர். இது உலக இயல்பு என்கிறான் கம்பன்.

ஒரு பாத்திரத்தைத் தானும் ஒரு பாத்திரமாக நின்று பார்த்தல்

இந்திரசித்தனிடம் இராமன் இறக்கவில்லையோ எனக் கேட்கும் இராவணனுக்கு நேரிடை பதில் கூறாமல் 'என்னை ஆளுடை நாயகன்' வேறிடத்து இருந்தான் என்று தான் ஒரு பாத்திரமாக நின்று பேசுகிறான் கம்பன்.

காப்பியக்கவிஞன் வெளிப்படுதல்

மிதிலை நகரில் அசைந்து கொண்டிருந்த கொடிகள் 'ஒல்லைவா என்று அழைப்பன போல்வனவாகக் காட்சி அளித்ததாகக் கம்பன் கொடியையும், இராமன் வருகையையும் இணைக்கிறான். அதனால் மனம் மகிழ்கிறான். கவிஞன் மறைந்து நிற்கும் பகுதிகளில் 'என்றான்', 'சொன்னான்', 'கூறினான்', 'விளம்பினான்', 'இயம்பினான்', 'சொலி', 'விளம்பலூற்றான்', 'கழலூற்றான்', 'சொல்லலுற்றான்', 'கொண்டான்', 'கூறலுற்றான்' ஆகிய பதினொரு சொற்களையே கம்பன் கையாண்டுள்ளான்.

முழுமையான பாத்திரப் படைப்பு

ஒரு முழுமையான பாத்திரப் படைப்பு நான்கு படி நிலை வளர்ச்சிகளைக் கொண்டது. அவை (1) அறிமுகம் (2) பண்புணர்த்தல் (3) உறுதிப்படுத்துதல் (4) முழுமை பெறுதல் போன்றன. கம்ப இராமாயணத்தில் வரும் பாத்திரங்களை மூன்றாகப் பிரிக்கலாம்.

(1) காப்பியம் முழுவதும் வரும் பாத்திரங்கள் - இராமன், சீதை, இலக்குவன்

(2) சில காண்டங்களில் மட்டும் இடம் பெறும் பாத்திரங்கள் - தசரதன், இராவணன், அனுமன்

(3) சில படலங்களில் மட்டும் வரும் பாத்திரங்கள் - வாலி, சூர்ப்பணகை, மந்தரை, கையேயி, தாடகை, சரபங்கன், சடாயு முதலானோர்.

சிறந்த காட்சியமைப்புகள்

நாடகச் சூழலில் நாடகம் நிகழுமிடம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கம்பன் காட்சி நிகழும் இடங்களை மிகச் சிறப்பாகத் தெரிவு செய்துள்ளான். மலைச்சாரல்கள், கானகங்கள், ஆற்றுப்படுகைகள், அரசவைகள், ஆசிரமங்கள், சோலைகள், போர்க்களங்கள் ஆகிய காட்சி அமைப்புகளைத் தேர்ந்தெடுத்துள்ள கம்பன் மிகச் சிறந்த காட்சி அமைப்பாளனாகவும் மிளிர்கிறான்.

எதிர்நிலைப் பாத்திரப் படைப்பு

'நாடகம் வாழ்வை ஒட்டியதாக இருக்க வேண்டுமாயின் அதன் பாத்திரங்கள் நன்மையும், தீமையும் கலந்த நிலையில் படைக்கப்பட வேண்டும்' என்கிறார் வ.வே.சு.ஐயர். அவ்வகையில் கம்பன் தனது பாத்திரங்களை நிறையும், குறையும் உடையவர்களாகவே படைத்துள்ளான். கம்ப இராமாயணத்தின் எதிர்நிலைத்தலைவன் இராவணன். கம்பனின் இராவணன் மில்டனின் சாத்தானை விடப்பெருமையும், ஆளுமையும் உடையவனாகப் படைக்கப்பட்டுள்ளான். எதிர்நிலைப் பாத்திரங்களைத் தீமையே உருவானவர்களாகக் கம்பன் படைக்கவில்லை. பிறன் மனை நோக்கிய இராவணன் தன்னுடன் மடியும் மனைவியைப் பெற்றவன். அறமே அறியாத இராவணனும், அவனைச் சார்ந்தோருமே எதிர்நிலைப் பாத்திரங்களாகக் கம்பனால் படைக்கப்பட்டுள்ளனர்.

பாத்திரங்களின் கனவு, நினித்தம்

கனவு, சகுனம் முதலியவை இலக்கிய ஆசிரியர்களால் நன்கு பயன்படுத்தப்படுவதுடன், அவை நாடகக் கட்டுக்கோப்புக்கும் நன்கு பயன்படுகின்றன என்பர். நினித்தம், கனவு போன்றவை பாத்திரத்தின் உளநிலை, பின் நடக்குவனவற்றை முன் கூட்டியே அறிவித்தல், காட்சியமைப்பு ஆகியவற்றின் மூலம் எடுத்துரைக்கப்படுகின்றன. வீடணனின் மகள் திரிசடை சீதையிடம் தான் கனவு கண்டதைக் கூறுகிறாள். அதன் மூலம் சீதைக்கு நிகழ இருக்கும் நன்மையும், இராவணனுக்கு நேரப் போகும் துன்பமும் முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது. இராமனை எதிர்க்க வரும் இராணனனுக்குத் தீய நினித்தங்கள் தோன்றுவதாகக் கம்பன் படைத்துள்ளான்.

நாடகத்தில் விதிக்கொள்கை

வாழ்வின் இன்ப துன்பங்களுக்கு விதியே காரணம் என்பர். கம்பனும் விதி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறான். கைகேயியின் மனமாற்றத்திற்குக் கம்பன் விதியின் பிழை என்கிறான். விதி என்பதைத் தவிர்க்க இயலாத விளைவாகக் கம்பன் சுட்டியுள்ளான்.

நாடகப் பண்பும் இராமாயணமும்

கி.பி. 1863 ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டு குஸ்டாவ் பிரேடாக் என்ற புதினப் படைப்பாளி நாடகத்தை ஐந்து பகுதிகளாக அமைந்த முக்கோண வடிவமைப்பை வெளியிட்டார். அவை அறிமுகம், வளர்ச்சி, உச்சம், வீழ்ச்சி, முடிவு ஆகியன ஆகும். இவ்வகையில் கம்பனும் ஆரண்ய காண்டத்தை அறிமுகப்படுத்தி நாடகத்தைத் தொடங்குகிறான். அதன் வளர்ச்சி பால, அயோத்திய காண்டங்களாக அமைகின்றன. நாடகக் கதைக் கோப்பில் உச்சி என்பது இராமன், இராவணனின் போர்க்களக் காட்சி. இராமன் வென்று இராவணன் தோற்பது வீழ்ச்சியாகிறது. அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பது முடிவாகிறது.

எனவே, கம்பன் அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற மையக் கருத்தைக் கொண்டு மிகச் சிறந்த நாடகக் காப்பியத்தை நுட்பமாகத் திட்டமிட்டு, மேலாண்மை செய்து படைத்துள்ளான் என்பதில் ஐயமில்லை.

கம்பன் முத்தமிழ்த்துறை வித்தகன்!

பேராசிரியர் சந்திரிகா ராஜாராம்
சென்னை.

கம்பனில் கவித்துவம் உலகறிந்த உண்மை. ஒரு காட்சியை விவரிக்கும்போது, அவனிடமிருந்து கவித்துவம் நிறைந்த வார்த்தைகள் அருவிபோலத் தங்குதடையின்றிப் பெருகும் பிரவாகமாய்ப் பொழியும். ஜாலங்கள் புரியும். எதுகை, மோனைகள் கைகட்டிச் சேவகம் புரியும். அத்தகைய பாடல்கள் ஆயிரமாயிரம் உண்டு என்றாலும், முத்தமிழில் ஒன்றாக விளங்கும் இயலில், அவன் செலுத்தும் ஆட்சியை ஒரு சில பாடல்களில் கண்டு துய்க்கலாம்.

இராமனுக்கு முடிசூட்டு விழா நடத்த முடிவாகிறது. அவனை, சுமந்திரன் அவனை தேரில் அழைத்து வருகிறான். இராமனின் அழகிய தோற்றத்தில் மனம் பூரிக்கின்றனர் அயோத்தி மக்கள். அங்கிருந்த பெண்களின் நிலை என்ன? கூந்தலும் பூக்களும், உடைகளும் நிலைகுலைய, விரகத்தால் சூடிய பூக்கள் கருக, குளிர்ச்சி நிறைந்த கண்கள் முத்தப் பூக்கள் உதிர்க்க, உண்மையான பூக்களை தேவர்கள் வானிலிருந்து பொழிகின்றனர் என்று அமைந்த இந்த பாடலில் கற்பனையும், கவித்துவமும் கைகோக்கின்றன.

"சரிந்த பூ உள, மழையொரு கலை உறத்தாழ்வ
பரிந்த பூ உள ....
எரிந்த பூ உள ....
விரிந்த பூ உள ...." (அயோத்யா ,பா.1368)

மற்றொரு காட்சி!

முடிசூட்டு விழாவிற்காக நகரமே விழாக்கோலம் பூண்டிருக்க மக்கள் கூட்டம் நெருக்கியடிக்க, செல்லுங்கள். செல்லுங்கள் என்று கூட்டத்தினை நெறிப்படுத்தினாலும் அவர்கள் நகர மனனின்றி இருக்கிறார்கள் என்கிறான் கம்பன்

"வேந்தரே பெரிது என்பாரும் வேதியர் பெரிது என்பாரும்
மாந்தரே பெரிது என்பாரும் மகளிரே பெரிது என்பாரும்
....
யாவரே தெரியக்கண்டார்?" (பா. 1563)

முத்தமிழின் மற்றொரு அங்கம் இசை. கவிதைகள் புனையும் ஆற்றல் நிறைந்த பாவலர் எவருக்குமே இசையறிவும் அதன்

தாக்கமும் இருப்பது இயல்பு. கவியரசன் கம்பன் இதற்கு விதி விலக்கானவனா என்ன?

சில பாடல்களைப் படித்துப் படித்து இன்புறும்போது, நம்மை யவியாமல் அவற்றினுள்ளே இசை ஊடாடிக் கொண்டிருப்பது புரியும்.

"தழை ஒலித்தன வண்டு ஒலித்தனதார் ஒலித்தன பேரி ஆம்
முழவு ஒலித்தன தேர் ஒலித்தன
....
மழை ஒலித்தன போல் கலித்த மனத்தின் முந்துறு வாசியே"

என்ற பாடலில் முடி சூட்டு விழாவில் சகல வாத்யங்களும் ஒலிக்கும் சிறப்பை கூறுகிறான். ஒலியின் புறத்து பாடப்பட்ட பாடல் என்பதாலோ என்னவோ சந்தத்திற்கும் இசைக்கும் லயத்திற்கும் ஏற்றபடி அமைத்திருக்கிறான்.

மற்றொரு காட்சி! சூர்ப்பணகை இராமனின் அழகைக் கேள்வியுற்று, அழகான பெண் உருவம் எடுத்து இராமனைக் கவர வஞ்சகத்துடன் ஒயிலாக வருகிறாள். பாடலைக் கண்ணுறும்போதே நடையில் உள்ள வஞ்சகம் புரிபடுகிறது.

"பஞ்சியொளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க........"

என்று தொடங்கும் புகழ் பெற்ற பாடல் திஸ்ர நடைக்கும் (தகிட தகிட), கண்ட நடைக்கும் (தக தகிட, தக தகிட) பொருந்தும் வண்ணம் இசை தாள நயத்தோடு அமைந்திருக்கிறது.

இது போன்ற பல பாடல்கள் கம்பனின் இசைப்புலமையை பறைசாற்றும்.

அடுத்து, மூன்றாவது பரிமாணமான நாடகம். கம்பன் ஒரு தலை சிறந்த நாடகக் காவலன். ஒரு காட்சியை விவரிக்கும்போது, அதனை முழுமையாக உணரச் செய்து, அதனை நம் கண் முன் விரியச்செய்யும் ஆற்றல் கம்பனுக்கு உண்டு.

இராமன் இளவரசுப் பட்டம் பூணத் தயாராகுகிறான். தாய் கோசலைக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஆனால் விதியின் வலியால் ராமன் ஈரேழு ஆண்டுகள் கானகம் செல்ல வேண்டிய சூழல். அரசனுக்குரிய ஆடைகள், ஆபரணங்களைத் தவிர்த்து எளிய உடையில் தாயைக்காண வருகிறான். எப்படி?

"குழைக்கின்ற கவரியின்றி, கொற்ற வெண் குடையுமின்
இழைக்கின்ற விதி முன் செல்ல தருமம் பின் இரங்கி ஏக"

என்னும் பாடல் படிப்போர் மனதை உருக்கவல்லது.

மற்றுமோர் நாடகத்தன்மை நிறைந்த காட்சி! இராமனுக்கு அரசுரிமை இல்லை. இளவல் பரதனே நாட்டை ஆளவேண்டும் என்ற செய்தி பரதன் அறிகிறான். அவன் மனோ நிலை என்ன?

"எழுந்தனன் ஏங்கினான் இரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்து உயிர்த்தனன்
அழுந்தனன்' அரற்றினன் ...."

பரதனின் நிலையை நேரில் கண்டது போன்ற உணர்ச்சியை உண்டாக்குகின்றது இந்த பாடல்.

இதேபோல், சீதை இராமன் இறந்து விட்டதாக எண்ணித் துடிக்கும் காட்சிப்பாடலிலும் சிறுசிறுசொற்பயன்பாடுகளால், அவளின் துயர நிலையைப் படம் பிடித்துக் காட்டுவான் கம்பன்.

கம்பனின் இராம காவியம் முழுவதும் விரவிக்கிடக்கும் இயல் இசை நாடகத்திறனை வெளிப்படுத்தும் பாடல்களை படித்து அனுபவிக்க ஒரு ஆயுட்காலம் போதாது. எனினும் ஒரு சில பாடல்களை இங்கு சுவைத்தோம். எதுகை மோனை இயல்பாக வந்து விழும் ஒப்பற்ற கவிதைகள் அவரது இயல் திறனையும், இசை நயம் தேவைப்படும் காட்சிகளில் இசையும் லயமும் பொருந்துவது போன்ற பாடல்களும், காட்சிகளின் தேவையறிந்து நாடகபாணியில் கவிதைகளை அமைக்கும் திறனும் ஒரு சேர அமையப் பெற்ற ஆற்றல் நிறைந்த ஒரு கவிதான் நமது கவிச் சக்கிரவர்த்தி கம்பன்.

இத்தகைய மகாகவியை 'முத்தமிழ் வித்தகன்' என்று அழைப்பதில் தமிழ் அறிந்த அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடியதே! தமிழ் உள்ளளவும் கம்பன் வாழ்வான் என்பதில் இரு கருத்துக்கள் இல்லை!

கம்பர் கல்வியில் பெரிய கடல்

முனைவர் நயம்பு அறிவுடைநம்பி
செஞ்சி.

தொடக்கவுரை

உலகப் பெருங்காப்பியங்களுள் இராமாயணம் ஒப்பற்றது. உலகப்பெருங்கவிஞர்களுள் கம்பர் தன்னிகரற்றவர். "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் பூனிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்றும், "கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும் பாரதி பாராட்டுவான். "கல்வியில் பெரியவர் கம்பர்" என்பதும் "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்பதும் நாடவிந்த பழமொழிகள். இங்ஙனம் கல்வியென்பது கம்பருடன் இணைத்தும், சேர்த்தும் சொல்லப்படுவதிலிருந்தே அவரது கல்விப் புலமையும், ஆற்றலும் விளங்கும். கோசலநாடு, அயோத்தி நகர வாழ்மக்களின் கல்வி, பெண்கல்வி, குருகுலக்கல்வி, கல்வியும் கவிதையும், ஆசிரியர் சிறப்பு, கல்வித் தொடர்பான கலைச்சொற்கள், கட்டாயக்கல்வி, மாறும் கல்விக் கலைத்திட்டம் ஆகியன பற்றிக் கம்பராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை விளக்குகிறது. இதன் வாயிலாகக் கம்பரின் விரிவான, பரந்த, ஆழமான கல்விப் பேராற்றல் சுருக்கமாகத் தெளிவாக அறியலாம்.

சான்றோர் பார்வையில் கல்வியில் பெரியவர் கம்பர்

"கம்பனின் காப்பியத்தைக் கம்பசித்திரம், கம்பசூத்திரம் என்றெல்லாம் பலவாறாகப் பண்டுதொட்டே பாராட்டி வருவதற்கு அடிப்படைக் காரணம் அவனுடைய அறிவாற்றலே! அதாவது கல்வி வளமே! "சொல்லின் செல்வன், கேள்விநூல் மறைவலான், ஆற்றலும் கல்வி அமைதியும் அறிவும் என்னும் வேற்றுமை இவனோடில்லை, இங்கு இவன் இசைகள் கூறக் கல்லாத கலையும், வேதக் கடலுமே உலகத்து எங்கும் இல்லாத, செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்" என்றெல்லாம் அனுமனைக் கணித்தறிந்து காட்டுகிறானே, அந்த அருமைப்பாடுகள் அனைத்தும் அப்படியே கம்பனுக்கும் பொருந்தும். ஆம்! கம்பன் கல்லாத, கற்றறியாத, விஞ் ஞான, மெய்ஞ்ஞானக் கலைகள் எவையுமே இல்லை என்பதை அவன் காப்பியத் துணைக்கொண்டே நிரூபித்துவிடலாம்" (கம்பன் கல்வியில்

பெரியவன்.பக்7) என்று கம்பன் அடிப்பொடி அமரர் சா.கணேசன் அவர்கள் கம்பரைப் பாராட்டியுள்ளார்.

"சொல்கண்டார் சொல்லே கண்டார் சொல்லினுள் சொலிக்கும் ஞான
எல்கண்டார் எல்லே கண்டார் இனிமையோடிகலும்
சந்த மல்கண்டார் மல்லே கண்டார் மகிழ்கவித் துறைகையோய
வல்கண்ட புலவர் யாரே இவ்வரகவி முடியக்கண்டார்"

(கம்பராமாணயக் கௌஸ்துபம் : பா : 79)

என்பதற்கிணங்க கம்பரின் கல்வி ஆற்றலை, கல்வி நுட்பங்களை விளக்குவது என்பது இயலாத காரியம்.

"கம்பன் கலைகளை 'உன்னரும் அருமறை என்றும் பன்னருங்கலை' என்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கூறுகின்றான். நினைத்தற்கும் அரிய அருமறை என்பது, தத்துவஞான ஆராய்ச்சி முதலிய அறிவுக்கலைகளைக் குறித்து நிற்பது. எடுத்து உரைப்பதற்கு அருமையாகயுள்ள கலைகள் (பன்னருங்கலைகள்) சிற்பம், சித்திரம், நடனம், சங்கீதம், கவிதை ஆகிய அழகுக்கலைகள்". (கம்ப சித்திரம் : பக் 30-31) என்று பி.ஸ்ரீ. அவர்கள் "ஏகம் முதற்கல்வி (நகரப்:75) என்ற பாடலுக்கு நல்ல விளக்கமளித்துள்ளார். இதிலிருந்து கம்பரின் அறிவின் ஆற்றலும், கலை நுட்பமும் குன்றின் மேலிட்ட விளக்காய்த் திகழ்கின்றன.

கல்வி சிறந்த கவிஞர் பெருமை

அயோத்திநகரின் புகழானது கவிஞர்களாலும், வடநூல் முனிவராலும் பாராட்டப்பெற்ற சிறப்பினையுடையது எனக்கம்பர் பாராட்டியுள்ளார். "செவ்விய மதுரம் சேர்ந்த நல் பொருளின் சீரிய கூரிய தீம்சொல் வவ்விய கவிஞர்" (நகரப்படலம்:1) என்று கவிஞர் இயல்பைக் கூறும்இடத்து உண்மையான கல்விச்சிந்தனை புலப்படுகிறது. கவிஞர் என்போர் எத்தன்மையினராய் இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறார். கவிஞன் பயன்படுத்தும் சொல் செவ்வியதாய் (செம்மையாய்) இருக்க வேண்டும். சொல்லுக்குச் செம்மை வழுவின்மை. குற்றமின்மையாகும். மேலும் உலகவழக்கு, பொருள், ஓசை, ஒண்மை, திண்மை ஆகிய பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையவேண்டியதன்மையே செம்மையாகும். மதுரமாவது சொல்வோர்க்கும், கேட்போர்க்கும் இன்பமுண்டாக்கும் சுவையாகும்.

நற்பொருளாவது அழிவற்ற பயன்தரும் விழுமியபொருளாகும். சிறப்பும், ஒழுங்கும் சீர்மையாகும். கூர்மையாவது நுண்மையாகும். எத்தகைய நுண்ணிய பொருளையும் தெளிவாக உணர்த்தும் திறமாகும். தீம்சொல் என்றது கூறுவோர் நாவும், கேட்போர் செவியும் இனிக்கச்செய்யும் பான்மை. இவையனைத்தும் ஒருங்கேயுடைய செஞ்சொற்களைக் கொண்டு அமைவதே கவிதை. அத்தகு கவிதைகளைப் படைப்போரே கவிஞர். இங்ஙனம் கவிக்கும், கவிஞர்க்கும் கம்பர் இலக்கணம் கூறி அத்தகைய கவிஞரால் பாராட்டப்பட்ட நகரமே அயோத்தி என்றார். இதனை உள்வாங்கிய பாரதியார் "பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்றார். கவிஞன் தன் பாட்டால் நாட்டைத் திருத்தவேண்டும். மேம்படுத்த வேண்டும் கம்பர் குறிப்பிடும் இவ்வரிகள் கற்பிப்போருக்கும், கவிதை படைப்போருக்குமான நற்சிந்தனையாகும்.

கோசல நாட்டு மக்களின் பொழுதுபோக்கு

கோசலநாட்டு மக்கள் எவ்வாறெல்லாம் இனிதே பொழுது போக்கினர் என நாட்டுப்படலத்தில் 15,16,17,18 ஆகிய நான்கு பாடல்களில் பாடியுள்ளார்

> "பருந்தொடு நிழல் சென்றன்ன இயலிசைப் பயன்றுய்ப் பாரும்
> மருந்தினும் இனிய கேள்வி செவியுறு மாந்து வாரும்" (1:2:15)

என்று அவர்களின் பல்வேறு பொழுதுபோக்குகளுள் இதில் இரண்டைக் கூறுகிறார். சிலர் இயலிசைப் பயன்துய்க்கின்றனர். சிலர் நன்கேள்விச்செல்வத்தைக் கேட்டு அனுபவித்தனர். இதனால் மக்கள் தற்காலம் போல வீணான களியாட்டங்களில் பொழுது போக்காமல் கலைகளில் பொழுதுபோக்கினர் என்பதால் அந்நாட்டின் கலை மற்றும் கல்வி வளத்தைக் கம்பர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

பெருமைமிக்க பெண்கல்வி

ஒரு குடும்பத்தில் ஓர் ஆண் கல்வி கற்றால், அது ஒருவர் பெற்ற கல்வி. ஒரு பெண் கல்வி கற்றால் அது குடும்பமே பெற்ற கல்வி என அறிஞர் கூறுவர். ஆகவேதான் பாரதிதாசன் "பெண்கட்குகல்வி வேண்டும் வீட்டைப் பேணுதற்கே! பெண்கட்கு கல்விவேண்டும் நாட்டைப் பேணுதற்கே" என்றார். இவ்வுண்மையை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கம்பர் கூறியிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. கம்பர் நாட்டுப்படலத்தில்,

"பெருந்தடங் கண்பிறை நுதலார்க் கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்" (நாட்டுப்படலம் :36)

என்று கோசல மங்கையர் மாண்பை விளக்குகிறார். கோசலநாட்டுப் பெண்கள் கல்விச்செல்வத்திலும், பொருட்செல்வத்திலும் சிறந்து விளங்கினர். அவர்கள் நாணம், பணிவு, கல்வி முதலிய மகளிர் மாண்புகள் பெற்றவராகையால் தம் இல்லறக் கடமைகளாகிய விருந்தோம்பல், சுற்றத்தார் பேணல் ஆகியவற்றைத் தவறாமல் செய்தனர். கோசலநாட்டு ஆடவர் கல்வியில் சிறந்தவர் என்று பாடாமல், பெண்டிர் கல்வியில் சிறந்து விளங்கினர் என்பதால், குடும்பமும், நாடும் அவர்களால் கல்விபெற்று சிறந்து விளங்கும் என்ற குறிப்பை உணர்ந்து கொள்ளவேண்டும். பெருமைமிக்கப் பெண்கல்வி குறித்த கம்பரின் கல்விச்சிந்தனை இக்காலக் கல்வியாளர்கருத்திற்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளது. மேலும் குடிமக்கள் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கியதை "ஒழுக்கம் குடிக்கு எலாம் (நாட்டுப்படலம் : 38) எனச் சுருங்கச் சொல்லி இருபாலரும் உயிரான ஒழுக்கத்தில் நின்று உயர்ந்தவர் என்பதை உணர்த்தியுள்ளார். கல்வி கேள்விகளால் பண்பட்ட மக்களிடையேதான் ஒழுக்கம் நிலவும் என்பதை இக்காலக் கல்வித்திட்டம் வகுப்போர் கருத்தில் கொள்ளவேண்டிய உண்மையிதுவாகும்.

அயோத்தி நகர மக்களின் கல்விப்பெருமை

"மருந்தினும் இனிய கேள்விசெவியுறு மாந்துவாரும்" (நாட்டுப் :15) என்பதால் கேள்விச்செல்வமும், "கந்தனை அனையவர் கலைதெரி கழகம்" (நாட்டுப் : 48) என்பதால் பலகலைக் கழகங்களும் "வெண்மை இல்லை பல கேள்வி மேவலால்" (நகரப்:53) என்பதால் அறியாமை உடையவர் ஒருவருமிலர் என்பதும் "கூறுபாடலும், குழலின் பாடலும் சாறு வேள்வியும் தலைமயங்குமே" (நகரப்:56) என்பதால் நாட்டில் பல்வகை கலைகளும் நிரம்பி விளங்கின என அறிகிறோம். அந்நகரமக்கள் "மனுவின் நூல்நெறி நடக்கும் செவ்வையின்" (நகரப்:11) என்பதால் மனுநூலை நன்கு கற்று, அந்நன்னெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தது புலப்படும். கற்றலும், கற்றவழி நிற்றலும் உடையோராக அயோத்தி நகர மக்கள் விளங்கினர்.

தசரதன் பண்புப் பெருமை

தசரதனின் பல்வகைப் பண்புப் பெருமைகளைக் கம்பர் கூறுமிடத்து

கல்வியறிவின் நுட்பத்தைத் தவறாமல் பதிவுசெய்துள்ளார். தசரதன் தன் நாட்டு மக்களுக்கு அன்பில் தாயாகவும், கடமையில் சேயாகவும், நோய்க்கு மருந்தாகவும், எவர்க்கும் அறிவாகவும் விளங்கினான். இவ்வரிய பண்புகளைத்

"தாயொக்கும் அன்பில் தவமொக்கும் நலம்பயப்பின்
சேயொக்கும் முன்னின்று ஒருசெல்கதி உய்க்கும்நீரால்
நோயொக்கும் என்னின் மருந்தொக்கும் நுணங்குகேள்வி
ஆயப்புகுங்கால் அறிவாக்கும் எவர்க்கும் அன்னான்" (171)

என்ற பாடல் படித்துப் படித்து உணரத்தக்கதாகும். ஆட்சியாளர்கள் மக்களுக்கு எப்படியெல்லாம் விளங்க வேண்டுமென உணர்த்தும் முத்திரைப்பாடல். இதில் கல்வியறிவின் முக்கியம் இடம்பெற்றிருப்பது சிந்திக்கத்தக்கது. தசரதன் இரப்போர் என்ற கடலை, ஈகையால் கடந்தான். அறிவென்னும் அளப்பரிய பெருங்கடலைப், பல நூல்களையெல்லாம் ஆராய்ந்து ஆராய்ந்து கடந்தான். இதனைக்கம்பர்.

"ஈந்தே கடந்தான் இரப்போர்கடல், எண்இல் நுண்நூல்
ஆய்ந்தே கடந்தான் அறிவு என்னும் அளக்கர் (அரசியற்படலம் :5)

என்றார். இதனால் நாட்டையாளும் பேரரசர்கள் கூட நாளும் நல்ல நூல்களைப் படித்து ஆராய்ந்து அறிவைப் பெருக்கிக் கொண்டனர் என்பது விளங்குகிறது. அரசரே இங்ஙமெனில் அந்நாட்டு அமைச்சர், புலவர், முனிவர்கள் எல்லோரும் கல்வியில் மிக்கிருப்பர் எனச் சொல்லத்தேவையில்லை. திருவள்ளுவரும் கல்வி, தூங்காமை, துணிவுடைமை ஆகிய மூன்றும் அரசர்க்கு வேண்டுவன என்பதை இங்கே இணைத்து சிந்திப்பது நன்று.

விசுவாமித்திரனால் இராமனுக்கு அளவற்ற கல்வி

தான் இயற்றும் வேள்விகாக்க இராமனை அனுப்புமாறு தசரதனிடம் விசுவாமித்திரர் கேட்கிறார். தன் கண்ணான, உயிரான இராமனனை அனுப்ப தசரதன் தயங்கினான். அப்போது குலகுருவான வசிட்டர் தசரதனிடம், "அவருடன் இராமனை அனுப்பு அதனால் இராமன் அளவற்ற மழைவெள்ளம் போல, அளவற்ற கல்வி அவரால் பெறுவான்" எனக் கூறினார்.

"ஐய! நின்மகற்கு அளவு இல் விஞ்சைவந்து
எய்து காலம் இன்று எதிர்ந்தது என்னவே" (1:329)

என்றார். அரசகுமார்களான இராம இலக்குவர் காட்டிலும் மேட்டிலும் நடந்து, காட்டிலே உறங்கி, வழியிடையே விசுவாமித்திரர் கூறிய பல்வகைக் செய்திகளை அறிந்தனர். அரண்மனையில் இருப்பதைவிட, இயற்கையில் அவர்கள் அனுபவித்து உணர்ந்தவை ஏராளம். கல்வியென்பது நான்கு சுவர்களுக்கு அடைபட்டிருப்பதன்று. வெட்டவெளியில், இயற்கைச் சூழலில் பெறும் அனுபவக்கல்வியே வாழ்க்கைக்கு வேண்டுவது என்பது இதனால் விளங்கும்.

கட்டாயம் இல்லாத கட்டாயக்கல்வி

"நிழலின் அருமை வெயிலில் அடிபட்டவர்க்கே தெரியும் என்றபடி, கல்வி, பொருள் இவை இல்லாதவரிருந்தால், அந்தக்கல்வி, செல்வம் என்பவற்றைப் பெற்றவர்களின் அருமைதெரியும். இந்த நகரித்திலோ யாவரும் கல்வி, செல்வங்களைப் பெற்று உயர்ந்திருத்தலால், இவர் முற்றக்கற்ற கல்வியாளர், இவர் செல்வர் என்று உயர்த்தி ஒருவரைச் சொல்ல முடியாதென்க" (பாலகாண்டம்பக் 19) என்று வை.மு.கோ. அவர்கள் தந்த விளக்கம் கற்று உணரத்தக்கது. இக்காலத்தில்கூட இன்னும் முழுமையான எழுத்தறிவு பெற்ற ஒரு நாடு உலகில் ஒன்றுனில்லை. ஆனால் கம்பரோ அயோத்தி நகர மக்கள் அனைவரும் முழுக் கல்விபெற்ற மக்களாய் இருந்தாகப் பாடியுள்ளார். தற்காலத்தில் அனைவரும் கற்க வேண்டுமென்ற கட்டாயக்கல்விக்காக அரசுகள் எவ்வளவோ திட்டங்கள் தீட்டியுள்ளன. ஆனால் அவ்விலக்கை இன்றும் அடைய முடியவில்லை. ஆனால் அயோத்தியில் எல்லோரும் கற்றவர் என்பதால் கட்டாயக்கல்வி அங்கு எவ்விதச் சட்டதிட்டங்களும் இல்லாமலேயே இயல்பாக நடைபெறவிருப்பது வியப்பை அளிக்கிறது.

"ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றின் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே" (நகரப் :75)

என்று அயோத்தியில் விளைந்த கல்விச்சிறப்பைக் கம்பர் பாடியுள்ளார்.

கல்வியாகிய வித்து, முளைத்து மேலெழுந்து, அளவற்ற கேள்விகளாகிய அழகிய வலியகிளைகளை வளரச்செய்து, அரியதவமாகிய இலைகள் நெருங்கித் தழைத்து, அன்பாகிய அரும்பு தோன்றி, தருமமாகிய மலர் மலர்ந்து, இன்பமாகிய

கனி பழுக்கும் இடமாக அயோத்திவிளங்கியது. "அயோத்தி மாநகரம் கல்விகேள்விகட்குத் தான் இருப்பிடமாகி, அந்தக்கல்வி முதலியவற்றைப் படைத்தார் தவம், அன்பு, தருமம், பேரின்பம் இவற்றைப் பெறுவதற்கு இடனாகின்றது" (பாலகாண்டம் :பக் 120) என்று வை.மு.கோ அவர்கள் விளக்கமளித்துள்ளார். எனவே தவம், அன்பு, தருமம், பேரின்பம் இவற்றிற்குக் கல்வியே அடிப்படை என்பதைக் கம்பர் உணர்த்தியுள்ளார். மனிதனை விலங்கினின்று வேறுபடுத்தி, மாமனிதனாக உயரச் செய்வது கல்வியே என்ற அருமையான கல்விச் சிந்தனையைக் கம்பர் பாடியுள்ளார். இதனால் அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவிலார் என்னுடையரேனும் ஒன்றும் இலர் என்பதை உணர்த்தியுள்ளார். கல்வியை மரமாக உருவகப் படுத்திப் பாடிய கம்பன் உத்தி புதுமையானது. "கல்வியை விருட்ச உருவகமாகப் பயன்படுத்தியிருப்பது இந்தியச் சிந்தனை" (கம்பனும் மில்டனும் ஒரு புதிய பார்வை. பக். 106) என்று கம்பரின் இவ்வுத்தியை எஸ்.இராமகிருஷ்ணன் அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

பழங்கால ஆசிரியரின் நிகரற்றச் சிறப்பு

பிள்ளைகளின் பெற்றோர் பல இனத்தவர். இடத்தால் வேறுபட்டவர். பழக்கவழக்கங்களில் மாறுபட்டவர். மரபுநிலையில் குறை, நிறை உடையவர். அவர்களிடம் இவ்வளவு வேற்றுமைகள் இருந்தாலும் ஆசிரியரால் சமநிலையும், உயர்வும் பெறுகின்றனர். ஆசிரியரின் ஒப்பற்ற தனிச்சிறப்பைக் கம்பர் நமக்கு உணர்த்தியுள்ளார். விசுவாமித்திரர் தன் வேள்வி முடிந்தபின், இராம இலக்குவரை மிதிலைக்கு அழைத்துச் செல்கிறார். சனகமன்னன் இவர்கள் யாரெனக் கேட்டதற்கு தசரதன் மக்களென்றும், வில் நாணேற்றவல்லவரென்றும் கூறினார். பல மனைவியர் கொண்ட தசரதன் மக்களா என்ற எண்ணம் சனகன் உள்ளத்தில் எழக் கூடாதென்று

> "திறையோடும் அரசு இறைஞ்சும் செறிகழல் கால்தசர தன் ஆம்
> பொறையோடும் தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரே காண்
> உறையோடும் நெடுவேலாய்! உபநயன விதிமுடித்து
> மறைஓது வித்து இவரை வளர்த்தவனும் வசிட்டன் காண்"
>
> (பால : 660)

என்று தெளிவுபடுத்தினான். அதாவது இவர்கள் பெயரளவில் தசரதன் பிள்ளைகள். மற்றும் இவர்களுக்குக் கல்வியளித்து, ஒழுகத்துடன்

வாழப் பயிற்றுவித்தவன் அருந்ததி என்ற ஒரே மனைவியுடன் வாழ்ந்த வசிட்டன் என்றார். இராமன் கல்வி கேள்விகளில் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கியதும், "இப்பிறவியில் வேறொரு மாதரைச் சிந்தையாலும் தொடேன் என்ற ஏகதார மனத்துடன் வாழ்ந்ததும் அவனது ஆசிரியராகிய வசிட்டரால்தான் என்ற உன்னதக்கருத்து சிந்திக்கத்தக்கது. மாணவர்கள் எத்தகைய மோசமான குடும்பத்திலிருந்து வந்திருந்தாலும், நல்லாசிரியன் வாழ்க்கையால், பயிற்சியால் நலமுடன் திகழ்வர் என்ற உயரிய கல்விச் சிந்தனை இக்காலக் கல்வி உலகம் எண்ணி நடக்க வேண்டும். இதனால் ஓர் ஆசிரியனின் நிகரற்ற சிறப்பு கம்பரால் உலகோர்க்கும் எடுத்துக் காட்டப்பெற்றுள்ளது.

கம்பரின் பல்துறை அறிவாற்றல்

"ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட கோணினும் உளன்" (இரணியன்:124) என்ற பிரகலாதன் கூற்றுவாயிலாக் கம்பரின் அறிவியல் கல்வி நுட்பம் கற்போரை வியக்கவைக்கிறது. "தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி பல்பெரும் சமயம் சொல்லினும் பொருளும்போல் பரந்து அன்றே" (ஆற்றுப்:19) என்பதால் இறைவன் ஒருவனே என்ற சமயக்கல்வி நுட்பம் விளங்குகிறது. ஆடல் (4535) நடனம் (4573) என்பதால் ஆடற்கலை பற்றியும் அமுத இசை (7631) ஏழிசை (1037) என்பதால் இசைக்கலை பற்றியும் உயிர்பெய் ஓவியம் (3088) சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை (5088) என்பதால் ஓவியக்கலைப்பற்றியும் சிற்பம் (7298) சிற்பமும் மயன் மனம் வருந்திச் செய்தது (4533) என்பதால் சிற்பக்கலை பற்றியும் இன்னும் இவைபோன்ற கலைக்கல்வி அறிந்த, விளக்கும் கல்வியாளராகக் கம்பர் விளங்கினார்.

அடிக்கடி மாற்றப்படும் கல்விக் கலைப்பாடத்திட்டம்

ஆங்கிலேயர்கள் காலத்தில் மெக்காலே கல்வித்திட்டம் நம் நாட்டில் கொண்டு வரப்பெற்றது. நாடு விடுதலை பெற்றபின், கோத்தாரிக் கல்விக் குழு முதலிய பலகுழுக்கள் பரிந்துரைத்த கல்வித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பெற்றன. நாட்டில் ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்ட போதெல்லாம் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. இதற்கு முன்னோடியாக இரணியன் விளங்கினான் என்பார் கம்பர். பள்ளியில் மாணவனைச் சேர்க்கும்போது "அரிநமோத்சிந்தம்" என்று இறைவன் நாமம் சொல்லி பாடம் தொடங்குவர். இரணியன் அந்தக் கலைத்திட்டத்தை மாற்றி, "நமோ நாராயணா" என்பதை மாற்றி, "நமோ

இரணிய நமக" எனச் சொல்லச் செய்தான். பிரகலாதன் மறுத்தான். கூலிக்கு மாரடிக்கும் அக்கால ஆசிரியரும் வற்புறுத்தினர். அறிஞரின் அறிஞனான (6207) பிரகலாதன் தன் கொள்கையில் உறுதியாய் நின்று, இன்னல்களைப் பொறுத்து சாகாவரம் பெற்று சிரஞ்சீவியாக வாழ்கிறான். இரணியன் வதைப்படலம் வாயிலாக இறைபக்தி, பிரபக்தி ஆகியவற்றை கம்பர் உணர்த்தியுள்ளார். கற்றதன் பயனை இப்படலம் வாயிலாக கம்பர் உணர்த்தியுள்ளார். கம்பராமாயணம் மறைந்தாலும், இரணியன் வதைப்படலம் ஒன்றே கம்பன் கல்விப் புகழ்பாட, பக்திநெறிபரப்ப போதுமானது என்று அறிஞர் பலர் கூறியுள்ளதை இங்கே சிந்திக்க வேண்டும்.

#&("

தமிழகப் புலவர்களுள் கம்பருடன் கல்வி என்பதைச் சேர்த்தே புலவர் பலர் புகழ்ந்துரைத்துள்ளனர் "கற்றார் கவியில் பெரிதாம் கம்பநாடன் உற்றாங்குரைத்தான் உரையாதன ஓதுகிற்பாம்" (இரகுவம்சப்பாடல்) என்று அரசகேசரி பாராட்டுவார். மேலும் "கம்பனை மறந்தால்தமிழேது கவிதை என்பது கமழாது" எனப் புகழ்வார் நாமக்கல்கவிஞர். "கல்வியில் பெரியவர் கம்பர் என்பதற்குக் கல்வியின் பயனைப் பெற்றவர் என்று கருத்துக்கொள்வதே பொருத்தமாகும்" (கம்பர் விருந்து:ப:18) என்பார் ஔவை. நடராசன் அவர்கள். கற்றதன் பயனென்ன என்ற வினாவிற்குத் திருவள்ளுவர் தூய அறிவு வடிவாய் விளங்கும் இறைவனை வணங்குவதாகும் (குறள்:2) என்பார். இதனை உணர்ந்த கம்பர் "பொய்யில் தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே!" (தற்.சி.பாயிரம் :பா.5) என்று பாடியுள்ளார். தெய்வக்கவியான வான்மீகி பாடிய இராமசரிதையின் மாட்சியை விளக்கவே யானும் இராமகாதை பாடினேன் என்றார். ஆகவே கம்பராமாயணத்தில் கல்வி தொடர்பான ஏராளமான சிந்தனைகள் இடம்பெற்றிருந்தாலும், கல்வியின் பயன் இறைவனை வணங்கி வாழ்த்துவதே என்பதை அடிப்படையாகக் கொண்டே இராமகாதை பாடினார் எனலாம். பக்தி, பிரபக்தி ஆகியன இராமகாதையில் இயல்பாகவே அமைந்துள்ளன.

கம்பன் - ஓர் ஞானசாகரம்

திருமிகு. தேன்மொழி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருப்பத்தூர்.

$!%'''

"கல்விச் சிறந்த தமிழ்நாடு - புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"
வள்ளுவன் தன்னை உலகினுக்கேத்தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாரதி கம்பனை முன்னிலைப்படுத்தி பாடியிருப்பது தமிழ் அறிஞர் உலகம் அறிந்ததே.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன் போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை - உண்மை
வெறும் புகழ்ச்சி இல்லை"

என்று மேலும் கம்பனை பாரதி புகழ்கின்றார் காரணம் என்ன? அதற்கான விடையேதான் இவ்வாய்வுக்கட்டுரை.

தமிழுக்குக் 'கதி'யாவர் இருவர் ஒருவர் கம்பர்: மற்றொருவர் திருவள்ளுவர். இலக்கியம் படைப்போருக்கு என்ன நோக்கம்? தமது படைப்பைப் படித்து பொழுதுபோக்கவா? இல்லை படைப்பு புலப்படுத்தும் அறநெறிசார்ந்த கருத்துக்களை படிப்போர் உணர்ந்து வாழ்வில் பின்பற்றி வாழ்வின் நோக்கத்தை அடைவதற்கா? ஆம். இவ்விரு வினாவிற்கும் 'ஆம்' என பதிலளித்தால் அதுதான் இலக்கியத்தின் அன்று, அன்று படைப்பாளியின் நோக்கம்.

அப்படிப்பட்ட நோக்கில் இரண்டாவதாகக் கூறப்பட்ட 'அறிவுறுத்தல்' என அறம்சார்ந்த நோக்கத்தையே, அதாவது 'அரிஸ்டாட்டில்' என்ற கிரேக்க மாமேதை பகர்வதுபோல் 'கெதார்சிஸ்' "மனமாசு நீங்கப்பெறுதல்" என்பது படைப்பார் - இலக்கியத்தின் நோக்கமாகும்.

கம்பன் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள இராமன் - நடையில் நின்றுயர் நாயகன்" "ஒருசொல்" "ஒருஇல்", "ஒருவில்" என வாழ்ந்து காட்டியவன்.

இராவணன் - எதிர்நிலைத் தலைவன். பிறன்மனை நோக்கியதால் பேரழிவு கண்டவன். இலக்குவன் இணைபிரியா சகோதரன் அதற்குமேல் "அடிமைப்போல்" இராமனைப்பின் தொடர்ந்து சென்றவன். கும்பகர்ணன் - உயர்ந்து நட்பின் இலக்கணம் வீடணன்- அறச்சிந்தனையுடையவன் இராவணனின் தவறுகளைச் சுட்டிக்காட்டியவன். சுக்ரிவன் - வானரப்படைத்தலைவன் இராமபிரான் உதவியோடு வாலியை எதிர்த்தவன். இப்படி பலபாத்திரங்களை சொல்லிக்கொண்டே போகலாம். ஏன் இத்தகைய கதை மாந்தர்கள் தேவை?.

சீதை, திரிசடை, சபரி, சூர்ப்பணகை, கைகேயி, கோசலை, சுமித்திரை, தாரை, மண்டோதாரி எனப் பெண் பாத்திரங்களும் பல உள்ளனவே ஏன்? கம்பனுக்கு ஒரு மாபெரும் நோக்கம் உண்டு. தம்முடைய புலமையைப் பறைசாற்றிக் கொள்ளவா? நிச்சயம் இல்லை.

நம்போன்றோர் உலகியலில் வாழ்வு நடத்தும் போது பல்வேறு சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் முடிவெடுக்க இயலாமல் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்களே! அப்படிப்பட்டோர் இக்காப்பியம் பயின்றால், நல்லதொரு தீர்க்கமான முறையில் முடிவெடுத்து அவரவர்தம் வாழ்வை வெற்றிகரமாக நடத்த முடியும்.

கம்பரை ஓர் உளவியல் அறிஞர் என்பதா?
அறிவியல் ஆர்வலர் என்பதா?
மொழிநூல் வித்தகர் என்பதா?
கற்பனைக் களஞ்சியம் என்பதா?
பக்திநெறி புகட்டும் பாவலன் என்பதா?
மொழிபெயர்ப்பாளன் என்பதா?
'நல்லாசிரியன்' என்பதா?
வருமுன் உரைக்கும் மதியூகி என்பதா?
வாடியோர்க்கு வழிகாட்டுபவன் என்பதா?

எப்படியோ? எல்லாம் அறிந்த எல்லாம் உணர்ந்த 'ஞானி' என்பதா? ஆம் அவன் ஓர் 'ஞான சாகரம்'

"கம்பன் ஓர் பெருங்கடல்" தான் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. முனைவர் அறிவொளி அவர்கள் "கம்பனில் கலந்த நதிகள்" என்று ஒரு நூல் இயற்றி இருக்கிறார். நதிகள் கடலிலேதான் சங்கமம் ஆகும். ஆகவே கம்பன் ஒரு கடல் தான் ஐயமே இல்லை: பெருங்கடல்தான்.

"கடவுள் அழகு, படைப்பு அழகு, அதைச்சுவைக்கும் மன அனுபவமும் அழகு எனவே எல்லாம் அழகில் செறிந்துள்ளன. இதனால் இராமனை மிகவும் பேரழகனாகக் காட்டியுள்ளார் கம்பர். "மையோ, மரகதமோ? மழைமுகிலோ மறிகடலோ? (1926) என்றப்பாடல் இவன் சுட்டத்தக்கது.

"அன்பு சான்று என உரைத்தனர் ஐயஎன் ஆக்கை என்பு தோன்றல் உருகின எனின் பிரிது எவனோ?" (386) என்ற பாடலில், இராமபிரானைப் பார்த்ததும் காரணமில்லாமல் தனக்கு அன்பு தோன்றி தன் உடம்பில் எறும்பும் இல்லாததுபோல் குழைந்துவிட்டது என்று சுக்ரிவனிடம் அனுமன் கூறுகிறான்.

"பிரம்மனை நோக்கித் தவம் முயன்றபோது கடவுள் மேல் அன்பும், நீதியில் பற்றும், பிற உயிர்களிடம் நேசமும், வேதியர்கள் அருளையும் வீடணன் பெற்றான். அதுபோன்ற அனுபவம் இப்போதும் வீடணனுக்கு வந்ததாம்".

ஏன்? இதற்குமுன்பு இராமனை பார்த்ததில்லை: அவன் பெருமையை யாரும் சொல்லிக்கேட்டதில்லை, ஆனாலும் இராமன் மேல் அன்பு தோன்றும் காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை என எலும்பெல்லாம் குளிர்கிறது என நெஞ்சம் உருகின்றது. அப்படியானால் இப்பிறவியை நீக்கும் பகைவனாகிய கடவுள் இவன்தானோ? என்று வியக்கிறானே வீடணன்?

"முன்புறக் கண்டிலேன் கேள்வி முன்பிலேன்
அன்புறக்காரணம் அறிய கிற்றிலேன்
என்புறக்குளிரும் நெஞ்சு உருகுமேல், அவன்
புன்புறப் பிறவியின் பகைஞன் போதுமால்" (6384)

என்பது இப்பாடல்பாரதி கூறியபடி

"எல்லை ஒன்றின்மை எனும் பொருளதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி"

என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. இதுபோல் பலநதிகள் கம்பனில் கலப்பதை யாவராலும் உணரமுடியும்.

"பாவிகம் என்பத காப்பியப்பண்பே".

இராமயணத்தில் "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என சொல்லாட்சியும்,

"வெல்லுமோ தீவினை, அறத்தை மெய்ம்மையால்?"
"தீமை நன்மையைத் தீர்த்தல் ஒல்லாது" (5899).

என்றும் இக்கருத்தையே வேறு சொற்களாலும் கம்பன் காப்பியம் முழுவதும் கூறுகிறான்.

ஒவ்வொரு படைப்பிலும் படைப்பாளன் தன்னை ஏதாவது ஒரு பாத்திரத்தின் வாயிலாக தன்னை வெளிப்படுத்துவது இயல்பு. அவ்வழியில் "அனுமன்" என்ற "சொல்லின் செல்வன்" வாயிலாக நாம் கம்பரின் பேரறிவை பெரும் அடக்கத்தைக் காண்கிறோம்.

அனுமனின் தூதுரையில் அனுமன் செய்ய நினைத்தவை. மூன்று வி'யங்கள்.

1. இராமனின் வீரம் பற்றிய அச்சத்தை இராவணனிடம் உருவாக்குவது.
2. இராவணனைப் போருக்கு இழுப்பது
3. இராவணன் அணியில் அறம்சார்ந்தவர் இருப்பின் அவரைப் பிரிப்பது.

இம்மூன்றும் அனுமன் தூதுரையில் நிகழ்கின்றன. இராமனின் தெய்வத்தன்மையை அனுமன் உரைத்த பின்பே வீடணன் அற வலிமை பெறுக்கிறான்.

"சேர்ந்தாரைப்பிரித்தல்" எனும் சொல்வன்மையில் முதல் நோக்கம் நிறைவுறுகிறது. (இராவணன்-வீடணன்)

"பிரிந்தானால் சேர்த்தல்" (இராமன்-சீதை) எனும் அடுத்த நோக்கம் அனுமனின் மற்றொரு உரையால் நிகழ்கிறது.

வீடணனை ஏற்றுக்கொள்ளலாமா? என்பதில் சிக்கல் இராமன் பலரோடு கலந்தாலோசிக்கின்றான். நீலன் மந்திரக்கிழவன் வேண்டாம் என்கின்றான்.

அனுமனிடம் இராமன் கேட்கின்றான். பொறுமை முன்பு கூறினோர் கூற்றை ஆமோதிப்பதுபோல் கூறி, தன் கருத்தை மெல்ல பதிவு செய்கிறான் அனுமன்.

இலங்கையில் அசோகவனத்தில் சீதைக்கு உற்றதோழியாக வீடணன் மகன் திரிசடை தான் இருப்பின் மாது இல்லை: அன்றியும் வீடணன் மாளிகையில் மது இல்லை, மாது இல்லை வேறு கெட்ட

நிகழ்வுகள் இல்லை. எனவே வீடணை ஐயுறக்கூடாது என்கிறான் அனுமன். வீடணனை ஏற்று உரை செய்த அனுமன் வார்த்தைகள் தன் மனக்கருத்தோடு பொருந்த, அமிழ்தம் உண்டாற்போல் இராமன் மகிழ்கிறான்.

"பேரறிவாள" என வாழ்த்தி, அனுமனிடம், நின்கருத்து நன்று நன்று எனப் பாராட்டி உரைக்கிறான் இராமன் "மாருதி கூறிய வார்த்தை செவிமடுத்து, அமிழ்தின் மாந்தி பேர் அறிவாள! நன்று நன்று எனப் பிறரை நோக்கி, சீரிது மேல் இம் மாற்றம் தெளிவுறத்தேர்மின் என்னா ஆரியன் உரைப்பதானான் அனைவரும் அதனைக்கேட்டார்".

இராமயணப்பெருங்கதையில் கம்பரால் விளக்கப்பெறுவது முடியாட்சி அரசியலாய் இருந்தாலும் தன்னுடைய கைவண்ணத்தால் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய அறவழி அரசியலை, வலியுறுத்தி விளக்குவது கம்பரின் தனிச்சிறப்பாகும்.

தம்காவியத்தின் அயோத்தி அரசியல் பற்றியும், சீதையை வளர்த்த சனகனின் மிதிலைப்பற்றியும், குரக்கினப் பேரரசாகிய கிட்கிந்தை பற்றியும், அரக்கர் இன வல்லரசாகிய இலங்கை பற்றியும் குறித்துள்ளார்.

குறிப்பாக அயோத்தியின் அரசியல் நிலை வளர்பிறை போல வளர்ந்து செழித்து மற்றவர்க்கெல்லாம் வழிபட்டும் முறையில் சிறப்புற்று திகழ்கிறது. இதனை இராமனை நோக்கி வாலி வசைபாடுகின்ற நேரத்தில் கூட,

"கோவில் தருமம் உங்கள் குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்
பூவியத்து எழுத வொண்ணா உருவத்தால், உடைமை யன்றோ?"

என அயோத்தி அரசியலின் பெருமையைப் புலப்படுத்துகின்றார் கம்பர். அறவழி அரசியலுக்கு ஆக்கம் கொடுப்பவனாகத் தயரதன் விளங்குகின்றான். ஆனால் இராவணன், "முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய பெருந்தவமும் உடையவன் ஆயினும், அவனுடைய அரசியல் நெறி அறத்தின் வழி அமையாத காரணத்தினால் தேய்பிறைபோல் சிதைந்து ஒழிந்ததைக் கம்பர் காட்டுகிறார்.

"வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்து வள்ளல் தூயவன்ஞ்" என்று தசரதனின் அரசியல் மாண்மை வாலியின் வாய்கொண்டு போற்றுகிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமாண்டும் பள்ளம்" என்று பரதனைக் குறிப்பிட்ட கம்பர், நீதியாகிய பலர் ஆறுகள் வந்து தேங்கிய பெரிய பள்ளமாகப் பரதன் விளங்கினான் என்றார் கம்பர் ஆனால் இவண், "தள்ளரிய பெரும்பக்தித் தனியாறு புகமண்டும் பள்ளம்" என்று கம்பரின் காவியத்தைக் குறித்தல் சாலவும் பொருத்தமானது என முனைவர் ஆ இராமபத்தரா அவர்கள் தமது "கம்பனின் சிந்தனைக் கருவூலம்" என்ற நாவில் குறிப்பிடுவது சாலப்பொருந்தும்

குழந்தைகளுக்குக் கம்பர்

திருமிகு. கி.குருமூர்த்தி (மாயூரன்)
சென்னை.

நாம் சாலை வழியாக வெளியூர்ப் பயணம் செய்கையில் இரு மருங்கிலும் நன்கு வளர்ந்த மரங்களைப் பார்க்கிறோம். அவைகளுக்கு யாரேனும் நீர் பாய்ச்சுகிறார்களா? உரம் இடுகிறார்களா? அல்லது வேலி போட்டுத் தான் பாதுகாக்கிறார்களா? நன்கு வளர்ந்த மரங்களுக்கு வேலியோ, உரமோ தேவைப்படுவதில்லை. நாற்றுகளுக்குத் தான் பாதுகாப்பு அவசியம். இளஞ்செடி கொடிகளை வேலி போட்டு, நீர் ஊற்றி, எரு இட்டு கவனமாகப் பாதுகாக்காவிட்டால் அவற்றை ஆடு, மாடு மேய்ந்து விடும். நீரில்லாமல் வாடி, வதங்கி அழிந்து விடும். அதைப்போலவே நாட்டின் நாளைய தலைமுறையாக அமைய இருக்கும் இன்றையச் சிறுவர்களைக் கவனமாக வளர்த்து நல்ல முறையில் பாதுகாக்காவிட்டால் அவர்கள் திசைமாறிப் போவார்கள். 'கண் கெட்ட பிறகு கதிரவன் வழிபாடு' என்பார்களே, அதுபோல் பிறகு வருந்திப் பயனில்லை.

தடுமாறக்கூடிய வயது இளம் வயது. பயிரை மேய்ந்துவிடும் ஆடு, மாடுகள்போல இளம் உள்ளங்களை மயக்கி, ஏமாற்றித் திசை திருப்பத் தீய சக்திகள் பல நாட்டில் உள்ளன. சாதி வெறியர்கள், மத வெறியவர்கள், தீவிரவாதிகள் போன்ற பிரிவினையாளர்கள் ஒரு பக்கம் என்றால் திரைப்படம், தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் இன்னொரு பக்கம்! அறிவியல் வளர்ச்சியின் அடையாளங்களான தொலைக்காட்சி, கணினி போன்றவை வியத்தகு பயன் தரக்கூடியவை என்றாலும், உணர்ச்சியைத் தூண்டும் கேளிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. மடிக்கணினியில் பையன் பாடம் படிக்கிறான் என்று நினைத்தால் அவன் 'முக புத்தகத்தில்' விளையாடிக் கொண்டிருக்கிறான். சிறுவர்களின் உள்ளம் விரிந்து செம்மைப்படும் வகையில் நற்குணங்களும், நற்பண்புகளும் இயல்பாக அவர்கள் உள்ளத்தில் பதியும் நோக்கத்தில் எழுந்ததே சிறுவர் இலக்கியம். கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம் எனப் பல துறைகளில் சிறுவர் இலக்கியம் இன்று செழித்து வளர்கிறது. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா, 'கண்ணன்' ஆசிரியர் ஆர்வி, முனைவர் பூவண்ணன் போன்ற பலர் சிறுவர் இலக்கியத்தைச் சிறப்புற வளர்த்தார்கள் என்றால் அவர்களுக்கு முன்னோடியாகப் பாரதி, கவிமணி, மயிலை சிவமுத்து போன்றவர்கள் திகழ்ந்தார்கள்.

குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தவை இரண்டு. முதலாவது விளையாட்டு, இரண்டாவது கதை கேட்பது! 'பாப்பா பாட்டு' பாடிய பாரதி, முதலில் குழந்தைகளை, "ஓடி விளையாடு" என்றார். "கூடி விளையாடு" என்றவர், கூடவே "ஒரு குழந்தையை வையாதே" என்றார். குறும்பு, சேட்டைகள் குழந்தைகளோடு கூடப் பிறந்தவை. மற்றவர்களைக் கேலி செய்வதும், துன்புறுத்திப் பார்ப்பதும் அவர்களுக்கு கேளிக்கை. 'விளையாட்டுக்காகக்கூட, பிறரைத் துன்புறுத்தக்கூடாது அது வினையாகி விடும் என்று இராமன் வாயிலாக எச்சரிக்கிறார் கம்பர்'.

"சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்யன செயல்மற்று இந்
நெறி இகழ்ந்து யான் ஓர் தீமை இழைத்தலால், உணர்ச்சி நீண்டு
குறியது ஆம்மேனி ஆய கூனியால் குவவுத் தோளாய்
வெறியென எய்தி, தொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்"
(கிட்கிந்தா)

"கூனியின் உருவத்தைக் கண்டு விளையாட்டாக அவள் மீது உண்டிவில் கொண்டு சிறு உருண்டையை வீசிவிட்டேன் அதன் வினைப் பயனை இன்று அனுபவிக்கிறேன்" என வனத்தில் சுக்கிரீவனிடம் இராமன் வேதனையை வெளிப்படுத்துவதாகக் கம்பர் கூறுகிறார். கூனியை இகழ்ந்து விளையாட்டாக உண்டை வில் வீசியது எத்தகைய துன்பத்திற்குக் காரணமாகி விட்டது! "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" (குறள்-667) என்பதை அழகாக எடுத்து இயம்புகிறார் கம்பர்.

"காக்கை, குருவி எங்கள் சாதி" என்று பாடிய பாரதி, "வண்டி இழுக்கும் நல்ல குதிரை, நெல்லு வயலில் உழுதுவரும் மாடு, அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு, இவை ஆதரிக்க வேணும்படி பாப்பா" என்று கூறி, "உயிர்களிடத்தில் அன்பு வேணும்" (பாப்பா பாட்டு - 16) என முடிக்கிறார். சடாயு ஒரு கழுகரசன். சடாயு உயிர் நீத்த போது இராமன் அதற்கு ஈமச் சடங்கு செய்கிறான்.

"ஏந்தினான் இருகை தன்னால் ஏற்றினான் ஈமம் தன் மேல்
சாந்தோடு மலரும் நீரும் சொரிந்தான் தலையில் சாரல்

கலந்து எரிகால மூட்டி கடன் முறை கடவா வண்ணம்
நேர்ந்தனன் நிரம்பும் நல் நூல் மந்திர நெறியில் வல்லான்"
(ஆரண்ய. சடாயு-135)

"சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" (பாப்பாப் பாட்டு)

என்பார் பாரதி. பறவை இனத்தைச் சேர்ந்த சடாயுவுக்கு ஈமக் கடன் செய்த இராமன் வேட்டுவக்குலத்துக் குகனையும், குரங்கினத் தலைவனான சுக்கிரீவனையும் அரக்கர் குலத்து வீடணனையும் தன் உடன் பிறப்பாக ஏற்றுக்கொள்கிறான்.

"என் உயிர் அனையாய் இளவல் உன் இளையான் இந் நனீர் கடல் நிலமெல்லாம் உன்னுடையது நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன்" "அன்பு உளது இனி நாம் ஓர் ஐவர்கள் ஆனோம்" "உன் கிளை எனது, என் காதல் சுற்றம் நின் சுற்றம், நீயே இன்னு-யிர்த் துணைவன் என்றான்" (அயோத்தி-கங்கை 68) (அயோத்தி-கங்கை69) (கிட்கிந்தா-நட்பு27)

"குகனொடும் ஐவரானோம் முன்பு
குன்று சூழ்வான் மகனொடும் அறுவர் ஆனோம்
என்னுழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனோம்" (6507)

என்று குகன், சுக்கிரீவன், வீடணனிடம் இராமன் கூறுவது நட்பு என்பது சாதி, இனத்தைக் கடந்தது என விளக்கவில்லையா? "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (972) என்பார் வள்ளுவர். பிறப்பினால் அனைவரும் சமம் என்ற கருத்தை கம்பர் அழகாக,

"தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள்ள
மக்களும் விலங்கே - மனுவின் நெறி
புக்கவேல் அவ்விலங்கு புத்தேளிரே" (கிட்-வாலி 112)

என்ற வரிகளால் விளக்குகிறார்.

"தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை" என்பது நீதிவாக்கு.

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீ போய்
தாழ் இருக்கும் சடைகள் தாங்கி அருந்தவம் மேற்கொண்டு
பூழிவெங்கானம் நண்ணி புண்ணியத் துறைகள் ஆடி
ஏழ் இரண்டு ஆண்டினவா என்று இயம்பினான் அரசன்"

என, பதினான்கு ஆண்டு வனவாசம் செய்துவர அரசன் ஆனையிட்டிருப்பதாகக் கைகேயி இராமனிடம் கூறிய போது,

"மன்னவன் பணி அன்றாகிலும் நும்பணி மறுப்பெனோ என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ"

என்று இராமன் அளித்த பதில் தாய் சொல் எதுவாக இருந்தாலும் அதற்குப் பிள்ளைகள் கீழ்படிதல் வேண்டும் என்ற கம்பரின் கருத்தைத் தெளிவாக்குகிறது.

சகோதரர்கள் ஒற்றுமையாக, ஒருவரோடு ஒருவர் பாசத்தோடு இருக்க வேண்டும் என்பதற்கு இராம, இலக்குமண, பரத, சத்ருக்கணன் உறவு ஓர் எடுத்துக்காட்டு. இராமனோடு இலக்குவன் வனத்திற்குச் சென்றான் என்றால், பரதன் இராமனின் பாதுகங்களுக்கு முடிசூட்டினான். வாலியின் மனைவி தாரை, சுக்கிரீவன் இராமனின் துணையோடு போரிட வந்துள்ளான் என்று எச்சரித்தபோது வாலி,

"தம்பியர் அல்லது தனக்கு வேறு உயிர்
இம்பரில் இலது என எண்ணி ஏய்ந்தவள்"

எனத் தம்பியரைத் தனது உயிராகக் கருதும் இராமன் என் தம்பியும் நானும் செய்யும் போரில் இடையில் வருவானா?" என்று கேட்கிறான். சகோதரர்கள் நால்வரும் தங்கள் உடன் பிறப்பின் உயிரைத் தங்களுடையதை விட மேலாகக் கருதினர் என்பது வெள்ளிடை மலை.

"பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே, பகைவனுக்கருள்வாய்"

என்று பாடிய பாரதி, "பகை நடுவினில் அன்புருவான நம் பரமன் வாழ்கின்றான்" என்கிறார். முதற்போரில் மகுடம் இழந்து நாணி நின்ற இராவணனை இராமன், 'இன்று போய், போர்க்கு நாளை வா' என நல்கினான்! பகைவனிடமும் கருணை காட்ட வேண்டும் என்ற உயர்ந்த பண்பைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார் கம்பர்.

இளைஞர்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டிய இன்னொரு உயர்ந்த பண்பு செய் நன்றி அறிதல்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள்-110)

என்பார் வள்ளுவர்.

அயோத்திக்குத் திரும்பிய இராமனுக்கு முறைப்படி முடிசூட்டு விழா நடைபெறுகிறது. தனக்குத் துணையாக இருந்த சுக்கிரீவன், அங்கதன்,வீடணன் போன்றோர்க்கு இராமன் பரிசுகள் அளிக்கிறான். அனுமன் ஆற்றிய பணிக்கு என்ன பரிசு ஈடாகும்? கலைமகள் ஈந்த முத்தாரத்தை சீதை அனுமனிடம் வழங்குகிறாள்.

"மாருதி தன்னை ஐயன் மகிழ்ந்து இனிது நோக்கி
ஆர் உதவிடுதற்கு ஒத்தார் நீ அலால்? அன்று செய்த
போர் உதவிக்கு யான் செய் செயல் பிறிது இல்லை பைம்பூண்
போர் உதவிய திண்தோளாய் பொருந்துறப் புல்லுக என்றாள்"

(விடை கொடுத்த - 20)

தன் உயிரினும் மேலான அனுமனை நன்றிப் பெருக்கால் தழுவி அணைத்துக்கொள்கிறான் இராமன். செய்நன்றி மறக்கக்கூடாது என்பதில் தீவிரமான கம்பர் தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைத் தமது காவியத்தில் ஆங்காங்கே பெருமைப்படுத்துகிறார். அவை அனைத்திற்கும் முத்தாக,

"அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிக்க இருவரும் கவரி வீச
வசிட்டன் புனைந்தான் மௌலி" (திருமுடி-38)

என்று பாடும்போது அந்தமௌலியை வெண்ணெயூர் வாழ் சடையப்ப வள்ளலின் முன்னோர்கள் எடுத்துக் கொடுத்ததாகச் சொல்லி சடையப்ப வள்ளலை உயர்த்தி விடுகிறார்.'

அனுமன் இல்லாத இராம காவியமா? கண்ணன் கதைகளையும், அனுமன் கதைகளையும் விரும்பிக் கேட்காத குழந்தைகள் உண்டா? வீர, தீர அனுமனைச் சொல்லின் செல்வனாகக் காட்டுகிறார் கம்பர். இடம் அறிந்து, கேட்பவர் நிலை அறிந்து சுருக்கமாகவும், தெளிவாகவும், பொருத்தமான சொற்களால் நயமாகவும் அறிவு பூர்வமாகவும் பேசுவதில் வல்லவன் அனுமன். "கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்" என்ற ஒரே வரியில் இராமனின் துயரத்தையும், ஐயத்தையும் போக்கியவன் அனுமன். நம் பேச்சு எப்படி இருக்க வேண்டும் என்பதை அனுமன் மூலமாகத் தெளிவாக்குகிறார் கம்பர்.

கம்பர் தமது நூலுக்கு 'இராமாவதாரம்' என்று தான் பெயர் வைத்தார். இராமாயணத்தில் குழந்தைகள் அறிந்து, பின்பற்றவேண்டிய, பல நல்ல கருத்துகள் புதைந்துகிடக்கிறன. இராமாயணக் கதையைக்

குழந்தைகளுக்கு விரிவாகச் சொல்ல வேண்டும். கம்பரின் இராமாயணத்தை உரை நடை வடிவிலாவது பள்ளிக்கூடங்களில் துணைப் பாடநூலாக வைக்க வேண்டும். வளரும் தலைமுறையைப் பாதுகாக்க நாம் போடும் வேலியாக, உரமாக அது அமையும்.

கம்பன் என்றொரு மேலாண்மைத் திறனாளன்

திருமிகு.டி. என். கிருஷ்ணமூர்த்தி
போர்ட்பிளேயர், அந்தமான் நிகோபார் தீவுகள்

மேலாண்மைக் கோட்பாடுகள்

மனித நாகரீகம் தொடங்கிய காலம் தொட்டே, குழுவுடன் வாழும் மனப்பாங்கும் ஆரம்பம் ஆனது. குழுவினரிடையே ஒரு சுமூக சூழல் நிலவத் தேவையான அனைத்தும் செய்திட வேண்டிய தேவையும் ஏற்பட, மேலாண்மை நிர்வாகம் என்ற பெயர் இடப்படாமலேயே அக்கலையும் (ஒரு வகையில் அறிவியலும் கூட) வளர்ந்தே வந்தது. காலத்திற்கேற்ப அதன் வரம்புகளும் மாறியபடியே இருந்து வருகிறது. ஆயினும் இன்று வரை மேலாண்மையின் மூலத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. மேலாண்மைக் கண்ணாடி அணிந்து, கம்பராமாயணத்தை படிக்க ஆரம்பித்த போது தான், கம்பன் ஒரு மேலாண்மைத் திறனாளன் என்பதில் எந்த விதத்திலும் ஐயம் இருப்பதாய்த் தெரியவில்லை. கம்பராமாயணம் ஒரு மதம் சார்ந்த, காப்பியம் என்ற உண்மையினையும் மீறி எக்காலத்திற்கும் பொருந்தும் வகையிலான நிர்வாகவியல் தொடர்பான பல செய்திகளும் அதில் இருப்பதை ஆணித்தரமாய்க் கூற இயலும்.

இலக்கு நோக்கிய பயணம்

நிர்வாகத்தின் பணிகளாக எதிர்காலமதை உத்தேசமாய்க் கணித்தல், சரியான திட்டமிடல், அதனைச் சரிவர செயலாக்கம் செய்தல், தலைமையேற்று நடத்தல், ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்தல் ஆகியவை கூறத்தக்கவை ஆகும். இவை அத்தனையும் ஒன்றுசேர்த்து இலக்கை எட்டுவதை பயில்வது தான் நிர்வாகவியலின் சிறப்பு. இதனை, கம்பர் தனது இராமாயணத்தில் பல இடங்களில் கையாண்டு இருக்கிறார்.

உதாரணமாக, சீதையினைத் தேடும் முயல்வில் வானரங்கள் ஈடுபடும் செயலினை அவர்கள் எவ்விதம் செய்தனர் என்பதைப் பார்க்கலாம். செய்ய வேண்டியதில் தெளிவு, சீதையினை தென் திசையில் சென்று தேடிட வேண்டும் என்பதில் இருந்தது. யாருக்கு என்ன வேலை தரவேண்டுமோ, அதனைச் சரியாகப் பிரித்துத் தருதல். அனுமனை அதற்குத் தலைவனாயும் தேர்வு செய்தல். தேர்வு செய்த பின்னர் அவ்வேலை செவ்வனே செய்திடத் தேவையான அனைத்தும் தருதல். அதற்கு இரண்டு வெள்ளப் படை தருதல். திட்டமிடும் போதே

இறுதியாய் இலக்கினை எட்ட முப்பது நாள் கெடுவாய்க் குறித்தல் இங்கே கவனிக்கத் தக்கது. இறுதியாய்ப் 'பணிகள் சரிவர நடக்கிறதா?' என்பதை கண்காணிக்கவும் செய்தல். இவை அனைத்தும் சுக்ரீவன் இட்ட நிர்வாகத் திட்டம். கம்பர் தான் இங்கு நிர்வாக ஆசான். இதோ கம்பன் வார்த்தைகள்:

"வெற்றி வானர வெள்ளம் இரண்டொடும்
சுற்றி ஓடித் துருவி ஒருமதி
முற்று றாதமுன் முற்றுதிர் இவ்விடை
கொற்ற வாகையினீர் எனக் கூறினார்"

(கிட்கிந்தா காண்டம்/நாடுவிட்ட படலம்/பா.11)

இன்றைய காலகட்டத்தில்கூட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் படி பொதுமக்கள் கேட்கும் தகவல்களை 30 நாட்களில் தந்தே ஆக வேண்டும் என்ற முறை உள்ளது. செல்ல வேண்டிய தூரமோ அதிகம். சிக்கலும் சிரமமும் கூடவே உண்டு. சீதாபிராட்டியினையும் இது வரை கண்டதே இல்லை. ஆனால் கம்பன் விதித்த காலக் கெடுவில் எந்தத் தளர்வும் இல்லை.

வரமான சாபம்

'இடுக்கண் வருங்கால் நகுக' என்கிறது உலகப் பொதுமறை. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று இருப்பது பக்குவமான நிலை. சில இடர்பாடுகளைக் கூட, நாம் வாழ்வின் கிடைத்தற்கு அரிய வரமாய் கருதும் சூழலும் நிர்வாகத்தில் வரும். கம்பரின் காவியத்திலும் இப்படி, வரமா? சாபமா? என்று கேட்கும் சம்பவம் வருகிறது. வேட்டைக்குப் போன தசரதன், யானை என்று நினைத்து சிரவணனை அம்பு எய்திக் கொல்கிறான். விபரம் தெரிந்த சிரவணனின் தந்தை "நீயும் இப்படி மகனை இழந்து துடிப்பாய்" என்று சாபம் தருகிறார்.. இதை கேட்டு தசரதனுக்கு துயரம் ஒரு பக்கம். தனக்குக் குழந்தைப் பேறு இல்லையே என்ற கவலை ஒழிந்தது குறித்து மகிழ்ச்சி மறுபக்கமாம். சிக்கலைக் கூட சிக்கலாக, கருதாமல் இருக்கும் மனோநிலையின் நிர்வாகக் கலையினை கம்பர் கற்றுத் தருகிறார்.

"சிந்தை தளர்வுற்று அயர்தல் சிறிதும் இலனாய் இன்சொல்
மைந்தன் உளன் என்றதனால் மகிழ்வோடு இவண் வந்தனெனால்
அந்த முனி சொற்றமையின் அண்ணல் வனம் ஏகுதலும்
எம்தம் உயிர் வீகுதலும் இறையும் தவறா என்றான்.

(அயோத்தியா காண்டம்/ நகர் நீங்கு படலம்/பாடல் எண்: 87)

கனிவான சொற்கள்

வள்ளுவரின் 'கனியிருப்பக் காய் கவர்ந்தற்று' என்பதினை உலகத் தமிழர்கள் அனைவரும் நன்கு அறிவர். நிர்வாகச் சிக்கலின் பெரும்பாலான காரணங்களைத் தேடிப் பார்த்தால் அதில் பரிமாரிய வார்த்தைகளின் தன்மை தான் மேலோங்கி நிற்கும். ஒரு சூழலில் பயன்படுத்தும் சொற்கள் மற்றவர்க்கும் இதமாய் இருக்கும் போது, செய்ய வேண்டிய செயல் இலகுவாய் முடியும். இல்லாவிடில் ஈட்டியாய் குத்திய வார்த்தைகள் காயப்படுத்தும் பணி தவிர்த்து, வேறு எந்த வினையையும் ஏற்படுத்தாது. அந்தமான் தீவுகளில் வழங்கும் மொழி வழக்கை வைத்து கம்பன் பார்வையில் சற்றே இதனை நோக்கலாம்.

அந்தமான் தீவுகளில் வழக்குமொழியாக இந்தியினைப் பயன்படுத்தி வருகின்றனர். பெரும்பாலான தமிழர்கள் அந்தமானுக்கு வருகையில் இந்திமொழி தெரியாமல்தான் வருவர். அதுவும் அவர்களுக்கு இந்தியில் எண்களைப் பயன்படுத்துவது மிகச்சிக்கலான ஒரு செயல். தமிழில் பத்து வரை தெரிந்து கொண்டு பின்னர் இருபது, முப்பது என மட்டும் படித்தால் போதும். ஆனால் இந்தியில் ஒன்று துவங்கி நூறு வரை தெரிந்து கொண்டாக வேண்டும். தமிழர்கள் அந்த சிக்கலுக்கு தீர்வும் கண்டனர்.

15க்கு இந்தியில் "பந்தரா" என்று சொல்வதற்குப் பதிலாக ஏக் பான்ச் (ஒன்றும் ஐந்தும்). இதே போல் 55 ஐ சொல்லிட தமிழர்க்கு "பச்பன்" தேவைப்படவில்லை. "பான்ச் பான்ச்" (ஐந்தும் ஐந்தும்) என்பதே போதுமானதாய் இருக்கின்றது. இந்த குறுக்கு வழியை நமக்குச் சொல்லிக் கொடுத்ததில் கம்பருக்கும் பங்கு உண்டு. பதினான்கு ஆண்டுகள் வனவாசம் பற்றி கோசலையிடம் ராமன் சொல்கிறார். அது என்ன "பத்தும் நாலும்" தானே என்பதாய் வருகிறது. பதிநான்கு ஒரு முறையும், பத்தும் நான்கும் என்று ஒரு முறையும் நீங்களே சொல்லிப் பாருங்கள்.. இரண்டாவதில் மனம் இளகி நிற்கும்.

"சித்தம் நீ திகைக்கின்றது என்? தேவரும்
ஒத்த மாதவம் செய்து உயர்ந்தோர் அன்றே?
எத்தைக்கு உள ஆண்டுகள்? ஈண்டு, அவை
பத்தும் நாலும் பகல் அலவோ? என்றான்"

(அயோத்தியா காண்டம்/ நகர் நீங்கு படலம்/பாடல் எண்: 21)

'அந்தமானிற்குக் கப்பலில் மூன்றே நாளில் சென்று விடுவேன்' என்பதற்கும் 'மூன்று நாளா?' என்று பெருமூச்சு விடுபவர்களுக்கும் உள்ள வித்தியாசம் உணர இந்தக் கம்பன் யுத்தி உதவுகிறது. நிர்வாக

சிக்கலினை எதிர்கொள்ள நாம் எப்போதும் தயாராய் இருக்க வேண்டும். மேலும் அதனை சுலபமாய் எதிர் கொள்ளப் பழக வேண்டும் என்பதையும் கம்பர் மூலம் நாம் அறிய வேண்டும். தவிர்க்க இயலாத மாற்றங்கள் வரும் சமயத்தில் அதனை ஏற்றுக் கொள்வதில் தவவில்லை என்பது தான் மேலாண்மைக் கோட்பாடு. மாறிவரும் சூழலில் மாற்றங்கள் தவிர்க்க இயலாதவை. அதை ஏற்றுக் கொள்ளும் இதம் மனதளவில் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் தான் இந்த திறனாளன் எவ்வளவு கவனமாய் இருந்திருக்கிறான்?

ஆதாரங்களின் தேவைகள்

ஒரு பணியினைச் சரியான நேரத்தில், சரியான நபர்களைக் கொண்டு, செவ்வனே செய்திடும் கலையினைத் தான் மேலாண்மை கற்றுத்தருகிறது. அதனால் வரும் சிக்கல்களையும் அது எதிர்பார்க்காமல் இல்லை. ஆனால் திறனாளனுக்கு அந்தச் சிக்கல்களைத் தீர்க்கும் திறன் கண்டிப்பாய் இருத்தல் அவசியம். கம்பனிடம் இல்லாமல் போகுமா என்ன? ஒரு பிரச்சினைக்கு முடிவு எடுப்பதற்கு ஆதாரமாய் ஆவணங்களும், பிறர் சாட்சியங்களும் தான் மிக மிக முக்கியமானதாய் இன்றளவும் கருதப் படுகின்றது. இந்தச் செய்தியினை எடை போட, இடை பற்றிய செய்திகளொடு சேர்த்து சொல்லும் புலமை, கம்பனின் மேலாண்மைத் திறனாளன் பதவிக்கு சான்று சொல்லும். சீதையின் இடையினைப் பார்த்தவர்கள் யாரும் இல்லை. அதைப் பார்த்து ஆதாரமாய் எழுதி வைத்த ஆவணங்களும் ஏதும் இல்லையாம்.. இப்படி வருகிறது கம்பனின் வரிகள்.

சட்டகம் தன்னை நோக்கி யாரையும் சமைக்கத் தக்காள்
இட்டு இடை இருக்கும் தன்மை இயம்பக் கேட்டு உணர்தி என்னின்
கட்டுரைத்து உவமை காட்ட கண்பெரி கதுவா கையில்
தொட்ட எற்கு உணரலாம் மற்று உண்டு எனும் சொல்லும் இல்லை.

(கிட்கிந்தா காண்டம்/நாடவிட்ட படலம்/பாடல் எண்- 38)

முடிவுரை

கம்பனின் காப்பியக் கடலின் ஓரத்தின் நின்று வேடிக்கை பார்த்த போது கிடைத்த செய்திகள் தான் இந்த நிர்வாகவியல் கருத்துகள். இன்னும் கம்பன் கடலில் மூழ்கினால் முத்துக்கள் எடுக்கலாம். நிர்வாகவியல் என்பது இப்போதைய காலகட்டத்தில், பயிற்சி அளிக்கப்பட்டு வந்தாலும் அதன் அடிப்படையான கருத்துகளை தமிழர்கள் முன்னரே அறிந்திருந்தனர் என்பதை இங்கே பதிவு செய்வது தான் இக் கட்டுரையின் நோக்கம்.

கம்பன் என்றொரு மேலாண்மைத் திறனாளான்

முனைவர் அ.தேவகி
கல்வியியல்துறை உதவிப்பேராசிரியர், அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம்.

தமிழில் உள்ள பெருங்காப்பியங்களுள் கம்பராமாயணம் முதன்மைபெற்ற காப்பியமாக விளங்குகிறது. தண்டியலங்காரம் உரைக்கும் பெருங்காப்பியத்தின் இலக்கணம் கம்பராமாயணக் காப்பியத்திற்கு மிகவும் பொருத்தமுடையதாகிறது.

வால்மீகி முனிவர் வடமொழியில் யாத்த இராமாணத்தை நிலைக்களமாகக் கொண்டு தமிழில் கம்பராமாயணம் என்னும் பெயரில் கம்பரால் இக்காப்பியம் படைக்கப்பட்டு, உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இது, உலகப் பெருங்காப்பியம் என்னும் நிறுவனத்துள் வைக்கப்படும் இடத்து கம்பர் மேலாண்மைத் திறனாளராக விளங்கியிருக்கிறார் என்பது அறியப்படுகிறது. கம்பனை மேலாண்மைத் திறனாளராக நோக்குமிடத்து, முதலில் மேலாண்மை என்னும் கருத்தாக்கத்திற்கான விளக்கத்தினை ஆராய வேண்டியுள்ளது.

மேலாண்மை என்பது தற்காலத்தில் ஏற்பட்ட நவீன கருத்தாகும். இது மேலாளரின் துடிப்பான செயல் முறையாக அறியப்படுகிறது. இதன்படி, ஒரு நிறுவனத்தின் மேலாளராக விளங்கக்கூடிய ஒருவர் அந்நிறுவனத்தின் பொருள் வளத்தையும், மனித வளத்தையும் முறையாகத் திட்டமிட்டு, முழுத்திறனுடன் செம்மையாக இயங்க வைத்து அந்நிறுவனம் எண்ணியுள்ள குறிக்கோள்களை அடைய உதவும் நிலையில் அது மேலாண்மைச் செயல்முறையாக அறியப்படுகிறது.

இவ்வகையில் கம்பர் எங்ஙனம் சிறந்த மேலாண்மைத் திறனாளராகச் செயல்பட்டு, கம்ராமாயணம் என்னும் நிறுவனத்தின் குறிக்கோள்களை எட்ட உதவியிருக்கிறார் என்பது விளக்கம் பெறுகிறது. மேலும் மேலாண்மையின் முக்கிய வளங்களாக மேலாளருக்கானத் தலைமைப்பண்புகளும். பணியாளர்களுக்கான ஆற்றல்களும் கருதப்படுகின்றன. கம்பராமாயணம் என்னும் நிறுவனத்தின் சிறந்த மேலாளராக கம்பன் திகழ்ந்திருப்பதையும், கதை மாந்தர்கள் சிறந்த பணியாளர்களாக விளங்கியிருப்பதையும் எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகிறது. இதற்கென

கம்பன், பொருள்சார் வளங்களாகிய கதை நிகழ்விடங்களையும், இயற்கைப் பொருள்களையும் மற்றும் மனித வளங்களாகச் சிறந்த கதை மாந்தர்களையும் எங்ஙனம் திட்டமிட்டு, ஒருங்கிணைத்து, முறையாகச் செயல்பட வைத்து கம்பராமாயணத்தின் குறிக்கோள்களை எட்ட உதவியிருக்கிறார் என்பதைத் துணைநோக்கமாகக் கொண்டு ஆய்வுக் கட்டுரை பல பகுப்புகளை உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலாண்மைக்குரிய சொற்கள் கம்பராமாயணத்தைத் தொடர்புபடுத்தும் விதம் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

நிறுவனம்	**கம்பராமாயண காப்பியம்**
மேலாளர் - மேலாண்மைத் திறனாளர்	கம்பர்
மனித வளங்கள் -பணியாளர்கள்	கதை மாந்தர்கள்
பொருள்சார் வளங்கள்	நிகழ்விடங்கள், இயற்கை எழில்கள்

கம்பராமாயணம் எனும் நிறுவனத்தின் மேலாண்மை பணிகள், கம்பனால் மேற்கொள்ளப்பட்ட விதம் பின்வருமாறு அமைகின்றன.

முன்கூட்டியே ஊகித்தறிதல்

இன்றைய போக்குகளின் அடிப்படையில் வருங்கால நிலைமைகளை முன்கூட்டியே ஊகித்தறிதல் என்பது மேலாண்மையின் முக்கிய பணியாகும். கம்பன் முன்கூட்டிய பின்னால் நடப்பதை ஊகித்துக் கூறும் காட்சிகள் பல கம்பராமாயணத்தில் உண்டு.

- அயோத்தி மக்கள் இராமன்மீது கொண்ட பேரன்பிற்கான காரணத்தை கம்பன் பாலகாண்டத்திலேயே ஊகித்துக் கூறிவிடுகிறான். இன்ப காண்டமாக பாலகாண்டத்தைக் கொண்டால், அதற்கு ஏற்ற துன்ப காண்டமாக அயோத்தி காண்டத்தை முன்னரே ஊகித்தறிந்து படைத்துவிட்டான் கம்பன்.

- கம்பராமாயணத்தின் கதை அயோத்தியா காண்டத்திலிருந்துதான் தொடங்குகிறது எனில் அதற்கான சூழலை, பாலகாண்டத்திலேயே உருவாக்கி, காப்பியத்தினுள் கதை என்பதை முன்கூட்டியே ஊகித்து அமைக்கிறான் கம்பன்.

- சீதை தவச் சாலையில் தனித்திருக்கும் நிலையில், இராவணனால் அவளுக்குத் துன்பம் ஏற்படப் போகிறது என்பதை

அவள் உணரவில்லை. ஆனால் அஃறிணை உயிர்கள் முன்கூட்டியே உணர்ந்ததால் மரமும், மலையும் நடுங்கியதாகவும், பறவைகளும் விலங்குகளும் அஞ்சியதாகவும் குறிப்பிடுகிறார் கம்பர்.

முடிவெடுத்தல்

மேலாண்மைத்திறனாளர்கள் ஒவ்வொரு பிரச்சனைக்கான சாதக - பாதகங்கள், தீர்வுகள், அவற்றால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருதல் வேண்டும். கம்பராமாயணத்தில் இத்தகைய மேலாண்மைத் திறத்தைக் காணமுடிகிறது.

- சித்திரக்கூட மலையில் நீதிக் கடலாகிய பரதனுக்கும், அறக்கடலாகிய இராமனுக்கும் கருத்துப்பூசல் நிகழுமிடம், காப்பிய நீட்டிப்பில் சிக்கலை ஏற்படுத்துகிறது. கைகேயியின் சூழ்ச்சியினால் காடு சென்ற இராமனை அழைத்து வந்து அரசனாக்கினால் தான் பரதனின் நோக்கம் நிறைவேறும். அது அவனுக்குச் சாதகமாகும். அதேசமயம் இராமன் காட்டை விட்டு நாட்டிற்குச் சென்றுவிட்டால் காப்பியம் முற்றுப் பெற்றுவிடும். இராவண வதம் நின்றுவிடும். இது கம்பனுக்கு இது பாதகமாகும். தன்னிகரில்லா நன்மைக்கும், நன்மைக்கும் இடையேயான போராட்டத்தில் முடிவெடுக்க வேண்டிய இக்கட்டான நிலை கம்பனுக்கு. காப்பிய பாத்திரங்களைக் கொண்டு கதையை நகர்த்த முடியாத நிலையில், 'இராமன் காடு செல்வான், பதினான்கு ஆண்டுகள் நாடு காத்தல் உன் கடன்' என்ற தேவர் வாய்மொழியாக வானொலியைப் பிறப்பித்து பிரச்சனைக்கு முடிவெடுத்து காப்பிய நீட்டிப்புக்கு உதவுகிறான் கம்பன்.

திட்டமிடல்

நிறுவனத்தின் அன்றாட பணிகளுக்கும், அதன் வளர்ச்சிக்கும் திட்டமிடல் அவசியம். திட்டமிடுதலில் அடிப்படைக்கட்டமைப்பு, பணியாளர் திறன் ஆகியவை முக்கிய இடம் வகிக்கிறது. காப்பிய வளர்ச்சிக்கு உதவும் வகையில் கம்பன் கம்பராமாயணத்தைத் திட்டமிட்டு படைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகிறது. காப்பியத் தொடக்கம், தொடர்பழகு, சங்கிலிப்பார்வை தனிப்பார்வை, உலகப்பார்வை ஆகிய இவையனைத்தும் காப்பியத்தின் கட்டமைப்பிற்கு ஏற்ப கம்பனால் திட்டமிடப்பட்டுள்ளது. அதே போல் கதை மாந்தர்களின் பண்புகளும், திறமைகளும், நன்கு திட்டமிடப்பட்டு காப்பிய வளர்ச்சிக்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

• சூழ்வினைப்படலத்தில், இயற்கையில் கொடியவள் அல்லாத கைகேயியை திட்டமிட்டே கொடியவளாக்கி காப்பிய வளர்ச்சிக்கு உதவியுள்ளான் கம்பன்.

• காப்பிய வளர்ச்சிக்காக இராமனையும் பொய்யனாக ஆக்குகிறான் கம்பன். 'என்னை ஏற்றி வந்தத் தேரை நள்ளிரவில் அயோத்திப் பக்கம் திருப்புக் காலையில் தேர்ச்சக்கரத்தின் தடத்தைப் பார்க்கும் மக்கள் நான் நாடு திரும்பிவிட்டதாக எண்ணித் தாமும் திரும்புவர்' என்று திட்டமிட்டு இராமனை சூழ்ச்சி செய்ய வைத்து அதில் வெற்றி கண்டு கதையை வளர்த்துச் செல்கிறான் கம்பன்.

ஒழுங்குற அமைத்தல்

பணிக்கு ஏற்ற பணியாளர் தேர்வு, பொறுப்புகளை வரையறுத்தல், பணிப்பகிர்வு, தகுதியற்றவர்களைப் பணியிலிருந்து நீக்குதல், பழக்கமற்ற துறையில் பணியாளர்களைத் தவிர்த்தல் ஆகியவை மேலாண்மையில் ஒழுங்குற அமைத்தல் என்பதைக் குறிக்கின்றது. கம்பன் தன்னுடைய மேலாண்மை திறனால் கதை மாந்தர்களை ஒழுங்குபட அமைத்து காப்பியத்தின் வளர்ச்சிக்கு உதவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

• வாலி, பல சிறப்புகளைப் பெற்று சிறந்த வீரனாக விளங்கியபோதிலும் பிறன்மனை நாடிய காரணத்தினால் அறக்கடவுளாகிய இராமனால் வீடுபேறடையச் செய்கிறான் கம்பன். இங்கு கம்பன் தகுதியற்றவர்களைப் பணியிலிருந்து நீக்கும் மேலாண்மைத் திறனுடையவனாகிறான்.

• இராமனுடன் காடு செல்லும் இலக்குவன், இராமன் வரும் வரை நாட்டையாளும் பரதன், இருவரும் சம மதிப்புடையவர்களாகவே கம்பனால் படைக்கப்பட்டுள்ளனர். அயோத்தியா காண்டத்துடன் பரதன் நின்று விடுகிறான். இறுதிவரையிலும் உடன் இருப்பவனாக இலக்குவன் விளங்குகிறான். இருப்பினும் பிரிந்திருந்து சிந்தையால் மெலியும் அகத்திணை தலைவிக்கு இணையானத் துயரத்தை அனுபவிக்கிறான் பரதன். ஆகவே சீதை இலக்குவன் ஆகியோருக்கு இணையானவனாகவே பரதன் எண்ணத்தக்கவனாகின்றான். இதன்வழி பணிப்பகிர்வு, பணியாளர் பொறுப்புகளை வரையறுத்தல் ஆகியவற்றை சிறப்பாக மேற்கொள்ளும் மேலாண்மைத் திறனாளனாக கம்பன் அறியப்படுகிறான்.

நெறிப்படுத்துதல்

இதில் பணியின் அருமை, அதை எங்ஙனம் எப்பொழுது முடிக்க வேண்டும் என்ற குறிப்புரை, மேலாளர் பணியாளர்களோடும்,

பணியாளர்கள் தமக்குள்ளும் இசைவுடன் செயல்பட நெறிப்படுத்துதல் ஆகியவை இடம் பெறுகின்றன. கம்பனும் தன் காப்பியத்தில் பணியாளர்களை நெறிப்படுத்தும் சிறந்த மேலாளராகவே திகழ்கின்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

- அனுமன், சுந்தரகாண்டத்துச் சூளாமணிப் படலத்தில் சீதையைப் பார்க்கின்றான். இராவணனின் காமம் நிறைந்த பேச்சையும், சீதாபிராட்டியின் உயிர் கலக்கத்தையும் கண்களால் காண்கின்றான். இந்நிலையில் சீதையைக் கொண்டு செல்வதே சரி எனக்கருதி என் தோள் மீது ஏறிப்புறப்படுக என்று மன்றாடி வேண்டும் போது மறுப்பு கூறுகிறாள் பிராட்டி. இராவணன் கவர்ந்து வரும் போது தொடாமல் தூக்கி வந்திருக்க முடியும்? அனுமனின் முகக்குறிப்பால் இது உணர்த்தப்படுகிறது. இராவணன் தவச்சாலையில் இருந்த என்னை மண்ணோடு அகழ்ந்தெடுத்துப் போனான். இதனை நீ இராமனிடம் சொல்ல வேண்டும் என்கிறாள் சீதை. இங்ஙனம் அனுமன், சீதை உரையாடல் வெளிப்படையாக அமையாமல் குறிப்பின் மூலமாக வெளிப்பட்டு கம்பனின் மேலாண்மைத் திறத்தை அறிய முடிகிறது.

- இராமன், சீதையின் மாண்பை அறியும் வகையில் தன் சீரிய சொற்களால் 'கண்டேன் சீதையை' என்கிறான் சொல்லின் செல்வன். இங்ஙனம் கதைமாந்தர்களுக்கிடையில் மற்றும் காப்பிய ஆசிரியனோடும் ஒரு இணக்கமான உறவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அனுமனிடம் ஒப்படைக்கப்பட்ட பணி குறித்தக் காலத்தில் சிறப்பாக முடிக்கப்பெற்றுள்ளது. இவையனைத்தையும் கம்பனை நெறிப்படுத்தும் மேலாண்மைத்திறனாளனாகவே காட்டுகிறது.

கட்டுப்பாடு

வழிகாட்டுதல், தேவைப்படும் போது திருத்தங்கள் மேற்கொள்ளல் ஆகியவற்றின் மூலம் நிறுவன செயல்பாட்டைக் கட்டுப்படுத்தலாம் என்கிறது மேலாண்மை. இதற்கு எடுத்துக்காட்டாக கம்பராமாயணத்தில் ஒரு காட்சி.

- சீதையை விடுதலை செய்யாததால் இராவணன் போரில் உறவுகளை இழந்து துன்பப்படுவதைக் கண்டு மண்டோதரி அவனுக்கு வழிகாட்டுகிறாள், இராமன் உயிர்க்கு சீதை அமுதம் போன்றவள், பிறன்மனை நயந்தார்க்கு அவள் நஞ்சு போன்றவள் என்று கருத்துரைத்து வழிகாட்டுகிறாள். மண்டோதரியின் இந்த வார்த்தைகள் இராவணனின் மனதை மாற்றியது. இராவணன்

மனக்கண் முன் எல்லோர் அழிவும் தோன்றி மறைகிறது. இதுவரை சீதையைக் காமப்பொருளாகக் கருதிய இராவணன் இப்பொழுது பகைப் பொருளாகக் கருதும் திருத்தத்தைச் செய்கின்றான் மேலாளனாகிய கம்பன். இங்ஙனம் இராவணனைக் கட்டுப்படுத்தி இறுதியில் மன்மதன் அம்பால் மாய்வதைக் காட்டிலும், இராமனின் அம்பால் மாள்வது புகழுக்குரியது என்று உணர வைக்கும் கம்பன் சிறந்த மேலாளராகவே கருதப்படுகிறார்.

ஒருங்கிணைத்தல்

மேலாண்மைப் பணிகளுக்கு ஊழியர், பண்டகங்கள், வசதிகள், இலக்குகள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பது அவசியம். அதேபோல் கம்பனும் தன் காப்பியத்தில் வாலி, இராவணன் போன்ற கதைமாந்தர்களின் தவறான எண்ணங்களை மாற்றுவதன் மூலமாகவும், அவர்களுக்குத் தரும் தண்டனையாகிய வீடு பேற்றின் மூலமாகவும் அவர்களை காப்பியத்தோடு ஒருங்கிணைத்து காப்பியத்தின் இலக்குகளை எட்ட உதவியுள்ளான். மேலும் காடுவிட்டு நாடு திரும் இராமன் முதலில் கைகேயியையே சென்று சந்திப்பதாகக் காட்டப்படுகிறான். கொடியவளாகிய கைகேயி கதை மாந்தரை விலக்காமல், ஒருங்கிணைத்து அவளை நல்லவளாக எடுத்துக்காட்டி-யிருப்பதிலிருந்தும் கம்பன் மேலாண்மைத் திறனுடையவனாகவே எல்லோராலும் அறியப்படுகின்றான்.

மனித உறவுகளைப் பேணல்

மேலாண்மை மனித உறவுகளுக்கு முக்கியத்துவம் தருகிறது. அனைவரின் பங்கேற்பையும் ஏற்றுச் செயல்பட உதவுகிறது. இதில் ஜனநாயகக் கோட்பாடு வலியுறுத்தப்படுகிறது. இவ்வகையில் கம்பனின் காப்பியமும் எண்ணிப் பார்க்க இடமளிக்கிறது.

- சூரிய குலத்தில் உதித்த இராமன் குகனோடு ஐவரானோம் என்றுரைப்பது, வாலியுடன் போரிட்டு சுக்கீரவனுக்கான அரசினைப் பெற்றுத் தருவது, கைகேயியின் கொடுமையை சற்றும் மனதில் கொள்ளாமலிருப்பது, தனக்கு துன்பம் விளைவித்த இராவணனுக்கும் வீடு பேறு வழங்குவது இப்படி மனித உறவுகளைப் பேணும் நிகழ்வுகள் காப்பியத்தில் அதிகளவில் இடம் பெற்று கம்பன் மேலாண்மையை படம் பிடிக்கிறது.

சமுதாய சேவை செய்தல்

ஒரு நிறுவனம் ஆற்றும் சமுதாயச் சேவையினை கம்பனின்

காப்பியம் ஆற்றியுள்ளது அறியத்தக்கது. பாலகாண்டம் தொடங்கி யுத்த காண்டம் வரையிலும் பிறருக்காகவே வாழும் வாழ்க்கையை உடையவனாகவே இராமன் சித்தரிக்கப்படுகிறான். மேலும் காப்பிய கதை மாந்தர்கள் அனைவரும் சமூக நோக்குடனே உருவாக்கப்பட்டுள்ளனர். மனிதநேயம், ஒழுக்க நெறி, அறம், பொருள், இன்பம், மிடு பயன்களை உணர்ந்து வாழும் வாழ்க்கை வலியுறுத்தப்படுகிறது. இங்ஙனம் கம்பராமாயணம் முழுமையும் சமூக நேயத்திற்கான கருத்துகளே இடம் பெற்று சமூக சேவையாற்றுகிறது. இவ்வகையிலும் கம்பன் சிறந்த மேலாண்மைத் திளநாளனாகவே கருத இடமளிக்கின்றான்.

மேற்கண்டளவில் நிறுவன மேலாண்மையும், கம்ப இராமாயண மேலாண்மையும் ஒப்சிடு செய்யப்பட்டு. காப்பிய காலத்திலேயே இன்றைய மேலாண்மை கூறும் கருத்துகளை கம்பன் கைக்கொண்டு சிறந்த மேலாண்மைத் திறனாளனாகத் திகழ்ந்திருக்கிறான் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. மேலும் பல நூற்றாண்டுகள் கடந்தும் கம்பனின் மேலாண்மை சமூகத்தை நெறிப்படுத்தி வாழ்ந்து கொண்டிருப்பது உறுதிபடுத்தப்படுகிறது. 'கம்பனைப் போல் இப்பூமிதனில் யாரும் பிறக்கவில்லை' என்னும் கூற்று மெய்படுகிறது எனில் அது ஏற்கத்தக்கதேயாகும்.

கம்பனில் அரசியல் தலைமைத்துவம்

திருமிகு. ப.கணேஷ்வடிவேல்
முனைவர் பட்ட ஆய்வாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி,
திருச்சி.

உலகில் தோன்றிய உயிரினங்களில் மிகவும் உயர்வாக மதிக்கப்படக் கூடிய, உன்னதமான நிலையை அடைந்த உயிரினமாக மனித இனம் போற்றப்படுகிறது. இம்மனித இனத்தை பற்றி ஔவையார் கூறும்பொழுது "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று போற்றுகிறார். இம்மனித பிறவியே பிறகு உலகத்திலுள்ள பிறவிகளுக்கெல்லாம் தலைமையான பிறவியாக சிறந்து விளங்குகின்றன என்பதை கம்பர்

"ஆறு கொள் சடிலத்தானும் அயனும் என்றிவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்ற தன்றே"

என்று புகழ்ந்துரைக்கிறார். மேலும் சிவன்,பிரமன் முதலிய தேவர்களை எல்லாம் கூட மனித இனம் வென்றுவிட்டது என்று பாடியுள்ளார். (கம்பராமாயணம்-கி.பி.887,திருவரங்கம்-நாதமுனி- சா.கணேசன்-ப.33)

தலைமையான பிறவியாக விளங்கிய மக்கள் உணவு தேடி பல்வேறு குழுக்களாக பிரிந்து சென்றனர். அவ்வாறு பிரிந்து செல்லும் குழுக்களை வழி நடத்தவும், வழி காட்டவும் பல்வேறு திறமைகளும், குணநலன்களும் உடைய ஒருவன், சூழ்நிலை கருதி வெளிப்பட ஆரம்பிக்கிறான். அவ்வாறு வெளிப்படக் கூடியவனையே முதன்மையானவன், தலைவன் என்று அழைக்கப்பட ஆரம்பித்தனர்.

நாடோடிகளாகத் திரிந்த இக்குழுக்கள் காலப்போக்கில் ஓர் இடத்தில் நிலையாகத் தங்க ஆரம்பித்தனர். அவர்களின் உணவுத்தேவையை பூர்த்தி செய்வதற்காக நிலங்களை, கைப்பற்ற ஆரம்பித்தனர். இதுவே பின்னர் போராக உருவெடுத்தது.போரின் முடிவில் அரசு என்ற ஒரு அமைப்பு உருவானது. அந்த அரசை வழிநடத்திச் செல்வதற்கான தலைவனாக அரசன் மன்னன் என்ற தலைமைப் பதவி உருவானது. அவ்வாறு உருவான தலைமைப்பதவியில் அமர்வதற்கான தகுதிகள் மற்றும் பண்புகளை கம்பர் எவ்வாறு கையாண்டுள்ளார் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாமான்ய மனிதன் அரசன், மன்னன், தலைவன் என்ற

முதன்மையான இடத்தை பெறுவதற்கு இரு முறைகளை அறிமுகப்படுத்துகிறார் கம்பர். 1. மரபுவழி முடியாட்சி பெறும் தலைமை. 2. மக்களால் இறையாண்மையை பெறும் தலைமை.

1. மரபுவழி முடியாட்சி பெறும் தலைமை

ஒரு குலத்தில் தோன்றியவனுக்கு அவனுடைய குலத்து மரபின் அடிப்படையில் முதலில் தோன்றியவனுக்கே தலைமையான பதவியை அடைய முடியும். இதற்கு தாயத்து முறை என்று அழைக்கிறார்கள். மயில் முறைக் குலத்து மரபும், மனுநீதியும் மூத்தவனுக்கே பட்டம் என்ற முறையை வற்புறுத்துகின்றன. கம்பராமாயணத்தில்

"மூத்த புத்திரனிடத்தில் மாத்திரமே
ராஜ்ய காரியங்களை ஒப்புவிக்கிறார்கள்" (2.8.98-100)

என்று கூனியின் வாயிலாக கம்பர் எடுத்துரைக்கிறார். புறநானூற்றிலும்

"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
பால்தர வந்த பழவிறல் தாயம்
எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்பென" (புறம்-75:1-3)

என்ற பாடலில் குடியிலுள்ள முதியோர்களை எமன் கொண்டு சென்றவுடன் அவர்கள் ஆற்றிவந்த அரசுரிமையானது, மரபுரிமை அடிப்படையில் தனக்கு கிடைத்ததாக சோழன் நலங்கிள்ளி மொழிகிறார்.

பரதனும், வசிட்டரும் இராமனை காட்டில் சந்தித்து அரச பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தியதற்கு காரணம் அரச பரம்பரை உரிமையே ஆகும்.

"பிறந்து நீயுடைப் பிரிவில் தொல்பதம்" (2475)

"முன்னர் வந்து உதித்து நீ பிறந்த பார்" (2486)

"தொல்லையோர் முறையின் நீங்கிய அரசு" (2474)

அரச பரம்பரை உரிமையையும், மூத்தவனுக்கே பட்டம் என்ற முடியாட்சி முறையையும் காரணம் காட்டி பரதன் இராமனை முடிசூட்ட வேண்டுகிறான்.

2. மக்களால் இறையாண்மையைப் பெறும் தலைமை

"அரசன் இராஜயசூய வேள்வி இயற்றுவதன் மூலம் இறையாண்மையை அடைவதாக சதபத பிராகாமணம (எ.33:6-9 கூறுகிறது) மேலே கூறிய வேள்விகள் மூலம் அரசன் இறையாண்மையை

அடையவில்லை. அறமும், அருளும், வாய்மையும், பேணி மக்களை உயிராய்க் கொண்டு காக்கும் மன்னன் எவ்வித வேள்வியும் செய்ய வேண்டியதில்லை என்பதை,

"ஐயம் இன்றி அறம் கடவாது, அருள்
மெய்யில் நின்ற பின் வேள்வியும் வேண்டுமோ? (1423)

என்ற பாடலின் மூலம் இயல்பாகவே மக்களின் இறையாண்மைத் தலைமையை அடைந்து விடுவதாக உரைக்கிறார்.

பரம்பரையாக வரும் அரசு உரிமையால் ஒருவன் அரசனாக ஆனாலும் அவன் மக்களின் மனதில் இடம் பிடித்து, அவர்களின் சம்மதத்தையும் பெற்றிருக்க வேண்டும் என்று கம்பர் அறிவுறுத்துகிறார். கைகேயி இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு பரதனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று தயரதனிடம் வரம் கேட்ட பொழுது அவன் "நள்ளாது இந்த நானிலம்" (1520) என்றான். வசிட்டரோ "கொள்ளாது உலகம் " (1648) என்றார். பரதனும் " பாரோர் கொள்ளார்" (2184) என்றான். முடியாட்சியானாலும் தலைமையான பதவியை அடைவதற்கு மக்களின் சம்மதம் தேவை என்பதை கம்பர் அழகுற எடுத்துரைக்கிறார்.

தலைமைக்கான பண்பு நலன்கள்

ஓர் அரசியல் தலைவனுக்கு வேண்டிய உயர்ந்த தலைமைப் பண்புகளையெல்லாம் இராமன் கொண்டிருப்பதாக கம்பன் பட்டியலிட்டு காட்டுகிறார்.

1. உயர்ந்த எண்ணம்: பிறப்பில் தாழ்ந்த குகனையும், சுக்கீரிவனையும் உடன் பிறப்புகளாக உறவு கொண்டாடியது.
2. பொதுநலம் பேணுதல்: தன் துயர் நீக்கி, சுக்ரிவனின் துயர் அடைதல்.
3. அரவணைப்பு: இராவணனின் தம்பியான விபீஷணனுக்கு அடைக்கலம் அளித்தல்
4. கருணை: மனைவியை கவர்ந்த இராவணனை இன்று போய் நாளை வா என்று அருள் செய்தது.
5. அவா இல்லாமை: சுக்ப்ரிவன், விபீஷணன் நாடுகளை, தான் அரசாட்சி புரியாமல் அவர்களுக்கே அளிக்கும் பண்பு.
6. ஒழுக்கம்: "சூது முதலிய பழக்கங்கள் அற்றவன்"(1418) என்று வசிட்டர் பாராட்டல்

7. கட்டுப்பாடு: தந்தை இல்லறத்தில் தவறினாலும், தனயன் தவறேன் "இந்த இப்பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" (5378) என்று ஏக பத்தினி விரதம் பூண்டவன்.

8. தியாகம்: தந்தை சொல் காப்பதற்காக தன் வாழ்க்கையையே தியாகம் செய்தவன் இராமன்.

மேலும், தாய் போன்ற அன்புமும், தவத்தால் பெற்ற நலமும்,மக்களுக்கு வழிகாட்டும் மகனாகவும், குற்றத்தை தண்டிக்கும் நோயாகவும்,நாட்டிற்கு நன்மை செய்யும் மருந்தாகவும்,நுட்பமான பொருளை ஆராயும் அறிவாகவும் மன்னன் விளங்குகிறான் என்கிறார் கம்பர்.

"தாய் ஒக்கும் அன்பில், தவம்ஒக்கும் நலம் பயப்பில்
சேய் ஒக்கும் முன்னின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்: நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்"

(அரசியல்-4)

'தலைமையின் கடமைகள்

'இராமனுக்கு அரசனின் கடமைகளை வசிட்டர் வாயிலாக கம்பர் சுட்டிக் காட்டுகிறார்.அரசன் தீவினை நீங்கிய மேன்மையான அந்தணர் சொற்கேட்டு நடக்க வேண்டும்.நல்லறமும்,மனச்செம்மையும்,அருளும் கைக் கொள்ள வேண்டும். சூதாடல்,வேட்டையாடல், பகலில் தூங்குதல்,வம்பளத்தல், காமஇச்சை, பாட்டு, கூத்து, வாத்தியம் ஆகியவற்றில் பெரு விருப்பம் உள்ளவனாதல், வீணான திரிச்சல் முதலிய பத்துத் துக்கங்களைத் தவிர்க்க வேண்டும். எவரிடமும் பகை கொள்ளக்கூடாது. புலனடக்கம் பேண வேண்டும், பொருள் வளம் பெருக்கம் வேண்டும். நடுநிலையோடு அரசாள வேண்டும்.எவ்வுயிரிடத்தும் அனபு காட்ட வேண்டும். இன்சொல்,ஈகை, ஆராய்ச்சி, முயற்சி, தூய்மை, சீர்மை, வெற்றி,நீதி உடையவனாயிருக்க வேண்டும். காலங்கருத வேண்டும். முனிவர் உரை பேண வேண்டும்.என்ற கருத்துகளைக் கம்பன் தொகுத்துத் தருகிறான்.

மன்னுயிர் தாங்கும் தலைமை

மண்ணில் உள்ள உயிர்களுக்கு எவ்வித ஊறும் நேராதவாறு அவற்றை பேணி பாதுகாக்கும் பொறுப்பு அரசனையே சாரும் மக்கள் உயிரை தன் உடலில் வைத்து பாதுகாப்பவனே உண்மையான அரசன் என்பதை அயோத்தியா காண்டத்தில்

"வையம் மன்னுயிராக, அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு" (மந்தரை சூழ்-1423)

புறநானூற்றிலும் "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" (186-2) என்று போற்றுகிறது.

"மன்பதை காக்கும் நன்குடி" (காட்சிக்காதை-103) என்று சிலப்பதிகாரம் உரைக்கின்றது. இக்கருத்தை சீவக சிந்தாமணியில்

"உறங்கு மாயினும் மன்னவன் தண்ஒளி
குறங்கு தென்திரை வையகம் காக்குமால்" (248)

என்ற பாடல் வரிகளில் உடல் இளைப்பாறும்பொழுது உயிர் உறங்காமல் இருந்து உடலைக் காப்பதை போல அரசன் குடிகளைக் காக்கிறான். பெரியபுராணத்தில்

"மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கு எலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலன்"
(திருநகரச்சிறப்பு-14)

என்ற பாடலில் அக்காலத்தில் ஆட்சி செய்த அரசனை தலைவன் என்றும் ,உயிர் என்றும், கண் என்றும் மக்கள் போற்றி புகழ்ந்துள்ளனர். சேக்கிழார் எழுதிய மூர்த்தி நாயனார் புராணத்தில்

"மன்னனை இன்றி வைகும் மண்ணுலகு எண்ணும் காலை
இன்னுயிர் இன்றி வைகும் யாக்கையை ஒக்கும்" (29)

என்ற பாடல்வரியில் மன்னனே மண்ணின் உயிர் என்று போற்றிப் பாடுகிறார்.

மக்கள் வழங்கும் தலைமை உரிமை

கைகேயின் வரத்தால் இராமன் முடிசூடும் உரிமையை இழந்துவிட்டதை அறிந்த மக்கள் கொதித்தெழுகின்றனர். பரதனின் ஆட்சியை ஏற்காமல் தசரத மன்னனின் ஆணையை புறக்கணிக்கின்றனர். இராமனே தங்கள் தலைவன் என்று உறுதி ஏற்கின்றனர்.

"பெற்றுடைய மண் அவளுக்கு ஈந்து, பிறந்து உலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்து ஈண்டி
உற்று உறைதும்: யாரும் உறையவே சில நாளில்
புற்றுடைய காடு எல்லாம் நாடாகிப்போம்" (1712)

இராமன் நகரை விட்டுப் போகும்பொழுது, நாம் எல்லோரும் காட்டிற்கு போவோம், அங்கு ஒரு நாட்டை உருவாக்குவோம் என்ற ஒரு நிலைக்கு மக்கள் வருவதிலிருந்து இராமன் மக்களின் மனதை எவ்வாறு ஆட்சி செய்கிறான் என்பதை அறிய முடிகிறது. மேலும் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உன்னதமான தலைவனுக்கு புதியதொரு அரசின் தலைமை உரிமையை மக்களே வழங்குகிறார்கள்.

தாயாகப் பேணும் தலைமை

முடியாட்சியாலும்,மக்களின் இறையாண்மையாலும் தலைமையான அரசபதவியை அடைந்து விட்டாலும், நாட்டு மக்களை கண்ணின் இமைபோல் பாதுகாப்பவனே உண்மையான தலைவன் ஆவான். ஒரு தாய் தன் குழந்தையை எவ்வாறு போற்றி பாதுகாக்கிறாளோ அதுபோல் மக்கள் என்னும் குழந்தையை அரசன் என்னும் தாய் போற்றி பாதுகாப்பதே தலைமையின் தலையாய கடமையாகும் என்பதை"நாயகன் அல்லன்: நம்மை , நனி பயந்து எடுத்து நல்கும் தாய் என இனிது பேணத் ,தாங்குதி தாங்குவோரை! (கிஷ்கிந்தா-அரசியல்-4128) என்று உரைக்கிறார் கம்பர்.

புறநானூற்றிலும் "தாயில் தூவாக் குழவி போல், ஓவாது கூஉ உநின் உடற்றியோர் நாடே" (4:18,19) என்ற கருத்து இடம் பெற்றுள்ளது. திருக்குறளிலும்

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (544)

என்று தெய்வப்புலவர் மொழிகிறார்.

குடிகளை ஓம்பும் தலைமை

நாட்டில் வாழும் குடிமக்களை பாதுகாக்கும் பொறுப்பு மன்னனையே சேரும். மக்களையும் மற்ற உயிரினங்களையும் பாதுகாக்கும் பொழுது தன்னுயிரையே தரும் தலைவனை மக்கள் தேவராக வணங்குவர் என்பதை,

"ஆவுக்கு ஆயினும் ,அந்தணர்க்கு ஆயினும்
யாவர்க்கு ஆயினும் எளியவர்க்கு ஆயினும்

சாவப் பெற்றவரே,தகை வான் உறை
தேவர்க்கும் தொழும் தேவர்கள் ஆகுவார்." (2651)

என்கிறார் கம்பர்.

வேற்றுநாட்டு அரசனாக இருந்தாலும் போர் புரிவதற்கு முன் அறத்தோடு நின்று பிற உயிர்களை பேணும் தகையாளனாக காட்சியளிக்கிறான் பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதி என்று நெட்டிமையார் புகழ்ந்துரைக்கிறார். (புறம்-9:1-5)

பிறப்பிலே உருவாகும் தலைமைப் பண்பு

இராமன் இளவரசனாயிருக்கும் பொழுதே மக்களை நேசிக்கிறனவாக, நெருங்கி பழகக் கூடியவனாகவும் இருந்திருக்கிறான். அவன் வீதியில் செல்லும் பொழுது எதிரில் வரும் மக்களை "முதிர் தரு கருணையின் முகமலர் ஒளிர, எது வினை? இடர் இலை இனிதின் நும் மனையும்? மதிதரும் குமரரும் வலியர் கொல்? (311) என்று கேட்பது அவன் வழக்கம்.இந்த அன்பே மக்களின் விருப்பத்திற்குரியவனாகவும் தலைமைத்துவ பண்பு நிறைந்தவனாகவும் ஆக்குகிறது.

அரசியலில் தலைமைத்துவம் பெறும் பயிற்சிகள்

இராமனின் பதினான்கு ஆண்டு வனவாசம் ஒரு சிறந்த அரசியல் தலைவனாக உருவாவதற்கு பயிற்சிக் காலமாய் அமைகிறது. சாமான்ய மக்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களைத் தானே அனுபவித்து அறிகிறான். முனிதன் எவ்வாறு, ஏன், எதனால் தவறு செய்கிறான் என்பதை தெரிந்து கொள்கிறான். வசிட்ட முனிவர் போதித்திருந்தாலும் உணரமுடியாத அரிய பாடங்களை இராமன் அனுபவ அறிவால் உணர்ந்ததோடு மட்டுமின்றி, வேற்று நாட்டு அரசனான சுக்கிரிவனுக்கும் பாடம் போதிக்கும் அரசியல் ஆசானாக உயர்ந்து விளங்குகிறான். ஒரு சிறந்த அரசியல் தலைவனாக விரும்புகிறவன், ஒரு சில ஆண்டுகளாவது அறத்திற்காகப் போராடி, பட்டறிவால் பாடம் பெற வேண்டும். என்பதையே இராமனின் வாயிலாகக் கம்பர் உணர்த்தும் அறிவுரையாகும்.

தலைமையின் தவறுகள்

தலைமையான அரச பதவியில் இருந்தாலும் சில நேரங்களில் மதிபிறழ்ந்து சில தவறான செய்கைகளால் தன்னுடைய பெருமையையும், குலப்பழியையும், சாபத்தையும் ஏற்றுக்கொள்வதோடு வாழ்க்கையும் தொலைத்து, நாடு நகரத்தையும் இழந்து நிற்கும் நிலையை நம் இலக்கியங்களில் வாயிலாக காணமுடிகிறது. இவையெல்லாம் பெண் வழி சேறலால் நிகழ்வதாக கம்பர் குறிப்பிடுகிறார்.

இராமன் சீதையின் புலவியால் உண்டான சொற்களை கேட்டு மதி பிறழ்ந்து பொய் மானை நம்பி போய் குலப்பழத்தேடிக் கொண்டதை

கம்பர்

"வம்பு இழை கொங்கை வஞ்சி
வனத்திடை தனியள் வைக
கொம்பு இழைமானின் பின்போய்க்
குலப்பழி கூட்டிக் கொண்டீர்" (3526)

என்ற பாடலடிகளில் விளக்குகிறார்.

உருமையின்மீது வாலி கொண்ட காமம் இத்தகைய தன்மை வாய்ந்ததாகும்.

சிலப்பதிகாரத்திலும் கோப்பெருந்தேவியின் ஊடலை தீர்ப்பதற்காக பாண்டிய மன்னன் அந்தப்புரம் நோக்கி செல்லும் பொழுது பொற்கொல்லனின் கபட சொல் கேட்டு, தவறான ஒரு சொல்லால் பாண்டிய நாடே அழிவுக்குள்ளாயிற்று. (மதுரை-16:134,138,139)

சீவக சிந்தாமணியிலும் பெண் வழி சேறல் காரணமாக தன் நாட்டையும், குடும்பத்தையும், உயிரையும் இழக்கிறான் சச்சந்தன் என்னும் மன்னன். "பெண் வழி சேறல் என்பது இன்பம் காரணமாக மனையாள் வழி ஒழுகுதல் என்று பொருளுரைக்கிறார் மணக்குடவர்".
(கம்பனில் அரசியல்கோட்பாடு-ப.45)

நிறைவுரை

கம்பராமாயணத்தில் இராமனின் தலைமையின் கீழ் உலகமே செயல்பட்டு வருவதற்கு காரணம் அவனுடைய ஆளுமை பண்பாகும். இப்பண்பானது இராமனிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. ஆவன் தன் நாட்டை இழந்தாலும் உலக மக்களின் மனத்தையும் ஆளும் தலைமைத்துவம் நிறைந்த தலைவனாக உருப்பெறுகிறான். கம்பராமாயணத்தை ஆழ்ந்து ஆராய்ந்தால் இன்னும் பல தலைமைத்துவமும், அவற்றின் பன்முகங்களையும் உய்த்துணருவதோடு, கம்பனின் தலைமைத்துவ ஆளுமையையும் அறியமுடியும்.

கம்பராமாயணமும் சட்ட அமலாக்கமும்

திருமிகு. ப.மோகன்தாசு
வழக்குரைஞர்,

இலக்கியமும் சட்டமும்

உயர்ந்த இலக்கை (அதாவது இலட்சியத்தை) இயம்புவதால் இலக்கியம் எனப்படுகிறது. சட்டமும் மக்களின் வாழ்க்கை முறையை நன்னெறிப்படுத்தும் உயர்ந்த இலக்கைக் கொண்டுள்ளது. இவ்வகையில் இலக்கியமும் சட்டமும் மக்களின் வாழ்க்கைப்பாதையில் சிறந்த வழிகாட்டியாக தமக்கே உரிய தனிப்பாணியில் இயங்குகின்றன. அரசு நிர்வாகம் சட்டத்தை அமுல் படுத்துவதிலும் நீதிமன்றங்கள் சட்டத்தின்படி நீதி பரிபாலனம் செய்வதிலும் இலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. காலந்தோறும் உலாவரும் கம்பராமாயணம் போன்ற உயர்நிலை இலக்கியங்கள் நீதி பரிபாலனம் செய்வதில் பெரும் பங்கு வகிப்பதால் அவற்றை நீதி நூல்கள் என்று அழைப்பது சாலச் சிறந்ததாகும்.

கம்பராமாயணத்தில் பொதிந்துள்ள சட்ட நூல்களில் காணும் சமூக நீதிக் கருத்துக்கள்

நீதி பரிபாலனம் செய்யும் நீதிமன்றங்கள் சட்ட நூல்களின் துணைக்கொண்டு அவற்றின் அடிப்படையில் வழக்குகளில் தீர்ப்பு அளிக்கின்றன. சட்ட நூல்களில் உள்ள சமூக நீதிக்கருத்துகள் பலவும் கூர்ந்து நோக்கினால் கம்பராமாயணம் போன்ற நல் இலக்கிய நூல்களில் கூறப்பட்டுள்ளவற்றை ஒத்திருப்பது தெரிய வரும். எடுத்துக்காட்டாக நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் சட்டப் பிரிவு 51 அளவில் சகோதரத்துவம் ஒவ்வொரு குடிமகனின் கடமையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இத்தருணத்தில் கம்பராமாயணக் காட்சியை ஒப்பு நோக்குதல் பயன் தரும். வீடணன் நண்பனான பின் இராமன் அவனைச் சகோதரனாக ஏற்றுக்கொண்டு பின்வருமாறு கூறுகின்றான்:-

'குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம் எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனேம்"

(யுத்த. வீடணன் அடைக்கலப்படலம், பா.448

வீடணனைச் சேர்த்து சகோதரர்கள் ஏழு பேர்கள் ஆனதை கம்பர் கூறும் விதத்தில் சட்ட அங்கீகாரம் பெற்ற சகோதரத்துவம் மிகவும் உன்னத நிலையை அடைகிறது.

இந்து திருமணச் சட்டம், 1955 இருதார மணத்தைத் தடை செய்துள்ளது 'இந்த இப்பிறவிக்கு இருமாதரை சிந்தையாலும் தொடேன்" (சுந்தர, சூளாமணிப் படலம். பா.638) என்று ராமன் சீதைக்கு அளித்த வரம் பற்றி கம்பன் குறிப்பிட்டுள்ளது கம்பராமாயணத்தின் உயர்ந்த சட்ட அமலாக்கக் கருத்தைப் பிரதிபலிக்கிறது.

நாட்டிடைச் சட்டங்களின் கீழ் தூதரக உறவு கொண்டுள்ள நாடுகளில் ஒரு நாட்டின் தூதரக அலுவலரை நன்முறையில் மற்றொரு நாடு நடத்த வேண்டியதைப் பற்றி விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மயிடன் என்ற இராவணனின் தூதன் இராமனை அடைந்த போது வானரசேனை அவனைத் தாக்க முனைந்த போது தூதனை விடுமாறு (தூதன் இவனைக் களியன்மின்) இராமன் வானரரிடம் கூறியதாக கம்பர் படம் பிடித்துக் காட்டுகிறார். (யுத்த, அதிகாயன் வதைப் படலம். பா. 1714)

குடியரசு நாட்டில் சட்டத்தின் ஆட்சிப்படி மக்கள் அனைவரையும் பாகுபாடு இன்றிக் காக்கவேண்டியது அவசியம் என்று நமது உச்சநீதிமன்ற நீதி அரசர், முனைவர் சவுகான் நொய்டா நிறுவனக் குழுமம் எதிர் நொய்டா. (சட்ட இதழ் (2011) 6 *SCC* 508-ல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது.) வழக்கில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராமன் குடிமக்களை எவ்வாறு ஆட்சி செய்தான் என்று கம்பர் குறிப்பிடும்போது 'செங்கோலானது மனுவற நூலில் கூறியபடி நிகழ, பூபாரங்களைப் போக்கிக் காத்து வந்தான்" என்றும் 'அறத்தையும், நாட்டையும் காத்தருளினான்" என்றும் (யுத்த காண்டம், விடை கொடுத்த படலம், பா , 4308 -4309) கூறியுள்ளார்.

நீதிபரிபாலனத்தில் கம்பராமாயணக் கருத்துக்களைப் பின்பற்றுவதற்கான வாய்ப்புக்கள்

அரசியல் அமைப்புச் சட்டத்தில் 136 மற்றும் 142 ஆகிய சட்ட விதிகள் நமது உச்சநீதிமன்றத்திற்கு சிறப்பு அதிகாரங்களை வழங்கியுள்ளன. அதன்படி எந்த வழக்கிலும் அதன் தன்மைக்கு ஏற்ப முழுமையான நீதி வழங்கும் நோக்கில் சிறப்புப் பரிகாரங்களை உத்தரவாகப் பிறப்பிக்க இயலும். அரசியல் அமைப்புச் சட்ட விதி 372-ன்படி நீதி, நேர்மை மற்றும் நன்மனச் சான்று என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் சட்ட விதிகள் முரண்படாத போது இலக்கியக் கோட்பாடுகளை மேற்கோள்காட்டி இந்திய நீதிமன்றங்கள்

வழக்குகளில் தீர்ப்பினை வழங்கலாம். மேலும் சட்ட விதிகளும் நிர்வாக உத்தரவுகளும் (சமூகப்) பொது நலக் கருத்துக்கு எதிராக இருக்கக்கூடாது என்று சில சிறப்புக் சட்டங்கள் கூறுகின்றன. பொது நலக் கருத்துக்கு உகந்தது எது என்பதைக் கண்டறியத் தேவையான இடங்களில் கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களின் துணையை நாடலாம்.

நீதிபரிபாலனத்தில் கம்பராமாயணம்

மேதகு சென்னை உயர்நீதி மன்றம் சில வழக்குகளில் கம்பராமாயணத்தின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கியுள்ளது. சிரிணிவாச பிரசாத் எதிர் தமிழ்நாடு அரசு (சட்ட இதழ் *CCJ* 2011 *NHC*6521-ல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது) வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளையின் தீர்ப்பை அளித்த மேதகு நீதியரசர் இராமசுப்பிரமணியன் சீருடை அணிந்து ஆயுதம் தாங்கிப் பின் தொடரும் சில மனிதர்களால் ஒருவரைக் காப்பது அரிது என்றும் தர்மம் போன்ற நல்லறங்கள் அவரைக் காக்க இயலும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார். தீர்ப்புரையில் விதிவலியால் கானகம் சென்ற இராமனை நல்லறங்களாகிய நடுவு நிலைமையும் சத்தியமும் காத்தன என்பதை ஒப்பிட்டுள்ளார். (அயோத்தியா. தைல மாட்டு படலம். பா. 571)

யுனைட்டட் இந்தியா காப்சிட்டு நிறுவனம் (வரையறுக்கப்பட்டது) எதிர் இராதாகிருஷ்ணன் (சட்ட இதழ் 2009 (2) *TNMAC* 546-ல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது). வழக்கில் சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரைக்கிளை தங்களின் ஒரே குழந்தையை மோட்டார் வாகன விபத்தில் இழந்த பெற்றோருக்கு எவ்வளவு தொகை வழங்கினாலும் இழப்பை ஈடு செய்ய முடியாது என்று சுட்டிக்காட்டியது. தீர்ப்புரை வழங்கிய மேதகு நீதியரசர் கிருபாகரன் கம்பராமாயணத்தில் இராமன் காட்டுக்குச் சென்ற போது புத்திர சோகத்தால் மன்னன் தசரதன் இறந்ததை ஒப்பிட்டுள்ளார்.

தெய்வானை ஆச்சி எதிர் சிதம்பரம் செட்டியார் வழக்கில் (வலைத்தளம் *IndianKannan.org/doc/*1165947-ல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது) எழுந்த விவாதப் பொருள்களில் ஒன்று முதல் வாதிக்கும் மூன்றாம் பிரதி வாதிக்கும் இடையில் நடந்த திருமணம் மணமக்களின் குல வழக்காறுகளின் அடிப்படையில் சம்பிரதாயங்களைப் பின்பற்றி நடந்ததா என்பதாகும். இராமாயணத்தில் குறிப்பிடப்படும் கட்டாயத் திருமணச் சடங்குகளைப்பற்றி ஆய்வு செய்து வேத மந்திரங்கள்

ஒலிக்க மணமகளை மணமகனுக்கு கன்னிகாதனம் செய்வது மற்றும் புனித வேள்வித்தீயினை மணமக்கள் இருவரும் கை கோர்த்து வலம் வருவது பற்றிக் குறிப்பிட்டுள்ளது சென்னை உயர்நீதி மன்றம். மேதகு நீதியரசர் சூரியநாராயணராவ் குறிப்பிட்டுள்ள சடங்குகள் கம்பராமாயணத்தில் பால காண்டத்தில் கடிமணப் படலத்தில் (பாடல்கள் 1189, 1190, 1195 மற்றும் 1196.) சீதை மற்றும் இராமன் திருமணம் செய்து கொண்ட போது பின்பற்றியவற்றை ஒத்துள்ளதைக் காணலாம்.

அம்புஜம் அம்மாள் எதிர் தமிழகஅரசு வழக்கில் (சட்ட இதழ் 1954 *(AIR (Mad)*326-ல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது.) காவல் துறை அலுவலகர்கள் சாட்சிகளை தயார் செய்து தூண்டில் போடுவது போல் குற்ற நிகழ்வுகளில் பங்கு பெறச் செய்து உண்மைக் குற்றவாளிகளைப் பிடிக்க 'வலைவீழ் சாட்சிகளை" மேற்கொள்வது தொடர்பாக மேதகு நீதியரசர் இராமசுவாமி ஆய்வு செய்துள்ளார். அப்போது ஒற்றர்கள்,

வலைவீழ் சாட்சிகள் மற்றும் இதர அரசு ஏவலர்கள் குற்றங்களைக் கண்டுபிடித்தலிலும் நீதிபரிபாலனத்திலும் மன்னர்களால் நியமிக்கப்பட்டுள்ளதை இராமாயணம் அங்கீகரித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனுவாச ஐயர் எதிர் யோகாம்பாள் அம்மாள் என்கிற இலக்குனி அம்மாள் (சட்ட இதழ் 1928 (1) *MLJ* 530-ல் தீர்ப்புரை வெளி வந்துள்ளது.) கீழமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்த வாதியானவர் பிரதிவாதியின் காலஞ்சென்ற சகோதரரின் கைம்பெண் ஆவார். கணவனின் குடும்பத்தாரரிடம் உள்ள பாகம் பிரிக்கப்படாத சொத்தில் ஜீவனாம்ச ஏற்பாடு செய்வது தொடர்பான வழக்கெழு வினாவை ஆய்வு செய்த மேதகு நீதியரசர் திருவேங்கட ஆச்சாரியார் சாதாரண சூழ்நிலையில் கணவனுடன் சேர்ந்து அவனுடைய சுக துக்கங்களில் பங்கேற்று மனைவி வாழ வேண்டிய கடமை பற்றிக் குறிப்பிட்டு அதற்கு வலு சேர்க்கும் வகையில் சீதையின் வாழ்க்கையை இந்துக்கள் எப்படி சிறந்த முன் மாதிரியாக எற்றுக்கொண்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இலக்கிய வழியிலான சட்ட அமலாக்கத்தில் அரசு நிர்வாகத்தின் பங்கு

அரசு நிர்வாகமானது நிறைய சட்டங்களின் கீழும் சட்டங்களின் அடிப்படையில் அல்லாத நிர்வாகத் திட்டங்கள் மற்றும் கொள்கையின் கீழும் பல்வேறு விதிமுறைகளை வகுக்கும் சூழ்நிலை ஏற்படுகின்றது. அங்கன்வாடி மையங்களில் உதிவயாளராக அல்லது மதிய உணவுத்

திட்ட அமைப்பாளராக நியமனம் செய்வது தொடர்பாக தமிழக அரசின் சமூக நலம் மற்றும் மதிய உணவுத் திட்டத்துறை இயக்ககம் வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகள் இலக்கியம் சார்ந்த சட்ட விதிகளை அரசு அமுல்படுத்துவது தொடர்பான சிறந்த எடுத்துக் காட்டாகும். அந்த விதிமுறையில் நியமனம் செய்யப்படுவோர் தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்பதும் திருக்குறளில் நன்கு புலமை பெற்றிருக்க வேண்டும் என்பதும் அடங்கும். வசந்தா எதிர் மாவட்ட ஆட்சியர், வழக்கில் (சட்ட இதழ் 2007 (6) *MLJ* 402 -ல் தீர்ப்புரை வெளியிடப்பட்டுள்ளது.) மாண்புனிகு சென்னைஉயர்நீதிமன்ற நீதியரசர் சந்துரு அவர்களின் பரிசீலனைக்கு வந்த போது மேற்படி அரசு விதிமுறைகளை அங்கரித்துள்ளார். இதுபோன்று அரசுப் பணி விதிமுறைகளில் நியமனம் செய்யப்படுவோர் கம்பராமாயணத்தில் புலமை பெற்றிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும் என்று சேர்க்கப்படலாம் என்பதை இத்தருணத்தில் நினைவில் கொள்ளலாம்.

முடிவுரை

ஐந்தாண்டு சட்டப்படிப்பில் அண்மைக்காலங்களில் மாணவர்கள் பொருளாதாரம், வரலாறு மற்றும் சமூகவியல் போன்ற இதர பாடங்களைப் படிக்கிறார்கள். சட்டவியலில் இலக்கியவியல் கொண்டுள்ள தொடர்பால் சட்ட மாணவர்கள் கம்பராமாயணம் போன்ற தமிழ் இலக்கியங்களைக் கற்கும் வகையில் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது என் தாழ்மையான கருத்து. மேலும் அனைத்துப் பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டங்களில் நீதி போதனை தொடர்பான பாடங்கள் சேர்க்கப்பட்டு அதில் இலக்கியக் கோட்பாடுகளும் சட்டக் கோட்பாடுகளும் கற்பிக்கப்பட வேண்டும். மேற்படி நடவடிக்கைகள் காலப்போக்கில் சட்ட அமலாக்கத்தில் கம்பராமாயணம் போன்ற தமிழ் இலக்கியங்களின் பங்கை அதிகரிக்கச் செய்யும் என்பது திண்ணம்.

இராமகாதை வகுக்கும் மேலாண்மைத் தத்துவங்கள்

முனைவர் ச.யோகலெட்சுமி
வங்கி மேலாண்மைத்துறைப் பேராசிரியை, அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

முன்னுரை

மேலாண்மை என்பது பணியாளர்களைச் சுறுசுறுப்பாக்கும் ஒரு கலையாகும். இது பணியை பணியாளர்கள் மூலம் செய்து முடிக்க உதவி செய்கிறது. எங்கெல்லாம் நோக்கங்கள் நன்கு அமைக்கப்பட்டு மற்றும் கூட்டுமுயற்சிகளின் மூலம் அடையப்பெற வேண்டுமோ, அங்கெல்லாம் குழு முயற்சிகளை பொது இலக்கை நோக்கி வழி காட்டவும், அவற்றை ஒருங்கிணைக்கவும், மேலாண்மையானது இன்றியமையாததாகி விடுகின்றது. பெரும்பாலான மனித நோக்கங்கள் கூட்டு முயற்சியாலேயே அடையப் பெறுவதால், மேலாண்மையானது உலகளவில் பயன்படுத்தப்படுகிறது. சுருங்கக் கூறினால், மேலாண்மை என்பது தொழிலை நிர்வகிக்கும் பணி மட்டுமல்ல. இது எங்கும் காணப்படும் ஒரு வித்தியாசமான மற்றும் ஆட்சி செலுத்துகிற நடவடிக்கை ஆகும். இதை நாம் அனைத்து விதமான சமூக அமைப்பிற்கும் தேவையான துணைக்கருவி எனலாம். அதாவது மேலாண்மைப் பணியானது உலகளவில் உபயோகப்படுத்தப்படுகிறது. சமுதாய வரலாற்றில் இதன் முக்கியப்பங்கினை விவரிக்கும் பொழுது சிட்டர் டிரக்கர் பின்வருமாறு கூறுகிறார்: "சமுதாயத்தின் அங்கமாக விளங்கும். மேலாண்மைக்கு இயற்கை வளமிக்கதாக ஆக்கும் கடமையளிக்கப்பட்டுள்ளது. அதாவது, மேலாண்மைக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட பொருளாதார மேம்பாட்டுக்கான பொறுப்பானது அளிக்கப்பட்டுள்ளது. எனவே இது நவீன காலத்தின் அடிப்படை ஆர்வத்தை பிரதிபலிக்கிறது".

தொழில் மற்றும் வணிகத்தின் வளர்ச்சி மற்றும் உரிமையும் கட்டுப்படுத்துதலும், பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்ட தொழில் நிறுவன அமைப்புகளின் வளர்ச்சி போன்றவையால், மேலாண்மை என்பது ஏறக்குறைய ஒரு வாழ்க்கைக் கல்வி போலவே ஆகிவிட்டது. தற்பொழுது மேலாண்மை பலவகைப்பட்ட வாழ்க்கைத் தொழிலாளரைக் கொண்டுள்ளது. இது ஒரு தொழில் நிறுவனத்தின் தொடக்க காலத்தில் அமைப்பில் மட்டுமல்லாமல், அதன் விரிவாக்கம், சுருக்குதல்,

போன்றவை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும், பங்குகொள்கிறது. நல்ல முடிவுகளை அடைய விரும்பும் குழுப் பணிக்கு இது புதுப்பார்வை, கற்பனை மற்றும் கருத்துக்களை அளிக்கிறது. வெற்றிகளை சரிப்படுத்தியும், பிரச்சினைகளை சமாளித்தும், குழு உணர்வை உருவாக்கியும், எந்தவித தடங்கலுமின்றி பணி நடப்பதை உறுதி செய்கிறது. எனவே, டிரக்கர் சொன்னதைப் போல மேலாண்மை என்பது ஒவ்வொரு தொழிலுக்கும் உயிர் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்த அடிப்படைக் கூறாகும்.

மேலாண்மையின் பொருளும் இலக்கணமும்

மேலாண்மை என்ற சொல் மிகவும் ஆழமானது. அதற்குப்பல அர்த்தங்கள் பொருட்கள் உண்டு. சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதன் பொருள் வேறுபடும். அது ஒரு செயல், நடவடிக்கை, மக்களின் கூட்டம். அச்செயல்கள் மக்களின் கூட்டம் என்றால் முக்கியமான முடிவுகள் எடுக்கக்கூடிய அதிகாரம் பெற்ற குழுவைக் குறிக்கும்.

மேலாண்மையின் இலக்கணத்தை வரையறுக்கும் பொழுது ஆசிரியர்களுக்கிடையே நிறைய கருத்து வேறுபாடுகள் உள்ளன. மேலாண்மையை வரையறுக்கும் பொழுது சிலர் மனித நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுதலை முக்கியமான பணியாகவும் மற்றும் சிலர் அதிகபட்ச இலாபத்தை அடைதலை முக்கியமான பணியாகவும் கருதுகின்றனர். மேலாண்மைச் சிந்தனையின் வளர்ச்சி மூன்று மாறுபட்ட கட்டங்களைக் கடந்துவிட்டதால் கருத்து வேறுபாடு என்பது இன்னும் நடைமுறையில் உள்ள ஒன்றாகிவிட்டது. இப்பொழுது நாம் மேலாண்மை அறிவியலின் மேற்பட்ட சிந்தனையாளர்களால் வரையறுக்கப்பட்ட இலக்கணங்களுள் சிலவற்றை காணலாம்.

கூன்ட்ஸ் மற்றும் ஓ டொன்னேல் கூறும் இலக்கணம் "குழு இலக்குகளை அடையும் வண்ணம் பணியாட்கள் குழுக்களாக தத்தம் பணிகளை திறமையாகவும் வெற்றிபெறும் வகையிலும் பணிபுரியத் தேவையான உட்புறச் சுற்றுச் சூழலை ஏற்படுத்தியும் நிர்வகித்தும் வரும் மேலாளரின் வேலையை மேலாண்மையாகும்.

நமது சமுதாயமே ஒரு கூட்டுமுயற்சியை அடிப்படையாகக் கொண்டே இயங்குகிறது. அனைத்து தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், மத நிறுவனங்கள், வங்கிகள், காப்சிட்டு நிறுவனங்கள், போக்குவரத்து நிறுவனங்கள் மருத்துவமனைகள், நமது மத்திய

மாநில அரசாங்கம் ஆகிய அனைத்துமே சமுதாய அமைப்பின் பல்வேறு செயற்பாட்டுக்கு அதன் குறிக்கோளை அடைய இந்த நிறுவனங்களே நமது வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து தருகின்றன. பல்வேறு விதமான மனிதத் தேவைகளையும் அடிப்படைத் தேவைகள், பாதுகாப்பு குறித்த தேவைகள். தன்னை உணருதல், அன்பை அடிப்படையாகக் கொண்டே தேவைகள் கௌரவம், முதலிய அனைத்தையும் இவற்றையெல்லாம் தொழில்நிறுவனங்கள் செயல்படுத்துகின்றன.

மனிதன் தனியாக அல்லாமல் ஒரு குழுவிலே இணைந்து அதன் உறுப்பினராகி வேலை செய்யும்பொழுது அவனுடைய தனிமனித ஆற்றல் மேம்படுகிறது என்பது ஒரு கோட்பாடு. நன்கு அமைக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு குழுவால் இருக்கக்கூடிய வளங்களையெல்லாம் ஒரு சிறந்த நோக்கத்திற்காக திரட்டி அதை செம்மையாகப் பயன்படுத்தி, மிகுந்த பலன்களை சுலபமாகவும் செம்மையாகவும் அடையமுடியும். அக்குழு அதன் உறுப்பினர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் மிகவும் எளிதாகத் தீர்க்கும் திறனை அடைகிறது.

கூன்ட்ஸ் மற்றும் ஓ டொன்னேல் என்பவர்களின் கருத்துப்படி, பின்வரும் நோக்கங்களை அடைவதற்கே மேலாண்மையின் தத்துவங்கள் மிகவும் அவசியமாகிறது.

1. திறமையை வளர்ப்பதற்கு.
2. மேலாண்மைக்கு உறுதியான மற்றும் நிலையானதொரு வடிவத்தை அளிப்பதற்கு
3. மேலாண்மையில் ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்வதற்கு
4. இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் திறமையை வளர்ப்பதன் மூலம் சமூக நோக்கங்களை அடைவதற்கு

இந்த நோக்கங்களை அடைவதற்காக, மேலாண்மையின் தந்தை என அழைக்கப்படும் ஹென்றி ஃபேயால் என்பவர், மேலாண்மையின் அனைத்து சூழ்நிலைகளிலும் உபயோகப்படுத்தும் வண்ணம் 14 தத்துவங்களை உருவாக்கித் தந்திருக்கிறார். அவையாவன

1. பணிப்பகுப்பு
2. அதிகாரமும், பொறுப்பும்
3. ஒழுக்கம்

4. ஆணை இசைவு
5. வழிகாட்டலில் இசைவு
6. பொது நலனுக்காக தனிப்பட்டவர் கீழ்ப்படிதல்
7. பணியாளர் ஊதியம்
8. பணிகளை மையப்படுத்துதல்
9. வரையறுக்கப்பட்ட அதிகார வரிசை
10. வரிசை
11. நேர்மை நெறி
12. நிலையான பணிக்காலம்
13. தன் முயற்சி
14. ஒற்றுமையே பலன்

இந்தப் பதினான்கு மேலாண்மைத் தத்துவங்களில் சிலவற்றை கம்பனின் பார்வையில் கீழ்நோக்குவோம்.

கம்பனும் மேலாண்மையும்

மேலாண்மை என்ற அறிவியல் பாரத மண்ணுக்குப் புதிதல்ல. நாம் இதை மேற்கிலிருந்து கடன் வாங்கியதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது தவறே. கம்பனின் இராமகாதை, மகாபாரதம், திருக்குறள் போன்ற நமது பழமையான தமிழ் நூல்களில் அறியப்படாத மேலாண்மைத் தத்துவங்களே இல்லை என்று கூறலாம். கம்பனின் மேலாண்மைச் சிந்தனைகளை அறியும் ஒரு முயற்சியே இந்த ஆய்வுக்கட்டுரை ஒரு மேலாண்மை ஆசிரியை என்ற முறையில் ராமகாதை வகுத்த மேலாண்மைக் கோட்பாடுகளில் சிலவற்றைக் பின்வரும் பக்கங்களில் சமர்ப்பித்துள்ளேன்.

இந்த பதினான்கு மேலாண்மைக் கோட்பாடுகளை அடைவதற்கு ஒரு மேலாளாருக்கு மூன்று வகையான திறன்கள் தேவை. அவையாவன

1. கருத்துச்செறிவுத் திறன் *(Conceptual skills)*
2. தொழில் நுட்பத்திறன் *(Technical skills)*
3. மனித உறவு மேம்பாட்டு திறன் *(Human Relations skills)*

இந்த மூன்று விதமான திறன்களை கம்பனின் பல கதாபாத்திரங்கள் மூலம் நாம் அறியமுடியும்.

பணிப்பகுப்பு மற்றும் அதிகாரத்தையும் பொறுப்பையும் வழங்குதல்

முதலாவதாக பணிப்பகுப்பு என்கிற மேலாண்மை தத்துவத்தை

ராமகாதையில் ஆய்வோம். ஒரு செயல் என்பது தொழில் நுட்பமாக இருந்தாலும் சரி அல்லது மேலாண்மை சார்ந்ததாக இருந்தாலும் சரி, பணிப்பகுப்பு என்பது எல்லாவிதமான செயலுக்கும் பொருந்தும் அனைத்துப் பணிகளையும் ஒருவரே மேற்கொள்ளாமல் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பணியினையும் ஒவ்வொருவருக்கும் அழித்து திறமையுடன் செயலாற்ற வாய்ப்பளித்தலே பணிப்பகுப்பு ஆகும். அவரவர் திறமைக்கேற்ப பணிகள் அளிக்கப்பட்டால், பணியாட்கள் திறமையும் மேலும் பெருகும், அவர்கள் பணியில் தனித்தேர்ச்சி பெற இயலும் என்பதில் சிறிதும் ஐயனில்லை. பணிப்பகிர்வோடு பணியைச் செய்வதற்கான அதிகாரமும், பொறுப்பும் பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

ஃபேயாலின் கருத்துப்படி, அதிகாரம் என்பது ஆணைகளை பிறப்பிக்கும் உரிமை மற்றும் கீழ்ப்படிதலை வருவிக்கும் அதிகாரமும். மேலதிகாரிகளின் விருப்பத்திற்குரிய வழியில் பணியை செய்து முடிக்கும் கடமையே பொறுப்பாகும். இவை இரண்டும் ஒன்றையொன்று தொடர்புடையவை ஆகும். எனவே, இவை இரண்டும் இணைந்தே செயல்பட வேண்டும். ஏனென்றால், அதிகாரனில்லாத பொறுப்பு ஒருவருடைய பணியை பயனற்றதாக்கிவிடும். அதேபோல், பொறுப்பற்ற அதிகாரமும் ஒருவரது செய்கையில் பொறுப்பின்மையை உண்டாக்கிவிடும். பணிப்பகுப்பு மற்றும் அதிகாரமும், பொறுப்பும் வழங்குதல் குறித்த கம்பனின் பாடல்கள் பின்வருமாறு:

இராவணன் இராமபிரானுடன் யுத்தம் செய்ய முடிவு செய்து, போர்த்திட்டம் தீட்டி கீழ்க்கண்ட கட்டளைகளை பிறப்பித்து மொத்த வேலையையும் பகிர்ந்து அளித்தான். முதலாவதாக பிரகஸ்தனை கோட்டையின் கீழ்த்திசை வாயிலில் நிற்குமாறு பணித்தான், அது குறித்த யுத்தகாண்டத்து கம்பராமாயண பாடல் பின்வருமாறு:

"காட்டிய காகேயர் கொழுநினைக் கற்றைக் காலத்
தீட்டிய படைக்கை விரச்சேனையின் தலைவ! தெள்ளி
ஈட்டியஅ ர்க்கர்தானை இருநூறு வெள்ளங்கொண்டு
கீழ்த்திசை வாயில் நிற்றி நின்பெருங் கிளைகளோடும்"

(யுத்தகாண்டம்)

என்றும், மகோதரனை தெற்கு வாயிலில் நிற்குமாறும் பணித்தான்

"காலன்தன் களிப்புத்தீர்த்த மகோதரக் காளையோய்!
மாலொன்று மனத்து வீர மாபெரும் பக்கனோடும்

கூலங்கொள் குரங்கை எல்லாம் கொல்லுதி வெள்ளையான
நால்ஐம்ப தோடும் சென்று நமன்திசை வாயில் நண்ணி" (மேலது)

என்றும், இந்திரசித்தை இருநூறு வெள்ளம் சேனையோடு-மேல்திசைவாயில் செல்லுமாறு இவ்வாறு ஆணையிட்டான்.

"ஏற்றம்என் சொல்லின் என்பால் இந்திரன் பகைஞ! அந்நாள்
காற்றினுக்கு அரசன் மைந்தன் கடுமைநீ கண்டது அன்றோ
நூற்றிரண்டு ஆயவெள்ளம் நுன்பெரும் படைஞர்சுற்ற
மேற்றிசை வாயில் சேர்ந்த விடிவதன் முன்னம்வீர" (மேலது)

என்றும், விரூபாக்கனை இலங்கை நகர் காக்க மந்திரிமாரோடு கிளம்புமாறு இவ்வாறு பணித்தான்.

"இந்நெடுங் காலம் எல்லாம் இமையவர்க்கு இறுதி கண்டாய்
புல்நெடும் குரங்கின்சேரல் புல்லிது புகழும் அன்றால்
அந்நெடு மூலத்தானை அதனொடும் அமைச்சரோடும்
தொல்நெடும் நகரிகாக்க விருபாக்க! என்னச் சொன்னான்" (மேலது)

பின்னர் வடதிசையில் வாயில் காக்க, தானே செல்லப்போவதாக இவ்வாறு உறுதிகூறினான்.

"கடகரி, பரவி, ஆள்தேர் கமலத்தோன் உலகுக்கு இப்பால்
புடையுள பொருது கொண்டு போர்பொரப் பொருங்குகின்ற
இடைஇடைமிடைந்த சேனை இருநூறு வெள்ளம் கொண்டு
வடதிசை வாயில் காப்பேன் யானென வகுத்து விட்டான்"

இவ்வாறாக இராணனன் அவரவர் தகுதிக்கேற்ப போர்பணிகளைப் பகிர்ந்தளித்து அதற்கு தேவையான அதிகாரத்தை வழங்கி பொறுப்பை ஒப்படைத்தான்.

ஒழுக்கம்

ஒவ்வொரு நிறுவனத்தின் தங்குதடையற்ற பணிக்கு, ஒழுக்கம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட விதிகளையும், தோற்றுவிக்கப்பட்ட நடைமுறைகளையும் தவறாது பின்பற்றி நடப்பதே ஒழுக்கம் ஆகும். ஒழுக்கத்தை நிர்வகிக்க இன்றியமையாதவைகளாகப் பின்வருவனவற்றை ஃபேயால் வலியுறுத்துகிறார்.

1. எல்லாநிலைகளிலும் நல்ல மேற்பார்வையாளர்களைக் கொண்டிருத்தல்

2. தடைகளற்ற மற்றும் நியாயமான ஒப்பந்தங்கள்

3. தண்டனைகள் மற்றும் இசைவாணைகளை முன் கவனத்துடன் அளித்தல்

4. ஆணைகளில் இசைவு *(Unity of Command)*: ஒவ்வொரு பணியாளரும் ஒரு குறிப்பிட்ட மேற்பார்வையாளரிடமிருந்து உத்தரவுகளைப் பெற வேண்டும். எந்தவொரு பணியாளரும் இரண்டு மேற்பார்வையாளர்களின் அடியில் திறம்படி வேலைசெய்ய முடியாது. மேலும், அது அநாவசியமான குழப்பம், உறுதியின்மை தொல்லை போன்றவற்றை விளைவிக்கும்.

தனிமனித ஒழுக்கம் பற்றி கம்பனின் பார்வை குறித்து நோக்குங்கால் ராமன், பதினான்கு ஆண்டுகள் தந்தைக்களித்த வாக்கிற்காக சீதையுடனும், இலக்குவனும் வனம் சென்றான். இராமனுடைய பிறன் மனை நோக்கா ஒழுக்கம் பற்றி குறிப்பிடுகையில் "வேறொரு மாந்தரை சிந்தையாலும் தொடேன்" என்ற கம்பனின் வரிகள் மனதில் நிலைத்துநிற்கும் அல்லவா?

அஞ்சனை மைந்தனான அனுமன் தன் ஒழுக்கம் பற்றிக் கூறுகையில் கம்பன் பின்வருமாறு மொழிந்தான்:

"அஞ்சனைக்கு ஒருசிறுவன் அஞ்சனைக் கிரியனைய
மஞ்சனைக்குறியொரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத்தொழிலர் தவ மெய்யர் கைச்சிலையரென
நெஞ்சயிர்த்து அயல்மறைய நின்றுகற்பனைநினையும்"

என்றும், அனுமனின் திறன் பற்றி இராமன் உரைக்குமிடத்து

"மாற்றம் அஃது உரைத்தலோடும் வரிசலைக்குரிசில் மைந்தன்
தேற்றம் உற்று இவனினூங்குச் செவ்வியோர் இன்மைதேவி
ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும் என்றும்
வேற்றுமை இவனோடு இல்லை யாம் என விளம்பலுற்றான்"

(கிட்கிந்தா காண்டம்)

நேர்மை நெறி

நேர்மை நெறித் தத்துவம் என்பது நியாயம் அன்பு ஆகியவற்றின் தோகுப்பாகும். இத்தத்துவத்தைப் பின்பற்றுவதன் மூலம் முதலாளி, பணியாளர்களின் ஒத்துழைபையும் அவர்களுடன் நல்லுறவையும் பெற முடிகின்றது. ஆனால் இத்தத்துவத்தை கடைப்பிடிக்க தேவையான அனுபவம் மற்றும் செயலவிவு போன்றவை இருத்தல் வேண்டும்.

நேர்மையின் ஒரு மாதிரியாக ராமன் திகழ்ந்தான் போரின் இறுதிகட்டமாக ராவணன் அனைத்து ஆயுதங்களையும் இழந்து நிராயுதபாணியாக போர்களத்தில் கலங்கி நிற்கும் தருணம் மனம் இறங்கி நேர்மையுடன் "இன்றுபோய் நாளை வாராய்" என்று ராமன் ராவணனிடம் பகர்ந்தனர்.

ஒற்றுமையே பலம்

இத்தத்துவத்தின்படி, மேலாளர் ஒற்றுமைக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மேலாளானெவர் பிரித்து ஆட்சி செலுத்துதல் என்ற கொள்கையை பின்பற்றக்கூடாது. அவர் எப்பொழுதும் ஒற்றுமையே பலம் என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே செயலாற்ற வேண்டும்.

இராமனின் தொழில் நுட்பத்திறன்

"மற்றினி உரைப்பது என்னே வானிடை மண்ணில் நுன்னை
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனதுஎன் காதல்
சுற்றம்உன் சுற்றம் நீஎன் இன்றுயிர்த் துணைவன் என்றான்"

(கிட்கிந்தா காண்டம்)

என்று இராம சுக்ரீவ நட்பு மற்றும் ஒற்றுமை குறித்து கம்பராமாயணம் விளக்குகிறது.

அந்த வானரசேனை அரசனோடு ஒப்பந்தம் செய்து வாலியைக் கொன்று நட்பை நிலைநாட்டி அவரோடு இணங்கி இருந்து இராவணனைப் போரில் வென்றான்.

இராமனின் வலிமையை விளக்குங்கால் கம்பன் இவ்வாறு பாடுகிறான்.

"படுமத கரிபரி சிந்தின பணிவரை இரதம்அறிந்தன
விடுதிசை செவிடுபி ளந்தன விரிகடல் அளறது எழுந்தன
அடுபுலி அவுணந்த மங்கையர்அலர்விழி அருவிகள் சிந்தின
கருமணி நெடியள னும்சிலைகணகண கணணெ னுந்தொறும்"

என்றும்,

"கண்ணுதற் பரமன்தானும் நான்முக்க கடவுள்தானும்
எண்ணுதும் தொடர எய்த கோல்என எண்ணலுற்றார்
பண்ணையால் வகுக்கமாட்டார் தனித்தனிப் பார்க்கலுற்றார்
ஒண்ணுமோ கணிக்க என்பார் உவகையின் உயர்ந்த தோளேர்"

என்றும்,

"வெள்ளம்ஈ ரைந்து நூறே விடுகணை அவற்றின் மெய்யே
உள்ளவாறு உளவாம் என்றோர் உரைகணக்கு உரைத்து மேனும்
கொள்ளையோர் உருவைநூறு கொண்டன பலவாற் கொற்ற
வள்ளலே வழங்கினானோ என்றனர் மற்றைவானோர்"

என்று கம்பனின் வில் வலிமையையும், போர்த்திறனையும் கம்பன் வியந்து பாராட்டினார்.

முடிவுரை

மேற்கண்ட ஆய்வுமூலம் கம்பராமாயணத்தில் தென்படும் சில மேலாண்மைத் தத்துவங்களை நாம் தெளிவுற அறிந்துகொள்ள முடியும். கம்பன் ஒரு கடல் அதன் சில மேலாண்மை முத்துக்களையே நாம் ஆய்ந்தோம். இந்த ஆய்வு பின்வரும் நாட்களில் உருவாகும் மேலாண்மை ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு தூண்டுகோலாகஅமையும்.

கம்பனில் அறியலாகும் அறிவியல் அருமைகள்

முனைவர் எல்.இராஜசேகரன்
இயற்பியல் துறைப் பேராசிரியர், வி.ஐ.டி பல்கலைக்கழகம்,
வேலூர்.

முன்னுரை

ஒவ்வொரு இலக்கியமும் இதிகாசங்களும் தான் தோன்றிய சமுதாயத்தின் பண்பாட்டையும் நாகரித்தையும் மற்றும் மக்களின் அறிவியல் மனப்பாங்கையும் அதன் சிந்தனைகளை உள்ளடக்கிய அங்கமாக திகழ்கின்றது. இந்த அடிப்படையில்தான் நமது இலக்கியங்களும் இதிகாசங்களும் அறிவியல் பூர்வமாக மிளர்கின்றன. அந்த வகையில் கம்பராமாயணத்தில் கம்பன் கவிநயத்தில் எங்கெல்லாம் அறிவியல் அருமைகள் மிளிர்கின்றன என்பதை இந்த ஆய்வுக் கட்டுரையில் காண்போம்.

அறிவியல் என்ற வார்த்தையைப் பிரித்துப்பார்த்தால் அறிவு+இயல் என்று பொருள்படும். இயல்பாக ஒரு தெரியாத செய்தியை அல்லது தகவலை அறிந்துக்கொள்வது அறிவியல் என்று பொருள்படும். ஆந்த வகையில் கம்பனின் கவிதையில் இயல்பாகவே நமக்கு தெரியாத பல செய்திகள் உள் அடங்கியிருக்கின்றன. அதை தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று நம்முடைய சிந்தனைகளோடு ஆராய்ந்துப்பார்த்தால் கம்பனில் அறிவியல் புலப்படுகின்றன.

இன்னும் ஒருபடி மேலே சென்று "அறிவியல்" என்ற வார்த்தைக்கு பொருள் தேடினால் தத்துவங்களும் அதைச் சார்ந்த கண்டுபிடிப்புகளும் அறிவியல் என்றே புலப்படும் அந்த வகையில் கம்பராமாயணத்தில் கம்பன் எங்கெல்லாம் அறிவியல் (கணிதம் இயற்பியல் வேதியியல் முன்னோடியாக இருந்து இன்றைய விஞ் ஞான வளர்ச்சிக்கு கவிதை வரிகளாக வெளிப்படுத்துவதன் "கம்பன் அன்றே வித்திட்டுள்ளதை இக்கட்டுரையில் காணலாம்.

அறிவியல் அருமைகள்

இருபதாம் நூற்றாண்டை அறிவியல் யுகம் என்று கூறலாம். அறிவியல் கண்டுபிடிப்புகளும் சாதனைகளும் கணக்கில் அடங்கா. அறிவியல் சிந்தனைகள் உள்ளடக்கிய பல மருத்துவ முறைகளை நம் முன்னோர்கள் சித்தர்கள் கையாண்டார்கள். இவர்களைத் தொடர்ந்து இரசவாத வேதி முறையை வள்ளலார் அவர்கள் வேதி அறிவியலாக

கையாண்டார். இப்படி நம் முன்னோர்கள் இலக்கியங்களிலும் இதிகாசத்திலும் தனது பாடல்கள் மூலமாக மக்களுக்கு அறிவியல் சிந்தனையை வெளிப்படுத்தியிருக்கின்றனர். பாரதநாட்டின் இதிகாசமாக விளங்குகின்ற கம்பராமயணத்தில் தனது கவிப்புலமையால் அறிவியல் சிந்தனைகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

கம்பனில் இயற்பியல்

இரணியன் "இறைவன் எங்கு உள்ளான்? என்ற கேள்விக்கு பக்த பிரகலாதன் மூலமாக கம்பர் இரணிய வதைப்படலத்தில் பதிலளிக்கின்றார்.

"சாணிறும் உளன் ஓர்தன்மை அணுவினைச் சத கூறிட்ட
கோணினும் உளன் மாமேருக் குன்றினும் உளன்
இன்னின்ற தூணிலும் உளன்நீ சொன்ன சொல்லிலும் உளன்"

குறிப்பிட்ட ஒரு தன்மைக்கொண்ட பொருளை நூறுபங்காக பிரித்து (சத) அந்தச் சிறிய பகுப்பில் இறைவன் உள்ளான் என்பதை தெளிவுபடுத்துகின்றார்.

அணுவை பிளக்க முடியாது என்ற கருத்து மிகநீண்ட காலமாக இருந்து வந்த காலகட்டத்தில் முன்பே ஒரு பொருள் அதை நூறாக்கி அந்த பகுப்பு (அணு) பார்த்தால் என்று சொல்லுகிறபோது அனுவை உடைத்துப் பார்க்க முடியும் என்பதை அனுவைப் பற்றிய சிந்தனையை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அதற்கு அடுத்து வரிகளில் உற்று நோக்கினால் குன்று, தூண், சாண் மற்றும் அணு. அதில் 100 பங்கு பிரித்தால் அது கோண். அதையும் பகுத்தால் இறைவன் உள்ளான் என்ற கருத்தை வெளியிடுகிறார்.

இராமனின் அழகை வர்ணிக்கின்றபோது கம்பர் தன் அறிவியல் புலமையை வெளிப்படுத்துகின்றார்.

"வெய்யோன்ஒளி நன்மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோ இவன் வடிவென்பதொர் ஆழியா அழ குடையான்"

சூரியனின் ஒளியில் ஏனைய ஒளிக்கதிர்கள் மறைந்துவிடும், இது இயல்பு ஆனால் இயற்கைக்கு மாறாக இராமனின் திருமேனியில் வீசுகின்ற ஒளியில் சூரியன் ஒளியே மறைந்து போகின்றது என்கிற கற்பனை வளம் மூலம் ஒளியின் இயல்புகளை விவரிக்கின்றார்.

மேலும், இராமனின் அழகை வர்ணிக்கின்றபோது "மையோ" என்கிற வார்த்தை கரும் போருளை குறிக்கின்றது. கரும் போருள் ஒளி வீசாது (Block Body Radiation) ஆனால் இராமனோ மற்றவர்களும் ஒளி தருபவன். ஆகவே, ஒளிவீசும் மரகதமோ என்கின்றார் மரகத்தில் குளிர்ச்சி இருக்காதே. பொருளின் தன்மை (Meterial Properties) குறிப்பிடுகின்றார். எனவே மறிகடலோ என்கின்றார் ஆனால் அது உப்பு தன்மைகொண்டது என்று கம்பர் ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டு கடைசியாக எதற்கும் ஒப்பிடமுடியாத ஐயோ எனக் கைவிட்டுவிடுகிறார் என்றால் அதற்கு அர்த்தம். எல்லா நல்ல குணநலன்கள் கொண்டவன் இராமன் என்று புலப்படுகிறது. இப்படி இப்பாடலில் ஒவ்வொரு பொருளின் தன்மைகள் குறிப்பிடுவதன் மூலமாக இராமனை வர்ணிக்கின்ற கவிப்புலமையில் இயல்பாகவே அறிவியலை (இயற்கையை) குறிப்பிட்டு உற்றுநோக்குகின்றார்.

நாட்டுப்படலம்

"வீடு சேர நீர் வேலை கால் மடுத்து
ஊரு பேரினும் உவைல இலா நலம்
கூடு கோசலம் என்று கொது இலா
நாடு கூறினோம்: நகரம் கூறுவோம்"

பூமியானது நீர் காற்று கடல் பொங்கிய நிலப்பரப்பு பரவும் வகையில் அழியாமல் நிற்கக் கூடாது இந்த உலக நிலப்பரப்பு என்றும் அழியாத வகையில் நீர் காற்று அதைத் தாங்கும் பூமி, இதை என்றும் சம நிலைக்கு கொண்டுவரக் கடலும் பொங்கி வழிகின்றது என்றும் இந்த உலகம் நிலைத்து அழியாப் பொருளாக என்றும் இருக்கும் தன்னுடைய அறிவியல் புலமையை கோசலைநாட்டை வர்ணிப்பதின் மூலம் தெளிவாக புலப்படுத்துகின்றார்.

இராமனின் வில்திறம்

"ஆனைஆயிரம், தேர்பதி னாயிரம், அடல்பரி ஒருகோடி
சேனைகாவலர் ஆயிரம் பேர்படின், கவந்தம்ஒன்று எழுந்தாடும்
கானம் ஆயிரம் கவந்தம் நின்று ஆடிடின், கவின்மணி கணில் என்னும்
ஏனை அம் மணி ஏழரை நாழிகை ஆடியது இனிது அன்றே"

இப்பாடலில் தனது கணிதத்திறமையை இராமனின் வில்திறமை பாடல் மூலமாக வெளிப்படுத்துகின்றார்.

இராமனுடைய கோதண்டத்தில் 16 தங்க மணிகள் கட்டியிருக்கும் இடையிடையே 16 சிறிய மணிகள் கட்டியிருக்கும் அந்த சிறிய மணிகள் கவந்த மணிகள் என்று பெயர்

ஆயிரம் யானைகள் பதினாயிரம் தேர்கள் ஒரு கோடி குதிரைகள் சேனைக் காவலர்கள் ஆயிரம். இத்தனைபேர் இறந்தால் ஒரு கவந்த மணி ஒலிக்கும். அந்த கவந்த மணி ஆயிரமாயிரம் கோடிமுறை ஒலித்தால் கணீரென்று பெரிய மணி ஓசை ஒலிக்கச் செய்யும்.

இப்படியாக மூலபல யுத்தத்தில் எல்லா மணிகளும் சேர்ந்து ஏழரை நாழிகை ஒலிக்கச் செய்தார்களாம்.

எனவே, இப்பாடலில் கணக்கு எண்ணிக்கையும் அதன் மூலமாக பார்க்கின்ற ஓலி சந்தம் (Longitudinal) பெரியகந்தம் (Trans- verse) ஒலிபரவும் விதத்தையும் அதன் மூலமாக வேகத்தையுமு இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

கம்பராமாயணத்தில் அறிவியல் சார்ந்த கருத்துகள்

முனைவர் மெ.மெய்யப்பன்
மேனாள் இயற்பியல் பேராசிரியர், அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி.

முன்னுரை

ஒரு காலத்தில் இலக்கிய ஆராய்ச்சி என்பது படைப்புகளில் ஆசிரியர் கூறியிருக்கும் சமூக, சமுதாயக் கருத்துகளைப் பற்றியதாக இருந்தது. பின்னர் வழக்கமான மொழியியல் ,அக மற்றும் புற மரபுகள், சொல்லாக்கங்கள், பழமொழிகள் போன்ற ஆய்வுகளிலிருந்து வேறுபட்டு படைப்புகளின் ஒப்சிடுகள் ,சீர்திருத்தக் கருத்துகளின் எழுச்சியும் சமுதாயமாற்றங்களும், பாத்திரப்படைப்புகளின் உருவாக்கமும் குணங்களும்,ஒரே ஆசிரியரின் படைப்புகளில் காணப்படும் பாத்திரப்படைப்புகளும் ஆசிரியரின் சிந்தனைப் போக்கும் என்று பலவாறு விரிவடைந்து வளர்ந்தது. அறிவியல் தமிழின் அவசியத்தை உணர்ந்த சிலர் இலக்கியப் படைப்புகளில் காணப்படும் அறிவியல் சார்ந்த கருத்துக்களை சுட்டிக்காட்டி அவை எடுத்தாளப்பட்டிருக்கும் விதத்தால் படைப்பாளியின் அறிவியல் திறத்தை புலப்படுத்தி இலக்கியத்திற்கும்,அறிவியலுக்கும் ஒரே மூலமாக இருப்பது இயற்கையே என்று நிறுவி வருகின்றார்கள். பழந்தமிழ் சொற்களை மீட்டுருவாக்கம் செய்து அறிவியலுக்கு பல புதிய கலைச்சொற்களைப் பெற இத்தைய ஆய்வுகள் பயன் தருகின்றன (அறிக அறிவியல், ஏப்ரல் 1994, பக்.18-21) மொழி ஒரு புதிய பரிமாணத்தைப் பெறுவதால் மொழியின் வளர்ச்சி மக்களிடையே தூண்டப்படுகின்றது.

பிற தமிழ் இலக்கியங்கள் போல கம்ப ராமாயணத்திலும் அறிவியல் கருத்துக்கள் ஆங்காங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. இயற்கையைப் புரிந்து கொண்ட கம்பரின் அனுபவங்களே அவருடைய படைப்பான ராமாயணத்தில் எங்கும் காணப்படுகின்றன.அவை இக்கால அறிவியலுடன் ஒத்துப்போவதைக் காணும்போது பெரும் வியப்பே மேலிடுகின்றது. ஒரு சிலவற்றை இடமும் இனமுமறிந்து எடுத்துக்காட்டுவது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கியமும் அறிவியலும்

ஆற்றலும் பொருளும் ஒரே மூலத்தின் இருவேறு நிலைகள்

என்பதைப் போல அறிவியலும் இலக்கியமும் இயற்கையை விவரிக்கின்ற இருவேறு தோற்றங்களே. புரிந்து இயற்கையைப் போல செய்து காட்டுவது அறிவியல் ,வியந்து இயற்கையை வார்த்தைகளால் விவரிப்பது இலக்கியம் .இலக்கியமும் அறிவியலும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையன என்பதை அறிவியலார்களே கூறுவார்கள். இலக்கியத்தில் விருப்பமில்லாத டிராக் (*P.A.M.Dirac*) என்ற இயற்பியல் விஞ்ஞானி ஒரு சமயம் கவிதை புனையும் ஓபன் ஹைமர் *(Robert Oppenheimer)* என்ற விஞ்ஞானியிடம் கவிதைக்கும் அறிவியலுக்கும் உள்ள தொடர்பைப்பற்றிக் கேட்க ,இவையிரண்டும் ஒரே மூலத்தின் இருவேறு தோற்றங்கள் என்றும் மனிதர்களின் கற்பனையாலும் அணுகுமுறையாலும் மாறுபட்ட இவை-யிரண்டும் ஒன்றுக்கொன்று எதிரும்புதிருமானது என்பதைத் தவிர வேறு வித்தியாசமில்லை என்றும் அதற்கு விளக்கம் கூறினார்(2).. இயற்கையில் காணமுடியாது புதைந்து கிடக்கும் உண்மைகளைத் தோண்டி எடுத்து மறைக்காமல் புரியாததைப் புரியும்படி கூறுவது அறிவியல் ,கண்ணால் கண்டு மகிழ்ந்த காட்சிகளை எண்ணத்தில் புதைத்துவிட்டு புரிந்ததைப் புரியாதபடி கூறுவது கவிதை என்பதால் இலக்கியத்தையும் அறிவிய்லையும் அப்படி விவரித்தார் போலும்.

கம்பரின் அறிவியல் சிந்தனைகள்

உலக வெப்பமயமாதல்

இன்றைக்கு நம்மைத் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஒரு பொதுப்பிரச்சனை உலக வெப்பமயமாதல் (*Global warmming*). பாதிப்பு தீவிரமான பின் இது பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே வெகுவாகத் தூண்டப்பட்டு வருகிறது .உலகின் சராசரி வெப்பநிலை 57.2^{0} F லிருந்து $58\ ^{0}$ $F\ (14.5\ ^{0}C)$ உயர்ந்திருக்கிறது. இதற்குக் காரணம் சூரிய வெப்பம் பூனியில் உள்ளுறைவதேயாகும் என்றும் அப்படி உள்ளுறைவதற்கு பூகோளத்தின் சமநிலையில் மனிதர்கள் அச்சனின்றி தொடர்ந்து ஏற்படுத்தி வரும் சீர்குலைவுகளே என்றும் ஆய்வாளர்கள் 1980 களில் கண்டவிந்தனர்.

இதுபற்றி கம்பர் தாடகை வதைப்படலத்தில் ஓரிடத்தில் குறிப்புணர்த்தியுள்ளார் .மருதநிலத்தில் வளம் நிறைந்த வனம் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது என்றும் அங்குள்ள மரங்களும் உயிரினங்களும் கொடிய மனமுடைய தாடகையால் அழிவுற

அப்பகுதி வெப்பமிக்க காடாக மாறியது என்றும் கம்பர் கூறியுள்ள கருத்தில் அவரின் அறிவியல் சிந்தனை வெளிப்பட்டுத் தெரிகிறது இதன் மூலம் அவரே உலக வெப்பமயமாதலை உலகோர்க்கு முதன் முதலாய் குறிப்புணர்த்தியவர் என்றே சொல்லத் தோன்றுகிறது. காட்டின் அழிவும் ((*deforestation*) நிலத்தின் வெப்பமிகுதலும் தொடர்புடையன என்ற கம்பர் கருத்து 1980 களில் சுற்றுச்சூழலியல் ஆராய்ச்சியாளர்களால் கண்டறிந்த உண்மைக்கு ஏற்ப இருக்கிறது. மன்னுயிர் அனைத்தையும் அழிக்கும் இப்போக்கிற்கு மூல காரணமாக விளங்கும் தீயவர்களை அவர்கள் பெண்ணென்றாலும் அல்லது யாராக இருப்பினும் அழித்துவிடவேண்டும் என்று கூறி உலக வெப்பமயமாதலுக்குத் தீர்வு சொன்ன முதல்வரும் கம்பர் தானோ என்று வியக்கத் தோன்றுகிறது. தனிமனிதனின் தவறுகள் சமுதாயம் முழுவதையும் பாதிப்புக்கு உள்ளாக்கும்போது அதைக் கட்டுப்படுத்த மூல காரணமான குற்றவாளிகளை அழிப்பதே தர்மம் என்ற செய்தியைக் கம்பர் இதன்மூலம் தெரிவிக்கின்றார்.

உந்தம் மாறாக் கோட்பாடு

தாடகை வதைப் படலத்தில் ,தாடகை அங்கிருக்கும் மரங்களைப் பிடுங்கி எடுத்தும் ,பாறாங்கற்களை புரட்டி எடுத்தும் இராமன் மீது எவிய மிகவும் விரைந்த வேகத்தில் செல்லும் அம்புகளை எய்து அவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கினான்.இதை,

“கல்லின் மாரியைக் கை வகுத்தாள்அது
வில்லின் மாரியின் ,மிரன் விலக்கினான்”

என்று வர்ணித்த கம்பர் .அம்பின் வேகத்தை தவறாமல் குறிப்பிடுகின்றார் அதன் கடிய வேகத்தை “சொல்லொக்கும் கடிய வேகச் சுடு சரம் “ என்று ஏவுகணை அறிவியலார் போல தெரிவிக்கின்றார் .இலக்கின் தன்மைக்கேற்ப ஏவுகணைகள் இருக்க வேண்டும் என்ற அடிப்படை தெரியாவிட்டால் ஒருவரால் இப்படி எய்த அம்பிற்கு வர்ணனை கொடுக்க முடியாது.

ஒரு சிறிய அம்பால் எங்ஙனம் ஒரு மரத்தையும் ,பாறாங்கல்லையும் பிளந்து நொறுக்கமுடியும் .என்ற ஐயப்பாடு அறிவியல் கற்றோருக்கும் வருவதுண்டு . வெறும் கற்பனை என்று சொல்லி நம்ப மறுப்பார்கள் .ஆனால் இது அறிவியலில் சாத்தியமே என்பது ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கை (*Theory of Relativity*) இன்றைக்குத் தெரிவித்திருக்கின்றது.ஏறக்குறைய ஒளியின் வேகத்தில்

இயக்கிச் செல்லும் ஒரு சிறிய நூல் ,அது பெற்றிருக்கும் உயரளவு உந்தத்தால் (*Momentum*) ஒரு தடித்த மரத்தைக் கூட ,ஒரு கத்தி வெண்ணையை வெட்டுவதைப் போல வெட்டிச் சாய்த்து விடும் என்பது உந்தம் மாறாக் கோட்பாட்டு விதி *(Conservation of momentum)*..அம்பு சிறியதே ஆனாலும் அதை விரைந்து செலுத்த, வேகம் காரணமாக அது பெறும் கூடுதல் உந்தம் அதற்கு மிகுந்த வலிமையைத் தருகின்றது.இந்த அறிவியல் உண்மையைத் தெரிந்து வைத்திருந்ததால்தான் கம்பர் ,இராமன் தன் அம்புகளைக் கடிய வேகத்தில் செலுத்தி வெற்றி கொண்டான் என்று எழுதினார் போலும்

.ஆரணிய காண்டத்தில் ,விராதன் வதைப் படலத்திலும் கரன் வதைப் படலத்திலும் மெல்லிய அம்பினை கடிய வேகத்தில் செலுத்தி போதிய ஆற்றலூட்டி தன்மீது எறியப்படும் நிறைமிக்க மரத்தையும் பாறைகளையும் தடுத்து இராமன் தற்காத்துக்கொள்கின்றான் .யுத்த காண்டத்திலும் இந்தப்போர் உத்திகள் பலவிடங்களில் சொல்லப் பட்டுள்ளது. இவையாவும் கம்பரின்நுண்ணிய அறிவியல் திறமைகளை எடுத்தியம்புவதாக இருக்கின்றன.

பரிணாமக்கொள்கை

மாரீசன் வதைப்படலத்தில் பிற்காலத்தில் டார்வினால் கண்டறியப் பட்ட பரிணாம வளர்ச்சி பற்றி இரத்தினச்சுருக்கமாக கம்பர் தெரிவித்துள்ளார். மாரீசன் இராவணனின் வற்புறுத்தலால், மாய மான் தோற்றத்தில் சீதை கண்படும்படி தோன்றுகிறான். பொன்மான் பொய் மானோ, என்று ஐயப்பட்ட தம்பி இலக்குவனைப் பார்த்து இராமன் கூறும்போது இந்த அறிவியல் வரிகள் காணப்படுகின்றன.

பல்ஆயிரம்கோடி பரந்துளவால்

இல்லாதன இல்லை இளங்குமரா?

மன்னுயிர்கள் பல்லாயிரம் கோடியாக இன்றைக்கு விரிந்துள்ளன. உயிரினக் கலப்பில் இல்லாதன யேதுமில்லை என்று சொல்வதில் பல்லுயிரிகள் (*Bio - diversity*) பற்றிய கம்பரின் சிந்தனைகள் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. பரிணாம வளர்ச்சியின் எல்லையைத் தொட்டுக் காண்பிப்பதுபோல், ஜடாயு, சுக்ரீவன், வாலி, அனுமன், கரடிப்படை போன்ற பாத்திரங்களைப் படைத்துள்ளார். அறிவியல் மிக வளர்ந்த இந்நாளில் வெளிவரும் சில ஆங்கிலமொழித் திரைப்படங்களில் இதுபோன்ற பாத்திரங்களை வேற்றுலக

வாசிகளாகக் காட்டியுள்ளனர். இதைப் பார்க்கும்போது, நம் கம்பர் அவர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார்.

சார்புடை நேரம்

நுண்பொருளியலில், அடிப்படைத் துகள்களைப் பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள் குறுகிய காலம் வாழ்நாள் கொண்ட சில அடிப்படைத் துகள்கள் எங்ஙனம் நெடுந்தொலைவு கடந்து வந்து பூமியை அடைகின்றன என்று புரியாமல் இருந்தார்கள். சார்புவேகத்தைப் பொறுத்து பொருளின் பரிமாணம் மட்டுமின்றி, அவளவீட்டுக் காலமும் பொருள் இருக்கும் வெளியும்கூட காண்போர்களுக்கு வேறுபடும் என்ற ஐன்ஸ்டீனின் சார்பியல் கொள்கை இதற்குப் பின்னாளில் விளக்கம் கொடுத்தது. நேரத்தின் சார்பியல் தன்மையைப் பற்றிச் சீதையின் பிரிவால் வாடும் இராமனின் மனநிலையால் கம்பர் தெரிவித்திருக்கின்றார் அயோமுகிப்படலத்தில் சீதையைப் பிரிந்த இராமனுக்குத் தூக்கம் வரவில்லை. அந்த இரவு நீண்டுநீண்டு ஒருவாறு கழிந்தது என்று குறிப்பிடுகிறார். இது மனநிலையால் நேரத்தில் ஏற்படும் சார்பியல் என்றாலும் நேரமும் சார்பியலுக்கு உட்பட்டதே என்பதைச் சுட்டிக் காட்டியிருப்பது கம்பரின் அறிவியல் திறத்திற்கு மற்றுமொரு சான்று.

முடிவுரை

கம்பரின் ஆழ்ந்த அனுபவங்களின் அழுத்தமான உச்சரிப்புகளே அறிவியல் வரிகளாக மலர்ந்திருக்கின்றன என்பதைப் பறைசாற்றுவதற்கு இவ்வெடுத்துக்காட்டுகள் போதுமானதாகும். கம்பரால் எடுத்தாளப்பெற்றிருக்கும் பழமொழிகள் அவருடைய பல்துறை அறிவியல் புலமையைத் தெரிவிக்கின்றன எனலாம்.

கம்பனில் மனிதநேயம்

முனைவர் கு.ஜெயகுமாரி
முதுநிலை ஆய்வு வல்லுநர், செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவனம்,
சென்னை.

மனிதநேயம்

மானிடப் பண்புகளுள் தலைசிறந்தது மனிதநேயம் ஆகும். மனிதநேயத்தைப் பற்றி குறிப்பிடாத கவிஞர்களே இல்லை எனலாம். மனித நேயம் என்பது உளவியல் சார்ந்தது. தன்னை நாடி வருபவர் மனதில் சிறிய துன்பமும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தங்களைத் தாழ்த்திக்கொண்டு மற்றவர்களுக்கு வழங்குகிற நேரத்தில் மனிதநேயம் மேலும் ஒளியுடையதாக மாறுகிறது. இது கர்ணனிடனிருந்து அறிந்துகொண்டதாகும்.

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்என்று உணரப் படும்" (குறள்- 575)

என மனிதநேயத்தைப் பற்றி வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.

பால காண்டத்தில் பதினாறு வயதை எட்டிய இளம் பருவத்து இனியவனாகத் தோற்றமளிக்கும் இராமனுக்கு திருமணம்கூட நடைபெற வில்லை. நாட்டுக்கு அரசன் ஆகப் போகிறான் என மக்களுக்கு எல்லாம் தெரியும். ஆனால், அவன் அவதாரம் என்று யாருக்கும் தெரியாது. நாட்டின் இளவரசனாகத் திகழும் இராமன் தன் சகோதரர்களோடு தெருவில் வந்து கொண்டிருக்கிறார். எதிரில் அந்நாட்டின் குடிமக்கள் வருகிறார்கள். ஓர் அரசகுமாரனான இராமன் பெருமிதத்தோடு அவர்களைக் கண்டுகொள்ளாமல் செல்லலாம். ஆனால் இராமன் அப்படிச் செல்லாமல் நின்று அவர்களைப் பார்த்து சிரித்துக் கொண்டே அவர்களிடத்தில் அன்பு கலந்து பேசுகிறான். கருணையோடும் முகத்தில் ஒருவிதமான மகிழ்ச்சிக் கலையோடும் அவர்களை அன்போடு வரவேற்பதற்குரிய ஒரு எண்ணம் உண்டா-யிற்று என்பதை அவன் முகத்தில் எடுத்துக் காட்டுகிறான் கம்பன்.

கம்பர் காட்டும் இராமன், மனித இனத்தையும் தாண்டி பிற உயிரினங்களையும் அன்பு கொள்ளும் பாங்கினையும் உடையவனாக இருக்கின்றான். சமூகத்தில் இருக்கும் மனிதர்களுடைய துயரங்களையும் வாழ்க்கை பற்றிய கவலைகளையும் முக

மலர்ச்சியோடு இன்முகம் காட்டி விசாரித்து அறிவதன் மூலமாக அவர்கள்பால் அவன் கொண்டிருக்கும் மனிதநேயத்தை கம்பன் முதன் முதலில் அறிமுகப்படுத்துகிறான்.

குகனிடம் நட்பு

குகன்-இராமன் சந்திப்பின் போது இராமனது மனிதநேயத்தினால் குகன் 'நனிநாகரிகனாக மரி நிலைத்த வாழ்வு பெற்று நெஞ்சத்துள் நீங்கா இடம் பெற்றான்'. இராமனது மனிதநேயத்தால் இன்புற்ற குகன் இராமனுடன் எப்போதும் பிரியாது இருக்க வேண்டும் என விரும்பினான். இராமனுடன் கூடவே வருவதாகத் தெரி-வித்தபோது குகனது வேண்டுகோளை முற்றிலுமாக மறுக்கவும் முடியாமல் ஏற்கவும் முடியாமல் குகனது அன்புக்கு அடிமை ஆகும் நிலையை கம்பர் படைத்துக் காட்டுகின்றார். இராமன் குகனிடம் நீ என் உயிருக்கு ஒப்பானவன். இந்த இளையவனாகிய இலக்குவன் உனக்கும் இளையவன். ஒளிபொருந்திய இச்சீதை நின் கொழுந்தி. குளிர்கடல் உலகம் அனைத்தும் உன்னுடையது. நீ ஆணையிட அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்னும் கருத்தமையுமாறு இருவரது உறவு முறைகளையும் சுட்டிக் காட்டுகின்றார்.

"அன்னவன் உரைகளோ அமலனும் உரை நேர்வான்
உன்உயிர் அனையாய்நீ, இளவல் உன்இளையான், இந்
நன்னுதல் அவள் நின்கேள் நளிர்கடல் நிலம் எல்லாம்
உன்னுடையது, நான் உன்தொழில் உரிமையின் உள்ளேன்"

(குகப்படலம்-42)

இவ்வாறு கம்பர் உணர்த்துகின்றார். அதுமட்டுமின்றி முன்பு இராம, பரத, இலக்குவ, சத்துருக்கன் என நால்வராகப் பிறந்தோம். இப்போது நாம் அன்பில் ஒன்றிவிட்டோம். எனவே இனி நாம் ஐந்து பேராக ஆனோம் என்றும் இராமன் குறிப்பிடுகின்றான்.

"முன்பு உளெம் ஒரு நால்வேம் முடிவு உளாது என உன்னா
அன்பு உள இனிநாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனேம்"

(குகப்படலம் - 43)

எனக் கூறும் நிலையில் வேட்டுவக் குகனைத் தம்பியாக்கிக் கொண்ட இராமனின் மனித நேயத்தைக் கம்பர் மிகத் தெளிவாகச் சுட்டுகின்றார்.

குகன் தன்னுடைய நிலையை நினைத்துப் பார்க்கிறபோது, இராமன் அன்றைக்கு என்னைப் பார்த்து அவனுடைய அடியவன் என்றும் அகத்தம்பி என்றும் அவன் சொன்ன அந்த ஒரு சொல்லால்

பூரிப்படைகிறான். சிறியவர்களைப் பாராட்டிப்பேசும் இனிய மொழிகள் பல்லாண்டு காலத்துக்கும் அவர்களுடைய மனதில் இருக்கும். அப்படிப்பட்ட மனிதநேயத்தைக் கற்றுக் கொள்வதற்கான முதல்நிலைப் பாடத்தை கம்பர் முதன் முதலாக பால காண்டத்தில் குறிப்பிடுகின்றார்.

குகன், மீனையும் தேனையும் கொண்டு வந்து இராமனுக்குக் கொடுத்தான். அதனை இராமன் தனது மனத்தால் உண்டான். இந்த இடத்தில் இராமனுக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை உருவாகின்றது. உள்ளன்போடு உணவுப் பண்டத்தை எடுத்து வந்த குகன் ஒரு பக்கம். தவத்தின் அடிப்படையில் வாழும் முனிவர்கள் இன்னொரு பக்கம். இந்த இரு தரப்பினரிடமும் இன்முகத்தோடு பழகும் குணம் கொண்டவன் இராமன். இவர்களை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில்தான் இராமனின் மனிதநேயம் வெளிப்படுகின்றது.

சுக்ரீவனிடம் அன்பு

தன் மனைவியை மீட்பதற்குச் சுக்ரீவன் உதவி கிடைக்கும் என நம்பிக்கையோடு வந்தவன் இராமன். யாருடைய உதவியை நாடி வந்தானோ, அவனே சோகத்தில் மூழ்கியிருந்தான். வாலியின் இளையவனான சுக்ரீவன் இராமனிடம் சென்று சரணடைந்து உதவி கேட்டான். அவ்வாறு கேட்கும்போது சரணடைந்தவன் எப்படிப்பட்டவன், அவன் தகுதி யாது என்றெல்லாம் ஆராயாமல், சரணடைந்தவர்களைக் காத்தல் தன் கடன் என்னும் உயர்ந்த நோக்கம் கொண்டவனாய், சுக்ரீவனுக்கு அடைக்கலம் கொடுக்கின்றான். இராமனும் மனைவியைப் பிரிந்திருந்த நேரத்தில்தான் சுக்ரீவனும் தன் மனைவியைப் பிரிந்திருக்கின்ற நிலையினையும் இராமனிடம் எடுத்துரைக்கின்றான். இதனை,

"மற்று இனி உரைப்பது என்னே? வானிடை மண்ணில் நின்னைச்
சென்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனதுஎன் காதல்
சுற்றம் உன் சுற்றம், நீஎன் இன்உயிர்த் துணைவந்து"

(நட்புகோள்படலம் - 27)

எனக் குறிப்பிடுகின்றார்.

இராமன் சுக்ரீவன் நெஞ்சத்தில் இருக்கும் துன்பத்தை விரைந்து துடைக்க வேண்டும் என்ற மனிதநேயத்தின் அடிப்படையில் அந்த சிக்கல் நிறைந்த நிலைக்களத்திலேயே இராமபிரானுடைய ஒப்புயர்வற்ற

மனிதநேயத்தைக் காட்சியாக அமைக்கின்றார் கவிச்சக்கவர்த்தி கம்பன். இதன் மூலம் மனிதநேயம் என்பது சம்பந்தப்பட்டவர்கள் மனம் உளச்சல் அடையாமல் அவர்களின் மனம் மகிழ வைப்பதில் தான் இருக்கிறது என்பதை மிகவும் நுட்பமாக எடுத்துக் காட்டுகிறான் கம்பன். அவன் துன்பத்தைக் கேட்டவுடன் அதற்குரிய தீர்வினை வார்த்தைகளால் சொல்லி அதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளியும் வழிமுறைகளியும் பின்னே ஆராய்கிறான் என்று சொன்னால், இராமனின் மனிதநேயத்தை நம்மால் உணர முடியும்.

வீடணனிடம் அன்பு

இராமனிடம் சரண் அடைய வந்தவீடணனை அரக்கன் என்பதை அறிந்து படைக்கள முகப்பில் உள்ள வானரர்கள் தொல்லை கொடுத்தனர். தன்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டவீடணனுக்கு அடைக்கலம் தருவதுபற்றி இராமன் வானரத் தலைவர்களை வினவிய போது அவர்கள் கூடாதென்று மறுத்தனர். இறுதியாக மாருதியின் கருத்தை வினவியபோது அண்ணலே நான் தேவியைத் தேடி இலங்கையில் இராவணன் எதிரில் நின்றபோது என்னைக் கொல்லும்படி கட்டளையிட்டான். அப்போது இந்த வீடணன்தான் அரச நீதியை எடுத்துக் கூறித் தடுத்தான் என கூறினான். இதனைக் கம்பர்,

"மாதரைக் கோறலும் மறுத்து நீங்கிய
ஆதரைக் கோறலும் அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூயதன்றாம் என
ஏதுவில் சிறந்தன எடுத்துக் காட்டினான்".

எனச் சுட்டுகின்றார்.

இராவணனின் தம்பி வீடணன் 'எந்தையே இராகவா சரணம்' என்று இராமனிடம் அடக்கலம் வேண்டினான். உடனிருந்தவர்கள் அடைக்கலம் அளித்தல் தகாது என கூறியும் இராமன் வீடணனுக்கு அடைக்கலம் அளித்தான். இங்கும் இராமனது மனிதநேயம் வெளிப்படுகின்றது. இலங்கையின் அரசுரிமையும் அளித்து,

"குகனொடும் ஐவரானேம்முன்பு, பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம், எம்உழை அன்பின்வந்த
அகன்அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனேம்
'புகல்அரும் கானம்தந்து புதல்வரால் பொலிந்தான் உந்தை"

எனக் கூறி இராமன் தனது உறவுடன் சேர்த்து வீடணனை ஏழாவதாக ஏற்றுக் கொண்டநிலையில் பகைவனுக்கும் இரங்கியருளுவதைக் காணலாம். இங்கு ஏசுபிரான் கூறும் மொழியான 'உன்னிடத்தில் அன்பு கூர்வது போல பிறரிடத்திலும் அன்பு கூர்வாயாக உன் பகைவனையும் நேசி' எனும் வாக்கு நினைக்கத்தக்கது. இங்கும் இராமனது மனிதநேயம் வெளிப்படுகின்றது.

இராவணனிடம் இரக்கம்

இராவணன் படை பலம் மிக்கவனாக இருந்தாலும் அடுத்தடுத்து மின்னல்கள் போல் விழுந்த இராமனின் அம்புகளுக்கு அவனால் எதிர்கொள்ள முடியவில்லை. வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும் நாரத முனிவருக்கும் ஏற்ப நயம்பட உரைத்த நாவும் தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் உடையவன். முக்கோடி வாழ்நாள் பெற்றவன். எக்கோடி யாராலும் வெல்லப்படாய்' என்னும் வரம் பெற்றவன். சானகியை மனச்சிறையில் கரந்து வைத்தவன். அவன் துணைவரை இழந்தும் தன் படைகளை எல்லாம் இழந்து தன்னந்தனியனாய் நின்ற இராவணனை அன்றே இராமன் கொன்றிருக்கலாம். முதற்போரில் நிலைகுலைந்து நின்றான். அவனைக் கொன்று வீழ்த்த இதைவிடத் தக்க வாய்ப்பு வேறு இல்லை. இருப்பினும் இராமன் அன்பின் காரணமாகவும் மனிதநேயம் காரணமாகவும் இன்று போய் நாளை வா எனக் கூறி அனுப்பினான். இதனை,

"ஆள்ஐயா உனக்கு அமந்த மாருதம் அறைந்த
பூனை ஆயின கண்டனை இன்று போய்ப் போர்க்கு
நாளைவா எனக் கூறி அனுப்பி வைத்தான் ."

(முதற்போர் புரி படலம் - 255)

எனக் கூறி இராவணனை கொல்லாமல் விடுவித்தான்.

பகைவரிடத்திலும் நட்பு

கம்பராமாயணத்தில் இரண்டு இடங்களில் இராமனின் நட்பு நிலை உயர்ந்த நிலையில் உள்ளது எனலாம். அவை அரக்கன் என்று அறிந்தும் வீடணனுக்கு அடைக்கலம் தந்தது. மற்றொன்று முதல் நாள் போரில் படைக்கலம் எல்லாம் இழந்து தனியனாய் நின்ற இராவணனைக் கொல்லாமல் இன்று போய் நாளை வா என விடுத்தது. இவ்விரண்டிலும் 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்' என்ற விதியை இராமன் கையாண்டுள்ளதைக் காணலாம். மேலும் இராமனது மனித நேயம் இங்கு மிகத்தெளிவாகப் பதிவாகின்றது.

தூய் சொல் மீறாத தனயன்

முடிசூட்டு விழா ஏற்பாடு நடைபெற இருக்கையில் இராமன் கைகேயியை வணங்க வந்தான். அப்பொழுது கைகேயி உன் தந்தை இன்று எனக்குச் சொன்னதும் நான் உனக்குச் சொல்வதுமான செய்தி ஒன்று உண்டு என்றாள். அதைக் கேட்ட இராமன் என் தந்தையெ ஏவ, நீரே உரைசெய்வதுண்டேல் யான் பேறு பெற்றேன். செய்தியைக் கூறுங்கள் என்றான். கைகேயி கடல் சூழ்ந்த இந்நிலவுலகம் முழுதும் பரதனே ஆள நீ போய் சடைமுடி தரித்துக் காட்டில் தங்கி தவம் இயற்றி பதினான்கு ஆண்டுகள் களித்துத் திரும்ப வேண்டும் என்பது அரசன் கட்டளை என்றாள். ஆதை கேட்ட இராமன் வருத்தம் கொள்ள வில்லை. அன்னையே இதனை தந்தைக் கூறாமல் தாங்களே கூறினால் மறுப்பேனோ, என் தம்பி பெற்ற செல்வம் நான் பெற்றதாகக் கருதுகிறேன் என்றான். கைகேயி சொல்லைக் கேட்ட இராமன் வருத்தம் கொள்ளவில்லை. மகிழ்ச்சியடைந்தான். இதுவும் இராமனின் மனிதநேயத்தைக் .காட்டுகின்றது.

இராமனும் தசரதனும்

கைகேயியைத் 'தீயவள் யாவையினும் சிறந்த தீயாள் எனச் சுட்டுகின்றார் கம்பர். இராமன் கானகம் செல்லவும், அங்கு சீதையை இராவணன் கவர்ந்து செல்லவும் அதன் விளைவாக இராமாயண போர் மூளவும் காரணமாக அமைந்தவள். தன் கணவன் உயிருக்கே தீமை நேர்ந்தவள். அதனை,

"மாய்ந்தே நான் போய் வானுக்கு ஆள்வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின் மகனொடும் நெடிது" (கை.சூழ்-44)

கைகேயி செய்த கொடுமைகளை எல்லாம் மறந்து மன்னித்த வனாக, மனிதநேயம் மிக்கவனாக தசரதனிடம்,

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வ்மும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக" (மீட்சிப் படலம் - 158)

என தசரதனால் வெறுத்து ஒதுக்கப்பட்ட கைகேயியையும் பரதனையும் தனக்குத் தாயாகவும் தம்பியாகவும் ஆகும் வரத்தை இராமன் நயம்படக் கேட்டுப் பெற்றான். நான்முகன் உள்ளிட்ட தேவர்கள்கள் தசரதனை மண்ணுலகுக்கு அனுப்பி வைத்தனர்.

சொல் திறம்பாமை

இராமனை மீண்டும் அழைத்துச் சென்று அரியணையில்

அமர்த்தும் நோக்குடன் கானகம் நோக்கி வந்த பரதனுக்குத் துணையாக வந்த வசிட்டர் அவனுக்குப் பல கலைகளையும் பயிற்றுவித்த குரு ஆவான். நான் உன்னுடைய குரு ஆகையால் என் சொற்களைக் கேட்டு அயோத்தி வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வாயாக என்றார். அதற்கு இராமன்,

"தேன்தரு மலருளன் சிறுவ செய்வென் என்று
ஏற்றபின் அவ்வுரை மறுக்கும் ஈட்டதோ"

எனப் பதிலளிக்கிறான்.

நன்றியறிதல்

தமிழ்மக்கள் பல்வேறு பண்புகளில் சிறந்திருந்தாலும் நன்றி பாராட்டும் நற்பண்புகளில் மேலும் வளரவேண்டும் என்பது கம்பனின் விருப்பம். அந்த உணர்வின் தூண்டுதலிலேயே கும்பகர்ணப் பாத்திரத்தைப் படைக்கின்றான். இராமகாதையில் மிக உயர்ந்து விளங்கும் பாத்திரங்களில் கும்பகர்ணன் ஒருவன். காவியம் முழுதும் மனிதநேயம் மேம்பட்டு நிற்கின்றது. மானுடம் வென்றதம்மா எனக் கம்பன் பாடுகின்றான். கடவுள்கள் வெற்றி பெறுவது அதிசயமன்று. அரசர்கள் வெற்றி பெறுவதும் அதிசயமல்ல. மனிதன் வெற்றி பெற வேண்டும். இது கம்பனின் குறிக்கோள். கம்பன் தனது பாத்திரங்களைச் சாதாரண மனித உணர்வுகளுடையப் பாத்திரங்களாகப் படத்துள்ளான். போர்க்களத்தில் மாயாஜாலங்கள் பேசப்பட்டாலும் மானுடமே உயர்ந்து நிற்கின்றது.

"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு" (குறள்-75)

கம்பன் தமிழ்க்கவிஞர்களில் ஈடுஇணையற்றவர். இவரது படைப்புகளில் கதைப்பாத்திரம் மேலோங்கி நிற்கும். இவ்வகையில் கம்பன் நட்பின் ஆழத்தை இராமன் வாயிலாக உணர்த்துகின்றார். யார் யார் மீது நட்புக் கொண்டான், அவர்களிடத்து இராமன் நடந்து கொண்ட விதம் போன்றவற்றை எல்லாம் நயம்பட எடுத்துரைக்கின்றார்.

செல்வத்துக்கும் அறிவாற்றலுக்கும் கட்டுப்படாதச் சமூகம், மனிதரிடனிருந்து பெறப்படும் அன்புக்கு என்றைக்கும் தலைவணங்கும் எனும் திருவள்ளுவரின் கூற்றை மெய்ப்பிப்பதற்காகப் பயன்படுத்திய அற்புதப் பாத்திரம் கவிச்சக்கரவர்த்தியின் இராமபிரான் பாத்திரம். அப்பாத்திரத்தில், மனிதநேயம் உளவியல் சார்பாக எப்படி கம்பனால்

படைத்துக் காட்டப்படுகிறது என்பதை சில குறிப்புகளால் சொல்லலாம். ஒரு மனிதனுக்குரிய அடையாளம் பலவாக இருந்தாலும் நூல் முழுவதும் வரிசையாக சில காட்சிகளைப் பற்றி விளக்குவதன் மூலமாக மிகச் சிறந்த பண்பாளனாக விளங்கும் இராமன் என்ற பாத்திரத்திலிருந்து இன்றைய தலைமுறை கற்றுக்கொள்ள வேண்டிய சில படிப்பினைகளையும் கவிச்சக்கரவர்த்தி எவ்வளவு அழகாக அற்புதமாகப் படைத்துக் காட்டுகிறார் என்பதை இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

கம்பனில் மனிதமாண்பு

திருமிகு. வி.ஜெயபுனிதவள்ளி,
முனைவர்பட்ட ஆய்வாளர், அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் உயர் கல்வி நிறுவனம்,
கோவை.

'கல்வியிற் பெரியவன் கம்பர்' என்னும் புகழுக்கு உரியவர் இயற்றிய இராமாயணம் ஒரு கலைக்களஞ்சியமாகத் திகழ்கிறது. கம்பராமாயணத்தை கருத்தூன்றிப் படித்த அனைவரும், சங்ககாலம் முதல் இக்காலம்வரை நிலவி வருகின்ற கருத்துக்களைக் காணலாம் என்று குறிப்பிடுகின்றனர். திருவள்ளுவரின் கருத்துக்களும் ஏராளமான இடங்களில் பயின்று வருவதையும் காணலாம். திருக்குறளும் மனிதநேயத்தின் மாண்பை உணர்த்துகிறது.

இளம்பருவம்

இளம்பருவத்திலேயே இராமனிடம் மக்களின் நலனை நாடும் குணம் இருந்தது. இளம்வயதில் குருகுலத்துக்குச் செல்லும்போதும், வரும்போதும் அங்குள்ள மக்களிடம் நலம் விசாரித்து, தன் அன்பைக் காட்டுவான்.

"எதிர்வரும் அவர்களை எமையுடை இறையவன்
முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர
எது வினை? இடரினால் இனிது நும்மையும்
மதிதரும் குமரரும் வலியர் கொல்"

என்று பொதுமக்களிடம் நலன் விசாரிப்பதை ஆசிரியர் காட்டியுள்ளார்.

அயோத்தி மக்களால் மட்டும் அல்ல பிற உயிரினங்களாலும் இராமன் போற்றப்படுகின்றான். அவ்வாறு திகழக்கூடிய இராமனை கானகம் செல்லக் கூறியபோது மக்களின் மனம் துயர்பட்டதையும், அனைத்து உயிரினங்களும் இராமனின் பிரிவை எண்ணித் துன்புற்றதை கம்பர் கூறும் நயம்.

"ஆவும் அதன் கன்றழுத அன்றலர்ந்த
பூவும் அழுத புறைபுள்ளழுதகள் ளொழுகும்
காவும் அழுத களிறழுத கால்வயப்போர்
மாவும் அழுத அம்மன்னவனை மானவே" என்கிறார்.

சகோதரர்கள் - குகன், சுக்ரீவன், வீடணன்

தன் சகோதரர்களையே தனக்குப் பகையாக கருதும் இக்காலத்தில், கம்பர் இராமாயணக் கதையை அறியார். தன் உடன்பிறந்தவர்கள்

மூவர். தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டவர்கள் மூவர். ஆக இராமனுக்கு சகோதரர்கள் அறுவர் ஆவர். மலைப்பகுதியைச் (சிருங்கிபேரடி) சேர்ந்த குகனைக் குறிஞ்சியுடன் ஒப்பிட்டு குறிஞ்சித் தம்பி என்றும், காட்டுப்பகுதியைச் சேர்ந்த (கிட்கிந்தை) சுக்கிரிவனைக் கூறும் போது முல்லைத் தம்பி என்றும், கடல்சூழ் இலங்கையைச் சேர்ந்தவீடணனை கூறும்போது நெய்தல் தம்பி என்றும் கூறுவர். குகன் ஒரு பணியாள்ப் போல இராமனுக்கு பணிவிடைகள் செய்து உபசரிக்கிறான். இராமனுடன் சென்று குற்றேவல்கள் புரியும் வாய்ப்பைப் பெற விழைகிறான். குகனின் உள்ளம் கலங்கமற்ற பெரிய உள்ளம் என்பதை அறிந்த இராமன் அவனைத் தன் தம்பியாக ஏற்று சிறப்பிக்கிறான். 'என் இளவல் உன் இளவல் மங்கை கொழுந்தி?' ஏற்று அந்த உறவை விரிவுபடுத்துகிறான். பரதனும், கோசலையும் இராமனின் இப்புதிய உறவை அங்கீகரிக்கின்றனர். சுக்ரிவன் மீது இராமனுக்கு ஏற்பட்டஅனுதாபத்தின் காரணமாக தன் தம்பியாக ஏற்றுக்கொள்கிறான்.

வீடணனின் நீதிநெஞ்சும் இராமனை நெகிழச் செய்தது. எனவெ தன் தம்பியாகவீடணனையும் ஏற்றுக் கொள்கிறான்.

> "குகனொடும் ஐவரானேம் முன்பு பின்பு குன்று சூழ்வான்
> மகனொடு அறுவரானேம் இன்று எம்முழை அன்பின்வந்த
> அகனமர் காதர்ஐய நின்னொடும் எழுவரானேம்"

என்பது இராமன் வாய்மொழி.

நல்லாண் மகன்

அனுமனைத் தவிர அனைவரும் வீடணனுக்கு அடைக்கலம் அளிக்கக் கூடாதென்று கூறுகின்றனர். வீடணன் மனிதநேயம் னிக்கவன் என்றும் தூதுரையும், மாதரையும் கொல்லக் கூடாதென்று அறநூல் விதியை இராவணனுக்குச் சுட்டிக்காட்டித் தன்னைக் காத்தவன் என்றும் அவள் மகள் திரிசடை, சிறையிருக்கும் சீதைக்குப் போராறுதலாக உள்ளாள் என்றும் அனுமன் இராமனிடம் சொல்கின்றான்.

வீடணனை தம்முடன் சேர்த்துக் கொள்ளலாம் எனக் கூறும் மாருதியின் கருத்தை வரவேற்கின்றான் இராமன். 'உடைந்தவர்க்கு உதவான் ஆயின் உள்ளதொன்று ஈயான் ஆயின் அடைந்தவர்க்கு அருளானாயின் அறன் என்னாம்? ஆண்மை என்னாம்' என்னும் வரிகளால் மனிதநேயம் காட்டப்படுகிறது.

'இன்று போய் நாளை வா! என்ற போர் அறம்'

இராமன், இராவணனுடன் போர்புரியும் போது முதற்போரில் இராவணன் படைக்கலன்களையெல்லாம் இழந்து படுதோல்வியடைகிறான். இராமன் முன் ஆயுதனின்றி நிற்கின்றான். படைக்கலன் இழந்தவர்களைத் தாக்கக்கூடாது என்பது அறம். அவ்வாறு கூறிய இராமன் போரை நிறுத்தச் சொல்கிறான். அப்போது இன்று போய் நாளை வா என்கிறான். இதற்குமேல் போர் புரியக்கூடாது என இராவணன் கருதினால் அதற்குத் தயாராகி வரும்படி கூறுகிறான். போரைத் தவிர்த்து பேச்சு வார்த்தை நடத்த இராவணன் விரும்பினால் அதற்கும் தான் தயார் என்று கூறுகிறான்.

"ஆளையா? உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளைஆயின கண்டனை இன்று போய் போர்க்கு
நாளைவா என நல்கினன் நாகு இளங்கமுகின்
வாளைதாவுறு கோசலை நாடுடை வள்ளல்"

சீதையின் கருணை

அசோகவனத்தில் சிறைப்பட்ட சீதையிடம் அனுமன், இராமன், இராவணனை வெற்றிக் கொண்டச் செய்தியை மகிழ்ச்சியோடு கூறுகிறான். சீதை அனுமனை வணங்குகிறாள். சீதையைத் துன்புறுத்தி அரக்கியரை, தான் அழிக்க விரும்புவதாக அனுமன் வேண்டி கேட்டுக் கொள்கிறான். அதைக் கேட்ட அரக்கியர் பயந்து சீதையின் காலின் விழுந்து வணங்கிச் சரணடைந்தனர். சீதை நீங்கள் பயப்பட வேண்டாம். இராவணனின் கட்டளைப்படி நடந்த நீங்கள் வெறுப்புக்குரியவர் அல்லர். தனக்கு ஏற்பட்ட துன்பத்துக்கு 'தன் தீவினையே காரணம்' என்று கூறுகிறாள்.

"யான் இழைத்த வினையினின் இவ்விடர்
தான் அடுத்தது தாயினும் அன்பினோய்
கூனியின் கொடியாரலரேயிவர்
போன அப்பொருள் போற்றலை புந்தியோய்"

எனும் சீதையின் வாய்மொழியால் தேவியின் இரும்பொறையைக் காண்கிறோம். இராமனையும், தன் சகோதரர்களாக ஏற்றுக்கொண்ட சுக்ரிவன், வீடணன், குகன் ஆகியோரும், சீதாபிராட்டியின் கருணையுள்ளமும், கம்பராமாயணத்தில் உள்ள மனிதநேயத்தை நமக்கு உணர்த்தும்விதமாக அமைகின்றன.

கம்பரின் கல்விக் கோட்பாட்டில் மனித மதிப்புகள்

முனைவர். க.தில்லைக்கரசி
சீத்தாலெட்சுமி இராமசாமி கல்லூரி,
திருச்சி.

அயோத்தி எனும் மரம்

"ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து,எண்ணில் கேள்வி
ஆகம் முதல் திண்பணை போக்கி,அருந் தவத்தின்
சாகம் தழைத்து,அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனியொன்று பழுத்தது போலும் அன்றே!" (நகர-75)

அயோத்தி என்னும் மாமரத்திற்கு, கல்வி விதையாகவும், கேள்வி அதன் கிளைகளாகவும்,தவம்-அதன் இலைகளாகவும் அன்பு அதன் அரும்பாகவும்,தர்மம்-மணம் வீசும் மலராகவும்,விளங்குகிறது. இவற்றால் விளையும் இன்பமும், பயனுமே அதன் கனியாகவும் இருக்கிறது என்ற இப்பாடல் கம்பனின் கல்விக் கோட்பாட்டைப் பறைசாற்றும் ஒரு முக்கியப்பாடலாகும்.

அன்பும், ஞானமும் ஒளிரும் ஓர் உன்னத சமுதாயத்திற்கு கல்வியே ஆதாரமாக இருக்கிறது என்ற கம்பரின் கருத்தை பின்வருமாறு ஆராய்வோம்.

உலகாயத கல்வியும் – ஞானக் கல்வியும்

இரணியனுக்குப் பிரகலாதன் போல, இராவணனுக்குவீடணன் வாய்த்தான். ஆகவே பிரகலாதனைக் கொண்டு கம்பர் இறையருட்கல்வியைத் தனிமுக்கு ஓர் அணிகலனாகத் தந்துள்ளார். இரணியனின் அறிவு 'இறைஞானம் அற்ற வெறும் கல்வி' என்று பிரகலாதன் பேசுகிறான்.

"கண்ணினும் கரந்து உளன்: கண்டு காட்டுவார்
உண்ணிறைந்திடும் உணர்வாகி உண்மையால்,
மண்ணினும்,வானினும்,மற்றை மூன்றினும்,
எண்ணினும் நெடியவன் ஒருவன் எண்ணிலான்"

என்ற பாடலில் "பிரகலாதன் எல்லாப் பொருள்களிலும் இறைவன் மறைந்து அந்தர்யாமியாய் இருக்கிறான்" என்பதைப் புலப்படுத்துகிறான். கண்களில் மறைந்திருக்கிறான். ஒன்றைப் பார்த்துச் சொல்லுபவர்களின் உள்ளத்தில் இருக்கின்ற உணர்வாகவும் இருக்கிறான்.

ஐம்பூதங்களிலும் அந்த இறைவனே மறைந்திருக்கிறான் என்று கூறுகிறான். பிரகலாதன் கூறும் கடவுட் கல்வியின் பிழிந்த பிழிவு இதுவே ஆகும். இறை ஞானத்தை உணர்தல் என்பது, பால் தயிராகத் திரிவதைப் போன்றது. உலகாயதக் கல்வியில், இறைஞானத்தைப் பெய்யும் போது அக்கல்வியானது இறைமயமாகி சாதாரணக் கல்வியைப் பயனுள்ள, இனிய கனி போலும் உயர்வுகளைத் தருகின்ற, ஞானக் கல்வியாக மாற்றும் என்பதே பிரகலாதன் தன் தந்தைக்குக் கூறும் அறிவுரை.

"..................வேத வேள்வியின்
கரையுளது: யாவரும் கற்கும் கல்வியின்
பிரையுளது என்பது மைந்தன பேசினான்" (கம்ப - இர வதை-57)

(கரை - எல்லை : பிரை-தயிர்போல மாற்றுபவனும் இறைவனே) மேலே காணப்படும் பாடலில் கரையாகவும், பிரையாகவும் இறைவன் இருக்கிறான் என்று கொண்டுகூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

கம்பரின் கல்விக் கோட்பாடு

உலகியல் கல்வி அறிவை மட்டுமே பெற்றமையால் தான், இரணியன், தான்எண்ணிய போக்கில் சென்று நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏன்-சூரியன் சந்திரன் முதலானஇயற்கைக்கும் அச்சத்தை உண்டு பண்ணி அலைக்களிக்கின்ற கொடுங்கோலனாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் பிறர் கருத்தில் இருக்கும் உண்மைகளை உணர்ந்து கொள்ளாத அகங்கார அசுரனாகவும் இருந்தான். ஆகையால் நரசிங்க மூர்த்தியால்அழிக்கப்பட்டான். அதனால் தான் இவன் அழிந்த போது அனைவரும் வருத்தப்படவில்லை,மாறாக நிம்மதி அடைந்தனர். ஆனால் இராவணன் வீழ்ந்தபோது, சுற்றத்தார் அழுது அரற்றி அவன் புகழ் பாடினர். இவ்வாறு இராவணனைக் காட்டிலும் மிகக்கொடியவனாக இரணியன் கம்பனாலே படைக்கப்பட்டுள்ளான்.

ஆகவே, அறிவுடன் இறையருள் ஞானக் கல்வியைப் பெற்ற நாட்டிலே தான் அன்பும், அமைதியும் தவழமுடியும் என்பதை கம்பரின் .இறையருட் கல்விக்கோட்பாடாக "இரணியன் வதைப்படலம்" நமக்கு தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகிறது. இனி, கம்பரின் கல்விக்கோட்பாட்டால் மலர்ந்த மனித மதிப்புகளை சற்றே உற்று நோக்கலாம்.

அயோத்தி என்னும் போதி மரத்தின் விதை கல்வியானால், கேள்வியே அதன் கிளைகளாகும். அம்மரத்தின் தழைத்திருக்கும்

இலைகள் தவமாகும். இலைகள் வானத்தின் ஒளியை உள்வாங்கி அதனை அரும்பெரும் சக்தியாக மரத்துக்கு ஆக்கித் தருகின்றன. தவம் என்பது யாரோ ஒரு சிலர் செய்வது என்று இல்லாமல் நாட்டில் உள்ள அனைவரும் தத்தமது பணிகளையே தவமாக மேற்கொள்ளவேண்டும் என்பதே கம்பரின் கருத்து.

தவம் என்பது அன்றாடப் பணிகளுக்கு இடையூவின்றி, அப்பணிகளின் ஊடாக, பின்னிப் பிணைந்து செல்லுகின்ற "நிஷ்கானிய யோகம்" ஆகும். அயோத்தி என்னும் மரத்திலே நாம் காணுகின்ற அரும்பு, "அன்பு" என்பதாகும். ஓர் உயிரின் மீதோ, ஒரு பொருளின் மீதோ நாம் அன்பு காட்டும் போது அந்தப் பொருளாகவோ அந்த உயிராகவோ நம்மை மறந்த நிலையில் ஒன்றி விடுகிறோம். தான் அற்றுப்போய் மற்றொன்றன் இயல்பாக ஆதலே அன்பு ஆகும்.

கோசலத்தில் மன்னனுக்கும் மக்களுக்கும் இடையே இருந்த உறவு அன்பினால் பிணைக்கப்பட்டுக் கட்டப்பட்டதாகும். "அன்பு" என்னும் ஈர்ப்புவிசை இவ்வாறு கோசலத்தை ஆட்கொண்டுவிட்டது. இதன் காரணமாக உயிர்கள் தங்குகிற உடலாக மன்னன் அந்த நாட்டில் அரசு புரிகின்றான்.

"உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால்" என்றமையால் மக்கள் இனம் மட்டும் அல்லாமல் ஏனைய உயிரினமும் மன்னனின் அன்புப் பிணைப்பால் காப்பாற்றப்பட்டன. இதனை பின்வரும் இந்நிகழ்வின் மூலம் அறிய இயலும்:

உயிரினங்களிடையே அன்பு

கோசலை நாட்டில், பொய்கையில் தாமரை மலரின் மீது அன்னத்தின் குஞ்சு உறங்கிக்கொண்டிருக்கின்றது. அவ்வேளையில் எருமை ஒன்று பொய்கையில் இறங்கி நீரைக் கலக்குகின்றது. அவ்வாறு கலக்கியதால் துயில் கலைந்தமையாலும், தன் தாய் அருகில்இல்லாமையாலும் அன்னக்குஞ்சு ஓலமிட, எருமை தன் கன்றினை நினைக்கிறது. அதனால் மடியில் பால் சுரக்கிறது. அப்பாலை அன்னக்குஞ்சு உண்டு மீண்டும் துயிலத் தொடங்குகிறது. அதன் தூக்கத்திற்கு இசைபாடுவது போல் தாமரை இலையின் கீழ் இருக்கும் தேரை தாலாட்டுப்பாடுவதாக இருக்கிறது என்பதைக் கம்பர்,

"சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை

காலுண்ட சேற்றுமதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைத் தாலாட்டும் பண்ணை"

என்ற பாடல் மூலம் அயோத்தி அன்பின் வடிவமாக இருப்பதை விளக்குகிறார். இவ்வாறு அயோத்தி மரத்தில் அன்பு அரும்பியது. மேலும் அது, தருமம் என்னும் அற்புத மலராக மலர்ந்தது.

அறத்திலிருந்து(அன்பு) மலர்வதே உண்மையான இன்பம். இதனை,அயோத்தியில் மலர்ந்துள்ள கதாபாத்திரங்களின் மூலமே நன்கறிய இயலும். ஆகையால் சத்தியம்,தருமம்,அன்பு.......இது போன்ற மனித மதிப்புகளை பின்வரும்(ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்றின் பதம் போதுமல்லவா!) இந்த ஒரு கதாபாத்திரத்தின் மூலம் அவியலாம்.

சுமித்திரை

இராமாயணக்கதையில் அதிகம் பேசப்படாத ஒரு பாத்திரம் தான் இலக்குவனின் தாயான சுமித்திரை. ஒரு சில இடங்களில் மட்டுமே பேசப்பட்டாலும், கம்பன் இவள் சிறப்பை மிகவும் நுட்பமாக வெளிப்படுத்துகிறார். இராமன் காடு செல்லப்போகின்ற வேலை அயோத்தி மாநகரம் துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றது. இராமன் காட்டுக்குப் போக வேண்டுமென்றுதான் கைகேயி கூறினாளே தவிர இலக்குமணனை அவள் கானகம் போகச் சொல்லவில்லை. ஆனால் இலக்குமணனோ இராமனுடன் காடு செல்லத்தயாராகின்றான். இந்நிலையில் எந்தத் தாயும் வருந்தாமலிருக்க மாட்டாள். எத்தகைய தியாகத்தையும் மேற்கொள்ளவல்ல சுமித்திரை தன் மகனின் பிரிவையெண்ணி வருந்தினாலும் அதை உள்ளடக்கி அறம் பேசுகின்றாள். கானகம் செல்வதற்கு முன் இராமனும் இலக்குமணனும் சுமித்திரையிடம் விடைபெற்றுச் செல்ல வருகின்றார்கள். புதல்வர்களைக் கண்டதும் அவள் சோர்ந்து விழுந்து அழுகின்றாள் இராமன் ஆறுதல் கூறுகிறான்.

அவ்வேளை இராமனுக்காக கொண்டுவரப்பட்ட மரவுரியை இலக்குவனனே முதலில் பெற்றுக்கொள்கிறான். தம்பியாகத் தன்னை எண்ணினால் அரசனிடம் அன்பில்லாதவனாக இலக்குவன் இருந்துவிடக்கூடாதே என்றும், எண்ணத்தில் அடிமையாக இருந்து இராமனைப் பின்தொடர்ந்து அவனைக் காக்கவேண்டுமென்றும் நினைக்கிறாள், இவ்வளவோடு நின்றுவிடாமல் பின்னும் ஒருபடி மேலே செல்கின்றாள்.

சுமித்திரை. "நீ உன் உயிரைக் கொடுத்தேனும் இராமனைக் காக்க வேண்டும். உன் அரசனாகிய இராமன் வந்தால் நீயும் மீண்டு வா, இல்லையென்றால் அவனுக்கு முன்பே முடிந்து விடு" என்று உரைக்கிறாள்.

"மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா
அதுவன்றேல் முன்னம் முடி (கம்ப.இராமாயணம் - 1752)

எந்தத் தாய்தான் தன் மகனை "முன்னம்முடி"என்று கூறுவாள்! சுனித்திரையின் தூய்மையான மனத்தினின்றும் எழுந்த சொல்லறத்தை இப்பாடல் மூலம் காட்டிக் கம்பன் அவளை மிக உயர்ந்த 'அறமாதாவாக' ஆக்கிவிடுகின்றார். இவ்வாறு தருமத்தின் வழிவந்த இன்பத்தைத் துய்த்துக் கோசல நாட்டினர் வற்றாமல் தொடர்கின்ற மகிழ்வைப் பெற்றனர்.

முடிவுரை

மனித குலத்தார்க்கு கம்பரின் கல்விக்கோட்பாடான நம் பாரதீயக்கல்வி விதைக்கப்படுமானால், ஒவ்வொரு மனிதருக்குள்ளும் - சத்தியம் - தருமம் - அன்பு, அஹிம்சை, அமைதி என்ற மனித மதிப்புகள் மலர்ந்து மணம் வீசுவதோடு உலக உயிர்களுக்கும் நன்மையே பயக்கும் என்பதில் ஐயமில்லை!

விதிவலி உணர்த்திய மதிவலன்

சித்தாந்தச்செம்மணி, முனைவர். பழ.முத்தப்பன்
மேனாள் முதல்வர், செட்டிநாடு கலைஅறிவியல் கல்லூரி,
திருச்சி.

இந்திய மெய்ப்பொருள் இயல் தத்துவங்களில் பெரும்பாலான தத்துவங்கள் வினைக் கோட்பாட்டினை ஏற்றுக் கொள்வன ஆகும். அதிலும் தமிழகத்தில் முதன்மைபெற்ற தத்துவங்களான சைவமும், வைணவமும் வினைக் கோட்பாட்டை முற்றிலும் ஏற்றுக் கொண்டவையாகும்.இராமாயணம் வைணவக் காப்பியம் என்பதால் விதியின் செயல் பாட்டினைச் சுட்டுவதில் வியப்பில்லை. அதிலும் கல்வியிற் சிறந்த கம்பர் அளித்திட்ட கம்ப காவியத்தில் விதி இடம் பெற்றிருப்பது வியப்புக்கு உரியது அல்ல, என்றாலும் விதியின் தன்மையினைத் தன் கவி மதியால் எவ்வாறெல்லாம் சுட்டிக் காட்டிச் செல்லுகின்றான் என்பதைச் சிறிது எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம்.

விதி, ஊழ், நியதி, பால், முறை, உண்மை என்பன ஒருபொருட் சொற் கிளவிகள் ஆகும். எனவே இச்சொற்களில் சிலவற்றைக் கம்ப காவியத்தில் காணமுடிகிறது. இருப்பினும் ஊழ், விதி என்ற சொற்களே அதிகம் கம்பரால் கையாளப் பெறுகிறது. திருக்குறளில் ஊழ் என்ற அதிகாரத்திற்கு உரை எழுதிய பரிமேலழகர் - ஊழ் இருவினைப்பயன். செய்தவனையே சென்று அடைவதற்கு ஏதுவாகிய நியதி என்று ஊழ் என்ற சொல்லுக்குப் பொருள் தருவார். இந்தப் பொருளை விதி என்ற சொல்லுக்கும் கொள்ளுவதோடு உயிர் செய்த வினைகளுக்கு ஏற்ப அதன் பயனை முழுமுதற் கடவுள் பிறவி தோறும் உயிர்க்கு அளிப்பான் என்ற சைவ சித்தாந்தக் கொள்கையையும் உடன் இணைத்துக் கொள்ளலாம். (சிவஞான போதம் சூ.2. ஆயிரு வினையின் போக்குவரவு புரியா ஆணையின்) என்பது சித்தாந்தக் கொள்கை.

இந்த விதி உயிர் செய்கின்ற புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப ஆகூழாகவும், போகூழாகவும் பயனைத் தரும் என்பது தமிழ்த் தத்துவ மரபாகும். அதன்படி கம்ப காவியத்தில் விதி இன்பத்தைத் தருவதையும், துன்பத்தைத் தருவதையும் காணமுடிகிறது. பெரும்பாலும் விதியை நினைக்கின்ற உயிர்கள் துன்பக் காலத்திலேதான்

நினைப்பதுண்டு. ஆயின் கம்பர் நன்மைக் காலத்திலும் காப்பியப் பாத்திரங்கள் விதியை எண்ணி மகிழ்வதாகக் காட்டுகிறார்.

இப்பிறப்பு இன்பத்திற்கு முன்றிதிப் பயன் காரணமாகும் என்பதைச் சுக்ரீவன் இராமனைச் சந்தித்த நிகழ்ச்சியில் இடம் பெற வைக்கின்றார். "என் எனக்கு அறியது எப்பொருளும் எற்கு எளிதலால் உன்னை இத்தலை விடுத்து உதவினார் விதியினார்"(வை.மு.கோ.மராமர.பா.18)

இப்பகுதியில் நல்வினையால் இன்பமாக வந்த விதியினை ஆர் விகுதி கொடுத்து விதியைச் சிறப்பிப்பது கம்பரின் மதிநலம் ஆகும். விதியை நொந்து கொள்ளுகின்ற சமூக நிலையில் கம்பர் ஆர் விகுதி கொடுத்து விதியைச் சிறப்பித்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

பிறிதோரிடத்தில் சீதையிடம் அனுமன் பேசுகின்ற பொழுது,

"வேறுஇனி விளம்ப உளதன்று விதியால் இப்

பேறுபெற என்கண் அருள்தந்தருளு" (சூளாமணிப்படலம்,பா.10)

என்று சீதையை இராமனிடத்தில் சேர்ப்பதாகிய பேறு விதியால் கிடைத்தது என்று அனுமன் குறிப்பிடுவது விதிதரும் நல்வினைப் பயனைக் குறிப்பதாகும். இவ்வாறு பாடல்களில் நேரிடையாகக் குறிப்பிட்ட கம்பர், இராம இலக்குவர் இருவரும் தந்தை முறைமையான ஜடாயுவிற்குச் செயத்தகு கடமை செய்ததை ஜடாயுவினுடைய நல்வி-தியாகும் என்று உரையாசிரியர்கள் குறிக்கும்படி உருக்காட்டுப் படலம் 82ஆம் பாடலில் அமைத்துள்ளார். எனவே விதிதரும் நல்வினைப் பயனை இவ்வாறு பாடலிலும் உரைக் குறிப்பிலும் கம்பர் பெறவைத்து நல் விதி பற்றிய எண்ணத்தைப் பதிய வைத்து விடுகிறார்.

விதி தரும் துன்பம் -- விதியினால் உயிர் தாம் பெற்ற பிறவியில் துன்பங்கள் அடைவதுண்டு. எந்த ஒரு காரணமும் இல்லாமல் துன்பம் அடைவதில்லை. அவ்வாறு காரணம் அறிய முடியாது துன்பம் ஏற்படுகின்ற பொழுது முன்றினைப் பயனாகிய விதி காரணமாக அமையும். இதைக் காப்பியத் தலைவனின் கூற்றிலேயே கம்பர் அமைத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். "நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை" என்று தொடங்கும் பாடலில்" நமைப் புரந்தாள் மதியின் பிழையன்று மகன் பிழையன்று மைந்த, விதியின் பிழை" (நகர்நீங்கு படலம்,பா.134) என்று கைகேகியின் மனம் திரிந்ததற்கு விதி காரணம் என்று காட்டுகின்றார் கம்பர். இங்கு கம்பர் தம் மதிநலத்தால் முன் நிகழ்வை நினைவுபடுத்துகின்றார். கைகேகியின்

மனம் திரிந்ததை மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் குறிப்பிடுகின்ற பொழுது, "அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும் -- துறக்க நல்லருள் துறந்தனள்"(பா.78)என்று குறிப்பிடுகின்றார். எனவே காரணம் இல்லாத துன்பத்திற்கு விதி காரணமாக அமையும் என்பதைக் கம்பர் தெளிவாக்கி விடுகின்றார். இதைத் தான் திருவள்ளுவரும், "நினைக்கப் படும்"(குறள்-169) என்பார்.

காப்பியத் தலைவனைக் காட்டிய கம்பர் காப்பியத்தின் எதிர்நிலைத் தலைவனான இராவணனின் காமம் மிகுந்து தோன்றுவதற்குக் காரணம் விதியின் வலிமைதான் என்று காட்டி, தன் மதிநலத்தை வெளிப்படுத்துகிறார். மாரீசன் வதைப் படலத்தில் ,

"விதியது வலியினாலும் மேல்உள விளைவினாலும்
பதிஒரு கேடுவந்து குறுகிய பயத்தினாலும் (பா.86)

என்று இராவணன் சீதையைப் பார்க்காது கொண்ட காமத்தின் மிகுதிக்கு விதியைக் காரணமாகக் காட்டுகின்றார். முன்பு வேதவதிக்குச் செய்த தீவினை இன்று விதியாக வந்து இராவணனுக்கு அமைந்தது என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்ற கம்பரின் மதிநலம் போற்றுதற்கு உரியதாகும். இவ்விரண்டு பாத்திரங்களைத் தவிரப் பிற பாத்திரங்கள் துன்பம் அடைகின்ற பொழுது விதியைக் காரணமாகக் காட்டுகின்ற பல இடங்கள் உள்ளன என்றாலும் கட்டுரையின் விரிவு கருதி ஒருசில எடுத்துக் காட்டுகள் காட்டப் பெறுகின்றன.

தாடகை விசுவாமித்திரரும் இராம இலட்சுமணரும் தன்னோடு போர் தொடுக்க வந்ததற்குக் காரணம் விதிதான் என்று குறிப்பிடுகின்றாள். "விதி கொடு உந்த படக்கருதியோ பகர்மின் வந்த பரிசு"(பா.51)

நகர்நீங்கு படலத்தில் "குழைக்கின்ற கவரி இன்றி"(பா.2) என்று தொடங்குகின்ற பாடலில் "இழைக்கின்ற விதி முன் செல்ல" என்று குறிப்பிட்டு விதியையே ஒரு பாத்திரமாகக் கம்பர் படைத்துக் காட்டியிருக்கிறார். விதி முன் செல்லத் தருமம் பின் இறங்கிச் செல்லும் என்ற ஒரு நாடகக் காட்சியை இப்பாடலில் அமைத்துத் துன்பத்தின் நிழலைக் காட்டுகிறார்.

கடல்தாவு படலத்தில் அனுமனைக் கண்ட நாகர் மரபினர் அஞ்சுகின்ற காட்சியைக் காட்டுகின்ற பொழுது,

"உய்தும் நாம் என்பது என்னே உறுவலிக் கலுழன் ஊழின்
எய்தினான்ஆம் என்று அஞ்சி அலக்கண் உற்று இரியல் போனார்"(பா.21)

என்ற பகுதியில் பண்டை ஊழ்வினையின் வரலாற்றை அதாவது கருடன் தன்னுடைய சிறகுகளால் கடலைக் கிழித்து ஆரமுதத்தைக் கொண்ட கதையை நினைவு படுத்துகிறார். எனவே காரணமாகவும், காரியமாகவும், காரியத்தில் வரலாற்றை நினைவு படுத்துவதாகவும் போகூழ் விதியைக் கம்பர் நிலைநாட்டியிருப்பது அவரின் மதிநலமாகும்.

விதியை வெல்ல முடியாது

தமிழர்தம் கொள்கைகளில் விதியும் ஆள்வினை உடைமை இருந்தாலும் விதியை வெல்லமுடியாது என்ற கருத்தே மிகுதியும் போற்றப்பெறுகிறது. விதியை யாராலும் வெல்ல முடியாது என்பதைப் பல இடங்களில் பாத்திரங்கள் வாயிலாகக் கம்பர் புலப்படுத்தியிருக்கிறார். மாபெரும் முனிவர்களே இக்கருத்தை உடையவர்கள் என்பதை வசிட்டரின் வாயிலாக வெளிப்படுத்துகிறார். "ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ"(நகர் நீங்கு -பா.164) நாடாளும் மன்னவரும் நடப்பதை வெல்ல முடியாது என்ற கருத்தை வெளிப்படுத்துவதைத் தயரதன் முடிதுறக்க எண்ணியதற்கு இசைந்த கூற்றில் கம்பர் வைத்துள்ளார். "என்ன உன்னியும் விதியது வலியினும் இசைந்தார்" (மந்திரப் படலம் - பா.35)

எதிர்நிலைத் தலைவர்களில் ஒருவனான கும்பகர்ணன் பாத்திரம் மூலம் எதிர்கால நிகழ்விற்கும் வெல்ல முடியாத விதியைக் காரணம் ஆக்குகிறார். விதியால் தான் வெற்றிபெற முடியாது அதாவது விதி வெற்றிபெற வைக்காது என்ற கருத்தைக் குறிப்பிடுவதாகக் கம்பர் அமைத்திருப்பதும் விதியை வெல்ல முடியாது என்பதை வலியுறுத்துவதாகும்.

"வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன் விதி
நின்றது பிடர் பிடித்து உந்த நின்றது பொன்றுவன்"

(கும்பகர்ணன் வதை-94)

என்பது கருத்துக்கு உரிய பாடற்பகுதி ஆகும்.

நிகும்பலை யாகம் பிழைத்ததைத் தங்கள் தவமாகத் தேவர்கள் கருதினாலும் இந்திரசித்து போருக்கு வெகுண்டு எழுந்ததைக் கண்டு குரங்குக் கூட்டங்கள் அழியப் போகின்றனவே என்று அஞ்சித் தங்கள் விதியை நொந்து கொள்ளுகின்ற காட்சியை நிகும்பலை யாகப் படலத்தில் கம்பர் காட்டுகின்றார்.

"வானரம் பிழைக்க லாற்றா
அழைத்தது விதியே கொல் என்று அஞ்சினார்" (பா.87)

இவ்வாறு விதியின் வலிமையையும் விதியை வெல்ல முடியாது என்பதையும் காப்பியத்தின் பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்கின்றார் கம்பர்.

விதிக்கு விதி

தமிழகத்தில் சான்றோர் விதிவலிது என்று கொண்டாலும் இறையருள் துணை கொண்டு விதியை வெல்லவும் முயற்சிக்க வேண்டும் என்ற கருத்தும் உண்டு. திருவள்ளுவரும் ஆழ்வினை உடைமையில் முயற்சியின் பெருமைகளைச் சுட்டிக் காட்டுவார். அதன் அடிப்படையில் கம்பருக்குப் பின்னர் வந்த படைப்பாளர்களும் தங்கள் நூல்களில் விதியை வெல்ல வலியுறுத்துவர். கம்பரும் முயற்சி வேண்டுதலைப் பல இடங்களில் சுட்டிக் காட்டுவார். கைகேகியின் சூழ்வினையை அறிந்த இலக்குவன் கொண்ட சினத்தைச் சித்திரமாக வரைந்த கம்பர் அவனுடைய சொல்லாற்றலில் முயற்சியை வெளிப்படுத்துகின்றார்.

'மதிக்கும் மதியாய் முதல் வானவர்க்கும் வலீஇதாம்
விதிக்கு விதியாகும் என்றில் தொழில் காண்டி"

(நகர்நீங்குபடலம்-பா.135)

என்கிறான் இலக்குவன். ஊழ்வினையால் நேர்ந்ததற்கு நீ வெகுள்வது கூடாது என்று கூவிய இராமனுக்குக் கைகேயின் கருத்தை நிறைவேற்ற மும்மூர்த்திகளே வந்தாலும் அவர்களையும் தடுத்து எல்லோரையும் வெல்லுகின்ற விதியையும் என் வில்லினால் வெற்றி காண்பேன் என்று கூறுகின்ற இலக்குவனின் சொல்லில் விதியையும் வெல்ல முயல வேண்டும் என்ற தமிழ் கோட்பாட்டைத் தம் மதிநலமாம் கவித்திறத்தால் கம்பர் புலப்படுத்தி விடுகின்றார்.

இவ்வாறு கம்பர் தன்னுடைய காப்பியத்தில் நன்மை தீமை வினைகளுக்கு உரிய நல்லூழ், போகூழ் பிரிவகளைக் கொண்ட விதியைக் காப்பியத்தில் பல கோணங்களில் அமைத்து இன்பத்தைத் தருவதும், துன்பத்தைத் தருவதும் விதியின் பயனாகும் என்றும், அவற்றை வெல்ல முடியாது - என்றாலும் வெல்லுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற கருத்துக்களைப் பெறவைத்து விதிவலி உணர்த்தும் மதிநலத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கம்பனில் விதி

திருமிகு. ம.ஆனந்த அபூர்வசாமி
விருதுநகர்.

மனித வாழ்க்கை விதி வழிப்பட்டது. புறநானூற்றுப் புலவன் கணியன் பூங்குன்றன் இதனை,

"கல்பொருது இரங்கும் மல்லர் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம்"

என்று காட்டுகிறார். அந்த விதியினை 'ஊழ்' என்று வள்ளுவமும், சிலம்பும் குறிக்கின்றன.

"ஊழிற் பெருவலி யாவுள"
"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பன வரிகள்.

"ஊழாலோ, முன்வினைப் பயனாலோ வருகிற தீமையை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது" என்பது சுக்கிர நீதி.

"பிரம்மன் தலையில் எழுதியபடி எந்தச் செல்வம் உள்ளதோ, அந்தச் செல்வத்தை பாலைவனத்தில் கூட மனிதன் நிச்சயம் அடைகிறான். ஆனால் அவர் எழுதியதற்கு அதிகமாக மேருமலையில் கூட கிடைக்காது " என்று கூறுகிறது நீதி சதகம் என்பார் ஓங்காரானந்தா சுவாமிகள்.

பாரதியும் பாஞ்சாலி சபதத்தில் விதியின் செயலை விளக்கமாகக் கூறுகிறார்.

"விதி! விதி! விதி! மகனே"

"இங்கிவையாவும் தவறிலா - விதி
ஏற்று நடக்கும் செயல்களாம் - முடி
வெங்கணுனின்றி வெற்றி செய் - என்றும்
ஏறி இடையின்றிச் செல்வதம் - ஒரு
சங்கிலி யொக்கும் விதிகண்டீர் - வெறும்
சாத்திரமன்று இது சத்தியம்" என்பதும்

"விதியினாலத் தருமனும் வீழ்ந்தான்

மதியினும் விதி தான் பெரிதன்றோ?

"வைய மீதுளவாகுமவற்றுள்

விதியினும் பெரிதோர் பொருளுண்டோ"

என்பதும்,

"விதி செயும் விளைவினுக்கே - இங்கு
வேறு செய்வார் புவி மீதுளரோ"

என்பதும் பாஞ்சாலி சபதத்தில் பாரதி விதிபற்றிக் கூறும் விளக்க வரிகள். இத்தகைய விதியை கவிச் சக்கரவர்த்தி கம்பர் சட்டம், முறைகள், பிரமன் எழுத்து என்று பல்வேறு கதாபாத்திரங்களின் மூலம் படம் பிடித்துக் காட்டி, "விதி வலியது, அதன் வழிதான் மனித வாழ்க்கை" என்று உணர்த்தும் மதிவலனாகத் திகழ்கிறார்.

இழைக்கின்ற விதி

தசரதன் விரும்பியபடி இராமனுக்கு முடிசூட்ட வசிட்டன் நாள் குறிக்கிறான்.

"முதிர் தவராயினும். முனிவராயினும் பொதிவரு திருவொடு
பொலிவராயினும், விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்"

என்ற கருத்தின்படி கைகேயி தன் வரங்களால் இராமன் காடு செல்லும் நிலை ஏற்படுகிறது. மணிமகுடம் தரிக்க வேண்டியவன் மரவுரி உடுத்துகிறான். அறத்தின் நாயகன், வேதநாயகன், மேல் நின்ற விதிக்கு நாயகன் என்று போற்றப்பட்ட இராமன் விதியின் வலியால் வருகின்ற நிலையை, விதியின் விளையாட்டை, வலிமையை,

"குழைக்கின்ற கவரியின்றி, கொற்ற வெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதி முன் செல்ல. தருமம், பின் இரங்கி ஏக"

என்று காட்டுகிறான் கம்பன்.

விதியின் பிழை

இராமனுக்கு மகுடமில்லை என அறிந்து ஆவேசம் கொண்ட இலக்குவனிடத்தில் 'ஊழ்' என்பது உலகத்து இயற்கை என்பதனை உணர்த்தும் விதத்தில் 'விதியின் பிழை' என விதியே வலிமையானது என்பதனை,

"நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை அற்றே,
பதியின் பிழை அன்று: பயந்து நமைப் புரந்தாள்

மதியின்பிழை அன்று: மகன் பிழை அன்று: மைந்த!
விதியின்பிழை: நீஇதற்குஎன்னை வெகுண்டது என்றான்"

விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்டி

அண்ணன் விதியின் பிழை என்று கூறியும் "விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்பாயாக" என்று பேசிய இலக்குவன், ஆரண்யத்தில் மாயமான் வந்து நின்ற போது "வினை என வந்து நின்றமான்" என்று சுட்டுவதும் விதியை வெல்வேன் என்று கூறியவன்"

"வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ"

என்று கூறுவதன் மூலம் விதியின் பயன் என நிலை மாறுவதன் மூலம் விதியின் வலியைக் கம்பன் சிறப்பாக உணர்த்துகிறான். சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் எடுத்த முடிவு பற்றி கூறும் இளங்கோவடிகள்,

"வினை விளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரான் ஆகி....
கொன்று அச்சிலம் பினைக் கொணர்க ஈங்கு"

என மதி மயங்கியது போல் மாயமனைக் கண்ட இராமனும் ஆராயாது அதன் பின்னே சென்றது. 'வினை விளை காலம்' விதி என்று கம்பன் காட்டுகிறான்.

பிடர் பிடித்து உந்தும் விதி

சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என அறிவுரை கூறிய கும்பகருணன் நீள்துயில் கொள்கிறான். போர் மூழ்கிறது. படைகள் அழிகின்றன. கும்பகருணனைத் துயில் நீங்கச் செய்து இராவணன் அழைத்து வரச் சொல்கிறான். வந்து நின்ற கும்பகர்ணன் மூலம் விதியின் பல்வேறு பரிமாணங்களைக் கம்பன் காட்டும் விதம் அற்புதம்.

"திட்டியின் விட மன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ? இது விதியின் வண்ணமே"

"வென்று இவண் வருவென என்று உரைக்கிலேன்: விதி
நின்றது: பிடர் பிடித்து உந்த நின்றது"

அதற்கு முன்பே அனுமன் இலங்கையை எரியூட்டி இராமன் சேதுபந்தனம் அமைத்து இலங்கை வரும் முன்பு இராவணன் மந்திரப் படலத்தில் கும்பகர்ணன் மூலம் விதியின் வலி உணர்த்துகிறான் கம்பன்.

"தீயினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தாய்
ஏயின உறத்தகைய இத்துணையவேயோ"

என்பதில் 'ஏயின' என்பது விதியினால் ஏவப்பட்டன என்ற பொருளில் வரக் காணலாம். சீதையைக் கவர்வதற்குத் துணை செய்ய வேண்டும் என்ற இராவணனிடத்தில் மாரிசன் கூறும் வார்த்தைகளிலும். விதியின் செயலே அது என்பதனை,

"மன்னா! நீ உன் வாழ்வை முடித்தாய் மதி அற்றாய்
உன்னால் அன்று ஈது ஊழ்வினை என்றே உணர்கின்றேன்"

என்று கம்பன் காட்டுகிறான்.

விதி, வலி காட்டும் போது வேறுபாடில்லை

விதி தனது வலிமையைக் காட்டும் போது அதன் வலிமைக்கு முன்னர் யாவரும் பணிவர். அதனை விட வலியது ஒன்று உலகில் இல்லை என்பதனை அனுமன் மூலம்,

"எக்குலங்களின் யாவரே ஆயினும்
இருவினை எல்லோர்க்கும்
ஒக்கும், ஊழ் முறை அல்லது வலியது ஒன்று
இல் என உணர்வுற்றான்"

எனக் கம்பன் காட்டுகிறான்.

ஊழ் வினை உருத்து வந்தூட்டும்

ஊழ்வினை வந்து உருத்துவதனை,

"எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வியாது பின் சென்று அடும்"

என்று குறள் கூறுகிறது.

தனி மனித ஊழாக இராவணன் ஊழ்வினை, வினைப்பகை, அவன் அழிவதற்குக் காரணம் என்பதனை, மாரீசன்

"சீதை உருவோ? நிருதர் தீவினை அது அன்றோ? "

என்று கூறுவதிலும்

"மேல் உயர் கயிலையை எடுத்த மேலைநாள்
நாலு தோள் நந்திதான் நவின்ற சாபத்தால்,
கூலவான் குரங்கினால் குறுகும் கோள்"

"தீயிடைக் குளித்த அத்தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லுமோ?
நோய் உனக்குயான் என நுவன்றுளாள் அவள்
ஆயவள் சீதை பண்டு அமுதின் தோன்றினாள்"

எனவீடணன் இராவணனது வினை, பகையாக மாறிவந்த தன்மையை, இராவணனுக்கு எடுத்துரைக்கும் வரிகளில் காணலாம்.

நம்மை அழிப்பதற்கு திருமால் மனித வடிவில் வந்திருக்கிறார். அது நம்முடைய வினைப்பயன் என்றுவீடணன் கூறும் போது,

"முனைவரும் அமரரும் முழுது
உணர்ந்தவர்களும் முற்றும் மற்றும்
நினைவு அருந்தகையர் நம் வினையினால்
மனிதராய் எளிது நின்றார்"

என்று கூறுகிறார்.

அகலிகையின் வரலாற்றைக் கேட்ட இராமன் அகலிகை பெற்ற சாபத்திற்கு ஊழ்வினையே காரணம்.

விதி எனும் சட்டம்

இராமன் மறைந்திருந்து வாலியின் மார்பில் இராமபாணத்தை எய்கிறான். அவனிடம் பேசுகின்ற வாலி, அவன் செய்த செயல் பற்றிக் கூறும் போது விதியினை 'சட்டம்' என்ற முறையில் கம்பன் காட்டுகின்ற காட்சியின் மாட்சி வாலி வதைப் படலத்தில் வரக் காணலாம்.

"வீரமன்று விதியன்று மெய்ம்மையின்
வாரமன்று நின் மண்ணினுக்கு என் உடல்
பாரமன்று பகையன்று"

என்பது பாடல் வரிகள்.

ஆயுள் முதல் அனைத்துமே ஊழ் வினையின் விதி

தாடகையைப் பெண் என்று கருதி கொல்லாது நின்ற இராமன் கருத்தறிந்த விசுவாமித்திரர் தாடகையை வதம் செய்யக் கூறும்போது அவள் விதி முடிந்து விட்டது என்பதனை ஊழ்வினையின்படி விதிக்கப்பட்ட ஆயுள் முடிவது என்பதை நன்கு அறிந்து உயிர்கள் செய்த புண்ணியத்தின் வினைப்படி னி எமன் எடுத்துச் செல்வான் என்று கூறுவதை,

"சாற்றும் நாள் அற்றது எண்ணி தருமம் பார்த்து
ஏற்றும் விண் என்பது அன்றி..."

எனக் கம்பன் காட்டுகிறார்.

நடப்பது யாவும் விதிப்படியே

இராமனாகிய திருமாலுக்கு வசிஷ்டன் சூட்ட வேண்டிய முடி. முடியாமல் தடையானதோ? அது மீண்டும் வசிஷ்டனே சூட்டும்படியாக செய்தது விதியே என்பதனை,

"வசிஷ்டனே புனைந்தான் மௌலி"

என்று கம்பன் காட்டுகிறான். இராமனாகிய திருமால் முடிசூட்டிக் கொண்டதைக் கூறும் போது சுக்கிரனும். வியாழ பகவானும் ஒத்த வேதச் சடங்கு செய்யும் ஆச்சாரியார்கள் விதிப்படி எல்லாம் செய்ய, நல்ல நாளில், நல்ல முகூர்த்தத்தில், திருமாலாகிய இராமன் திருமுடி சூடினான் என்று விதியோடு நிறைவு செய்கிறான் கம்பன். இதை உணர்த்தும் பாடல் வரிகள் :

"வெள்ளியும் பொன்னும் ஒப்பார் விதிமுறை மெய்யின் கொண்ட
ஒள்ளிய நாளின் நல்ல ஓரையின் உலகம் மூன்றும்
துள்ளின குனிப்ப மோலி சூடினன் கடலின் வந்த
தெள்ளிய திருவும் தெய்வப் பூமியும் சேரும் தோளான்"

முடிவுகள்

கம்பன் விதியை சட்டம். பிரம்மன் எழுத்து. உலக இயற்கை முறை என்று பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறான். விதி வலிமையானது. மனிதன், அரக்கன், அவதாரம் என யாராயினும் விதியின் வலிமைக்கு உட்பட்டவர்கள். விதியை வெல்ல அவர்களால் முடியாது. விதி வழி தான் வாழ்க்கை விதி வசத்தால் தான் அனைத்தும் நடைபெறுகிறது.

விதியை மாற்ற முடியும் என்று கூறுபவர்களிடனிருந்து மாறுபட்டு. வேறுபட்டு விதி வழிதான் வாழ்க்கை, விதி வலியது என்று கூறும் கம்பன் "விதி வலி உணர்த்திய மதிவலன்" என்பது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

கம்பன் கண்ட மானுட வாழ்வும் விதியும்

முனைவர். சீ.வசந்தா
ஆய்வாளர் ஆசிரியர் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை.

மானுடவாழ்வின் பல்வேறு நிலைகளை விளக்கிக்காட்டுவதில் சிறந்தவன் கம்பன். மனிதப்பிறவியில் ஏற்படும் இன்ப துன்பங்களை மையமாக வைத்து விதி என்ற சொல்லை செயல்களின் பிரதிபலிப்பில் மனிதர்கள் எடுத்துக்காட்டுகின்றார்கள்.

திருவள்ளுவன் காட்டும் விதி

பகுத்தறிவு சிறந்து விளங்கும் மனிதர்கள் தாங்க முடியாத துயரம் வருகிறபோது இது என் விதி என்று, நினைத்து சொல்லி வாழ்க்கையை நகர்த்துகின்றனர்.

"ஊழிற்பெருவலி யாவுள" என வினவுகின்றான் வள்ளுவன்.

விதியைவிட வலிமையானது உலகத்தில் எதுவும் இல்லை. வாழ்க்கைப்பாதையில் சென்று அச்செயலை முடிப்போம் என்று சென்றால் பெருந்தடை ஏற்படுகின்றது. விதியின் வலிமையை,

"மற்றொன்று சூழினும் தான் முந்துறும்"

என வள்ளுவன் உணர்த்திக்காட்டுகின்றான்.

மனிதவாழ்வின் பல்வேறு கோணங்களில் பிறப்பு முதல் இறப்புவரை சிந்தித்து நோக்கும்போது விதியின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதை அறியமுடிகிறது.

விதியின் பிழை

மந்தரையின் சூழ்ச்சியால் கையேயியின் சூழ்வினையால் இராமனின் முடிசூட்டுவிழா நின்றுவிட்டது. இச்செய்தி அவிந்த இலட்சுமணன் சினம் கொள்கின்றான். னிகப்பெரிய இன்ப நிகழ்வு குடும்பத்தில் நடைபெறும்போது மகிழ்ச்சி, நம்பிக்கை, எதிர்கால வாழ்வு, முன்னேற்றம் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு குடும்ப உறுப்பினர்கள் மகிழ்வதுண்டு. குடும்ப உறுப்பினர்கள் ஒருவர் மூலம் நல்ல நிகழ்வு தடைபடுவதை அவிந்து மற்றவர்கள் சினம் கொள்வது இயற்கை. முடிசூட்டு விழாவின் தடையை அவிந்து சினம் கொள்கிறான் இலட்சுமணன். இராமன் இலட்சுமணனின் சினத்தை தணிவிக்கிறான். சினம் தீயது என்பதை வள்ளுவன்

"சினத்தை பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையாதற்று"

என விளக்கிக்காட்டுகின்றான்.

சினம் தன்னையும் அழிக்கும் தன்னைச் சார்ந்தவரையும் அழிக்கும். நெருப்பைப் போன்ற தீமையை ஒருவர் செய்தாலும் சினம் கொள்ளாதிருப்பது நல்லது. இராமன் காட்டிற்குச் சென்ற செய்தியவிந்து பரதன் சினம் கொள்கின்றான். தன் தாயாகிய கைகேயியை அழிப்பேன் என்கிறான். கண்களில் தீப்பொறி பறக்கிறது. மூக்கிலிருந்து அனல் காற்று வீசுகிறது. சினத்தின் வெம்மையைக் கம்பன்,

"புருவங்கள் குனித்து கூத்துநின்று ஆடின
உமிழ்ந்தன உதிரம் கண்களே"

என உணர்த்துகின்றான்.

எவ்வகையில் நோக்கினாலும் சினம் தீயதேயாகும். பரதன் சினம் கொண்டு தாயை அழித்தாலும் தாயைக் கொன்ற தனயன் என்ற பெரும்பழி ஏற்பட்டிருக்கும்.

வேள்வி காக்க இராமனை அனுப்பு என விசுவானித்திரன் வேண்டும் பொழுது தசரதன் பட்ட துயரத்தைக் கம்பன்,

"உள்நிலாவிய துயரம் பிடித்துந்த ஆர் உயிர் நின்று ஊசலாட
கண்இலான் பெற்று இழந்தான் என உழந்தான்"

என உணர்த்துகின்றான் ஜலபேச முனிவரின் சாபமாகிய புத்திரசோகத்தால் உன் உயிர் பிரியும் என்ற உள்நிலாவிய துயரம் பிடிழத்து உந்த கண்ணில்லாத ஜலபோஜ தம்பதியர் சிரவணனை இழந்து எந்தவகையான துன்பத்தை அனுபவித்தார்களோ அத்தகைய பெருந்துன்பத்தை தசரதன் அடைந்தான்.

தான் செய்த வினை தன்னை மீண்டும் வந்து தாக்குகின்ற பொழுது அது விதியாகிறது. "ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்" என்று இளங்கோவடிகள் உணர்த்துகின்றார். விதியின் தாக்கத்தை சங்க இலக்கிய காலம் தொட்டு இன்றைய இலக்கியங்கள்வரை பல்வேறு சான்றுகளை எடுத்துக்காட்டி நிறுவுகின்றன.

இராமன் காட்டிற்கு சென்றபோது விதி முன்னே சென்றது அறம் ஏங்கி பின்னே சென்றது என்று விதியின் ஏற்றத்தைக் காட்டுகின்றான்

கம்பன். வினை விதைத்தவன் வினையறுப்பான், வினை விளைகாலம் முதலிய தொடர்கள் விதியின் தன்மையை உணர்த்துகின்றன.

இலட்சுமணனுக்கு ஆறுதல் கூறும் இராமன், தம்பி, இலட்சுமணா யுகங்கள் தோறும் வற்றாது ஓடிக்கொண்டிருக்கும் நதி நீர் வரத்து குறைந்து வறண்டுவிட்டால் அது ஆற்றின்குற்றமல்ல, அரசனின் கொடுங்கோலாட்சியினாலும், குடிமக்கள் படும் வருத்தத்தாலும் இயற்கையின் சுழற்சியாலும் மழைவளம் குன்றியதே காரணமாகும். இக்கருத்தைக் கம்பன்,

"நதியின் பிழை அன்று நறும் புனல் இன்மை: அன்றே
விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது?"

என உணர்த்திக்காட்டுகின்றான்.

ஊழ்வினை செலுத்தத் தாயும் தந்தையும் அவ்வினையின் கருவியாக இருந்து செயல்பட்டனரே அன்றி அவர்களாக நம்மேல் பகை கொண்டு செயல்படவில்லை. மழைநீர் வரத்து இன்மையால் சில காலம் ஆற்றில் நீர் வற்றவது போல் தோன்றுவது இயல்பு என்ற உவமை மூலம் கம்பன் உணர்த்துகின்றான்.

நல்வாழ்வில் நடைபெறும் அனைத்திற்கும் விதியே காரணம். விதியின் மூலம் ஏற்படுகின்ற இழப்புகளுக்கு பிறரையும், நம்மையும், தெய்வத்தையும் தரம்குறைத்து பேசுவது தகுதியன்று. விதியினால் ஏற்பட்டிருக்கிற இன்னலான சூழ்நிலையில் தமக்கும் உலகத்தாருக்கும் எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் முடிந்தவரை நன்மையைச் செய்து வாழ்வது மதிநுட்பம் ஆகும்.

விதியின் பிடியில் உள்ளவர்கள் அன்பு, இரக்கம், கருணை, தியாகம், சேவை, பக்தி இவற்றின் மூலம் உயர்ந்த வாழ்வும், வீடுபேற்றையும், முக்தியையும் பெற்று அறத்தை நிலைநாட்டுவது சிறந்த வாழ்வாகும்.

விதியின் தாக்கத்தால், நாடு, செல்வாக்கு, அன்புடைய தாய்தந்தையர், குடிமக்கள் இவற்றையெல்லாம் துறந்து காட்டிற்கு வந்தான் இராமன். விதியின் வலிமையால் காட்டிற்கு வந்த இராமன். பல்வேறு நல்ல செயல்களை மேற்கொண்டதாகக் கம்பன் உணர்த்துகின்றான். குகனை ஐந்தாவது தம்பியாக ஏற்றுக்கொள்ளல், பரதனிடம் அன்புகாட்டி நாடாள செய்தல், விராதனுக்கு சாபவிமோசமும் அளித்தல், சரபங்கன், சடாயு, மாரிசன், கவந்தன், சவரி, இவாலி ஆகியோருக்கு முக்தி அளித்தல்,

அனுமனை நண்பனாக்குதல், சுக்ரிவனை ஆறாவது தம்பியாக்குதல், இராமநாமத்தால் சம்பாதியின் சிறகுகள் வளர்தல், வீடணனுக்கு அடைக்கலம் அளித்து, ஏழாவது தம்பியாக்குதல் தவறு செய்தவருக்கும் மீண்டும் வாய்ப்பளித்துத் திருந்தச் செய்யும் "இன்றுபோய் போருக்கு நாளை வா" என இராமன் இராவணனுக்கு அருளுதல் முதலிய செயல்களைத் தன் மதிவலத்தால் கம்பன் எடுத்துக்காட்டுகின்றான்.

கம்பனில் ஊழ்வினை

புலவர். ந.சிங்காரவேலன்
சென்னை.

கம்பன் தன் காப்பியத்தில் பல இடங்களில் பல பாடல்களில் தன் கூற்றாகவும், பாத்திரங்களின் கூற்றாகவும் விதியின் வலியை வலியுறுத்திப் பாடுகிறான் என்பதை இராமகாதையில் பல இடங்களில் பார்க்கிறோம். இந்த விதியைத்தான் திருக்குறளுக்கு உரைசெய்த பரிமேலழகர் 'இருவினைப்பயன் செய்வதனையே சென்று அடைவதற்கு ஏதுவாகிய நியதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், விதி, என்பன ஒரு பொருள் கிளவி. இது பொருள், இன்பங்கள் இரண்டிற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்பட்டமையானும் மேற்கூறிய அறத்தோடு இயைபுடையமையானும் அதனது இறுதிக்கண் கூறப்பட்டது என்பார்.

தசரதன் அயோத்தியில் இராமனுக்கு முடிசூட்டி, கானகம்போய் தவம் செய்து, வானகம் போக முடிவு செய்தான். மக்களின் மனங்களில் மகிழ்ச்சியின் ஆரவாரம். அயோத்தி மாநகரம் அமராவதிபோல் காட்சியளித்தது. மக்கள் இன்பக்கடலில் மூழ்கி, தங்கள் சென்னியில் முடிபுனைவது போல் நிமிர்ந்து நடந்தனர். ஆனால் மந்தரை எனும் கூனி மட்டும் நிமிர்ந்து நடக்கவில்லை. அவளது உடல்தான் கூன் என்று நாம் நினைத்திருந்தோம். இல்லை அவளது உள்ளமும் கூன்தான் என்று கொடுமனக் கூனி எனக் கம்பன் அவளை நமக்கு அறிமுகப்படுத்துகிறான்.

உடம்பு கூனாக இருந்தாலும் உள்ளம் கூன் இல்லாத கூனியாகப் பிறந்திருக்கலாம். விதி யாரை விட்டது? அவள் மனதையும் வளைத்து கோரக் கூனியாக்கி விட்டது. அவளது கொடுமையான ஊனமே இராமகாதையைத் தொடர்கதையாக வளரவழிவகை செய்தது.

இராகவன் தன் இளம்பருவத்தில் வில்லில் மண் உண்டையை வைத்து விளையாட்டாக யார் மேலும் எய்வான். அவர்களும் சிரித்து விட்டுச் செல்வார்கள். அவ்வாறே உடற்குறை உள்ளவர்களிடம் அதைச் சுட்டிக்காட்டிப் பேசினால் கோபம் வரும் எனும் உளவியலை இராமன் உணராதவன் அல்லன். அவன் எறிந்த மண்ணுண்டை அவள் வேறு உறுப்பில் கூனி அடித்தது. என்றோ இளம்பிராய விளையாட்டாகச் செய்த வினை கூனி மனதில் விதையாகி, செடியாகி, மரமாகிப் பூத்து, காய்த்துக் கனியாகி விட்டது. அந்தவிதி அதன் பயனைச் செயலாக்கக் கூனியின் உருவில் செல்கிறது. இராமன் நாளை முடிசூட்டப் போகிறான்

என்னும் செய்தி கூனியின் காதில்விழுந்ததும் சீற்றம் அவள் உச்சந்தலையில் இருந்து கரகாட்டம் ஆடத் தொடங்கியதைக் கம்பன்,

"தொண்டை வாய்க்கேகயன் தோகை கோயில்மேல்
மண்டினாள், வெகுளியின் மடித்த வாயினாள்
பண்டைநாள் இராகவன் பாணிவில் உமிழ்
உண்டை உண்டதனைத் தன்உள்ளத்து உள்ளுவாள்"

என்று கம்பன் வில் உமிழ் உண்டை என்று இராமன் செயலாகச் சொல்லாமல் விதியின் மேலேற்றிப் பேசுகிறான்.

கூனியை அறிமுகப்படுத்தக் கருதிய கம்பன் அயோத்தி வானவர் பொன்நகர் இயல்பு எனப் பொலியும் எல்லையில், இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள் என்று இராவணன் இழைத்த தீவினை விதையாக இருந்தது. இப்பொழுது மந்தரை வடிவில் அதன் பயனை ஊட்ட விதி கிளர்ந்தெழுந்து விட்டது என்றுதான் பாடுகிறான். சிலம்பில் இளங்கோஅடிகள் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதுபோல் தெய்வம் நின்று கொல்லும் என்ற உண்மையைக் கம்பன் இங்கே நிலைநாட்டுகிறான்.

கைகேயி ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறாள். தன் தலைவியின் உறக்கத்தைக் கலைக்கிறோம் என்று கூட அவள் நினைக்கவில்லை. காரணம் என்ன? கம்பன் அதை, "மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை, தூண்டிடக் கட்டுரை சொல்லல் மேயினாள்" என்று வெவ்வினை தூண்டக் கட்டுரைத்துச் சொல்ல விரைகிறாள் மந்தரை.

தூக்கத்தில் இருக்கும் கைகேயியைத் தட்டியெழுப்பி, உனக்கு அடுக்கடுக்கான இன்னல்கள்- இடுக்கண்கள் - துன்பம் - துயரம் சூழ இருக்கின்ற இந்த நேரத்தில் வல்லுறக்கம் கொள்கிறாயே என்று சொல்லி, இராமன்முடி சூடப்போகும் நல்ல செய்தியைத் தன் கொடுமனத்துக்கு ஏற்றாற்போல் திரித்துக் கொடுஞ்செயலாக்கி ஆடவர் நகைக்கவும், ஆண்மை மாசுபடவும், தாடகை என்னும் தையலாள் பட்டு வீழவும், வளைந்த வரிசிலை இராமன் நாளை கோமுடி சூடுவான் என்று நடக்க இருக்கும் நல்ல செயலைத் திரித்து வன்செயலாக்கிக் கூறும் திறம், நிரம்பிய கல்வியறிவு பெறாத மந்தரையின் அடுக்கிக் கூறும் அடுக்குமொழிகள் வலிய விதிதான் அவளை அவ்வாறு பேச வைத்ததாகக் கம்பன் பாடுகிறான். அரக்கியைக் கொன்ற இராமன் செயலைக் கண்டு ஆடவர்கள் நகைத்தார்கள். அவன்

ஆண்மை மாசுபட்டது. தாடகையை அடாவடி ஆற்றும் அரக்கியாகக் கூறாமல் தையலாள் என்று அவளைப் பேச வைப்பதும், கூனி நினைத்ததை முடிக்கும் திறத்தை வெளிப்படுத்தியதும் விதியல்லால் வேறில்லை, என்பதைக் கம்பனின் கவிதை மொழிகள் தாக்காக வெளிப்படுத்துகின்றன.

மேலும் கைகேயியைப் பார்த்துக் கூனி கூறும் வாக்கை, தாக்காக வெளிப்படுத்தும் கவிஞன் நின் நலம் வீழ்ந்தது. வாழ்ந்தனள் கோசலை மதியினால் என்று பாடுகிறான். அப்போது கூடப் பரதனைக் காட்டிலும் வளர்ந்த இராமன் மேல் ஆழ்ந்த பேரன்பினள். அவள் மனத்தை மாற்ற நினைத்த கூனி, "உன் வாழ்வு கெட்டது, கோசலை கெட்டிக்காரி" என்று ஒப்புமைகாட்டி வேற்றுமை தோன்றக் கோபக்கனல் பொங்க வார்த்தைகளுக்கு அக்கினி முலாம்பூசி வீசுகிறாள். அவளா பேசினாள்? இல்லை. வல்வினையாகிய விதியின் தாக்கத்தைச் சொல்ல வந்த கவிஞன் 'சூழ்ந்த தீவினை நிகர் கூனி' என்று பாடுகிறான்.

மந்தரையின் மதிநலமிக்க வார்த்தைகளைக் கேட்ட கைகேயி பேரொளி மிக்க மாலையை வழங்கினாள். கூனி அதை ஏற்றாளா? இல்லை நிலம் குழி விழும்படி தரையில் வீசினாள். இராமனின் ஏற்றத்திற்கு முத்துமாலை வழங்கினாளே என்று கூனி இரக்கம் கொண்டு மனம் மாறி இருக்கலாம். ஆனால் விதி விடவில்லை. எப்படியும் இராமனைக் காட்டிற்கு ஓட்ட வேண்டும். பரதன் சென்னியில் முடிசூட்ட வேண்டும் என்ற எண்ணமே மந்தரையின் உள்ளத்திரையில் மேலோங்கி நின்றது. வளைந்த உடல், வளைந்த உள்ளம், வளைந்த மொழி உடைய கூனியால் விதி தன் வேலையை முற்றும் முடித்து ஓய்வெடுத்துக் கொண்டது. தூமொழி மடமான் என்று ஏற்றிப் போற்றிய கைகேயியின் உள்ளம் திரிந்தது.

தசரதன் சம்பரனோடு செய்த போரில் வெற்றிக்கு உதவிய கைகேயிக்கு இரண்டு வரங்கள் கொடுத்தான். அவற்றின் ஒன்றினால் இராமனைக் காட்டிற்கு ஓட்டினாள். தன்மகன் பரதனுக்கு மணிமுடி சூட்டி அடலேறு என அரியணையில் அமர்த்த ஆசைப்பட்டாள்.

இங்கே இராமன் கதையை நடத்தும் விதி யாருடையது? என்ற வினா எழும். அதற்கு விடையாகக் கம்பன் அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும் தூரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான் என்று அரண் செய்து விடுகிறான். கேகையன் மகள் சிந்தை திரிந்தது. இராமகாதை பிறந்தது. இராமன் புகழ் வளர்ந்து பார் போற்ற விரிந்தது.

விதிதான் இத்தனை செயல்களையும் கச்சிதமாக முடித்து ஒய்யாரமாக ஓரத்தில் நின்று கைகொட்டி ஆர்த்தது. இராமன் நாடு துறந்து காடு நோக்கிச் செல்லத் தயார் ஆகும் முன், தன் தாய் கோசலையைத் தேற்றச் செல்லும் காட்சியைக் கம்பன் இழைக்கின்ற விதி முன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக என்று ஓர் அடியில் சொல்லி விடுகிறான்.

தன் தமையன் காடு செல்ல இருக்கிறான் என்ற செய்தி கேட்ட இலக்குவன், காலத்யெனக் கதித்து எழுந்தான். தன் வில்லில் நாணேற்றினான். அவ்வொலி கேட்ட இராமன், ஆறுதல் கூறி, அவனது சினத்தீயை அவிக்க, சொல்மாரி வழங்குகிறான். அதனைக் கம்பன்,

"நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப் புறந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை அன்று மைந்த
விதியின் பிழைநீ இதற்கென்னை வெகுண்டது?"

என்று விதியே மூலகர்த்தாவாகிய நின்று நம்மை ஆட்டிப் படைக்கிறது. விதியது விதியது வலியது வலியது என்று இலக்குவன் சினத்தீயை காலத்தில் பெய்த மழைபோல் அவித்து விடுகிறான்.

விதியை வெல்லும் ஆற்றல் நமக்கு இல்லை. ஏன் படைக்கும் தொழிலைப் பாங்குடன் நடத்தும் பிரமன்கூட விதிவழியேதான் தன் படைக்கும் தொழில்செய்து விதியின் வலிய கரங்களால் சூழப்பட்டே, தன் படைக்கும் பயணத்தைச் செலுத்துகிறான் என்று கருதுகின்ற கம்பன், குலகுரு வசிட்டன் கூற்றாக,

"வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை யதுவரச்சீரைச் சாத்தினாள்
சூழ்வினை நான்முகத்து ஒருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ?"

என்று விதிக்கும் கடவுளாகிய நான்முகனைக்கூட விதிவிடாது பற்றித் தொடர்ந்து வந்து ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்று கம்பன் தன் கருத்தை வலியுறுத்தி அரண் செய்து விடுகிறான். இதையே வள்ளுவப் பெருந்தகையும்,

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"

என்று இரண்டு அடிகளில் சாதித்துக் காட்டினார்.

கம்பன் - விதி வலி உணர்த்திய மதிவலன்

முனைவர். ப.ராஜராஜேஸ்வரி
தமிழ்த்துறைத் தலைவர், செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை மகளிர் கல்லூரி, மன்னார்குடி.

கம்பனின் கலைவேள்விப் பயனாம் கம்பராமாயணம் காலம் வென்று நிலைத்து நிற்கும் அமரகாவியமாகும். வாழ்க்கையின் கூறுகள் அனைத்தையும் நுணுகி ஆராய்ந்து நுட்பமாக உரைத்திருக்கும் கம்பன் விதியின் வலிமையையும் மதிநுட்பத்தோடு உணர்த்தியுள்ளார்.

விதி

ஊழ், பால், விதி என்றெல்லாம் வழங்கப்படும் வினைப்பயன் பற்றி தமிழ்ச் சான்றோர் பலரும் வலியுறுத்தியுள்ளனர். கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில்

"...பேர் யாற்று
நீர் வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்
முறை வழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம்..."

என்று கூறுகிறார்.

ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதைத் தன் காப்பிய நோக்கங்களுள் ஒன்றாகக் கொண்ட இளங்கோவடிகள் அதனைப் பல இடங்களில் வலியுறுத்துகிறார்.

"யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினைவந்து உருத்ததாகலின்
உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்"

கோவலன் புகார்நகரில் மாதவியை விடுத்து மீண்டும் கண்ணகியைச் சேர்ந்து அவளுடன்,

"........மூதை
வினை கடைக்கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன்"

மதுரைக்கு செல்கிறான். அங்கு கள்வனாகிய பொற்கொல்லன் சாற்றிய கோவலன் மீதான பொய்க் குற்றத்தை,

"வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பின் தேரானாகி"

மரணதண்டனை விதிக்கிறான். வாழ நினைத்து மதுரைக்குச் சென்ற கோவலன் மண்ணில் வீழ காரணம் ஊழ் ஆகும். நாலடியாரிலும்

"உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பா லனையவும் அன்னவாம் மாரி
வறப்பின் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல்"

என மழையைப் பெய்யச் செய்வாரும், தடுப்பாரும் இல்லையாதல்போல் விதியின் விளைவுகளைத் தடுக்கும் ஆற்றல் யாருக்கும் இல்லை என்பது விளக்கப்படுகிறது.

கம்பன் கூறும் விதி வலிமை

மதிவலனாகிய கம்பனின் கூற்றுகளுள் விதி அழுத்தம்பெற்ற ஒன்றாகும். விதியால் செய்வதற்கு அரியது ஒன்று இல்லை, மதியால் வெல்ல இயலாது என கம்பன் தெளிவுப்படுத்துகிறார்.

"பிரிவுசெய் துலகெலாம் பெறுவிப் பான்றலை
அரிவுசெய் விதியினார்க் கரிதுண் டாகுமோ"

"விதிவய மென்பதை மேற்கொளா விடின்
மதிவலி யான்விதி வெல்ல வல்லமோ"

எனும் இக்கூற்றுகளை இராமாயணக் கதைப்போக்கில் பல இடங்களில் கம்பன் வலியுறுத்துகிறார்.

இராமாயணத்தில் விதி

வான்மீகியின் மானுட இராமன் கம்பனிடம் தெய்வீக இராமனாக உயர்ந்தான். காக்கும் கடவுள் திருமாலே மண்ணில் பிறந்தாலும் விதியெனும் புயலில் சிக்கினால் தவித்து தடுமாறிதான் ஒரு நிலைக்கு வரமுடியும் என்பதை கம்பனின் கவிகள் படம்போட்டு உணர்த்துகின்றன. இராவண வதத்தைக் குறிக்கோளாகக் கொண்டு காப்பியக் களத்தில் இயங்கும் கம்பன், இராமனுக்கு விசுவாமித்திரன் வழங்கிய படைக்கலங்கள் நல்வினைப்பயன்கள் எல்லாம் மறுப்பிறப்பில் தேடி வருவனபோல் வந்தன என்று கூறுகிறார். இராமனின் பட்டாபிசேகத்தைத் தடுக்க எண்ணிய கூனி இராவணனின் தீவினைப்பயன் உருவெடுத்ததுபோல் தோன்றுகிறாள்.

"இன்னல்செ யிராவண னிழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்"

கூனியின் முயற்சியால் கைகேயி இராமனைப் பதினான்கு ஆண்டுகள் வனத்திற்குச் செல்லும்படி செய்துவிட, இதனையறியாமல் மணிமுடி சூடிக்கொண்டு தன் மகன் இராமன் வருவான் என்று காத்திருக்கும் கோசலை முன்பாக வீசும் சாமரமும், வெண்கொற்றக் குடையுமில்லாமல் தருமம் பின்னால் இரங்கிவர இராமனை விதி முன்னால் அழைத்துச் சென்று நிறுத்துகிறது.

"குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையுமின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கியேக"

இச்சூழலில் கைகேயிமீது சினம்கொண்ட இலக்குமணனிடம் இராமன்

"நதியின் பிழையன்று நறும் புனலின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற் கென்னை வெகுண்ட தென்றான்"

என்று விதியின் வலிமையை உணர்த்துகிறான்.

இராமனின் வனவாசம்பற்றி எண்ணும் வசிட்டன் இச்செயல் வெல்வினையாள் கைகேயியால் இராமனுக்கு வந்ததன்று, எவ்வினையால் என்பது பின்னர் தெரியும் என்று உள்ளுகிறார். பரதனும்

"தீங்கிழைத் ததனினோ தெய்வஞ் சீறியோ
ஓங்கிய விதியினோ யாதினோ வெனா"

என்று கைகேயியிடம் வினவுகிறான். திரிமூர்த்திகளானாலும் காலம் என்ற வலையினின்றும் தப்புதல் இயலாது என்பதை கம்பன் தெளிவாகக் கூறிவிடுகிறார். சூர்ப்பணகையின் மூலம் சீதையின் அழகுநலனை கேட்ட கல்விநோக்கா மதியிலி இராவணனிடம்,

"விதியது வலியி னானு மேலுள விளைவி னானும்"

காமநோய் மிகுந்தது. அதன் விளைவாக மாரீசனிடம் மன்றாடி கேட்டுக்கொள்ள அழகிய மானாகி சீதையின் உள்ளம் கவர்ந்து இராமன் முன் நிற்பதை கம்பன்

"கனைகழற் றம்பி பின்பு சென்றனன் கடக்க வொண்ணா
வினையென வந்து நின்ற மானெதிர் விழித்த தன்றே"

என்று கூறுகிறார்.

தேவர்கள் செய்ததவம் வீணாகாமல் சீதை கேட்டதால் மானைப் பிடிக்கச் சென்று இராவணனிடம் மனைவியைப் பறிகொடுத்து நடந்தவற்றை சடாயு மூலம் அறிந்து துடிக்கும் இராமனிடம்,

"வென்றியாய் விதியின் தன்மை பழியல விளைந்த தொன்றோ"

என்று இலக்குமணன் விதியின் சூழ்ச்சியை உணர்த்துகிறான். இராமன் சுக்கிரீவன் நட்பைப் பெற்றபின் சீதையை தேடிச் சென்ற அனுமன் இலங்கைக்குள் புகுந்தபோது நிறைந்திருந்த இருளைப் பற்றி கம்பன்

"............................மெய்யிலான்
தீவினை யெனவிருள் செறிந்த தெங்குமே"

என்கிறார். மேலும் அங்குத் தீவுற்பாதங்களை நோக்கிய அனுமன்,

"எக்குலங்களின் யாவரே யாயினும் இருவினை யெல்லோர்க்கும்
ஒக்கு மூழ்முறையல்லது வலியதொன் றில்லென வுணர்வுற்றான்"

அறிவிழந்து மாற்றான் மனைவியிடம் கொண்ட காமத்திற்காக இராவணன் தன் உறவுகளையெல்லாம் பலிகொடுத்துக் கொண்டிருக்க கும்பகருணன் சீதையை விட்டுவிடும்படி கேட்கிறான். வீடணன் அறமுரைத்து அது பயனற்ற நிலையில் இராமனிடம் சரணடைந்துவிட கும்பகருணனோ இராவணனுக்காக இறுதிசொட்டுக் குருதியையும் போர்க்களத்தில் சிந்தி செஞ்சோற்றுக் கடன் தீர்க்கிறான். ஆனாலும்,

"திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலை யோவிது விதியின் வன்மையே"

"வென்றிவண் வருவனென் றுரைத்தி லேன்விதி
நின்றது பிடர்பிடித் துந்த நின்றது"

என விதியின் சூழ்ச்சியைத் திறம்பட உரைக்கின்றான்.

இருப்பினும் நாசம் வந்தபோதும் நல்லதோர் பகையைப் பெற்றதாக இறுமாந்திருந்த இராவணன் இராமனால் வதைக்கப்படுகிறான். இராமனின் வெற்றியைக் கூறச் சென்ற அனுமன் சீதையிடம் அரக்கியரை அழிப்பதற்கு அனுமதி கேட்டபோது,

"யானி ழைத்த வினையினி னிவ்விடர்
தான டுத்தது தாயினு மன்பினோய்
கூனி யிற்கொடி யாரல ரேயிவர்"

எனக் கூறி அரக்கியரைக் காக்கின்றாள்.

முடிவுரை

எவராயினும், எது தடுத்தாலும் முந்திக்கொள்ளும் விதியின் விளைவுகளை மனவுறுதியோடு சந்தித்து இடைவிடாமல் போராடினால் வெற்றிபெறலாம் என்று கம்பன் தெளிவுபடுத்துகிறார். "ஊழையும் உப்பக்கம் காண்பர்" எனும் குறளுக்கேற்ப, "விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி" எனும் இலக்குமணன் கூற்றும், இராமனைப் பற்றி,

"சீதைநா யகன்வே றுள்ள தெய்வநா யகன் நீ செப்பும்
வேதநா யகன்மே னின்ற விதிக்குநா யகன்தான்"

எனும் அங்கதன் கூற்றும் மனம்கொள்ளுவதற்குரியன ஆகும்.

கம்பன் காட்டும் சமய உண்மை

திருமிகு. கு.பிரகாஷ்
நாதஸ்வர இசைத்துறை உதவிப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

முன்னுரை

பிற்காலச் சோழப்பேரரசின் எழுச்சிக் காலத் தொடக்கத்தில் தோன்றியவன் கம்பர். கம்பர் காட்டும் சமய உண்மை சைவமா? வைணவமா? பொதுமையா? என்பது இக்கட்டுரையின் வாயிலாக ஆராயப்படுகிறது.

இராமன் உலா வருகிறான். பலரும் அவனுடைய உறுப்புகளைக் காண்கின்றனர். அவரவரும் தாம் தாம் கண்ட உறுப்பழகிலேயே மனம் பறிகொடுத்து நின்றனர். முழு வடிவையும் பார்க்கவில்லை. அது எவ்வாறு இருந்தது எனின், கடவுளது வடிவை முழுவதும் பாராமல் ஒவ்வொரு பகுதியை மட்டும் பார்த்தவர்களைப் போன்ற ஒவ்வொரு மதத்தினரைப் போன்றனர் என உவமித்துரைப்பார்.

'சைவர்' என்பார் கூறுவன

கம்பர் - ஏகம்பநாதரின் பெயர். தன் மகனுக்கு அம்பிகாபதி எனப் பெயரிட்டுள்ளார். 'ஈசன் ஒருவனே ஈவிலாதவன்' எனச் சிவனைப் புகழுகிறார். இன்னும் பலவிடங்களிலும் சிவபெருமானைப் போற்றியுள்ளார். சிவனைப் பற்றிக் கவி மொழியாக 168 இடங்களில் கூறுகிறார். திருமாலின் அவதாரமான இராமன் சிவ வழிபாடு உடையவன். சிவன், திருமாலைத் தொழுதான் என்று கம்பனில் வரும் ஓரிரு பாடல்களும் சிவனை இழிவுபடுத்தவே செயற்கையாக வார்த்தை மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி யுத்தகாண்டத்தில் சிவனைப் பற்றிப் பாடும்போது கம்பன் பரவசத்தோடு, "சேயிழை பாகத்து எண்தோள் ஒருவனை வணக்கம் செய்தான்" என்று பாடுகின்றார்.

"வைணவர்" – என்பார் கூறுவன

கம்பரைப் பொறுத்தவரை இராமன் பரம்பொருள்; திருமாலின் அவதாரம் "எனையாள் வரதன்" என்றும், "என்னையாளுடைய கொண்டல் நீள்பதம்" என்றும் திருமாலையும், இராமனையும் குறிப்பது போல் எங்காவது சிவபிரானைக் குறித்துள்ளாரா? சைவர்கள் 63 நாயன்மார்களுக்குப் பின்னவரும் பலரை நாயன்மார் அணிவரிசை வைத்துப் பார்க்கிற மரபைப் பேணி வந்துள்ளனர். கம்பர் சைவராயின் சைவர்கள் உறுதியாக அவரைத் தமது அணிக்குக் கொண்டு

சென்றிருப்பர் அவ்வாறு எந்நூலிலும் இல்லை "கம்பநாட்டாழ்வார்" என இவரைச் சொல்லும் மரபு வைணவரிடம் உள்ளது.

"ஆண்டவன் அவதாரம் எடுப்பதில்லை" - என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. இறைவன் அவதாரம் எடுப்பார் என்று வைணவச் சித்தாந்தத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது கம்பராமாயணம். வைணவர் வற்புறுத்தும் சரணாகதித் தத்துவமே இந்தநூலின் பாவிகமாக உள்ளது. கீதையைச் சைவர் பெரிதும் போற்றுவதில்லை ஆனால் கம்பரின் பல பாடல்கள் கீதையின் சுலோகங்களுக்கு மொழி பெயர்ப்பும் விளக்கமும் போல அமைந்துள்ளன. வைணவ முறைப்படி பரம்பொருளுக்குரிய ஒன்பது குணங்களையும் இராமனிடத்துப் படைத்துள்ளார். இந்நூல் முழுவதையும் ஆய்ந்தால், இதிலுள்ள பாத்திரங்கள் எல்லாம் இறைவனையே சரண் அடைகின்றன. எனவே, இதைப் "பிரபத்தி" நூல் என்பர். சைவ சமயத்தைச் சார்ந்த சடையப்ப வள்ளல் வைண நூலை எழுதக் கம்பருக்கு உதவியிருப்பதும், கம்பகாவியம் திருவரங்கப் பெருங்கோயிலில் அரங்கேற ஸ்ரீவைஷ்ணவர்கள் தடையாக இருந்தனர் என்ற செவிவழிச் செய்தியும் சமயக் காழ்ப்பு இன்றிச் சிவத்தைப் புகழ்ந்து பாடுவதும் கம்பரின் சமயத்தில் ஐயம்ஏற்படுத்தும் ஆயின் ஐயமே உறுதியாகி விடாது. நம்மாழ்வார் பெருமானைப் போன்ற தத்துவ மேதைகளின் மடியில் தவழ்ந்து, பாதங்களின் கீழ் அமர்ந்து பயின்று, பல்வேறு இடங்களில் அவரை அடியொற்றிச் செல்வாரைப் போன்று சிந்தனை மழை பொழியும் கம்பர் பிற சமயப்பகை அற்றவராய் இருப்பது புதுமையன்று எனவே பிற்கால நிறுவன சமயிகளைப் போல் இல்லை எனினும், பிறப்பாலும் நினைப்பாலும் கம்பர் வைணவரே. இராமனைத் திருமாலின் அவதாரமாகக் கூறுகிறார். முழுமுதற் பொருள் என்கிறார் இக்கருத்துகளுக்கு ஆழ்வார் பாசுரங்களே அடிப்படை. இறைவன் திருநாமத்தைச் செபிப்பவர் பரமபதத்தை அடைவர் சரணாகதித்வம், கைங்கரியம் என்ற இரண்டுமே வைணவ சமயத்தின் முக்கியக் கொள்கைகள், இவற்றால் கம்பன் கண்ட மெய்ப்பொருள் திருமாலே. கம்பன் வைதிக சமயிதான்; பிறப்பால் சைவனாக இருக்கலாம் வழிபாட்டு நெறியால் வைணவனே. ஆனால் சமயங்கள் அனைத்தையும் பேதமற மதித்தவன்.

சமரச உயர்வினர் - [பொதுமை]

கம்பர் "உலகம் யாவையும்" என்னும் பாடலில் கடவுளது பொது இலக்கணம் கூறி, அடுத்த "சிற்குணத்தவர்" ஏன்ற பாடலில் "மூன்றனுள் முற்குணத்தவரே முதலோர்" எனச் சாத்துவிகக் குணமுடையவர்

என்னும் (விஷ்ணுவே) திருமாலே முதற் கடவுளெனக் குறிப்பாகப் புலப்படும்படி கூறி, இறுதிப் பாடலாகிய "ஆதி அந்தம் அரி" என்பதில் "அரி" எனத் திருமால் நாமத்தை வெளிப்படையாகக் கூறி, "அவன் பாதமல்லது பற்றிலர் பற்றிலார்" என்றார். சில இடங்களில் சிவனுக்குப் பரத்துவமும் (பசையறப் பிறவிபோய் முற்ற வால் உணர்வு மேல் முடுகினோர் அறிவு சென்றுற்ற வானவன்). சில இடத்தில் திருமாலுக்குப் பரத்துவமும் (எங்கள் நால் மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச் செங்கண் மால்) கூறி, இருவரைப் பற்றியும் பொதுப்படக் கூற நேர்ந்த சமயங்களில்,

"அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன் என்றுரைக்கும் அறிவிலார்க்குப்
பரகதி சென்றடைவரிய பரிசே போல்" எனவும்,
யாரினும் உயர்ந்த மூலத் தொருவாரம் இருவர்"

எனவும் சமமாகக் கூறுவர். ஆகவே சமரச ஊணர்வுடையராக இருந்தார் என்பதும் புலனாகும் என்பர்.

கடவுள், சமயங்கள் எல்லாவற்றையும் கடந்த பரம்பொருள் என்றும், கடவுளின் ஓரோர் அம்ச பூதரே ஒவ்வொரு சமயக் கடவுளுமென்றும் கொண்ட கொள்கையுடையவராகக் கருதற் பாலர். கம்பர் உயிருக்குயிராகவும், உணர்வுக்குணர்வாகவும் ஒப்புயர்வற்றதாகவும் கொண்ட கடவுள், எவ்வெத் தொழிலையும் நடத்துவோரையும் நடத்துவிக்கும் முழுத்தனி முதற் கடவுளாய்ச் "சமய வாதிகள் தத்தம் மதங்களில் - அமைவதாக அரற்றி மலைந்தனர்" ஆகும்படி செய்து நின்ற சமயங்கடந்த பழம் பொருளான பரமபதியே யாகும்.

கம்பருக்குக் கிடைத்த புகழ்

கம்பர், சமயநெறியில் நடுநிலையாகப் பாடியவர். அவர் காலத்திலோ அவருக்குச் சற்று முன்னோ பின்னோ அவரைப் போல விரிந்த மன இயல்பு உடையவராக நின்று பாடிய புலவர்களைக் காணமுடியவில்லை. சில புலவர்கள் தம் காலத்து உணர்ச்சிகளுக்கு உட்பட்டு அக்காலத்தின் மணம் நெடுக வீசும்படிப் பாடுவர் சிறந்த புலவர்களே தம்முடைய கற்பனையின் உயர்வாலும் கவியாற்றலாலும் தாம் வாழும் காலத்தையும் இடத்தையும் அடியோடு மறந்து புழுதிபடாத நெடுவெளியிலே மிக உயரத்தில் பறக்கும் கருடனைப் போல் உலவுவர் முன்னவர்கள்; காலத்துக்கு அடிமையாகிறவர்கள் பின்னவர்கள் காலத்தை அடிமையாக்குகிறவர்கள் கம்பர் காலத்தை விஞ்சி நின்றவர். காலம் அவரிடம் தோல்வியுற்றது.

கம்பன் - சமய நோக்கினில் சமரசன்

திருமிகு. ச.கா.சுதந்திரா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருப்புத்தூர்.

"என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டவர் தெய்வ மாகவி கம்பர்". 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' எனப் பாரதியார் பாராட்டுகின்ற சிறப்பினைப் பெற்றவர் கம்பர். தமிழ் நாகரிகமும் பண்பாடும் சிதையாமல் நூலினைப் படைத்த பெருமை கம்பருக்குண்டு. தமிழ் மரபு கெடாமல் இராமாயணம் படைத்திருப்பதால் கம்பரைக் கவிச் சக்கரவர்த்தியாக்கியுள்ளது.

கம்பர் தமக்கு முற்பட்ட தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை நன்கு கற்றவர்: உலக அநுபவத்திலும் தேர்ந்தவர். கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. கடவுள் வாழ்த்துப் பாடலோடேயே ஒவ்வொரு காண்டத்தையும் கம்பர் தொடங்குகிறார். பாலகாண்டத்தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் மூன்று ஏனைய காண்டங்களின் தொடக்கத்தில் ஒவ்வொரு பாடல் ஆகக் கம்பராமாயணக் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எட்டு.

இவைதவிர நூலுள் ஆங்காங்கே விராதன், கவந்தன், வாலி, அனுமன், கருடன், பிரகலாதன், பிரமன், இந்திரன், வருணன், தேவர்கள் ஆகியோரின் துதியாகவும் கூற்றாகவும் வரும் பாடல்கள் பல உள்ளன. கவிக் கூற்றாக அமைந்த பாடல்கள் பல கடவுள் வணக்கமாகவே அமைந்துள்ளன. இவற்றையெல்லாம் தொகுத்து ஆராய்ந்தால் கம்பரின் சமய சமரசம் அறியலாம்.

இராமனின் அவதாரத்தைக் கூறும் வைணவக் காப்பியத்தைத்தான் கம்பர் செய்திருக்கிறார். எனினும் அதில் சைவ வைணவ சமரசத்தைக் காட்டுகிறார்.

கம்பராமாயணக் கடவுள் வாழ்த்தும் பெரியபுராணக் கடவுள் வாழ்த்தும் ஒன்றை ஒன்று அப்படியே ஒத்திருக்கிறது. ஒன்றின் தாக்கம் மற்றொன்றில் இருக்கிறது. கம்பராமாயணம் - வைணவக்காப்பியம் பெரிய புராணம் சைவக்காப்பியம் ஆகும்.

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும், நீக்கலும், நீங்கலா

அலகுஇலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர்: அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்பது கம்பரின் கடவுள் வாழ்த்து.

"உலகுஎலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்."

என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் கடவுள் வாழ்த்தாகப் பாடியுள்ளார். இரண்டிலும் சொற்களும் பொருளும் எதுகை மோனைகளும் ஒத்திருப்பதைக் காணலாம்.

"கம்பர், பெரியபுராணக் கருத்துக்கள், சொற்றொடர்களை அங்கங்கே எடுத்து "முன்றோர் மொழிபொருளேயன்றி அவர்மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்றபடி தமது இராமாயணத்திற்றலைப் பெய்து வைத்து அமைத்துக் கொண்டுள்ளார். இதற்குச் சான்றாக, உலகெலா முணர்ந்தோதற்கரியவன். என்ற பெரியபுராண முதற்பாடலை அடியொற்றி, உலகம் யாவையும் தாமுள வாக்கலும் என்ற கம்பரது பாட்டு, அதன் பிரதிபிம்பம் போல விளங்குகிறது.

இதேபோன்று உலகம், அலகில் என்ற சொற்கள் வள்ளலாருடைய திருவருட்பாப் பாடலொன்றிலும் அழகாகப் ஆளப்பெற்றுள்ளன.

"உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள
உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதான் ஆகிக்
கலகநிலை அறியாத காட்சி ஆகிக்
இலகுசிதா காசமதாய்ப் பரமா காச
இயல்பாகி இணையொன்றும் இல்லாதாகி
அலகில் அறிவானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி அமர்ந்த தேவே." -2071

வள்ளலார் அருளிய திருவருட்பா மகாதேவமாலையின் முதல்பாடலாகும். இப்பாடலைப் படிக்கும்போதெல்லாம் பெரியபுராண கம்பராமாயண முதல்பாடல்கள் நினைவுக்கு வருகின்றன.

"அலகிலா விளையாட்டுடையார் அவர் தலைவர்" என்று கடவுளைத் தலைவராகக் கூறுகிறார் கம்பர். இவ்விடத்தில் தலைவர் என்ற சொல்லாட்சி மிகவும் அருமையுடையது.

கடவுள் உண்டா? இல்லையா? என்ற வாதம் கம்பர் காலத்திற்கு முன்பும் இருந்தது. கம்பர் காலத்திலும் இருந்தது கம்பர் உண்டென்கிறார். உண்டு என்பவர்க்கு உண்டுதான். கடவுள் உண்டு என்பார்க்கு, உண்டு இல்லை என்பார்க்கு இல்லை கடவுள் ஒன்று என்பார்க்கு, ஒன்று பல என்பார்க்குப் பல கடவுள் இப்படிப்பட்டது என்பார்க்கு, அப்படிப்பட்டது. இப்படிப்பட்டதன்று என்பார்க்கு, அப்படிப்பட்டதன்று நன்றே நம்பி குடிவாழ்க்கை, நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா! என்று முடிக்கிறார்.

நம்மை அக்கடவுள் கருணையினாலே காப்பாற்றினாலல்லது, நாம் அக்கடவுளை அறிந்து ஈடேறுவது எளிதன்று என்கிறார்.

சிவன் பெரியவரா? விஷ்ணு பெரியவரா? என்று போராட்டம் காலந்தோறும் நிகழ்ந்திருக்கிறது. கம்பர் காலத்திலும் இருந்திருக்கிறது.

சீதை இருக்குமிடத்தைத் தேடித் தென்திசை செல்லும் வானர வீரர்களுக்குச் சுக்கிரீவன் வழிசொல்கிறான். இவற்றில் அருந்ததி மலையைச் சொல்கின்ற பாடலில் கம்பர் சைவ வைணவ சமரசத்தைப் பேசுகிறார்.

"அரன்அதிகன், அளந்த அரி அதிகன்"
என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவ அரிய பரிசேபோல்,
புகல்அரிய பண்பிற்று ஆமால்,
சுரநதியின் அயலது, வான் தோய் குடுமிச்
சுடர்த் தொகைய தொழுதோர்க்கு எல்லாம்
வரன் அதிகம் தரும் தகைய, அருந்ததிஆம்
நெடு மலையை வணங்கி, அப்பால், -பா.எண்.4470

"அரண் அதிகன், உலகு அளந்த அரிஅதிகன் என்று உரைக்கும் அறிவிலோர்க்குப் பரகதி சென்று அடைவு அரிய பரிசேபோல்" என்கிறார் கம்பர் அதாவது 'ஹரன் பெரியவன் அரி பெரியவன் என்று போராடுவோரை அறிவிலோர்' என்கிறார் கம்பர். அவ்வறிவிலோர் பரகதிக்குச் சென்றடைதல் அரிது என்கிறார். கம்பன் சைவனா? வைணவனா? என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள் கம்பன் ஆய்வாளர்கள். இவர்களைக் கண்டால் கம்பர் அறிவிலோர் என்றுதானே சொல்வார்.

கம்பரின் சர்வ சமய சமரசம்

சைவ வைணவ சமரசம் பேசும் கம்பர் அதனையுந்தாண்டி சர்வ

சமய சமரசம் பேசும் எல்லைக்கும் செல்கிறார். சரயு நதியின் வளத்தை சமய தத்துவத்தோடு இணைத்துக் கூறுகிறார். அதாவது

"கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லைஇல் மறைகளாலும் இயம்ப
அரும் பொருள்ஃது என்னத்
தொல்லையில் ஒன்றே ஆகி,
துறைதோறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும் போல் பரந்தது அன்றே.

- பாலகாண்டம் ஆற்றுப்படலம் 19(30)

பரம்பொருள் ஒன்றே அதுபோல வெள்ளநீரும் ஒன்றே. பரம்பொருள் பல்வேறு சமயத்தத்துவங்களுக்கு ஏற்ப வெவ்வேறு பெயர், வடிவுகளில் பரந்து விளங்குவது போன்று, வெளளநீரும் ஏரி, குளம், வாய்க்கால் போன்று பல பெயர் வடிவுகளில் பரந்து விளங்குகிறது என்று கம்பர் கூறுவதிலிருந்து, அவரின் சமரசம் தெரிகிறது.

"வேறுபடும் சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்கு பரம்பொருளே! நின் விளையாட்டு அல்லால்
மாறுபடும் கருத்து இல்லை, முடிவுஇல் மோன
வாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற்று அம்மா!

என்னும் தாயுமானவர் பாடலும்

"நதிஉண்ட கடல் எனச் சமயத்தை வயங்கிற்று அம்மா!
ஞானஆ னந்த ஒளியே!

என்னும் தாயுமானவர் பாடல் வரியும்

"பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்.
. செய்ய வல்ல கடவுளே தேவ தேவே.

என்னும் வள்ளலார் திருவருட்பா மகாதேவமாலைப் பாடலும் 48(2118) மேலே காட்டிய "கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்" என்னும் கம்பர் பாடலுடன் ஒப்புநோக்கத் தக்கன.

கம்பர் சைவம், வைணவம் மட்டுமின்றி இந்திய சமயங்கள் பலவற்றையும் நன்கறிந்தவர். திகம்பர சமணத்தையும் கம்பர் தெரிந்திருக்கிறார்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூனிதனில் யாங்கணுமே பிறந்ததிலை, உண்மை
வெறும் புகழ்ச்சியில்லை"

என்று பாரதியார் கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகிய மூவரையும் புகழ்ந்து பாடுகிறார். இதற்கு காரணம் கம்பர் காட்டும் சமரசமும் ஆகும்.

கம்பர் காலத்திலும் சைவ வைணவ பேதம் இருந்திருக்கிறது. சைவ வைணவ பேதத்தைக் குறைத்து, ஒற்றுமையை ஏற்படுத்தக் கம்பர் தமது இராமயணத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

இராமாயணத்தில் அவர் வைசராகத் தோன்றுமிடங்கள் பல, வைணவராகத் தோன்றுமிடங்கள் பல, சைவ வைணவ சமரச நன்னிலை கண்டவர் கம்பர்.

ராமானுஜரும், கம்பனும் எனும் நூலில் முன்னுரையில் குலசேகரன் அவர்கள் "நடுநிலை நோக்கினில் மகாகவி போன்ற பெருந்தமிழனே". இவற்றையும் அப்படியே ஒப்புக்கொள்ளலாம்.

கம்பர் சமய நோக்கினில் சமரசன்

"அரசன் அதிகன் அரி அதிகன் என்று உரைக்கும் அறிவிலோர்" என்று பாடிய கம்பரை முழுச்சைவராகவும் கூற இயலாது, முழு வைணவராகவும் கூற இயலாது. சைவ வைணவ சமரச நன்னிலை கண்ட சமரச சன்மார்க்க என்றே கொள்ள வேண்டும்.

முடிவுகள்

1. கம்பர் பிறப்பால் சைவர்.
2. இராமாயணம் பாடிய சிறப்பால் வைணவர்
3. ஒழுக்கத்தால் - வாழ்வால் - சமரச சன்மார்க்கி.

கம்பன் வைணவனா?

முனைவர் ந.செல்லக்கிருஷ்ணன்
விரிவுரையாளர், நன்யாங் தொடக்கக்கல்லூரி,
சிங்கப்பூர்.

கம்பனை வைணவன் என்றும் சைவன் என்றும் சமயம் கடந்த சமரசவாதி என்றும் கூறும் மாறுபட்ட கருத்துகள் ஆய்வுலகில் நீண்ட நெடுங்காலமாக நிலவி வருகின்றன. வைணவ சமயம் பரம்பொருளாகக் கொண்டாடும் திருமாலின் அவதாரமான இராமனைக் கதைத் தலைவனாகக் கொண்டு கம்பன் தனது காவியத்தைப் புனைந்துள்ளான். எனவே, அக்காவியம் எழுந்த பின்னணியை ஆராய்வதற்குக் கம்பனின் சமயப் பின்னணியை ஆராய்வது அவசியமாகின்றது. அந்த வகையில் கம்பனின் சமயத்தை ஆராய இக்கட்டுரை முயலுகின்றது.

கம்பனும் காலமும்

'ஆழ்வார்களின் பாசுரங்களில் கம்பன் ஆழங்கால் பட்டிருந்ததனால் தான் அவன் தனது காவியத்திற்கு 'இராமாவதாரம்' என்று பெயரிட்டான்' (எஸ்.கே.இராமாஜன், ஆழ்வார்களும் கம்பனும், பக்.62-63) என்றும், 'கம்பன் தனது இராமாயணக் காவியத்தைத் 'திவ்வியப் பிரபந்தமாக்கியுள்ளான்' (வ.சுப.மாணிக்கம், கம்பர் கருவூலம், ப.203) என்றும் கூறும் அறிஞர்களின் கூற்று ஆழ்வார்களின் பாசுரங்கள் கம்பன் காவியம் முழுவதும் பரவிக் கிடக்கும் பான்மையை எடுத்துரைக்கின்றன. பழங்காலச்சூழலில் ஓர் இலக்கியம் நாடு முழுவதும் பரவி மக்கள் மனங்களில் நிலைபெறுவதற்குக் குறைந்தது ஐம்பது ஆண்டுகளாவது தேவைப்படும். இந்தச் சூழ்நிலையில் 9ஆம் நூற்றாண்டில் ஆழ்வார் பாடல்களைத் தொகுத்த நாதமுனிகளின் காலத்தைச் சேர்ந்தவன் கம்பன் என்று கொண்டால் ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் தாக்கத்தால் விளைந்த ஏராளமான பாடல்களைக் காவியம் முழுவதும் புனைவதற்கு அவனுக்கு வாய்ப்பே இருந்திருக்காது. மேலும், 'அக்காலத்தில் பிராமணர் அல்லாத இதர வைணவர்கள் நாலாயிரத்தையும் வடமொழியையும் கற்பதற்குத் தடை இருந்தது'. (இந்தப்பரமகாருணிகரே (முடிச்சூர் அப்பாவார்ய முதலியார்) 1895 இல் நாலாயிரத்தை முதன் முதலில் பதிப்பித்துப் பிராமணரல்லாத இதர வர்ணஸ்தவர்களான நம்மவர்களுக்குப்

பேருபகரித்தார்' (ந.செல்லக்கிருஷ்ணன், 'நாலாயிரத்திவ்வியப் பிரபந்தப் பதிப்புகள், எம்.ஃபில். ஆய்வேடு, (1994) புதுவைப்பல்கலை.) ஆனால், 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய இராமானுசர் இத்தடைகளைத் தகர்த்துப் பிராமணரல்லாதவர்களுக்கும் வைணவ சமய உண்மைகளையும் தத்துவங்களையும் வைணவ அந்தணர்கள் மூலம் போதிக்க வைத்தார். எனவே, '12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிராமண சாதியில் பிறக்காத கம்பனுக்கு நாலாயிரத்தையும் வடமொழியையும் சுயமாகவோ அல்லது வைணவ அந்தணர்கள் மூலமாகவோ கற்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.' (விழுந்த ஞாயிறு அது எழுதவன்முன், மறைவேதியருடன் ஆராய்ந்து எழுந்த ஞாயிறு அது விழுவதன்முன் கவிபாடியது எழுநூறே- (மிகை-பா.25)

கம்பனும் வைணவ ஆசாரியர்களும்

வைணவ ஆசாரியர்கள், தமது காலக்ஷேபங்களின்போது வான்மீகி இராமாயணத்தை அடிப்படையாக வைத்துப் பல பாசுரங்களுக்கு விரிவுரைகள் செய்தாலும் அவ்வுரைகள் 'சுவாபதேச' அடிப்படையில் பக்தி வெள்ளத்தைப் பாய்ச்சி வைணவப் பயிரை வளர்ப்பதாகவே அமைந்தன. இராமன்-'பெருமாளாகவும்', இலக்குவன் 'இளைய பெருமாளாகவும்', பரதன்-'பரதாழ்வாராகவும்', குகன்-'குகப்பெருமாளாகவும்', சடாயு-'பெரிய உடையாராகவும்', அனுமன்-'திருவடியாகவும்' மறுபெயர் பெற்றனர். 'இத்தகைய மறுபெயர்களையும் பிற சம்பிரதாயப் பெயர்களையும் உருவாக்கி 'வைணவ பரிபாஷை' என்ற ஒன்றை ஏற்படுத்தியவர்கள் இராமானுசரும் அவருடைய சீடர் கூரத்தாழ்வானுமே ஆவர்' *(Prathivathi Bhayamkaram Annangarachariar Swami, Religious)* என்கிறார் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர். இராமானுசரின் காலமான கி.பி 12ஆம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த வைணவ பூர்வாசிரியர்கள் எவரும், 'திருவடி' என்ற பெயரால் அனுமனைக் குறிப்பிட்டதில்லை என்றும், எந்த வைணவப் பூர்வகிரந்தங்களிலும் 'திருவடி' என்ற பெயர் அனுமனுக்குக் கிடையாது என்றும், அதன் பிறகு தோன்றிய எல்லாக் கிரந்தங்களிலும் 'அனுமன்' என்ற பெயர் கிடையாது என்றும், அனுமனுக்குத் 'திருவடி' என்பதே பிறகு பெயராயிற்று என்றும் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசிரியர் இதனை அறுதியிடுகின்றார்.

'பொரு அரு வேலை தாவும் புந்தியான், புவனம் தாய
பெரு வடிவு உயர்ந்த மாயோன் மேக்கு உறப் பெயர்ந்த தாள் மேல்

உரு அறி வடிவின் உம்பர் ஓங்கினன் உவமையாலும்
'திருவடி' என்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்றான்'
(கம். பா-4736)

என்று, கம்பன் அனுமனைத் 'திருவடி' என்ற பெயரால் குறித்திருப்பதும் 'திருவடி தொழுத படலம்' என்று 'திருவடி' என்ற பெயரால் படலம் அமைத்திருப்பதும் கம்பனது ஆழ்ந்த வைணவ ஈடுபாட்டைக் காட்டுவதோடு அவனது காலம் கி.பி 12 ஆம் நூற்றாண்டு என்பதற்கும் சான்றாய் அமைகின்றது.

கம்பன் வாழ்ந்த காலத்தில் (1140 - 1220) திருவரங்கத்தில் பராசரபட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, திருவரங்கத்தமுதனார், வடுகநம்பி முதலிய வைணவ ஆசாரியர்கள் வாழ்ந்து வந்தனர் என்பது ஆய்வாளர் சு. குலசேகரனின் ஆய்வு முடிவு. (சு.குலசேகரன், ராமானுஜரும் கம்பரும், ப.174) இராமானுசர் காட்டிய புதிய நெறியில் சாதிக் கட்டுப்பாடுகள் தகர்க்கப்பட்டு வைணவ சமயம் நெகிழ்ந்து நின்ற அக்காலச் சூழலில் கம்பனுக்கு வைணவத் தலைநகரான திருவரங்கம் சென்று மேற்சொன்ன வைணவ ஆசாரியர்களைச் சந்தித்து அவர்களிடம் காலக்ஷேபம் கேட்க வாய்ப்புக் கிட்டியிருக்கலாம். அவர்களுடைய 'கோஷ்டியில்' கலந்து உறவாடி 'வைணவ தீட்சை' பெற்றுக் குரு சிஷ்ய நிலையில் விளக்கங்கள் பல பெற்றிருக்கலாம்.

'கூட்டங்கள்தோறும் குருகைப்பிரான் குணம் கூறும் அன்பர்
ஈட்டங்கள்தோறும் இருக்கப் பெற்றேம்' (சடகோபரந்தாதி,பா.86)

மேற்சொன்ன இந்தக் கருத்துக்குச் சான்றாகக் கம்பன் 'பிரபந்த கோஷ்டியில்' ஒருவனாக நின்று, தான் அடைந்த பக்திப் பரவசப் பெரு நிலையைப் பேசுவதாக அமைந்த இந்தச் சடகோபரந்தாதிப் பாசுரமும் இங்குக் குறிப்பிடத்தக்கது. வைணவர் குழாமைக் 'கோஷ்டி' (கூட்டங்கள்) என்று கூறுவது இராமானுசர் காலத்தில்தான் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆந்திர பூரணர்' என்று அழைக்கப்பட்ட தெலுங்கரான வடுகநம்பியின் உறவால் கம்பன் ஆந்திரதேசம் சென்று மன்னன் பிரதாபருத்திரனைச் சந்தித்திருக்கலாம். மேலும், குரு பரம்பரை விவரிக்கும் வடுகநம்பியின் ஆழ்ந்த இராமானுச பக்தியையும் இராமானுசர் மீது கொண்ட முரட்டுத்தனமான அன்பையும் குகன் மீது ஏற்றி, ஆயிரம் நாவாய்களை உடைய கங்கைக் கரைக்கு இறைவனான அவனை இராமன் முன் 'நாயேன்' என்று பேச

வைத்தும், 'இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன் யான்' (கம்.பா.1990) என்று குகனை அடிமை செய்ய வைத்தும் கம்பன் குகனைப் படைத்திருக்கின்றான். இது, கம்பன் - வடுகநம்பி உறவின் தாக்கத்தாலும் வடுகநம்பியின் மீது கம்பன் கொண்ட பக்தியின் வெளிப்பாட்டாலுமே அமைந்துள்ளது. எனவே, தனது காலத்தில் வாழ்ந்திருந்த இத்தகைய வைணவ ஆசார்யர்களோடு கம்பன் உறவு பூண்டு அவர்களிடம் தனது ஐயங்களை உசாவியும் கருத்துகளைப் பரிமாறியும் தெளிவு பெற்றிருப்பான் என்பதை ஊகிக்க முடிகிறது.

இராமானுசருக்குப் பிறகு வைணவத் தலைமை ஏற்ற 'பராசரபட்டரிடம் நஞ்சீயர், பிள்ளை விழுப்பரையர், ஆப்பான் திருவழுந்தூர் அரையர், தமிழ்ப்புலவர்கள், பண்டிதர் என்று பலரும் வந்து தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொள்வர்' (தெ.ஞானசுந்தரம், வைணவ உரைவளம், ப.80) என, நம்பிள்ளை 'ஈட்டில்' குறிப்புக் காணப்படுகின்றது. கம்பன் பிறந்த திருவழுந்தூரில் உள்ள திருமால் உற்சவத் திருமேனியின் பெயர் 'ஆமருவியப்பன்' என்பதாகும். ஆமருவியப்பன் என்பது 'ஆஅப்பன்' எனக் குறைந்து 'ஆப்பான்' எனத் திரிந்திருக்கலாம். 'தமிழ்ப்புலவர்', 'பண்டிதர்' என்று நம்பிள்ளை கூறுவது 'கம்பனையே' குறிக்கின்றது என எண்ணத் தோன்றுகின்றது. மேலும், கம்பன் தான் பிறந்த ஊரில் உள்ள ஆமருவியப்பன் கோயில் அரையரிடம் அன்பு பூண்டு அந்த அரையரையே முன்னிட்டுக் கொண்டு திருவரங்கம் வந்து பட்டர் முதலான ஆசாரியர்களிடம் 'பாடம்' கேட்டிருக்கக்கூடும் என்று நம்பத் தோன்றுகின்றது.

'நம்மாழ்வார் தமது 'திருவாய்மொழியில்', இறைவனை ஆணல்லன், பெண்ணல்லன், அல்லா அலியும் அல்லன்' (திருவாய்மொழி-2:5:10) எனக் குறிப்பிடும் இடத்தைக் குறித்த ஐயத்தை ஒரு தமிழ்ப்புலவர் பராசரபட்டரிடம் வினவியதாகவும், 'பிள்ளாய்' எனப்பட்டர் அவரை விளித்துச் 'சொல் இலக்கணம் நீ அறிந்தாய் இல்லையோ? என்று கூறித் தமது விடையை அளித்ததாகவும் வரும் நம்பிள்ளை ஈடும் 'ஆண்பாலோ, பெண்பாலோ, அப்பாலோ, எப்பாலோ' (கம்ப.பா.3684) என வரும் கம்பனது பாடலும் ஒப்பு நோக்கத்தக்கன. நம்மாழ்வாரின் 'ஆண் அல்லன், பெண் அல்லன்' என்னும் பாசுரத்திற்குப் பட்டரிடம் விளக்கம் கேட்ட 'தமிழ்ப்புலவர்' கம்பனே என்பது இங்குப் புலனாகின்றது. இதே போன்று, 'தமிழ்ப் புலவரும்', 'திருவழுந்தூர் அரையரும்' 'பட்டரிடம் தமது ஐயங்களை வினவுவதும் பராசரபட்டர்

அவற்றுக்கு விளக்கம் தருவதும் 'ஈடு முப்பத்தாறாயிரம்படி'யில் பல இடங்களில் காண முடிகின்றது.

பராசரபட்டர் 'மை வண்ண நறுங்குஞ்சி' என்னும் திருமங்கையாழ்வாரின் திருநெடுந் தாண்டகப் பாசுரம் ஒன்றிற்கு மட்டுமே எழுத்து வடிவில் உரை எழுதியுள்ளார். வைணவ வியாக்கியான உலகில் இந்த உரை மிகவும் புகழ் பெற்ற ஒன்றாகும்.

'மை வண்ண நறுங்குஞ்சிக் குழல் பின்தாழ,
மகரம் சேர் குழை இருபாடு இலங்கி ஆட
எய் வண்ண வெம் சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தார் என் முன்னே நின்றார்
கை வண்ணம் தாமரை வாய் கமலம் போலும்
கண் இணையும் அரவிந்தம் அடியும் அஃதே.
அவ் வண்ணத்து அவர் நிலைமை கண்டும், தோயி!
அவரை நாம் தேவர் என்று அஞ்சினோமோ'

(திருமங்கையாழ்வார், திருநெடுந்.பா.21)

என்னும் இப்பாசுரத்தோடு கம்பனின் சில பாடல்கள் ஒத்திருப்பது மிகவும் நோக்கத்தக்கது. 'மைவண்ண நறுங்குஞ்சி' என்பதற்கு 'இந்திர நீலத்து இருண்ட குஞ்சி' (536) என்றும், எய்வண்ண வெஞ்சிலையே துணையா' என்பதற்கு, 'வரிசிலைத் தடக்கையன்' (534) என்றும், 'கை வண்ணம் தாமரை, வாய் கமலம் போலும், கண் இணையும் அரவிந்தம் அடியும் அஃதே' என்பதற்கு, 'விரைசெறி தாமரை இமைக்கும் மெய்ம்மை (534), கமலம் கண் (532), தடந்தரு தாமரைத் தாளுமே' (537) என்றும், 'அவரை நாம் தேவரென்று அஞ்சினோமே' என்பதற்கு, 'உரை செயின் தேவர் உலகு உளான் அலன்' (534) என்றும் வரும் இவ்விடங்களில் திருமங்கை மன்னனின் பாசுரமும் கம்பனின் இப்பாடல்களும் ஒரு புடைத்தாய் உள்ளன. மேலும், தலைமகள் தோழியிடம் உரைக்கும் கூற்றாக இப்பாசுரம் உள்ளது போலவே கம்பனின் இப்பாடல்களும் தலைமகள் தோழியிடம் உரைக்கும் கூற்றாகவே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பட்டரின் 'மை வண்ண 'நறுங்குஞ்சி' பாசுர விரிவுரையைக் காலக்ஷேப கோஷ்டியில் அவரிடம் நேரடியாகக் கேட்டு ஆழங்கால்பட்டு உருகிய கம்பன் தனது காப்பியத்தில் அதே போக்கில் இச்சூழலை உருவாக்கியிருக்கின்றான் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

'நீண்டு, குழன்று, நெய்த்து, இருண்டு, நெறிந்து, செறிந்து, நெடுநீலம்
பூண்டு, புரிந்து, சரிந்து, கடை சுருண்டு, புகையும் நறும்பூவும்
வேண்டும் அல்ல என, தெய்வ வெறியே கமழும் நறுங்குஞ்சி'
(5284)

என 'உருக்காட்டுப் படலத்திலும்' கம்பன் இராமனது 'நறுங்குஞ்சி' அழகைப் பேசுவது பட்டரின் 'மை வண்ண நறுங்குஞ்சி' பாதிப்பிலிருந்து மீளாமையையே காட்டுகிறது. மேலும், பட்டரின் வடமொழி நூலான ' ஸ்ரீரங்கராஜஸ்தவம்' என்னும் தோத்திர நூலின் கருத்துகளைப் பின்பற்றிக் கம்பன் பல பாடல்களைப் புனைந்துள்ளான் என்பதும் குறிப்பிடத் தக்கது..

இராமானுசரின் ஸ்ரீபாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹகம் முதலிய நூல்களின் கருத்துகளைக் கம்பன் ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளான். விசிஷ்டாத்வைதக் கருத்துகள் இராமானுசருக்கு முன்பே தமிழில் வழங்கி வந்திருந்தாலும் அக்கருத்துகளைத் திரட்டி ஒரு தத்துவநெறியாக்கிப் புது வடிவம் தந்தவர் இராமானுசரே! எனவே, கம்பன் தனது காவியத்தில் விசிஷ்டாத்வைதக் கருத்துகளைச் சுலபமாக எடுத்தியம்ப இராமானுசரின் கிரந்தங்களே அடிப்படையாக அமைந்தன. இவ்வாறு, கம்பன் தான் வாழ்ந்த காலத்தில் திருவரங்கத்தில் வாழ்ந்திருந்த வைணவ ஆசாரியர்களைச் சந்தித்துப் பாடங்கேட்டு அவர்களுடைய சீடனாகித் தன்னை வைணவ நெறியில் முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டு பரமபாகவதனாகவே வாழ்ந்து வந்துள்ளான் என்பது புலனாகின்றது.

கம்பனும் திருவழுந்தூரும்

கம்பன் பிறந்த திருவழுந்தூரில் உள்ள ஆமருவியப்பன் திருக்கோயிலின் கருவறைக்காட்சி மற்றத் திருமால் திருக்கோயில் மூர்த்தங்கள் அமைப்பிலிருந்து மாறுபட்டு விளங்குகின்றது. மூலவர் தேவாதிராஜனின் வலப்பக்கமும் இடப்பக்கமும் ஸ்ரீதேவியும் பூமிதேவியும் நிற்பதற்குப் பதிலாக வலப்புறத்தில் பிரகலாதனும் இடப்பக்கத்தில் விரித்த சிறகுகளுடன் கருடனும் கூப்பிய கரங்களுடன் நிற்கின்றனர். கருவறையின் அர்த்த மண்டபத்திற்கு வெளியே கருவறைச் சந்நிதியின் இடப்புறத்தில் உள்ள தனிச்சந்நிதியில் நரசிங்கப்பெருமான் யோக நரசிம்மனாய்ப் பிரகலாதனுக்கு அருளிய நிலையில் காணப்படுகின்றான். திருவழுந்தூர் வாழ்ந்த கம்பன் சிறு வயது முதல், 'பிரகலாதனுக்கு அருளிய நரசிங்கப் பெருமானைக்'

கண்டு தரிசித்து மனங் கொண்ட ஆழ்ந்த பக்தியே 'இரணியன் வதைப் படலத்தைப் புனைய வைத்துக் கம்பனை உருக வைத்துள்ளது. மூலவர் தேவாதிராஜன் இடப்பக்கத்தில் புடை சூழக் காட்சி தரும் கருடனை, 'யுத்த காண்ட நாக பாசப்படலத்துக்கு' அழைத்து வந்து 'புடை நின்ற அண்ணல் கலுழன் தன் அன்பின் மிகையால்' (8244) என்று 'கருடன் துதியாகக்' கூறுவதும், 'தேவாதி தேவர் பலராலும் முந்து திருநாமம் ஓதும் செயலோய்' (8251) என்று மூலவர் தேவாதிராஜன் பெயரைக் குறிப்பிடுவதும், 'தாய் தன்னை அறியாத கன்று இல்லை தன் கன்றை ஆயும் அறியும் உலகின் தாய் ஆகின் ஐய! நீ அறிதி எப்பொருளும் அவை உன்னை நிலை அறியா' (2570) என்று ஆவையும் கன்றையும் தமது புறத்தே மருவி நிற்கும் உற்சவர் ஆமருவியப்பனை, விராதன் குரலில் பாடிப் பரவிப் பணிவதும் தனது தலத்துத் திருமாலுக்குக் கம்பன் செய்யும் 'மங்களாசாசனங்களாகவே' அமைந்து கம்பனைத் தீவிர வைணவனாகக் காட்டுகின்றன.

கம்பனும் வைணவமும்

'அன்னவர்க்கே சரண் நாங்களே' (1) என்று தொடங்கும் கம்பன், 'பாதம் அல்லது பற்றிலர்' (3) என்றும் 'நவை அறும் உலகிற்கு எல்லாம் நாயக! வையம் நின் சரணம் அல்லால் ரிது ஒன்று கண்டது உண்டோ?' (6655) என்றும் இராமானுச நெறியாம் பிரபத்தி சரணாகதியில் காவியம் முழுவதும் ஆழ்ந்து கிடக்கின்றான். 'என்னை ஆளுடைய ஐயன்' (6655) என்றும் 'என்னை ஆளுடைய கொண்டல்' (ஸ்ரீ.பா.408) என்றும், 'எங்கள் செங்கண் மால்' (408) என்றும், 'அப்பனை, அப்பினுள் அமிழ்தை, தன்னையே ஒப்பனை, ஒப்பனை உரைக்க ஒண்ணுமோ' (1227) என்றும், 'ஐயோ! இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு' (1926) என்றும் ஆழ்வார்களாகவே மாறி இராமன் வடிவழகில் கம்பன் மயங்கிக் கிடக்கின்றான். 'கடிமணப் படலத்தில்' இராமனுக்குத் திருமண் சாற்றிய கம்பன், 'ஆழியான் அளவின் நாமம் நெய்சுடர் விளக்கின் தோன்றும் நெற்றி' (5570) என்று அனுமனுக்கும் திருமண் சாற்றி வைணவப் பற்றாளனாகத் திகழ்கின்றான். 'பொரு அரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர் இருவினையும் உடையார்போல் அருந்தவம் இயற்றுவார்' (2572) என்றும், 'உன் அலால் பெருந்தெய்வம் உயர்ந்துளோர் ஒழுக்கு அன்றே' (2571) என்றும், 'வையத்தார் வானத்தார், மழுவாளிக்கு அன்று அளித்த ஐயத்தால் சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளர்' (2574) என்றும், 'ஆழி அம் கமலக்கையன் ஆதி அம் பரமன் என்னா ஏழையர் உள்ளம் என்ன இருண்டன

திசைகள் எல்லாம்' (8180)என்றும் சமயவாதம் பேசுகின்ற அதி தீவிர வைணவனாகவும் கம்பன் உருமாறுகின்றான்.

முடிவுரை

'கங்குலும் பகலும் கண் துயிலறியாது, கண்ண நீர் கைகளால் இறைத்து, சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பி, தாமரைக் கண்ணன் என்றே தளர்ந்து, எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு என்று ஏங்கி' நிற்கும் பராங்குச நாயகியின் பிச்சேறி நிற்கும் உச்சநிலை பக்தி போலவே கம்பன் இராம பக்தி பிச்சேவி நிற்கும் தீவிர வைணவனாகவே காவியம் முழுவதும் காணப்படுகின்றான். கம்பன் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆசாரியர்களோடு உறவு பூண்டு அவர்களுக்குச் சீடனாகி 'இராமானுசதாசனாக' வைணவ தீட்சை ஏற்று 'இராமாவதாரம்' படைத்த வைணவனே என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் முடிபு.

கம்பர் வைணவரே!

திருமிகு. பாவலர்மணி சித்தன்
கம்பன் கழகம்,
புதுச்சேரி.

தமிழகத்தில் தோன்றிய காப்பியங்களுள் இன்றும் இளமை குன்றாமல் நின்று நிலவுவது கம்பராமாயணம். இராமகாதை ஒரு வைணவ காப்பியம். ஆழ்வார்கள் தொடங்கி இராமாநுசர் வரை உள்ள ஞானியர்களின் வழியில் இராமாயணத்தைக் காப்பியமாக்கி உள்ளார் கம்பர்.

ஒரு மாபெரும் வைணவ காப்பியத்தை மத - மரபுகள் தவறாமல் பாட ஒரு வைணவப் புலவரால் மட்டுமே முடியும்! "தற்காலம் போல் அல்லாது அந்தக் காலத்தில் எந்தக் கவிஞனும் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தவனாகத்தான் இருந்திருப்பான்" என பழ.முரு. இரத்தினம் செட்டியார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். இனி.

1. கம்பன் என்ற பெயர் நரசிங்கனைக் குறிக்கும், இரணியன் அரண்மனை பொற்றூணைக் "கம்பம்" என்றான். கம்பத்திற் பிறந்தவன் கம்பன் (சிங்கவேள்) கம்பர் இப்படிப் பாடியது தம் வைணவப் பற்றையும், தம் பெயர்க் காரணத்தையும் உணர்த்தற்கேயாம்.

2. கம்பரில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் மூன்று. மூன்றும் ஒரு தொடர். "உலகம் யாவையும்" என்று தொடங்கும் முதற் பாடலில் முத்தொழிலையும் புரியும் இறைவனை "அவர்" என்றார். அவர் ஸ்ரீ அகரத்தின் பொருளாமவர் (அகாரவாச்சியன்)

"எழுத்துக்களில் நான் "அகரமாயிருக்கிறேன்' என்றான் கண்ணன் கீதையில்! இனி - மூன்றாம் பாடலில் அரி" எனக்கூறி "அவர் தலைவர்" என்று உணர்த்துகிறார் - " கொண்டு கூட்டு என்ற இலக்கணப்படி.

3. 108 திருத்தலங்களில் முதன்மையான வைணவத்தலம் திருவரங்கம். இதை ஆழ்வார்கள் பதின்மரும் பாடியுள்ளனர்.

திருவரங்கர் இராமபிரான் குலமுதல்வர். இராமன் திருமணத்திற்கு முன் கோசலையும், சுமித்திரையும் திருவரங்கரை வணங்கினர்.

திருமணக் கோலத்தில் இராமன் - "கோதறு தவத்துத்தம் குலத்துளோர்தொழும் ஆதியஞ் சோதியை அடிவணங்கினான்: (1208)

என்றார். நூல் தொடக்கத்திலேயே கம்பர் திருவரங்கர் புகழ் பாடுகிறார்! ஆதியஞ்சோதி திருவரங்கர்.

4. திருஅவதாரப் படலத்தில் பாற்கடலில் உறையும் பரமனை அமரர்கள் வேண்டநாரணர்

"திருவொடும் பொலிய ஓர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினான்" (191)

என்றார். திருமால் கருடனிலிருந்து இறங்கி மணிமண்டபத்தமர்ந்தார். இதை,

"பொன்வரை இழிவதோர் புயலின் பொற்புறு"
என்னைஆளுடையவன்" தோள்நின்று எம்பிரான்" (204)

இறங்கினன் என்றார் - கம்பர். "என்னை ஆளுடையவன் "என்னை அடிமையாகக் கொண்டவன்" - கருடாழ்வான் - என்றார். இது ஒரு தூய வைணவன் பேச்சு!

5. "வாமனாவதாரம் - பாடிய கம்பர் - திருமாலை நான் மறைக்கும் தேவர்கள் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டா "எங்கள் செங்கண்மால்" எனப் (408) படர்க்கை உளப்பாட்டுத் தன்மையால் கூறினார். "எங்கள் செங்கண்மால்" என்பதில் உள்ள உரிமை - அழுத்தம் - இவை - கம்பர் ஒரு வைணவப் புலவர் என்பதை உணர்த்துகிறதே!

6. "உலகம் யாவையும்" என்று தொடங்கும் "கடவுள் வணக்கம்" - முதற்பாடலின் முடிவில், "அன்னவர்க்கே சரணாங்களே" என்றார் (1) வைணவ உரையாசிரியர்கள் இராமாயணத்தைச் "சரணாகத் சாத்திரம்" என்பர். இராமனைச் சரணடைந்தவர் பலர்.

பாரதியார்.

"சத்யா சநாதனா - ராமா
சரணம் சரணம் சரணம் - உதாரா!"

என்றார். இனி சரணாங்களே - என்பது "சரண் - நாங்களே" - என்றும் "சரண் ஆங்களே" என்றும் பிரியும். தாம் சரணடைந்து மற்றவர்களையும் சரணடையச் சொல்கிறார். (ஆங்கள் - ஆகுங்கள் என்பதின் குறுக்கம்)

7. கம்பர் இராம நாடகத்தில் திருமாலின் அவதாரங்களைப் பாடியுள்ளார். அவைகளில் இராமாவதாரத்திற்குப் பிறபட்ட கண்ணன்

திருவிளையாடலையும் நூல் தொடக்கத்திலேயே பாடி மகிழ்கிறார். இது முறையோ? என்பர். அவர்கட்குக் கம்பர் அவதார காலத்திற்குப் பிற்பட்டவராதலின் அமையும் என்பர். (பாலகாண்டம் - சந்திரசயிலப் படலம் 3-ம் பாடல்)

"திரண்டதாள் நெடுஞ்செறி பணை மருது இடைஓடியப்
புரண்டு பின்வரும் உரலொடு போனவன்"

கண்ணன் என்றார். இவர் இராம காதையில் கண்ணனைப் பாடியதற்கு இவரின் வைணவப் பற்றே காரணம். நம்மாழ்வார்.

"கண்ணனல்லால் தெய்வமில்லை". என்றார் இப்பாசுரம் கம்பருக்கு வழிகாட்டியிருக்க வேண்டும்.

8. கம்பர் ஆழ்வார்கள் பாசுரங்களைப் பின்பற்றியுள்ள இடங்கள் ஏராளம். வைணவ தத்துவங்கள் இருபத்தைந்து என்பர் - திருமால் இருபத்தைந்து தத்துவங்களுக்கு மேற்பட்டவன்.இதை திருமழிசை ஆழ்வார் தம் திருச்சந்தவிருத்தம் (3) இல்

"ஐந்து மைந்து மாய நின்னை யாவர்காண வல்லரே!"

என்றார். கம்பர் இப்பாசுரத்தைப் பிரமன் துதியில்.

"ஐஅஞ்சு ஆகிய தத்துவம் தெரிந்து அறிந்து அவற்றின்
மெய் எஞ்சாவகை மேல்நின்ற நினக்கு (10055)

என்று தழுவிக் கொண்டுள்ளார்.

9. கம்பர் ஆழ்வார்கள் பாசுரங்களை அண்டை கொண்டு கவி வலம் வருகிறார். "திருமால் திருநாமம் எவைகளைத் தரும்" என்பதை வரிசைப்படுத்துகிறார் - திருமங்கை ஆழ்வார்.

"குலம் தரும், செல்வம் தந்திடும், அடியார் படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும், நீள்விசும் பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும், மற்றும் தந்திடும் பெற்ற தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராய ணாவென்னும் நாமம்

(பெரிய திருமொழி-956)

அடியார்க்கு வேண்டுவனவற்றை 'நாராயணா'வென்னும் நாமம் வழங்கும் - என்றார்.

இப்பாசுரத்தின் நகலாகக் கம்பர் தரும் கவி இது:

"காமம் யாவையும் தருவதும் அப்பதம் கடந்தால்
சேம வீடுறச் செய்வதும் - செந்தழில் முகந்த
ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும் ஒருவன்
நாமம்: அன்னது கேள் நமோ நாராயணாய" (இரணியவதை - 42)

விருப்பங்களைத் தருவது - அந்த நிலையைக் கடந்தவர்களுக்கு விண்ணின்பத்தை வழங்குவது. யாகங்களால் பெறப்படும் சுவர்க்க நலன்களைத் தருவது - ஒப்பற்ற ஒருவன் நாமம் - அது நாராயணன் திருநாமம்: ஆழ்வார் "குலந்தரும், செல்வந் தந்திடும். "என அடுக்கிச் சொன்னவைகளைக் கம்பர் "காமம் யாவையும்" என்று சுருக்கித் தந்தார்.

ஆழ்வார் பாசுரங்களில்இது உயர்ந்தது. நாராயண நாமத்தின் பெருமை பேசுவது. அதை அப்படியே ஏற்றுத் தம் வைணவப் பற்றை உணர்த்துகிறார் கம்பர்.

10. கம்பரை வைணவர் என்றால் அமையாது. தீவிர வைணவர் என்று கூற நூலில் பல இடங்கள் உள. "மெய்ப்பொருளுக்கே இராமன் எனப்பெயர்: "முன்னை ஆதிஆம் மூர்த்தி நீ" (10063) "ஓம் எனும் ஓர் எழுத்து - அதன் உள்ளுயிர் ஆனவன்" (6264) "எல்லீரும் அவ் இராம நாமமே சொல்லீர்!"

இவ்வாறு அடுக்கிக் கொண்டேபோகிறார். சிலவே காட்டினோம்.

11. "சிவனுக்கும் பிரமனுக்கும் திருமாலே உயிர்" என்பது வைணவ நூற்கொள்கை. இதைக் கம்பர்: "முப்பரம் பொருளிற்கு முதலை - மூலத்தை: (1247) என்றார் - இராமனை!

12. கீதை - "கருமமும் அக்கருமத்தின் பயனும் கண்ணனே" என்று கூறும். இதனை நம்மாழ்வார்.

"கருமமும் கரும பயனும் ஆகிய நாரணன்" என்றார் (3-5-10)

இதைப்பின்பற்றி பிரகலாதன் பேச்சாகக் கம்பர், நாரணனை

"கருமமும் கருமத்தின் பயனும் அப்பயன்
தருமுதல் தலைவனும் தானும் ஆனவன்" (6251) என்றார்.

13. திருவரங்கம் பெரிய கோயிலில் - கம்பநாட்டாழ்வார் என்ற சிலை ரங்கவிலாசம் வாயிலில் உள்ளது. திருவரங்கத்தில் கம்பர் மண்டபம் உள்ளது. "கம்பராமாயணம் அரங்கேறிய இடம்" என்ற குறிப்பும் உள்ளது. "ஆரடா சிரித்த சொன்ன அரிகொலோ?

என்ற கம்பர் பாடல் அரங்கேறிய போது கைகளைத் தூக்கி - முடி அசைத்து ஆரவாரித்த கோலத்தில் சிங்கப்பிரான் திருவுருவம் கோயிலில் இன்றும் உள்ளது. வைணவர் தவிர திருவரங்கத்தில் வேறு ஒருவர் நூல் அரங்கேற்றம் செய்ய முடியாது - அன்றும் - இன்றும்: இவை கொண்டும் கம்பர் வைணவர் என்பது விளங்கும்.

14. யுத்த காண்டம் - மருத்துமலைப் படலத்தில் - அனுமன் மருந்து மலையைக் கொண்டுவரச் சென்ற போது - பிரமன், சிவன் முதலிய தேவர்களைக் கண்டு வணங்குகிறான். திருமாலைக் கண்டு வணங்கியதைக் கூறவந்த கம்பர்.

"மருவிரி துளவ மோலி, மாநிலக் கிழத்தியோடும்
திருவொடும் இருந்த மூலத்தேவையும் வணக்கம் செய்தான்".

திருமாலை "மூலத்தேவு" (ஆதி மூலம்) என்றார். (8752)

ஆதிமூலமே - இராமன் என்பது வைணவக் கம்பரின் கருத்து.

15. திருமாலை "எம்பிரான்" (194) "பரகதி உணர்ந்தவர்க்கு உதவு பண்ணவன்" (190) என்று முடிமேல் வைத்துத் தொழுது பாடும் கம்பரின் சமயம் வைணவமாகத்தானே இருக்க முடியும்?

16. பிரமன் துதியில் ஓர் இடம்: "மன்பெரும் பரமார்த்தம்" என்று உரைக்கின்ற மாற்றம் அன்ப! நின்னை அல்லால் மற்று இங்கு யாரையும் அறையா!" என்பது (100052) "பரம்பொருள்" என்று சொல்லுகின்ற திருமாலாகிய இராமனைத் தவிர அச்சொல் வேறுயாரையும் குறிக்காது என்று பிரமன் கூறினன் - என்றார் கம்பர்.

17. வைணவ தத்துவங்களில் தலையான நெறி "சரணாகதி". இறப்பு - பிறப்பு என்று உழலும் உயிர்களுக்குத் திருமாலின் திருவடி அன்றி வேறு சரண் இல்லை. உயிர்கள் "மரணம் தோற்றம் என்று இவற்றிடை மயங்குபு அவர்க்கு உன் சரணம் அல்லது ஓர் சரண் இல்லை! (10057)என்றார் கம்பர். இது வைணவத் தத்துவங்களில் தலையானது. வைணவர் இதைச் "சரணாகதி தத்துவம்" என்பர். கம்பர் இதனால், வைணவ சாத்திரத்தின் உயிரைத் தொட்டுள்ளார்.

18. மீட்சிப்படலம், சிவபெருமான் இராமனுக்கு - அவன் யாவன்? என்பதை உணர்த்துகிறார். "ஏறு அமர் கடவுளும் இசைத்தான்:

"உன்னை நீ ஒன்றும் உணர்ந்திலை போலுமால் - உரவோய்!
முன்னை ஆதிஆம் மூர்த்தி நீ! மூவகை உலகின்
அன்னை சீதையாம் மாது! நின்மார்பின் வந்து அமைந்தாள்!"

என்று. சிவபெருமானை வைத்தே இராமனை (10063) "நாரணன் நீ! ஆதிமூலம் நீ! மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் நீ! என்று பேசவைத்து நூலை முடிக்கின்றார் - கம்பர்.

19. "கம்பன் சிவனைப் புகழும் இடங்களை நோக்கினோமானால் திருமாலுக்குத் துணைப் பரம் பொருளாகச் சிவன் இருக்கிறான்-எனக்கருதி, ஆழ்வார்கள். "என் மலை மகள் கூறன் என்கோ" எனப் பாடியது போலப் பாடியிருக்கிறான் என்றே தான் தீர்மானிக்க வேண்டி-யிருக்கிறது" - என. பழ.முரு.ரத்தினம் செட்டியார் (கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை 4:108) கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது. இவ்வாறு தொட்ட தொட்ட இடந்தொறும் திருமாலின் பரத்துவத்தைப் பாடும் கம்பரை - வைணவச் சான்றோர் கம்பநாட்டாழ்வாராகவே கண்டனர்!

20. "திருமாலின் திருவடிகளில் சரணமடைவதே பிறவிப் பிணிக்கு மருந்து: இதுவே வைணத்தின் தலையான கொள்ளை: மக்கள் "மரணம் தோற்றம் என்று இவற்றிடைமயங்குப: அவர்க்கு உன் சரணம் அல்லது ஓர் சரண் இல்லை!" (10057) என்று கூறிக்கம்பர் தம் வைணவப் பற்றைக் காட்டியுள்ளார். இதற்கும் மேலாக நாராயண நாமத்தின் பெருமையை அவர் கூறுவது நம்மைப் புல்லரிக்கச் செய்கிறது.

"முக்கண் தேவனும் நான்முகத் தேவனும் முதலா மக்கட் காறும் இம்மந்திரம் மறந்தார் - இறந்தார்" (இரண்ய - 214) என்றார். இப்பாட்டில், "மகா தேவனும், நான்முகனும் தொடங்கி மக்கள்வரை உள்ளவர்கள் "நாராயணாய" எனும் இம்மந்திரத்தை மறந்தவர் - இறந்தவரை ஒப்பார்" என்றார். இதற்குமேலும் "கம்பரை வைணவரா? என்று கேட்பது சரியாகுமா?

"திருமாலே முழுமுதல்" என்று கம்பர் தம் நூலில் பாடியுள்ள இடங்கள் ஆயிரம். என்கட்டுரை பாயிரம்.ஆழ்வார்கள் பாசுரங்களையும், இராமாநுசர் கொள்ளை முடிவுகளையும் கம்பர் காப்பியத்தில் தொட்ட தொட்ட இடந்தொறும் காணலாம்.

இனி. கண்ணுடை அம்மன் பிள்ளைத் தமிழ் - கம்பரை வைணவ முறைப்படி அடக்கம் செய்ததாகக் கூறுகிறது. அப்படி என்றால் கம்பர் வைணவரே!

கம்பர் போற்றும் கருமைக் கடவுள்

திருமிகு. க.கதிரவன்
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம், அரசுக்கல்லூரி, சித்தூர், பாலக்காடு, கேரளா.

திருமாலின் நிறம் கருமை. இத்தெய்வம் இப்பண்பு காரணமாகத் தமிழில் பலபெயர்பெற்றுள்ளது. முதற்கண், மால் என்னும் சொல்லுக்கே கருமை என்னும் பொருளுமுண்டு. கரியமலையும் கார்மேகமும் மனக்கரிப்பால் தோன்றும் மயக்கமும் மால் என்றே வழங்கப்பெறும். கண்ணன் என்னும் பெயரும் கருமையடிப்படையில் திருமால் பெற்றபெயரே. வடமொழியிலும் கண்ணனைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் கிருஷ்ணன், சியாமளன் என்னும் பெயர்களும் கருமைநிறத்தைக் குறிப்பனவே.

திருமாலின் கருமைநிறத்தை ஆழ்வார்கள் பலவாறு போற்றிக் கொண்டாடுகிறார்கள். அவ்வகையில் திருமாலின் இராமாவதாரத்தைக் காப்பியமாகப் பாடிய கம்பர் இராமனின் கருமைநிறத்தை எவ்வாறு போற்றிக் கொண்டாடுகிறார் என்பதைக் காண முயல்கிறது இக்கட்டுரை. இவ்வாறு காண்பதன் வழி இன்று பலராலும் வெறுக்கப்படும் கரியநிறம் கம்பரால் எவ்வாறு கொண்டாடப்படுகிறது என்பதை வெளிக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

கருமை போற்றும் உவமைகள்

ஒரு காப்பிய ஆசிரியனாகத் தனித்தும் பல்வேறு பாத்திரங்களின் வாய்ச் சொல்வழியும் கம்பர் இராமனின் கருமையைப் போற்றிப்புகழ்கின்றார். இராமனின் கருமை நிறத்துக்கு கம்பர் ஒரு காப்பிய ஆசிரியராய் அடுக்கும் வருணனையை பின்வரும் பாடலில் காணலாம்.

“வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியின் மறையப்
பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்
மையோ! மரகதமோ! மறிகடலோ! மழை முகிலோ!
ஐயோ! இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்”
(பா.2016)

இராமனின் நிறத்தை மைநிறம் எனவும் மரகத நிறம் எனவும் மறிகடல் நிறம் எனவும் மழைமுகில் நிறம் எனவும் வேறுவேறு உவமைகளைப் பயன்படுத்திச் சொல்லிப் பார்த்த கம்பர் தன் சொல்

போதாமை எண்ணி ஐயோ என முடித்தார் என நயம்பாராட்டுவர் புலவோர். கருமைநிறத் தலைவனின் வடிவழகை, கம்பர் அழியா அழகு எனப் போற்றுகிறார் என்பது இங்கு உற்றுநோக்கத்தக்கது.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள மையும் மரகதமும் மறிகடலும் மழைமுகிலும் காப்பியத்தில் பல இடங்களில் இராமனின் கருமையைப் போற்ற தாமும் தம்பொருட்சொற்களுமாய்த் தனித்தும் இணைந்தும் கம்பருக்குக் கைகொடுத்துள்ளன.

மைவண்ண இராமன்

அஞ்சனம் என்னும் சொல்லுக்கு மை என்னும் பொருள் உண்டு. இராமனை அஞ்சன வண்ணன் என கம்பர் பல இடங்களில் போற்றிக் குறிப்பிடுகிறார்.

சித்திராச்சிரம முனிவர்கள் இராமனிடம் அபயம் பெற வரும்பொழுது இராமனை மைவண்ணா என்றுதான் விளிக்கின்றனர். தமக்கு அபயம் தர உள்ள ஒருவனைப் புகழ்ந்து பேசினால்தானே அவன் மனம் குளிர்ந்து தமக்கு அபயமளிக்க முன்வருவான் என்பதை உணர்ந்த முனிவர்கள், இராமனின் கருமையைப் புகழ்ந்து அவ்வாறு விளிக்கின்றனர் எனலாம்.

"அஞ்சன வண்ண நின் அபயம் யாம் 'என்றார்." (பா. 468:4)

குகன் இராமனுக்கும் தனக்குமான உறவைக் குறித்துரைக்கும்போது இவ்வாறே புகழ்கிறான்.

"அஞ்சன வண்ணன், என்ஆர் உயிர்நாயகன்" (பா. 2404:1)

இராமனின் தாள்துகள்பட்டு அகலிகை மீண்டும் தன்னிலை உற்றதைப் போற்றும்போது கம்பர் தன் கூற்றிலேயே, இராமனை அஞ் சன வண்ணத்தன் என்று போற்றுகிறார்.

"அஞ்சன வண்ணத்தான் தன் அடித் துகள் கதுவா முன்னம்,
வஞ்சிபோல் இடையாள் முன்னை வண்ணத்தளாகி நின்றாள்"
(பா. 562 : 1-2)

பெண்கள் கண்களுக்கு தீட்டிய மை தான் அஞ்சனம். ஆயின் அஞ்சனம் தீட்டப் பெற்ற பெண்களின் கண்கள் அஞ்சன நிறமோ? அண்ணலின் நிறமோ? என கம்பர் ஐயுற்று தன்னால் முடிவுகாண முடியவில்லை என்று முடிவும் கூறும்போது உவமையை முந்தி நிற்கிறது உவமேயம்.

"வஞ்சமும் களவும் இன்றி மழை என மதர்த்த கண்கள்,
அஞ்சன நிறமோ? அண்ணல் வண்ணமோ? அறிதல் தேற்றாம்"
(பா.1216: 3-4)

கருமையை இருள் எனப் பல இடங்களில் உலகத்தோடு ஒப்பப் பயன்படுத்தியிருக்கும் கம்பர், இராமனின் கருமையைக் குறிக்க வரும்போது கருமையை ஒளி எனப் போற்றுவதைக் காணமுடிகிறது.

"அஞ்சன ஒளியானும், அலர்மிசை உறைவாளும்" (பா.1265: 1)

"அஞ்சன ஞாயிறு அன்ன ஐயனை நோக்கிச் செய்ய
வஞ்சி வாழ் வதனம் என்னும் தாமரை மலர்ந்தது அன்றே.
(பா.2066: 3-2)

கம்பர் இராமனின் கருமை நிறத்தையும் அழகையும் அடுத்தடுத்து எடுத்துரைக்கும் இடங்கள் பல உண்டு.

"அஞ்சன மேனிஇவ் அழகற்கு எய்திய" (பா.1879:1)

"அஞ்சனக் குன்றம் அன்ன அழகனும்" (பா.1980:1)

சீதையும், அனுமனும் அரக்கர் குலத்தவர்களான விராதனும் சூர்ப்பணகையும் இராமனை அஞ்சன மலையாகக் காண்பதைக் கம்பர் குறிக்கிறார். (பா.2629, 2914, 3312)

பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள திருமாலை அஞ்சன வண்ணனாக வர்ணிக்கும் கம்பர், திருமாலின் அவதாரமே இராமன் என்பது மனத்துள் பதியும் வண்ணம் மீண்டும் மீண்டும் இராமனின் அஞ்சன வண்ணத்தைப் போற்றுகிறார் எனலாம்.

"பஞ்சு அணை பாம்பு அணை ஆகப் பள்ளி சேர்
அஞ்சன வண்ணனே இராமன் (பா. 3558: 1-2)

மரகத ராமன்

அடர்பசுமையும் அடர்நீலமும் கருமையோடு நெருங்கித் தெரிவன என்பதால் திருமாலின் கரிய நிறத்தைப் பச்சையாகவும் நீலமாகவும் குறித்தல் வைணவர் வழக்கு.

பச்சைமாமலை போல் மேனி எனத் தொண்டரடிப்பொடியாழ்வார் போற்றுவது போல் கம்பரும் இராமனையும் இராமனுடைய தோள்புயங்கள் இரண்டையும் மரகதமலை என்று பல இடங்களிலும் போற்றிப் பரவுகிறார்.

மரகதப் பெருங்கல், மரகதக் குன்றம், மரகதக் கிரி, மரகதப் பொருப்பு, மரகதச் சயிலம் என மரகத மலையை உவமையாகவும் உருவகமாகவும் பல்வேறு பாக்களில் பல்வேறு சொற்களில் கம்பர் பயன்படுத்துகிறார்.

இராமனுடைய தோள்கள் பற்றிக் கூறும்பொழுதெல்லாம் மரகத மலையை கம்பர் உவமையாக்கியிருக்கிறார் என்றே கூறலாம்.

". . . மரகதப் பெருங்
கல் எனும் இரு புயம் . . ." (பா.616 :2-3)

"மரகத மலை என வளர்ந்த தோளினான்" (பா.2283:4)

"வன்திண்கைச் சிலைநெடுந்தோள் மரகதத்தின் மலைவந்தான்"
(பா.2942:4)

"செயிர்ப்பினும் அழகு செய்யும் திருமுகத்து அணங்கைத் தீர்த்து
துயில் சுவை மறந்தான் தோளில் தூநிலாத் தவழும் தோற்றம்,
மயில் குலம் பிரிந்த மான மரகத மலை மேல் வன்னி
உயிர்ப்பு உடை வெள்ளைப் பிள்ளை வாள் அரா ஊர்வ போன்ற"
(பா.6894)

"திரண்ட வாளிகள் சேவகன் மரகதச் சிகரத்து
இரண்டு தோளினும் இரண்டு புக்கு அழுந்திட, எய்தான்"
(பா.7382:3-4)

இராமனின் தோள்களை மரகத மலைகளாகக் கண்ட கம்பர், இராமனையே மரகத மலையாகப் போற்றும் இடங்களும் பலவுள.

"மண்டலம் உதயம் செய்த மரகதக் கிரி அனானை" (பா. 3904)

"பொன் குவட்டு இடையே தோன்றும் மரகதக் குன்றம் போன்றான்"
(பா.6967)

சீதை அருகிருக்க இராமன் முடிசூட்டுவிழாக் கொண்டாடும் தருணத்தை வர்ணிக்கும் போதும் கம்பர் இராமனை மரகத மலை என்றே கொண்டாடுகிறார்.

"மரகதச் சயிலம் செந்தாமரை மலர்க் காடு பூத்து,
திரைகெழு கங்கை வீசும் திவலையான் நனைந்து, செய்ய
இருகுழை தொடரும் வேற்கண் மயிலொடும் இருந்தது ஏய்ப்ப,
பெருகிய செவ்வி கண்டார், பிறப்பு எனும் பிணிகள் தீர்ந்தார்"
(பா. 10490.)

கம்பர் இராமனை மரகத மலை போன்றவன் என மரகதத்தை உவமையாகத் தனித்து நிறுத்திப் பல இடங்களில் பாடினாலும் இராமன் மேனி மரகத மேனி என உருவகமாக இணைத்துப் பாடிய பாடலும் உண்டு.

"சரத வானவர்கள் துன்பம் தணித்து உலகங்கள் தாங்கும்
மரகத மேனிச் செங்கண் வள்ளலே!" (பா. 10289.)

மறிகடல் வண்ணன்

இராமனைக் கம்பர் இரு இடங்களில் மட்டும் கடல்வண்ணன் என்று குறிப்பிடுகிறார். ஒன்று அவர் கூற்று, மற்றையது கூனி கூற்று. சீதையைக் கண்ட இராமனது மகிழ்ச்சியைக் கூற வந்த கம்பர்,

"கன்னி அமிழ்தத்தை எதிர்கண்ட கடல்வண்ணன்" (பா. 1231)

என்கிறார். கூனி கைகேயியிடம் வாதிடும்போது

"மூத்தவற்கு உரித்து அரசு எனும் முறைமையின், உலகம்
காத்த மன்னனில் இளையன் அன்றோ கடல் வண்ணன்?"
(பா. 1564)

என இராமனைக் கடல்வண்ணன் என்று குறிப்பிடுகிறாள். இவ்விரண்டில் கூனி கூற்று இகழ்ச்சிப்பொருளது என்பதே பொருந்தும் எனலாம்.

ஆழ்வார்கள் திருமாலை ஆழிவண்ணன், நீராழிவண்ணன், மாநீர்வண்ணன், முந்நீர்வண்ணன், வேலைவண்ணன், பொங்குவெண்டிரைப்புணரிவண்ணன், ஓதவண்ணன் என்றெல்லாம் பலவாறு போற்றியிருக்க கம்பர் கடலோடு நின்றுவிட்டார்.

மழைமுகில் வண்ணன்

தாடகையை வதம் செய்து வேள்வி காத்த இராமன், தன் கால்தூசி தந்து அகலிகையை கல்லுருவத்திலிருந்து மீட்டெடுத்தமை கண்டு விசுவாமித்திரர் வியந்து போற்றும்போது இராமனை மழைவண்ணத்து அண்ணலே என்றழைக்கின்றார்.

"இவ் வண்ணம் நிகழ்ந்த வண்ணம், இனி இந்த உலகுக்கு எல்லாம்
உய் வண்ணம் அன்றி, மற்று ஓர் துயர் வண்ணம் உறுவது உண்டோ?
மை வண்ணத்து அரக்கி போரின் மழை வண்ணத்து அண்ணலே! உன்
கை வண்ணம் அங்குக் கண்டேன், கால் வண்ணம் இங்கு கண்டேன்
(பா. 559)

இப்பாடலில் வண்ணம் என்னும் சொல் மறித்துவருதல் வேண்டி அரக்கியின் நிறத்தை மைவண்ணம் என இராமனின் நிறத்திற்கு உவமை கூறிய மையைக் கொண்டே கூறினார் எனினும் கம்பர் அதனைச் சரிசெய்யும் முகமாக இராமனைக் கூறும்போது அண்ணலே என உயர்வுச் சுட்டைச் சேர்த்து உயர்த்திவிட்டார் எனலாம்.

இலக்குவனது வெற்றிகண்டு ஆரவாரம் செய்யும் இராமனை கார்முகில் வண்ணன் என்கிறார் கம்பர். (பா.8651) மாதலியின் சொற்களில் இராமன் கருப்புக் கார்மழை வண்ணன் எனப் போற்றப்படுகின்றான். (பா.9965) இப்பாடலில் உள்ள கருப்பு என்னும் சொல்லுக்கு பஞ்சகாலம் என்னும் பொருள்கொண்டு பஞ்சகாலத்தில் தோன்றும் கார்மழை போன்றவன் இராமன் என உரையுரைக்கின்றனர். எனினும் இங்கு இராமனின் கருமை நிறமே கருப்பு, கார், மழை என்னும் மூன்று சொற்களால் மீமிசைவழக்காய்ச் சுட்டப்பெற்று போற்றப்படுகிறது எனலாம்.

நீலநிறத்து நெடுந்தகை என திருமாலைப் புகழும் கம்பர் இராமனை நீலமா முகிலனான் என்றும் போற்றுகிறார்.

'நீல மா முகில் அனான்தன் நிறையினோடு அறிவும் நிற்க"

(பா. 1674)

கருமைநிறக் கண்ணனும் இராமனும் காளியும் போற்றப்பட்ட இந்நிலத்தில் இன்று கருமை இகழப்படுவதை எண்ணித் தெளியவேண்டியது இளைஞர் கடன்.

கம்பன் வழிபட்ட கலைமகள் சிலை

முனைவர் எஸ். பத்மநாபன்
பொதுச்செயலாளர், கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மையம்,
நாகர்கோயில்.

கலைமகளுக்கென்று எழுந்த கோயில்கள் மிக அரிது. அவற்றுள் ஒன்று பத்மநாபபுரம் கோட்டையின் உள்ளே அமைந்துள்ள சரஸ்வதி அம்மன் கோயில். இக்கோயிலில் காணப்படும் கலைமகளின் திருவுருவச்சிலை மிகவும் பிரசித்தி பெற்றது. இத்திருவுவச்சிலை கம்பனால் வணங்கப்பட்டது என்று இவ்வட்டார மக்கள் கூறக் கேட்கலாம். இக்கூற்றுக்கு ஆதாரம் ஏதாவது உண்டா? என்ற கேள்வி இங்கே எழுகின்றது.

'ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்குப்போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் ஈங்கு வாராது ஈடர்'

என்று தொடங்கும் சரஸ்வதி அந்தாதியை கம்பர் சேரமன்னன் அவையிலே பாடினார் என்பது கம்பர் வரலாறு. சேர நாட்டின் பகுதிதான் வேணாடு. வேள் நாடுதான் வேணாடு என்று திரிந்தது. வேணாட்டின் தலைநகர் பத்மநாபபுரம். அன்றைய நாஞ்சில்நாடும் வேணாடும் தான் இன்றைய குமரி மாவட்டம்.

சோழ நாட்டிற்கும் நாஞ்சில் நாட்டிற்கும் சங்க காலத்தில் இருந்தே நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதை அகநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது (பாடல் 36). சங்ககாலத்தில் நடைபெற்ற தலையாலங்கானத்துப் போரில் நாஞ்சில் பொருநனும், திதியனும் சோழ மன்னனோடு சேர்ந்து பாண்டிய மன்னனை எதிர்த்தான் என்ற தகவல் கிடைக்கின்றது. அதனைத் தொடர்ந்து சோழர் தொடர்பு பிற்காலச் சோழர்கள் காலத்திலும் நீடித்தது என்பதை சோழர்களின் வரலாறு நமக்குக் கூறுகின்றது. முதல் இராஜராஜசோழன் காலத்தில் குமரி மாவட்டப்பகுதி முழுவதும் அவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதை கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறியலாம். சோழ நாட்டிலே பிறந்த கண்ணகி அங்கே வாழ முடியாமல் பாண்டிய நாடு வந்து ஆங்கே விதவையாக்கப்பட்டு சேரநாடு வந்து தெய்வமானாள். கற்புக்கரசி

கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் எழுப்பிய கோயில் தான் கொடுங்கல்லூர் பகவதிகோயில். திருவனந்தபுரம் ஆற்றுக்கால் பகவதி கோயிலைச் சுற்றிலும் சிலப்பதிகார கதைநிகழ்ச்சிகள் சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன. செங்கன்னூர் பகவதி கோயிலில் அம்மனை ஆராட்டி தமிழ் மரபுப்படி புடவை உடுத்துகின்றனர்.

சோழ நாட்டைச்சார்ந்த திருஞானசம்பந்தர் சேர நாட்டிலுள்ள கோட்டாறு வந்து வடிவீஸ்வரம் கோயிலைப்பற்றிப் பாடிய பதிகம் தான் திருக்கோட்டாற்றுப் பதிகம். அவர் கோட்டாறு வந்து தங்கிய மடம் கோட்டாறு வாகையடித்தெருவில் இன்றும் சம்பந்தர்மடம் என்றே அழைக்கப்படுகிறது. சோழ மன்னரை 'குமரித்துறைவன்' என்று மூவருலா அழைப்பதும், குமரித்துறையை 'இராஜராஜேஸ்வரம்' என்றும், 'கங்கை கொண்ட சோழபுரம்' என்றும் கன்னியாகுமரி கல்வெட்டுகள் குறிப்பிடுவதும் குமரித்துறையோடு சோழர்கள் கொண்டிருந்த உறவினை எடுத்துரைக்கின்றன.

பராந்தக சோழன் (கி.பி 907-955) காலத்திய கல்வெட்டுகள் கன்னியாகுமரியிலும், சுசீந்திரத்திலும் கிடைக்கின்றன. பராந்தகனின் மகன் இராஜாதித்தன் படையிலே குமரி மண்ணைச் சார்ந்த இரவி கோதை, இயக்கன்ராமன், மணக்கரை கந்தன்காமன் உட்பட பலனிரர்கள் பணியாற்றினர் என்று கல்வெட்டுகள்மூலம் அறியமுடிகிறது. அதுமட்டுமின்றி அவன் காலத்தில் சோழர் படைகளுக்கெல்லாம் தலைமை தாங்கியவன் குமரி மண்ணிலே தோன்றிய வெள்ளன்குமரன் என்று அறியும்போது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. 'இராஜாதித்திய தேவர் பெரும்படை நாயக மலைநாட்டு நந்திக்கரை புத்ரன் வெள்ளன்குமரன்' என்ற திருநந்திக்கரை கல்வெட்டுத்தொடர் இதனை உறுதிப்படுத்துகின்றது. இந்த வெள்ளன்குமரனின் பெயரால் எழுந்த ஊர்தான் நாகர்கோவில் கோட்டாற்றை அடுத்துள்ள வல்லன்குமாரவிளை. அத்துடன் இராஜராஜசோழன், இராஜேந்திர சோழன், குலோத்துங்கசோழன் காலத்தைச் சார்ந்த பலகல்வெட்டுகள் குமரி மாவட்டத்திலே கிடைத்துள்ளன. இது குமரி மண்ணிற்கும் சோழர்களுக்கும் இருந்த தொடர்பினை உறுதிப்படுத்துகின்றது. இராஜராஜசோழன் தஞ்சையில் பெரிய கோயிலை எழுப்புவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்னரே குமரி முனையில் சோழர் கட்டிடக்கலையமைப்பில் எழுப்பிய கோயில்தான் குகநாதேஸ்வரர் ஆலயம். குமரியம்மன் கோயில்

முகப்பு மண்டபத்திலுள்ள நான்கு தூண்களில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் சோழ மன்னர்களின் வரலாற்றைச் சிறப்பாகக் கூறி நிற்கின்றன.

இவ்வாறு சோழ நாட்டிற்கும் நாஞ்சில் நாட்டிற்கும் இருந்த தொடர்பினை அடிப்படையாக வைத்து நோக்கும்போது தஞ்சையிலே தேரழுந்தூரில் பிறந்த கம்பன் நாஞ்சில் நாட்டிற்கு வருகை தந்திருக்க வேண்டும் என்று கருத முடிகிறது. சோழ மன்னனோடு பகைமை கொண்ட கம்பர் பாண்டியநாடு வந்து சடகோபர் அந்தாதியையும், சேர நாடு வந்து சரஸ்வதி அந்தாதியையும் பாடினார் என்பது அவரது வரலாறு தரும் தகவல். கம்பர் காலத்தில் வேணாடு சேர நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. அதன் தலைநகர் திருவிதாங்கோடு. பின்னர் அது கல்குளத்திற்கு மாற்றப்பட்டது. கல்குளம்தான் இன்று பத்மநாபபுரம் என்ற பெயரில் வழங்கப்படுகிறது. கம்பர் பத்மநாபபுரம் தான் வந்திருக்க வேண்டும்.

குமரி மாவட்டத்தில் பாமர மக்கள் பேசும் தமிழை கம்பன் தமது நூலிலே பயன்படுத்துகின்றார் என்று கம்பன் கவிதைகளை புது நோக்கிலே ஆய்வுசெய்த அறிஞர் எஸ். நல்லபெருமாள் எடுத்துக்காட்டுகிறார். அவற்றுள் சில:

1. 'உனக்கென்ன இழவு' - இது நாஞ்சில் நாட்டுத் தமிழ். ஊனக்கென்ன இழவு என்று கம்பன் ஈலங்கையிலே அனுமன் வாயிலாகப் பேசுகின்றான்.

2. குமரி மாவட்டத்திலுள்ள கிராமப்புற மக்கள் 'மறந்து போயிற்று' என்பதை 'அயத்துப்போச்சு' என்பர். இதனை கம்பர் 'அயர்த்தியோ, அயர்விலந்தாய்' என்று கூறுகின்றார்.

3. "இது ஒரு பேச்சா?' என்பது நாஞ்சில் மக்கள் பேசும் தமிழ். 'பிள்ளை சிலர் உய்வர் என்றங்கோர் பேச்சும் உண்டோ?' என்பது கம்பர் வாக்கு. இதுபோன்று நாஞ்சில் நாட்டு மக்கள் பயன்படுத்துகின்ற பல பேச்சு வழக்குச் சொற்கள் கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ளதை நாம் காணலாம். கம்பன் நாஞ்சில் மக்களோடு நெருங்கிப் பழகியிருக்க வேண்டும். அதனால்தான் அங்கு பாமர மக்கள் பேசும் பல இனிய தமிழ்ச் சொற்களை தமது நூலிலே அவர் பயன்படுத்தியுள்ளார்.

மேலும் கம்பராமாயணப் பாடல்களை ஒருவர் இசையுடன் பாட மற்றொருவர் அவற்றிற்கு உரை சொல்லும் வழக்கம் பண்டுதொட்டு

நாஞ்சில் நாட்டிலும், வேணாட்டிலும் இருந்து வந்துள்ளது. இவ்வழக்கம் எப்போது தோன்றியது என்று கூறமுடியாத அளவுக்குப் பழமையானது. கழிந்த நூற்றாண்டு வரை இவ்வழக்கம் கிராமங்களில் மூத்தபிள்ளை (பண்ணையார்) வீடுகளில் நடைபெற்றது. ஊர் மக்கள் ஆங்கே கூடி கம்பராமாயணக் கதை கேட்டு இலக்கியச்சுவையினை ரசித்துச் செல்வர். பின்னர் அந்நிலைமாறி, கோயில்களின் முன்னே இராமாயண விரிவுரை நடைபெறத் தொடங்கியது. இன்று அந்நிகழ்ச்சி நடைபெறுவதில்லை.

கேரளஇலக்கிய வரலாற்றில் கம்பராமாயணத்தின் தாக்கத்தை நாம் காணலாம். கேரள நாட்டுக் கோயில்களில் நடைபெறும் தோல்பாவைக்கூத்து எனப்படும் நிகழ்ச்சியில் கம்பராமாயணப் பாடல்கள் அவ்வாறே பயன்படத்தப்படுகின்றன என்று கோவிந்தவிள்ளை அவர்கள் எழுதிய மலையாள பாஷா சரித்திரம், துஞ்சன்பிரபந்தங்கள் என்ற மலையாள நூல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. மலையாள நாட்டில் பாடகம் சொல்வது என்னும் ஒரு வழக்கம் உண்டு. அதாவது காவியம், இதிகாசம், புராணம் இவற்றின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு ஆடிப்பாடி அபிநயித்துக் காட்டுவதாகும். அவ்வாறு பாடகம் சொல்வதற்குக் கம்பராமாயணப் பாடல்களைப் பயன்படுத்தி வந்ததாக அறிஞர் செ. சதாசிவம் எழுதிய சேரநாடும் செந்தமிழும் என்ற நூல் குறிப்பிடுகிறது. கம்பன் சேர நாட்டிற்கு வந்து ஆங்குள்ள அறிஞர் பெருமக்களிடம் கம்பராமாயணப் பாடல்களை பாடிக் காட்டினார் என்ற தகவலைக் கேரள நாட்டு கவிஞரும், மலையாள அறிஞருமான உள்ளூர் பரமேஸ்வர அய்யர் தமது கேரள சாகித்திய சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். கம்பராமாயணத்தையும், எழுத்தச்சனின் ஆத்யாத்ம இராமாயணத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்த டாக்டர் பத்மநாபன்தம்பி கம்பனின் தாக்கத்தை எழுத்தச்சனிடம் காண்கிறார்.

பத்மநாபபுரம் கோட்டையின் உள்ளே அமைந்துள்ள இராமசாமி கோயிலின் உட்பிரகாரத்தைச் சுற்றி வெளிப்பக்கம் இராமாயணக் கதை முழுவதும் 145 மரப்பலகைகளில் அழகுறச் செதுக்கப்பட்டள்ளன. அந்தக் கதைப்போக்கில் கம்பனின் தாக்கத்தை நாம் காணமுடிகிறது. இராவணன் சீதாதேவியின் கூந்தலைப் பிடித்து தொடையிலே கையிட்டுத் தூக்கிச்சென்றான் என்ற வால்மீகியின் கூற்று இங்கே சித்திரிக்கப்படவில்லை.இராவணன் சீதா தேவியாரை தொடாமல் அவர் தங்கிய பர்ணசாலையோடு தூக்கிச் சென்றார் என்ற கம்பனின் பாணிதான் இங்கே சித்திரிக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமல்ல

கம்பராமாயண ஓலைச்சுவடிகள் பல குமரி மாவட்டப்பகுதியிலேதான் கிடைத்தன என்ற செய்தியும் இங்கே சிந்திக்கத்தக்கது. இவ்வாறு தஞ்சையிலே பிறந்த கம்பன் தென்குமரி வந்தான். நாஞ்சில் வாழ்மக்களோடு இருந்தான். நாட்டரசன் கோட்டை சென்று மறைந்தான் என்பவை கம்பனின் வரலாற்றுத் தகவல்கள். சேர நாட்டையும் சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் கம்பனின் வரலாறு இணைக்கின்ற நிலையை நாம் கணமுடிகிறது.

கம்பன் தென்குமரி வந்தபோது, தான் வணங்கிய கலைமகளின் திருவுருவச் சிலையை தன்னோடு கொண்டு வந்திருக்க வேண்டும். அந்தத் திருவுருவச் சிலைதான் பத்மநாபபுரம் கோட்டையின் உள்ளே காணப்படுகிறது. அதைத்தான் மலையாள நாட்டு மக்கள் நவராத்திரி விழாவின்போது எடுத்துச் சென்று இன்றும் விழா கொண்டாடுகின்றனர். இவ்வாறு கேரள மாநிலத்தில் கொண்டாடப்படும் நவராத்திரி விழா ஒரு தேசீய ஒருமைப்பாட்டு விழாவாகத் திகழ்கின்றது. இவ்விழா கம்பனையும் நமக்கு நினைவூட்டுகின்றது.

கம்பனின் வழிபாட்டு மரபுகளும் சடங்கியல் முறைகளும்

முனைவர் பி.கணேசன்
முனைவர் பட்ட ஆய்வு மேலாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

முன்னுரை

இருபெரும் இதிகாசங்கள் என்னும் பெருமைக்குரியவை கம்பராமாயணமும், மகாபாரதமும் ஆகும். மாண்புமிக்க மனிதர்கள் குறித்த பதிவாக கம்பராமாயணம் அமைகிறது. இதில் வழிபாட்டு மரபுகள், சடங்கியல் முறைகள், பண்பாட்டுப் பதிவுகள், கலாச்சாரக் கூறுகள் எனப் பல்வேறு தளங்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மானிடவியல் அடிப்படையிலான தொல்பழங்காலச் சடங்குகளையும், சங்க இலக்கியத் தரவுகளின் அடிப்படையிலான சங்ககாலச் சடங்குகளையும் ஒப்புநோக்கும்போது கம்பராமாயணச் சடங்கியல் முறைகள் காலத்தால் பிந்தியவைகளாகவும், மாற்றம் பெற்றும் திகழ்கின்றன. இக்காப்பியத்தில் சுட்டப்பெறும் வழிபாட்டு முறைமைகளையும் சடங்கியல் முறைகளையும் வெளிக்கொணர்வதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

வைதீக நெறி

கம்பராமாயணம் வடமொழியில் இயற்றப்பட்ட வால்மீகி இராமாயணத்தின் தழுவல் காப்பியம் ஆதலால் ஆரியப் பண்பாட்டில் பின்பற்றப்பட்ட வைதீகநெறி இக்காப்பியத்தில் பின்பற்றப்பட்டுள்ளமையை அறியலாம். தமிழ்ப்பண்பாட்டில் உள்ளதுபோன்ற சிறுதெய்வ வழிபாட்டுமரபினை இக்காப்பியத்தில் காணமுடியவில்லை. இதற்கான காரணங்களுள் முதன்மையானதாக அன்றைய ஆட்சிச் சூழலைக் கூறவியலும்.

இலக்கியம் படைக்கும்போது கடவுள் வாழ்த்து புனையப்படுவது என்பது பிற்காலத்து எழுந்த மரபாகும். சங்க காலத்தில் இத்தகைய மரபு அனைத்து இலக்கியங்களுக்கும் பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சங்க இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் தவிர்த்த ஏனைய இலக்கியங்களில் கடவுள் வாழ்த்தைக் காண இயலாது. இவை தவிர்த்த ஏனைய சங்க இலக்கியங்களில் காணப்படும் கடவுள் வாழ்த்து என்பது இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்டனவே ஆகும்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே" (கடவுள் வாழ்த்து.1)

என்ற பாடலில் கம்பர் தனது கடவுட்கொள்கையை நிலைநிறுத்துகின்றார். வழிபடும் கடவுள் எதுவாயினும் அது கொண்டு சேர்க்கக் கூடிய பரம்பொருள் ஒன்றே என்ற சிந்தனை மட்டுமே சமயப் பூசல்களை ஒழிக்க வகைசெய்யும். இத்தகைய சிந்தனையை நன்கு உள்வாங்கிக் கொண்டு அதனை தம் காப்பியத்தில் பதிவு செய்கிறார் கம்பர். இதனைக் கம்பராமாயணக் கடவுள் வாழ்த்துப் பகுதியிலேயே உணர்த்திவிடுகிறார்.

காலச்சூழல்

தமிழகத்தில் களப்பிரர்களின் ஆட்சிக்காலம் இருண்ட காலம் என்று வழங்கப்பெறுகின்றது. இவர்களின் ஆட்சிக்காலத்தில் பக்திநெறிகுன்றி அறம் பிறழ்ந்து காணப்பட்டதே இதற்குக் காரணம் ஆகும். இத்தகு காலச் சூழலில்தான் தமிழகத்தில் பக்தி இயக்கம் தோன்றியது. கம்பராமாயணம் இராமபிரானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு பக்திச் சுவைனிகுந்து படைக்கப்பட்ட காவியம் என்பது அனைவரும் அறிந்ததே ஆகும். மக்களிடம் கடவுட் கொள்கை குறைந்து அறநெறிபிறழ்ந்ததே இக்காவியத் தோற்றத்திற்கான காரணம் ஆகும். எனவே இக்காவியத்திற்குத் தோற்றப் பின்புலமாக காலச் சூழலும் இங்கு முதன்மைக் காரணங்களுள் ஒன்றாக அமைகின்றது.

கடவுட்கொள்கை என்பது பக்தி இயக்கக் காலகட்டத்தில் மறுபிறவி எடுத்தாலும் மக்களிடம் கடவுட்கொள்கையில் ஒருசில கருத்து முரண்பாடுகள் இருந்துவந்தன. அது சைவம், வைணவம் என்ற இரு இந்துமதப் பிரிவினைகளாகத் தலையெடுத்தது. இத்தகைய காலச் சூழலிலும் கடவுட் கொள்கைப் பிரிவினையைத் தடுத்தாட்கொள்ள வேண்டிய சூழல் இருந்தது. இத்தகைய காரணங்களுக்காகவும் கம்பராமாயணம் தோன்றியது எனக்கொள்ள வாய்ப்புண்டு.

கடவுட் கொள்கை

கடவுள்கள் வெவ்வேறாயினும் அவை உணர்த்தக்கூடிய அறங்கள் என்பது ஒன்றாக இருக்க வேண்டும். இன்றைய தமிழகச் சமூகச் சூழல் பல்வேறு சமயங்களுக்கு இடமளிக்கக்கூடியதாக இருந்தாலும் அவை போதிக்கும் அறங்கள் என்பது ஒன்றாக இருப்பது இத்தகைய நெகிழ்வுத் தன்மைக்குக் காரணம் ஆகும்.

கடவுள் போன்ற கதாப்பாத்திரத்தைக் காவியத் தலைவனாகக் கொண்டு கம்பராமாயணம் படைக்கப்பட்டுள்ளது. எனினும் இராமனைக் கம்பர் கடவுளாகக் கொள்ளவில்லை. இதனைக் கம்பரின் கடவுள் வாழ்த்துப்பாடல் கொண்டு விளங்கிக்கொள்ளலாம். எனினும் இராமன் மீது அளவுகடந்த அன்பு மிகுதியால் இராமனைக் கடவுளாக வருணனை செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடவுள் வாழ்த்துப்பகுதியில் வெவ்வேறு கடவுள்களை வாழ்த்தும் முறையினின்று இராமனைக் கம்பன் கடவுளாகக் காணவில்லை என்று கூறவியலும்.

இந்து மதம் என்னும் ஒரு பிரிவில் பல்வேறு கடவுள் வழிபாட்டு முறை தமிழ்ச்சூழலில் உண்டு. இதில் வைதீக நெறியில் சைவம், வைணவம் என்ற மாபெரும் பிரிவினை உண்டு. சைவர்கள் சிவனைக் கடவுளாகக் கொள்வதும், வைணவர்கள் திருமாலைக் கடவுளாகக் கொள்வதும் இந்துமதப் பிரிவில் உண்டு. இத்தகைய வேறுபாடுகளைக் களைந்தவர் கம்பர். கடவுள் வாழ்த்து என்பது இலக்கிய உத்திமுறைகளில் ஒன்றாகும். இக் கடவுள் வாழ்த்துப் பகுதியின் வழியாக படைப்பாளியின் கடவுள் கொள்கையை அறியலாம். ஆசிரியன் தான் வணங்கும் தெய்வத்தினை வாழ்த்தி வணங்கி செய்யுள் பாடும் முறை சங்க காலத்திலிருந்தே தொடங்கிவிட்டது. இம்முறையை அடியொற்றி கம்பர் கடவுள் வாழ்த்தைத் தொடங்குகின்றார்.

"சிவனோ அல்லன் நான்முகன் அல்லன் திருமால்
அவனோ அல்லன் மெய்வாம் எல்லம் அருள்கின்றவன்
தவனோ எண்ணின் செய்து முடிக்கும் தரன் அல்லன்
இவனோதான் அவ்வேதமுதற் காரணன் என்றான்" (பா.124)

என்ற பாடலில் சிவன், திருமால் ஆகிய இரு கடவுள்களையும் சமயப் பூசலின்றிக் குறிப்பிடுகின்றார் கம்பர். மேலும்,

"செங்கண்மால் நான்முகன் சிவன் என்றே கெலாம்
எங்கள் நாயகனையும் நினைத்தது - ஏழை நீ" (பா. 126)

என்ற பாடலிலும் சமய ஒற்றுமையை நிலைநாட்டுகின்றார் கம்பர்.

முடிவுரை

கம்பராமாயணம் மனிதனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட காவியம் ஆகும். எனினும் காவியத் தலைவன் இராமன் தெய்வமாகப் போற்றப்படுகிறான். இக்காவியம் பக்திச்சுவையுடன்

திகழ்வதால் இதில் வழிபாட்டு முறைகளும் சடங்குமுறைகளும் கலந்த வாழ்வியலோடு எழுதப்பட்ட காவியம் ஆகும். கம்பர் சமயப் பூசலை விலக்கி சமய ஒற்றுமையினை நிலைநாட்டினார் என்ற கருத்தினை கடவுள் வாழ்த்துப்பாடலே நமக்கு விளக்கும். மேலும் சிவன், திருமால் ஆகிய கடவுள்களை இக்காவியத்தில் பாடியிருப்பதால் சமயப் பொதுநெறியுடன் திகழ்ந்தவர் கம்பர் என்பது தெளிவாகிறது.

கம்பனில் சுட்டப்பெறும் சடங்குகள்

முனைவர் ச.ஆ.காயத்ரி
துணைப்பேராசிரியர், இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி,
கோவை.

முன்னுரை

பழந்தமிழரால் போற்றப்பட்டு பெருமளவு வழக்கிலிருந்தது களவு மணம் தமிழர் பண்பாட்டிற்கு சிறப்பளித்து அதைப் போற்றி பின்பற்றும் வகையில் கம்பநாடர் தமது காவியத்தை எழுதியுள்ளார். ஒவ்வொரு கருத்தையும் தமிழ் மரபையொட்டி சொல்லியுள்ளார்.

இராமனின் காதல்

இராமாயணத்தில் ஒரு சிறப்பான நிகழ்ச்சி காவியத் தலைவர் தலைவியது திருமணம். இத்திருமண நிகழ்வினையும் பழந்தமிழரின் பாங்கினை ஒட்டி அமைத்து இருப்பார் கம்பர். காவிய நாயகி சீதை மிதிலை நகரின் இளவரசி. அந்த மிதிலையில் இருந்த சிவதனுசை யார் வளைக்கின்றாரோ அவ்வீரனே இவளை மணமுடிக்கத் தகுதியானவன் என்கிறார் சனகமகாராசன். சீதை இப்படி இருப்பினும் தமிழ் மணத்தைப் புகுத்த விழைந்த கம்பர் இராமன் தம்பியரோடும், முனிவரோடும் மிதிலை நகருக்கு வருகையில் காவியத் தலைவியைக் காண்பதாகவும் இருவர் உள்ளமும் ஒன்றிக் காதல்வயப்பட்டதாகவும் கூறுகிறார்.

"எண்ணரு நலத்தினான் இனையநின்றுழி
கண்ணொடு கண்ணினை கவ்வி யொன்றையொன்று
உண்ணவு நிலை பெறா துணர்வும் ஒன்றிட
அண்ணலு நோக்கினா னவளு நோக்கினாள்" (கம்ப-10.35)

"பருகிய நோக்கு என்ம மறுத்தால் பினிந்த
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்" (கம்ப-10-37)

இராமன் விசுவாமித்திரனோடு கண் கண்ணுற்று மறைந்து சென்று விடுகிறான். பின்னர் சீதை கன்னிமாடத்து பூம்பள்ளியில் தான் கண்ணுற்று விரும்பிய இராமனை நினைத்து காதலால் வருந்துகிறாள் சீதையைக் கண்டு காதல் கொண்ட இராமனும் காதலால் இரவில்

உறங்காது வருந்ரினான் என்று கம்பர் கூறுகிறார். பெண் கேட்கும் வழக்கத்தை மகன் மொழிதல் என்பது பண்டைய வழக்கம் மகள் பேசி வரும்பொழுது மணமகனின் குலப்பெருமையைக் கூறுவது வழக்கமாக கருதப்பட்டது. அதனால் தான் ஆதித்தன் குல முதல்வன் என்று தொடங்கி இருப்பார் கம்பர்.

திருமண எழுச்சி

மணமகன் வீட்டார் சுற்றத்தாரும் பிறரும் சூழ மங்கல ஓசை முழங்க மணமகன் இல்லம் நோக்கி ஊர்வலமாகச் செல்வது மரபு. இந்த நிகழ்ச்சியை திருமண எழுச்சி என்று கூறப்படுகிறது. இராமனின் தந்தை அயோத்தி அரசன் தசரதன் மகிழ்ச்சியுடன் தன் பரிவாரங்கள் சூழ மிதிலைக்கு புறப்பட்டதாக கம்பர் பல பாடல்களில் அழகாக வர்ணிக்கிறார்.

மணக்கோலம்

மணமகள் சீதையை அவளுடைய தோழியர் பலவகை அலங்காரங்களைச் செய்தனர். கம்பர் இதை வருணிக்க கோலண்காண்படலம் என்றே தனியே ஒருபடலம் அமைத்துள்ளார். அமிழ்தினைச் சுவை செய்து அதன் அழகினுக்கு அழகு செய்தார்.

சீதையின் கழுத்துக்குப் பொருத்தமான ஆபரணங்களை அணிவித்தனர். மான்விழி மகள் சீதையே மங்கலமாக இருக்கிறாள் இவளுக்கு எதற்கு ஆபரணம் என்பதை கம்பர்

"மாலணி நோக்கினார் மங்களக் கழுத்துக் கெல்லாம்
தூணணி யான போது தனக்கணி யாது மாதோ" (கம்ப-20-7)

திருமண வினை

சனகன் திருமணத்திற்கு வந்தவர்களையெல்லாம் உயர்வு தாழ்வு இன்றி மணமகனான இராமனை உபசரிப்பது போல் உபசரித்தான் என்று கம்பர் கூறுகிறார். மணமுரசு ஒலிக்கப் பெற்றவுடன் முதியவரும், இளையவரும் மகளிரும் கூடி நகரை அழகு செய்யத் தொடங்கினர். மேலும் ததும்ப கோலங்கள் வரைந்தனர். தூண்களுக்குச் சித்திரச் சேலைகளால் உரையிட்டனர். பூர்ண கும்பங்களுக்குப் பட்டாடை சுற்றி அழகுபடுத்தினர்.

மலர்களையும் வாசனைத் திரவிங்களையும் தெருவில் தெளித்தனர். இளம் பாலிகை வகைகளை உயர்திண்ணைகளில் காணச் செல்வதற்குத் தங்களை அலங்காரம் செய்து கொண்டனர்.

அந்த திருமண நாளில் மிதிலை நகரம் இருந்த அழகு இந்திரன் பட்டாபிஷேகம் செய்து கொள்ளும் நாளில் சுவர்க்கலோகத்தில் உள்ளதைப் போலிருந்தது.

"இந்திரன் முடிசூடும்
மண்ணறு திருநாளே ஒத்தது அமண நாளே" (கம்ப-21-38)

திருமணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் நடைபெறு வதின் தொடக்கமாக இராமனை முதலில் முறைப்படி மங்கல நீராட்டினார்கள். மங்கல மஞ்சனம் மரபின் ஆடினான். மேனியில் சந்தனக் கலவையை பூசி, வெண்பட்டாடையை உடுத்தி, அணிகலன் களைப் பூட்டி அழகு செய்தார்கள்.

"இராமன் தன்னைஅனையதோர் கோலம் தாங்கினான்"

இராமன் மேரு மலையை அடையும் செங்கதிரோன் போல் மண்டபம் அடைந்தான். முதலில் பாற்கடலிலும், பின்னர் பூனியிலும் தோன்றிய சீதை இப்பொழுதும் மலையிலும் தோன்றுவது போல மண்டபத்திலும் தோன்றினாள். திருமணம் காண,

"இந்திரன் சசியோடும் எய்தினானிளஞ்
சந்திர மௌலியுந் தையலாளுடன்
வந்தான் மலரயன் வாக்கினாளுடன்
அந்தரம் புகுந்தனன் அழகு காணவே" (கம்ப-21-83)

திருமணச் சடங்குகளை வேதமுறைப்படி வசிட்டர் நடத்தி வைத்தார்.

"வாய்ந் தரல் வேள்விக்கு வசிட்டன் மையற
ஏய்ந்தன கலப்பையோ டினிதி னெய்தினான்" (கம்ப-21-84)

வசிட்ட முனிவன் மணலைப் பரப்பி தருப்பைகளை உரிய இடத்தில் வைத்து அக்கினியை வைத்தற்குரிய வட்டமான இடத்தை வேதவிதியின் ஒழுகின்படி அமைத்து மென்மையான மலர்களைச் சுற்றிலும் தூவி ஓமாக்கினி திருமணச் சடங்கைத் தொடங்கினார்.

"தண்டுவலம் விரித்தனன் தருப்பை சாத்தினன்
மண்டுலம் விதிமுறை வகுத்த மென்மலர்
கொண்டவை சொரிந்தெரி குழம மூட்டினான்
பண்டுள மறைநெறிபரவிச் செய்தான்" (கம்ப-21-85)

தாரை வார்த்தல்

"கோமகன் முன்சன கன்குளிர் மென நன்னீர்
பூமகளும் பொருளும் மென நீயென்
மாமகன் தன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கை யினீந்தான்" (கம்ப 21-87)

சனகன் சீதையை இராமனுக்கு கன்னிகா தானஞ் செய்த பொழுது அந்தணர் ஆசி கூறினார்கள். மகளிர் பல்லாண்டு பாடினர். மன்னர்கள், பண்டிதர் வாழ்த்தினார். விண்ணவரும், மண்ணவரும் தூவிய மலர்களும் முத்துக்களும் நிறைந்து பூமியானது நட்சத்திரங்களால் விளங்குகின்ற வானம்போல் அந்த மணமேடையே பூக்களாலும் முத்துக்களாலும் நிறைந்து இருந்தது. இதைப்போல் தாரை வார்த்தல் இன்றும் சில சமூகத்திடம் கணப்படுகிறது.

கரம் பற்றல்

'சீதை தளிர் போன்ற கையைத் தன் திருக்கையாற் பிடித்தான் இராமன் என்று கம்பர் கூறுகிறார்.

"வெய்ய கனற்றலை வீரனு மந்தான்
மையறு மந்திர முற்றம் வழங்கா
நெய்மை யாவுதி யாவையு நேர்ந்தான்
தையல் தளிர்க்கை தடக்கை படித்தான்" (கம்ப-21-90)

தீயைவலம் வருதல்

ஓமம் முதலிய வைதீகச் செயல்களைச் செய்யத் தொடங்கிய இராமனுடன் சீதை வெவ்விய அக்கினியை வலம் வந்தாள்.

"இடம்படு தோளவனோடியை வேள்வி
தொடங்கிய வெங்கணல் சூழ்வடு போதில்" (கம்ப-21-91)

காப்பு நாணைப் பூண்ட இராமனும் சீதையும் தீயை வலம் வந்து வணங்கினர். பிறகு சீதை அம்மியை மிதித்து எதிரிலே நின்ற கலங்கு தலில்லாத கற்பு நிலையையுடைய அருந்ததி நட்சத்திரத்தை பார்த்தாள் என்று கம்பர் கூறுகிறார்.

"வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
பொலம்புரி நூலவர் செய்பொருண் முற்றி
இலங்கொளி யம்மி மிதித்து எதிர்நின்ற
கலங்கலில் கற்பின் அருந்ததி கண்டாள்" (கம்ப-21-92)

மணமக்கள் அம்மி மிதித்து பார்த்தார்கள் பொதுவாக மணமக்கள் அருந்ததியை ஆகாயத்தில் பார்ப்பார்கள் ஆனால் இங்கு திருமணத்திற்கு அருந்ததி நேரில் வந்ததாகவும் அவளை நேரில் பார்த்ததாகவும் கம்பர் கூறுகிறார். திருமணம் முடிந்த உடன் சீதையோடு இராமன் தன் அழகிய மாளிகைக்குச் சென்று இராமன் தன் தாயார் மூவரையும் வணங்குகின்றான்.

முடிவுரை

கம்பர் தனது காப்பியத்தில் சீதையை மணமுடிக்கும் முன்னரும், மணமுடித்த பின்னரும் பின்பற்றிய தாரை வார்த்தல், மணமேடை அமைத்தல் தீயை வலம் வருதல், அம்னிநித்து அருந்ததி பார்த்தல் முதலிய சடங்குகளைப் பின்பற்றியதாக கம்பர் தன் காப்பியத்தில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

கம்பன் - சமரசநோக்கு

திருமிகு. வா.நாகராஜன்
உதவிப்பேராசிரியர், இராணிமேரிக் கல்லூரி,
சென்னை.

முன்னுரை

கம்பன் காவியமான கம்பராமயணம் கவின்மிகு அழகோடு தீட்டப்பெற்ற ஒரு ஓவியம் எனலாம். பாடலின் ஒவ்வொரு சொற்களையும் நாம் படிக்கும்பொழுதே நிகழ்வுகள் நிழற்படம்போல் நமக்கு காட்சியளிக்கும் வகையில் அமைத்துள்ளார். "கல்வி-யிற் பெரியவர் கம்பன்" என்ற முதுமொழிக்கேற்ப இவர் கல்லாத கலையோ, வேதங்களோ இல்லை எனலாம். கவிஞர்கள் காணாத பல காட்சிகளை யாரும் நினைத்துப் பார்த்துக் கூறாத சில பல கருத்துக்களின் அடிப்படையில் அமைத்த இக்காப்பியமே இவர் ஒப்புயர்வற்ற கவிச்சக்கரவர்த்தியாகத் திகழக்காரணமாகிறது. காப்பிய உத்திகள் காப்பியக்கட்டுக்கோப்பு பாத்திரப்படைப்புகள் போன்ற எல்லாவற்றிலும் தனக்கென ஒரு தனி வழி அமைத்துக்கொண்டுபிற காப்பியங்களுடன் ஒப்புவமைக் கூற முடியாவண்ணம் தனிச்சிறப்புற்றுத் திகழ்கிறது. இக்காப்பியத்தை, பல்வேறு தலைப்புகளின் கீழ் ஆராய்ச்சி செய்ய முடியுமென்றால் இக்காப்பியத்தின் திறனை மலைப்புடன் நோக்கத்தோன்றுகிறது.

சமய ஒருமைப்பாடு அரசியல் தத்துவம் உவமைகள் கவிச்சுவை, கற்புடமை சமரசநோக்கம் கல்வி சிறப்பு பாத்திர படைப்பு,போன்ற பல்வேறு கருத்துக்களை உள்ள இந்த இராமகாதை மூலம் நாம் கம்பரின் உயர்ந்த மனப்பான்மையையும் தூய எண்ணங்களையும் கவிதைகளின் உயிர் நாடியான சொற்களின் அமைப்பைக்கொண்டு உணரலாம்.கம்பரின் இராம காதையாகிய பெருங் கடலில் அமிழ்ந்துள்ள பொற்குவியலிலிருந்து சில முத்துச் சிதறல்களைக் காணலாம்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையுடையவர் கம்பர். பக்திமார்க்கத்துடன் ஞானமார்கத்தையும் இணைத்து அமைக்கிறார். உபநிடதங்கள் கூறும் பிரும்மம் மூலப்பரம்பொருளாகும். விசிட்டாத்வைத்தையும் சற்காரிய வாதத்தையும், உள்ளது போகாது இல்லது வாராது இறைவன் உயிர்கள் உலகம் இவைகளின் உண்மைநெறியுணர்ந்து அதனை அடிப்படையாகக் கொண்டு தம் கடவுள் கொள்கையை விளக்குகிறார்.

"உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அல(கு) இலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்ற கடவுள் வாழ்த்து எல்லா சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் பொதுவானதுமான பாடலாக அமைந்துள்ளது. நாம ரூபமற்ற பரம்பொருளையே கடவுளாகப் பேசுகிறார். எல்லா உலகமும் உண்டாகுமாறு படைத்தல் காத்தல்அழித்தல்ஆகிய முத்தொழில் செய்பவரே கடவுள் என்று கூறுகிறார். இறைவனை அடையக் கூடிய வழியாகக் கூறப்படுகின்ற நிலையாகிய நவவித பக்தி நிலைகளில் இறுதியாக வரும் "ஆத்மநிவேதனம்" எனப்படும் சரணாகதி தத்துவத்தை நன்கு உணர்ந்தவராதலால் இக்காவியத்தின் தொடக்கத்திலேயே "சரண் நாங்களே" என்று படைத்தார். தான் மட்டும் அப்பரம்பொருளிடம் சரண் புகாமல் மனித குலமே அம் மூலப்பொருளிடம் சரண் அடையவைத்தார். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கருத்தை நிலை நிறுத்துகிறார்.

பரம்பொருள் எங்கோ நம் அறிவுக்கு எட்டாத ஒரு இடத்தில் இல்லை எங்கும் நிறை ஞானமாய் திகழ்கின்றான் என்பதை

"மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனும்.உயிரும்.உணர்வும்போல்,
உள்ளும் புறத்தும் உளன் என்ப"

(அயோத்தியா காண்டம்-கடவுள் வாழ்த்து)

என்று கூறுவதன் மூலம் உடம்பும் அதில் உயிரும் ,உணர்வும் பிரியாது கலந்திருப்பதுபோல உலகமெங்கும் உள்ளும் புறமும் நிறைந்துள்ள பரம்பொருள் இராமன் என்று கூறுவார். உலகத்தில் பொருள்களை அறிபவர், அறியப்படும் பொருள் ஆகியவற்றிற்கு அறிவாகி அவற்றோடு இணைந்து நிற்கின்றாய். உன் கருணையின் பெருமையால் உலகை வயிற்றில் அடக்கிய பின் வெளியிடுகின்றாய் நீ ஆணோ? பெண்ணோ? அதற்கு மேற்பட்ட பொருளோ நின் தன்மையை யாரால் அறிய முடியும் என்ற கவந்தன் தன் பழைய வடிவம் அடைந்த பின் துதித்துப் பாடுகிறார்.

"காண்பார்க்கும் காணப் படுபொருட்டும் கண்ணாகிப்
பூண்பாய் போல் நிற்றியால் யாதொன்றும் பூணாதாய்
மாண்பால் உலகை வயிற்றொளித்து வாங்குதியால்

ஆண்பாலோ? பெண்பாலோ? அப்பாலோ?எப்பாலோ?"

பாடல்-387 (ஆரண்ய காண்டம்-கவந்தன் படலம்)

சமரச நோக்கம்

இறை அறிதலுடன் அன்பு கருணை தியாகம் போன்ற நற்பண்புகளையும் பெற்றிருந்தால் நம் சமுதாயம் அமைதியும் சமாதானமும் நிலைக்கப் பெற்று திகழும் என்ற கருத்தை மனித உருவில் மானிடனாய் பண்பாட்டுடன் வாழ்ந்து வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

"அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை."

"இன் சொல்லால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன் சொல்லால்
தான்கண் டன்ன துடைத்து"

போன்ற வள்ளுவர் கருத்தை கம்பர்,

"இனிய சொல்லினன் ஈகையன், எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையும் நீதிநெறிகட வான் எனில்
அனைய மன்னற்(கு) அழிவுமுண் டாம்கொலோ?"

(அயோத்தியா காண்டம் பாடல்-138)

இன்சொல் ஈகை நற்சிந்தனை எண்ணித்துணிதல் தூய்மை நற்பண்புகள் வெற்றி நீதி நேர்மை நெறிதவறாமை ஆகிய குணங்களை உடையவனுக்கு எப்போதும் அழிவில்லை என்ற ஒரே பாடலால் இச் சமுதாயம் சிறக்க மக்கள் பின்பற்ற வேண்டிய குணங்களாகக் கூறுகிறார். அன்பு எனும் பண்பு இறைவனிடம் மட்டுமன்றி எல்லா உயிர்களிடத்தும் வேண்டும் என்று எல்லா சமய நூல்களும் கூறுகின்றன. அன்பின்பெருமையை "அன்பிலார் சிந்தை அறம் அறியாரே" -திருமந்திரம்-627 விளக்குகிறது.

அன்பு எல்லாரிடத்தும் இருந்தால் அவர்கள் குறைகள் பெரியதாக தெரியாது. எல்லாரிடத்தும் அன்புடன் வாழ வேண்டுமென்றால் எதையும் தியாகம் செய்யும்படியான பரந்த மனப்பான்மை வேண்டும் எல்லோரிடமும் நல்லிணக்கத்துடன் வாழவேண்டும்.இவை எல்லா குணங் களும் பொருந்தியவனாக இராமரை படைக்கிறார்.வால்மீகி இராமபிரானின் குணங்களைக்கூறும்காலத்தில் சர்வலோகப்பிரியன்" என்று குறிப்பிடுகிறார்.

நாவாய் வேடுவன் குகன் வானர அரசன் சுக்கிரீவன், அரக்கர் கோன் தம்பி விபீடணன் போன்ற பாத்திரங்களைப் படைத்து சகோதரத்துவத்தை ஒளிரச்செய்து சகோதரத்துவத்தால் சாதிமதப் பூசல்கள் களையப்பட்டு உலகம் முழுவதும் ஒன்றே குலம் என்ற உயரிய கோட்பாட்டை வலியுறுத்தும் பாடலாக கீழ்க்கண்ட பாடல் அமைகிறது.

"குகனொடும் ஐவர் ஆனேம்: முன்பு: பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்: எம்உழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்
புகல் அரும் கானம்தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை"

முடிவுரை

கம்பர் தம்காவியத்தை பக்தி காவியமாக மட்டுமன்றி நன்மை தீமை இரண்டும் நிறந்த இவ்வுலகில் நன்மையை மேன்மேலும் வளர்க்கவும் தீமைகளைக் களையவும் சமுதாயம் மேன்மையுற அன்பு அருள் அறிவு போன்ற நற்குணங்களுடன் இறைவனை சரணடைய நம் வாழ்வும் நாடும் அமைதி பெற்று திகழக் காட்டும் நெறிகள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாய் உள்ளன.

கம்பன் காட்டும் சமூகச் சடங்குகள்

முனைவர் கா.ஸ்ரீதர்
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், வி.இ.நா.செ.கல்லூரி,
விருதுநகர்.

நம் பாரத நாட்டில் இந்துமதத்தைத் தழுவி நிற்பவர்களின் போற்றுதலுக்குரிய காப்பியமாக, இராமாயணமே உள்ளது. தமிழ்க் கவிகளின் பட்டியலில் எத்தனை பேர் இருந்தாலும் அவர்களுள் தன் தனித்திறனால் மேலோங்கி நின்று இன்றுவரை கவிச்சக்கரவர்த்தியாகத் திகழ்பவர் கம்பரே ஆவார். அவரது படைப்புகளுள் வால்மீகி இராமாயணத்தைத் தழுவிய இராமகாதையே முதன்மையானதாகும். இது தமிழர்களின் பண்பாட்டையும் அடையாளங்களையும் காத்துவரும் காலப் பெட்டகம் ஆகும். இப்பெட்டகத்தினுள் வீற்றிருக்கும் சில சடங்குமுறைகளை மட்டும் இக்கட்டுரையில் காண்போம்.

சடங்குகள்

சமயம், இனம், குழு போன்றவை தங்களின் அடையாளங்களாய் சடங்குமுறைகளையே கொண்டுள்ளன. சடங்குமுறைகளால்தான் சமயங்களும் இனங்களும் குழுக்களும் வேறுபடுகின்றன. இச்சமயங்களும் இனங்களும் அழிந்துபோகாமல் தம்மைத்தாமே தற்காத்துக் கொள்ளவும் இடையீடுகளையும் இடையூறுகளையும் எதிர்கொள்ள இச்சடங்குகளைப் போற்ற வேண்டியது இன்றியமையாததாகிறது. அந்த வகையில் தமிழர்களின் இந்துக்களின் சடங்குமுறைகளை இராமகாதை எங்ஙனம் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பதைப் புலப்படுத்துவதாய் இக்கட்டுரை அமைகிறது.

கம்பன் காட்டும் சமூகச் சடங்குகள்

கம்பன், வால்மீகியைப் பின்பற்றிக் காப்பியம் படைத்திருந்தாலும் தமிழர்களின் பண்பாட்டையும் சமூகச் சடங்குகளையும் பதிவுசெய்ததில் முன்னிலை வகிக்கிறான். கம்பராமாயணத்தில் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பல சடங்கு முறைகளைக் காண முடிகிறது. அவற்றுள் கதையின் நாயகனான இராமனை மையனிட்ட சடங்கு முறைகள் இந்துத்துவம் சார்ந்ததாகவும் அரச குடும்பத்து மரபு சார்ந்ததாகவும் அமையப் பெற்றுள்ளன. இராமனின் பிறப்பு, திருமணம், சடாயுவிற்குச் செய்த இறுதிச்சடங்கு, மணிமுடிசூட்டலின் போது மேற்கொள்ளப்பட்ட சடங்கு முறைகள் குறிப்பிடத்தக்கதாகும்.

பிறப்புச் சடங்குகள்

தசரதனின் மூன்று தேவியர்களுக்கும் மக்கட்பேறு இல்லை. இதனால், தனது காலத்திற்குப் பின் பரந்துபட்ட இந்த பூனியைக் காக்கவல்ல வகையில் ஒரு வாரிசு இல்லையே என்றுமிகுந்த மன வருத்தம் கொண்டிருந்தான். இருசியசிருங்கனின் ஆலோசனைப்படி அசுவமேத யாகமும் புத்திர காமேட்டியாகமும் செய்ய வேண்டி தூய்மையும் புனிதமும் வாய்க்கப்பெற்ற சரயு நதியில் நீராடிவிட்டு வேதங்கள் நெறிப்படக் கூறும் குற்றமில்லாது திருத்தமுற அமைக்கப்பெற்றிருந்த யாக சாலையினுள் புகுந்தான் என்பதை,

"தூயநற் புனல்படீஇச் சுருதி நூன்முறை
சாய்வறத் திருத்திய சாலை புக்கனன்" (திரு அவதாரப் படலம் 83)

என்ற கம்பனின் வரிகள் மூலம் அறியலாம். புத்திர பாக்கியத்திற்கு உரிய சடங்கு குறுகிய காலம் இன்றி ஓராண்டு காலத்திற்கு நீடிக்கின்றது. யாக குண்டத்தில் அம்முனிவன் மகப்பேற்றிற்கு உரிய பலிபொருட்களை இட்டு வேதம் ஓதியதன் பயனாய் ஓமத்தீயில் இருந்து வெளிப்பட்ட பூதம் பிண்டக் கலயத்தைத் தரையில் வைத்துவிட்டு மீண்டும் அதனுள்ளே புகுந்தது என்பதை,

"தூயநற் சுதை நிகர் பிண்ட மொன்றுசூழ்
தீயெரிப் பங்கியுஞ் சிவந்த கண்ணுமாய்
ஏயெனப் பூதமொன் றெழுந்த தேந்தியே" (திரு அவதாரப் படலம் 86)

என்ற பாடல் அடிகளால் அறியலாம். கம்பனின் இக்கூற்றுவழி உடல் தூய்மையும் வாழ்விடத்தின் புறத் தூய்மையுமே இல்லறத்தையும் மன ஆரோக்கியத்தையும் வலுப்படுத்தும் என்பதை அறியலாம். பக்தி சார்ந்தோ அல்லது நம்பிக்கை சார்ந்தோ மேற்கொள்ளக் கூடிய செயல்கள் தொடர்வது நல்லதொரு நலம் பயக்கும் என்பதை உணரமுடிகிறது.

திருமணச் சடங்குகள்

நம் நாட்டில் பஞ்சாபி, சௌராஸ்டிர சமூகத்தினரின் திருமணச் சடங்குகள் சுமார் பத்து நாட்கள் வரை நடைபெறுகிறது. விழாக்களே உறவுகளின் கருத்துப் பரிமாற்றத்திற்கு துணை செய்கின்றன. இளைய தலைமுறையினர் தாம் சார்ந்திருக்கக் கூடிய சமூகத்தின் பாரம்பரியத்தினையும் பெருமையையும் மேன்மையான சமூகச் சடங்கு முறைகளையும் மங்கல மற்றும் அமங்கலச் சடங்குகளில் பங்கு

கொள்ளும் பொழுதே அறிந்துகொள்கின்றனர். மேலும், ஒருவரது பொருளாதார மற்றும் சமூக மதிப்பை அவர்தம் இல்லங்களில் நடைபெறும் விழாக்களே வெளிவுலகிற்குப் பறைசாற்றுகின்றன.

அசுரர்களுக்கு அச்சத்தையும் தேவர்களுக்குப் பேரின்பத்தையும் வழங்க வல்ல சூரிய குலத்தைச் சார்ந்த தசரதனின் அன்பிற்குரிய மகனின் திருமணத்தை நாட்டு மக்கள் அனைவருமே திருவிழாவைப் போன்று கொண்டாடியதாகக் கம்பன் குறிப்பிட்டுள்ளான். இராமன், சிவதனுசை முறித்த உடனேயே சனக ராஜன் விஸ்வாமித்திரரிடம் இப்பொழுதே திருமணத்தை நடத்திவிடலாமா? அல்லது தசரதன், உற்றார், உறவினரின் வருகையைத் தொடர்ந்து மணவிழாவைத் தொடங்கலாமா என்கிறார். அதற்கு விசுவாமித்திரர்,

"மாதவன்
ஒல்லையி லவனும்வந் துறுத னன்றென
எல்லையி லுவகையா வீயைந்த வாறெலாம்
சொல்லுகென் றோலையுந் தூதும் போக்கினான்"

(கார்முகப் படலம் 66)

என்று தசரதனுக்குத் தெரிவித்தும் அழைப்பு விடுத்தும் நடத்த வேண்டும் என்கிறார்.

பெண்கள் மணம்முடிக்கும் காலம் வரை சிலம்பு அணிந்ததாகச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. ஆனால், கம்பனின் இராமகாதையில் சீதையின் பாதங்களில் சிலம்பு அணிவிக்கப்பெற்று கொங்கையில் தொய்யில் எழுதி, இடையில் மேகலை அணிவித்து, கண்ணுக்கு மைதீட்டி, நெற்றியில் திலகனிட்டக் கூடிய காட்சிகளைக் காணமுடிகிறது. இத்திருமண நிகழ்வில் குலகுருவாகிய வசிட்டரின் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இம்முனிவரின் முன்னிலையில் சனக மன்னன் சீதாப்பிராட்டியை இராமனுக்குத் தாரை வார்த்துத் தருகிறான். இக்காட்சியை,

"கோமகன் முன்சன கன்குளிர் நன்னீர்
பூமக ளும்பொரு ளும்மென நீயென்
மாமக டன்னொடு மன்னுதி யென்னாத்
தாமரை யன்ன தடக்கையி னீந்தான்" (கடிமணப் படலம் 87)

என்று கம்பன் காட்சிப்படுத்தியுள்ளார். பின்னர் இராமனுடன் அக்கினியை வலம் வந்து அம்மிமிதித்து, அருந்ததியைக் காணுதல்

என மணவிழாத் தொடர்கிறது என்பதை,

> "இடம்படு தோளவ னோடியை வேள்வி
> தொடங்கிய வெங்கனல் சூழ்வரு போதின்" (கடிமணப் படலம் 91)

மற்றும்,

> "வலங்கொடு தீயை வணங்கினர் வந்து
> இலங்கொளி யம்மிமிதித் தெதிர் நின்ற
> கலங்கலில் கற்பி னருந்ததி கண்டாள்" (கடிமணப் படலம் 92)

என்ற பாடல்கள் வழி அறியலாம். இம்மண விழாவில் இளையோர் மூத்தோரையும், அறிவு சான்ற சான்றோர்களையும் மரியாதை செய்யும் முகமாக அவர்களது பொற்பாதங்களில் வீழ்ந்து வணங்கக் கூடிய நிகழ்வு குறிப்பிடத்தக்க ஒன்றாக இடம்பெற்றுள்ளது. இங்கு இராமன் சீதையுடன் வசிட்டன், விசுவாமித்திரர், தசரதன் மற்றும் மூன்று தாயாரின் பாதங்களைத் தொட்டு வணங்கி வாழ்த்துப் பெற்ற நிகழ்வுகள்,

> "முற்றிய மாதவர் தாள்முறை சூடிக்
> கொற்றவ னைக்கழல் கும்பிட லோடும்" (கடிமணப் படலம் 93)

> "கேகய மாமகள் கேள்கிளர் பாதந்
> தாயினு மன்பொடு தாழ்ந்து வணங்கா
> ஆயத னன்னை யடித்துணை சூடித்
> தூய சுமித்திரை தாடொழ லோடும்" (கடிமணப் படலம் 95)

என்பதாகக் கம்பனின் கவி வண்ணத்தில் இடம்பெற்றுள்ளன. இராமன் சீதை திருமணத்தில் கண்ட பல சடங்கு முறைகள் இன்றும் இந்துச் சமூகத்தில் காணப்படக் கூடியவையே ஆகும். அக்காலச் சடங்கு முறைகள் இன்றுவரை சமூகத்தில் நிலவுவதற்கு இக்காப்பியத்தின் பதிவும் ஒரு காரணம் எனலாம்.

முடிசூட்டல் சடங்குகள்

மக்களாட்சிச் சிந்தனை இல்லாத முடியாட்சி நிலவிய காலத்தில் முடிசூட்டல் விழா என்பது அம்மன்னனின் அதிகார வரம்பையும் ஆளுமைத் திறத்தையும் வெளிப்படுத்தக் கூடிய ஒன்றாகும். இராமகாதையில் இராமனின் முடிசூட்டல் விழா சுமார் பதினான்கு ஆண்டுகாலம் தாமதமாக நடைபெறுகிறது. இந்நிலையில் மக்களின் மகிழ்ச்சி ஒரு புறம் இருக்க, முடிசூட்டு விழாவின் மரபு சார்ந்த நிகழ்வுகள் சீரிய முறையில் அமைவதாய் உள்ளது.

முடிசூட்டு விழாவிற்கு கடல் மற்றும் நதியிலிருந்து இருந்து புனித நீர் எடுத்து வர வேண்டும் என்ற வசிட்டரின் ஆணைக்கு அனுமன் இணங்கினான். பல்வேறு வகையான இசைக்கருவிகள் முழங்கின. வாச்சியங்கள் ஒலித்தன. இந்நிலையில் வசிட்டர் மணிமுடியை எடுத்து சீதாப்பிராட்டியுடன் அமர்ந்திருந்த இராமபிரானுக்குச் சூட்டியதை,

"அரியணை யனுமன் தாங்க வங்கத னுடைவாள் பற்றப்
பரதன்வெண் குடைகவிக்க விருவரும் கவரி வீச
விரைசெறி கமலத் தாள்சேர் வெண்ணெய்மன் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி"

(திருமுடிசூட்டு படலம் 38)

என்று குறிப்பிட்டுள்ளார். மணிமுடி சூட்டு விழாவில் மன்னனாகப் பதவி ஏற்க உள்ள இராமனின் சகோதரர்கள் அனைவருமே சூழ்ந்திருக்கக் குலகுரு மணிமுடி சூட்டிய காட்சி பெருமிதத்திற்குரியதாக உள்ளது. மன்னன் என்பவன் தனது சகோதரர்களுடன் இயைந்து ஆட்சிபுரியத் தலைப்படுவது பிறருக்கு நல்லதொரு முன்மாதிரியைக் காட்டுவதாக உள்ளது.

இறப்புச் சடங்குகள்

மண்ணுலகம் மட்டுமல்லாது மேலுலகத்தையும் கீழ் உலகத்தையும் தன் ஆளுகைக்குள் வைத்திருந்த தசரதச் சக்கரவர்த்திக்கு இறுதிச் சடங்கு முறையானதாக இல்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். மாறாக பறவை இனத்தைச் சார்ந்த சடாயுவிற்கு திருமாலின் அவதாரமான இராமன் இறுதிச் சடங்கு செய்ததை ஆரணிய காண்டத்தில் காணலாம். ஒரு மனிதன் வாழும் பொழுது எத்தகைய நிலையில் வாழ்ந்தாலும் அவனது இறுதிப் பயணத்தில் பிள்ளைகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகச் சமூகம் எண்ணுகிறது. ஆனால், தசரதனுக்கு அத்தகைய வாய்ப்புக் கிட்டவில்லை. மாறாக ஒரு பறவை இனத்திற்கு இராமனே இறுதிச் சடங்கு செய்யக் கூடிய உயரிய நிலை கிட்டியிருக்கிறது என்பது வாழ்வின் நிலையாமையையும் உறுதியில்லாத் தன்மையையும் காட்டுவதாய் உள்ளது.

தன்னுடைய தந்தையின் நண்பன் மாற்றானால் கவரப்பட்ட தன் மனைவியை மீட்கும் போராட்டத்தில் உயிர் இழக்க நேரிட்ட சடாயுவின் இறுதிச் சடங்கை இராமன் முன் நின்று செய்கிறான். இதனை,

"ஏந்தின வீருகை தன்னா லேற்றின னீமந் தன்மேல்
சாந்தொடு மலரு நீருஞ் சொரிந்தனன் றலையின் சாரல்
காந்தெரி கனல மூட்டிக் கடன்முறை கடவா வண்ணம்
நேர்ந்தனமிரம்பு நன்னூன் மந்திர நெறியின் வல்லான்"

(சடாயு உயிர் நீத்த படலம் 222)

மற்றும்,

"கிழித்தன கழித்த மேனி தாமரைக் கெழுவு செம்பூத்
துழித்தன வனைய வென்னத் துள்ளிசோர் வெள்ளக் கண்ணன்
குழித்தனன் கொண்ட லாற்றுக் குழித்தபின் கொண்ட நன்னீர்
அழித்தன னரக்கர்ச் செற்ற சீற்றத்தா னவலந் தீர்ந்தான்"

(சடாயு உயிர் நீத்த படலம் 223)

என்று கம்பர் குறிப்பிட்டுள்ளார். சடாயுவின் இறுதிச் சடங்கிற்கு கரிய அகில் கட்டைகளும் சந்தனக் கட்டைகளும் தருப்பைப் புல்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்கட்டைகளின் மீது வைத்து உடலினை எரியூட்டுவதற்கு இராமனே தனது திருக்கரங்களால் எடுத்து வருகிறான். சடாயுவின் உடல் புனித நீர், நறுமணச் சாந்து, மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. இராமன் சடாயுவின் தலைப்பக்கத்திலே எரிகின்ற நெருப்பைப் பற்ற வைத்து இறுதிச் சடங்கை நிறைவேற்றியுள்ளான்.

முடிவுரை

நீர் என்பது பிறப்பு இறப்பு என்பது மட்டுமின்றி அனைத்துச் சடங்கு முறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இடம்பெற்றுள்ளது. இந்துத்துவத்தில் அனைத்துச் சடங்கிலும் நெருப்பை வலம் வருவதோ அல்லது யாகத்தில் நெருப்பை வளர்ப்பதோ கட்டாயமான ஒன்றாக பின்பற்றப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. சடங்குகள் மூத்தோரை மதித்தல், குடும்ப உறவுகளைப் பேணுதல், கல்வி கற்ற சான்றோரை முன்னிலைப் படுத்துதல் போன்ற நற்பண்புகளை இளைய சமூகத்திற்குச் சுட்டிக்காட்டுவதாய் உள்ளன.

கம்பரஸத்தில் தேர்ச்சிபெற்ற விடுதலை விரும்பிகள்

கவிஞர் இரா.மீனாட்சி
இயக்குநர், தமிழ்மரபு மையம்,
ஆரோவில்.

இந்திய வரலாற்றில், கலை, இலக்கியம், அரசியல், ஆன்மிகத் தளங்களில் ஆழங்காற்பட்டு, அவற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக் கொடுத்துப் பெருமை பெற்றவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள், மகான்ஸ்ரீஅரவிந்தர், மகாகவி பாரதியார், வீரவிளக்கு வ.வே.சு. ஐயர்ஆகியோர் ஆவர்.

அவர்களுள்ளும், வ.வே.சு.ஐயர் என்னும் மாவீரர், லோகமான்ய திலகரைப்போல, அரசியலில், தென்னாட்டில் நிலை பெற்றிருந்தாலும், தமிழ்க்கம்பன் புகழை உலகிற்கெல்லாம் எடுத்துச் சென்றவர் என்னும் முறையில் அவரை நாம் இலக்கிய ஆய்வாளராக, மொழிபெயர்ப்பாளராகப் பார்த்து வியக்கிறோம்.

இங்கிலாந்தில் வழக்கறிஞர் படிப்பைத் தொடரும்போதே, இந்தத் தமிழ்நாட்டுத் திருச்சிக்காரர், எதேச்சதிகாரத்திற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தபடி சாகசம் புரிந்திருக்கிறார்.

பாரீஸ் வழியே தப்பி இந்தியாவிற்குள் வந்து பிரெஞ்சுப் புதுச்சேரியில் கரையேறி விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து தலைமையேற்று நடத்திய தீரம் மிகுந்த மாமனிதர் அவர். அஞ்சா நெஞ்சினர். இந்த இரும்புமனிதருக்குள் ஒளிவீசிக் கொண்டிருந்த இலக்கியரசனை மிக அற்புதமானது. துல்லியமாக ஒரு நூற்றாண்டிற்குமுன் புதுச்சேரியில் மகரிஷி ஸ்ரீஅரவிந்தரும், மகாகவி பாரதியாரும், வீரவிளக்கு வ.வே.சு.ஐயரும் வங்கக்கடல் அலையோலையின் பின்புலத்தில் அசாதாரணமான இலக்கிய ஆர்வலர்கள் உலக இலக்கியக்கர்த்தாக்களான ஹோமர், மில்டன், தாந்தே, ஷேக்ஸ்பியர் மட்டுமல்லாது இந்திய மகாகவிகளான வால்மீகி, வியாசர், காளிதாசன் போன்ற படைப்புலகப் பிரம்மாக்களைப் பற்றி இரசனையுடன் பேசிக்கொள்வதுண்டு.

இவர்களது பேச்சில் தமிழ்மொழிப் படைப்பாளிகளுள் தலைசிறந்த புலவர்களான திருவள்ளுவர், ஔவையார், ஆழ்வார்கள், நாயன்மார்களுடன் தமிழில் இராமாயணத்தைத் தந்தருளிய கம்பன் பற்றியும் கருத்தாய்வு செய்துள்ளதாக அறிகிறோம்.

யோகமார்க்கம் - வேதவிளக்கம் - பகவத்கீதை சாரம் போன்ற உயர்செல்நெறிகாட்டுதலைப் பற்றிக்கொண்டே இலக்கிய அழகுகளையும், ஆக்கியோரின் தனித்துவத்தையும் படித்து, இரசித்து, கலந்துபேசி, பிரெஞ்சுப் புதுச்சேரி நிழல்வாழ்க்கையின் வறுமையை மென்று தின்று நமக்கெல்லாம் சேர்த்தே அருஞ்செல்வ வளம் சேர்த்து வைத்திருக்கிறார்கள், அம்மகாமேதைகள். நாம் எந்த வாயால் எந்த மொழியழகுகளால் அவர்க்கெல்லாம் நன்றிகூறப் போகிறோமோ? மனதால் அவர்களைக் கும்பிட்டெழுவோம்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை உண்மை வெறும்புகழ்ச்சியில்லை" என்று உறுதியோடு மொழிந்த மகாகவி பாரதியார், புதிய ஆத்திசூடியில், சூடிக்கொடுத்ததோர் கட்டளை, 'ரஸத்திலே தேர்ச்சிகொள்' என்பதாகும். இப்புதுவரி நினைவிடையே கமழ்ந்து வாழ்க்கையைக் கைப்பிடித்து அழைத்துச் செல்கிறது.

இம்மகாமனிதர்கள் இந்திய விடுதலைவேள்வியில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றும் முயற்சியில் சில நேரங்களில் ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருந்தாலும், உலகப்படைப்பிலக்கியம் என்று வரும்பொழுது, ஒருங்கிணைத்துத் தேர்ந்தறியும் பக்குவம் நிரம்பியிருந்ததை வரலாறு உணர்த்துகிறது.

பண்டைய பாரத இலக்கிய விமரிசகர்கள் கவிதையின் சாரத்தை 'ரஸா' (Rasa) என்று குறிப்பிடுகிறார்கள். அந்தச் சொல்லின் பொருள் மிக நுட்பமானது. ஒன்றித்த சுவை உணர்வுகளின் ஆன்மிகச்சாரம், அழகு, அனுபவம், தூய்மையான பரிபூரணமான உணர்வின் மூலத்தினுள் நிறைவுறும் ஆன்மஇன்பம் என்றெல்லாம் கவிதா ரஸத்தைச் சிலாகிக்கிறார்கள். ஸ்ரீஅரவிந்தர் கூறுவதாவது.

"மேலிருந்து உள்முகமாய் இறங்கிவரும் ஒன்றின் பதிவு-ஆதர்சனத்தினையும், ஒளிமிகுந்த ஆர்வத்தினையும், நிலைநிறுத்தி வைக்கிறது. அந்த மூலக்கூறு நாம் நமது ஜீவனின் இரகசியங்களை அறியவரும்போது, தெய்விகப்பேருணர்வினையும் மேலான அறிவினையும் ஆற்றலின் உற்சாக ஊற்றினையும் வாழ்தலின் எதிர்க்கவியலாத ஆனந்தக் களிப்பினையும் ஒருசேர அளிக்கிறது. இந்தத் தன்அகத்தின் ஜீவனின் இன்ப உணர்வினை நேரடியாகவோ, மறைமுகமாகவோ உணரமுடிந்த கலாச்சாரங்கள், தமது அழகுணர்வின்

அடித்தளத்தையும் மகிழ்வின் தொடுகை களையும், ஆனந்தத்தையும் அழகின் பொது இயல்பினையும் பெற முயலும் நிறைவானது, ஓர் இரகசியமாகவே வைத்துக் கொண்டன. குறிப்பிட்ட அறிவாற்றல் செயல்பாடுகளில் குறுக்கப்பட்டு, யதார்த்தப் பயன்பாடும், வாழ்வின் புறநிகழ்வுக்கும் முக்கியத்துவம் பெற்று மெய்த்தேவையானது மறக்கடிக்கப்பட்டது. ஆனால், பேரானந்தம் - அந்த அழகுணர்வு கவிதை அழகின் ஆன்ம தரிசனம் கவிதையின் மெய்ம்மை வாழ்வின் பற்பல தளங்களின் மேல் நிலவும் கவிதைப்பரப்பு, வேறு வேறு பிரதேசங்கள் அகம்.புறம் எனக் கீழிறங்கியும், மேலேறியும் குறைந்த இருப்பிலிருந்து நிறைந்த மறைஞான ஆற்றல்களின்ஊடே, செழுமையுறுகிறது என்பதே உண்மை. இப்படிப்பட்ட அழகு, களிப்பு, மேலான உள்ளுணர்வு, ஆதர்சம், ஜீவனுள்ள ஆனந்தக் கவிதையாகப் படைக்கப்படுகிறது. ஒப்பற்ற வருங்காலத்திற்கான நிரந்தரப்பரிசாக அளிக்கப்படுகிறது" என்று இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களைப் பற்றியும் புகழ்மிக்க கவிஞர்களைப் பற்றியும் ஸ்ரீஅரவிந்தர் தமது 'வருங்காலக் கவிதை' (Sri Aurobindo, Future poetry)யில் குறிப்பிடுகிறார்.

"கவி என்றாலே, உயர்ந்த சிந்தனை உடையவன். அறிவாளி, முனிவன், ரிஷி, அறிந்தவன் என்பது பொருளாம். கம்பர், கவிஞரின் அறிவுமிக்காய், நவையிலாய், அமுதம் உண்பாய்' என்கிறார். உண்மையான கவி இயற்கையில் உள்ள இறைவனுடன் ஐக்கியப் பட்டுத் தன் அனுபவத்தைச் சொற்கோவையால் விளக்குகிறான். சொல்லுக்கும் மனத்திற்கும் எட்டா உன்னத ஞானச் சிகரத்திலிருந்து அன்பருவியாக ஓடிவந்து அழகை வளர்ப்பதே கவிதை. உண்மையான கவிதைக்குச் சிருஷ்டி சக்தியுண்டு ஹோமர், தாந்தே, ஷேக்ஸ்பியர், வியாசர், வால்மீகி, கம்பர், வள்ளுவர், வள்ளலார் போன்ற மஹாகவிகள் தம்மைச் சுற்றி, ஒரு புதிய சமுதாயவாழ்வை உண்டாக்கின..." கவிதை என்பது மெய்ப் பொருள் மந்திரம். கவிதை செவியுணர்வு மட்டுமன்று. ஆத்மாவிற்கும் அந்தக்கரணத்திற்கும் இன்பமான நாதவிருந்தாகும். உண்மைக் கவியை உள்ளொருமையினாலேயே முற்றிலும் அனுபவிக்கமுடியும்... அழகு, ஜீவகளை, ஆத்மஉன்னதி, உண்மை, ஆனந்தம் இவ்வைந்தும் கவியின் பஞ்சப் பிராணனாகும். இவ்ஐந்தும் நிறைந்ததே செம்பாகமான மஹாகவி" என்கிறார், வ.வே.சு.ஐயரை அறிந்து மதித்துப்போற்றிய கவியோகி சுத்தானந்த பாரதியார். (கவியோகி சுத்தானந்தபாரதியார், அரவிந்த தரிசனம், ப.)

வ.வே.சு.ஐயரின் கம்பராமாயணம் ஓர் ஆய்வு (Kamba Ramayana - A Study) ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன் முன்னுரையில் ஐயர் வைத்திருக்கும் வேண்டுகோள். "It is now for the larger critical audience of India and of the rest of the world no appraise Kamban's work and adjudege to him his proper place among the sons of Saraswati" (Kambaramayanam- A Study, p.4)

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் தகுதிநிலையை உலகிற்கெல்லாம் எடுத்தியம்ப வேண்டும் என்ற ஆர்வத்தினாலேயே ஐயர் கம்பராமாயணத்தை ஆங்கிலமொழியில் அழகாக ஆய்வு செய்துள்ளார். அவரது காலத்திலேயே கம்பராமாயணம் ஆங்கிலத்தில் பரவலாக்கப்பட்டிருந்ததாய் ஸ்ரீஅரவிந்தர் போன்ற சமகால அறிஞர்கள் கவிதை விமரிசகர்கள் படித்தறிய இயன்றது. புதுச்சேரியிலிருந்து பாரதி, வ.வே.சு.ஐயர், மண்டையம் ஸ்ரீநிவாசாச்சாரியார் போன்ற தமிழ் நண்பர்களுடன் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளைப் படித்தறிந்ததன் தாக்கமே அவருடைய 'இந்திய கலாச்சாரத்தின் அடித்தளங்கள்' நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது என்று அறுதியிட்டுச் சொல்லலாம்.

இந்திய இலக்கியங்களை, அதன் கவிவடிவங்களை முன்னிறுத்தி, ஸ்ரீஅரவிந்தர் எழுதுகின்றார்-

"…. இக்கவிதையெல்லாம், பெருங்காவியங்கள், காதல் ஓவியங்கள், நீதிநூல்கள்- நீதிநூல்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் இராமதாசருடைய நூல்களும், திருவள்ளுவரின் புகழ்பெற்ற குறளும் ஆகும். தத்துவப்பாடல்கள், பக்திப்பாடல்கள் இவை யெல்லாம் நல்ல கல்விப்பயிற்சியுடைய ஒரு சிறுவகுப்பினரால் எழுதப்பட்டவையோ, அவர்களுக்காக எழுதப்பட்டவையோ அல்ல. மாறாக, வெகுசில விதிவிலக்குகள் தவிர, மற்றவெல்லாம் பரவலாயிருந்த ஒரு பண்பாட்டின் கனிகளேயாம். துளசிதாசரின் இராமாயணமும், இராமப்பிரசாத், தேசாந்திரிகளான வைணவ பக்தர்கள், பாலுக்கள் (Balues), ஆகியோருடைய பாடல்களும், இராமதாசரின், துக்காராமின் கவிதைகளும், திருவள்ளுவர், பெண்பால் கவியாகிய ஔவை இருவரின் நீதி சூத்திரங்களும், தென்னிந்திய அடியார்கள், ஆழ்வார்களின் தெய்விகப் பாசுரங்களும் எல்லா வகுப்பு மக்களாலும் போற்றப்பெற்றன. அவற்றில் அடங்கியுள்ள சிந்தனைகள், அவை வெளியிட்ட உணர்ச்சிகள் நாட்டுமக்களின் வாழ்க்கையில் ஆழப்பதிந்தன"(ஸ்ரீஅரவிந்தரும் ஸ்ரீஅன்னையும், இந்திய ஆன்மா, பக்.24-25)

இந்த வரலாற்று வரிசையில், அரவிந்தரால் அடுத்துக் காணப் பெற்றவர் கம்பர். அவரை இந்திய இலக்கிய வெளியில் வைத்து அடையாளம் கண்டு போற்றுகிறார் ஸ்ரீஅரவிந்தர்.

"ஆதிகவி எனப்போற்றப்பெறும் வால்மீகி, வடமொழியில் வகுத்த இராமாயணத்தைப் பிரதேசமொழிகளில் தகுதியுடைய பலரும் எழுதியிருக்கின்றனர். அதனை இந்தியில் துளசிதாசரும், தமிழில் கம்பரும் செம்மையுறச் செய்திருக்கின்றனர். மொழிபெயர்ப்பு, தழுவல் என்ற நிலைகளைக் கடந்து மூல நூல் எனக் கொண்டாடும் அளவிற்குத் தம் கவிவளத்தால் மேன்மையுறச் செய்தவர்கள் இவர்கள். இவர்களை முன்வைத்து ஸ்ரீ அரவிந்தர் எழுதுகிறார். "பின்னால் வந்த புலவர்களுள், கம்பர், துளசிதாசர் இவ்விருவர் மட்டுமே பழைய இராமகதையைப் பொலிவும் உயிர்த்துடிப்பும் கொண்ட புதிய படைப்பாக்கி மிக உன்னதமான இலக்கியங்களைத் தந்துள்ளனர். தமிழ்க்கவியாகிய கம்பர் இராமகாதையைக் கொண்டு ஒரு மாபெரும் மூலகாவியமே படைத்துள்ளார். துளசிதாசரின் புகழ்பெற்ற ஹிந்தி இராமாயணம் இசைப்பாட்டின் தீவிரத்தையும், காதற்காவியத்தின் வளத்தையும், பெருங்காப்பியத்திற்குரிய கற்பனையையும் அபூர்வத்திறமையுடன் இணைக்கிறது. அது ஒரே சமயத்தில் இறைவனது அவதாரத்தின் கதையாகவும் பக்தி உணர்வின் நீண்ட இசைப்பாடலாகவும் அமைந்துள்ளது.

'ஹிந்தி இலக்கிய வரலாறு' எழுதிய ஓர் ஆங்கிலேயர் துளசிதாசரின் இராமாயணம் வால்மீகியின் ஆதிகாவியத்தை விடவும், உயர்ந்தது என்கிறார். ஆனால், இது மிகைப்படக் கூறுவதாகும். துளசிதாசரின் நூலின் சிறப்பு எப்படியிருப்பினும், வால்மீகியின் காவியம் கவிதையின் உச்சபூரணத்தை எட்டிவிட்டபடியால், அதனினும் உயர்வான என ஒன்று இருக்க முடியாது. ஆனால், துளசிதாசர் விஷயமாகவும், கம்பர் விஷயமாகவும் இவ்வாறு பெருமை கொண்டாடப்படுவதிலிருந்து அவர்களின் கவிப்பெருமை விளங்குகிறது. அத்துடன் இந்தியப் பண்பாட்டினுடைய, ஞானத்தினுடைய எல்லைகள் குறுகிவிட்ட காலத்திலும் இந்தியமனத்தின் படைப்பாற்றல் கொண்ட மேதாவிலாசம் குன்றிவிடவில்லை என்பதையும் இது காட்டுகிறது. உண்மையில், இப்பிற்காலக் கவிதையில் தீவிரம் அதிகரித்துள்ளது. இழந்துவிட்ட பழைய உயரத்தையும் வீரத்தையும் இது ஓரளவிற்கு ஈடு செய்கிறது" (இரா.மீனாட்சி, சேதுபதி,அரவிந்தர் போற்றிய அருந்தமிழ்ச்சான்றோர்,

பக்.119-122) என்று கொண்டாடுகிறார். இதனை அட்டியே ஸ்ரீஅரவிந்தர் வாக்கில் சொன்னால், "In Bengal there is the Mahabharata of Kashiram, the gist of the old epic simply retold in a lucid classical style, and the Ramayana of Krittibas, more near to the vigour of the soil, neither of them attaining to the epic manner but still written with a simple poetic skill and a swift narrative force. Only two however of these later poets arrived at a vividly living recreation of the ancient story and succeeded in producing a supreme masterpiece, Kamban, the Tamil poet who makes of his subject a great original epic, and Tulsidas whose famed Hindi Ramayana combines with a singular mastery lyric intensity, romantic richness and the sublimity of the epic imagination and is at once a story of the divine Avatar and a long chant of religious devotion. An English historian of the literature has even claimed for Tulsidas' poem superiority to the epic of Vallmiki: that is an exaggeration and whatever the merits, there cannot be a greater than the greatest, but that such claims can be made for Tulsidas and Kamban is evidence at least of the power of the poets and a proof that the creative genius of the Indian mind has not declined even in the narrowing of the range of its culture and knowledge. All this poetry indeed shows a gain in intensity that compensates to some extent for the loss of the ancient height and amplitude. (Sri Aurobindo, The Foundations of Indian Culture, pp.319-320)

ஆக, இழந்த நாட்டுப் பெருமைகளை மீட்டெடுக்க இந்திய நாட்டின் ஆன்மாவான இலக்கியங்களைத் தட்டி எழுப்புவதன் மூலமே இனி எழுச்சி காணமுடியும் என்று உணர்ந்தவர்கள் அவர்கள். அதனால், ரஸத்திலே தேர்ச்சி பெற்று, இந்தியர்கள் உள்ளத்தில் இந்திய ஆன்மாவை எழுப்பி நிலைநிறுத்த, இவ்விடுதலை விரும்பிகள் தேர்ந்து தெளிந்தது கம்பரின் காப்பியத்தை என்பது கருதிப்போற்ற வேண்டிய ஓர் உயர்ந்த உண்மையல்லவா?

கம்பனில் கரைந்த ரசிகமணி டி.கே.சி

திருமிகு. இரா.தீர்த்தாரப்பன்
சென்னை.

கரைக்கப்படும் பொருளும் கரைப்பானும் இரண்டறக் கலந்தால்தான் கரைசல் என்ற ஒன்று உருவாகும். அவ்வாறு கம்பனில் இரண்டறக் கலந்தவர்தாம் ரசிகமணி டி.கே.சி.

'கம்பராமாயணத்தை இன்று தமிழுலகம் அறிவதற்கும் மதிப்பதற்கும் படிப்பதற்கும் காரணமாயிருந்தவர் நம் ரசிகமணி அவர்களே. ஷேக்ஸ்பியர் கவிதைத் தரத்தை விடக் கம்பன் கவிதை ஒரு சிறிதும் தாழ்வில்லாதது என்று சொன்னாற் போதாது அதனினும் மேம்பட்டதுமாகும் என்று ஆங்கிலம் கற்ற புலவர்களிடையே அஞ்சாமல் எடுத்துக்கூறிய ஆண்மையாளர் அவர். அந்தக் கருத்தை எழுத்துக்களின் மூலமும் சொற்பொழிவுகளின் மூலமும் ஓயாமல் எடுத்து விளக்கி நிலைநாட்டிக் கம்பர் கவிதைக்கு ஏற்றம் தந்த பெருமை நம் ரசிகமணியவர்களையே சாரும். தமது இடையறாத உழைப்பினால் எத்தனையோ ஆங்கிலம் கற்ற கம்பராமாயணப் புலவர்களைத் தமிழ் நாட்டில் தோற்றுவித்துவிட்டார்கள். இது அவர் செய்த ஒப்பற்ற தமிழ்த் தொண்டு ஆகும். அவர் வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள் இதுவாகவே இருந்தது" என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

'என்னைப் போன்ற ஒருவனையுங்கூடத் தமிழாசை கொள்ளச் செய்தவர் டி.கே.ஸிதான். இதை இப்போது பலர் அறியச் சொல்லுகிறேன். உபசாரம் அல்ல - உண்மை" என்றும்

'டி.கே.சி அவர்கள் கம்பனுடைய உள்ளத்தில் புகுந்து அதன் அந்தரங்கத்தை அறிந்து கம்பன் பாடல்களைப் பாடி கவிவானம் உண்டாக்கி அமுதமழை பொழியச் செய்வார்" என்றும் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வியந்து சொல்கிறார்கள்.

'டி.கே.ஸி. கம்பன் பாடல்களை - ஏன் எல்லாக் கவிதைகளையுந்தான் படித்துக் காட்டும் விதமே ஒரு தனி மாதிரி. அவரிடம் கேட்டபிறகுதான் பாடல்களை எப்படிப் படிக்கவேண்டும் என்று தெரிந்தது. அம்மாதிரி படித்தால்தான் கவிதைகளின் ஓசை இன்பத்தைப் பூரணமாய் அனுபவிக்க முடியும் என்று கண்டேன்" என்று பேராசிரியர் கல்கி

அவர்கள் குறிப்பிடுவதிலிருந்து ரசிகமணி அவர்கள் தான் கம்பனில் கரைந்ததோடு மட்டுமல்லாமல் அவரிடம் கம்பனைக் கேட்டோரையும் கரைய வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணி வியக்கிறோம். கம்பரை அனுபவித்த சென்ற நூற்றாண்டுக் கவிஞர்களான பாரதியாரையும் கவிமணியையும் தம் கட்டுரையில் போற்றுகிறார் ரசிகமணி டி.கே.சி.

'கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று பாரதியார் பாடியதையும்

"கம்பன் கவியின் கனியமுதம் உண்டிட மால்
அம்புவியில் வந்திங்கு அவதாரம் செய்தானோ"

என்று கவிமணி பாடியதையும், ரசிகமணி அவர்கள் "இதயஒலி" கட்டுரையில் போற்றிப் புகழ்கிறார்.

"ஆயிரம் வருஷத்துக்கு முன் இருந்த ஆங்கில நூல் எதையும் தற்காலத்து ஆங்கிலேயரால் வாசிக்க முடியாது. அப்படியேதான் இத்தாலியர் லத்தீன் பாஷையைத் தாய்ப்பாஷையாகக் கருதி வாசிக்க முடியாது. கிரேக்கர்களுக்கும் இதே சங்கடந்தான். வடமொழியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். ஆயிரம் வருஷத்துக்கு முன் உள்ள கம்பர் கையாண்ட பாஷையோ இப்பொழுதும் வழக்கிலிருக்கிறது. அது நம்முடைய பாக்கியமல்லவா?" என்று ரசிகமணி டி.கே.சி அவர்கள் சொல்லும்போது தமிழின் பெருமையும் கம்பனின் பெருமையும் நமக்குப் புலனாகிறது.

கம்பராமாயணப் பாடல்களுக்கு விளக்கம் கொடுத்து, குறிப்பும் கொடுப்பது ரசிகமணி அவர்களின் தனித்தன்மை. பாடலுக்குப் பின் அவர்கள் கொடுக்கும் குறிப்பு கம்பனின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும். எடுத்துக்காட்டாக, மகாபலிச் சக்கரவர்த்தி வாமனனுக்கு மூன்றடி மண்ணைத் தானம் கொடுக்கும் காட்சியில் அமைந்த பாடலுக்கு ரசிகமணியின் குறிப்பைப் பார்ப்போம்.

"கயந்தரு நறும்புனல் கையில்த் தீண்டலும்
பயந்தவர் களும் இகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவர்க்கு உதவிய உதவி ஒப்பவே!"

ரசிகமணியின் குறிப்பு

"கடைசி அடி திருவள்ளுவர் திருக்குறள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. ஒருவர் பத்துப் பத்து ரூபாயாக நாலுபேருக்குத் தருமம்

செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். "என்ன கொடுத்தார் அப்பா?" என்று எதிரில் வந்தவன் நாலு பேரையும் கேட்கிறான். முதலாவது பேர்வழி 'பத்துக்காசு என்னமோ கொடுத்தான்' என்கிறான். அடுத்தவன் 'பத்து ரூபாய் கொடுத்தான்' என்கிறான். மூன்றாவது ஆசாமி 'இந்தப் பத்து ரூபாயும் எனக்கு நூறு ரூபாய், புண்ணியவான் கொடுத்தான்! என்கிறான். நாலாவது மனுசன் உயர்ந்த பண்புடையவன். 'தாராளப் பிரபு! கொடுத்தது பத்தா, ஆயிரம் ஐயா! என்று மிக்க உணர்ச்சியோடு பாராட்டிச் சொல்கிறான். ஆகவே உயர்ந்தவருக்குச் செய்த உதவி அப்படியே மதிப்பில் ரொம்ப உயர்ந்து போய்விடுகிறது.

"உதவி வரைத்தன்று உதவி உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்னும் திருக்குறளில் உள்ளீடாகக் கிடக்கும் உண்மையை எவ்வளவாக அனுபவித்திருக்கிறார் கம்பர்!" என்ற ரசிகமணி அவர்களின் குறிப்பைப் பார்க்கும்போது தனிழுக்குக் கதியான கம்பரையும் திருவள்ளுவரையும் நம் மனக்கண் முன் நிறுத்துவது போல் தெரிகிறது.

கம்பர் பூமாதேவியையும் இலக்குமி தேவியையும் உயர்வாகப் பல இடங்களில் காட்டுகிறார். பூமாதேவியின் மகளான சீதையை இலக்குனிதேவி ஒதுங்கி நின்று தொழுவதாகவும்

"எழுகின்ற தெள்ளமுதோடு எழுந்தவளும் இழிந்து ஒதுங்கித்
தொழுகின்ற நன்னலத்துப் பெண்ணரசி தோன்றினாள்!"

கம்பர் பாடல் யாத்துள்ளார். பூமாதேவி இலக்குமி தேவியுடன் யுத்த தேவதையையும் இணைத்துக் கம்பர் சொன்னதை ரசிகமணி விளக்கும் அருமையைப் பார்க்கலாம்.

"நாட்டையும் நாட்டிலுள்ள சகல தொழில்களையும் திறம்படப் பாதுகாக்கவல்ல வீரனாகிய ராமன் நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போகிறான் என்றால் ஜனங்களுக்கு எவ்வளவு பயம்இ எவ்வளவு துயரம் உண்டாகும்? நாட்டில் லட்சுமி தேவிக்கும் பூமா தேவிக்கும் இடமேது? இதைக் கம்பர் 'பொன்திணி போதினாளும்' (இலக்குனி தேவியும்) பூனியும் (பூமாதேவியும்) 'புலம்பி நைய' ராமன் ராஜரிகத்தைத் துறந்து காட்டுக்குப் போகிறான் என்கிறார். சமாதான காலத்தில் இந்தத் தெய்வங்களுக்கு (உழவுக்கும் வர்த்தகத்துக்கும்) இவ்வளவு மதிப்பு உண்டு. ஆனால் யுத்த தேவதை பிரசன்னமாய் விட்டால் அவளுடைய சன்னதியில் மேலே சொன்ன இலக்குமியும்

பூமாதேவியும் அடிமைகள் தான். தற்காலத்து அரசியலிலெல்லாம் இந்த முறைதான் கையாளப்பட்டு வருகிறது. நாட்டின் வருவாயில் எவ்வளவு பெரும்பகுதி ராணுவத்துக்குப் போய் விடுகிறது என்கிற கணக்கு ஒன்றைப் பார்த்தால் போதும். கம்பர் காலத்திலும் ராணுவம் சம்பந்தமாக இந்த முறையையே அனுசரித்து வந்தார்கள். எப்படி என்று பார்ப்போம்.

லட்சுமணனால் மூக்கு அறுபட்டவுடன் சூர்ப்பணகை கரன், திரிசரா போன்றவர்களிடம் முறையிட்டு ஏற்பட்ட போரில், கரனும் திரிசராவும் மடிய அரக்கர்கள் எல்லோரும் பயந்து ஓட்டம் பிடிக்கிறார்கள். அச்சமயம் தூஷணன் என்ற வீரன் வந்து, ஓடுகிறவர்களைத் தடுத்து அவர்களுடைய வீர தர்மத்தைப் பற்றி மிகுந்த ஆவேசத்தோடு பேசுகிறான்.

"ஆர வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ! அயில்வேல்
வீர வாட்கொடு கொழுவடித்துழுதிரோ? வெறிபோர்த்
தீர வாழ்க்கையின் தெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையீர் எங்ஙனம் வாழ்திரோ விளம்பீர்!"

யுத்ததேவதை கொலுவீற்றிருக்கும்போது இலக்குமிதேவியும் பூமாதேவியும் கேவலமாகத்தான் கருதப்படுவார்கள். யுத்தம் என்பது உலகத்தை விட்டு என்று நீங்குமோ அன்று தான் உலகத்துக்குச் செல்வமும் க்ஷேமமும். அப்படி ஒரு ராஜ்யம் வேண்டும் என்பதே கம்பருடைய லட்சியம். அந்த ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தி, கம்பர் உருவாக்கிய ராமன்".

இவ்வாறு கம்பரின் இதய ஆழ அகலங்களைக் கண்டவர் ரசிகமணி டி.கே.சி.

"அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்" என்று பாரதியார் பாடியுள்ளார். ஆனால் ரசிகமணி டி.கே.சி. அவர்களோ கவி உள்ளத்தை அதாவது கம்பனின் உள்ளத்தைக் கண்டவர் என்பது பின்னே வரும் ஜடாயு உயிர் நீத்த படல நிகழ்ச்சியே சாட்சி. ரசிகமணி டி.கே.சி அவர்கள் "சொல்ல முடியாதல்லவா போய்விட்டது!" என்று ஒரு கட்டுரை யாத்துள்ளார்.

"ஆயபின் அமலன் தானும் ஐய ! நீ அமைதி என்ன
வாயிடை மொழிந்ததன்றி மற்றொரு செயலும் உண்டோ
போயது அவ்அரக்கன் எங்கேபுகல் எனப் புள்ளின் வேந்தன்
ஓய்வினன் உணர்வுந்தேய உரைத்திலன் உயிருந்தீர்ந்தான்"

என்ற பாடலைச் சொல்லி விளக்கம் கொடுத்து இராவணன் தூக்கிக் கொண்டு சென்றதைச் சொல்லமுடியாமல் போனதால்தான் இதிகாசம் வளருகிறது என்கிறார் ரசிகமணி. இதே கட்டுரையில்,

"'வடுக்கண்நேர் கூந்தலாளை இராவணன் மண்ணினோடும்
எடுத்தனன் நேருவானை எதிர்த்தென தாற்றல் கொண்டு
தடுத்தனென் ஆவதெல்லாம், தவத்து அரன் தந்த வாளால்ப்
படுத்தனன், இங்கு வீழ்ந்தேன் இது இன்று பட்டதென்றான்"

என்ற செருகுகவியைக் காட்டி "இலங்கைக்கு அதிபதியான அரக்கன் இராவணன் தான் தூக்கிக் கொண்டு போய்விட்டான் என்று ஜடாயு சொல்வதால் குரங்குகள் போய்த் தேடுகிறது. அனுமன் போய்த் தேடுகிறது எல்லாம் அனாவசியமாகி, வெகு சௌகர்யமாக முடிகிறது ராமாயணம்" என்று ரசிகமணி சொல்லுகிறார். கம்பன் கவிதையில் மட்டுமல்ல, கம்பனின் காவியக் கட்டுக்கோப்பிலும் மனதைப் பறிகொடுத்தவர் தாம் ரசிகமணி டி.கே.சி.

"கம்பர் கவிச்சக்கரவர்த்தி, தமிழ்க் கவிகளுக்கு மட்டுமல்ல உலகக் கவிக்கே சக்கரவர்த்தி!" என்றும்

"தன் இதயத்தோடு ஒட்டிய அனுபவங்களையும் பாத்திரங்களையும் அவைகளின் உணர்ச்சிகளையும் வெளியிட வந்த கருவிதான் கம்பரது ராமாயணக் கவிதை" என்றும்

"மக்கள் அனுபவிக்கக்கூடிய ரஸபாவங்கள் ஒன்பது என்று சொல்லி விடக்கூடாது. எத்தனையோ ஒன்பதுகள். அவைகளெல்லாம் தனித்தனி ஒழியோடும் மணத்தோடும் கம்பருடைய உள்ளத்தில் உலாவி வருகின்றன. சோகம் என்றால் எத்தனையோ ரகம். அப்படியே வீரம், கருணை, காதல் முதலான ரஸங்கள் பலதிறப் பட்டவைகளாய்க் காணப்படுகின்றன. இவைகளையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் காட்டவே கம்பராமாயணம் எழுந்ததென்றால்க் கூடக் குற்றமில்லை. புலவருடைய உள்ளமாகிய ஆழ்ந்த கடல், தன்னுடைய ரத்தினங்களை எல்லாம் வாரிக்கொழிப்பதற்குப் போதுமான துறைகளை உடையதுதான் அவர் செய்த இதிகாசம்" என்றும் கம்பனுக்குப் புகழாரம் சூட்டியவர் ரசிகமணி டி.கே.சி.

"தானின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப ரசிகமணி டி.கே.சி, கம்பன்

கவியில் தாம் கண்ட இன்பத்தைக் கேட்பவர்களும் அடையும்படி தனிமுக்குப் பெரும்பணி செய்துள்ளார். அவர் கம்பன் பாடல்களைப் பாடி விளக்கம் கொடுத்ததைக் கேட்ட மகாத்மா காந்தி அவர்கள் "கம்பன் பாடல்களை முழுமையாக அனுபவிக்க அதை மூலத்திலேயே படிக்கவேண்டும்" என்று ரசிகமணியிடம் சொன்னபோது "அதற்கு நீங்கள் தமிழனாகப் பிறக்க வேண்டும்!" என்று காந்தியடிகளிடம் சொல்லியிருக்கிறார்.

"சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன் ...."

என்ற பாடலை ரசிகமணி டி.கே.சி அவர்கள் வினோபாஜி அவர்களிடம் விளக்கியபோது, வினோபாஜி பிரமிப்புடன் "நீ சொன்ன சொல்லினும் உளன்" என்ற கருத்து உன்னதமானது என்றும், இந்திய மொழிகளில் தோன்றிய எந்த ராமாயணத்திலும் இந்த சொல்லாட்சி இல்லை என்றும் சொல்லியுள்ளார்.

இவ்வாறு ரசிகமணி டி.கே.சி கம்பனில் தாம் கரைந்து அனுபவித்ததோடு தமிழர்களை மட்டுமல்ல வேற்று மொழிக்காரர்களையும் அனுபவிக்கச் செய்த காரியம் கம்பனுக்குப் பெரும் புகழ் சேர்த்தது என்பதில் ஐயமில்லை.

இரசிகமணி டி.கே.சி.

முனைவர் ச.ஈஸ்வரன்
தமிழாய்வுத் துறை, இணைப்பேராசிரியர், தேசியக் கல்லூரி,
திருச்சி.

முன்னுரை

டி.கே..சி. என்ற மூன்று எழுத்துக்களால் தமிழுலகில் நன்கு அறிமுகமானவர் டி.கே. சிதம்பரநாத முதலியார். 1881-இல் தென்காசிக்கு அருகில் உள்ள களங்காடு என்னும் ஊரில் பிறந்த டி.கே.சி. 1927 முதல் 1930 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். அப்போதைய வெள்ளை அரசு பாரதியின் பாடல்களைத் தடைசெய்து இயற்றிய சட்டத்தை எதிர்த்துப் பேசியுள்ளார். 1930 முதல் 35 வரை இந்துமத அறநிலையத்துறை ஆணையராக இருந்த போது "மகேஸ்வர பூஜை" என்னும் பெயரால் சமபந்தி விருந்து நடத்தியுள்ளார்.

திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் தமது இல்லத்தில் 1935-இல் "வட்டத்தொட்டி" என்ற இலக்கிய வட்டத்தை ஏற்படுத்தினார். அந்த இல்லத்தின் வட்டமான முற்றத்தில் இலக்கிய நண்பர்கள் சுற்றி அமர்ந்து இலக்கியம், கலை தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு வந்தனர். இந்த அமைப்புத்தான் டி.கே.சியை இலக்கியத் திறனாய்வுத்துறையில் ஈடுபடுத்தக் காரணமாக இருந்தது. "பண்பாடு" என்ற சொல்லை உருவாக்கினார் டி.கே.சி. இவரை "ரசிகமணி" என்று பாராட்டி மகிழ்ந்தார் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி.

டி.கே.சி. 1941-இல் "இதய ஒலி" எனும் கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார். கம்பர் யார்?, அற்புதரஸம் போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கம்பன் பாடல்களில் 1,515 பாடல்கள் மட்டுமே கம்பன் பாடியவை எனக் கொண்டு "கம்பர் தரும் ராமாயணம்" என்னும் நூலை 1952-55 ஆண்டுகளில் டி.கே.சி. மூன்று பாகங்களாகப் பதிப்பித்தார். இதனால் பலரின் எதிர்ப்புக்கு உள்ளானார்.

1943-இல் "முத்தொள்ளாயிரத்தை"த் திறனாய்வுக் குறிப்புகளுடன் டி.கே.சி. வெளியிட்டார். முத்தொள்ளாயிரப் பதிப்பில் பாடல்களை டி.கே.சி. திருத்தவில்லை.

"தமிழிசை இயக்கம்", மற்றும் மறையும் நிலையிலும், ஒரு சாராருக்கே உரிய நிலையிலும் இருந்த "பரதநாட்டியக் கலைக்குப்" புத்துயிர் தந்து சிறப்புற வாழும்படிச் செய்த தொண்டு டி.கே.சியைச் சாரும்.

ரசிகமணியின் குரலாக இப்போது நமக்குக் கிடைத்திருப்பதெல்லாம் அவருடைய கடிதங்களே. கடித இலக்கியச் செழுமைக்கு டி.கே.சியும் ஒரு காரணம். பாஸ்கரத் தொண்டைமான், மகராஜன், பட்டாபிராம், ராஜேஸ்வரி போன்றோர்க்கு டி.கே.சி. எழுதிய இலக்கியக் கடிதங்கள் தனித்தனி நூல்களாக வெளிவந்துள்ளன. இனி, இக்கட்டுரையில், கம்பனில் கரைந்த 'ரசிகமணி' டி.கே.சி. குறித்து ஆராயலாம்.

கம்பராமாயணக் கதை

கம்பராமாயணத்தில் ஈடுபட்ட டி.கே.சி. செய்யுள்களைப் படித்துப் பலருக்கு உரைத்தார். பின் உணவும் தந்தார். கம்பரது ராமாயணம் புதிய கதையே என்கிறார் டி.கே.சி.

"கம்பரும், ராமாயணத்தின் கதை அம்சங்களிலும் பாத்திரங்களிலும் மிக ஈடுபட்டவர் பக்தியோடு ஈடுபட்டவர். பாத்திரங்களையும், அவைகளின் செயல்களையும், தமிழ் நாட்டில் அனுபவித்த நேர்நேரான அனுபவங்களையும், ஒன்றாய்ச் சேர்த்துப் புதிய கட்டுக்கோப்பு, புதிய பாத்திரங்கள், புதிய உணர்ச்சிகள் எல்லாவற்றையும் கம்பரது இதயம் அற்புதமாய் நிர்மாணிக்க முன்வந்தது. இதயத்திலுண்டான சிருஷ்டியானதால், ஒவ்வொரு அம்சத்திலுமே உயிர்நாடி பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். வார்த்தைகளில், அவைகள் போடுகிற தாளத்தில் (ரிதும்), செய்யுள்க் கோப்பில் எல்லாம், உயிர் நாடி பேசும்"(டி.கே.சி. (ப ஆ), கம்பர் தரும் ராமாயணம், முகவுரை, ப. Vii) என்பதன் வழி கம்பனில் கரைந்த டி.கே.சியின் இதயத்தை உணரமுடிகிறது.

ஈர்த்தமைக்குக் காரணம்

கம்பராமாயணத்தைப் பெரிதும் ரசித்தவர் டி.கே.சி.. அவர் பன்முறை, திரும்பத் திரும்பச் சொன்னவுடன் கேட்டவர்களுக்கு அப்படியே மனதில் நின்றுவிடுமாம். கம்பன் ஈர்த்தமைக்கான காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார் டி.கே.சி.

"கம்பருடைய கவிகளுக்குத் தனியான ஒரு சுவையுண்டு. செய்யுளினங்கள் பூர்வமானவைதான். ஆனால். இதய பாவத்தை

உட்கொண்ட செய்யுள்கள் அடியெடுத்து வைக்கும்போது, தனியான கதிநயங்களைக் காண்கிறோம். அவைகளின் பாவமும் வேகமும், எங்கேயோ இருந்து வந்தமாதிரி, புத்தம் புதியவையாய் இருக்கும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு தனியான ரஸம். கவிக்கு ஏதோ நவ ரஸம் என்கிறார்கள். ஆனால், கம்பருடைய கவிகளைப் பார்க்கும்போது, ஆயிரக்கணக்கான ரஸங்கள் உண்டென்று சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படித் தனித்த ரஸம் வாய்ந்த, உயிர்த் தத்துவம் வாய்ந்த கவிகளாய் இருப்பதாலேயே, கம்பருடைய கவிகளை இணங்கண்டு கொள்ள முடிகிறது"(மேலது, பக். *x-xi*) என்கிறார் டி.கே.சி.

பாடல்களைத் திருத்தல்

டி.கே.சி. கம்பராமாயணப் பாடல்களைத் திருத்தம் செய்தார். பின்வரும் பாடல், முதல் அடியில் "மாதர்கள் வயதின் மிக்கார்" என்பதை, "மாதர்கள் ஆண்டின் மிக்கார்" எனத் திருத்திப் பதிப்பித்தார் டி.கே.சி.. கம்பன் கழகப்பதிப்பில் (ப. 264) "மாதர்கள் கற்பின் மிக்கார்" என்றுள்ளது.

"மாதர்கள் ஆண்டின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்
வேதியர் வசிட்டன் ஒத்தார் வேறுள மகளிர் எல்லாம்
சீதையை ஒத்தார் அன்னாள் திருவினை ஒத்தாள் அவ்வூர்
சாதன மாந்தர் எல்லாம் தயரதன் தன்னை ஒத்தார்." -

இவ்வாறு டி.கே.சி. திருத்தினார் என்கிறார் ஜஸ்டிஸ் மகராஜன் (மகராஜன், எஸ், ரஸஞ்ஞானி டி.கே.சி., ப. 62.)

செருகு கவிகள்

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கம்பராமாயணச் செய்யுட்களில் கம்பருடைய கவிகளை 1,515 தான் என இனங்காண்கிறார் டி.கே.சி. மற்ற கவிதைகள் பிறரால் செருக்கப்பட்ட செருகுகவிகள் என ஒதுக்குகிறார்.

"கம்பர் பாடிய பாடல்களில் எத்தனையோ பாடல்கள் தொலைந்து விட்டன தான். தொலைந்ததைப்பற்றி நாம் கவலைப்பட்டுப் பிரயோசனமில்லை. புஸ்தகத்தில் அடங்கிய பாடல்களில் ஏதோ சிலவற்றைக் கம்பரது முத்திரையில்லை என்ற காரணத்தால் ஒதுக்க நேர்ந்தாலும் குற்றமில்லை. ஆனால், கவித்துவமில்லாத, ரஸமில்லாத, செருகுகவிகளைச் சேர்த்தல் கூடவே கூடாது. அப்படி இளக்காரம் கொடுத்துச் சேர்ப்போமானால், காவியத்தின் கதி நயம் கெட்டுவிடும்.

அதைவிட, கம்பரது கவிதா சக்தியின் அற்புதமான வேகமும், அழகும் கெட்டுவிடும். பாலில்த் தண்ணீரை விட்டால், பாலும் அல்ல, தண்ணீரும் அல்லதானே"(டிகேசி (பதிப்பு ஆசிரியர்), கம்பர் தரும் ராமாயணம், முகவுரை, பக். *xxiv-v)* என்கிறார் டிகேசி இவ்வாறு கம்பனில் கரைந்தமையால் டிகேசி பல ஆயிரக்கணக்கான கவிதைகளை, 'கம்பன் பாடியவை அல்ல, அவை செருகு கவிகள்' என ஒதுக்குகிறார்.

கம்பநாடகம்

கம்பராமாயணம் நாடகக் கூறுகள் நிறைந்த காப்பியம் என்பது டி.கே.சி. எண்ணம். இதை, "கம்பரும் நாடகப் பண்பும்" எனும் கட்டுரையில் பின்வருமாறு எழுதியுள்ளார். ரசிகமணியின் நடையை அப்படியே பின்வருமாறு பார்க்கலாம்.

"இராமன் எப்போது திரும்பிவருவான் என்றே பதினான்கு வருஷமாக ஏங்கிக் கொண்டிருக்கிறான் பரதன். இடையிடையே இராமன் திரும்பி வரவே மாட்டான் என்றும் எண்ணுகிறான், பயப்படுகிறான். "பதினான்கு வருஷமாகத் தம்பி ஆண்டுகொண்டிருக்கிறான். இனியும்தான் ஆளட்டுமே" என்று எண்ணிவராமல், இருந்துவிடுவானோ என்றெல்லாம் நினைத்து மனசைப் பலபல விதமாகத் துன்புறுத்திக்கொள்ளுகிறான். ஆனாலும், அயோத்தியிலுள்ள ஜனங்கள் எல்லோரும் ராமன் வரவேண்டுமென்று மனப்பூர்வமாகப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறான். தானும் அப்படியே மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறான். இதெல்லாம் காரணமாக, நம்பிக்கையும் உண்டாகிறது. இப்படியாக, நம்பிக்கையிலும் நம்பிக்கையின்மையிலுமாக, பரதனுடைய மனம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

கடைசியாக, இராமன் திரும்பி வரவேண்டிய நாளும் வந்துவிட்டது. பகல் முழுதும் எதிர்பார்த்தான், வரவில்லை. சரி, வரமாட்டான் என்ற நிச்சயத்துக்கு வந்து, தன்னைச் சேர்ந்தவர்களையெல்லாம் வரவழைத்து அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு இராமனிடத்தில் சொல்லிய உறுதிப்படி அக்கினிப்பிரவேசம் செய்யப்போகிறான். சுற்றி நிற்கிறவர்களெல்லோரும் ஒரே துக்கத்தில் மூழ்கியவர்களாய், சிலைகள்போல நிற்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் "வந்து விட்டான் ராமன்!" என்று சொல்லிக் கொண்டு அனுமார் வந்து அக்கினிகுண்டத்தைத் தன் கைகளினால் அறித்துவிடுகிறார். இந்த

ஆனந்தச் செய்தியைக் கேட்டவுடன் பரதன் நிலை என்னவாயிற்று?

"வேதியர் தமைத்தொழும்" - அதாவது பக்கத்தில் நின்ற வேதியர்கள் காலில்ப்போய் வீழ்ந்தான். என்ன எண்ணத்தோடு? "நீங்கள் ராமன் வரவேண்டுமென்று பிரார்த்தித்தீர்கள்", வந்து விட்டான். உங்களுக்கு வந்தனம்" என்கிற பாவனையில் அவர்களை நமஸ்கரித்தான். இது இயற்கைதானே?

பிறகு, மற்றொரு புறம் நின்றுகொண்டிருந்த அரசர்கள் காலில் வீழ்ந்தான். அதாவது, தனக்குக் கப்பங்கட்டுகிற சிற்றரசர்கள் காலில் வீழ்ந்தான். ஆனால், இதில் சம்பிரதாய விரோதம் இருப்பதால், கொஞ்சம் அறிவு மாறாட்டம் உண்டென்றே தோன்றும்.

"வேதியர் தமைத்தொழும் வேந்த ரைத்தொழும்
இதற்கு மேல், தாதியர் தமைத்தொழும்"

வேலைக்காரிகள் காலில் வீழ்ந்தான் என்றார். இதோடு நிற்கவில்லை ஒரு தூணைப் பார்த்துத் தான்தான் அது என்று மயங்கி நமஸ்கரிக்கிறான். (குடிகாரன் லாந்தல் கல்லைப்பார்த்துத் தானே அங்கு நிற்கிறதாக எண்ணுவது போல).

ஆகவே, எதையும் அவன் நேர்முகமாக உணர்ந்த பாடில்லை. சிறிதுநேரம் உட்கார்ந்தே இருக்கிறான். பேச்சு ஒன்றுமில்லை. பிறகு ஒரு காரணமும் இல்லாமல் எழுந்து ஏதோ சுவரைப் பார்த்த வண்ணமாய் நின்று கொண்டே இருக்கிறான். ஜன்னல் வழியாகக் கம்பர் இவ்வளவையும் பார்த்துவிட்டு, 'ஆகா! சகோதர வாஞ்சையாகிய இந்தக் காதல் செய்கிற வேலையெல்லாம் கள்ளு செய்கிற வேலையாகவே இருக்கிறது' என்று வியக்கிறார். இந்த வியப்பைக் கவியில் பார்ப்போம்.

"வேதியர் தமைத்தொழும் வேந்த ரைத்தொழும்
தாதியர் தமைத்தொழும் தன்னை யேதொழும்
ஏதும்ஒன் றவிகிலான், இருக்கும் நிற்குமால்
காதல்என் றீதுமோர் கள்ளின் தோற்றிற்றே!" -

(கம்பர் தரும் ராமாயணம், யுத்தகாண்டம், மீட்சிப்படலம், பாடல் எண். 363)

"ராமன் வருகிறானென்ற சந்தோஷச் செய்தியைக் கேட்டதனால் உள்ளத்தில் உண்டான ஆனந்தம் மேலே சொன்ன மெய்ப்பாடுகளாய் வெளிவரப் பார்க்கிறோம். நாடகத்தில் இதுதான் முக்கியமான அம்சம்.

சொல்லும் மெய்ப்பாடும் இவையானால், கம்பராமாயணத்தைக் கம்ப நாடகம் என்று சொன்னது ரொம்பவும் பொருத்தமான விஷயந்தானே?"(டி.கே.சி., கம்பர் யார்?, சென்னை), பக். 27-30.) என்கிறார் டி.கே.சி.

கம்பனில் கரைந்த டி.கே.சி.யின் இதயத்தை அவருடைய, 'கம்பர் யார்?' (வானதி பதிப்பக வெளியீடு, சென்னை) எனும் நூலின் வழி உணரலாம்.

டி.கே.சி.யின் விருப்பம்

"கம்பரும் தமிழரும்" எனும் கட்டுரையில் கம்பரை அனுபவிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழரின் கடமை என்கிறார். கம்பர் பாடல்களைப் பாடி அனுபவித்தலே தம் விருப்பம் என்கிறார் டி.கே.சி.

"அனுமாருடைய உயர்ந்த உருவத்தையும் சக்தியையும் பார்த்துச் சீதை வியக்கிறாள். 'என்னைக் கண்டுபிடிக்க நீ ஒருவன் இல்லாது போயிருந்தால் இராமருடைய அருளை யார் அறியப்போகிறார்கள்? அவருக்குப் புகழ் ஏது? கிடையாதுதான். ஆனால் உன்னுடைய பராக்கிரமம் முழுதும் தெரிய வேண்டுமானால் இந்த இலங்கை ஏழு கடலுக்கும் அப்பால் இருந்திருக்க வேண்டாமா?" என்கிறாள்.

"ஆழி நெடுங்கை ஆண்தகைதன் அருளும் புகழும் அழிவின்றி,
ஊழி பலவும் நிலைநிறுத்தற்(கு) ஒருவன் நீயே உளையானாய்!
பாழி நெடுந்தோள் வீரா, நின் பெருமைக் கேற்ப பகைஇலங்கை
ஏழு கடற்கும் அப்புறத்த (து) ஆகா திருந்தது இழிபன்றோ!" -
(கம்பர் தரும் ராமாயணம், சுந்தரகாண்டம், உருக்காட்டுப் படலம், பாடல் எண். 67)

"இந்தச் செய்யுளைப் பாடப்பாட, அதாவது ஆர அமர பாவத்தை பொட்டிப் பாடப்பாட, என்ன தோன்றும்! சீதை பேசுவதற்கென்றே சொல், இசை, எதுகை, மோனைகளைத் தமிழ்த் தெய்வம் அமைத்ததாகத்தான் தோன்றும்.

இந்த மாதிரிப் பாடல்கள் ஆயிரக்கணக்காக அல்லவா இருக்கின்றன! அவை தமிழ்மக்கள் பூனியில் தோன்றிய ஆதிகாலத்திலிருந்தே அவர்கள் மனத்தில் எழுந்த உணர்ச்சி தத்துவங்கள் எல்லாமே நிறைந்து பரிமளிக்கிற பாடல்கள். ஷேக்ஸ்பியரை ஆங்கிலேயர் ஏகோபித்து அனுபவிக்கிறதுபோல நாமும் ஒன்றுபட்டுக் கம்பர் பாடல்களைத் தமிழ் வழங்கும் நாடெங்கும் தீவகம் எங்குமே பாடி அனுபவிப்போமானால் தமிழுலகம் வானுலகமாக மாறாதா!" (மேலது, பக்.105-106) என்கிறார் டி.கே.சி.

தொகுப்புரை

1. தம்முடைய உள்ளுணர்வையும் தாம் அடைந்த அனுபவத்தையும் பிறருக்கு உணர்த்தியவர் டி.கே.சி.

2. கம்பனில் கலந்தார், கரைந்தார் டி.கே.சி.

3. 'வட்டத்தொட்டி' மூலம் கம்பர் கவிதைகளைப் பலருக்கு எளிய முறையில் பரப்பியவர் டி.கே.சி.

4. 'ரசிகமணி' எனும் பட்டத்திற்கேற்ப கம்பனை ரசித்தவர், பலருக்கும் சொன்னவர் கம்பராமாயணத்தை, 'கம்பர்தரும் ராமாயணமாகப் பதிப்பித்தவர் டி.கே.சி.

கம்பனில் கரைந்த டி.கே.சி

பேராசிரியர் பி.தெட்சணாமூர்த்தி (பணிநிறைவு)
திருநெல்வேலி.

முன்னுரை

திருநெல்வேலி மாவட்டத்தில் கம்பராமாயணத்தில் கரைந்தவர்கள் பலர் எனினும் பி.ஸ்ரீ. ஆச்சார்யா டி.கே.சிம்பரநாத முதலியார் வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இவர்களுள் இரசிகமணி, டி.கே.சி அவர்கள் எது கம்பன் பாடல் எது போலி எனக் கண்டு தெளிந்து 'கம்பர் தரும் இராமாயணம் எனும் நூலை அளித்துள்ளார்கள். அந்நூலுள் முதற்பாகமான பால, அயோத்தியா காண்டங்கள்வழி இரசிகமணி தம்மைக் கம்பனில் கரைத்துக் கொண்டவிதத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஓசையே கருவி

தொல்காப்பியம் செய்யுள் உறுப்புகளை இருபத்தாறாகப் பகுத்தவற்றுள் ஒன்று, ஓசை. இவ்வோசை பாடலை வாய்விட்டுப் பாடும் போதுதான் அறிய இயலும் இச்செயலையே துலாக் கோலாகக் கொண்டார் இரசிகமணி, பாவோசைகள் நான்காயினும் அவற்றின் விரிவுகள் பல. ஆசிரியப்பா ஓசையை இளங்கோவும் சாத்தனாரும் பாடி, பாடக் கூறினார். பாவினங்களையும் பாட வைத்த காப்பியக் கவிஞர்களில் திருத்தக்க தேவரும் கம்பரும் சேக்கிழாரும் பரஞ்சோதியாரும் குறிப்பிடத்தக்கவர்கள். கம்பர் 'விருத்தம் எனும் ஒண்பாவில் உயர்ந்தவன்' எனப் பாராட்டப் பெற்றார். விருத்தப்பா ஓசைகளைப் பலவாறாகப் பகுத்துப் பாடல்கள் இயற்றியவர். கம்பர் தந்த பல்சுவைப்பாடல்களாக பார்த்து அசல் எது நகல் எது என்று பகுப்பாய்வு செய்த இரசிகமணி தம் விளக்கவுரை வாயிலாக அழகியல் முறையில் அணுகிய தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

வாமன வடிவம்

'டி.கே.சிதம்பரநாத முதலியாருக்கு (1881-1954) ரசிகமணி எனப் பெயர் தந்தவர் கல்கி டி.கே.சி. தமது அழகியல் பார்வையால் பத்தாயிரம் நாலாயிரமாகக் குறுகியது. இந்நாலாயிரமும் எதிர்ப்புக் குரலிடையே வீடுதோறும் சென்றடையும் பணியை ஏற்றது கல்கி என்ற வார இதழாகும். உண்மையான கவிதையை எப்படி அனுபவிக்கிறது என்பதையும் டி.கே.சியிடம் தான் கற்றேன்' என்று எழுதியவர் ராஜாஜி.

பழங்கதைக்குப் புத்துரு

கம்பனில் கரையுமுன் அவரை அண்மைப்படுத்திக் கொள்கிறார். டி.கே.சி. 'கம்பரின் அயனம் பொதிகைச் சாரல் பாபநாசத்திலும் இமயமலைச் சாரலிலும் இருந்திருக்கிறது' என்கிறார் இராவணன் அனுமார் தாடகை ஜடாயு போன்ற பாத்திரங்கள் தமிழரே. "இந்தப் பாத்திரங்களையும் இதய பாவங்களையும் எத்தனை எத்தனையோ சந்தர்ப்பங்களில் நேர் நேராகவே கம்பர் பார்த்திருக்கிறார்". (முகவுரை Xii) 'தசரதர்கள் இராமர்கள் சீதைகள் எனக் கம்பர் கண்ட பாத்திரங்கள் யாவரும் தமிழர்களே. இராமாயணத்தின் கதை. அம்சங்களில் பாத்திரங்களில் ஈடுபட்டு தம் காலத்திற்கு ஏற்பப் புதுப்புது உருவங்களைத் தந்தவர்' என்பது டி.கே.சியின் கருத்து. கம்பரது இராமாயணம் புதிய கதையே. கம்பரது இதயத்தில் தோன்றிய படைப்பு. கம்பரின் "வார்த்தைகளில் அவைகள் போடுகிற தாளத்தில் ரிதம்) செய்யுள்க் கோப்பில் எல்லாம் உயிர் நாடி பேசும்" என்று காண்பித்துக் கொண்டுதான் டி.கே.சி கம்பரில் கரைகிறார்.

ரஸபாவம்

கம்பரின் கவிகளுக்குத் தனிச்சுவை விருத்தப்பா பழைமையானதுதான் அதில் கதிநயம் கண்டவர் கம்பர். கம்பரின் இதய பாவத்தை உட் கொண்டபின் பாவமும் வேகமும் புத்தம் புதியதாய் புகுந்து ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு தனி ரஸமாய் வெளிப்படுவதை ரசித்தவர் ரசிகமணி. ரசிகமணி சுவைத்தபோது ஏற்பட்ட தனித்த ரஸங்களே கம்பரைத் தமக்கு இனம் காட்டியதாக டி.கே.சி கூறியுள்ளார். சந்த ஓசையில் தான தன தன என்ற குறியீடுகளை அமைத்து பதம் பிரித்துப் பாடல்களைத் தமது நூலில் பதிப்பித்துள்ளார். ரஸ பாவங்கள் வாயிலாகச் செருகுகருவிகளைக் கண்டறிந்தவர். அதன் விளைவே வாமன வடிவம்.

பாவம் காட்டும் பாடல்கள்

வாமன வடிவமான கம்பர் தரும் ராமாயணம் பால, அயோத்யா, காண்டங்களில் 718 பாடல்களே உணர்ச்சியும் உண்மையும் உள்ளவை. உள்ளத்து உள்ளது கவிதை உண்மை தெரிந்துரைப்பது கவிதை என்ற கவிமணியின் கவிதை வரையறைக்கு ஒப்பவே 718 பாடல்களும் உள. கவிப்பண்புடையவையே கவிதைகள். பாவம் என்பது பாவனை அதுவும் உள்ளத்து உணர்ச்சியால் உருவாக்கப்பெறும் உடல் பாவனை மெய்ப்பாடு எனலாம். ஓசையும் மெய்ப்பாடும் உள்ள பாடல்களே

பாவம் காட்டும் பாடல்கள்' எனக் கொண்டார். டி.கே.சி. 'பாவத்தோடு பாடும் போது ரஸனை வந்து விடும். கருநாடக இசைப்படிப் பாடலைப் பாடச் சொல்லவில்லை. சொல் ஒழுங்கிற்கு ஏற்ப அவரவர் அமைத்துக் கொள்ளும் இசையே எனினும் பாவத்தோடு பாடவேண்டும். பாடலின் அழகு புலப்படும்படி சந்த ஓசையில் பாடினால் போதும்' என்கிறார் டி.கே.சி. சந்த ஓசைக் குறியீடும் தந்து விடுகிறார். ஆறாயிரத்தையும் பாட வழி வகுத்துள்ளார் கோசல நாட்டின் வளம் கூற வந்த ஒரு பாடல் சந்தம்

தானை தனனை தனனை தான

"கோதைகள் சொரிவன குளிர் இள நறவம்
பாதைகள் சொரிவன பருமணி கனகம்
ஊதைகள் சொரிவன உறையுறும் அமுதம்
காதைகள் சொரிவன செவிநுகர் கவிகள்" (பக் 11- பா-12)

'பெண்களின் நடையில் சாயல்கள் (பாவங்கள்) பல உள' என்கிறார். 'இடங்கொள் சாயல்' என்ற பாடலுக்கு விளக்கம் தரும்போது 'சாயல் என்பதைப் பாவம்' என்கிறார்.

சந்த அமைப்பில் பா உரு

கையடைப் படலம் விசுவாமித்திர முனிவர் வந்த போது தசரதன் எழுகிறான் அவன் மார்பு ஆரமும் பதக்கமும் ஒளி வீசுகின்றன.

தானனை / தன்னனை / தன்னனை / தன்ன

"வந்து முனி / எய்து தலும் மார்பில் ஆலைஆரம் அந்த
தலத்(து)இரவி அஞ்சஒளி விஞ்சசக்,
சந்த மல ரிற்க டவுள் தன் வரவு காணும்,

இப்பா உரு புதுக்கவிதை வடிவம் போல உள்ளது. சந்த குறியீட்டிற்கு ஏற்ப பாவடிவம் அச்சேற்றப்பட்டுள்ளது. முனிவர் தசரதனைப் புகழ்கிறார்.

தானான தானான தானான தானான தானன தன

"என் அனைய முனிவரும் இமையவரும் இடையூ(று) ஒன்று
உடையரா னால், பல்நகமும் நகு வெள்ளிப்
பனிவரையும், பாற்கடலும், பதும பீடத்து (பா-29)

பாடலின் உருவம் சந்தக் குறியீட்டிற்கு ஏற்ப அமைந்துள்ளது.

சமகால விளக்கம்

கார்முகப் படலம் இராமன் வில்லை நோக்கி நடக்கிறார்.

"தோகையர் இன்னை
சொல்லிட, நல்லோர்
ஓகைவி ளம்பிட,
உம்பர் உவப்ப, (பா - 115)

என்ற பாடலில் என்ற பாடலில் உள்ள ஓசை உவகை என்பதின் திரிபு எனக் கூறாது. கற்றோர் 'பலேபலே' இடம் பெறுகிறது. சனகனை வெள்ளை மனத்தவன் என்று கம்பர் கூற ரசிகமணி தற்கால வழக்கில் விவேகமில்லாதவன் சுத்த பைத்தியக்காரன் என நேரடியாகக் கூறி-விடுகிறார் டி.கே.சி.

சீர் பிரிந்த முறையில் பாடுக

அயோத்தியா காண்டம் 'நகர் நீங்கு படலம்' வசிட்டரின் வருகை பற்றிய பாடல்,

தானான தன்னான தன்னான தன்னை

"உரைசெய் பெருமை உயர் தவத்தின் ஓங்கல்
புரசை மதக் களிற்றாள் பொற்கோயில் முன்னர்
முரசம் முழங்க முடி சூட்ட மொய்த்தாண்(டு)
அரசர் இனி திருந்த நல்ல வையன் ஆனான்" (பா - 353)

என்ற பாடலைத் தாளத்தோடு தாளத்துக்கு இளக்கம் கொடுத்துப் பாடினால் பாவம் ஒட்டிக் கொள்ளும் என்கிறார் டி.கே.சி. நல்ல வையன் என்பதற்கு அரசர் கூட்டத்திற்குள் என்று விளக்க உரை தருகிறார்.

கம்பரின் கவிதைகளில் சுவை கண்டார். கண்ட சுவைகளை வெளிப்படுத்த திரு விக்கிரமனை (10500) வாமன (6000) வடிவமாக்கினார். அகவல் ஓசை ஒன்று தான். அதன் இனத்தில் பிறந்த பாடல் ஓசைகளோ பல. அவ்வோசைகளைப் பிறரும் கேட்க ஒலித்துப் பாட வேண்டும். சீர் பிரித்துத் தந்து சந்த ஓசைக் குறியீடுகளும் குறித்து உள்ளத்தில் பாவனையை உருவாக்கி பாடித்தாம் கம்பரில் கரைந்ததாகக் கூறுகிறார் டி.கே.சி.

கம்பன் அடிமை கம்பன் அடிப்பொடி சா.கணேசன்

திருமிகு. நா.மீனாட்சிசுந்தரம் (கவிஞர் மீனவன்)
காரைக்குடி

முன்னுரை

கம்பனை மறவாத நெஞ்சினர். மாசுமறுவற்ற காந்தியவாதி. கொடைவள்ளல் அழகப்பாவின் இன்னுயிர்த் தோழர். அழுத்தமான தேசியப் பற்றுஉடையவர். தனித்தன்மையுடைய சிந்தனாவாதி. இராமாயணம் என்ற புராணத் தொடர்பு உடைய வரலாற்றினைக் கவிதையிலே பாடி வைத்த கவிச்சக்கரவர்த்தி கம்ப நாடனது கவிதையில் காணப் பெற்ற சிந்தனைகளை உலகவிய வைத்தவர் கம்பன் அடிமை.

கம்பன் அடிப்பொடி சா.கணேசன். அவருடைய எண்ணிலாச் சிறப்புக்களைஇநூற்றாண்டு கண்டிட்ட சாதனையாளரின் வரலாற்றுத் தடத்திலே உள்ள சில தடங்களை, மீண்டும் நினைவில் மலரச் செய்யும் முயற்சியே இந்தக் கட்டுரை.

தனிமுலகில்காரைக்குடி-காரைக்குடிஎன்றநகரம்உலகவரலாற்றில் தமிழுலகில் மட்டுமின்றிக் கல்வியுலகிலும் நீங்கா இடம்பெற்றுள்ளது. நாட்டு விடுதலைப்போராட்ட வரலாற்றிலும் நீடித்த பங்காற்றியுள்ளது."கொடைவிளக்கு"என்று பேராசிரியர் முனைவர் வ.சுப.மாணிக்கனார் குறிப்பிட்டபடி, மகளிர் கல்விக்கு "வீடும் கொடுத்த விழுத்தெய்"வமாக(வ.சுப.மா.கொடைவிளக்கு)விளங்கும் அழகப்பர் இன்று ஒப்பற்ற பல்கலைக்கழகம் காண்கின்றஅளவு கல்விக்கொடையளித்துக் காரைக்குடியைக் கல்விக்குடியாக்கியவர். செட்டிநாட்டின் சிறந்த சீர்திருத்தவாதியும், கம்பனில் தோய்ந்து "இராமகாதை" என்ற நூலை வழங்கியவருமான சீர்திருத்தச் செம்மல் சொ.முருகப்பா, கம்பன் முதலான காவியங்கள் அனைத்தையும் நினைத்தவுடன் பாராமலேயே சொல்லுகின்ற ஆற்றலுடன் காந்தியைத் தெய்வமாய்க் கருதிய தமிழ்க்கடல் இராய.சொக்கலிங்கனார்இ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஈடுபட்ட தியாகிகள் ஆகியோரைப் பெற்ற காரைக்குடி நகரமே நம்கம்பனடிப்பொடி சா.கணேசனாரையும் பெற்றெடுத்துப் பெருமை கொண்டது.

பெற்றோரும் கல்வியும்

தந்தையார் காரைக்குடியில் புகழ்பெற்ற வீர.குடும்பத்தைச் சார்ந்த

சாமிநாதர். தாயாரின் பெயர் நாச்சியம்மை.காரைக்குடி ரங்கவாத்தியாரின் பாடசாலையில் கல்வி. தமிழைக் கற்றுத் தந்தவர் சிதம்பர வாத்தியார்.

இவரே தமிழ்க்கடல் திரு.இராய.சொ., சொ.முருகப்பா ஆகியோருக்கும் தமிழ் ஆசிரியராய்இருந்தவர். இதனைக் கம்பன் அடிப்பொடிஅவர்கள்தான் பாடிய "தமிழ்த் திருத்தொண்டத் தொகை"யில்

"வழுத்துமென்தாய் உயர்லீநாச்சி யம்மையார்க்(கு) அடியேன்
மதித்தந்தை திருசாமி நாதற்கும் அடியேன்
எழுத்தறிவு நல்லரங்க வாத்தியார்க்கும் அடியேன்
இலக்கியஞ்சொல் சிதம்பரப்பேர் ஏந்தலுக்கும் அடியேன்"

(தமிழ்த்தாய் பிரபந்தம் - தமிழ்த் திருத்தொண்டத் தொகை-28)

என்று பதிவு செய்துள்ளார்.

விடுதலைத் தொண்டு- கதரன்றி வேறுதுணி அணியாதசா. கணேசன், 1908 இல் பர்மாவில் இருந்த பொழுதே விடுதலை ஆர்வமுடையவராய், விடுதலை வேள்வியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.தாயகம் திரும்பியவுடன் காரைக்குடியைச்சார்ந்த தியாகிகள் பலரின் கூட்டுறவால், விடுதலைப் போராட்டத்தில் தீவிரம் காட்டியமையால், ஆங்கில அரசு அவரைக் கைதாக்கி, அலிபுரம் சிறையில் அடைத்தது. அந்தச்சிறைவாசம் 18 திங்கள் நீடித்தது. ஒருமுறை இவரைக் கைது செய்யவந்த ஆங்கிலேயஅதிகாரிகள் சுடுவதற்கான ஆணையுடன் வந்து, துப்பாக்கியை இவர் மார்புக்கு நேரே நீட்டியபோது, தான் அணிந்திருந்த சட்டையைக் கிழித்து மார்பைத் திறந்து காட்டினார்.

அதிகாரிகள் அவரைச் சுடாமல் அங்கிருந்த விலையுயர்ந்த பொருள்களைச் சேதப்படுத்தினர். இவரோ அவற்றைப் பற்றி எள்ளவும் கவலை கொள்ளாமல் தான்சேர்த்து வைத்திருந்த நூல்களைக் காப்பாற்றுவதில் தீவிரம் காட்டினார். இவரது அரசியல் குருவாகவிளங்கிய சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் தொடங்கிய சுதந்திராக் கட்சியில் இணைந்து, 1962 இல் காரைக்குடிச் சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராகிப் பணியாற்றினார். ஒருமுறை நடந்த தேர்தலில் இவர் செட்டிநாட்டரசரை எதிர்த்துப் போட்டி-யிட்டுத் தோல்வி கண்டார். அத்தேர்தலை எதிர்த்துப் பல்லாண்டு காலம் வழக்கும் நடத்தினார். தமிழ்த்தொண்டில் கணேசனார் -

பின்னாளில் இவர் கம்பனைக் கற்கத் தொடங்கியகாலை, இவருக்குத் தமிழ்க் குருதேவராக அமைந்தவர், மதுரைக்காமராசர் பல்கலையின் முன்னாள் துணைவேந்தராய் இருந்த தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் சொல்லின் செல்வர் இரா.பி. சேதுப்பிள்ளை, தோழர் விவா, பேராசிரியர் அ.சீனிவாசராகவன், பேராசிரியர் எஸ்.இராமகிருட்டினன், வையாபுரிப்பிள்ளை, நீதிபதி மகராசன், மாவட்ட ஆட்சியாளர் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் முதலியோர். இன்னும் விரிப்பில் பெருகும்.

ஆயினும் இவருக்குக் கம்பனில் பேரார்வம் ஊட்டியவர் இரசிமணி டி.கே.சி. அவர்கள்.இதனைத் தான் பாடிய "திருத்தமிழ்த் தொண்டத்"தொகையில்

"பழுத்ததமிழ் நிறைசேதுப் பிள்ளைக்கும் அடியேன்
பலவழியில் ஊக்குவித்த ராஜாஜிக்கும் அடியேன்
முழுத்தகுதிக் குருதேவர் தெ.பொ.மீக்(கு) அடியேன்"

(தமிழ்த்தாய் பிரபந்தம் - தமிழ்த் திருத்தொண்டத் தொகை-28)

என்று பாடியள்ளார். இவருக்குப் பக்கத்துணையாக இருந்த பேராசிரியர்கள், அறிஞர்கள் பலர். பின்னாளில் பேராசிரியர் திருச்சி இராதா கிருட்டிணன்,தொ.மு.சி.இரகுநாதன், நீதியரசர் மு.மு.இஸ்மாயில் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

கம்பனை எழுத்தெண்ணிப் பயின்று, கம்பனின் பல பரிமாணங்களையும் வெளிக்கொணர்ந்தவர் கம்பனடிப்பொடி.கம்பன் கழகத்தைக் காரைக்குடியில் தோற்றுவித்ததைத் தொடர்ந்து, பலஊர்களில் கம்பன் கழகங்கள் உருவாகின.காரைக்குடிக்கம்பன் கழகம் தாய்க்கழகமானது. நேரம் தவறாமை, துணிவு ஆகியவற்றை நெஞ்சிலே கொண்டவர். இலக்குவனை நோக்கிக் குகனைக் காட்டிய இராமபிரான்,

"இவன் தீராக் காதலன்" (கம்பன்-அயோத்தியா காண்டம்-குகப்படலம்-17)

ஆவான் என்று சொல்லியதைப்போல் இவரும் "தீராக் காதலர்" ஆனார்.ஏன்?"அவனுக்கே பிச்சியானார்"(அப்பர் தேவாரம்.தாண்டகம்) என்றே சொல்லலாம்.

இராமாயண அரங்கேற்றம் -இராமாயணம் அரங்றேறம் செய்தநாள் கி.பி.886 ஆண்டு பங்குனித் திங்கள் 4 ஆம் நாள்(பிப்பிரவரி 27 ஆம் நாள் புதன்கிழமை அத்தத் திருநாளில்தான் என்பதை உறுதி செய்து, அந்த நாழில் நாட்டரசன்கோட்டையில் உள்ள கம்பன் பள்ளிப்

படையில்,கம்பனின் 4 ஆம் திருநாளை அரங்கேற்றினார். அதனைக் கீழ்க்காணும் பாடல் உறுதி செய்கின்றது.

"எண்ணிய சகாத்தம் எண்ணுலீற்று ஏழின்மேல் சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றி னானே."

(வீராசாமி செட்டியார் - விநோதரச மஞ்சரி - கம்பர் வரலாறு)

ஏதோ காரணங்களால் மனம் வெறுத்த கம்பர், சோழநாட்டினை விடுத்துத் தம்மினத்தார் ஆகிய உவச்சர்கள் அதிகமாக வாழ்ந்து வந்த செட்டிநாட்டுப் பகுதியான நாட்டரசன்கோட்டையைத் தேடிவந்தபொழுது இயற்கை எய்தினார்.அந்த இடம் ஆ.விக. இராமநாதன் செட்டியாருக்கு உரியது. ஆதலால் அவர் "கம்பர் இராமநாதன் செட்டியார்" எனப்பட்டார். அங்கு விழாத்தொடங்கிய ஆண்டு 1952.

பல்துறை அறிஞர் – சிறந்த கல்வெட்டாய்வாளர்

முதல்அமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற காலத்தில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின் ஆலோசகராய் இருந்து, இவர் வெளியிட்ட "கையேடு"என்ற நூல்மிகச்சிறப்புஉடையது. அதுபோன்ற ஒரு நூல் இதுவரை வெளிவரவில்லை என்னலாம்.பிள்ளையார்பட்டிக் கோவிலைப் பற்றிய கல்வெட்டுக்களை ஆய்வு செய்து, பிள்ளையார் பட்டித் தல வரலாற்றில் வெளியிட்ட ஆய்வறிஞர். வாஸ்து நூல் கைவரப்பெற்ற வாஸ்து விஞ்ஞானி,வான்புகழ் வள்ளுவர்க்குச் சிலைவடித்த சிற்பச்செம்மல் வை.கணபதி ஸ்தபதியார், "என்குரு கணேச ஸ்தபதி" என்று கூறிப் புகழ்ந்த சிறப்புடையவர்."சிற்பச் செந்நூல்" என்ற நூலை எழுதியவர். சித்த மருத்துவ முறைகளை நன்கறிந்தவர்.

கம்பன் பணியில் கம்பன் அடிப்பொடி - கடந்த 74 ஆண்டுகளாக இவர் உருவாக்கிய கம்பன் கழகம் கொண்டாடும் கம்பன் திருநாள் சிறப்புடன் நடந்துவருகிறது.பங்குனித் திங்களில் மகம், பூரம், உத்தரம் ஆகிய மூன்றுநாள்களிலும் காரைக்குடியில் கொண்டாடப் பெறும். நிறைவுநாள் அத்தநாளன்று, கம்பன் சமாதி இருக்கும் நாட்டரசன்கோட்டையில் நடைபெறும். கம்பன் திருநாளை ஒரு வேள்வியாக நடத்தும் கொள்கையர் கம்பன் அடிமையான

கம்பனடிப்பொடி. "கம்பன்வாழ்க! கன்னித் தமிழ்வாழ்க! என்ற முழக்கத்தைத் தன்னுடைய சிம்மக்குரலினால் முழக்கியவர்.கம்பனையும் தமிழையும் பிரித்துப் பார்க்க இயலாத கம்பன் அடிப்பொடியார், கலைஞர் மூலம் தமிழ்த்தாய்க் கோவிலைச் சிற்பநூல் முறைப்படி காரைக்குடியில் கம்பன் மணிமண்டபத்தில் உருவாக்கித் தமிழ்வழிபாட்டிற்கெனத் "தமிழ்த்தாய் பிரபந்தம்" என்ற நூலையும் உருவாக்கியவர்.

இந்தப் பிரபந்தத்தில் சங்கத் தமிழ்ப்புலவர் தொடங்கிக் கம்பன் பணிசெய்த கற்றோர் பலரையும் போற்றிப் பாடியுள்ளார். அத்துடன் தான் உண்டாக்கிய கம்பன் அறநிலையைக் காக்கின்ற கம்பன் அடியவர்களை நோக்கி,

"என்றுமுள தென்தமிழ்த்தாய்க்(கு) எழில்முடியைச் சூட்டும்
எந்தைபிரான் கம்பன்தன் அடியார்க்கும் அடியேன்
நின்றுவளர் கம்பன்அற நிலைகாப்பார்க்(கு) அடியேன்
நெடியதமிழ்த் தாய்க்கோயில் புரப்பார்கட்(கு) அடியேன்"

(தமிழ்த்தாய் பிரபந்தம் - திருத்தமிழ்த் தொண்டத் தொகை-30)

என்று பாடுகிறார். தென்காசிக் கோவிலைக் கட்டிய, பராக்கிரம பாண்டியன், ஒரு பாடலில்

"யாராயினும் இந்தத் தென்காசி மேவும் ஆலயத்து, வாராததோர் குற்றம்வந்தால், அதனை இரட்சித்துப் புரப்பார்கள் திருவடி என் தலைமேலன" (தென்காசிக் கோவில் கல்வெட்டு)

என்று பாடியது போல, இவர் பாடியுள்ளார். திருக்குறட் கருத்துக்களை இவர் பலவிடங்களில் வலியுறுத்திச் செல்கின்றார். பேராசிரியர் முனைவர் தெ.ஞானசுந்தரம் தாம் எழுதிய கம்பர் போற்றிய கவிஞர் என்ற நூலில் இதனை எடுத்துக் கூறுகின்றார். கம்பன் அடிப்பொடியும் தான் எழுதிய வள்ளுவர் மலர்வணக்கத்தில்

"நிறம்படைத்த கவிக்கம்பன் நெஞ்சம் ஆர
நிமிர்தெய்வ மாக்கவியாய் நினைந்து போற்றும்
மறம்கடிந்த தமிழ்அறவோன் மண்டும் கீர்த்தி
வள்ளுவன்தாள் தலைக்கணிந்து மகிழ்ந்து வாழ்வாம்.

(தமிழ்த்தாய் பிரபந்தம்-தமிழ்த் தொண்டத் தொகை-30)

என்று பாடுகிறார். கம்பன் கவியில் மூழ்கி முத்தெடுத்தவர் என்பதைக் கம்பன் தொடர்களை இவர் அப்படியே கைக்கொண்டு பாடும்போது,

"செவிநுகர் கனிகளாயத் திகழ்ந்தாய் போற்றி"

(தமிழ்த்தாய் பிரபந்தம்-கம்பர் மலர்வணக்கம்)

"நடையில் நின்றுயர் நாயக போற்றி"

(தமிழ்த்தாய் பிரபந்தம் - தமிழ்த் திருத்தொண்டத் தொகை-28)

"மக்களே உயிரென வகுத்தனை போற்றி
மனமனனே உடலென மாற்றினை போற்றி"

(தமிழ்த்தாய் பிரபந்தம் - தமிழ்த் திருத்தொண்டத் தொகை-28)

என்று பல பாடல்களில் பாடுவார்.

'உண்ணும்சோறு தின்னும் வெற்றிலை பருகும் நீர் அனைத்தும் கண்ணனே' என்று திவ்யப்பிரபந்தம் பாடுவதுபோல் சா.கணேசனார்க்கு அனைத்தும் கம்பனே. கம்பனையே சுவாசித்துக் கம்பனையே கடவுளென்று கருதிக் "கம்பன் காவியத்தைப் பரப்புவதே தன்வாழ்க்கைக் குறிக்கோள்" என்று கொண்டு கம்பனுடன் இரண்டறக்கலந்துவிட்ட கம்பன்அடிமை கம்பன் அடிப்பொடியாகிய சா.கணேசன் என்பது நிதரிசனமான உண்மை. யான் பாடிக் கம்பனடிப்பொடி நூற்றாண்டுவிழாவில் வெளியிட்ட கம்பன்அடிப்பொடி பிள்ளைத் தமிழ் நூலின் சிறுதேர்ப் பருவத்தில்

"சேலேர் பொன்னித் தேரழுந்தூர்ச் செல்வன் உரைத்தசீர் கேட்டுச்
சிந்தை மகிழ்ந்த அடிப்பொடியே செய்ய தமிழ்க்கோர் சீதனமே"

(கம்பன் அடிப்பொடி பிள்ளைத்தமிழ்-சிறுதேர்-4)

என்றும்,

"நல்லான் கம்பன் நாட்டரசன் கோட்டை நயந்து குடியிருந்தான்
நலங்கள் பேணி விழாக்கண்ட நங்கள் கம்பன் அடிப்பொடியே
செல்லின் வண்ணத் திருமேனிச் செல்வா உருட்டுக சிறுதேரே"

(கம்பன் அடிப்பொடி பிள்ளைத்தமிழ்-சிறுதேர்-8)

என்றும் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

நிறைவுரை

இத்தகைய தொண்டாளர் கம்பன் அடிப்பொடியார் பற்பல அமயங்களில் எழுதிய கம்பனைப் பற்றிய பல கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுஇதுவரை நூலாக வெளிவரவில்லை.தேவார ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்த இராசராச சோழன் வேண்டுகோட்படி நம்பியாண்டார் நம்பி தொகுத்து வெளியிட்டமைபோலக் கம்பன் அடிப்பொடியைப் பின்பற்றி வரும் கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன் அவர்கள். இம்முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதே நம் வேண்டுகோள்.

சிற்பக்கலைக் காவலர் கம்பன் அடிப்பொடி

திருமிகு. பொன்னி செல்வநாதன்,
ஸ்ரீவைத்தியநாத ஸ்தபதி அசோசியேட்ஸ்,
சென்னை.

இன்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் நம் நாட்டின் கலைக்களஞ்சியங்களில் ஒன்றான சிற்பக்கலையை மூவேந்தர்களுடன் பல்லவ விஜய நகர மற்றும் நாயக்க மன்னர்களும் பெரிதும் ஊக்குவித்ததுடன் இக்கலையின் செழிப்பினைப் போற்றி நாடெங்கிலும் பரவிடச் செய்தார்கள் என்பதை வரலாற்றுச் செய்திகள் பகர்கின்றன. எனவேதான், சிற்பிகளை மன்னர் மடியில் தவழ்ந்தவர்கள் என்று குறிப்பிடுகிறோம். அவ்வாறு மன்னர்கள் அரவணைப்பில் திகழ்ந்த சிற்பியர் பெருமக்கள் அவர்களுடைய காலத்திற்குப் பின் என்னவானார்கள் என்று ஆராய்ந்து பார்க்கின் முடிசூடா மன்னர்களாகிய நகரத்தார்களால் ஆதரிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். செட்டிநாட்டு அரசர்களாகிய நகரத்தார் சமூகமானது பழமையான திருக்கோயில்களைப் புதுப்பித்தலும், சேதமுற்றவைகளைச் சீரமைப்பதிலும், மற்றும் புதிய திருக்கோயில்களை நிர்மாணம் செய்கின்ற திருப்பணிகளிலும் தம்மைத்தாமே அர்ப்பணித்தவர்கள்.இப்படிப்பட்ட கலைக்காவலர் பரம்பரையில் தோன்றிய பெருமகனார்தான் கம்பன்அடிப்பொடி சா.கணேசன் ஐயா அவர்கள். அன்று எல்லோராலும் கம்பன் அடிப்பொடி சாவன்னா என்று மிக்க மரியாதையுடனும் பாசமுடனும் அழைக்கப்பட்டவருமாவார்.

இவருடைய காலத்தில் வாழ்ந்திடும் பாக்யம் கிட்டவில்லை யென்றாலும் இவருடைய வளர்ப்பு மைந்தரான பத்மபூஷண் டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்களுடைய குடும்பப் பின்னணியில் இணைந்து அவருடைய பல மகத்தான ஆராய்ச்சிப் பணிகளிலும் தொழில்நுட்பப்பட்டறையிலும் சுமார் 15ஆண்டுகள் ஈடுபடும் பாக்யம் கிடைக்கப்பெற்றேன். அது சமயம் தம்முடைய வளர்ப்புத் தந்தை கம்பன் அடிப்பொடி அவர்களைப் பற்றிய இனிய நினைவுகளையும், அவர் ஆற்றிய அரிதான கைங்கர்யங்களைப்பற்றியும் டாக்டர் வை.கணபதிஸ்தபதி அவர்கள் நிரம்பச் சொல்லியுள்ளார்கள். அச்செய்திகளைத் தொகுத்து இன்றைய தலைமுறையினருக்குச் சொல்லிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு சிற்பியைத் தன்னுடைய வளர்ப்பு மைந்தராக, கம்பன்அடிப்பொடி ஐயா அவர்கள் மனதிலும் செயலிலும் வரித்துக் கொண்டிருந்தார்கள் என்பதைக் கேட்பதற்கே மிகவும் வியப்பாக இருக்கிறதல்லவா? சிற்பிகளின் மரபு மற்றும் பாரம்பரியத்தைப் பற்றியும் நன்கு அறிந்தவர் கம்பன் அடிப்பொடி சாவன்னா அவர்கள். ஏனெனில் கம்பனுடைய காவியத்தில் பலயிடங்களில் வரக்கூடிய தெய்வத்தச்சராகட்டும் அல்லது மயன் என்பான் ஆகட்டும் இவர்களைப் பற்றி உற்று ஆராய்ந்தவராவார். எனவேதான், கம்பனுடைய வரிகளில்,

"பூவரும் அயனொடும் புகுந்து பொன்னகர்
மூவகை உலகினும் அழகு முற்றுற
ஏவின இயற்றினன் கணத்தின் என்பரால்
தேவரும் மருள்கொளத் தெய்வத் தச்சனே" (யு.கா.6198)

என்பதைத் தம்முடைய படைப்புகளில் கோடிட்டுச் சிற்பிகளையும் அவர்களுடைய மரபின் தொன்மைகளையும் சிறப்புடன் போற்றியவர் கம்பன் அடிப்பொடி ஐயா எனில் மிகையன்று.

இப்பெருந்தகையை, தமிழறிஞராக, புலவராக, ஆசிரியராக, பேச்சாளராக, எழுத்தாளராக, அரசியலறிஞராக, நல்ல சிந்தனையாளராக, தியாகியாக என்று பன்முகத்தோற்றத்தில்தான் நம்முடைய சமுதாயம் பார்க்கிறது. ஆனால், இத்துடன் ஐயா அவர்கள் தலைசிறந்த சிற்பக்கலை அறிஞர் என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சிறுவயது முதலே செட்டிநாட்டில் காணக்கிடைக்கின்ற பழமை வாய்ந்த திருக்கோயில்களுக்கெல்லாம் சென்று அங்கு விரிக்கப்பட்டுள்ள சிற்பத்தொகுதிகளைக் கண்டு வியந்து, தம்முடைய வளர்ப்பு மைந்தரான சில்பகுரு டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்களுடன் தாம் கண்டுகளித்த சிற்பச்சிறப்புகளைப் பற்றி மணிக்கணக்கில் பேசுவார்களாம். கம்பன் அடிப்பொடி அவர்கள் ஒரு சிற்பியாக இல்லையென்றாலும், சிற்பங்களையும், திருக்கோயில் நிர்மாண அமைப்புகளையும் அவற்றின் வடிவமைப்பு, தொழில்நுட்பம் என யாவையும் பார்த்துப் புரிந்து ரசிக்கின்றவொரு மனோபாவம் வாய்ந்தவராவார். ஆதலால், இவர் ரசானுபவமும் சுகானுபவமும் பெற்றிட்ட ஒரு சிறப்புடைய கலைஞர் மற்றும் கலைக்காவலர் என்று குறிப்பிடப்படுகிறார்.

சிற்பக்கலையின் நுட்பமிகு செய்திகளை, அது சிற்பமாக இருந்தாலும், சரி திருக்கோயில் கட்டுமானமாயிருந்தாலும் சரி,

அவற்றின் கலைக்கூறுகளை, நெளிவுசுளிவுகளைப் பற்றி விரிவாகப் பேசிடவோ, அல்லது எழுதிடவோ மிகுந்த ஆற்றலைக் கொண்டவர். அவருடைய இந்த ஆற்றலை 1978 ஆம் ஆண்டு தொழில்நுட்பக்கல்வி இயக்கம் மூலம் வெளியிடப்பட்ட, 'சிற்பச் செந்நூல்' என்ற நூலுக்கு அவர் வழங்கிய முகவுரையே மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகும். இந்த முகவுரையானது சிற்பக்கலைத்துறையினைப் பற்றி மிக விரிவாகவும் இலக்கியங்களுடன் ஒப்பிட்டும் ஐயா அவர்கள் எழுதியிருப்பது எக்காலத்திற்கும் பயனுள்ள வகையில் இருப்பதாகப் பேரறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

ஆகையால்தான், தந்தை சா.கணேசன் அவர்களிடம் அளவிட்டுக் காணமுடியாதது எனில் அவருடைய கலை உள்ளத்தின் பரப்பளவும் ஆழமும் தான்' என்று குறிப்பிடுவார் அவருடைய வளர்ப்பு மைந்தரான டாக்டர் வை.கணபதி ஸ்தபதிஅவர்கள்.

கம்பன் அடிப்பொடி அவர்களுக்கு, தமிழ் இலக்கியத்தில் உள்ள ரசனை போன்றே சிற்பக்கலையின்பால் அதீத ஈடுபாடும் ரசனையும் மிகவும் மேலோங்கி இருந்ததை டாக்டர் ஸ்தபதி அவர்கள் பெருமையுடன் எடுத்துரைப்பார்கள். சிற்பக்கலையின் தனித்துவம் உள்ளதை உள்ளபடியில்லாமல் உள்ளதை உணர்ந்தபடி வெளிப்படுத்துவதே தனிச்சிறப்பாகும். இதனடிப்படையில் மலர்ந்ததுதான் தமிழ் உருவம் தரித்தல் நிகழ்வு... ஆம் நம்முடைய தமிழ் அணங்கிற்கு கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்கள் கொடுத்திட்ட கவின்மிகு வடிவமைப்பு என்ற நிகழ்வையே இங்ஙனம் குறிப்பிடப்படுகின்றது.

திருக்கோயில் திருப்பணிகளின்போதும் சிற்ப ஆராய்ச்சி-யின்போதும் சிற்பிகளுடன் நெருங்கிப் பழகியதன் பயனாய் சிற்பக்கலையின் நுணுக்கங்கள், தொழில்நுட்பங்கள், நெளிவுசுழிவுகள் என அனைத்தும் அறிந்தவராக, கம்பன் அடிப்பொடி ஐயா திகழ்ந்திருந்தார். இதனால், நம்முடைய தமிழ்ச் சீமாட்டியின் வனப்பு மிகுந்த உருவ அமைப்பு, ஆடை அணிகலன்கள், சிகையலங்காரம், போன்றவற்றினைக் கருத்துடன் அமைத்திடவேண்டும் என்பதற்குக் கம்பன் அடிப்பொடி ஐயா எடுத்திட்ட ஆராய்ச்சிகளை வார்த்தைகளால் வருணித்திட இயலாது என டாக்டர் வை.கணபதி ஸ்தபதி அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்லுவார்கள். ஐம்பெருங்காப்பியங்களையும், மூவேந்தர்களுடைய சின்னங்களையும், ஒருங்கே அமையப்பெற்றிட்ட தமிழன்னையின் உருவத்தை

மட்டுமல்லாது, அனைவரின் கவனத்தையும் ஈர்க்கின்ற வகையிலே தமிழுக்கெனக் கவின்மிகு திருக்கோயிலையும் கம்பன் மணிமண்டப வளாகத்திலே எழுப்பியுள்ளார்கள். தமிழன்னைக்கு எழுப்பிவிட்ட இந்தக் கோயில் அறுகோண அமைப்பில் கண்கவர் கோலத்தில் படைக்கப்பட்டதாகும். மேலும், தமிழ்த்தாயுடன், வரித்தாய், ஒலித்தாய், கம்பர், திருவள்ளுவர் போன்றோரையும்இங்கு ஸ்தாபித்துள்ளார்கள்.

திருக்கோயில் பணிகள், சிற்பக்கலை ஆராய்ச்சிப்பணிகள் என்று மட்டுமில்லாது, கம்பன் அடிப்பொடி அவர்கள் கலைகளைப் பரப்பிடுவதற்கான கருத்தரங்குகள், கண்காட்சிகள், கண்காட்சிகள், நூல்கள் வெளியீடு போன்ற அனைத்திலும் பங்கேற்று வந்தார். குறிப்பாக, காஞ்சி மகாபெரியவர் நடத்திட்ட இளையாற்றங்குடி சதஸியில் பொருட்செலவுடன் உடல் உழைப்பையும் சேர்த்துத் தந்திட்ட பெருந்தகையாவார். செப்டம்பர் திங்கள் 1962ஆம் ஆண்டு 12 நாட்களாக இளையாற்றங்குடியின் நடைபெற்ற ஆகம சிற்பப் பாரத வியாச வித்வத் சதஸில் வரவேற்புக்குழுத் தலைவராக, அங்குமிங்கு எனாதபடி எங்கும் ஓடியாடி அரும்பணி புரிந்தவராக,இந்தக் கலைக்காவலரைப் பாராட்டிய செய்திகள் அன்றைய நாளிதழ்களில் வெளியாகியிருந்ததை, இங்கே அவசியம் சுட்டிக்காட்டிடவேண்டியதாகிறது.

கம்பன் அடிப்பொடியின் கலை ஈடுபாடானது இவருடைய ரசானுபவத்தை மேன்மேலும் பெருக்கியது. இவருடைய ரசனையானது கவிதையோ, ஓவியமோ அல்லது சிற்பமோ எதுவாகிலும் அதனைப் புரிந்து ரசிப்பதுதான். அவற்றின் உட்கருத்தையும், கலைநயத்தையும் நுணுகி ஆய்ந்து விரிவாகப்பேசிடும் பாங்கே அலாதி என்று சொல்லப்படுகிறது. இத்துணைப் பண்புகளும் ஆற்றலும் ஒருங்கே அமைந்திட இவருக்கு எங்ஙனம் சாத்தியமாயிற்று என்று திகைப்புற்று வியந்ததாம் அறிஞர் உலகம். ஒரு சமயம் இதுபற்றி அவரிடம் நேரிடையாகக்கேட்கப்பட்டது அதற்கு அவர் சொன்ன பதிலாவது.

"கம்பன் ஒரு சகலகலா வல்லவன். அவனைப் புரிந்துகொள்ள நான் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல முனைப்பட்டவை. இதனால், ஒன்றல்ல பல துறைகளைப்பற்றி ஆய்ந்து ஆராய வேண்டியதாயிற்று. இவையெல்லாம் கம்பன் கொடுத்த பிச்சை" என்று சொல்லி அங்கிருந்த யாவரையும் மனம் நெகிழச் செய்தாராம் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்கள்.

கம்பன் அடிமை கம்பன் அடிப்பொடி சா.கணேசன்

திருமதி. கண்ணகிசாமிநாதன்
சென்னை.

கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்த்து கம்பனுக்கு உருவம் கொடுத்து, தமிழ்த்தாய்க்குக் கோயில் அமைத்து, நடமாடும் பல்கலைக்கழகமாகவும் கம்பன் அடிமையாகவும் வாழ்ந்த சா.கணேசன் ஐயா காரைக்குடி வீர.சாமிநாதன் செட்டியார் நாச்சம்மை ஆச்சி தம்பதியருக்கு 06.06.1908 இல் மைந்தனாகப் பிறந்து 05.04.1920இல் காரைக்குடி சா.லெ. ராமாசாமி செட்டியார் - சீதை ஆச்சி தம்பதியரின் மகளான திருமதி. மீனாட்சி ஆச்சி அவர்களை மணந்து 16.12.1926இல் மங்கையர்க்கரசி என்ற மகளைப் பெற்றெடுத்தார். 17.01.1945இல் திரு. பழ. சண்முகம் அவர்களுக்குத் திருமணம் செய்துவைத்தார்கள். அவர்களது குழந்தையாகப் பிறந்ததன் பாக்யம் நான் (கண்ணகி) பெயர்த்தி என்ற பிறப்புரிமையும், ஐயாவிற்கு ஆண்வாரிசு இல்லாத காரணத்தால் 22.08.1983இல் சுவிகாரம் செய்து அந்தப்புதல்வனுக்கு சாமிநாதன் என்று பெயரிட்டு என்னை அவருக்குத் திருமணம் செய்து வைத்து மருமகளென்ற சிறப்புரிமையும் பெற்றதால் எந்தை பிரான் கம்பனின் ஆசியால் சா.க.ஐயாவைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை உங்கள் முன் வருகிறது.

ஐயா அவர்களுடைய தந்தையார் திரு.சுவாமிநாதன் செட்டியார் அவர்கள் ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் தனது வீட்டில் இராமர் பட்டாபிஷேகப் படம் வைத்து இராமாயணம் படித்து பூஜை செய்து வந்தார்கள். கம்பராமாயணம் வசனப்புத்தகமாக இருக்கும். ஆங்காங்கே கம்பனது கவிகளும் காணப்படும். தனது தந்தையாரும் சிறிய தந்தையாரும் இராம காதையை தினமும் படித்து வருவார்கள். அவர்களுக்கு இயலாத வேளையில் ஐயாவைப் படிக்கச் சொல்வார்கள். அதன் விளைவுதான் ஐயாவிற்குக் கம்பனின்மேல் மிகுந்த பற்று ஏற்பட்டு இராமாயணத்தை ஐயப்பாடு இல்லாமல் தெளிவாகப் படிக்க நினைத்து ஆசிரியர், பெரியவர்களை நாடினார்கள். அவர்கள் பள்ளி கல்லூரி சென்று படித்த பட்டதாரி இல்லை. இளம்வயதில் காரைக்குடி ரெங்கநாத வாத்தியார் திண்ணைப் பள்ளியில் பயின்றார். தமிழ் ஆர்வம் கொண்டு திரு.சேதுப்பிள்ளை அவர்களிடமும் காப்பியங்களை விட கம்பருடைய ஒப்புயர்வற்ற கம்பராமாயணம் தான் ஐயாவை மிகவும் ஈர்த்தது. அதில் ஆர்வம் மிகுதியாகி கம்பனை தான் மட்டும் அறிந்து

கொள்வதைவிட இந்த உலகமக்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்றும் 'கம்பயுகமாக' எங்கும் கம்பன் என்றும் கம்பன் என்ற அளவிற்கு கம்பனுடைய புகழ் கொடியை உயர்த்தி உலகெங்கும் பரப்பச் செய்த பெருமைக்குரியவர் சா.கணேசன் (சா.க).

சா.க.ஐயா காரைக்குடியில் படித்து வளர்ந்து வாழ்ந்து வந்தாலும் தனது தந்தையார் சாமிநாதன் செட்டியார் அவர்கள் பர்மாவில் வாணிகம் செய்து வந்தார்கள். ஐயா அவர்கள் தனது 11-14 வயதில் அவர்களுடன் பர்மாவிற்குச் செல்லவேண்டிய சூழ்நிலை. அப்போதுதான், தோங்குவா என்ற இடத்தில் திரு.சேதுப்பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றார்கள். அங்கு நிறைய நூல்களைச் சேகரித்தார்கள். தேனீபோலச் சேகரித்த கதையைக் கேட்டால் கண்கள் குளமாகும். சா.க.ஐயாவிற்குத்தனது தந்தையார் காலை, பகல், இரவு உணவிற்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் பணம் கொடுப்பார்களாம். ஐயா ஒருவேளை மட்டும் பசியாறி மீதி ஒருரூபாய்க்குப் புத்தகம் வாங்கிச் சேகரித்தார்கள். அப்படி 800 புத்தகங்களைச் சேர்த்துள்ளார்கள்.

இப்படி ஐயா சேர்த்து வைத்த கிடைத்தற்கரிய அனைத்துத் துறை சம்பந்தப்பட்ட (கட்டிடம், சிற்பம், கல்வெட்டு, சமையல், ஆய்வு நூல்கள் போன்றவை) 5000- 10,000 புத்தகங்களைக் காரைக்குடி கம்பன் அறநிலை, 'கற்பகம் நிலையம்' ஐயா வீட்டிலிருந்து புத்தகங்களை எடுத்துக்கொண்டு பட்டியல் விபரம்கூட என்னிடம் தரவில்லை. ஆனால், அப்புத்தகங்களைப் பாதுகாக்கவேண்டியது நமது கடமை.

1935இல் தந்தையார் இறந்தவுடன் சா.க. ஐயா அவர்கள் தொழிலில் நாட்டம் இல்லாமல் தமிழ்ப்பற்றும், கம்பரிடம் கொண்ட எல்லையற்ற ஈடுபாடும் காதலும் அதிகமானதால் தாயகம் திரும்பிவிட்டார். பிறகு நாட்டுப்பற்றுக் கொண்டு, தேசவிடுதலைப்போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். 36வது காங்கிரஸ் மாநாட்டுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்கள். அரசியல் மேடைகளிலும் கம்பனைப் பற்றி மறக்காமல் பேசி மகிழ்ந்தார்கள். அரசியலையும் இலக்கியத்தையும் தனது இரு கண்கள் போல நினைத்து செயல்பட்டார்கள். மூதறிஞர் ராஜாஜி நண்பர்களிடம் அறிமுகம் செய்யும்போது கணேசன் அரசியல்வாதிகளுக்குள்ளே ஒரு நல்ல தமிழறிஞர். அதே சமயம் நல்ல தமிழறிஞர்களுக்குள்ளே சிறந்ததோர் அரசியல்வாதி என்பார்கள்.

கம்பனைப் பற்றி வ.வெ.சு. ஐயர் கூறும்போதுதான் கம்பனின் வான்முட்டும் பெரும்புகழை ஐயா உணர்ந்தார்கள். கம்பனுக்கு விழா

எடுத்து அவன் புகழை உலகெங்கும் பரப்ப வேண்டுமென்று ஆர்வம் ததும்ப கம்பன் கழகம் காரைக்குடியில் 1939இல் தாய்க்கழகமாக மலர்ந்தது. கம்பனை நன்கு அறிந்த ரசிகமணி டி.கே.சி. தாத்தா தலைமையில் கம்பன் ரசிகர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கவிச்சக்கரவர்த்தி கம்பருடைய திருவுருவப்படத்தை யானைமேல் வைத்து காரைக்குடியில் நகர்வலமாகக் கொண்டு வந்து மீனாட்சி பெண்கள் பள்ளி மைதானத்தில் மூன்று நாட்களும் கம்பன் சமாதியில் ஒருநாளும் கம்பன் தன் காப்பியத்தை அரங்கேற்றிய நாள் பங்குனி அஸ்தம் என்பதால் நான்காவது நாளில் கம்பன் தன் காப்பியத்தை அரங்கேற்றிய நாள் பங்குனி அஸ்தம் என்பதால் நான்காவது நாளில் நாட்டரசன் கோட்டையில் உள்ள கம்பர் சமாதியில் பார்த்து முகூர்த்தக்கால் ஊன்றி மஞ்சள் குங்குமம் இட்டுப் பூசை செய்வார்கள். அதன் பிறகு நல்லது, கெட்டது என்று சடங்கு சம்பிரதாய வீடுகளுக்குச் செல்லாமல் ஒரு கல்யாண வைபோகத்தில் செய்வது போல கம்பன் திருநாளை மிகவும் சிரத்தையுடனும் நேர்த்தியுடனும் புனிதமாக நடத்தி வந்தார்கள். தன்னுடைய வழிபாட்டு தெய்வமான பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக விநாயகருக்கு, காரைக்குடி முனியய்யா என்ற கற்பகப் பிள்ளையாருக்கும் சிதறு தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து வழிபட்ட பின்னரே விழாவைத் தொடங்குவார்கள். கம்பன் பணியில் ஈடுபட்டு விழா நடத்தி வந்த சா.க.ஐயாவிடம் ரசிகமணி டி.கே.சி. தாத்தா கம்பன் பணிதொடங்கி விட்டது. இனி இது உலகமெங்கும் பரவி விடும் என மனமாரப் பாராட்டிக் கூறிய ஆசியும் வாழ்த்துமே கம்பன் கழகத்திற்கு நீரும் உரமுமாக அமைந்ததாக எண்ணி மகிழ்ந்தார்கள் சா.க.ஐயா அவர்கள்.

1936இல் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டார்கள். 1941இல் காந்தியடிகள் தொடங்கிய தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு பாத யாத்திரையாக தில்லிவரை சென்றார்கள். உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் அலிப்புரத்தில் கைதாகி பாலைவனத்தைவிடக் கொடுமையான சிறைவாசத்தை அனுபவித்து தன் தமிழ்ப்பற்றாலும் கம்பன்மேல் உள்ள எல்லையற்ற ஈடுபாட்டாலும் சிறையில் இருந்த நண்பர்களுக்கு (திரு.கல்கி, திரு.சதாசிவம், நேருஜி, வேலூர் குப்புசாமி முதலியார், அன்பு வேதாசலம் போன்றவர்கள்) கம்பராமாயண வகுப்பும், தமிழும் சமையற்கலையும் கற்பித்து பிற்காலத்தில் அந்த நண்பர்களே கம்பன் கழகங்கள் உருவாக்கும் அளவிற்கு கம்பன் சுவையை ருசிக்க வைத்து ஊக்கமும் ஆக்கமும் கொடுத்த வைராக்கியமான வாழ்க்கையை

வாழ்ந்த பெருமைக்குரியவர் சா.கணேசனார். புதிதான கம்பன் கழகம் தொடங்கும் ஊர்களுக்குச் சென்று கம்பன் தமிழ்த்தாய் திருவுருவப் படமும் 101 வெண் பொற்காசுகளும் அளித்து ஆசி கூறி மகிழ்ந்தார்கள்.

1942ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது, சா.க.ஐயாவைக் கண்ட இடத்தில் சுடும்படி ஆங்கிலேய அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஐயா தலைமறைவாக வாழ்ந்து வந்தார்கள். உடனே அவர்களத (கற்பகநிலையம்) வீட்டை ஜப்தி செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துப் பல லட்சரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைச் சூறையாடியது. ஐயா எதைப்பற்றியும் கவலைப்படாமல், தான் தேனீ போலச் சேர்த்த பொக்கிஷமான அனைத்துப் புத்தகங்களையும் காப்பாற்றும்படி தனது நண்பர்களுக்குத்தெரிவித்தார்கள். அதுமட்டும் முடிந்தவரை காப்பாற்றப்பட்டது. தமிழ்மீதும் நாட்டின் மீதும் உள்ள அக்கறையும், காதலும் பொருள் சேதம் பற்றிக் கவலை துளியும் கொள்ளவில்லை. பிறகு இராஜாஜியின் ஆலோசனைப்படி சென்னை போலீசாரிடம் சரணடைந்தார்கள்.

நீதிபதி திரு. எஸ். மகாராஜன் தாத்தா அவர்கள் இந்தக் கொள்ளைச் சம்பவத்தைக் கேள்விப்பட்டு மிகவும் வருத்தம் அடைந்தார்கள். பிறகு சில நாட்களுக்குப் பின் சா.க. ஐயாவைச் சந்தித்து இது பற்றிக் கேட்டு சங்கடப்பட்டார்கள். அதற்கு சா.க. ஐயா அவர்கள், 'என் சொத்துகளை நான் விடுதலைப் போராட்டத்திலேயே இந்தியத் தாய்க்கு நான் கொடுத்த காணிக்கை' என்று அந்தக் கொள்ளையைப் பெருமிதத்தோடு சொன்னார்களாம். மேலும், உங்களிடம்ஓமர்கையாம் என்ற அழகிய வேலைப்பாடு மிகுந்த புத்தகம் ஒன்றை மாதிரிக்கு வாங்கி - நாமும் கம்பனுக்குப் போதுமான புத்தகம் அச்சிடவேண்டும் என்று வாங்கி வந்த புத்தகத்தைக் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றார்கள். அதுதான் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்று சொன்னார்களாம். இது கேட்டவுடன் மகாராஜன் தாத்தா நாம் அந்தப் புத்தகம் கொடுத்ததைக் கூட மறந்து விட்டோம். ஆனால் சா.க.ஐயாதான் இழந்த சொத்தைவிட இப்புத்தகத்திற்கு எவ்வளவு மதிப்புக் கொடுத்துப் போற்றுகிறார். அவருக்குத் தீரம் கலந்த அமைதி என்று எண்ணி தமது கவலை வெட்கத்திலேயே மூழ்கிற்றாம். தீரம் என்ற சொல்லுக்கு அகராதியில் பொருள் தேடுவதை விட, சா.க. ஐயா வாழ்க்கையில் விளக்கத்தை நன்கு அறியலாம் என்பதை உணர்ந்த ஐயாவின் சிறந்த நண்பர் எஸ்.மகாராஜன் தாத்தா. சா.க. ஐயா பொருளைவிட பெரும்

பொக்கிஷமாகக் கருதி தேனீ போலச் சேகரித்த நூல்களைப் பாதுகாத்து ஆய்வு மாணாக்கர்கள் பயன்படுத்தும்படி சா.கணேசன் நூலகம் என்று பெயரிட்டு அமைத்து, காரைக்குடி கம்பன் அறநிலை அதைப் போற்றி வரவேண்டியது தலையாய கடமையாகும்.

1962இல் ஐயா அவர்கள் அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். 1962-67வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் 1968-1947வரை தமிழ்நாடு தமிழ்நாடு மேலவை உறுப்பினராகவும் தலைசிறந்து விளங்கினார்கள். கல்வெட்டுத் துறையில் அதிக நாட்டம் கொண்டிருந்த சா.க.ஐயாவை அதற்கெனத் தனித்துறை அமைக்க வேண்டும் என்று சட்டமன்றத்திற்கு இத்திட்டத்தை எடுத்துச் சென்று வெற்றியும் கண்டார். தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வும் பாதுகாப்பு மசோதா 1966ஆம் ஆண்டு பக்தவச்சலம் முதலமைச்சராக இருந்தபோது இத்திட்டம் சட்டமன்றத்திற்கு விவகாரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஐயா அவர்கள் அத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் அருமையாகத் தெளிவாக எதிர்க்கட்சியும் ஒப்புக் கொள்ளும்படி எடுத்துப் பேசினார்கள். ஒருமணிநேரம் என்று ஒதுக்கப்பட்ட மசோதா ஒருநாள் முழுக்கப் பேசி இன்று நடைபெற்ற மசோதா என்று அனைவரும் போற்றிப் புகழும் வண்ணம் நடைபெற்று வெற்றி கண்டார்.

1968இல் அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்றது. அதற்குக் கலைக்கண்காட்சிக் குழுவிற்குத் தலைமைப் பொறுப்பேற்று நடத்த சா.க.ஐயாவை கேட்டுக் கொண்டார். அதன்படி ஐயா அவர்கள் கலைக்கண்காட்சியை அனைவருடைய உள்ளம் கவரும்படி சிறப்பாக நடத்தித் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்ததோடு கையேடு என்ற ஒரு அரிய நூலையும் தயாரித்துக் கொடுத்தது அவருடைய புகழுக்கும் பெருமைக்கும் மற்றும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

1968இல் தனது மணிவிழாவை உறவும் நட்பும் கொண்டாட விரும்பியது. ஆனால் சா.க. ஐயா அவர்கள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் திருத்தணி சென்று முருகனை வழிபட்டு உறவுக்கும், நட்புக்கும் வெண்பா எழுதுவதில் சிறந்தவர் ஆகையால் கவிதை எழுதி அனுப்பி ஆசி பொழிந்தார்கள். மணிவிழா நடத்த இருந்த பணத்தைக் கொண்டுதான் காதல் கொண்ட கம்பனுக்கு மணிமண்டபம் எழுப்ப ஆசை கொண்டு அப்பணியில் கானாடுகாத்தான் க.லெ.சித.

லெ. வேங்கடாசலம் செட்டியார், திரு.சா.நா.அ.சொ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் துணைகொண்டு மேலும் பல லட்சங்களைச் சேர்த்து எந்தைபிரான் கம்பனுக்கு மணி மண்டபம் எழுப்பும் பணி அருமையாக நடந்தது. ஆத்மார்த்த அன்பும் கம்பன்மேல் உள்ள தூய பக்தியும் ஐயாவின் கனவை நினைவாக்கி கம்பனுக்கு மாபெரும் மணிமண்டபம் அமைந்தது.

1972இல் இருந்து காரைக்குடி கம்பன்விழா கம்பன் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது. பிறகு கம்பன் மணிமண்டபம் கட்டத் தொடங்கி அதன் பணியைச் செம்மையாகச் செய்ய வேண்டிய காரணத்தால் மிகப்பெரிய கட்டிடம் என்பதால் கம்பன்மேல் கொண்ட தீராத காதல் ஐயாவை அரசியலில் இருந்து தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக விடுத்துக்கொண்டு பிறகு அரசியல் வாழ்க்கையை முற்றும் துறந்து முழுவதும் தன் இலக்கிய வாழ்க்கையாக ஈடுபட நாட்டம் கொண்டு தன்னை முழுவதும் கம்பனுக்கே அடிமையாக்கிக் கொண்டார். எந்த நேரமும் கம்பனைப் பற்றிப் படிப்பதும், கேட்பதும், சிந்திப்பதும், செயல் ஆற்றுவதுமாக கம்பன் மணிமண்டபத்திலேயே இருந்து வந்தார்கள். சிறிய குடிலில் எப்படி ரமணமகரிஷி போன்ற மகான்கள் இருந்தார்களோ, அப்படி ஐயா அவர்கள் கம்பன் மணிமண்டபத்தில் ஒரு சிறிய குடிலில் இருந்து கம்பருக்குப் புகழ் சேர்த்து மிகவும் எளிமையாக வாழ்ந்துவந்தார்கள். நேர்மை தவறாத மாமனிதர். அதன் விளைவுதான் இன்று உலகெல்லாம் கம்பன் கழகங்கள் தோன்றிப் பணி செய்கின்றன.

அரசியலில் இருக்கும்போது நட்புக் கொண்ட திரு.வெங்கடசுப்பா ரெட்டியார், திரு.க.கு.கோதண்டராம கவுண்டர், சுதந்திரா கட்சியில் இருக்கும்போது நட்புக் கொண்ட திரு.ஜி.கே. சுந்தரம் சிறைச்சாலையில் இருந்தபோது நட்புக் கொண்ட திரு.வேலூர் குப்புசாமி முதலியார், திரு.அன்புவேதாச்சலம் பிள்ளை போன்றவர்கள் சா.க.வின் மேல் உள்ள அன்பாலும், கம்பன்மேல் உள்ள ஈடுபாட்டாலும் கம்பன் விழாவை அவரவர் ஊர்களில் ஆரம்பித்து கம்பன் கழகம் பெருக ஆரம்பம் ஆயிற்று. கம்பனுக்குப் புகழ் சேர்க்க வேண்டும் என்ற சா.க. ஐயாவின் நோக்கமும் இப்படி அரும்பி இன்று பூத்துக் குலுங்கிப் பூஞ்சோலையாக உலகெங்கும் மணம் கமழுகிறது. கம்பன் யுகமாக மாறியது. கடல் கடந்து சென்று கம்பனையும் கன்னித் தமிழையும் வளர்த்தவர். இப்படியாக இன்று தமிழ்நாடு, வெளிநாடு உட்பட சுமார்

45 கம்பன் கழகங்கள் தொடங்கி மிகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டாடி வருகிறது.

கம்பனைப் பற்றிப் பேசப் பயந்த காலத்திலேயே கம்பனைப் பற்றிப் பேசினால் எரித்து விடுவோம், கொளுத்தி விடுவோம் என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் மிகுதியாக இருந்த காலத்திலேயே துணிச்சலுடனும் கம்பன் புகழைப் பேசி கன்னித் தமிழை வளர்த்து வந்தார்கள். ஆத்மார்த்தமாகவும் தூய்மையுடனும் நேர்த்தியுடனும் கம்பன்மேல் கொண்ட காதல், பக்தி இன்று எங்கும் கம்பன் புகழ்பரவி அனைவரின் உள்ளத்தையும் மகிழ்வூட்டுகிறது.

முன்காலத்தில் கம்பராமாயணம் ஒரு கதாகாலட்சேபம் போல நடைபெறும். ஆனால், சா.க. ஐயா தமிழ் படித்த அறிஞர்களைக் கொண்டு கம்பனைப் பற்றி அவர்கள் மேடை ஏற்றிப் பேச வைத்து பொதுமக்கள் கம்பனைப் பற்றி நன்று அறிய புதுப்புது உத்திகளைக் கையாண்டு பட்டிமண்டபம், மேல்முறையீட்டுப் பட்டிமண்டபம், நற்றமிழ் முற்றம் போன்ற சுவை மிக்க சுவையூட்டக் கூடிய வகையில் மக்களிடம் எளிதாக கொண்டு சேர்க்கப்படும் வண்ணம் நிகழ்ச்சி தயாரித்து அதை மேடையில் முதன்முதலில் அரங்கேற்றி வெற்றி கண்டவர்கள் தமிழ்நாட்டிலேயே சா.கணேசன் அவர்கள்தான். பல மேடைப் பேச்சாளர்களை உருவாக்கித் தந்தவர்கள். பேச்சாளர்கள் கம்பன் மேடையில் சா.க. ஐயா முன் பேசுவதைப் பெரிதும் பெருமைக்குரியதாகக் கருதினார்கள். தான் படித்து முனைவர் பட்டம் பெறுவதைக் காட்டிலும் (செம்புலமை மெய்கீர்த்தி - (பி.எச்.டி) டாக்டர் என்ற சொல்லுக்கு தமிழாக்கம் செய்தவர் சா.கணேசன்) ஐயா அவர்கள்முன் காரைக்குடி கம்பன் மேடையில் பேசுவதையே பெருமையாக நினைத்தார்கள்.

கம்பன் திருநாள் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் கம்பன் மேடையைப் புனிதமாகப் போற்றுவதிலும் சா.க.விற்கு நிகர் அவரே. அவர் 43 ஆண்டுகளாகக் கம்பன் திருநாளைத் தொய்வின்றி தான் சிறையில் இருந்தபோது கூட தன் உயிர் நண்பர் திரு.மெ.நா.சித. சிதம்பரம் செட்டியார் போன்றவர்கள் மூலம் விழாவை நடத்தி வந்தார்கள். கம்பனுக்கு அடிமையாகவே வாழ்ந்து வந்தார்கள்.

காந்தி வழி நின்று கதர் ஆடையைத்தான் அணிவார்கள். தீபாவளி, பொங்கல் பண்டிகைகளில்கூட புது ஆடை அணிய மாட்டார்கள்.

ஆனால், கம்பன் திருநாள் அன்று நாட்டரசன் கோட்டையில் எந்தைபிரான் கம்பன் சமாதியில் மட்டும் பட்டு வேட்டி உடுத்தி மிகவும் ஆனந்தப் பரவசத்துடன் கம்பனின் மைந்தனாகக் கம்பனுக்கு மலர் அஞ்சலி செலுத்தி வணங்கி அகம் மகிழ்ந்து பூரிப்படைவார்கள்.

கம்பன்றிழா எடுத்து கம்பன் புகழைப் பரப்புவதோடு கம்பனின் கம்பராமாயணத்தை அனைவரும் படிக்க வேண்டி ஒரு நல்ல பதிப்பு மலிவு விலையில் கிடைக்க முயற்சி செய்தார். மர்ரே கம்பெனி அதிபர் திரு.எஸ் ராஜம் அவர்களை அணுகி ஏற்பாடு செய்து வெற்றி கண்டார். தமிழ்க்கடல் திரு.ராய.சொ., கல்விக்கடல் திரு.இராமராசன் ஆகியோரது துணை கொண்டு அப்பணியைச் செவ்வனே செய்து முடித்தார். எந்தைபிரான் கம்பன் அருளால் என்னை இப்பணியில் ஈடுபடுத்தியதை நினைத்து மகிழ்ந்து தன்னைக் கம்பனுக்கே அடிமையாக்கிக் கொண்டார்.

இசையாலும் மக்கள் கம்பனை ரசிக்க வேண்டும் என்று தனது நண்பர் இசைப்பேராசிரியர் டாக்டர் எஸ். ராமநாதன் அவர்களின் துணையோடு கம்பன் பாடலுக்கு இசையமைத்து கம்பன் அருட்கவி ஐந்து என பஞ்சரத்ன கீர்த்தனைகளை ஐயா அவர்கள் கம்பனுக்குப் படைத்து மகிழ்ந்தார்கள். நாட்டரசன் கோட்டை கம்பன் சமாதியில் இசைக்கலைஞர்களைக் கொண்டு பாட வைத்து மகிழ்ந்தார்கள்.

கம்பனைப்பற்றி ஐயா, 'கம்பன் மலர் வணக்கம்', 'அடியேனே அடிமைகொள்', 'அது எதுவோ ஏதேனும் ஆகேனோ', 'கம்பன் யார்?' 'திருத்தமிழ்த்தொண்டத்தொகை' போன்ற கவிதைப் பாசுரங்களைக் கம்பன்மேல் உள்ளம் உருகிப் பாடியதால் என்னவோ நான் சிறு வயதாக இருந்தபோது என் தோழிகள் என்னிடம் 'கம்பன்தானே உன்னுடைய தாத்தா?' என்று கேட்பார்கள். நானும் 'ஆமாம்' என்று மகிழ்ச்சியோடு சொல்வேன். காரணம் ஒருவேளை கம்பன் திருநாள் கல்யாண வைபோக வீட்டு விசேஷமாக நடந்தால்தானோ..?

ஐயா அவர்களுக்கு எல்லாம் அனுபவஞானம்தான். எல்லாத் துறைகளிலும் வல்லவர். அந்தந்தத் துறை வல்லுநர்களே வியக்கும் அளவிற்கு அவருடைய அனுபவ ஞானம் மேலோங்கிச் சிறப்பாகவும் ஆற்றலோடும் விளங்கியது. கம்பனை அவர்கள் படித்துப் படித்து அவனருகில் வெகு வேகத்தில் சென்று தன்னையே அவர்களுக்கு அர்ப்பணித்து விட்டார்கள். காலத்தை வென்று இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மகான்தான் கம்பன் அடிப்பொடி

அவர்கள். கம்பன் திருநாள் கம்பனுக்கே விழா என்றவண்ணம் நடத்திக்காட்டி குறித்த நேரத்தில் தொடங்கி கம்பன் விழாவில் பங்கேற்கும் அறிஞர்கள் எப்பேர்ப்பட்ட பதவியில் இருந்தாலும் குறித்த நேரத்திற்குள் வராவிட்டால் கம்பனுக்கு விழாவே தவிர ஆட்களுக்கு விழா இல்லை என்பதைத் தனது கொள்கையாகக் கடைப்பிடித்து விழாவைச் சரியான நேரத்தில் கம்பன் வாழ்க கம்பன் புகழ் வாழ்க கன்னித் தமிழ் வாழ்க என்ற கணீரென்ற சங்கநாதக் குரல் ஒலிக்க விழாவைத் தொடங்கி விடுவார்கள். அந்தப் பேரொலி இன்று மணியோசை போல உலகெங்கும் ஒலி ஓசை சப்தம் கேட்டு அனைவரின் உள்ளத்தையும் மகிழ்வூட்டுவதன்றி விண்ணுலகத்தில் உள்ள சா.க.ஐயாவைப் போல உள்ள கம்பன் அடிமைகளாகிய டி.கே.சி. தாத்தா, வையாபுரிப்பிள்ளை ஐயா,வ.வெ.சு ஐயா, அருணகிரி தாத்தா, வெங்கடசுப்பா ரெட்டியார் தாத்தா, ஜி.கே.எஸ். தாத்தா, க.கு.கோ.தாத்தா, மகாராஜன் தாத்தா, ரா.பி.சேதுப்பிள்ளை ஐயா, வேலூர் குப்புசாமி தாத்தா போன்றவர்கள் இந்த ஓசையில் மிகவும் ஆனந்தக் கூத்தாடி அவர்கள் அனைரும் இன்று கம்பன்றிழாவைச் சிறப்பாக நடத்தி வரும் அவர்களின்வழித் தோன்றல்கள் திரு. கம்பன் அடிசூடி, திரு.முருகேசன், திரு.க.கு.கோ.சுகுமாரன், திரு.சே.சு.ப. திரு.முத்துகிருஷ்ணராஜா, திரு.கோட்டூர் ரமணி, திரு.இலங்கை ஜெயராஜ் திரு.பழ. பழனியப்பன் போன்ற கம்பன் தொண்டர்களுக்கு ஆசி பொழிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சா.க. ஐயா அவர்கள் கம்பன் புகழைப் பேசியவர்களை மிகவும் நேசித்தார்கள். அவர்களைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். அவர்களிடம் உறவு ஏற்படுத்திக் கம்பன் குடும்பத்தாராக நட்பு நாளுக்கு நாள் ஐயாவின் நட்பு ஏடு நீண்டது. எப்படி இராமபிரானுக்கு குகன், வீடணன் நட்பைச் சகோதரராக கம்பன் காட்டினாரோ அப்படி ஐயாவிற்கு புதுவை, கள்ளிப்பட்டி, கோவை, இலங்கை என்று எல்லா இடத்திலும் பட்டி தொட்டி முதல் உறவை கம்பர் ஏற்படுத்தினார் என்றால் சா.கணேசன் ஓர் கம்பன் அடிப்பொடி என்பதை கம்பரே நிரூபித்துக் காட்டி நம்மை வென்றுவிட்டார்தானே.

ஐயா அவர்கள் கம்பனைத் தன் வழிபடும் தெய்வமாகத்தான் உள்ளத்தில் வைத்துப் போற்றித் தொழுது வாழ்ந்து வந்தார்கள். கைவலி, கால்வலி, வயிற்று வலி என்றால் நாம் அம்மா, அம்மா என்றுதானே கூப்பாடு போடுவோம். ஆனால் சா.க.ஐயா அவர்கள்

கம்பா, கம்பா என்று சொல்வதைத்தான் நான் கேட்டிருக்கிறேன். அவர்கள் மகள் வயிற்றுப் பேரனுக்கு கம்பராமன் என்று பெயரிட்டு மகிழ்ந்து தன்னுடனே கம்பன் மணிமண்டபத்தில் வைத்து கம்பா கம்பா என்று கூப்பிட்டு மகிழ்ந்தார்கள்.

கம்பன் மணிமண்டபத்தில் ஒரு பகுதியை கல்வி நிறுவனமாக்கி கம்பன் கற்பகம் என்று பெயரிட்டு நல்ல முறையில் கல்வி கொடுத்து சமஸ்கிருதம், ஹிந்தி மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதையும் குழந்தைகளுக்குப் பயில வைத்து அப்பள்ளியில் வரும் வருமானத்தைக் கொண்டு கம்பன் திருநாள் நடத்துவதற்கும் வழிவகுத்துச் சென்றவர். அவர் காலத்திற்குப் பின்பும், தடையின்றி கம்பன் திருநாள் நடக்க வேண்டும் என்று எண்ணிய தீர்க்கதரிசி. என்றும் கம்பன் புகழ் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று நினைத்து வாழ்ந்த மகான் கம்பன் அடிப்பொடி அவர்கள்.

கம்பன் பெருமையை நன்கு அறிந்தபின், அவன்முன் என் சிறுமையும் தோன்றுவதால் ஒருவித பயமே. பக்தியால் ஏற்பட்ட ஓர் அச்சமே என்னை ஆட்கொண்டு விட்டதால் இன்று நான் ஒரு கம்பன் அடிமையாக இருப்பதாக ஐயா உணர்கிறார்கள். இதோ ஐயாவின் இப்பாடலின்மூலம் அது நமக்குப் புலப்படும்.

"அன்னைஆய், அத்தன்ஆகி அருளும்நல் ஆசான்ஆகி
பின்னும்எனை ஆண்டுகொண்ட பெரும்தெய்வம் தானேஆகி
கன்னிஎனும் தமிழ்த்தாய் ஈன்ற கவிச்சக்ர வர்த்திஆன
என்உடையன் கம்பன் பாதம் என்றும்உனது உச்சிமீதே"

28.07.1982 வரை கம்பனையே உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்த மகான் கம்பன் அடிப்பொடி அவர்கள் திருவடிக்கே இக்கட்டுரை சமர்ப்பணம்.

கம்பர் கலை வித்தகர் அ.ச.ஞானசம்பந்தன்

முனைவர் பெ.கி.பிரபாகரன்
கே.கே.நகர், சென்னை

கல்வியில் பெரியவன் கம்பன். அவன் ஒரு கவிச்சக்ரவர்த்தி: உலக மகாகவி. காலத்தை வென்று பொலிவோடு விளங்கும் 'இராமாவதாரம்' என்னும் கலைக் கோயிலை எழுப்பிய சிற்பி. நயம் தெரிந்து கதை நடத்தும் நாடகக்கலைஞன். வான்மீகி தந்த கதையில் சேர்க்க வேண்டுவனவற்றைச் சேர்த்து செப்பம் செய்ய வேண்டியவற்றைச் செப்பம் செய்து மனிதகுலம் தழைக்க மாபெரும் காப்பியம் தந்தவன். கம்பனில் தோய்ந்து, கம்பனிடம் தீராக்காதல் கொண்டு 'கம்பன் கலை' வித்தகரானவர் பேராசிரியர் 'அ.ச.ஞா' என்ற மூன்றெழுத்தறிஞர். அவர் கம்பனிடத்தில் கொண்ட ஈடுபாட்டை - கம்பன் புகழ் பரப்பிய சிறப்பினை ஒரு சில சான்றுகளுடன் காண்போம்.

கம்பன் அடிப்பொடி கனவும் நனவும்

"கம்பன் புகழையும் அவன் பாடிய இராமனின் அவதார மகிமையையும் தமிழ்நாட்டில் பறையறைந்து பரப்புவதன் மூலம் தமிழன்னை துகிலுரியப்படாமல் காக்கத் திட்டமிட்டேன். அத்திட்டத்தின் முதற்படிதான் இந்தக் கம்பன் திருநாள் தொடக்கம். நீயே பார்: இத்திருநாளை நான் ஒரு தமிழ்த் திருநாளாகக் கொண்டாடுவதன் மூலம் கம்பன் புகழும் காகுத்தன் காசில் கொற்றமும், தமிழனின் தெய்வ பக்தியும், நம்பிக்கையும் தமிழன் உள்ளங்களிலே வளரும் என்பது என் நம்பிக்கை" (கம்பன் நேற்று - இன்று - நாளை, சுகி சிவம், பக்.24) என பட்சிராஜ அய்யங்காரிடம் கூறியவர் கம்பன் அடிப்பொடி சா.கணேசனார். அவருடைய நம்பிக்கை வீண்போகாமல் கதா காலட்சேபம், உபந்யாஸம் என்ற வட்டத்திலேயே உழன்று கொண்டிருந்த தேரை, 'கம்பன் கழகம்' என்ற விமானத்தில் ஏற்றி எதிர்ப்பாளர்களையும் இணைக்கின்ற விதத்தில் இணைத்து உலா வந்தவர் கம்பன் அடிப்பொடி. 'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்' (குறள் எண். 666) என்ற இலக்கணக் குறளுக்கு இலக்கியமாகித் தம் கனவை நனவாக்கியவர் கம்பன் அடிப்பொடி சா.கணேசன்.

கம்பனின் திருத்தூதுவர்கள்:

கம்பன் அடிப்பொடியின் அடியொற்றி கம்பனின் தூதுவர் களாய்த் திகழ்ந்தவர்கள் பலர். அவர்களில் மோகனூர்

கோவிந்தராஜ அய்யங்கார், அமரர் பி.ஸ்ரீ., ரசிகமணி டி.கே.சி., எஸ்.வையாபுரிப்பிள்ளை, தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், வெ.ப. சுப்ரமண்ய முதலியார், பால்நாடார், அ.ஸ்ரீநிவாச ராகவன், பட்சிராஜ அய்யங்கார், நீதிபதி மகராஜன், திருமுருக கிருபானந்த வாரியார், புலவர் கீரன், ஜகவீரபாண்டியனார், கி.வ.ஜ., பேராசிரியர்.இரா. இராதாகிருஷ்ணன், வை.மு.கோ., பேராசிரியர் அ.ச.ஞா. போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் எழுத்தாலும், பேச்சாலும் கம்பன்மீது ஒரு தனிக்கவர்ச்சியே பிறந்தது. இவர்களில் 'கம்பன் கலை' வித்தகர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களின் நுண்மான் நுழைபுலம் குறித்துக் காண்போம்.

கம்பனில் கரைந்தவர் அ.ச.ஞா

கம்பனைக் குறித்து இலக்கிய உலகில் சர்ச்சைகள் எழுந்தபோது 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்', 'நாடும் மன்னனும்', 'தம்பியர் இருவர்', 'அரசியர் மூவர்', 'கம்பன் புதிய பார்வை', 'கம்பன் எடுத்த முத்துக்கள்', 'இராமன் பன்முக நோக்கில்', போன்ற கருத்துக் களஞ் சியத்தை நூலாக வெளியிட்டு எதிர்பாளர்களையும் தம் வயப்படுத்தி கம்பன் பெருமைக்கு மகுடம் சூட்டியவர் அ.ச.ஞா. சைவராக இருந்தும் கம்பனில் கரைந்து போனவர். இதனை நன்கறிந்த இந்தியக் குடியரசின் மேனாள் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் (குடியரசுத் தலைவர் கடிதம், அ.ச.ஞா. குடும்பத்தார்க்கு எழுதியது, செப்.5.2002) "*I have know Dr. A.S.Gnanasambandan for many year. His tamil reserch works on Kambaramayanam and other Tamil Literary Classics through Kmaban have brought out several valuable contributions*" என்று பாராட்டியுள்ளார்.

கம்பன் கலைவித்தகர்

அந்தக்காலத் தமிழ்ப் புலவர் பெருமக்களிடையே உண்மையைத் துணிந்து எழுதக்கூடியவர்களில் ஒருவராக அ.ச.ஞா. விளங்கியதைக் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' என்ற அவரது நூல் 1955-ம் ஆண்டு வெளிவந்தவுடன் தமிழுலகம் அவரைத் தலைநிமிர்ந்து பார்க்கத் தொடங்கியது. அந்த நூலின் முடிவுரையாக அவர் எழுதும்போது, "இராவணன் தான் பலநற்பண்புகளைப் பெற்றிருந்ததையும், அவற்றை நல்ல ஆற்றலிலே பயன்படுத்தாததே அவன் அழிவிற்குக் காரணம் என்பதையும் நன்குணர்ந்தான்" என்று குறிப்பிட்டுவிட்டு, இறுதியாக "ஆகவேதான் இராவணன் இறக்காமல் இருந்திருந்தால், அவனால் உலகம் நன்மை எய்தியிருக்குமே: என்று நாம் ஏங்குகிறோம்" என வருந்தியுள்ளதைப்

பார்த்திடின் ஒரு வித்தியாசமான இராவணனை அறிமுகப் படுத்தியுள்ள அவரது அருந்திறன் விளங்கும்" என எடுத்துக்காட்டி விளக்குகின்றார். (ஞானத்தமிழ் அ.ச.ஞா. குடும்பத்தினர். தொகுப்பு பக்.24)

அ.ச.ஞா.வின் திறனாய்வு அணுகுமுறைக்கு - கம்பன் காவியத்தில் தோய்ந்தமைக்கு மற்றுமொரு சான்றினைக் காணலாம். 'கம்பன் கலை தம்பியர் இருவர்' என்ற நூலில், "இராமனுக்கு உடன்பிறந்த தம்பியர் மூவரும் அவன் ஏற்றுக்கொண்ட தம்பியர் மூவரும் இருக்க, ஏன் குகனையும், பரதனையும் மட்டும் இங்குப் பேச வேண்டும்? என்று வினா எழலாம். தம்பியர் அறுவரினும் இவ்விருவருமே ஒற்றுமை யுடையவர்கள்: இராமனிடத்து ஆரவாரமற்ற முறையில் ஆழ்ந்த அன்பைச் செலுத்துபவர்கள். இந்த முறையில் இருவருக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. ஒரு வேற்றுமையும் இவர்களிடையே உண்டு. பரதன் கற்றறிவு நிரம்பப்பெற்றவன்: குகன் கல்வி வாசனை அற்றவன். இப்பெருவேற்றுமை இருந்தும், இவ்விருவரும் ஒரு நிகராகவே இராமனால் மதிக்கத்தக்கவர் ஆகின்றனர். ஆதலாலேதான் இவ்விருவர் பற்றியும் ஆய எடுத்துக் கொள்ளப்பட்டது". (கம்பன் கலை தம்பியர் இருவர், அ.ச.ஞா. முன்னுரை) 184 பக்கங்கள் கொண்ட இந்நூலின் சாரத்தை முன்னுரையிலேயே பிழிந்து கொடுத்து விளக்கியிருப்பது அ.ச.ஞா.அறிவுத்திறத்தை மேம்படுத்திக் காட்டுகின்றது.

கம்பன் காப்பியத்தில் பரதன் படைப்பை - பாத்திரத்தை ஆராயும் அ.ச.ஞா. " தான் என்ற பொருளை முற்றிலும் அழித்துக் கொண்டு, தொண்டு, குறிக்கோள் என்பவற்றிக்கே வாழ்பவன், மனிதனாய் பிறந்தாலும் தேவன் ஆகிறான். இவ்வுண்மையை உலகிற்குக் காட்டவே பரதன் படைக்கப்பட்டான்." எனக் குறிப்பிடுகின்றார். (கம்பன் புதிய பார்வை, அ.ச.ஞா. பக்.391) 'வான்உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாகிறான் பரதன். 'சால்பு' என்ற பண்பாட்டின் ஆணிவேராய் பரதன் இலங்குகின்றான். வள்ளுவத்தைக் கம்பனில் செலுத்தி ஆராயும் அ.ச.ஞாவின் அடித்தளம் போற்றத்தக்கது.

'இராமன் பன்முகநோக்கில்' என்ற நூல் எழுந்த காரணத்தை விளக்குகின்றார். இலங்கையில் சொற்பொழிவு நிகழ்த்தச் சென்ற இடத்தில் குரல்வளையில் உள்ள இரண்டு சவ்வுகள் செயலிழந்துவிட மருத்துவர்கள் கைவிட்ட நிலையில், நண்பர்கள் அறிவுரைப்படி யோகசுவாமிகளைச் சந்திக்கிறார். வாய் பேசமுடியாமல் மௌனமாக

நின்ற நேரத்தில் யோகசுவாமிகள், "அடேய் பொடியன் சேக்கிழாரையும் கம்பரையும் நாங்கள்தானே வெட்டிப்புதைக்கணும். போய் இன்று மாலை பேசிவிட்டு இங்காலே வா"என்று இலங்கைத் தமிழில் ஆசிகூற மீண்டும் பேச்சு வந்ததைக் குறிப்பிட்டு, கண்பார்வை இழந்த நிலையில் இந்நூல் எழுந்த சூழலை விளக்குகின்றார். (இராமன் பன்முகநோக்கில், அ.ச.ஞா. முன்னுரை) பல்லாண்டுகள் கடந்த பின்பும், நூல்கள் பல எழுதிய பின்பு யோகசுவாமிகள் அருளால் அவர் கட்டளையை நிறைவேற்றிவிட்டமையை நினைத்து மகிழ்கிறார். கம்பன் புகழ் பேசுவது இயற்கை தனக்கிட்ட கட்டளையாகவே அ.ச.ஞா. எண்ணியுள்ளமை இச்சான்றால் விளங்கும்.

'இராமன் பன்முகநோக்கில்', நூலில் 12 தலைப்புகள் இடம் பெற்றுள்ளன. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் தெ.ஞானசுந்தரம், "பேராசிரியர் தமிழ்க்கவிஞர்கள் பலரிடத்தில் நெஞ்சம் பறிகொடுத்தவர் என்றாலும் அவர் நெஞ்சில் முழுமையாக நிறைந்து நிற்பவர்கள் கம்பநாடரும் தெய்வச் சேக்கிழாருமே ஆவர். இவ்விரு பெரும்புலவர்களின் படைப்புக்கள் பகுத்தறிவாளர்களால் சமூகக்கட்டாயத்தினால் கடுமையாக எதிர்க்கப்பட்ட காலத்தில் இவற்றின் சீர்மைகளை அஞ்சாது எடுத்துக்காட்டிய நெஞ்சுரம் மிக்க தமிழாய்ந்த பெருமக்களுள் குறிப்பிடத்தக்கவர் அவர். அவரது சிறந்தபடைப்பே இராமன் - பன்முக நோக்கில் என்னும் இந்நூலாகும்" (இராமன் பன்முகநோக்கில், அ.ச.ஞா. முன்னுரை) எனக்குறிப்பிட்டு ஒவ்வொரு தலைப்பின் திறத்தையும் நன்கு ஆய்ந்து அணிந்துரை வழங்கியுள்ளார். அ.ச.ஞாவின் கம்ப பாசத்திற்கு இந்நூல் மற்றுமொரு எடுத்துக்காட்டு.

சுக்ரீவனின் பகைவன் வாலி. ஆவன் ஆற்றல் உலகம் அறிந்த ஒன்றாகும். சுக்ரீவனுக்குத் துணையாக எத்தனைபேர் வந்தாலும் அவனை வெல்லுவது இயலாத காரியம். இயற்கையின் இறந்த ஆற்றல் பெற்றவர்களே அவனுடன் நின்று போரிட முடியும். எனவே துணையாக வரஇருக்கின்ற இராமனின் ஆற்றலை அனுமன் எடுத்துக் கூறுகின்றான். இதனை அ.ச.ஞா. அவர்கள் கம்பராமாயணத்தை ஆழ்ந்து கற்ற புலமையினால் வரிசைப்படுத்தி உரைக்கின்றார். அதுமட்டுமன்று இராமனின் வீரப்பண்பினையும், அருட்பண்பினையும் சொல்லின் செல்வனான அனுமன் எடுத்துரைக்கும் பாங்கு குறித்துப் பேசுகின்றார்

அனுமன் இராமனின் சிறப்பினை,

1. ஆர் உயிர்க்கு அமுதமேபோல் உளார், (நட்புக்கோட் படலம்)
2. எளிதின் நிற்கு அரசுதந்து உதவுவார்
3. நெடுங் கடவுள் வெம் படையினர்
4. தாடகை விளிந்து உருள வில்கோலினார்
5. கால்இயம் பொடியினால் நெடிய கல்படிவம் ஆம் ஆலிகைக்கு அரியபேர் உரு அளித்தருளினான்
6. தியம்பகம் எனும் வில் இறுத்தருளினான்.
7. வளைஉடைப் புணரிசூழ் மகிதலத்திரு எலாம் இளையவற்கு உதவி, இத்தலை எழுந்தருளினான்
8. விராதனை இராவகை துடைத் தருளினான்
9. நீ, ஐயா தவம் இழைத் துடைமையால், நெடுமணம் தூயையா உடைமையால், உறவினைத் துணிகுவார்"

(கம்பன் புதிய பார்வை, அ.ச.ஞா. பக் -272-273)

என எடுத்துரைக்கின்றார். இதனை, அ.ச.ஞா. அவர்கள், 3,4,6,8 ஆகியவை இராமன் வீரம் பற்றியது. 1,2,5,7 என்பன அவன் கருணைபற்றியது என எடுத்துக்கூறி சுக்ரீவன் எப்படி அனுமன் பேச்சில் வசப்பட்டு உடன்படுகிறான் என்பதை விரிவாக எடுத்துரைக்கிறான். அ.ச.ஞாவின் இந்த திறனாய்வு அணுகுமுறை பிற்கால திறனாய்வாளர்களுக்கு முன்னோடியாக அமைந்தது எனில் மிகையில்லை.

உலக இலக்கியங்கள் பலவும், கடவுளர்களை இவ்வுலகில் வந்து தொழிற்படுமாறு செய்துள்ளன. ஆனால் ஒன்றாவது அம்முயற்சியில் வெற்றி பெற்றது என்று கூறமுடியவில்லை. இதன் எதிராகக் கம்பநாடன் இம்முயற்சியை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றிருக்கிறான் என்பதையும் சைவம், வைணவம் என்ற சிறுவட்டத்தை விட்டு வெளியேவந்து பரம்பொருள் ஒன்றே என்பதை விரிவாகப் பேசுகின்றான் கம்பன் என்பதையும், வடமொழியில் உள்ள உபநிடதக் கருத்துகளைத் தமிழில் கூறிய முதற்புலவன் கம்பன் என்பதையும், கம்ப காப்பியத்தின் மையஇழையாக விளங்குவது புலனடக்கமே என்பதையும் கம்பன் - புதியபார்வை நூல்விரிவாக எடுத்துரைக்கின்றது.

இப்படி அ.ச.ஞாவின் அறிவுத்திறத்தை விரிவாக எடுத்துக்கூற முற்படின் அதுவே ஒரு நூலாக அமைந்துவிடும் என அஞ்சி அ.ச.ஞா நூல்களைப் படிக்கத்தூண்டும் வகையில் இக்கட்டுரை அமைத்து நமக்குக் கம்பன் கவிதையில் நாட்டம் மிகுந்தால் அதுவே இக்கட்டுரையின் பயன் எனலாம்.

"கல்லூரிப் பேராசிரியராக, வானொலி நிலைய நாடகத் தயாரிப்பாளராக, மரபுவழினின்று மாறிச் சிந்தித்த இலக்கணத் திறனாய்வாளராக, வெண்கலக் குரலால் சமூகநலன் சார்ந்த இலக்கியச் சிந்தனையைப் பதிவு செய்யும் பொறுப்பு உணர்வுமிக்க மேடைப் பேச்சாளராக, சைவசிந்தாந்தத்தின் சாரத்தைப் பிழிந்து தரும் சமயப் பேரறிஞராக, தன்னுடைய குறைவற்ற நிறைவாழ்வில் எத்தனையோ வடிவுகள் எடுத்து ஏற்றம் பெற்றவர் அ.ச.ஞா"10 என்ற தமிழருவி மணியனின் கருத்து கம்பன் கலைவித்தகர் அ.ச.ஞா. அவர்களுக்கு மிகவும் பொருந்தும்.

கம்பன் கழகங்களின் பணிகள், கடமைகள்

திருமிகு. என். முத்துவிஜயன்
போடிநாயக்கனூர்.

பல்வேறு கம்பன் கழகங்களின் விவரத்தொகுப்பு

கம்பராமாயணம் ஒரு சித்திரச்சாலை என்று சொல்லத் தக்கது. கம்பராமாயணத்தைக் கம்ப சித்திரம், கம்ப நாடகம் என்றும் கூறுவர். கம்பன் சுமார் 1130 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவன். இராமாவதாரம் பாடியவன். தன் கவிதையுள்ளே தான் கண்ட காட்சிகளை அப்படியே சித்திரிவித்துள்ளான். (புதுக்கோட்டை கம்பன் விழா 35ஆம் ஆண்டு மலர்,ப.17) கம்பராமாயணத்தின்மூலமாகக் கவிதைப் பேரின்பத்தை அனுபவித்து தமிழராய்ப் பிறந்தவர்களுக்கெல்லாம் கடமையும், உரிமையும் பாக்கியமாகும். இத்தகு பெருமை வாய்ந்த கம்பராமாயணத்தை இப்புவியில் பரப்பும் பணியை முதன்முதலில் மேற்கொண்ட பெருமகனார் கம்பன் அடிப்பொடி சா.கணேசன் காரைக்குடியில் 75 ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் ஊன்றிய விதை இன்று உலகம் முழவதும் சுமார் 42 கழகங்களாக பரந்த விரிந்து இலக்கிய மணம் பரப்பி வருகின்றது.(பி.ஸ்ரீ., நான் ரசித்த கம்பனும் கம்பன் கழகங்களின் கடமையும், ப.5)

கம்பன் கழகங்களின் விவரத் தொகுப்பு

(அடைப்புக்குறிக்குள் கம்பன் கழகம் துவங்கப்பட்ட ஆண்டு தரப்பட்டுள்ளது).

1.காரைக்குடி (1939), 2. நாட்டரசன்கோட்டை (1952), 3. கள்ளிப்பட்டி (1959), 4. தேரழுந்தூர் (1960), 5. கோபிச்செட்டிப்பாளையம் (1962), 6. இராசிபுரம் (1964), 7. புதுச்சேரி (1966), 8. கோயம்புத்தூர் (1973), 9. சென்னை (1974), 10. சேலம் (1974), 11. புதுக்கோட்டை (1975), 12. வேலூர் (1987), 13. திருப்பத்தூர் (1977), 14. பட்டுக்கோட்டை (1977), 15.திருச்சிராப்பள்ளி(1978),16.வாழியூர் (1979), திருச்செங்கோடு (1979), 18.இராமேஸ்வரம்(1981),19.இராஜபாளையம் (1980), 20.கரூர் (1981), 21.விழுப்புரம் (1983), 22.கண்டாச்சிபுரம் (1984), 23.ஓசூர் (1986),24. கும்பகோணம் (1986), 25.அருப்புக்கோட்டை (1989), 26.தஞ் சாவூர்(1990), 27.பாளையங்கோட்டை (1996), 28.பொன்னமராவதி (1996), 29.இராமநாதபுரம் (1999), 30.மதுரை (2003), 31. அறந்தாங்கி (2004), 32.விருதுநகர் (2006), 35.தேவகோட்டை (2009), 36.திருநெல்வேலி (2008), 37.கிருஷ்ணகிரி, 38. மணப்பாறை ஆகியன ஆகும். வெளிநாட்டுக் கம்பன் கழகங்கள் 39.இலங்கை, 40.பிரான்சு (2001), 41.சுவிட்சர்லாந்து, 42. மலேசியா ஆகியன ஆகும்.

மேலே கண்ட பட்டியல் கம்பன் புகழ் பரப்பும் கழகங்களாகும். இவையனைத்தின் செயல்பாடுகள் அலைபேசி மூலம் சம்பந்தப் பட்ட கம்பன் கழகங்களின் தலைவர் (அ) செயலர் மூலம் பெறப்பட்டவையாகும். (வெளிநாட்டு கம்பன் கழகங்கள் தவிர)

கம்பன் கழகங்களின் பணிகள்

கம்பன் கழகங்களின் தாய் எனக் காரைக்குடி கம்பன் கழகத்தைக் கூறலாம். இராமபிரான் பெருமையை உலகறியக் காப்பியத்தில் ஆக்கிக் களித்தவன் கம்பன் என்றால், கம்பனின் பெருமையைத் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் அறிய விழா எடுத்து கம்பனோடு சேர்ந்து கன்னித்தமிழின் புகழையும் நிலைநாட்டிய பெருமை கம்பனில் ஊறியவர் பெரியவர் திரு. கம்பனடிப்பொடி சா.கணேசன் ஆவார். கம்பன் திருவிழா, கருத்தரங்கு நடத்தி வருவதைத் தம் வாழ்நாள் பணியாகக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. காரைக்குடி கம்பன் கழகம் தமிழறிஞர் பெருமக்களை அழைத்துப் பெருமைப்படுத்தி கம்பன் திருவிழா நடத்தி வருவதும் பெருமைக்குரியது. ஆண்டு தோறும் கம்பன் திருநாளில் மீனாட்சி பழநியப்பா அறக்கட்டளை சொற்பொழிவு நூல் ஒன்றும் வெளி-யிடப்படுகிறது.

ஒவ்வொரு கம்பன் கழகமும், கம்பன் புகழைப் பரப்புவதில் உயர்த்துவதில் தனித்தனியே நின்று செயல்படுகிறது. மேலும் மக்களுக்கு வேண்டிய வாழ்வியல்நெறிகளையும் கூறி வருகிறது. ஆண்டுதோறும் அனைத்துக் கம்பன் கழகங்களும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியாரிடையே பேச்சு, கட்டுரை, கம்பராமாயணம், திருக்குறள் போன்ற ஒப்புவித்தல் போட்டிகளை நடத்திவருகின்றன. அத்துடன் சிறப்புப்பணிகளையும் மேற்கொள்ளும் கம்பன் கழகங்களையும் கீழே காணலாம்.

நாட்டரசன்கோட்டை கம்பன் கழகத்தார் ஆண்டுதோறும் பட்டிமன்றம் நடத்துகின்றனர். தேரழுந்தூர் கம்பன் கழகம் இரண்டு நாள் நிகழ்ச்சிகள் நடத்தி மாணவர்களுக்குப் பரிசு வழங்குகின்றது. கோபிச்செட்டிப்பாளையம் கம்பன் கழகம் பொன்விழா ஆண்டு நிறைவு நிகழ்ச்சி கொண்டாடியது. இராசிபுரம் கம்பன் கழகம் இராசிபுரம் நகரத்திற்குள் தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெறும் 10,12-வது பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ரூ.1,000 - பரிசுத் தொகையுடன் நினைவுப்பரிசும் பாராட்டும் செய்யப்படுகிறது.

மேலும் ஏழை, எளிய மாணவியர்களுக்கு கல்வி பயில ராசிபுரம் ரோட்டரி சங்கம்மூலம் நிதி உதவி பெற்று வழங்குகிறது. புதுச்சேரி கம்பன் கழகம் ஆண்டுதோறும் இராமாயணம் தொடர்பான புதிய நூல்களையும் ஆண்டு மலரையும் வெளியிடுகின்றது. கோயம்புத்தூர் கம்பன் கழகம் ஆண்டுதோறும் கம்பன் மலர் வெளியிடுகின்றது. கம்பராமாயண விளக்கவுரை 8 தொகுதிகள், 6 காண்டங்கள், எப்பிக்மிரோயிசம் மில்டன், மற்றும் கம்பன், நான் கண்ட கம்பன் ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன.

சென்னை கம்பன் கழகம் ஆழ்வார்கள் ஆய்வு மையம் வழங்கும் கம்பர் விருதினை இலக்கியப்பேராளர்களுக்கு வழங்கி கௌரவித்து வருகிறது. தமிழறிஞர் அ.ச.ஞானசம்பந்தம் நினைவாக அவர்தம் குடும்பத்தார் வழங்கும், கம்பர் பற்றிய நூலுக்கு அ.ச.ஞா விருதினை வழங்கி சிறப்புச் செய்கிறது. மேலும் தமிழ்ப்பெரியவர் சா.கணேசனார் விருதும், மாணவர்களுக்கு பேராசிரியர் சாலமன் பாப்பையா பட்டிமன்றக்குழுப் பரிசும் வழங்கப்படுகின்றது. மேலும் ஏவி.எம் அறக்கட்டளை மூலம் சொற்பொழிவு நிகழ்த்தி அவற்றை தொகுத்து நூலாகவும் வெளியிடவும் செய்கின்றது. புதுக்கோட்டை கம்பன் கழகம் ஆண்டுதோறும் ஆண்டுமலர் வெளியிடுதல், பல்வேறு உயர்பதவிகளில் சிறப்புப் பெற்றுத் திகழ்வோரைப் பாராட்டிக் கூட்டம் நடத்துதல், சிறார் வகுப்புத் தொடங்கி கல்லூரி வரை உள்ள மாணவர்களுக்கும் கம்பன் பாடல் ஒப்புவித்தல், வெளி-யிடுதல் போன்ற பணிகளையும் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

வேலூர் கம்பன் கழகம் கம்பராமாயணத் தொடர் சொற்பொழி-வினை 10 மதல் 15 நாட்களுக்கு நடத்தி வருகிறது. 1980-ஆம் ஆண்டு முதல் “கம்பர்சீர் பரவுவார்” என்ற கம்பன் பணி சார்ந்த விருதினை வழங்குகிறது. திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்) கம்பன் கழகம் மாணவர்களுக்கு வினாடி-வினாப் போட்டிகள் நடத்தி ரூ.1,500 - பாவிசும், சான்றிதழும் வழங்கி வருகிறது. திருச்சிராப்பள்ளி கம்பன் கழகம் ஆய்வரங்கு மற்றும் கருத்தரங்கம் நடத்தி வருகிறது. வாழியூர் கம்பன் கழகம் “கம்பன் பணிச் செல்வார்” விருதினை வழங்கி வருகிறது. இராமேஸ்வரம் கம்பன் கழகம் இலங்கை திரு.பிரசாந்தன் அவர்களுக்கு ‘இன்தமிழ் ஞாயிறு’ என்ற விருது வழங்கியுள்ளது. இராஜபாளையம் கம்பன் கழகம் கம்பன் தொடர்பான 14 நூல்களை (2010 வரை) வெளியிட்டுக் கம்பனுக்குப் பெருமை சேர்த்துள்ளது.

விழுப்புரம் கம்பன் கழகம் 1,2,3 வகுப்புப் படிக்கும், சுமார் 1500 குழந்தைகளுக்கு ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்கள் அச்சிட்டு வழங்கியது குறிப்பிடத்தக்கது. கும்பகோணம் கம்பன் கழகம் அருள்மிகு சாட்சிநாதன் திருக்கோவிலில் தேனாபிஷேக விழாவினை இலக்கியவாதிகள் கூடி நடத்தியது சிறப்பாகும். அருப்புக்கோட்டை கம்பன்கழகம் நடத்தும் கம்பன் திருவிழாவில் மகளிர் அரங்கம், பார்வையாளர் வினா-விடை நிகழ்ச்சிகள் இடம் பெறுவது குறிக்கத்தக்கது. தஞ்சாவூர் கம்பன் கழகம் 1991 ஆகஸ்ட் மாதம் முதல் 2001 ஆகஸ்ட் மாதம் வரை கம்பராமாயணத்தைப் பாடமாக நடத்திய பெருமை கொண்டது.

பாளையங்கோட்டை கம்பன் கழகத்தார் தமிழறிஞர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பிக்கின்றனர். இராமநாதபுரம் கம்பன் கழகம் கம்பன் மணிமண்டபத்திற்காக முதலில் வாங்கிய 16 சென்ட் இடத்தை மாற்றிவிட்டு, 25 சென்ட் இடம் புதிதாக வாங்கி 2012-ல் அவ்வேலையினைத் துவங்கியுள்ளனர். மதுரை கம்பன் கழகம் வள்ளல் சடையப்பர் விருது வழங்கிவருகிறது. மாதந்தோறும் நடைபெறுகின்ற சொற்பொழிவுகளின் தொகுப்பினை நூலாக ஆண்டுதோறும் வெளியிட்டுவருகிறது. அறந்தாங்கி கம்பன் கழகம் கம்பராமாயண நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. விருதுநகர் கம்பன் கழகம் தகுதி வாய்ந்தவர்களுக்கு 'தமிழ்யாழ்' பட்டம் வழங்கிவருகிறது. மாதக்கூட்ட அழைப்பிதழில் 'அறிவோம் இராமாயணம்' என்ற வினா-விடை பத்து அச்சிடப்படுவது சிறப்பம்சமாகும். திருநெல்வேலி கம்பன் கழகம் மாணவர்களுக்கு மேடையில் பேசும் கலை குறித்துப் பயிற்சி நடத்துகின்றனர்.

தொகுப்புரை

கம்பன் கழகங்களின் வழக்கமான பணிகளோடு, சிறப்புப் பணிகளும் இங்கே காணப்பட்டுள்ளன.

கம்பன் பதிவுசெய் கம்பன் கழகங்களின் கடமைகள்

'கம்பன் புகழ்பரப்பிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்ற குறிக்கோளோடு செயல்படும் கம்பன் கழகங்களின் கடமைகள்

- ஸ்ரீராமபிரானின் குற்றமற்ற பேரரசின் பெருமையைப் பேணிக் காத்தல்.
- கவிச்சக்கரவர்த்தி கம்பனுடைய புகழை வளர்ப்பது.

- கம்பரது காவியப் பாடல்களைப் பொதுமக்கள் எளிதிற் பெற்றுப் படித்துப் பயன்பெற உதவி செய்தல்.
- கம்பராமாணத் தனிச்சொற்பொழிவுகளும், தொடர் சொற்பொழிவுகளும் கதா காலட்சேபங்களும், நடத்துதல்.
- பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நடத்துதல்.
- கம்பராமாயணத்தைப் பிற மொழிகளில் மொழி பெயர்க்க உதவுதல்.
- வால்மீகி, கம்பன், துளசி- இம்முப்பெருங்கவிஞர்களின் இராமகாதைகளில் காணப்படும் பாத்திரப்படைப்புகளையும், கவிநயங்களையும், கதைப்போக்கின் வேறுபாடுகளையும் ஆராய்ந்து, அவற்றில் கம்பனுக்குரிய உயர்ந்த இடங்களை மக்களுக்கு எடுத்துக் காட்டுதல்.
- கம்பன் காவியத்தில் ஆங்காங்கே பாத்திரங்கள் மூலம் வழங்கும் அறிவுரைகளை மக்கள் மனதில் பதிய வைத்து அதன்மூலம், ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்கமுயலுதல்.
- மேல்நாட்டுக் கவிஞர்களாகிய ஹோமர், ஸேக்ஸ்பியர், வேர்ட்ஸ்வொர்த், மில்டன், ஸெல்லி போன்றோரின் காவியப் படைப்புகளையும், கம்பனது காவியப் படைப்புகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து, அவற்றுள் கம்பன் காவியப் படைப்பின் உயர்வைச் சொற்பொழிவுகள் கலந்துரையாடல்கள் மூலம் ரசிகர்களுக்கு எடுத்துக்காட்டுதல்.
- பள்ளிகள், கல்லூரிகள் மாணவர்க்குக் கம்பனில் பரிசுக் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டிகள் நடத்தி கம்பன் புகழ் வளர்த்தல்.
- கம்பன் பெயரில் பொதுநிறுவனங்கள் ஏற்படுத்தி அதன்மூலம் ஏழை மாணவர்க்கு உதவி செய்து, பொதுநலச் சேவை செய்வது.
- தமிழ்கூறும் நல்லுள்ளங்கள் வாழும் உலக நாடுகள் முழுவதும் கம்பன் கழகங்கள் அமைக்க ஆவன செய்வது.

கம்பன் கழகங்களில் நூல்நிலையங்கள் ஏற்படுத்தி, அறிஞர் பெருமக்களின் ஆய்வுப்பணி வளர்ச்சிக்கும், பொதுமக்களின்

ஆய்வுப்பணி வளர்ச்சிக்கும் பயன்தரும் வகையில் நடத்துவது சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு உன்னதக் கம்பன், தன் பாத்திரப் படைப்புகள் வாயிலாக எவ்வாறு அழுத்தமாகக் காட்டியுள்ளான் என்பதை மக்களிடையே விளக்கிக் கூறுவது.

நலிவுற்ற தமிழ்ப் புலவர்களுக்கும், கவிஞர்களுக்கும் அவர் தம் முதுமைக் காலத்தில் உதவி செய்தல் கம்பனுக்கும், தனிழுக்கும் தொண்டாற்றி காலஞ்சென்ற பெருமக்களுக்கு விழா எடுத்து அவர்கள் தொண்டு மக்களை சென்றடையும் வகையில் சொற்பொழிவுகள் மூலமாகவும், வெளியீடுகள் மூலமாகவும் பணிபுரிவது.

வாழ்ந்து வரும் கம்பராமாயணத் தொண்டர்களின் சேவையைப் போற்றும் வண்ணம் அவ்வப்போது பாராட்டுக்கூட்டங்கள் நடத்துவது.

திருக்கோவில்களிலும், வேறு பல இடங்களிலும் காணப்படும் பண்டைய கலாசார நினைவுச் சின்னங்களாகிய சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றை ஆராய்வதும், பேணிக்காப்பதுமாகிய பணியினையும் இயன்றவரை செய்வது.

கம்பன் பெயரால் வழங்கப்படும் இதர நூல்களாகிய சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது போன்றவை கம்பனால் எழுதப்பட்டனவா? அல்லவா என்ற சர்ச்சைக்கு விடைகாணும், முறையில் அவற்றை நன்கு ஆராய்ந்து, பார்த்து ஒரு முடிவு காணமுயல்வது.

கம்பனுடைய வாழ்க்கை வரலாற்றில் தெளிவு காணும் வகையில் அவன் பிறந்த ஊர், வருடம், மாதம், நாள், மதம், குலம், தந்தை, தாய், மனைவி, மக்கள், சமகாலப் புலவர்கள், மன்னர்கள், வள்ளல்கள் போன்றவை குறித்து ஆராய்வது.

கம்பனால் பாடப்பட்டதாகக் கூறப்படும் தனிப்பாடல்களை ஒன்று சேர்த்து அவற்றிலுள்ள நிறை, குறைகளை ஆராய்வது.

இவைபோன்று இன்னும் எத்தனையோ நற்செயல்களுக்குக் கம்பன் கழகங்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு மக்களுக்கும், தமிழ்மொழிக்கும், சேவை செய்ய முன்வர வேண்டும்.

கம்பன் கழகங்களுக்கு ஆலோசனைகள்

கம்பனின் புகழ் பரப்பும் கழகம் காரைக்குடியில் தோன்றியதைத் தொடர்ந்து தமிழகமெங்கும் கம்பன் கழகங்கள் தோன்றிக் கம்பன் புகழ் பரப்பிக் கன்னித் தமிழ் வளர்ப்போம் என்ற குறிக்கோளோடு

செயல்பட்டு வருவது போற்றத்தக்கது. கம்பன் கழகங்களுக்குச் சில ஆலோசனைகள் பின்வருவனவாகும்.

நவீன தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இவ்வேளையில் கம்பன் கழகங்களுக்கு தனித்தனியே இணையதளங்களை உருவாக்குவது இளம்தலைமுறையினரை கம்பன் கழகங்கள் வெகுவாகச் சென்றடையும் எனலாம். கம்பராமாயணத்தினை இணையதளத்தில் தரவேற்றம் செய்து வெளிநாட்டுவாழ் தமிழர்களுக்கு மட்டுமின்றி அனைத்துத் தமிழர்களும் பயன்படும் வகையில் பணிசெய்யலாம்.

கம்பன் கழங்கள் பற்றிய வலைப்பூக்களைப் பற்றிய தகவல்களை அச்சு ஊடகத்தின் மூலம் அவ்வப்போது வெளியிடுவதன் மூலம் கம்பன் அறிவோர் எண்ணிக்கை அதிகரிக்கும்.

தன்னார்வத்தொண்டு நிறுவனங்களைக் கம்பன் கழகங்கள் இணைத்துக்கொண்டு, கம்பன் விழாக்கள் எடுக்கலாம். அதன்மூலம் பயனாளர்களின் எண்ணிக்கையும், கம்பனைப் பற்றிய செய்திகளும் அதிக அளவில் பரவும்.

ஊடகங்களில் குறிப்பாகத் தொலைக்காட்சியில் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகளைப் போல கம்பராமாயணத்திற்கும் முக்கியத்துவம் தரும் வகையில் நிகழ்ச்சிகளை உருவாக்க முன்வருதல்.

பள்ளி மாணவ மாணவியருக்கு இலக்கிய ஆர்வம் குறிப்பாக கம்பராமாயணத்தில் ஏற்பட ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்:

கம்பன் கழகங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து வருடம் தோறும் கம்பன் விழா எடுக்க முயற்சி எடுத்தல். ஒவ்வொரு கம்பன் கழகமும் ஆண்டுதொறும் அவரவர் இடங்களில் கம்பராமாயணம் பேச்சுப் போட்டி நடத்தி பரிசளித்து அதில் முதல் பரிசு பெற்றவர்களை சுழற்சி முறையில் ஒரு கம்பன் கழகத்துக்கு அழைத்து அவர்களுக்குள் பேச்சுப் போட்டி நடத்துவது, அப்படி நடத்தப்படும் போட்டியில் முதல் மூன்று பரிசுகளைப் பெறுபவர்களுக்கு "கம்பன் அடிப்பொடி" "ரசிகமணி" "சொல்லின் செல்வர்" ஆகிய மூவரின் பெயரிலும் விருதுகள் வழங்குவது என்று நடைமுறைப்படுத்தலாம். (கலாரசிகன், தினமணி-தமிழ்மணி, 3.7.2011)

கம்பன் பணிகளில் கணினியும் பல்கலைக்கழகங்களும்

முனைவர் இல.செ.திருமலை
தமிழ்த்துறை, கௌரவ விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.

முன்னுரை

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் கம்பராமாயணத்தில் சொல்லப்பட்ட நல்லறக்கோட்பாடுகள், மாக்கள் தன்மையிலிருக்கும் மக்களை, மக்களாக மீட்டுருவாக்கம் செய்வதற்கும், சமூகச் சிக்கல்களான போட்டி-பொறாமை, சூழ்ச்சி-சண்டை, சிம்மாசனம்-ஆட்சிமோகம், பேராசை: மண்ணாசை-பெண்ணாசை என அனைத்து சிக்கல்களை சீர்திருத்த வலியுறுத்தி எழுதப்பட்ட இலக்கியமே கம்பராமாயணமாகும். அவ்வாறு கம்பரால் சொல்லப்பட்ட நல்லறங்களைப்பற்றியும், கம்பனை நாயைய சமுதாய உலகப்பார்வைக்கு பரவலாக இட்டுச்செல்ல செய்ய வேண்டிய பணிகளாக கணினி தொழில் நுட்பத்தைக் கொண்டு பல்கலைக்கழகங்கள் எப்படியான, எவ்வகையான பரப்புதலை மேற்கொள்ள வேண்டும் என ஆராய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கம்பன் போற்றும் நல்லறங்கள்

கம்பரின் அறக்கோட்பாடுகளான காதல், கற்பு, பேராசை-யின்மை, தந்தை சொல் மந்திரம், தாய்சொல்லைத் தட்டாதே, பிறன் மனை விரும்பேல் என்று தன் படைப்பான கம்பராமாயணத்தில் வலியுறுத்தியிருப்பதை அறியமுடிகின்றது. அந்த வகையில் காதல் என்றும் அறத்தைப் பற்றி கம்பர் குறிப்பிடுகையில், காதல் என்பது எவ்வாறு இருக்கவேண்டும்? அக்காதலில் ஒருவரை ஒருவர் பிரியாமல் உயிர்-உடலாய் இருப்பதே காதல் என்றும், அதன்படி இருக்கும் அன்புக்காதலே உலகத்திற்கு தேவை என்பதை,

"கூடு தன்னுடையது பிரிந்து ஆர் உயிர் குறியா
நேடி வந்து அது கண்டிலாது ஆம்"

எனவரும் தொடரில் இராமனை உயிராகவும், சீதையை உடலாகவும் இணைத்து உலக சமுதாயத்திற்குத் தேவையான இல்லறம் காணும் அறக்கூற்றை இங்கு கம்பர் கூறுவதை அறியமுடிகின்றது. மேலும், சமுதாயத்திற்குத் தேவையான நல்லொழுக்கமாகிய கற்பு என்னும் நல்லறத்தை போதிக்கும் வகையில், கம்பன் சீதையில் வாயிலாக

படம்படித்து காட்டும் திறத்தை காணுகின்ற பொழுது, இராவணன் அத்துமீறி சீதையின்மேல் காதல்கொண்டு, அவன் தன் கற்பை எடுத்துக்கொள்வானோ? என்று அஞ்சி, சீதாபிராட்டி வாளால் வெட்டுண்டு மாள்பவளைப்போல் மனங்கலங்கி இறையோனே இறையோனே! என்று கூவி புலம்பி, கற்பு என்னும் பெண்ணுக்குரிய இலக்கணத்தை இழந்துவிடுவோமோ? என்று பயந்து நடுங்கி அழுததை,

"இறைவா விளையோ யெனவேங் கினளால்
பொறைதா னுருவா னதொர்பொற் புடையாள்"

என வரும் கம்பரின் வரிகள் உடலில் இருந்து உயிர் நீங்கப் பெற்றாற்போல மிக்க வேதனையுற்று, கற்பென்னும் அறத்திற்காக சீதையின் வாயிலாக கம்பர் வலியுறுத்துவதை இங்கு அறிய முடிகின்றது.

மேலும், பேராசை கூடாது என்ற 'பேராசையின்மையை' கம்பர் குகன் வழியாக பரதனை போற்றும் விதமாக அமைத்துச் சொல்லுவதை இங்கு அறிய முடிகின்றது. அதாவது, குகன் பரதனை நோக்கி, நீர் அயோத்தியை விட்டு, கானகத்திற்கு வந்தன் காரணம் கேட்க, என் அண்ணன் இராமன் ஒருவனே அரசாளும் தகுதியுடையவன் என்றும், அண்ணன் இருக்க, தம்பி நான் அராசாளுவதா? அப்பழியை நான் போக்க, என் அண்ணனை இங்கு தேடி வந்துள்ளேன் என்றான். இத்தகைய பரதனது மேன்மையை உணர்ந்த குகன், பரதனின் கால்களில் விழுந்து வணங்கி,

"ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியின் அம்மா"3

என்று குகன், இராச்சியத்தின் மீது விருப்பனின்மையைக் கொண்ட இந்த ஒரு குணமே ஆயிரமடங்கு இராமனைவிட சிறப்புடையவன் என பரதனைப் புகழ்ந்ததின்கண் 'பேராசையின்மை' என்னும் நல்லறத்தினை கவிச்சக்கரவர்த்தி இங்கு வலியுறுத்துவதை அவியமுடிகின்றது.

மேலும், தந்தை சொல் மந்திரம் என்னும் அறக்கூற்றை வலியுறுத்தும் விதமாக இராமணின் வழி நின்று கம்பர் விளக்குவதை அவியமுடிகின்றது. அதாவது, அயோத்தி நாட்டு அரசனாக முடிசூட்டப்போகும் இராமனை கைகேயி வரவழைத்து, தசரதன் ஆணைக்கினங்க இராமனிடத்து,

"ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்,
தாழ் இருஞ்சடைகள் தாங்கி, தாங்க அருந்தவம் மேற்-கொண்டு

பூனி வெங்கானம் நண்ணி, புண்ணியத்துறைகள் ஆடி
ஏழ்-இரண்டு ஆண்டின் வா என்று, இயம்பினன் அரசன் என்றாள்"4

என்று கைகேயி கூறுகையில், இராமனோ சற்றும் முகத்தில் வருத்தம் இல்லாமல், தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்னும், அறங்கூற்றை ஏற்று, தனக்கு இளையவனான பரதனுக்கு பட்டம் சூட்ட மகிழ்ச்சியுடன் இசைந்து, ஏழ்-இரண்டாண்டு வனவாசம் செல்ல இசைந்த அந்தத்தருணம் கம்பரின் அறம் வலியுறுத்திய காட்சியைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றது.

உலகச் சமுதாயத்தில், சமூக பிணைப்பும், சமூக உறவுகளும் எப்படி இருக்க வேண்டும் என்ற உறவுமுறைப் பாசத்தை, கம்பர் கோசலை என்னும் படைப்பின்வழியாக நம் கண்முன் காட்டுவதை அறிய முடிகின்றது.

மேலும், கம்பர் தன் காவியத்தில் அறக்கோட்பாடுகளை வலியுறுத்துகின்றபோது, இராவணன் சிறந்த சிவபக்தன், இலங்கை அரசன், மாவீரன் இருந்தும் அவனுடைய ஒவ்வாத ஒழுக்கம் - பிறன்மனைவியை விரும்பிய தடுமாற்றத்தால், அறம் பிறழ்ந்ததால் இலங்கை தீக்கு இரையாக்கியதை கம்பர் மிகவும் நேர்த்தியாகவும், தேவையான நல்லொழுக்கத்தை வலியுறுத்தி சொல்லியிருப்பதையும் அறிய முடிகின்றது.

முறையிலாச் செயலைச் செய்தல் இகழ்ச்சியைத் தரும் என்ற நல்லறக்கூற்றை இலக்குவன் படைப்பின்மூலம் கம்பர் விளக்குவதையும் காண முடிகிறது.

கம்பனும் நாளைய உலகமும்

கம்பனை நாளைய உலகம், அடுத்த தலைமுறையினர் பார்க்கவேண்டுமானால், பல்கலைக்கழகங்கள் மட்டுமல்லாமல் கல்லூரிகளும், பேராசிரியர்களும், உயர்நிலை ஆய்வு மாணவர்களும், கம்பனின் ஆர்வலர்களும் நவீன தொழில்நுட்பக்கணினியின் இணைத்தள, வலைத்தள ஊடகங்களின் வழிநின்று கம்பனை பரப்புவது மிகவும் எளிது. எனவே, கம்பனை உலகம் பார்க்க, கணினி என்னும் கருவியைக் கொண்டு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்பது

1. கம்பனைப்பற்றிய இளநிலை ஆய்வாளர்களும், முதுநிலை ஆய்வாளர்களும் பல்கலைக்கழக உதவியுடன் ஆய்வு குறித்த

முடிபுகள், ஆய்வேடு குறித்த விவாதங்கள் என அனைத்து ஆய்வு மேம்பாட்டு பணிகளையும் கணினி இணைய வலைத்தளங்களில் பதிவேற்றம் (*Ubload*) செய்து பிறநாட்டு கலை இலக்கிய ஆய்வு அறிஞர்களின் பார்வைக்குக் கொண்டுச் செல்லுதல் வேண்டும்.

2. கம்பராமாயணம் என்ற தலைப்பிட்டு கணினியில் வலைத்தளம் ஒன்றை ஏற்படுத்தி, அதன் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களனைத்தையும் பதிவேற்றம் செய்தல், கதைமாந்தர்களின்வழி சொல்லப்படும் கருத்துக்கள், கம்பனின் கவிதைத்திறம், வளம், அவற்றால் சொல்லப்படும் சமூக நல்லறம் என அனைத்து வகைப்பாடுகளிலும் அமைந்துள்ள ஆய்வுகளையும், தகவல்களையும் முழுவதுமாகவும், விரிவாகவும், பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

3. தமிழ்ப்பேராசிரியர்களுக்கு, கணினி வளைத்தளங்களுக்கு தகவல்களை பதிவேற்றம் செய்தல், கணினியை கையாளுதல், தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்துதல், என பல வகைகளில் கணினியை அணுகும் அனைத்து வேலைப்பாடுகளுக்காணப் பயிற்சியை அளித்திட பல்கலைக்கழகங்கள் உடனே செயல்படுத்துதல் வேண்டும்.

4. பல்கலைக்கழகங்கள், தமிழிலிக்கிய வரலாற்றில் கம்பனின் இடம், கம்பரின் படைப்பு, அவற்றால் போதிக்கும் அறக்கருத்துக்கள், என அனைத்துக்கூறுகளும் உலகளாவிய இலக்கியப்பார்வைக்கு பன்னாட்டு இலக்கியங்களோடு ஒப்பிட்டு, கம்பனை பிறநாடுகள் அறிய பன்னாட்டுக் கருத்தரங்கங்கள், அயல்நாட்டு பல்கலைக்கழகங்களில் நடத்திடுதல் வேண்டும்.

5. கம்பனைப்பற்றிய உயர்நிலை ஆய்வுக்களங்களும், தளங்களும் நாளைய உலகம் பயன்பெறும் நிலையிலும், வாழ்வியல் நெறிமுறைகளைச் சொல்லும் ஒரு அச்சாணியாக ஆய்வுகள் அமையும்படி பல்கலைக்கழகங்கள் தெரிவு செய்திடல் வேண்டும்.

6. பெரும்பாலும் கம்பரைப் பற்றிய ஆய்வுகள் இயற்கை, வரலாற்றுக் கோணத்திலும், சொன்னதைத் திரும்பத்திரும்ப நிகழ்த்தும் ஆய்வு உத்திகளாகக் கையாளப்படுவதை தவிர்த்து, கணினி அறிவியல் சார்ந்த உத்திகளுடன் கம்பனை ஆய்வு செய்ய பல்கலைக்கழகங்கள் பரிந்துரை செய்தல் வேண்டும்.

7. கம்பராமாயணத்தைத் தொடர்புபடுத்தி அயல்நாட்டு மொழிகளில் பொழிபெயர்ப்புகள் அதிக அளவு நடைபெற பல்கலைக்கழகங்கள் முனைதல் வேண்டும்.

8. பல்கலைக்கழகங்கள், கம்பனை பன்னாட்டு படைப்பாளர்களுடன் ஒப்பீடு, இந்திய மொழிகளில் ஒப்பீடு, என கம்பனைப் பற்றிய ஒப்பீட்டு முறை ஆய்வுகள் நிகழ்த்திட, பல்கலைக்கழகங்கள் முனைதல் வேண்டும்.

9. கிராமப்புறக் கல்லூரிகளில் பயிலும் ஆய்வு மாணவர்கள் அதிக அளவு கம்பனைப்பற்றிய உயர்நிலை ஆய்வுகளாக மேற்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், கிராமப்புற கல்லூரிகளில் தேசிய மற்றும் பன்னாட்டு கம்பனைப்பற்றிய கருத்தரங்கங்கள், பயிலரங்கங்கள், மாநாடுகள் நடத்திடவும், கணினி மொழியவிவு வளர்ந்திடவும், கணினியை கையாளும் திறன்களைச் சார்ந்த முறையான பயிற்சிகளையும் அழித்திட பல்கலைக்கழகங்களும், தமிழக அரசும் பெரிய அளவில் நிதி உதவி அழித்திட முன் வரவேண்டும்.

முடிவுரை

கம்பனின் அறக்கோட்பாடுகளையும் அதன்வழி தமிழரின் கலாச்சார பண்பாடுகள் என, சமுதாய சீர்திருத்த கருத்துக்களை உலக அளவில் நாளைய சமூகத்திற்கு படம்பிடித்துக்காட்ட தகவல் தொழில் நுட்ப கணினியின் இணைத்தளம்ஃவளைத்தளங்கள், ஆய்வுமாணவர்கள், பேராசிரியர்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், கம்பன்கழகம் என்று அனைத்துத் தரப்பு தளங்களும் ஒன்று சேர்ந்து உழைக்கும் உழைப்பே கம்பனைக் காலந்தோறும் வாழவைக்கும் ஒரு முயற்சியாக அமையும்.

கம்பன் கழகம் எதிர்கொள்ள வேண்டிய பணிகள்

புலவர் ச.தமிழரசு
முதுகலைத் தமிழாசிரியர் (நிறைவு),
விழுப்புரம்.

முன்னுரை

"ஆன்ற தமிழ்க்கம்பன் அரிய இலக்கியத்தை
ஊன்றிப் பயில உளமினிக்கும்-தோன்றுசுவை
ஊற்றாகும். செஞ்சொல் உரைக்குங்கால் நாவினிக்கும்
ஏற்ற செவியினிக்கு மே".

'கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்' என்ற பரப்புரையைத் தாரகமந்திரமாக ஏற்றுத் தமிழகமெங்கும் கம்பன் கழகங்கள் இராமகாதையை மக்கள் முன் எடுத்துச் செல்லுகின்ற பணியை மிகச் செவ்வனே செய்து வருகின்றன. தமிழகத்தில் உள்ள மற்ற தமிழ் அமைப்புகளுக்கும் இல்லாத சிறப்பு கம்பன் கழகங்களுக்கு உண்டு என்பதைச் சான்றோர்கள் ஒப்புவர். சிறந்த சொற்பொழிவுகளும், பட்டி மன்றங்களும், வழக்காடுமன்றங்களும், பாங்கவி மன்றங்களும் சொலல்வல்லார் தம்மால் மிகச் சுவையோடும், கருத்தாழும் மிக்கதாகவும் நடத்தப்பெறுகின்றன.

இவையனைத்தும் மக்கள் கேட்டுச் சுவைக்கவும், மகிழவும் மட்டுமே அமைந்துவிடுமாயின் ஒரு பெரும்பயன் கிட்டும் என்று சொல்லிவிடமுடியாது. கம்பன் கழகங்கள் இன்னும் பல பயனள்ள நிலைத்த பணிகளைச்செய்ய வேண்டுமெனத் தமிழுலகமும், புலம்பெயர்ந்த தமிழர்களும் எதிர்நோக்குகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

எதிர்கொள்ள வேண்டிய பணிகள்– கழகங்களின் ஒருங்கிணைப்பு

தமிழகத்தின் பட்டிதொட்டிகளில் எல்லாம் இன்று கம்பன் கழகங்கள் தோன்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இக்கழகங்கள் அத்தனையும் ஒரு தலைமைக்கழகத்தின் மூலம் ஒன்றிணைக்கப்படவேண்டும். ஒரு கழகம் மற்ற கழகங்களோடு தொடர்புகொண்டிருக்க வேண்டும். தலைமைக் கழகத்திலிருந்து பிற கழகங்களுக்குப் பதிவு எண் வழங்கப்பட வேண்டும். அக்கழகங்களின் செயல்முறைகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு விழாவிலும் கம்பன் பற்றிய நூல் வெளியிடப்பட வேண்டும்.

தரமான சொற்பொழிவாளர்கள் பங்கேற்குமாறு செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் தலைமையாக இருக்கின்ற கழகம் நெறிப்படுத்த வேண்டும்.

இராமகாதையை ஊரெங்கும் பரப்புவது

இன்றைக்குக் கம்பன் கழகங்கள் வளமையும், வலிமையும் உடைய வசதி படைத்தவர்களால் மட்டுமே மிகப் பெரிய அரங்கத்தில் நடத்தப்பெறுகின்றன. அதுவும் ஆண்டுக்கு ஒருமுறை மிகவும் ஆடம்பரமாக வானவேடிக்கைகள், வண்ணப்பதாகைகள், தோரணவா-யில்கள் என்று ஒரு அரசியல் விழாப்போல் நடத்தப்படுகின்றன. இவ்வாறின்றி எளிமையாக மாதந்தோறும் மக்கள் வாழும் தெருக்களில் மக்களுக்காக நடத்தப்பெறல் வேண்டும். அரிச்சந்திரன், நல்லதங்காள் போன்ற கதைகள் மக்கள் மனதில் இடம்பிடிக்க இவ்வாறு தெருக்களில் நடத்தப்பட்டதே காரணம் என்பதை நாம் அறிவோம். இவிராமகாதை போன்ற ஒரு வாழ்வியல் சித்தாந்தத்தை மக்களிடம் எளிமையாக எடுத்துச் செல்ல வேண்டும்.

இளைஞர்களை ஈர்த்தல்

இன்றையநிலையில் இளைஞர்கள் எந்தவிதப் பண்பாட்டு நடையும் இல்லாமல் மனம்போன போக்கில் வாழ்கின்றனர். அவர்களை நல்வழிப்படுத்துவதும் நேர்வழி உயர்த்துவதும் இலக்கியக் கழகங்களால் தான் இயலும். அதிலும் குறிப்பாக, இராமகாதையை-இராமனது வாழ்வியல் முறைகளை-பெற்றோரை மதித்தல், ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்பண்பு எவ்வினத்தாரையும் உடன்பிறப்பாக ஏற்றல்-எவரிடமும் நட்பு பாராட்டல், பகைவரையும் மன்னிக்கும் மாண்பு ஆகிய உயரிய இயல்புகளை இளைஞர்கள் மனத்தில் ஆழப்பதிய வைக்கும் பெரும்பொறுப்பைக் கம்பன் கழகங்கள் ஏற்க வேண்டும்.

நாம் எத்தனையோ இலக்கியங்களைக் கற்கிறோம். கேட்கிறோம், சுவைக்கிறோம். அத்துடன் தமிழமைப்புகளின் பணிகள்முடிந்துபோகின்றன. ஆனால் அக்காப்பியப் பண்புகளை மக்கள் மனதில் அதிலும் குறிப்பாக இளைஞர்களின் மனதில் பதிய வைக்க வேண்டும். அதற்கான பயிற்சிப்பட்டறை ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் 'கம்பன் மாந்தன்' என்ற பெயரால் விருது வழங்கப்பட்டு அழைக்கப்படவேண்டும் இத்தகைய பயிற்சிப்பட்டறை, பயிலரங்கம் ஆகியன கம்பன் கழகங்களால் நடத்தப்பெற வேண்டும்.

தரமான நூல்கள் வெளியிடல்

கம்பன் கழகங்கள் விழா நடத்தும்பொழுது ஏராளமான பொருட்செலவில் விழாக்களை நடத்துகின்றன. சொற்பொழிவாளர்களுக்கு பெருந்தொகை கொடுத்து இரண்டு நாள், மூன்று நாள்கள் என விழாவை மிக ஆடம்பரமாக நடத்துகின்றன. ஆனால் அதற்கான பயனோ. பதிவோ நிலையானதாக இருப்பதில்லை. அவ்விழாக்கள் பயன்பாடுடையதாக, பதிவு செய்யப்பெற்றதாக இருக்க வெண்டுமெனில் ஒவ்வொரு ஆண்டும் இராமாயணம் சார்ந்த நூல்கள்-ஆய்வுநூல்களாக ஒப்பீட்டு நூல்களாக- பாத்திரப்பண்புகளை வெளிப்படுத்தும் நூல்களாக வெளிப்படுத்த வேண்டும். படைப்பாளர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது ஏராளமான படைப்பாளர்கள் இராமகாதையைப் படிக்கும் வாய்ப்பும். சிந்திக்கும் வாய்ப்பும், எழுதும் வாய்ப்பும், பேசும் வாய்ப்பு ஏற்படும்.

தமிழாசிரியர்களைப் பங்குகொள்ளச்செய்தல்

ஒரு இனத்தின் பண்பாடு, நாகரிகம், மொழப்பற்று. நாட்டுப்பற்று. ஆன்னிக உணர்வு, மானுட நேயம் ஆகியவற்றை எதிர்காலக் குடிமக்களாகிய மாணவர்களிடம் எடுத்துரைப்பதும், ஏற்றம் பெறச்செய்வதும் ஆசிரியர்களே! அதிலும் குறிப்பாக மொழியாசிரியர்களுக்கு இப்பணியில் பெரும்பங்கு உண்டு. மேற்சொன்ன அத்தனைப்பண்புகளையும் உடைய இராமகாதையைப் பரப்பி வரும் கம்பன் கழகங்கள் தமிழாசிரியர்களை உட்படுத்திக் கொண்டு அவர்கள்மூலமாக மாணவர்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

இன்றைக்குப் பெரும்பாலான தமிழாசிரியர்கள் கடவுள் மறுப்பாளர்களாக இருப்பது நம்மொழிக்கு - மொழிவளர்ச்சிக்கு மிகப் பெரிய தடையாக உள்ளது. இத்தடையை நீக்க வேண்டுமெனில் அத்தனைக்கம்பன் கழகத்திலும் தமிழாசிரியர்கள் உறுப்பினர்களாகவோ, பொறுப்பாளர்களாகவோ இருந்திடச் செய்திடல் வேண்டும். கம்பனைக்கற்பது காவியம் கற்பதற்கு மட்டுமன்று மானுடப் பண்புகளைக் கற்றுக்கொள்ளவே என்ற உயரிய எண்ணத்தை அவர்களிடம் உருவாக்க வேண்டும்.

மாணவர்களை உட்கொணர்தல்

இன்றைக்கு பள்ளிகள் அனைத்தும் மதிப்பெண் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாக உருப்பெற்றுவிட்டன. அரசுப் பள்ளிகளும் அதில்

விலக்கில்லை. நமது தமிழக மாணவர்கள் அறிவுடையர் என்ற பெருமை மட்டும் போதாது. அவர்கள் பண்புடையர் என்ற புகழும் பெற வேண்டும். அதற்குக் காப்பியங்களை, இலக்கியங்களைப்பாடமாக வைத்து நடத்தினால் மட்டும் போதாது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நீதிநூல்கள் பள்ளியறைக்குள் நுழையமுடியாத இந்த நாட்களில் இராமகாவியம் மட்டுமே நல்ல மாணவர்களாக - நல்ல குடிமக்களாக மாணவர்களை மாற்றமுடியும். அதற்கான பயிற்சிகளை அரசின் அனுமதியோடு கம்பன் கழகங்கள் செய்ய வேண்டும். இராமகாதையின் பகுதிகள் மாணவர்களுக்கு சிறு,சிறு பகுதிகளாகக் கொடுக்கப்பெற்று போட்டிகள் நடத்தி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மட்டுமின்றிப் பங்கு பெற்ற அத்தனை மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப் பெறல் வேண்டும்.

பள்ளிகளைப் பயன்படுத்துதல்

தமிழகப் பள்ளிகளில் இலக்கிய மன்றம் என்ற ஓர் அமைப்பு இருந்தும் செயல்படா நிலையில் உள்ளது. அதற்குப் பல்வேறு காரணங்களைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கூறுகின்றனர். அந்த இலக்கிய மன்றங்களைக் கம்பன் கழகங்கள் பொறுப்பேற்றுக் கொண்டு இராமகாதையை மாணவர்கள் மனத்தில் பதிக்கும் பணியைச் செய்ய வேண்டும். மாதம் ஒருமுறை இலக்கிய மன்றங்களை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். கம்பன் கழகம் சிறந்த சொற்பொழிவாளர்களைப் பள்ளிக்கு அனுப்பி கம்பன் காவியத்தை உரையாற்றச் செய்ய வேண்டும். மாணவர்களைப் பேசச் செய்தும், கட்டுரை எழுதச் செய்தும், கம்பன் பாடல்களை ஒப்பிக்கச் செய்தும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்க வேண்டும். பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கும் பாராட்டிதழ் வழங்க வேண்டும்.

கம்பன் கழகம் நடத்தும் ஆண்டு விழாக்களில் சிறப்பாகப் பங்கு கொண்ட பள்ளிகளுக்குப் பரிசும் பாராட்டும் வழங்க வேண்டும். வினாடி வினாக்கள், ஒப்பித்தல், கட்டுரை எழுதுதல். இராமாயன நிகழ்வுகளை ஓரங்க நாடகமாக நடத்துதல் ஆகிய பணிகளைக் கம்பன் கழகம் செய்தல் வேண்டும்.

இச்செயல்பாடுகளுக்கு ஒவ்வொரு கம்பன் கழகமும் தகுதி சான்ற ஓய்வு பெற்ற தமிழாசிரியர்களைக் கொண்ட ஒருகுழு அமைத்துக்கொள்ள வேண்டும்.

முடிவுரை

கம்பன் காட்டும் ஒழுக்க நெறிகளை இன்றைக்குத் தமிழகத்தில் பரப்புவதே இன்றியமையாத தேவையாகும். மானுடம் மகத்துவப்பட வேண்டுமானால் இராமனது பண்புகள் மக்கள் மனதில் பதிய வேண்டும். அவற்றைப் பதியவைக்கும் மிகப்பெரிய பொறுப்பு கம்பன் கழகத்திற்கே உண்டு. மேற்சொன்ன வகையில் கம்பன் கழகம் செயல்படுமானால் கம்பன் அடிப்பொடிகண்ட கனவு நனவாகும். கம்பன் அடிப்பொடிகண்ட கனவு கம்பன் முடிசூடிக் காலத்தில் நனவாக வேண்டுமெனில் நம் நடைமுறைகளை விரிவுப்படுத்தியாக வேண்டும். 'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற முதுமொழிக்கேற்ப, பண்பாட்டை வளர்ப்பதில் பெரியது கம்பன்கழகம்' என்ற புதுமொழியை உருவாக்கி அதையே வருங்காலத்தில் மக்கள் வழங்கும் முதுமொழியாக்க முடியும் என்பது என்போன்ற கம்பதாசனின் விழைவாகும்..

கம்பன் கழகங்கள் எதிர்கொள்ள வேண்டிய பணிகள்

திருமிகு. ஆ.நளினி சுந்தரி
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, பிப்ஹூபர் கல்லூரி,
திருச்சி.

விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் எனச் சிறப்பிக்கப்படும் கம்பன் காலம் அழிந்தாலும் தன்பெயர் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டான். அவன் புகழை மேன்மேலும் பரவச் செய்யும் கம்பன் கழகங்கள் ஆற்ற வேண்டிய பணி தினந்தோறும் பெருகிக்கொண்டேயுள்ளது. அப்பணிகள் குறித்து இப்பகுதி சில கருத்துக்களைக் கூற விளைகிறது.

கம்பன் கழகங்களை நிறுவுதல்

தமிழ்ச் சங்கங்கள் ஏறத்தாழ தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்றன. செயல்படுகின்றன. ஆனால் பீடு புகழ்பாடும் உயர் கம்பன் கழகங்கள் ஒரு சில இடங்களில் மட்டுமே நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தமிழ் மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டு தற்போது செயல்பட்டு வரும் கழகத்தைப் போலவே செயல்பட்டால் தமிழ்ப் புதல்வர் புதல்வியரான நம் அனைவரும் கம்பனுக்காக எடுக்கும் மறக்கவியாத பொன் நிகழ்வாகக் கருதப்படும். இக்கழகங்கள் வளர்ந்த கழகங்களின் கீழ் அமைதல் நலம். நிர்வாகமும் அது போன்றே நடத்தப்பட்டால் கம்பனின் புகழ் அதிவேகத்துடன் பரவும். தற்போதுள்ள கம்பன் கழகம் இதை தயவாய்ப் பரிசீலிக்கவேண்டும்.

கல்வி நிறுவனங்களும் கம்பன் கழகமும்

தமிழகத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் கற்கும் மாணவ மாணவியருக்கு அவ்வப்பள்ளியிலேயே கம்பனைப் பற்றியும் அவன் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்றபடி எழுதி புகழ் சேர்த்த இராமாயணத்தில் கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, பாடல்கள் ஒப்புவித்தல் போட்டி முதலியனவற்றைக் கழக பிரதிநிதிகள் தாங்களே முன்வந்து கல்விநிறுவனங்களின் அனுமதி பெற்று நடத்தி பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினால் கம்பனைப் பற்றிய ஒரு பரந்த எண்ணம் இம்மாணவ, மாணவியரிடையே தோன்ற வாய்ப்புள்ளது. இம்மாபெரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு கம்பனைப் பரப்பி விவாதிக்க வந்த தன்னார்விகள் கம்பனின் சாமரைகளும் இதனைச் செய்ய தாமாக முன்வரவேண்டும்.

பொதுமக்களும் கம்பன் கழகங்களும்

கம்பனைப் பற்றிய ஒரு கருத்தாடல் பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டியது கம்பன் கழகத்தாரின் சீரிய பணியாகும். வார இதழ்கள், நாளிதழ்கள், மாத இதழ்கள், மக்கள் அதிகமாகப் படிக்கின்ற தமிழ்ப் பத்திரிகைகள் ஆகியவற்றில் கவிதை, கட்டுரை போட்டிகள் நடத்த விளம்பரம் செய்து கம்பனை அவர்கள் பக்கம் கொண்டு செல்ல ஆவன செய்யலாம். குறிப்பாக மக்கள் மத்தியில் பெரிதும் புழக்கத்தில் இருக்கின்ற சஞ்சிகைகளில் இத்தகைய அறிவிப்புகள் வருமேயானால் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். மேலும் தமிழன்னைக்கு எவ்வாறு கற்சிலை நிறுவப்பட்டதோ அவ்வாறே கம்பன் பிறந்த ஊரிலும் ஒரு கற்சிலை நிறுவி கம்பனுக்கு மேலும் புகழ் சேர்க்கலாம்.

கம்பராமாயண ஆய்வுகள்

கம்பனின்மீதும், கம்பராமாயணத்தின்மீது பல ஆய்வுகள் இதுகாறும் செய்யப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது இலக்கிய இதழ்கள், தினமணி போன்ற நாளிதழ்கள் ஆகியவற்றில் கம்பனைப் பற்றிய செய்திகள் காணப்படுமேயானால் அவற்றையும் இக்கழகம் தொகுத்தெடுக்க வேண்டும். அப்போது கம்பனைப் பற்றியும், கம்ப ராமாயணத்தைப் பற்றியும் பல உண்மைகள் தமிழ் கூறும் நல்உலகிற்குத் தெரிய வாய்ப்புள்ளது. ஒவ்வொரு பணியையும் செய்வதற்கு மிக மிகக் கடினமாகத்தான் இருக்கும். ஆனால் தன்னார்விகள் மாணவ, மாணவியரைக் கொண்டு ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து இதுபற்றி கலந்தாலோசித்தால் நிச்சயம் இச்செயலைச் செயல்படுத்த முடியும்

அறக்கட்டளை நிறுவுதல்

பள்ளி, கல்லூரி நிறுவனங்களிலும் மற்ற பொது இலக்கிய நிறுவனங்களிலும் கம்பன் கழகம் அறக்கட்டளை நிறுவி அதன் வாயிலாக கம்பனை அறியச் செய்யலாம். அல்லது இவ்வறக்கட்டளை வாயிலாக கம்ப ராமாயணத்தின் மீது நிகழ்த்தப்பெறும் ஆய்வுகளுக்கு ஊக்கத்தொகை வழங்கிச் சிறப்பித்து அவ்வாய்வேடுகளை நூலாக்கி அவன் புகழ் பரப்ப ஆவணச் செய்ய வாய்ப்புள்ளது. அறக்கட்டளை நிறுவன கம்பன் சுவட்டைப் பின்பற்றும் நாம் நம்மால் இயன்ற ஒரு தொகையைக் கொடுப்பது நல்லது. மேலும் இச்செயல் கம்பனின் மீதும் தமிழன்னையின் மீதும் காட்டும் மரியாதையாகும்.

கம்பன் இருக்கை

ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் கம்பன் இருக்கை

உருவாக முயற்சி எடுக்க வேண்டும். பாரதிதாசன் பல்கலைக்கழகம் பெரியாருக்கென இருக்கையை வைத்துள்ளது. சென்னைப் பல்கலைக்கழகம் கிறித்தவர் ஒரு இருக்கையை வைத்துள்ளது. இதுபோன்றே ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திலோ அல்லது பவள விழா காணும் காரைக்குடி கம்பன் கழகம் அமைந்துள்ள காரைக்குடி பல்கலைக்கழகத்திலோ ஒரு இருக்கை ஏற்பாடு செய்ய கம்பன் கழகம் முன்வரவேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப்பட்டால் ஆய்வுகள் பெருகும். கம்பன் புகழ் திக்கெட்டும் பரவும்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்

ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் கம்பன் அறக்கட்டளை ஏற்படுத்தி அவ்வறக்கட்டளை வாயிலாகக் கம்பனின் மீதோ அவன் இயற்றிய இராமாயணத்தின் மீதோ வருடத்திற்கு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினால் பல்கலைக்கழகங்களில் கம்பன் வாசம் செய்வதற்கு வாய்ப்புள்ளது. கம்பனில் பயிற்சி பெற்றோர் ஆழ்ந்து தேர்ந்து கம்பனில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டோர் இவ்வறக்கட்டளைக்கு அழைக்கப்படல் வேண்டும். இச்சொற்பொழிவு பற்றிய அறிவிப்பும் அழைப்பும் கம்பன் கழகத்தாருக்கு அனுப்பப் படல் வேண்டும். அவ்வறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நூலாக வெளிவர வேண்டும். இதை செயல்முறைப்படுத்தினால் நிச்சயம் கம்பன் மலையின்மேல் வைக்கப்பட்ட விளக்குபோல ஒளிவீசுவான்.

கம்பன் கழகமும் தொலைக்காட்சியும்

மக்களைக் கவர்ந்திழுக்கும் வெகுஜன தொடர்பு சாதனங்களில் ஒன்று தொலைக்காட்சி. இன்றைக்குத் தொலைக்காட்சி தொடர்களுக்கு பஞ்சமே இல்லை. கம்பன் கழகம் ஏதேனுமொரு தொலைக்காட்சியைத் தேர்வு செய்து அத்தொலைக்காட்சி இயக்குநரோடு ஒரு ஒப்பந்தம் பேசி தமிழில் கம்பராமாயணத்தொடர் வருவதற்கும் கம்பனைப் பற்றிய செய்திகள் வெளிவருவதற்கும் ஒரு முயற்சி எடுத்தால் நிச்சயம் இதற்கு வெற்றி கிட்டும்.

கம்பன் கழகமும் திரைப்படமும்

காமராசர், வ.உ.சிதம்பரனார், பகத்சிங், பாரதியார் ஆகியோரைப் பற்றிய குறும்படங்களும், திரைப்படங்களும் வெளிவந்து வெற்றிநடை போட்டதைக் கம்பன் கழகத்தாரும் நன்கு அறிவர். அதுபோன்று கம்பனைப் பற்றிய திரைப்படமும், குறும்படமும் வெளிவருவதற்குக் கம்பன் கழகம் ஒரு ஏற்பாடு செய்தால் தரை தட்டுப்படும்

இடங்களிளெல்லாம் திரைவாயிலாக கம்பன் தெரிவதற்குப் பெரிதான வாய்ப்புண்டு.

கம்பன் பல்கலைக்கழகம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரிலும், பாட்டுக்கொரு புலவனான பாரதியார் பெயரிலும், சொல்லின் செல்வன் அண்ணாவின் பெயரிலும், சட்ட நிபுணர் அம்பேத்கார் பெயரிலும், கர்ம வீரர் காமராசர் பெயரிலும், சமூக சேவகி அன்னை தெரசா பெயரிலும் மனோன்மணியம் சுந்தரனார் பெயரிலும் பல்கலைக்கழகங்கள் அமையப் பெற்று பல பட்டதாரிகளையும் முனைவர்களையும் இளம் முனைவர்களையும் நாடுபோற்றும் நல்லவர்களையும் உலகறிந்த உத்தமர்களையும் உருவாக்கியதைப் போன்று கட்டுத்தறியையும் கவிபாட வைத்த கம்பனுக்கென ஒரு பல்கலைக்கழகம் இராமேஸ்வரத்தை மையமாகக் கொண்டு உருவாவதற்குக் கம்பன் கழகம் மேலும் முயற்சி எடுக்க வேண்டும். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இருந்து செயல்படுவதை போன்று இராமேஸ்வரத்திலும் கம்பன் பல்கலைக்கழகம் இருந்து செயல்படுமேயானால் இராமன் கடல் கடந்து சென்றது போலவே கம்பனும் கடல்கடந்து செல்வான் என்பதில் ஐயமில்லை.

கம்ப ராமாயணப் பதிப்புகள்

கம்ப ராமாயணத்தை மிகப்பெரிய பதிப்பகங்கள் எல்லாம் பதிப்பித்து தங்கட்கு பொருட்செல்வத்தைத் தேடிக் கொண்டன. திருச்சியிலுள்ள கலைக்காவேரி நிர்வாகத்தினர் கவியரசு கண்ணதாசன் எழுதிய இறவாப்புகழ் இயேசு காவியத்தை வெளியிட்டது மட்டுமின்றி மாணவர் பதிப்பு என்று ஒரு பகுதியையும் வெளியிட்டது. அது மாணவர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றது. அப்பதிப்பின் விலையும் மிக சொற்பமே. அதுபோல கம்பன் கழகமும் மாணவர்களுக்கென ஒரு பதிப்பை உருவாக்கி கம்பராமாயணத்தின் கட்டுக்கோப்பு சிதையாமல் கம்பராமாயணத்தின் இன்றியமையாப் பகுதிகளைப் பதித்து வெளியிடுமேயானால் நிச்சயமாக இளம் உள்ளங்களில் கம்பன் மீண்டும் பிறப்பான்.

கம்பன் ஒரு யுகசந்தி

முனைவர் சொ.சேதுபதி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி.

இலக்கியக் கழகம், அதிலும் தனிப்பட்டவொரு படைப்பாளியைத் தூக்கிநிறுத்தித் தொடங்கப்பெற்ற அமைப்பு, எழுபத்தைந்தாண்டுகள் இடையறாது தம் பணிகளைத் தொடர்ந்து ஆற்றிக்கொண்டிருக்கிறது என்றால், அதற்குப் பல காரணங்கள் இருக்கும். அவற்றுள் முக்கியமானதாகப் பின்வரும் ஐந்தினைக் கொள்ளலாம்.

1. அந்தத் தனிப்பெரும் படைப்பாளி தன் படைப்பாற்றலில் தன்னேரிலாத தன்மையனாதல் வேண்டும்.

2. காலங்கடந்து நிற்கும் பெற்றியுடைய அப்படைப்பாளியின் படைப்பு, படிப்பிற்கு அப்பாலும் சென்று சமுதாயத்தளங்களில் ஊடுருவி, உயிர்ப்பு நல்கிக்கொண்டே இருத்தல் வேண்டும்.

3. அதனைத் தக்கபடி உணர்ந்து உலகிற்கு உரைக்கத் தகுந்த தொண்டர் அல்லது தொண்டர் குழாம் தோன்றியிருக்க வேண்டும்.

4.இதற்கெனத் தூய பின்புலமும், தொடர்ந்து நடத்துதற்கு ஆய துணைகளும், ஓயாத உழைப்பும் இருக்கவேண்டும்.

5. இவையனைத்திற்கும் மேலாக, இதன் தேவை இன்னமும் இருக்கிறது என்பது இன்றியமையாக் காரணம்.

இத்தகு கருதுகோள்களோடு பவளவிழாக் காணும் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் பணிகளையும் அணுகுமுறைகளையும் காணுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இயற்கையோடியைந்து, இயல்புற வாழ்ந்த பழந்தமிழர்களின் இலக்கியப்பதிவுகளைச் சங்கஇலக்கியம் என்று காட்டுகிறது, தமிழ் இலக்கிய பெரு லாறு.

அகம்.புறம் என்ற இரு கரைகளின் ஊடே பயணம் செய்த பழந்தமிழர் வாழ்வின் பதிவுகளை இலக்கியமாகச் சங்கப்பாடல்களும், இலக்கணமாகத் தொல்காப்பியமும் தாங்கிநின்ற தமிழ்மொழியில் தன்னேரிலாத தனிப்பெருங்காப்பியமாய்ச் சிலம்பு எழுந்தது.

அதற்கும் முன்னதாய், அறமுரைக்கும் படைப்புகள் பல எழுந்தாலும் தனக்குவமையில்லாத தனிப்பெரும் இலக்கியமாய்த் திருக்குறள் முகிழ்த்தது. இடையில் எழுந்த சமய, சமுதாயப் பின்புலங்களின் பதிவுகளைத் தாங்கிப் பக்திப் பாசுரங்களும், தேவார, திருவாசகத் தெள்ளமுதப் பாக்களும், சிற்றிலக்கியச் செய்யுட்களும் எழுந்தன. கூடவே, 'ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் தங்களின் பட்டிமண்டப' வாதங்களைப் படைப்புகளாக முன்வைத்து, சிறிய பெரிய காப்பியங்களை வடமொழிச்சார்போடு தமிழுக்கு அளித்தனர். இலக்கண நூல்களும் அவ்வண்ணமே எழுந்தன. பொதுவான நிலையில், மின்மினிகளாய், சின்னஞ்சிறு சுடர்களாய். அகல் விளக்குகளாய் ஆங்காங்கே தோன்றி ஒளிர்ந்த சிற்றிலக்கியங்களும் கவிதைச் சுடர் அணையாது காத்தருளின.

சமணம், பௌத்தம் உள்ளிட்ட இந்தியச் சமயங்களை வென்றெழுந்த தமிழச் சைவமும் வைணவமும் தமக்குள் முரணிக்கொள்ளத் தமிழ்மொழி தமக்குரிய பொதுமைப்பண்புகளை- சங்கஇலக்கிய மரபுகளை - திருக்குறள் மாண்புகளை இழக்காமல் காக்கக் காலத்தைத் துணைக்கொண்டது.

தமக்கு முன்னெழுந்த அத்தனை இலக்கிய, இலக்கண மாண்புகளையும், இந்திய மொழிகளில் தம்மால் இயன்ற அனைத்துப் படைப்புகளையும் ஆழ உள்வாங்கிக்கொண்டு தமிழாய் எழுந்த தனிப்பெரும் படைப்பாளி கம்பன் என்பதைக் காலம் கண்டு நிறுத்தியது.

பழைய கதை, பலரும் அறிந்த பரம்பரைக் கதை. புதிய வடிவில், புதிய பொலிவில், தம் காலத்து அனுபவங்களை உள்ளடக்கி உலகப் பெருங்காப்பியமாக உருவாக்கிக் கொடுத்தவன் கம்பன். தழுவல், மொழிபெயர்ப்பு என்னும் எல்லைகள் கடந்த அக்காவியத்திற்கு, 'இராமாவதாரம்' எனக் கம்பன் பெயரிட்டிருந்தாலும் படைத்தோனின் பெயரை முன்னுக்கு இருத்தி, 'கம்பராமாயாயணம்' என்றே கொண்டாடியது இலக்கிய உலகம். இதுவும் மூலநூல் வரிசையில், தமிழின் தனித்துவம் பேணும் முதல்நூல்கள் வரிசையில் சிறப்பிடம் பெற்றது.

இப்படி ஒரு நூல் எழுதவேண்டும் என்கிற தாகம் எப்படி வந்தது கம்பனுக்குள்? முதலில் அவன் யார்? ஆயிரம் கதைகள், புனைவுகள் அவனது வாழ்வியலை வைத்து வழங்கப்பெறுகின்றன. யாவினும் கடந்து அவனுக்குள் கதைத்துவமும், கவித்துவமும் தனித்து

ஒளிரும்படி எப்படிப் பாடினான்? இது பொருள் பொதிந்த கேள்வி. புகப் புகக் கிடைக்கும் புதையல்களின் மூலவாசலைத் திறக்கும் எளிய திறவுகோல். அதுகூட இல்லை, அதற்கான மந்திரத்தொடர். அப்படியே ஒப்புவிக்கவேண்டிய கட்டாயமும் இன்றி அவரவர் மனங்கொண்ட வண்ணம் உரைக்கலாம். கம்பகாவியப் பேழையைத் திறக்கலாம். கம்பன் பாடல்களைத் தாங்கிய ஓலைகளைக் கரையான்களும், கம்பனை உள்வாங்கிய மூளைகளைக் காலமும் அரிக்காவண்ணம் காத்தது, தமிழ்தான். என்றுமுள தென்றமிழாய்த் தன்னை நிலைநிறுத்தக் கம்பனைக் கால காலத்துக்கும் தாங்கிப் பிடிக்கவேண்டிய கட்டாயம் தமிழுக்கு.

நிச்சயமாக, கம்பன் எடுத்த எடுப்பில், இந்தக் காவியத்தைப் பாடி-யிருக்க மாட்டான். அத்தோடு இந்த ஒற்றைப்பெருங்காவியத்தோடு நின்றிருக்கவும் மாட்டான். பலவேறு பாடல்கள், குறுநூல்கள், காவிய முயற்சிகள் கூட மேற்கொண்டிருக்கவேண்டும். இத்தனை பெருங்காப்பிய மாளிகையை எழுப்பிய கம்பன், தனக்கொரு - தானேயாகிய கற்பனைத் தன்மையோடு, ஒரு தனிக்காப்பியமும் பாடியிருக்கக் கூடும். அவையெல்லாம் பயிற்சியின் பரிமாணங்கள், படைப்பதற்கு முன் பழகிய அனுபவங்கள் என்று கருதி, அவற்றையெல்லாம் அவனே முன்னின்று அழித்திருக்கலாம். அல்லது இந்தப்பேரொளி-யின்முன் அச்சின்னஞ்சிறு மின்னல்துகள்கள் சோபையிழந்து மங்கி, மக்கியிருக்கலாம்.

விட மனமில்லாத சிலர் இன்றைக்கு முன்வைக்கும் சரசுவதியந்தாதியையும், சடகோபர் அந்தாதி உள்ளிட்ட கம்பன் பெயரிலான சிற்றிலக்கியங்கள் எதையும், காப்பியம் பாடிய கம்பன் எழுதிடவில்லை என்பது உறுதி. ஆனாலும், நெருப்பில்லாமல் புகையாது அல்லவா?

காலம், சூழல், கற்ற கல்வி, பெற்ற ஞானம், அனுபவம், தற்காலப்போக்கின் தாக்கம் எல்லாம் கூடிக் கனன்றெழுந்த கவிநெருப்பில் தன்னையே ஆகுதிப்பொருளாய்த் தந்த கம்பனால் தமிழ்பெற்றது இவ்வமர காவியம்.

சிவனா, மாலா, நான்முகனா, அருகனா, புத்தனா, இன்னும் எத்தனையோ சமயங்கள் கண்டு கண்டுதொழும் எல்லையறு பரம்பொருள் எதுவோ, அதுவா? அது தனியே இருக்கக் கண்டு தொழும் தான் யார்? தன் முன்னுள்ள உயிர்கள், உயிரற்ற பொருள்களை

உள்ளடக்கிய, உலகம், இதுபோல், எல்லையறு பலகோள்கள் இயங்கக் களம் அமைத்துத் தாமே இயங்கும் தனிப்பெரும்பிரபஞ்சம் எல்லாம் யார்? யார்? எனத் தேடித் தேடி, 'எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனைக் கம்பன் தன் குறிகளால் காட்டிடும் பெருமுயற்சியின் அற்புதப் பிறப்பு, இக்காப்பியம்.

எந்த இடத்தில் இருந்து தொடங்கினாலும் முன் இருந்த இடத்தில் கொண்டுவந்து நிறுத்தும் நிறைவுறும் வட்டம் போல், தமிழ் கம்பனையே சுற்றிச் சுற்றி வந்து காட்டுகிறது. 'அப்படி என்ன இருக்கிறது கம்பனுக்குள்?' என்ற கேள்விக்கு, 'என்ன இல்லை கம்பனுக்குள்?' என்று பதில் கேள்வி எழுப்புகிற தமிழ், கம்பனைக் கண்டுகொண்டது இருக்கட்டும். கம்பன், இராமனைத் தேர்ந்தது எதனால்?

அதற்கான தடயங்கள் ஆயிரமாயிரமாய்க் காப்பியத்துள் கிடக்கின்றன, இன்னும் கண்டுகொள்ளப் பெறாமல்..! காப்பியக்கதையும் அதன் காலமும் மிகவும் பழையது. எழுதுதற்காக எடுத்துக்கொண்ட காலமும் இடைப்பட்டது. இன்றைக்கு என்று என்றைக்கு எடுத்துப்பார்த்தாலும், அன்றன்றைக்குப் புதிய புதிய தளங்களில் தமக்கான படைப்பு நியாயங்களை வெளிச்சமிட்டுக் கொண்டு இருப்பதற்கான இயக்கம் கம்பனுக்குள் எங்கிருந்து வந்தது?

உண்மையில் அவன் தெய்வக்கவிதானா? தெய்வங்கள்கூட, பல்வேறு யுகங்களில் பல்வேறு அவதாரங்கள் எடுக்கும்போது, படைப்பாளியான கம்பன் அப்படியே ஒற்றைக் காப்பியத்துள் ஒடுங்கி, தேவை ஏற்படின் விசுவரூபம் எடுக்கும் மாட்சி பெற்றிருப்பது எங்ஙனம்?

கலை, இலக்கியம், அறிவியல், ஆன்மிகம், அரசியல் என, இன்றைக்குப் பல்வேறு துறைகளாய்ப் பரந்துபட்ட தளங்களில் பொருத்திக் காணும்படியாக, அற்றைக் கால அனுபவங்களின் அடிப்படையில் கதையை நிகழ்த்திச் செல்கிற கம்பன் உண்மையில் இவற்றையெல்லாம் உணர்ந்து பாடியிருப்பானா? அல்லது இப்படியானதொரு சாயலைக் கம்பன்மேல் பொருத்தி, வியந்து வியந்து போற்றும் மீஉயர் சொல்லாடல்களுக்குள் கம்பனை வைத்துத் துதிபாடுவதைத் தொழிலாகக்கொண்ட ஒரு சாரார் ஏற்றிவைத்துவிட்டனரா? என்றெல்லாம் பல கேள்விகள் எழும்புகின்றன.

சென்னைக் கம்பன் கழகப் பதிப்பின்படி, மிகைப்பாடல்கள் என்று விலக்கிய பாடல்கள் போக, காப்பிய ஒழுங்கில் வரிசைப்படுத்தி

வைக்கப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கை, 10,368. இத்தனை பாடல்களையும் ஓர் ஒழுங்குநேர்த்தியோடு, கதைப்போக்குப் பிசகாமல், கருத்தோட்டத்தில் தொய்வுவிழாமல், கவித்துவத்தை மேலே மேலே பரந்தெழும் சுடர்போல் எழுப்பிக்கொண்டு பாடிய கம்பனின் கவியுளம் அசாதாரணமானது.

'கல்வியிற் பெரியன் கம்பன்' என்ற அடைமொழி மோனை கருதி வந்த பாராட்டுமொழியன்று. ஆழ்ந்து அனுபவித்துத் தேறிய வாசகநெஞ்சத்தின் வளர்மொழி. இல்லையென்றால்,

"கல்வி சிறந்த தமிழ்நாடு -புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு'

என்று மகாகவி பாரதி உரிமை கொண்டாடியிருப்பாரா? இக்கவித்தொடரில் இருந்து பெறப்படும் ஓர் உண்மை, கம்பன் இத்தகு கவித்துவப் பேராற்றலில் விளங்கிக் காண்பதற்குத் தமிழகத்தின் கல்விநிலை ஓங்கி உயர்ந்துநின்றிருக்கிறது என்பது.

"பெருந் தடங் கண் பிறைநுதலார்க்கு எலாம்,

பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்"

என்று கம்பன் பெண்கல்வியையும் உள்ளடக்கிப் பேசுவதில் வியப்பில்லை. பிறப்பில் இருந்து ஒவ்வோர் உயிருக்கும் புறத்தே உடம்பு போல, அகத்தே கல்வியும் அமைந்துவந்திருக்கிறது இயல்பு. பூத்தல் என்ற சொல் விரிக்கும் பொருள் உணர, 'வெள்ளத்தனைய மலர்நீட்டம்' என்று வள்ளுவத்தை இணைத்துப் பார்க்கலாம்.

அந்தக் கல்வியை, மானுடகுலம் எண்ணாலும் எழுத்தாலும் விரிவாகப் பெற்று வந்திருக்கிறது. வாழ்வியல் நிலையில், அவரவர் அனுபவம் சார்ந்து பெறுகிற கல்வி, பிறப்பிலேயே அமைகின்ற - மரபியல் அணுவழி அவரவர்க்கு உரிய அறிவாற்றலால் விரித்துப் பெறுகின்ற கல்வியாக மலர்ந்து வருகிறது. தவிரவும், சங்கஇலக்கியங்களில் இருந்தே கல்வி குறித்த விழிப்புணர்வு தமிழகத்தில் கால்கொண்டிருந்தது. இந்தியாவிலும் இருந்திருக்கிறது.

இங்கே, தமிழ்நாடு என்பது, இந்தியம் தழுவியது. சங்க இலக்கியத்தில் இமயம் முதல், கடல்கோளுக்கு முந்திய தென்குமரி-யிடை உள்ள நிலப்பரப்பு முழுதும் தமிழாளுமைக்குரிய பகுதி. உண்மையில் 'கம்பன் அடிப்பொடி' சா.க. அவர்கள், சொல்வதுபோல, 'இந்தியவரலாறு என்பது தெற்கில் இருந்துதான் தொடங்கவேண்டும்'.

அப்போதுதான் அது முழுமைபெறும். வடக்கை வாழ்விக்க, தெற்கின் தேவை இன்றியமையாதது. சொல்லப்போனால், நடையில் நின்றுயர் நாயகனாக இராமன் தன்னை உயர்த்திக்கொள்ளத் தெற்குத்தான் இடமளித்தது. எல்லைகள் கடந்த இதயத்தை, பிரபஞ்சப் பேருணர்வை, முன்னிறுத்திக் கொள்ளத் தமிழே, தக்க துணை என்பதைச் சங்ககாலத்துக் கபிலரில் இருந்து வரலாறு சொல்லிக்கொண்டே வருகிறது. ஆரியமன்னன் பிரகதத்தனுக்குத் தமிழுணர்த்தவேண்டிக் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாடல், நேரிய நிலையில் மானுடம் உய்யத் தமிழ் மரபை முன்னிறுத்தி அறம்பாடிய வள்ளுவம்,

"இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீ ருலகில் முழுவது மில்லை" (சிலம்பு. 3:3: 65-58)

என்று சேரஅமைச்சன் வில்லவன்கோதை இசைத்த சிலம்பு வரி,

யாவும், கம்பனுக்கு முன்னின்று வழிகாட்டிநிற்கிறது என்கிற உண்மையைப் படைப்பாக்க மரபினின்று கண்டுணர்ந்த பாரதியார், தன்னோக்கில் உலகளாவிய காப்பியங்களை முன்னிறுத்தித் தன் உறுதிப்பாட்டைப் பின்வருமாறு விளக்குகிறார்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும்புகழ்ச்சியில்லை"

இது கவிவாக்கு. காலங்கடந்து நிற்கும் சத்தியவாக்கு. யாருடைய வற்புறுத்தலுக்காகவும், விருப்பத்திற்காகவும் எழுதப்பட்ட வாசகம் அன்று. வாழ்வனுபவத்தில் கண்டுணர்ந்து எழுதிய கவிதைத் தீர்ப்பு என்பதை, 'உண்மை' வெறும்புகழ்ச்சி' என்ற இருசொற்கள் கொண்டு நன்குணரலாம். இந்த முடிவு திடீரென்று வந்ததன்று.

முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும் பின்னர் நாடு பெறவேண்டிய பெற்றிகளையும் முன்னிறுத்தித் தன் காலத்திற்குத் தகுந்த சீலங்களைக் கண்டுணர்த்துதலே படைப்பாளிகளின் நிலைப்பாடு. இது அவரவர் கால, தேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப, எழும்; விரியும்; வளரும். அந்த வகையில் தன் காலத்தின் பேரெழுச்சியாகக் கம்பன் எழுந்திருக்கிறான் என்பது ஓர் அற்புத நிகழ்வே.

அதைவிடவும் அதைத் தமிழகம் கண்டுணர்ந்ததுதான் அற்புதத்தின் அற்புதம். ஆங்கில ஆட்சிக்குட்பட்டு இந்தியா தவித்த காலத்தில், அறிவும், ஆற்றலும், ஆளுமைத்திறனும், இந்தியர்களுக்கு இல்லையென்று ஆங்கிலேயர்கள் கொக்கரித்துக் கொண்டிருந்த காலத்தில், 'அறிவின், இலக்கியத்தின் பெருமைக்குரியன யாவும் ஆங்கிலத்தில்தான்; இந்தியமொழிகளில் இல்லை' என்று அரைகுறை அறிவுடைய பெருங்கல்வியாளராகத் தம்மை அறிவித்துக்கொண்ட ஆங்கில அறிவுடையவர்கள் மத்தியில் தன் கவிமூலம் தேடவேண்டிய கட்டாயம், அக்கால ஆங்கிலக்கல்வி பெற நேர்ந்த இந்தியர்களுக்கு இருந்தது. தேடி, மக்களிடம் கொண்டுசேர்க்கவேண்டிய கடப்பாட்டில் இந்திய அரசியல் விழிப்புணர்வு விரிந்தது; ஆங்கில விவிலியத்திற்கு நேராக, இந்தியத் தத்துவ நூல் எனப் பகவத்கீதையை முன்னிறுத்தியது. இதிகாச, புராண இலக்கியங்களில் துலங்கும் வீரச்சுவையை, நாட்டுப்பற்றை, ஊக்கத்தின் ஊற்றுக்கண்ணைத் தேடத்தொடங்கியது.

அக்காலக்கட்டத்தில், திலகரின் தலைமையில் குழுமிய வீரஇளைஞர்கள் மூவரை ஆக்கிரமித்திருந்த காப்பியம் கம்பராமாயணம். ஒருவர், ஆங்கிலக் கல்வியைத் தம் பாடலில் சாடிய பாரதி. மற்றிருவர், இந்திய எல்லைதாண்டி, ஆங்கிலம் கற்கப்போனவர்கள். ஒருவர் வங்காளி;மற்றொருவர் தமிழர். இவர்கள் மூவரையும் இணைத்துக் காத்தது புதுவை.

தலைமறைவாக இருந்து அரசியல் இயக்கம் நடத்திய பாரதியைப் புதுவை முதலில் வரவேற்றது. பின்னர் வங்கத்திலிருந்து, அரவிந்தரும், இலண்டனில் இருந்து வ.வே.சு.ஐயரும் வருகைபுரிந்தனர். புறவேகத்திற்கு, வாட்பயிற்சியையும், துப்பாக்கிப்பயிற்சியையும் வழங்கிவந்த வ.வே.சு.ஐயர், உள்ளப்பயிற்சிக்குக் கம்பராமாயணத்தை முன்னெடுத்துக்கொண்டார். உலகப்பேரிலக்கியங்களோடு ஒப்பிட்டு, இந்திய, வேத, உபநிடத, இதிகாச, காப்பியப் படைப்புகளுள் ஆழ்ந்து தேடிய இம்மூவரும் கண்டுணர்ந்தது 'இந்தியாவின் ஆன்மா இலக்கியம்' என்பதைத்தான்.

இந்தியனின் ஆன்மாவிற்கு உற்றதுணையெனக்கொள்ள வேண்டிய இடத்தில் கம்பராமாயணம் இருந்தது என்பதால்தான் தற்காப்பிற்காகத் துப்பாக்கியைவிடவும், வ.வே.சு.ஐயர் தூக்கி வைத்துக் கொண்டிருந்தது கம்பராமாயணத்தை என்கிறது வரலாறு. உலகப்பெருங்காப்பியங்களோடு ஒப்பிட்டுக் கம்பனைப் பார்த்த

அவர்தம் ஆங்கில மொழியிலான, 'கம்பராமாயண ஆராய்ச்சி' நூல், அக்காலத்தில் கம்பனைப் பற்றிய பார்வையின் அற்புத ஆவணம். "கம்பனுடைய சந்நிதிதானத்திலே உலகமகாகவிகளான மில்டன், போப், ஷேக்ஸ்பியர், தாந்தே, விர்ஜில், ஹோமர், பைரன், ஷெல்லி முதலியவர்கள் மட்டுமின்றி ஆதிகவியான வான்மீகியும் முடிசாய்த்து அடிவணங்கி நிற்கவேண்டியவர்" என்கிறார் அவர்.

'ஆதிகவி' வால்மீகியிடம் வாங்கிக் கம்பன் எழுதிய இராமாயணம், ஒரு மாபெரும்மூல காவியம் என்று அரவிந்தரும் போற்றுகிறார்.

"முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடைவில்? -- எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்"

என்று பாடிய பாரதி, கம்பராமாயணத்தை, 'இந்தியாவின் சொத்து' எனும் பொருளில் 'ஆர்யசம்பத்து' வரிசையில் வைக்கிறார். வடக்கே, பகவத்கீதையைத் தூக்கிக்கொண்டு போராடிய வீரர்களுக்கு இணையாகத் தெற்கே கம்பனைக் கைக்கொண்டனர் வீரர்கள்.

பின்னர் வந்த காந்தியடிகள் முன்வைத்த, 'இராமராஜ்யம்' கம்பன் முன்மொழியும் 'கம்பராமராஜ்யம்'எனத் தமிழகத்துக் காந்தியவாதிகள் உணரும் நிலையும் ஏற்பட்டது. சமய ஒருமை, சமுதாய ஒருமை, உயிர்களின் மீது தனிப்பெருங்கருணை, அறநெறிநிற்றல், சத்தியாக்கிரகம் என்ற கருத்தாங்களுக்கு, இராமன், குகன், சுக்ரீவன், வீடணன், ஆகிய பாத்திரங்களோடு கம்பன் சுயமாய் அமைத்துப் பாடிய பிரகலாதனும் பெருந்துணைபுரிந்தனர். இதற்கு இன்னொரு புறமும் இருக்கிறது.

தென்தமிழ்ப்பகுதியில் இதிகாசங்களைப் பக்தியோடு படிக்கிற பழக்கம் இருக்கிறது. புரட்டாசியில் இராமாயணமும், வைகாசியில் மகாபாரத - விராட பருவமும் படிக்கப்பெறுகின்றன. சகோதர ஒற்றுமைக்கு, இராமாயணமும், சகோதரர்களைப் பிரிக்கும் சூழ்ச்சிகட்கு இலக்காகிவிடக்கூடாது என்ற எச்சரிக்கைக்கு மகாபாரதமும் வழிகாட்டி வந்திருக்கின்றன. ஏடுபடிக்கும் இந்நிகழ்வில் மக்கள் கூடுதலாகப் பங்கேற்றுக் கேட்டது, கம்பராமாயணத்தை. சொல்பவர் தத்தம் அனுபவங்களைக் கலந்து விரித்துரைக்க, கேட்போரும் தத்தமது உணர்வுகளையும் அனுபவங்களையும் உள்ளடக்கிக் கொண்டு கேட்டுணர, கம்பராமாயணம் படிக்கிறபோதும் கேட்கிறபோதும்

சமகாலத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்இலக்கியமாகத் தமிழர்களால் உணரப் பெற்றிருக்கிறது. பண்பாட்டுத்தளத்தில் அது செலுத்திய ஒளிவீச்சு அபாரம். அதனால்தான் அன்றாடவாழ்வின் உரையாடல்களில் குறியீட்டுப்பெயர்களாகக் கம்பனின் பாத்திரப்பெயர்கள் பண்புகளின் அடிப்படையில் இடம்பெற்றன. அபலை அகலிகைகள், பயங்கர சூர்ப்பணகைகள், தின்றுகொழுக்கும் தாடகைகள், உள்நின்று சதிசெய்யும் கூனிகள், இரையாகும் கைகேயிகள், துயருறும் கோசலைகள், துணிந்துநின்று காக்கும் சுமித்திரைகள், என்று கம்பனில், பல்கிப்பெருகும் பாத்திரங்கள் நிகழ்கால நிகழ்வில் பொருத்தித் தன்னறம் பேணத் துணைநின்று மக்களைக் காத்தன. காப்பியத்தில் இடம்பெறும் தருக்கவியல், மனச்சாட்சியை மேலெழுப்பி அறம் பேணவைத்தது. எல்லாருக்குள்ளும் கனன்றெழும் காமத்தைப் பத்துத்தலைகளாக்கிக் கிள்ளியெறிந்தது, கம்பச் சொல் என்னும் சுடுசரம். தனிமைச்சிறையில் தவிக்கும் பல சீதையர்கட்கு கம்பன் தந்த தன்னம்பிக்கை அளவிடற்கரியது.

உவமை, உவமேயம், உருவகம், பல்வேறுபட்ட அணிகள் இவற்றையெல்லாம் விஞ்சி, கவிதையைக் கவிதையாகவே காட்டி உணர்த்தக்கூடிய கம்பராமாயணத்தைக் கம்பன் எழுதினான் என்பது பொதுக்கூற்று. ஆனால், கம்பனைத் தமிழ் கவிதையாகவே எழுதிவிட்டது என்று சிறப்பாக உணர்வதே உண்மை. அதற்கான அத்தனை வல்லமைகளையும் தன்னுள் ஒருசேரத் தாங்கியிருக்கிறது இக்காப்பியம். இல்லையெனில், இத்தனை காலம் பனையோலைகளில் இவற்றைப் பாதுகாத்திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. படித்தோர் நெஞ்சில் நிலைத்திருக்கவேண்டிய தேவையும் நேர்ந்திருக்காது. அதுவுமன்றி, பேசி, எழுதி, எடுத்துவிளக்கி, இத்தனை ஆண்டுகாலம் இந்நூலைத் தமிழர்கள் மிகுதியாகப் பயன்படுத்தி யிருக்கிறார்கள் என்பதன் மற்றொரு அடையாளம்தான் இத்தனை செருகுகவிகள், பாடபேதங்கள் இந்நூலுக்கு இருப்பது.

தனித்து, ருசித்து, அளவுகோல் வைத்துப் பல்லாயிரம் பாடல்கள் கம்பனது இல்லையென, ரசிகமணி போன்றோர் நீக்கியபோதிலும், 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கைவேந்தன்' என்று கம்பன் பாடினதாக' எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும்,அறியாதவர்களும் இன்னமும் சொல்லிக் கொண்டிருப்பார்களா? 'இது கம்பனுடைய கவிதை இல்லவே இல்லை என்பது உண்மை' என்றாலும், இராவணனை

எழுத, அவனைப்பற்றிப்பேச அத்தனை உரிமையும் கம்பன் ஒருவனுக்குத்தான் உண்டு என்று தமிழர்கள் படைப்புரிமையை(Pattern right), கம்பனுக்குக் கொடுத்ததில் வியப்பொன்றும் இல்லையே.

இவைபோக, இன்றைக்கும் 'இது என்ன கம்பச்சித்திரமா?' என்று வினவும் போக்குத் தமிழகத்தில் உண்டு. சித்திரக்கவி' என்று வித்தகம் பண்ணுகிற போக்கு பின்னால் எழுந்தது என்பது ஒருபுறமிருக்கக் காட்சிச் சித்திரிப்பில் கம்பனை விஞ்சி இன்னோர் கவிஞன் தமிழகத்தில் இல்லையென்பதன் நற்பதிவுதான் இது.

"கம்பன் வாழ்நாளில் அவனுக்கு ஒரு அடியார் பெருங்கூட்டமே இருந்தது என்றும், அவன் செல்லும் திசையெல்லாம் அவர்கள் பின்தொடர்ந்தார்கள் என்றும், அவர்களால் விளைநிலங்கள் தேசமுற்றன என்றும், அரசாங்கம் அத்தகைய நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்தது என்றும், 'கம்பர் போனவழி கண்டு கழித்தது' இவ்வளவு என்றும் கதைகள் வழங்குகின்றன. கம்பனைக் குறித்து இவ்வாறு பேசுவதும், கற்பனைகள் புனைவதும் அக்கவிஞனின் எல்லையற்ற செல்வாக்கின் அடையாளங்கள்தாம்" என்பார் கவிஞர் சிற்பி. (சிற்பிபாலசுப்பிரமணியம்.கம்பனில் மானுடம், ப.15)

நாட்டுக்காக, தந்தையின் சொல்லுக்காக, மரவுரி தரித்துக் காடேகிய இராமனைப்போல், தேசப்பிதா காந்தியின் ஆணையேற்று, பொருள் அனைத்தும் இழந்து, காடுகள் கடந்து சத்தியாக்கிரகப்பணியில் இறங்கி உழைத்த தீரர்களின் இராமராஜ்யக் கனவில், தன்னொழுக்கத்தில், கம்பன் சுடர்விட்டுப் பிரகாசிக்கத்தொடங்கினான்.

தேசபக்தியும், தெய்வபக்தியும் கலந்தெழுந்த தமிழகச்சூழலில் காரைக்குடி ஒரு முக்கியத் தலைநகராகத் திகழுதற்குப் பல காரணங்கள்.

சமயநிலையில், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், கோயிலூர் ஆதீனம் மற்றும் பாதரக்குடி உள்ளிட்ட நகரத்தார் மடங்கள் செட்டிநாட்டுப் பகுதியைச் சிறப்புக்குள்ளாக்கின. உலக அளவில் இந்திய சமயநெறியினை மேலெடுத்துச்சென்ற சுவாமி விவேகானந்தர் மற்றும் குருநாதர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுமுகத்தான், விவேகானந்த புத்தகசாலை உருவாக்கம்பெற்றது. இத்தகு மரபின் நீட்சிகளாக, ஹிந்துமதாபிமான சங்கமும் (1917) இச்சங்கத்தின் வாயிலாக, இராமகிருஷ்ண கலாசாலையும்(1918) தோற்றம் பெற்றன.

காரைக்குடிக்கு, கடையத்தில் இருந்து மகாகவி பாரதியார் வரவழைக்கப்பெற்றார். தொடர்ந்து வ.உ.சி. சுப்பிரமணியசிவா, வ.வே.சு.ஐயர், ஞானியார் சுவாமிகள், விபுலானந்த சுவாமிகள், வீர.சுப்பையா சுவாமிகள், ந.மு.வேங்கடசாமிநாட்டார், திரு.வி.க. உள்ளிட்ட பல்வேறு அறிஞர்கள் வருகை தந்து கலை, இலக்கிய, அரசியல், ஆன்மிக, சமய, சமுதாயச் சீர்திருத்தங்கள் பல தோன்றுதற்கு வித்திட்டனர். இவர்களுள், காரைக்குடியின் தேசிய எழுச்சிக்கு வித்திட்டவர் சுப்பிரமணிய சிவா என்பது சா.கணேசனாரின் கருத்து. "எங்கெல்லாம் கூட்டம் சேருமோ, அங்கெல்லாம் சிவா எழுந்தருளியிருப்பார். தேர்த்திருவிழாக்கள் இவர் பிரசங்கத்திற்குக் கூட்டம் சேரப் பேருதவியாயிருந்திருக்கின்றன. விழா நடைபெறும் கோயில் வீதியில் ஒரு தெருவிளக்குத் தண்டின் அடியிலே, கல்லோ, மரமோ, அன்றி ஒரு கள்ளிப்பெட்டியோ, அதன்மீது சிவா நின்று கொண்டிருப்பார். 'வந்தேமாதரம்', 'பாரதமாதாவுக்கு ஜே', மகாத்மா காந்திக்கு ஜே' என்ற கோஷங்கள் முழங்கும். பாரதியார் பாடல் உணர்ச்சியூட்டும். அப்புறம் கூட்டம் கூடிவிடும். சிவா வீராவேசமாகப் பேசுவார். வெறும் பேச்சா அது? இல்லை. ஒரு போர்ப் பிரசங்கமாகவே இருக்கும். அயர்ந்து கிடந்தவர்களை ஆண்மையாளராக்கும். ஓய்ந்து கிடந்தவர்களை உணர்ச்சிப் பிண்டங்களாக மாற்றும்" என்கிறார் நேரில் கண்ட சா.கணேசன்.(சா.கணேசன், வீரமெய்ஞ்ஞானி சுப்பிரமணிய சிவா, ஹிந்துமதாபிமானசங்கப் பொன்விழா மலர், ப.39)

மேலும், மகாத்மாகாந்தி, சர்தார் வல்லபபாய் படேல், தந்தை பெரியார் உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் பலரும் வந்து இப்பகுதியில்,தேசிய எழுச்சிக்கு வித்திட்டனர்.

இந்தப்பின்புலத்திற்குப் பெரிதும் காரணமாகியதோடு, களத்தில் இறங்கித்தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டவர்கள், பலராவர். அவர்களுள் சொ.முருகப்பா, கானாடுகாத்தான் வயி.சு. சண்முகஞ் செட்டியார், இராய.சொ. போன்ற பலர் குறிப்பிடத்தக்கவர்கள். பின்னர் சமூக முன்னேற்றம் கருதி, 'தன வைசிய ஊழியர் சங்கம்' (1919) தோற்றுவிக்கப்பெற்றது. அதற்கென, 'தனவைசிய ஊழியன்' (1820) வார இதழும் தோற்றம் கொண்டது. இதன் ஆசிரியராக, சொ. முருகப்பா பணியாற்றினார். பின்னர். 'குமரன்' (1923) மாத இதழும் அவரால் தொடங்கப்பெற்றது. பி.ஸ்ரீ. ஆசிரியராக இருந்து அதனைச் சிறப்புறக் கொணர்ந்தார். காங்கிரஸ் கூட்டம், ஜீவகாருண்யப் பிரச்சாரம்,

சுயமரியாதை இயக்கக்கூட்டம், தமிழிசை இயக்கம் எனப் பல்வேறு களங்களில், பணிகளை எடுத்துக் கொண்டு வளர்ந்த செட்டிநாட்டுப் பகுதியில் கம்பனுக்கென்றொரு கழகமும் தோற்றம் பெற்றது, 1939இல்.

1938ல் ரசிகமணி டி.கே.சி. யைச் சந்தித்ததும், 1939ல் தேரழுந்தூரில் நடைபெற்ற கம்பர்விழாவில் பங்கேற்றதும் காரணங்களாக, கம்பன் சமாதி அமைந்த நாட்டரசன்கோட்டைக்கு அருகில் உள்ள நகரமான காரைக்குடியில் சா.க. அவர்களால், கம்பன் கழகம் தோற்றுவிக்கப்பெற்றது. 'சொ.முருகப்பா, .அரு.சோமசுந்தரம், வி.ஆர்.எம்.செட்டியார், நீலாவதி சுப்பிரமணியம் தம்பதிகள் ஆகியோர் ஒத்துழைப்பு நல்கினர்.' (சா.கணேசன், 'நான் ஒரு கம்பன் அடிமை', கம்பன்அடிப்பொடி - கலைக்களஞ்சியம், ப.14) என்கிற சா.கணேசன் செயலராயிருந்து நடத்திய கம்பன்விழா, காலப்போக்கில் அவரது இயற்பெயரை மாற்றிக் கம்பன்அடிப்பொடியாகவே ஆக்கிற்று. அதற்கும் ஒருபெருங்காரணம் உண்டு.

பஜனை மடத்தில் இராமரை வைத்து வழிபடும் கூட்டம் ஒருபுறம், பக்தியை எதிர்த்து, இராமனைக் கேள்விக்கும் கேலிக்கும் உரியதாக்கி முழங்கிய அரசியல் பிரிவினர் கம்பனைக் கொளுத்தவேண்டும் என்று கிளம்பியது மறுபுறம், இரண்டுக்கும் இடையில் மாட்டிக்கொண்ட கம்பனுக்கு நேர்ந்த அக்கினிப்பிரவேசத்தில், கம்பனுக்குப் பதிலாக, சா.கணேசன் குதித்தார். சீதையின் உளத்தில் இராமனைப்போல், கணேசன் மனத்தில் கம்பன். துணைநின்றது தமிழ்.

எந்தத் தமிழைக் கொண்டு கம்பனை எதிர்த்தார்களோ, அவர்களே அந்தத்தமிழைத் தாங்கிப்பிடித்துக் கம்பன் கழகத்து நிகழ்வுகளில் பங்கெடுத்துப் பணிசெய்தனர். கணேசன் கம்பன் அடிப்பொடியாகவே ஆகிப்போனார்.

இந்த இருவேறு துருவங்களும் இணையக் காரணமாய மையங்களுள் ஒன்றாக, இடதுசாரிகளின் இலக்கியப்பிரவேசத்தைக் குறிப்பிட்டாகவேண்டும்.

தொ.மு.சி, பாஸ்கரத்தொண்டைமான், இவர்களோடு ஜீவாவும் களத்தில் குதித்தது கம்பன் கழக வரலாற்றில் பெரிய திருப்புமுனை. நாத்திகத்தை ஆழமாக உணர்ந்து உரைக்கும் ஒரு கட்சி- கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜீவா பேசுகிறார் என்பது அக்காலத்தில் பெரிய திருப்புமுனை. காலம் கடந்த கம்பனின் பேராற்றலைக் காலம் கடந்து

பேசிய ஜீவாவைக் கம்பனாகவே கருதித் தழுவினார் சா.கணேசன் என்பதை இன்றும் பேசாத மேடைகள் இல்லை. எழுதாத இதழ்கள் இல்லை.

ஆனால், அக்காலத்தில், "தி.மு.க. ஏடு ஒன்று ஜீவா படத்தை கேலிச் சித்திரமாகத் தீட்டி, கை, கால், நெற்றி, நெஞ்சு பூராவிலும் திருநீறு பூசி இரு கைகளிலும், சப்பளாக் கட்டை பிடித்து, ராமா, ராமா, கோவிந்தா எனக் கூத்தாடுவது மாதிரிப் போட்டு இருந்தது. கட்சிக்குள்ளும் சிலர் இதை வெட்டி வேலை என்று கருதினர். பேசினர். ஆனால், பின்னர் என்ன நடந்தது என்பதை நாடறியும். 1967 தேர்தலில், திமு.க. பெரும்பான்மை பெற்று அறிஞர் அண்ணா, முதல்வராக, இருந்த போது, உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடந்தது. அந்த மாநாட்டினை ஒட்டி சென்னைக் கடற்கரைச் சாலை ஓரங்களில், வள்ளுவர், இளங்கோ, ஔவை, பாரதி, பாரதிதாசன், வ.உ.சி. ஆகியோருக்கு சிலை வடித்துத் திறக்கப்பட்டது.... 'கம்பரசம்' மறைந்துபோய், 'ஆரியமாயை' ஆவியாகி, கம்பன் சிலை கம்பீரமாக கடற்கரையோரம் திமுக. ஆட்சியால் நிறுவப்பட்டது. காலம் கற்பித்த பாடம். கம்பனுக்குச் சிலை வைத்து மரியாதை செய்ததோடு நிறுத்தாமல், கலைஞர் முதல்வரான பின்னர், காரைக்குடியில் கம்பன் விழாவுக்காக தமிழ்த்தாய் மண்டபத்தையும் கட்டித் தந்து அதன் திறப்புவிழாவிலும், பங்கெடுத்தார் கலைஞர்.கம்பன் கொளுத்தப்படவில்லை. தமிழைப் போலவே, விழாக்களில் அரசவைக் கவிஞனாகவே, வீற்றிருக்கிறான்" என்று எழுதுகிறார் தா.பாண்டியன். (தா.பாண்டியன், ஜீவாவும் நானும்,பக்.41-42)

இப்படியாக, இலக்கிய இயக்கம்,மக்கள் இயக்கமாக மாறிவிட்ட நிலையில், கவிச்சக்கரவர்த்தியாகக் கருதித்துதிக்கப் பெற்ற, கம்பன் மக்கள் கவிஞனாக மறுபிறப்பெடுத்தான். கம்பன் கழகம் கண்டு தந்த பட்டிமண்டபம் பட்டிதொட்டியெங்கும் பரவி, கம்பன் புகழ் பாடிற்று. அதுவே, சிலம்பையும், வள்ளுவத்தையும் சேர்த்து, பாரதியோடு பயணம் செய்யத் துணைநின்றித் தூண்டியது.

தெருவெங்கும் தமிழ் முழக்கம்' என்பதோடு, 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ததில் காரைக்குடிக் கழகம் முன்னின்றது. சென்னை, புதுவை, கள்ளிப்பட்டி, கோவை எனத் இந்தியாவின் பல நகர்களிலும் கழகங்கள் உருவாயின. இன்று உலகின் பலநாடுகளிலும்...

காரணம் கம்பனோடு காரைக்குடிக் கம்பன் கழகம் முன்னிறுத்தியது கன்னித்தமிழையும். அது குறித்து ஒரு நீதிபதி உரைப்பதே சட்டம். இல்லையா?

"மொழி சமயத்திற்கு அப்பாற்பட்டது. இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள், கிறித்தவர்கள், முஸ்லீம்கள் ஆகிய பல மதத்தினரும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டதன் காரணமாகவே, தமிழில், பெரும் அறிஞர்களாகவும், கவிஞர்களாகவும், இலக்கியக்கர்த்தாக்களாகவும் இருந்திருக்கிறார்கள். இன்றும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும், சமய பேதமின்றித் தமிழ், பொது மொழியாவதோடு, தமிழ் இலக்கியங்கள் பொதுச்சொத்தும் ஆகும். இந்தக் கோணத்தில் பார்க்கும்போது, கம்பனின் காப்பியத்தில்,எல்லாமதத்தினரும் ஈடுபட்டவர்களாகவே இருந்தார்கள். என்ற போதிலும், இராமகாதை, இந்துக்களின் கடவுளரின் ஒருவருடைய அவதாரத்தைப் பற்றியது ஆகையால், அது ஒரு இந்து சமயக் காவியம். அதுவும் ஒரு வைணவ காவியம் என்ற எண்ணமும் இடம்பெறாமல் இல்லை. இந்த எண்ணமே தனித்து நிலைபடுமானால், இந்துக்களைத் தவிர, அதுவும் வைணவர்களைத் தவிர, - வேறு யாருக்கும் கம்பனுடைய இராமாயணத்தில் அக்கறையோ, ஈடுபாடோ கொள்வதற்கு இடமோ, வாய்ப்போ, இல்லாமல் போய்விடும். இந்தக்குறுகியநிலை கம்பனுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக, கம்பன் விழாவில் கம்பனுடைய படைப்பு ஒரு சமய காப்பியமாக அணுகப்படாமல், ஓர் இலக்கியமாகவே அணுகப்பெற்றது. இதன் காரணமாகக் கம்பன் விழாவில் எல்லாச் சமயத்தினரும் தாராளமாக முழுமனதுடன் பங்குபெற ஒரு வாய்ப்பு உண்டாயிற்று. இதன்பலன் என்னவென்றால், கம்பனுடைய காப்பியத்தை மதபேதமின்றித் தமிழறிந்த அனைவரும் நுகரமுடிந்தது. அதன் அழகையும், அருமையையும் அனுபவிக்க முடிந்தது". இத்தகைய ஒரு பேரரங்கத்தைக் கம்பனுக்கு நிர்மாணித்துக் கொடுத்தவர் அமரர் சா.க. என்று சொல்வது முற்றிலும் உண்மை." (மு.மு.இஸ்மாயீல், பரம்பரையில் ஒரு பரம்பரை, ப.13)

அதுமட்டும் இல்லை. ஒருவர் காரைக்குடிக் கழகத்தில் பேசினால் தமிழறிஞர் பட்டியலில் ஒருவரைத் தமிழ்கூறு நல்லுலகம் ஏற்றுக் கொள்ளும் நிலையும் இருந்தது. பேச்சு வெறும்பேச்சாக, காற்றில் கலந்து போய்விடாமல், அவற்றை எழுதவும், எழுதிய நூல்களைப் பதிப்பித்துவெளியிடவும், தேசிய அளவில் சாகித்திய அகாதெமி

துணைக்கொண்டு கருத்தரங்கம் நிகழ்த்திடவும் செய்த அக்கழகத்தின் வாயிலாய், அடுத்தடுத்துத் தலைமுறைகள் உருவாக்கம் பெற்றனர். கலை, இலக்கிய, பண்பாட்டு, அரசியல், ஆன்மிகத் தளங்களில் இக்கழகம் நிகழ்த்திய பண்பாட்டு ஏற்றங்கள் குறித்துத் தனியே விரித்துக் காணவேண்டும். இவற்றுக்கெல்லாம் கம்பன் அடிப்பொடி வகுத்தளித்த நெறிகள், நியதிகள் இன்றைக்கும் கடைப்பிடிக்கப்பெற்று வருகின்றன என்பதுதான் இக்கழகத்தின் இளமை இரகசியங்களுள் ஒன்று.

அரங்க எல்லைகளைக் கடந்து, ஆய்வுலகிலும், கம்பனைக் கற்கக் காரணங்கள் பலவுண்டு. காரணம் அவன் பல்துறைவித்தகன். "கவிதைத்துறையில் பல அதிசயங்களையும் ஒரு சேரச் சாதிக்கும் கம்பன், கலை உலகில் மட்டுமல்லாது, அறிவியல் துறையிலும், தடம்பதித்துத் தன்முத்திரை பதித்தவன். தாவரவியல்(Botony), உயிரியல்(Biology), விலங்கியல்(Zoology), உளவியல் (Phycology), உடற்கூறியல் (Physiology), இயற்பியல் (Physics), வேதியியல்(Chemistry), பறவையியல் (Ornithology), வானியல் (Astornomy), சோதிடம் (Astrology), மூதாதை மரபுவழியியல் (Genealogy), மரபுவழிப் பண்பியல் (Genetics), மண்ணியல்(Geography), நிலவியல் (Geology), விண்வெளியியல் (Aerounautics) என்ற அறிவியல் துறைகளில் திறம்படக் கற்றுத் தடம்பதித்துள்ளான். 'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்ற சொல் சும்மா வந்திருக்குமா, என்ன? கம்பனின் இத்தகைய அறிவு விளக்கமாக, ஏராளமான ஆய்வுக்கட்டுரைகளும் நூல்களும் ஏற்கெனவே வெளிவந்திருக்கின்றன" என்கிறார் கம்பன்அடிசூடி பழ.பழனியப்பன். (கம்பன் என்றொரு நிர்வாகி, பக்.3-4) அவரைச் செயலராகக் கொண்டமைந்த கம்பன் கழகம், இன்று பன்முகம் கொண்டு பரிணாமம் பெற்றுவருவது அவர் ஒரு சிறந்த நிர்வாகி என்பதால் மட்டுமன்று. அவர்தம் கம்பநேயம், கம்பனைக் கற்றுப் பல நூல்கள் எழுதியும் அடங்காத தாகம், இன்னும் கற்கத் துடிக்கும் ஆர்வம், இவற்றோடு கம்பன் பணியில் துணைநிற்கும் அன்பர்கள் பலரின் தோழமை எல்லாம்கூடி, இக்கழகத்தினை இளமைகுன்றாமல் காத்துவருகிறது.

எனினும் இறுதிக் கருதுகோள்தான் இக்கட்டுரை எழுந்ததற்கான காரணமே. இன்றைக்கு எல்லாம் வளர்ந்திருக்கிறது. அறிவியல், தொழில்நுட்பம், கலை, இலக்கியம், அரசியல் இன்னும் இன்னும் பட்டியலிட்டு முடியாத அளவிற்கு பல்வேறு துறைகளில் வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கிறோம்.

கம்பனின் கனவுகளையும் மீறிய வளர்ச்சி இது. மானுடத்தின் பெருவளர்ச்சி வியப்பிற்குரியது. அண்டத்தின் அப்புறத்தைப் பொத்த இரணியனின் செயல் இன்றைக்கு நடைமுறையில் சாத்தியப் பட்டிருக்கிறது. அணுவைச் சதகூறிட்டு அதன் ஆற்றலை விரித்துப் பிரபஞ்சம் அளக்கும் பெற்றியைப் பெற்றிருக்கிறது, மானுடம். கம்பனின் இராவணன் பர்ணசாலையோடு பெயர்த்துப் போன கற்பனை நிகழ்வை, இன்றைய எந்திரங்கள் இயல்பாக்கியிருக்கின்றன.

இவற்றினூடே, கம்பன் கண்டு பெரிதும் அஞ்சிய அறமீறல்களும், வரம்பு மீறிய நுகர்வு வெறியும், பெண்மையைச் சிதைத்து, உண்மையைத்திரித்து, வெறிகொண்டெழும் கலாச்சாரச் சீரழிவுகளும், அதற்குத் துணையாய அரசியல்,சமூக,பொருளாதாரப் பின்புலங்களும், சாதி, சமய, இன, தேச ஒடுக்குமுறைகள், கருத்தழிப்புகள், உயிர்ஒழிப்புகள், அறமிலாப்போர்கள் ஆகிய அனைத்துத் தீமைகளும் பல்கிப் பெருகியிருக்கின்றன.

இந்நாளில், அவற்றை எதிர்கொள்ள, ஆயுதங்கள் மட்டும் ஒரு நாட்டிற்கு உதவிவிடாது. பொருள் வசதிப் பெருக்கம் மட்டும் போதாது. அதற்கு உறுதிகொண்ட உள்ளங்கள்தான் மிகவும் இன்றியமையாத் தேவை.உள்ளம் உடைமைதான் உடைமை. உளவளம் உணர்வுகளால் அமைவது. உணர்வுகளை வளர்த்தெடுக்கும் உணவு இலக்கியம். அதுவே உயிர்க்காக்கம் தருவதும். ஆன்மபலம் அருள்வது. நம்மிலும் பல சோதனைகளை எதிர்கொண்ட முன்னோர்களுக்கு அது துணையாதல் நம் பின்னோர்களுக்கு அதனைக் கைப்பிடித்தளிப்பது நம் கடப்பாடு.

கம்பனைக் கொடுக்கவேண்டிய கரங்களில் ஹாரிபார்ட்டர். தமிழை ஆங்கில வழியில் தமிழர்களே கற்கிற காலம். தமிழகத்தில் தமிழ்பேசும் மக்களிடையே பரவும் தமிழ்த் திரைப்படத்தில், தமிழின் இயல்பை, தமிழுக்கு உயிரளித்த, தமிழ் இலக்கியங்களை, தமிழ் அறிஞர்களைக் கொச்சைப்படுத்தும் போக்கு நகைச்சுவை என்னும் பெயரில் நாளும் வளர்கிறது. அதற்குத் துணைசெய்கின்றன அரங்கநிகழ்வுகள். விட்டில் பூச்சியைப்போல், ஊடக மயக்கங்களில் வீழுகின்றது இளையபாரதம். உண்மையில் சூர்ப்பணகைகளுக்கும், சீதையருக்கும் பேதந்தெரியாத நிலையில் இராமன். இதற்குத் துணையாகும் இலக்குவன். அக்கினிப் பிரவேசத்தை அன்றாடம் சந்தித்துக் கொண்டேயிருக்கிறாள் சீதை. காவிரி கைவிரிக்கிறாள். கங்கை முகம் இழக்கிறாள். ஏர் துறந்தன

வயல்கள். பாலையாகிறது நிலம். மக்களைக் கயவர்களாக்கப் பெரும் சதிவலைகள் பின்னப்படுகின்றன. யாவும் சீர்குலைந்து போகும்நிலையில் அறந்தலைநிறுத்த இன்னொரு அவதாரத்தைத் தன்னுள்ளே மானுடம் நிகழ்த்திக் கொள்ள முன்னெப்போதையும்விட, இப்போது கம்பன் நமக்கு மிகமிகத் தேவை.

உலகமயமாக்கல், தாரளமயமாக்கல் ஆகியவற்றின் அசுரக் கரங்களில் அகப்பட்டுத் தவிக்கும் மானுடத்தை, சுற்றுச்சூழலை, ஆழிசூழ்உலகை, அனைத்து அறங்களைப் பேணிக் காக்க, முன்னெப் போதையும்விட, கம்பன் இன்றைக்குக் கட்டாயம் தேவை. காரணம், சங்கஇலக்கியத்திரட்சியும், வள்ளுவப்புரட்சியும், பக்தியிலக்கியப்பாங்கும், பகுத்தறிவுசார் அறிவியல் நோக்கும், ஒட்டுமொத்த பிரபஞ்ச எழுச்சியும் கொண்டிலங்கும் கம்பனை முதலில், சொல்லில் இருந்து செயலுக்கு, அரங்கில் இருந்து அகத்திற்கு எடுத்துச்செல்லும் இன்றியமையாத்தேவை இருக்கிறது. இது உண்மையில் உள்ளூர்க்கவலை இல்லை. உலகக் கவலை என்பதை எடுத்துச் சொல்லவே இந்தக் கருத்தரங்கம்.

Humanism in Kamban and Shakespeare: A Comparison

Dr. K.Chellappan
Prof. & Head, Dept. of English (Retd) Bharathidasan University, Trichy.

Kamban and Shakespeare are the highest peaks in the evolution of poetry as well as a humanistic consciousness in Tamil and English respectively. In Kamban, we see the full flowering of epic poetry and spiritual/ethical humanism. In Shakespeare, we see the perfection of dramatic poetry and Western concept of humanism in which man is glorified in spite of his imperfections.

Shakespeare lived in the golden age of Elizabethan England which was an era of Iuest and conquest in which the human spirit undertook voyages of discovery. Kamban lived during the period of Kulothunga Chola which was a prelude to the zenith of Chola empire under Raja Raja Chola. Kamban lived in an era of intellectual and spiritual excitement and in his epic we see a synthesis of Tamil humanism, the Bakhti philosophy and the epic form of the Sanskrit tradition. In Shakespeare we find a confluence of Classical humanism with Christian values.

Sukriva's exclamation when he first sees Rama and Lakshmana, 'Humanity has triumphed over Siva and Ayan and all other gods' is said to be the finest statement of humanism in Tamil tradition. This is comparable to Hamlet's exclamation:

'What a piece of work is a man!. How noble in reason, how infinite in faculties. In form and moving how express and admirable, in action how like an angel, in apprehension how like a god!'.

This sums up the Renaissance concept of Man which the play Hamlet both Iuestions and validates. Hamlet himself faces a great moral dilemma when he is entrusted with the task of revenge by his father's ghost and though contemplation makes him a coward he finally plunges into action as an actor player with detachment and he is able to escape guilt as well as forgive his enemies. Helen Gardner considers the soldier on god in the beginning of the play as a symbol and relates it to the predicament of Hamlet who cannot give up the battle of life. 'He is the Iuintessential European man who holds that man is ordained to govern the world according to equity and righteousness and not renounce the world and leave it to corruption'!

But the epic hero is more idealized and the embodiment of the collective values of an entire culture which also changes from time to time, for example, Valmiki's epic portrays an ideal of heroism which is within the human range. Based on Valmiki's request to Naradha, Mythili Kaul says, "The focus is on the hero, the man, possessed of immense physical strength combined with great virtue and wisdom, able to hold his own, if need be with the gods" But he is also subject to human passions and frailties – one who teases Surpanaka. But as Mythili Kaul puts it, because of this very conflict, Rama's fulfilment of his father's word becomes infinitely more meaningful. But in Tulasidas, the hero is not humanly great and to use Frye's terminology, now the hero differs from others not in degree, but in kind[2]. Accordingly, we find humanistic awe being replaced by divine worship and the hero being transformed in to a god. Everything is preordained and there is no human conflict.

Whereas Valmiki's Rama is completely human and Tulasidas's Rama is completely divine, Kamban's Rama is humanly divine. According to A. Srinivasa Raghavan, 'Kamban's Rama is never conscious that he is God. He walks on the path of righteousness as a man would, though he himself is a path'(3). Kamban's Rama is more complex than Valmiki's – his is an achieved poise – there is more of choice in his deeds. It is not simple exemplification of an ethical code – here is an existential enactment, accepting the human condition and of course enriching it. What Kamban's Rama displays is the heroism of being human as the emphasis now is on his ability to live up to ideals in human situations. Throughout the focus is on Rama's humanity and the triumph of Rama is that of humanity over the suras and asuras. But this triumph is a triumph of character and culture, and it is not based on conditions of birth but ethical boundaries and the brotherhood, which Rama established is based on the principle of equality and fraternity, based on devotion on the part of others and compassion on the part of Rama.

Rama symbolized pure being, the unmoved mover but there is also horizontal and vertical movement in him, the horizontal movement is symbolized in the spatial journey as well as his expansion which includes all his devotees in love, the archetypal love subsuming and providing the basis of all other love, and it is both the descent of God and the ascent of Man in the ethical sense. Rama becomes the universal man. Rama's killing of Vali makes him only human and his choosing not a very heroic way was impelled by political exigency as well as a need to uphold certain higher values.

Whereas in Kamban Rama represents a higher love 'Agape, but still in human terms, in Shakespeare human love is almost divine. King Lear evolves from fury to love for all sufferers in the Storm scene and identifies himself with the naked and wretched of the Earth. This starts when the first witnesses houseless poverty. "You houseless poverty I have taken too little care of this."

But it is in Cordelia his daughter love becomes redemptive and almost divine and comes to Lear unsought. Her love has been compared to the love of Christ, but the play cannot be reduced to any transcendental dogma, though it refers to gods now and then. Shakespeare's focus is here and now and the human freedom to act and capacity for love. The play ends with a return to the grand simplicities of human love and life when Lear has a vision of reunion with Cordelia in the face of death, but the human love is endowed with a sacramental beauty. Lear exclaims

'Upon such sacrifices, Cordelia
The gods themselves throw incense'

In The Tempest Miranda's love also has a redemptive Iuality again in human terms. When Ferdinand wonders whether she is a spirit she tells him that she is no wonder, but a maid. Though Prospero is endowed with magic and supernatural powers it is Miranda's human love, which finally triumphs and because of that only even Prospero forgives others and attains self mastery.

In Shakespeare the power of salvation is in the heroes but the focus is on the sinner hero, but in Kamban the power of redemption is in the hero and even though Sita is endowed with spiritual power she waits for the Rama to redeem her. In fact her passive resistance and chastity are as heroic as that of Rama. T.P. Meenakshi Sundaram says: "in a total perspective the eminence of Sita in imprisonment is a main theme as perceived by the Vaishnavites. Sita's passivity is only a Satyagraha war. Ravana's atrocity was a crime against women's greatness. Kamban shows these truths as illuminative illustrations in the evolution of the family in the world."[4]

In Sita we have the strength of Cordelia, Desdemona and Hermione combined with the sweet simplicity of Miranda. There is a significant similarity between Desdemona and Sita as both are incapable of even imagining evil. Interestingly Kamban gives importance to Father and son and husband and wife relationship whereas Shakespeare gives importance to father and daughter relationship.

Probably the Ramayana represents three levels of consciousness which are symbolized by Ayodhi, Aranya and Lanka and the ability to make ethical choice is the most distinguishing feature of the higher human order. The characters are placed on a hierarchy based on ethical criteria and even the animals are able to reach the higher level through this moral capacity. There is a reference to a character acquiring ethical values based not on caste but on his adherence to dharma and that dharma is described as the ability to distinguish between what is good and what is not. In Sukriva and Vibishna, we find not only the transcendence of certain loyalties for a higher purpose, but the triumph of the spiritual or ethical over the biological.

In Shakespeare's The Tempest also we see various levels of life in the island which represents an alternative world to that of our ordinary world, represented by Naples and Milan, but again in the island itself we have three levels, Caliban representing the demonic and Miranda representing the human and people like Alonso and Antonio representing ordinarily human. Whereas Alonso is capable of change, In Antonio there is no inner transformation. Ariel has been compared to Hanuman, But the Hanuman Rama relationship is far more idealized than Ariel Prospero relationship.

In Kamban's ideal land there is equality of man and women and this and all other virtues are ultimately based on a kind of spiritual socialism There is no philanthropy as there is no poverty. Because everyone has every kind of wealth, there are no haves and have nots in Ayodhya there is a king but he is only the body, his people the life. This is in contrast to Lanka where even art becomes furious enjoyment, there is no chastity and no protection and this seems to be a corollary to its capitalistic structure

In The Tempest Gonzalo envisages an utopia. In the common wealth no name of magistrate, riches, poverty and use of service none. Here is also a kind of communism but there is no place for work and there will be no sovereign and this is more anarchical Gonzalo adds that! there will be idleness because of nature's bounty and no marriage in that society. Here is a kind of primitive communism. In contrast Prospero's rule is too rigid and it forces labour.

Prospero only tried to civilize the inhabitants of the island and educate his brother and Alanso and Caliban freed them only after fulfilling his mission. Rama, on the other hand establishes a spiritual democracy based on universal brotherhood. But his asking Sita to

plunge into the fire to prove her chastity is unjust and smacks of compulsions of a patriarchal order. Shakespeare's heros are fully human though imperfect but Kamban's Rama is perfectly human, perfect but still human.

Notes:

1. The Business if criticism (Oxford 1959)
2. Indian Literature ed Aurobind pooder (Simla 1972)
3. Collected works of A.S.R Vol 2
4. Neengalum Suvayungal, sarvoyadaya publishers

Erudition - Thy Name is Kamban

G. Ramachandran
Chennai

VALMIKI

The holy soil of Bharath – India has been home to a large number of enlightened souls as Sage Valmiki from time immemorial. With the power gained through their intense penance, they were able to establish a strong link between earth and heaven.

As is natural with men of their heights, they wished to share and pass over that inexhaustible wealth of bliss they acquired to the rest of humanity through their works immortal in nature for the study and practice of successive generations Yuga after Yuga. Thus was born the first epic Ramayana in Sanskrit by Sage Valmiki with Sri Rama, the prince of Ayodhya as its hero, a MAN of his vision, "who does not live for himself but lives for others identifying himself with the composite culture of the cosmic creation"(Ilapavulluri Panduranga Rao). Great and eminent scholars both Indian and foreign hold different opinions about the time of Valmiki – Dr. H. Jacobi holds the age of Valmiki to 8th Century B.C, W. Schlegal still back to 11th century B,C, while A. Weber and G.T. Wheeler place the sage after Christ. According to recent excavations conducted by the ASI in Ayodhya, Nandigram and other important places mentioned in the Ramayana of Valmiki shows the places similar to each other and they should belong to 7th Century B.C. Lokamanya Bala Gangadhar Tilak and several other Indian scholars consider Valmiki far ancient than Western scholars. Sri G.S. Atlakar (1895-1987), an authority on Valmiki concludes with clarity and confidence that Valmiki's Ramayana cannot be later in age than the beginning of the first millennium B.C. Asvagosha, author of Buddhacharita, who flourished in the 1st century B.C. has made a commendatory reference to the first poetic expression of Valmiki, (I L P Rao).

This establishes the fact that the successive invasions on India by foreigners that ravaged this country for centuries could not destroy this one asset of Indians, the great Ramayana by Valmiki and other eminent poet-scholars of India including Kamban who had enriched the story with his inexhaustible fertility of poetic imaginations. Ramayana is the grandest of India's possessions that had survived the

onslaught of many political tsunamis. Said Thomas Carlyle, "Shakespeare is the grandest of England's possessions which would survive even the loss of the British Empire". Could we not be still prouder with our Ramayana?

KAMBAN

Captivated by the beauty, style, content and the spiritual wealth in Valmiki's Ramayana, erudite poet-scholars of other Indian languages produced the epic in their own style and imagination with a commitment to retain the basic sanctity of the story to the best of their ability.

As the nectar pot appeared from the milk ocean, a poet par excellence appeared from the Tamil soil in the Chola region to sing the glory of Lord Rama equipped with his unquestionable ability to handle Tamil poetry effortlessly backed by his vast knowledge in our scriptures to the envy of many in the field.

The Tamil poetry has many verse forms with different meters. Kamban chose the Viruthum form, which he thought suitable for his epic mission to express various emotions of the characters of the story as patience, renunciation, a balance of mind to treat rewards and disappointments alike, political claims, conspiracies and oppositions, compassion, anger and a rare heroism allowing a defeated and unarmed enemy to relax and return 'tomorrow' a superhuman Iuality unheard of in the history of mankind till today.

The Tamil saying "Virutham Enum Onpavirku Uyar Kamban" amply confirms the fact that none in the Tamil poetry field excelled him in using this verse form as effectively as he did.

For Kamban, poetry is not simply a group of words set to rhyme rules of grammar but one that should possess all clarity and content of a high philosophy and teachings of great souls. And this should come even in descriptions of rivers, mountains and such natural scenes. For him, clarity is the criteria. He chose rivers flowing with pure, unpolluted waters for his philosophical outlook. He saw in their flow the truth of life. For Indians and Hindus, rivers are not simply a source for drinking water and agricultural needs. They hold the power to release them from all evils affecting them due to various reasons and assure a fresh lease of peaceful life. The waves bless them, they believe. For them, faith begins from rivers. Kamban chose three rivers for the purpose.

Gange cha Yamune chaiva Godavari Saraswathi
Narmade Sindhu Cauvery Jalesmin Sannidhim Guru – Rig Veda.

After the formal invocation verses, Kamban opens the doors of his epic Ramayana with the description of the River Sarayu adoring the kingdom of Koshala. As soil and rivers of a region have a bearing on the characters of its subjects, he compares it with the pure flow of the river which represents the conduct of the people of Ayodhya. They never violated the norms of relations between men and women and did not indulge in any extra marital habits. They were as pure as the Sarayu flow. Sri Rama was an Ekapatni Vrata Man especially in a royal family headed by Emperor Dasaratha having three Iueens. Probably this was the cause of some later sad developments in the story. Also, the wicked eyeing of Ravana on Mother Sita led to his fall. Chastity naturally existed among men and women in Ayodhya without a compelling law to enforce this virtue. As water is indispensable for fertility and prosperity of a country, so is the conduct of the people for social and family peace. People of Ayodhya duly respected this law. Kamban begins his epic with this tribute to Sarayu and as a message to humanity as a whole. (Ayodhya Canto verse 1 – Aasalambu Aimpori Valiyum ----)

Comes next to the attention of Kamban is River Godavari. In his view, the river is a jewel on Mother Earth. It speaks of great truths as Dharma, wealth, pleasures of life in genuine manner and final salvation of the soul. To Kamban, it appeared to clear the doubts of those in learning age. It flows through many kinds of soil with the same purity and purpose. In the next verse in this Aranya Canto-Surpanaka chapter (verses 1 and 2), Godavari, the divine river flows as if worshipping the feet of Lord Rama, Mother Sita and their constant companion brother Lakshmana.

The third is the Pampa, not a river but a huge water body whose depth touched the world below – Patala Loka. Here, Kamban invites a tree also for his clear expression of his philosophy of pursuit of learning. The Pampa's appearance was such as if giving more and more meanings to an inquisitive learner as the divine tree Karpagam offers all that a seeker asks for. (Kishkinda Canto, Pampa Chapter, verse 5).

Kamban's description of the musical flight of Rama's arrow is one that no poet, in any epic and in any developed language of the world had imagined till now. The event happens after the return of

Ravana, disgracefully defeated by Rama. He went to the battle field to meet Rama with all paraphernalia accompanied by a huge army of trained soldiers who knew no defeat earlier, but now no soldier escaped Rama's arrows but Ravana, allowed to go and relax for a night and "come tomorrow" a rare heroism of Yuddha Dharma established by the Prince of Ayodhya. Ravana was alone in his palace. His grandfather Maliavan asked the grandson what he was thinking. Ravana frankly admired Rama's talent in archery. He said Rama's archery skill was as sweet and melodious as a beautifully worded poem. The arrows did not miss the target. They flew with such a musical sound of a poetry containing a message pregnant with meanings of great truths of gifted and inspired poets. He told his dear grandpa that he was enjoying that musical archery skill of his arch rival Rama – verse 22 in Kumbakarunan Vadai Padalam – Yuddha Kanda.

Kamban's ripe knowledge of our religious philosophy and master graduation shines in Kumbakarunan Vadai Padalam in Yuddha Kanda – verses 243 – 249. Ravana's eldest son Indrajit, the name he derived by conquering Indra the king of Devas of the celestial world was defeated by Rama's monkey forces. He left the field defeated but only after playing a black magic by binding all the forces of Sri Rama including Lakshmana, Sugriva and the great Hanuman with a serpent missilie. All of them fell completely unconscious as if dead tightly tied by his magic. Gloom engulfed the camp. Rama and Vibishana stood motionless not knowing what to do. Vibishana explains the force of the Naga Pasa – serpent missilie and says there is no remedy unless the missilie loosens by itself. No external power could undo its effect. When all were plunged in grief, there arrived Garuda on the sky spreading his wings.

The poetic narration of the event, the arrival of Garuda, by Kamban appears as if he was present on the scene as his poetry is tuned with the very movement action of the wings of Garuda. Verses 243 to 249 show the reader a real, live Garuda before him/her. Among the many descriptions of nature, characters of the epic and events, this piece is an outstanding example of Kamban's poetic abilities as if caught live in a camera. What is more thrilling is his knowledge of the philosophy in the speech of Garuda addressing his Lord in 11 verses with the refrain "Yar Indha Adhireka Mayai Arivar". Says Garuda, "Lord, it is strange to see you lamenting, when you are the healing touch to those lamenting" leaving the scene after releasing Rama's men from Naga Pasa. Lord Rama with all humility pays his

thanking tribute to Garuda, "Can one pay his indebtedness to God of Rain – Mariyai Nokki Kaimaru Iyattrumo Vaiyam endran" – verse 271.

Every poem in Kamba Ramayana is a piece of precious stone. Though there exist many Sahasranamas for our daily parayanas, only two are widely in practice – Vishnu Sahasranama and Lalitha Sahasranama. Like wise, though there exist more than 300 Ramayanas as estimated by great erudite researcher Sri Ramanujam, there exists two Ramayanas – Valmiki Ramayana and Kamaba Ramayana with their literary and spiritual richness, the later excelling the former in some places in this great immortal epic. Mahakavi Bharathi was right in judgment "Kamanodu Kavithai poyittru – when Kamban left this world poetry too left with him. It would only just and fair to say "ERUDITION THY NAME IS KAMBAN.

Kambaŋ Aŋd Miltoŋ - A Perspective

Dr. Shanthi Mahesh
Assistant Professor, Department of Music, Queen Mary's College (Autonomous), Chennai

Kamban, the eminent poet is known for his excellence of verses. His scholarship in Tamizh language speaks volumes of his command and style reflected in his unparalleled works. No wonder he was admirably great and deservingly honoured by the King.

Kamban belongs to the 12th and 13th Centuries. The Popular Saying is that even the "mill in Kamban's house would sing"- ("Kamban veettuk kattuttariyum kavi paadum"). Kamban was from the traditional Class of Nagasvaram Players in South India. His works stressed the essence of the evolution of one seeking realize the 'Eternal'. His rendition of Ramayanam called 'Kamba Ramayanam' endeared himself to the readers and their spontaneous acknowledgement was proof of his poetic nicety that was par excellence.

The story of Rama preaches the right path to a wonderful life characterized by right thoughts and action. The eldest son ascending the throne was the law of the Kingdom. To forgo the Kingdom and still maintain the unity of the family was not a si,ple thing. It is Rama's magnanimous vision and gentleness that made him lofty and great.

To be good, tolerant and caring for everyone is a very great virtue when contrasted with the greed and avarice to possess everything. This concept has parallels in the magnum opus blank epic poems "Paradise Lost" and "Paradise regained" by John Milton.

Adam and eve were tempted by Satan and so breached their promise to God. This led to their losing the Paradise. Kaikeyi and Ravana were consummate in their villainy and evil deeds. Rama had the supreme nobility to forage wealth and Kingdom for the sake of fulfilling his father's promise. The cunningness and wrongdoing of Kaikeyi were never thought of by him as he was stubborn to the principles of truth and a noble understanding of life with all scruples.

Ravana was unmindful of Vibhishana's advice and felt there was nothing wrong in coveting Sita. His evil mind ignored the same advice of his own brother and ultimately paved for the destruction of himself and the Kingdom. He ultimately lost his "Paradise".

Mantara and Surpanaka were also charecters who succumbed to malevolence and Surpanaka to lust. To lose the Paradise is due to one's own acts behind which the powerful Satanic Force operates.

Rama was a perfect Avatar who represented all that was good and righteous. He was an embodiment of Virtues, Justice and humility. Hanuman, Sugriva and Vibhishana were examples of such virtues of sacrifice and justice. Hanuman was the embodiment of humility and devotion to rama. Sugriva and Vibhishana were no less devoted to rama. They reveled in surrendering their devotion to rama.

The destruction of evil forces by the good is nothing but natural justice rendered ultimately. To be straightforward and honest requires enormous courage and will power. Rama was stubbornly wedded to truth, honesty and humility and nothing could deter him from the path of nobility and goodness.

The area of goodness found in abundance is very well marked in the initial Acts of Ramayana by Valmiki believed to have written during the period 500 BC to 100 BC. KAMBAN is said to have translated and explained this I his version.

The various sections of the Ramayana are

Bala Kandam (Chapter: Childhood --பாலகாண்டம்)

- Ayodhya Kandam (Chapter: Ayodhya அயோத்யா காண்டம்)
- Aranya Kandam (Chapter: Forest ஆரண்ய காண்டம்)
- Kishkinta Kandam (Chapter: Kishkintha கிஷ்கிந்தா காண்டம்)
- Sundara Kandam (Chapter: Beautiful சுந்தர காண்டம்)
- Yutha Kandam (Chapter: War யுத்த காண்டம்)

Paradise lost and regained through establishment of truth.Let us peep in to the similarity of thoughts depicted in 'Paradise Lost' of Milton.

The first man and woman created by God- Adam and Eve succumb to the amazing ideas offered by evil in the form of Satan and lose the eternal Paradise they lived in. In this work too we figure out how maneuvering tricks could deprive Paradise to one and all.

The crucial sufferings may not be visible to us if we are over-powered by desire. Once we acquiesce, capitulate mere inducement, we give way to great failure, loss. If we are careful, not glamoured by the

charisma of alluring elements leading to aura of untruthfulness, there would be no distress, suffering or agony. We can ever experience eternal bliss and heaven would not be a dreamland, but ours. If we are not virtuous, we lose the cloud nine due to our wrongdoing.

As we read Milton, we find many rationalized aspects as Iuoted below:

"Of Man's first disobedience, and the fruit
Of that forbidden Tree, whose mortal taste
Brought death into the world, and all our woe,
With loss of Eden, till one greater Man
Restore us, and regain the blissful seat,
Sing, Heavenly Muse"

O thou that, with surpassing glory crown'd
Look'st from thy sole dominion like the god
Of this new World.

Milton perhaps elucidated the undeniable dilemma within us by vindicating the Adam and Eve Epic. Shall we probe acquiring back the rapture lost?

In Ramayana, we see Rama, the incarnation of Vishnu bearing the amiss initially and setting the right all through the passage travelled to remove a very big hurdle. This explains to all that contemplating on truth through decorous mode viz. Rama would definitely lead to illustrious place.

'Paradise Regained' states similar verity through Christ's Re-Birth. The paradise where Adam and eve initially existed could be ours unquestionably if we truly follow the commandments of the Supremacy.

The chapter 'Sundara Khandam' of Ramayana is very auspicious. It elucidates persisting goodness after wiping away evil forces.

Milton begins as:

Who e're while the happy Garden sung,
By one mans disobedience lost, now sing
Recover'd Paradise to all mankind,
By one mans firm obedience fully tri'd
Through all temptation, and the Tempter foil'd [5]

In all his wiles, defeated and repuls't,
And Eden rais'd in the wast Wilderness.

Thou Spirit, who ledst this glorious Eremite
Into the Desert, his Victorious Field
Against the Spiritual Foe, and broughtst him thence

By proof th' undoubted Son of God, inspire,
As thou art wont, my prompted Song else mute,
And bear through highth or depth of natures bounds,
With prosperous wing full summ'd to tell of deeds
Above Heroic, though in secret done,

And unrecorded left through many an Age,
Worthy t' have not remain'd so long unsung.

Then we see how modest belief of Hegemony would regain the Paradise we lost.

Kamban as well as Milton like many other sources of enlightenment whom we know about, unquestionably lead us to the most remarkable realm of supremacy. Here we are discussing only those two who have paved way for realization of the ultimate through their epics.

We learn to progress properly through the story of Rama in one part of the universe and by Adam, Eve in another. The evident fact is that it is one and only one Almighty whom we peruse through various names, forms, ideologies.

They are very impressive literary epics. The blind poet Milton dictated his verse to a string of helpers. His verses probably echo his individual anguish, but however assert vital buoyancy of aptitude. It would be very ideal to learn the various modes to beckoning reality.

Kamban brought out such dogmas during his era. Speaking of having those ideas with us always, music, a very great performing art could spread truth and morals through Kambanamayanam by rendering Virutham(Tempo) and Santham(Tune), ostentatious Prosody observed in the verses efficiently portray the sentiment, theme, scene in the story. His verses could be rendered tuned to classical, semi-classical, light music, dramas and also performed for devotional rituals. Epics always illustrate the principles of astounding nation and people. It could be mind-blogging to sing just a verse from Kamba Ramayanam before an item of any Classical music Composer viz. St. Tyagaraja, Gopala Krishna Bharati, Arunachalakavirayar etc., on Lord. Rama.

Verses like the ones given below may be musically rendered to enhance the beauty and aesthetics of any suitable Krti like in the 'Ra-

manama Prabhavam' by Madurai. Sri. T. N. Seshagopalan before the Krti 'Ramanamame tudi maname' in the Raga Desh by Tanjavur Sankara Iyer. An example of suitable Krti of St. Tyagaraja is given below for each verse.

தொடக்கம்: பால காண்டம்: மிதிலை வருணனை : கொடிகளின் தோற்றம்

"மை அறு மலரின் நீங்கி, யான் செய்
மா தவத்தின் வந்து,
செய்யவள் இருந்தாள் : என்று,
செழு மணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக் கடி நகர்,
கமலச் செங்கண்
ஐயனை 'ஒல்லை வா 'என்று
அழைப்பது போன்றது அம்மா" 564

Aro ivar yaro (Bhairavi)

அயோத்தியா காண்டம் இராமன் தேர் செல்லுதல்

"கைகள் நீர் பரந்து,
கால் தொடரக் கண் உகும்
வெய்ய நீர் வெள்ளத்து
மெள்ளச் சேறலால்,
உய்ய ஏழ் உலகும்
ஒன்றான நீர் உழல்
தயெவ மீன் ஒத்தது அச்
செம்பொன் தேர் அரோ." 1931

Manasa Manasamarthyamu'(Vardhini)

ஆரணிய காண்டம்: இராமன் முதலியோர் சரபங்கன் தவக்குடிலினின்று போதல்

"அனையவன் இறுதியின் அமைவு நோக்கினர்
இனியவர் இன்னலின் இரங்கும் நெஞ்சினர்
குனிவரு திண்சிலைக் குமரர் கொம்பொடும்
புனிதனது உறையுள் நின்று அரிதில் போயினார்." 2722

'Entani ne' (Mukhari),

கிட்கிந்தா காண்டம்: சூரியன் தென்திசையில் ஒதுங்கியது

"மா இயல் வட திசை நின்று மானவன்
ஓவியமே என ஒளிக் கவின் குலாம்
தேவியை நாடிய முந்தித் தென்திசைக்கு
ஏவிய தூதுஎன இரவி ஏகினான். 4253.

'Adamodi Galade' (Charukesi)

சுந்தர காண்டம்: பிணிக்கப்பட்ட அனுமனைக்கண்ட அரக்கர்களின் நிலைமை

"எய்யுமின் ஈருமின் எறிமின் போழுமின்
கொய்யுமின் குடரினைக் கூறுகூறுகள்
செய்யுமின் மண் இடைத் தேய்மின் தின்னுமின்
உய்யுமேல் இல்லை நம் உயிர்" என்று ஓடுவார். 5889

'Chesinadella'(Todi),

யுத்த காண்டம்: தேவர்கள் வாழ்த்த இராமன் தேர் செல்வது

"எழுக தேர் சுமக்க எல்லோம்
வலியும் புக்கு இன்றே பொன்றி
விழுக. போர் அரக்கன் வெல்க.
வேந்தர்க்கு வேந்தன் விம்மி
அழுக. பேர் அரக்கிமார் 'என்று
ஆர்த்தனர். அமரர் ஆழி
முழுகி மீது எழுந்தது என்னச்
சென்றது. மூரித் திண் தேர்" 9847

'Emi Dova' (Saranga)

Literature bound with melody can surely make an ever beautiful kingdom, paradise.

Virgil's Aeneid and Kamban's Ramayana: A Comparative study of some aspects

Dr Aravazhi (G.Subramaniam)
Chennai

Literature is a selective reflection of life.As basic human traits are nearly the same everywhere,the literature of one region is comparable to that of another. Though the West and the East have their distinct attitudes to life,as portrayed in their respective literatures,some striking affinities are there between them, as in the case of the Aeneid of Virgil,the Roman poet of the First Century B.C and the Ramayana of Kamban,the renowned Tamil poet of the Ninth Century A.D.Virgil has taken the great Greek epics of Homer as his model,whereas Kamban has adapted the Ramayana of Valmiki,the great Sanskrit poet,for his purpose. Both epics are in a way derivative, besides being essentially literary. Even as Virgil has portrayed in Aeneas, the protagonist, a new concept of heroism based upon Roman values, making the required deviations from Homer,Kamban has based his epic solidly on the cherished values of the Tamils ,making many a departure from Valmiki. The deviations brought in by both Virgil and Kamban have rendered their poems significantly more agreeable to their respective milieu and hence their being recognized as national epics of enduring significance.

Not attempting to be exhaustive and not attempting either to compare the verbal nuances of composition of the two epics -- as the comparison on hand is based on the English translation of the Aeneid and not on the Latin original -- this paper takes up for comparison the motifs of Iuest,love and war, in addition to the structural patterns adopted by the two epic poets.

Both Aeneas and Rama are men of destiny for whom life is largely a Iuest. Aeneas's Iuest begins even as he leaves Troy as a refugeeRama's Iuest begins in the forest only when Sita is abducted thirteen years after he has left Ayodhya as an exile.As pious exiles,both of them take things as they come.Once Aeneas understands that there is a destiny that shapes his ends,he takes up whatever that befalls him and proceeds as though he has no will of his own. It is in a similar spirit of submissiveness that Rama leaves Ayodhya in the Kambaramayana. He is so well conscious of 'the driving force' behind his banishment

that he retains his equanimity and pacifies Lakshmana,when the latter rages against Kaikeyi for her part in the exile of his elder brother.The tribulations that the two protagonists bear and the battles that they are constrained to fight bring out as much of their endurance as of their valour. While answering 'the call to adventure'Aeneas evolves into a national hero of endurance and valour and Rama into a universal symbol of 'dharma' and spiritual humanism. If Aeneas believes in the supernatural as that which intervenes in deciding on the course of events , Rama believes in the inexorable fate as the irresistible force that decides on human destiny.

Just as Iuest,love in all its three aspects of 'philia', 'eros',and 'agape' assumes thematic importance. If Aeneas's solicitude for his countrymen is based on 'philia',his love for Dido,the Carthaginian Iueen, is rooted in 'eros'.Aeneas's subsequent desertion of Dido and his progress toward the promised land of Italy are clear indications of the sublimation of the 'eros' in him into 'agape'. Kamban's handling of the theme of love is in consonance with the conventions of the Tamil literary tradition.Ancient bards of 'aham' poetry in Tamil have dealt with love under the two aspects of 'kalavu' and 'karpu'.The process of falling in love itself is supposed to go through the three conventional stages of 'katchi', 'aiyam' and 'thelivu' and Rama's falling in love with Sita and her reciprocation go through the above stages. It is a case of love at first sight and Kamban describes the sentiment of love between them with great delicacy,refinement and grace.

In both Virgil and Kamban, mere might and physical prowess unaided by virtue are discredited. If Aeneas's heroism is characterized by 'pietas', 'dharma'serves as the motivating force for the remarkably valorous deeds of Rama on the battlefield. A married woman being carried away and her restitution form the nucleus of the Tamil epic. Though the Aeneid does not in itself include such an event, Aeneas's departure from Troy has been occasioned only by the events that centre around Helen,wife of Menelaus, who was carried away to Troy by Paris,as narrated in the Iliad,which is supposed to have served as the model for Virgil's epic. Aeneas's retrieval of his ancestors' land and Rama's of his long-lost wife necessitate wars through which the violence and evil personified in Turnus and Ravana respectively are exterminated,even as the protagonists retrieve what they had come to lose.

As for structural patterns, if the Greek and Latin epic traditions follow what Aristotle has laid down in his Poetics , the Indian epic

tradition shows an awareness of what Dandin has said in his Kavya-darsha with regard to the epic genre. For both Virgil and Kamban, organic unity in poetry is of crucial importance . Architectonics becomes a technique in their hands and they organize the parts of their poems in such a way that the whole acquires a lasting significance,structurally and thematically. Virgil uses the concentric pattern of arrangement which goes back to Homer himself where it is termed 'ring composition' or 'geometric structure'. In such an arrangement,the different passages that are in some way balanced frame a centrally placed passage that is of some extra significance. The Aeneid involved Iuite some labour on the part of the poet. The poem was first arranged and written out in prose and then made into verses " by licking them into shape as a bear does with her cubs". Virgil produced on an average just one line a day and he took as many as eleven long years to build the poem. The Golden Mean Ratio that was very much in vogue in the Roman mathematics of his age was adroitly employed in the epic .The mythical Aeneas on the one hand and the historical facts and personages of Rome on the other have been given a dramatic treatment,with Augustus all the while providing an equation to the mythical hero. The Kambaramayana also has a great structural unity,required for conveying the poet's message of a universal significance.It is as much a product of inspiration as of labour. However,the poet has ensured that the message of his epic has been very well blended with a profound aesthetic appeal,wthout in any way tampering with the structural unity of the poem. By way of fascinating the readers and unobstrusively inviting them to appreciate and absorb the message, the poet has enriched his epic with as much of such aesthetic appeals as possible. The craftsmanship of the poet is such that he has left no loose ends of any kind behind . With his material very well arranged,presumably, in advance, the poet is seen to progress stage by stage with his composition toward the denouement that drives home the message of the epic Iuite effectively. As literary epics, both The Aeneid and the Kambaramayana exhibit very careful structural patterning and three distinct patterns emerge as common to both,on a closer scrutiny:

(i)Alternations and contrasts
(ii)Bipartite divisions
(iii)Triadic structures

Such a patterning enables both the epic poets to convey their messages with enough of clarity. Virgil exploits the communicative

potential of the structural patterns and proportions to such an extent that form becomes functional in character.Form and content are indeed as much indivisible as beauty and truth are. One of the important themes of the Aeneid is the founding of the Roman race by Aeneas and the concentric pattern of arrangement that Virgil chooses serves his purpose very satisfactorily. Even though the Kambaramayana has numerous episodes in it,the main theme of the epic relates to the fall of the unrighteous. The destruction of Ravana which occurs in the very last canto of the epic is hinted at,through a simile employed in the opening canto itself. Such techniques contribute significantly to the structural cohesion of the Kambaramayana which,as V.V.S.Aiyar observes, "... can challenge comparison not merely with the Iliad and the Aeneid, the Paradise Lost and the Mahabharata,but with its original itself,namely the Ramayana of Valmiki." The Tamils who lived during the period of Kamban needed to be warned of the possible consequences of a moral degradation Kamban rose to the occasion and composed his epic,blending therein a message related primarily to the required moral uprightness with a profound aesthetic appeal.

It could thus be seen that there are some striking affinities between the epics of the Aeneid and the Kambaramayana, despite their being chronologically and geographically wide apart. The secret of such affinities is to be traced to the 'universals'which are for ever free from the shackles of time and place. If Virgil draws attention to the need for submission before the divine-will in preference to the martial heroism born of barbaric energy, Kamban in his 'magnum opus' silences the transitory concerns of life so effectively that he enables us to listen continually to the voice of the Ultimate Concern. The messages of the two epics in Iuestion are indeed all the more relevant for our materialistic war-torn world that seems to be drifting away rather alarmingly from the harmony of universal brotherhood and the joy of moral uprightness that held sway from time immemorial,barring,of course, some sporadic incidents here and there that are bound to take place even when culture and civilization are at their best.

NOTES

1.A.A.Manavalan,Epic Heroism in Milton and Kamban (Coimbatore:Kamban Trust,1983),13.

2.George E.Duckworth, Structural Patterns and Proportions in Vergil's Aeneid:A Study in Mathematical Composition.(Ann Abor:The University of Michigan Press,1962),22.

3.W.Y.Sellar,The Roman Poets of the Augustan age:Virgil (Oxford:Clarendon Press,1883),128.

4.Assuming that the longer and the shorter passages of the epic are denoted as M and m respectively,the ratio would be m/M=M/M+m=1/2(√5-1)=618. See Duckworth,36,for a detailed analysis.

5.By of adding on to such an aesthetic appeal of his epic, Kamban the genius could vary the rhythm so as to match the sound with the sense and provide a scintilating aural experince to the readers , as when he describes the defiant tread of Thadaka,as she advances toward Rama in the "Bala Kanda"(Verse:391) and the disguised Surpanaka's treading lightly like a peacock toward the prince as described later in the "Aranya Kanda" (Verse:2864) . The poet could also provide sometimes a rich visual experience as when he describes the dazzling diamonds of the garland of the blue-eyed Rama who settles down gently like a cloud at the feet of Vasishta and Viswamitra for their blessings at the Wedding Hall at Mithila.("Bala Kanda" Verse No.1193) See S.Maharajan, "The Aesthetics of Kamban," in Kamban Mani Malar (Karaikudi:Kamban Kazhagam,1980),51,for additional details.

6.V.Sp.Manickam,Kambar(1965rpt.Chidambaram:Manivasagar Noolagam,1972),127-28.

7. Mark Schorer, "Techniques as Discovery" in 20th Century Literary Criticism, ed.David Lodge (New York:Longman,1972), 387.

8. "Bala Kanda" Verse:417.

9. V.V.S.Aiyar, Kamba Ramayanam:A Study (Bombay:Bharatiya Vidya Bhavan,1965),1.

10.A.S.Gnanasambandan, "Preface"Kamban Puthiya Parvai (1993rpt.Chennai:Gangai Puthaga Nilayam,2003),xi-xiii.

11. S.Maharajan,Kamban (1972 rpt.New Delhi:Sahitya Academy,1981),68.

THE SEMANTIC DISTANCE MAINTAINED BY KAMBAN IN HIS EXPRESSIONS - A COMPARISON WITH THE VALMIKI RAMAYANA

Dr S.Ramaratnam,
Chennai.

Kamban's Rāmāyana should be rightly considered as a transcreation as contrasted from a translation. Kamban acknowledges his indebtedness to Vālmīki but he shows enough originality and innovation in presenting his work as a transcreation. The transcreator while being faithful to the original work like a translator, has additional responsibilities of maintaining the tradition and culture of his own land without sacrificing those of the original work. The transcreator does not deviate much from the original work as far as the theme is concerned but his expressions maintain a respectable distance from the original. This may be called as semantic distance.

'Distance' is a metaphor used to indicate relatedness between two expressions. Semantic distance is the degree of relatedness between two or more expressions with respect to their meaning.

A transcreator adopts certain techniques to maintain the semantic distance between his own work and the original. For example, what is elaborately described in the original may be briefly mentioned in the transcreation or vice versa. We may see an illustration of this technique in the Raghuvamśa of Kālidāsa. What has been described in the middle five Kājjas of the Valmīki Rāmāyana (VR), that is, the entire story excepting the incidents of the first and the last books, has been summarized in just one canto consisting of 104 verses in the Raghuvamśa. A scene may be differently described by the trancreator offering more scope to reflect the culture of his own land. For example, the 'annalum nokkinan avalum nokkinal' scene in Kamban, in line with the tradition of the Sangam classics of Tamil literature. A scene described plainly by the original author may be rendered with attractive figures of speech by the trancreator or a plain expression of the original author may be presented in a suggestive form by the transcreator. But the transcreator is always conscious of the original theme. After deviating a bit through his innovative expressions he will come back to the mainstream and fall in line with the original. It operates like a wave. It breaks the monotony and creates a new interest. Such techniques are adopted in other fields also. For example, a toothpaste producer says his new product has special chemical to

take care of the gums in addition to the teeth. A leg spinner mixes googly in addition to his leg breaks to fox the batsman. A music composer mixes different notes in the second line of a song as contrasted from the uniform notes of the first line. A song is interesting only if it traverses from lower octave to the higher octave and back again to the lower octave in the subsequent stages. We may now see some examples to point out how Kamban maintains the semantic distance between his own work and the original VR. The examples are taken from the Ayodhya Kānda of both the works.

According to VR, Daśaratha consults his ministers before deciding on Rāma's coronation. In the same context, Kamban goes one step further in describing the responsibilities of the ministers. A good minister is one who acts according to his conscience and does not become a puppet in the hands of the Chief Administrator. He expresses boldly what is good for the country. He may run the risk of incurring the displeasure of the king but the well being of the country is uppermost in his mind.

In VR, the king gives a long speech expressing his desire to coronate Rāma. Kamban brings out certain philosophical truths in this context. Death is certain for everyone born in this world. The worldly life is like an ocean. One must strive to take the soul across this ocean safely. For this purpose, a boat is required. The safest boat to cross this ocean is the spirit of renunciation. The idea is that the king wants to renounce the worldly life and retire to the forest to perform penance after entrusting the kingdom in the hands of his son.

The desire of the king to coronate Rāma is expressed differently by both Kālidāsa and Kamban. The former says

tan karnamūlamāgatya rāme śrīrnyasyatāmiti
kaikeyīśankayevāha palitacchadmanā jarā

As though out of suspicion for Kaikeyī old age came to Daśaratha, in the disguise grey hair near his ears and whispered into his ears – Let the kingdom be entrusted to Rāma.

It is a natural process that grey hair first appears near the ears. But the poet gives a novel explanation for it by resorting to poetic fancy. Kamban also says—

mannane avaniyai makanukku īntu nī
pannarum tavam puripavarum ītu enak-
kanna mūlattinir kanara vantena
min enakkarumai poy veluttatu or mayir (2. mantira)

Kamban further says that the grey hair was perhaps the personification of all the sins of Rāvana.

After having got his son married to Sītā, the king wanted to give him another wife in the form of the Royal Fortune, says Kamban.

avani mātu enum oru makal manamum kantu uvappa unninen
We have an element of suggestion in the next stanza.
petamaittāi varum pirappai nīkkuvān
mātavam totankuvān vanattai nannuven

'I will get rid of the cycle of birth and death arising out of the desires of the world and resort to the forest to perform a severe penance' says the king.

The expression 'petammaittāi' can be split as 'petu amai tāi'. It thus refers to Kaikeyī who is wrongly advised by the hunchbacked Mantarā. Similarly 'mātavam' can be split as 'mātu' referring to Sītā resorting to forest along with Rāma which is an 'avam', that is an injustice. The suggested idea is – the king will commit the sin of forcing Rāma to go the forest along with Sītā, in order to satisfy Kaikeyī who is misguided by Mantarā.

The ministers received the news with mixed feelings. On one hand, they were happy that Rāma who was the repository of all noble qualities was going to be coronated. On the other hand they were also sad that the elder king was going to retire to the forest after entrusting the kingdom to his son. Kālidāsa expresses the same idea through the feelings of Rāma.

pitrā dattān rudan rāman prānmahīm pratyapadyata
paśćāt vanāya gaccheti tadājnān mudito'grahīt (canto 12)

'Rāma received the first order of his father, that is, his own coronation with tears in his eyes (as his father would retire to the forest after the coronation). Later when he was asked to go the forest he accepted it gladly since he got an opportunity to make the words of his father truthful'. Kamban goes one step further. He says that Rāma expressed nether joy nor sorrow on the order of his coronation. He accepted it as his duty to protect the people.

'tāmaraikkannan kāta urrilan ikazhntilan katan idu enru unarntum ....appani talai ninrān'

Kālidāsa says –
dadhato mangalaknaume vasānasya ca valkale
dadnśun vismitān tasya mukharāgan saman janān

On seeing his facial expression remaining the same on both the occasions– when he wore the silken garments fit for the coronation and when he wore the bark garments fit for the forest life, people were struck with wonder.

The Gītā says—
yan sarvatra anabhisnehan tattat prāpya śubhāśubham
nābhinandati na dvenni ......

'A man of steadfast wisdom neither rejoices nor grieves, being detached towards the auspicious as well inauspicious things'.

Kamban further says that Rāma's face remained like a beautiful lotus drawn in a picture – cittirattin alarnta centāmarai. The real lotus can not be offered as a comparison as it closes its petals and presents a gloomy picture at night.

While Vālmīki presents Rāma as a human being endowed with certain super human qualities and powers, Kamban projects his hero as a divine being in a human form, subjecting himself to human weaknesses now and then.

Kausalyā celebrates the news of Rāma's coronation by distributing gold and jewels among the people around. Kamban's Kausalyā goes to the temple on hearing the news and offers worship to the deities. She says-

en vayin taru maintarku ini arul
un vayattatu enrāl, ulaku yāvaiyum
man vayirrin anakkiya māyanait
tan vayirrin anakkum tavattināl

'Lord, it is due to your grace that Rāma was born through me. It is now your duty to protect him. So said Kausalyā who bore in her womb the Lord who himself keeps all the worlds inside his body after the devolution'.

As the news spread, each one of the people of Ayodhyā felt as though he/she was going to be coronated. Kālidāsa says –

pratyekan hlādayāncakre kulyā iva udyānapādapān

That news brought happiness to each one of the individuals like a canal in a garden reaching out to each plant and gladdening it.

Other scenes and descriptions that are significant in Kamban from the point of view of Semantic distance are —

1. Mantarā's reaction on hearing the news of Rāma's coronation.

2. Kaikeyī scolds Mantarā, yet she continues her attempt to spoil the mind of the former. Medicines will be of no effect on a person in whom poison has spread throughout the body.

3. The māyā of the gods, the boons they got for killing Rāvana and the penance performed by the sages for attaining a glimpse of Lord Rāma made Mantarā change the mind of Kaikeyī.

4. Kaikeyī looked barren without the ornaments. As she threw away the ornaments on the ground, it looked as though it was studded with stars, says Vālmīki. Kamban says – As far as Sītā remained there, Ayodhyā was endowed with auspiciousness. As she was preparing to leave to the forest, Inauspiciousness entered the city and took shelter under Kaikeyī. She looked so inauspicious having removed her ornaments.

5. As Kaikeyī presented an angry look she was like a creeper removed from the support tree, like a divine damsel dropping to the ground when her religious merits are depleted or like a female deer trapped in a net after being struck by a poisonous arrow, says Vālmīki. As the king tried to lift her up, she removed his hands and fell to the ground like a streak of lightening, says Kamban.

6. Rāma says to Kaikeyī – mannavan paniyanrākil num pani maruppano, pinnavn petra celvam aniyanen petratanro.

7. Both Vālmīki and Kamban refer to the hand of destiny in sending Rāma to the forest. We may compare 'nanu daivasya karma tat' and 'matiyin pizhaiyanru, ... vitiyin pizhai'

8. As Rāma leaves for the forest, Daśaratha says to him 'Before you reach 'vana' I will go to 'vāna' (the other world, death).

9. Vālmīki – Sumitrā to Laknmana – 'gaccha gaccha' – go go – significance of the repetition – hurry, let not Rāma leave you and go. Her whole hearted support to the proposal. kamban – mannum nagarke ivan vantidillā atu anrel, munnam mudi enranal' – If by chance Rāma does not return back – before something(death) happens to him, you put an end to your own life. Do not come back without him.

10. Kamban – man, pen, kan ceyta pāvam

11. Kamban – Rāma to Guha – ini nām or aivarkal ular ānom

12. Kamban – Sages to Rāma – irattalum pirattalum iyarkai enpatai marattiyo

The concept of Semantic distance may be represented thus through diagrams.


Diagram 1

The expression of the original author
The expression of the transcreator

Both go hand in hand with each other.

Diagram 2

The Diagram represents three levels. The x axis represents the author's expressions. The y axis represents the expression of the transcreator. The first level, the shortest of them stands for the expressions of the transcreator that deviate from the original author. In the second level, the transcreator deviates a little more employing figures of speech in the place of plain expressions of the original author. In the third level, the transcreator resorts to suggestive expressions to show



his originality as contrasted with the original author who might have used plain statements.